

இலங்கை மின்சார சபை

# வருடாந்த அறிக்கை | 2020




# உள்ளடக்கம்


| | |
|---|---|
| எமது நோக்கு, எமது பணி, எமது அடிப்படைப் பெறுமானங்கள் | 1 |
| எமது சுற்றுச்சூழல் கொள்கை | 2 |
| ஓரே பார்வையில் | 3 |
| முக்கிய நிகழ்வுகள் | 4 |
| கடந்தகால செயலாற்றுகைகள் | 5 |
| நிறுவனத் தகவல்கள் | 6 |
| ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு - 2020 | 8 |
| துணைக் கம்பனிகளுடன் இ.மி.ச. இன் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு - 2020 | 10 |
| தலைவரின் மீளாய்வு | 12 |
| பொது முகாமையாளரின் மீளாய்வு | 14 |
| 2020 ஆம் ஆண்டில் இலங்கையின் மின்வலு முறைமை | 16 |
| செயற்பாட்டு மீளாய்வு | 17 |
| மின் பிறப்பாக்கல் பிரிவு | 17 |
| மின் பரிமாற்றப் பிரிவு | 26 |
| விநியோகப் பிரிவுகள் | 35 |
| செயற்றிட்டங்கள் பிரிவு | 46 |
| சொத்து முகாமைத்துவப் பிரிவு | 57 |
| நிறுவன உபாயப் பிரிவு | 64 |
| ஆளணிக் கிளை, உள்ளகக் கணக்காய்வுக் கிளை, சட்ட அலகு, விசேட புலனாய்வு அலகு, ஏனைய நிகழ்வுகள் | 71 |
| இடர் மீளாய்வு | 79 |
| நிலைபேற்று அறிக்கை | 83 |
| நிறுவன சமூகப் பொறுப்பு அறிக்கை | 85 |
| நிதிப் பிரிவு மற்றும் நிதி தகவல்கள் | 87 |
| பணிப்பாளர்கள் அறிக்கை | 100 |
| இலாபம் அல்லது நட்டக் கூற்று | 103 |
| முற்றுமடங்கிய வருமானக் கூற்று | 104 |
| நிதி நிலைமைக் கூற்று | 105 |
| உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று | 106 |
| உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று | 108 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 109 |
| நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் | 110 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 173 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள | 180 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 191 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள | 200 |
| சுருக்கக் குறியீடுகள் | 217 |

## எமது நோக்கு

வளமான
வாழ்விற்கு மின்சாரம்

## எமது செயற்பணி

எமது அடிப்படை விழுமியங்களைக் கடைப்பிடிக்கின்ற அதே வேளை முழு இலங்கைக்கும் மின்சார வழங்கலில் செயற்றிறனானதும் ஒருங்கிணைக்கப்பட்டதும் சிக்கனமானதுமான முறைமை ஒன்றினை விருத்தி செய்தலும் பேணுதலும்.

## எமது அடிப்படை விழுமியங்கள்

தரம்
பாதுகாப்பு
வினைத்திறனும் விளைதிறனும்
அர்ப்பணிப்பு
நிலைத்திருக்கும்தன்மை
தொழில்வாண்மை
தேசத்திற்கான சேவை





# எமது சுற்றுச்சூழல் கொள்கை

இ.மி.ச. ஆனது இயற்கையானதும் மனிதனால் உருவாக்கப்பட்டதுமான சுற்றுச்சூழலைப் பேணுவதற்காகவும் நிலைபேறான அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்காகவும் அதன் சகல வணிக நடவடிக்கைகளையும் பொருத்தமான முறையில் முகாமை செய்கிறது. சுற்றுச்சூழல் பிரச்சினைகளைக் கையாள்வதில் வெளிப்படைத்தன்மையுடன் இருப்பதன் மூலம் பொதுமக்கள், வாடிக்கையாளர்கள், அதிகாரசபைகள், ஊழியர்கள் மற்றும் உரிமையாளர்களின் வகிபாகம் மீதான எமது செயற்பாடுகளில் நம்பகத்தன்மையை உருவாக்குவதற்கு நாங்கள் முனைந்துள்ளோம். எமது செயற்பாடுகளில் சுற்றுச்சூழல் கருத்தாய்வுகளைக் கூட்டிணைத்து ஒருங்கிணைக்கின்ற கொள்கையை நாங்கள் தீவிரமாகப் பின்பற்றுகின்றோம்.

# ஒரே பார்வையில்



தாபிக்கப்பட்டது
**1969** இல்



நிகரப் பிறப்பாக்கம்
**15,714 GWh**

ஊழியர்கள்
**25,624**





சராசரிக் கிரயம்
**21.21** இல.ரூபா/kWh



விற்பனை விலை
**16.72 இல.ரூபா/kWh**

நீர்மின் கொள்ளளவு
**1,383 MW**



அனல்மின் கொள்ளளவு
**2,168 MW**





NCRE கொள்ளளவு
**715 MW**



மேற்கூரை சூரிய
மின்கல கொள்ளளவு
**275 MW**

நுகர்வோர் கணக்குகள்
**6,636,266**



வருமானம்
**238,911 மில்.இல.ரூபா**

விற்பனைக் கிரயம்
**302,949 மில்.இல.ரூபா**



# முக்கிய நிகழ்வுகள்

## காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் – "තම්බපවනී" உத்தியோகபூர்வ திறப்பு விழா...

2020 டிசெம்பர் 8 ஆந் திகதி வலுவூட்டப்பட்ட நாட்டின் மிகப்பெரிய காற்று மின்வலுச் செயற்றிட்டமான "තම්බපවනී"ஆனது இலங்கையின் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தியில் ஒரு மைல்கல்லாக விளங்குகிறது. இது தூய மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கும் புதைபடிவ எரிபொருட்களை இடம்பெயர்த்துவதற்குமான இ.மி.ச. இன் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கை சனநாயக சோ'லிசக் குடியரசின் பிரதம மந்திரி கௌரவ மஹிந்த ராஜபக்' அவர்கள் இந்த முதன்மைச் செயற்றிட்டத்தின் 30 MW தொகுதியை தேசிய மின்தொகுப்புடன் இணைத்ததன் மூலம் மன்னார் காற்றாலைப் பூங்காவின் முதலாவது கட்டத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.



103.5 MW

400 GWh/ Year

8.00 LKR/kWh

## சிறந்த தீர்வுக்காக CEBAssist விருது வழங்கப்பட்டது...

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் கீழான சிறந்த டிஜிடல் - இயக்கப்பட்ட பொருள் / சேவை மற்றும் டிஜிடல் எக்செலன்ஸ் 2018/19 இற்கான எஸ்.எல்.டி. ஜீரோ ஒன் விருதுகளில் கையடக்கத் தொலைபேசியின் சிறந்த பயன்பாட்டு விருது ஆகியன CEBAssist செயலியினால் கிடைக்கப் பெற்றுள்ளன.

## இந்த நோய்ப் பரவல் காலப்பகுதியில் 24 மணிநேர மின்வழங்கல் உறுதி செய்யப்பட்டது...

கோவிட்-19 நோய்ப்பரவல் காலப்பகுதியிலும்கூட 24 மணிநேர மின்சார வழங்கலை இ.மி.ச. உறுதிப்படுத்தியது. இ.மி.ச. ஊழியர்களின் அர்ப்பணிப்பும் ஒப்பிய பொறுப்பும் பாராட்டத்தக்கதாகும்.





# கடந்தகால செயலாற்றுகைகள்



| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த சக்திப் பிறப்பாக்கம் (GWh) | 11,528 | 11,801 | 11,962 | 12,423 | 13,154 | 14,249 | 14,773 | 15,985 | 16,556 | 16,392 |
| NCRE பிறப்பாக்கம* (GWh) | 725 | 736 | 1,179 | 1,217 | 1,467 | 1,160 | 1,464 | 1,832 | 1,761 | 1,866 |
| அதிகபட்ச கேள்வி (MW) | 2,163 | 2,146 | 2,164 | 2,152 | 2,283 | 2,453 | 2,523 | 2,616 | 2,669 | 2,717 |
| மின்சார விற்பனை (GWh) | 10,023 | 10,474 | 10,621 | 11,063 | 11,786 | 12,785 | 13,431 | 14,091 | 14,611 | 14,286 |
| நுகர்வோர் கணக்குகள் (எண்ணிக்கை) | 4,717448 | 4,979,862 | 5,210,761 | 5,417,532 | 5,648,132 | 5,964,194 | 6,193,131 | 6,354,281 | 6,500,641 | 6,636,266 |
| முறைமைச் சக்தி இழப்புகள் (%) | 11.72 | 11.24 | 11.14 | 10.91 | 10.40 | 10.28 | 8.45 | 8.34 | 8.23 | 9.08 |
| வருமானம் (மில்.இல.ரூபா) | 132,460 | 163,513 | 194,147 | 202,645 | 188,684 | 206,811 | 218,450 | 229,571 | 242,950 | 238,911 |
| சராசரி விற்பனை விலை (ரூபா/kWh) – (a) | 13.21 | 15.56 | 17.93 | 18.50 | 16.00 | 16.18 | 16.26 | 16.29 | 16.63 | 16.72 |
| விற்பனைப் புள்ளியில் சராசரிக் கிரயம் (ரூபா/kWh)–(a) | 16.21 | 23.66 | 16.94 | 20.00 | 15.07 | 18.08 | 20.34 | 19.12 | 24.12 | 21.21 |
| ஆண்டின்போது மின்னூட்டம் வழங்கப்பட்ட வீடுகள் (எண்ணிக்கை) | 206,909 | 225,707 | 198,484 | 178,300 | 198,166 | 277,038 | 181,627 | 118,077 | 108,315 | 98,829 |

* - NCRE (சிறிய நீர்மின், காற்றாலை, சூரிய சக்தி, தாவரமூலம், உயிர்த்திணிவு மற்றும் மாநகரக் கழிவு)

(a) - தற்காலிகமானது

# நிறுவனத் தகவல்கள்

## சட்ட அமைப்பு

இலங்கை மின்சார சபை (இ.மி.ச.) ஆனது 1969 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கச் சட்டம், 1979 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) மின்சார சபைச் சட்டம் ஆகியவற்றால் திருத்தம் செய்யப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு கூட்டாண்மை நிறுவனமாகும்.

## சபை அங்கத்தவர்கள்

**தலைவர்**
பொறியியலாளர் எச்.எம். விஜித ஹேரத் 23.12.2019 தொடக்கம்

**துணைத் தலைவர்**
திரு. வை.ஜி.ஐ. சமன் குமார 30.01.2020 தொடக்கம் 14.12.2020 வரை
திரு. என்.எஸ். இலங்கக்கோன் 16.12.2020 தொடக்கம்

**அங்கத்தவர்/ தொழிற்படு பணிப்பாளர்**
திரு. என்.ஏ. ரஞ்ஜித் 16.01.2020 தொடக்கம் 24.04.2020 வரை

## பொதுத் திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்

திரு. எஸ்.டி. யூட் நிலக்'ன் 13.01.2020 தொடக்கம்

**அங்கத்தவர்கள்**
திரு. எம்.எம். நயீமுதீன் 17.01.2020 தொடக்கம்
திரு. பி.கே. ஜகத் பெரேரா 14.01.2020 தொடக்கம்
திரு. ஏ.எச்.கே. ஜகத் சந்திரசிறி 26.02.2020 தொடக்கம் 30.09.2020 வரை
திரு. எஸ்.ஜி. பிரேமசிறி 07.10.2020 தொடக்கம்
திரு. ஆர். விக்கிரமாராய்ச்சி 24.04.2020 தொடக்கம்

**சபைச் செயலாளர்**
திருமதி எச்.ஆர்.பி. பத்வேரிய (பதில்)

**பொது முகாமையாளர்**
பொறியியலாளர் எஸ்.டி.டபிள்யு. குணவர்த்தன 24.01.2020 வரை
பொறியியலாளர் டி.டி.கே. கருணாரத்ன 25.01.2020 தொடக்கம் 06.12.2020 வரை
பொறியியலாளர் (திருமதி) என்.டபிள்யு.கே. ஹேரத் 07.12.2020 தொடக்கம்

## நிறுவன முகாமை

**மேலதிகப் பொது முகாமையாளர் (மின் பிறப்பாக்கம்)**
பொறியியலாளர் பி.எல்.ஜி. காரியவசம் 19.04.2020 வரை
பொறியியலாளர் எச்.எம்.ஏ. ஹேரத் 20.04.2020 தொடக்கம்

**மேலதிகப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்றம்)**
பொறியியலாளர் (கலாநிதி) எம்.என்.எஸ். பெரேரா 02.11.2020 வரை
பொறியியலாளர் எம்.எம்.எஸ்.எம்.கே. குணரத்ன 03.11.2020 தொடக்கம்

**மேலதிகப் பொது முகாமையாளர் (DD 01)**
பொறியியலாளர் டி.டி.கே. கருணாரத்ன 24.01.2020 வரை
பொறியியலாளர் (திருமதி) என்.டபிள்யு.கே. ஹேரத் 25.01.2020 தொடக்கம் 06.12.2020 வரை
பொறியியலாளர் ஜே. மீகொட 07.12.2020 வரை

**மேலதிகப் பொது முகாமையாளர் (DD 2)**
பொறியியலாளர் எம்.ஏ.டி.என். கிறாடியன் 07.10.2020 வரை
பொறியியலாளர் எம்.எம்.எஸ்.எம்.கே. குணரத்ன 08.10.2020 தொடக்கம் 02.11.2020 வரை
பொறியியலாளர் (திருமதி) ரி.ஏ.கே. ஜயசேகர 03.11.2020 தொடக்கம்

**மேலதிகப் பொது முகாமையாளர் (DD 3)**
பொறியியலாளர் ஆர்.கே. பியதாச 23.10.2020 வரை
பொறியியலாளர் ஜே. மீகொட 24.10.2020 தொடக்கம் 06.12.2020 வரை
பொறியியலாளர் ஜே. நந்தகுமார் 07.12.2020 தொடக்கம்

**மேலதிகப் பொது முகாமையாளர் (DD 4)**
பொறியியலாளர் எம்.ஆர். ரணதுங்க 04.02.2020 வரை
பொறியியலாளர் ஜி.ஏ.டி.ஆர்.பி. செனவிரத்ன 05.02.2020 தொடக்கம்

**மேலதிகப் பொது முகாமையாளர் (சொத்து முகாமை)**
பொறியியலாளர் எச்.எம்.ஏ. ஹேரத் 19.04.2020 வரை
பொறியியலாளர் கே.கே.எஸ். தசநாயக்க 20.04.2020 தொடக்கம்

**மேலதிகப் பொது முகாமையாளர் (நிறுவன உபாயம்)**
பொறியியலாளர் (திருமதி) என்.டபிள்யு.கே. ஹேரத் 24.01.2020 வரை
பொறியியலாளர் (கலாநிதி) டி.சி.ஆர். அபேசேகர 25.01.2020 தொடக்கம்

**மேலதிகப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள்)**
பொறியியலாளர் (திருமதி) எம்.கே.சி.என்.கே. அமரசிறி 04.02.2020 வரை
பொறியியலாளர் எம்.ஆர். ரணதுங்க 05.02.2020 தொடக்கம்

**நிதி முகாமையாளர்**
திரு. ரி.கே. லியனகே



# ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு 2020



பிரதிப் பொது முகாமையாளர் (வணிகம் மற்றும் செயற்பாட்டு உபாயம்)
பிரதிப் பொது முகாமையாளர் (நிறுவன உபாயம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அலுவல்கள்)
பிரதிப் பொது முகாமையாளர் (தொழிற்பாட்டு உபாயம் மற்றும் செயன்முறை அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (தகவல் தொழினுட்பம்)
பிரதிப் பொது முகாமையாளர் (ஆய்வு மற்றும் அபிவிருத்தி)
செயற்றிட்டப் பணிப்பாளர் (நிறுவன வளத் திட்டமிடல்)

பிரதிப் பொது முகாமையாளர் (சக்தி விற்பனை)
பிரதிப் பொது முகாமையாளர் (நிறுவன அலுவல்கள்)
பிரதிப் பொது முகாமையாளர் (அனல் தொகுதி)
பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவ அனல் மின்)
பிரதிப் பொது முகாமையாளர் (மகாவலி தொகுதி)
பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவ நீர் மின்)
பிரதிப் பொது முகாமையாளர் (லக்ஷபான தொகுதி)
பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவ அனல் எந்திரவியல்)
பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவ நீர் எந்திரவியல்)
பிரதிப் பொது முகாமையாளர் (பிறப்பாக்கல் செயற்றிட்டங்கள்)
பிரதிப் பொது முகாமையாளர் (சமனல தொகுதி)
பிரதிப் பொது முகாமையாளர் (அணைக்கட்டு பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் குடியியல் கட்டமைப்புப் பராமரிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (பிறப்பாக்கப் பாதுகாப்பு)
மின்வலு ஆலை முகாமையாளர் (லக்விஜய மின்வலு ஆலை)
மேலதிக நிதி முகாமையாளர் (மின் பிறப்பாக்கம்)

பிரதிப் பொது முகாமையாளர் (சக்திக் கொள்வனவு)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்றம் மற்றும் மின் பிறப்பாக்கல் திட்டமிடல்)
பிரதிப் பொது முகாமையாளர் (நிறுவனம் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்புகள்)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்றச் செயற்பாடு மற்றும் பராமரிப்பு-தெற்கு)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்றச் செயற்பாடு மற்றும் பராமரிப்பு-வடக்கு)
பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவம் மற்றும் நிலைமைக் கண்காணிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (முறைமைக் கட்டுப்பாடு)
பிரதிப் பொது முகாமையாளர் (தொடர்பாடல்)
பிரதிப் பொது முகாமையாளர் (சக்தி சந்தைப்படுத்தல்)
பிரதிப் பொது முகாமையாளர் (மின்பரிமாற்றக் கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (தனியார் மின்வலு அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தியும் செயலாற்றுகை கண்காணிப்பும்)
மேலதிக நிதி முகாமையாளர் (மின் பரிமாற்றம்)

பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் மற்றும் நிறுவனம்)
பிரதிப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (கொழும்பு நகர்)
பிரதிப் பொது முகாமையாளர் (வட மேல் மாகாணம்)
பிரதிப் பொது முகாமையாளர் (வட மத்திய மாகாணம்)
பிரதிப் பொது முகாமையாளர் (வட மாகாணம்)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் விநியோக ஒருங்கிணைப்பு)
செயற்றிட்டப் பணிப்பாளர் (கொழும்பு துறைமுக நகர அபிவிருத்திச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மின்சார வழங்கலின் நம்பகத்தன்மையை மேம்படுத்த உதவியளிக்கும் செயற்றிட்டம்)
மேலதிக நிதி முகாமையாளர் (விநியோகப் பிரிவு 1)

பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் மற்றும் நிறுவனம்)
பிரதிப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (மத்திய மாகாணம் I)
பிரதிப் பொது முகாமையாளர் (மத்திய மாகாணம் II)
பிரதிப் பொது முகாமையாளர் (மேல் மாகாணம் வடக்கு)
பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு மாகாணம்)
மேலதிக நிதி முகாமையாளர் (விநியோகப் பிரிவு 2)

பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் மற்றும் நிறுவனம்)
பிரதிப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (மேல் மாகாணம் தெற்கு II)
பிரதிப் பொது முகாமையாளர் (சப்ரகமுவ மாகாணம்)
பிரதிப் பொது முகாமையாளர் (ஊவா மாகாணம்)
மேலதிக நிதி முகாமையாளர் (விநியோகப் பிரிவு 3)

பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் மற்றும் நிறுவனம்)
பிரதிப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (மேல் மாகாணம் தெற்கு I)
பிரதிப் பொது முகாமையாளர் (தென் மாகாணம் I)
பிரதிப் பொது முகாமையாளர் (தென் மாகாணம் II)
செயற்றிட்டப் பணிப்பாளர் (விதுலக்பய)
மேலதிக நிதி முகாமையாளர் (விநியோகப் பிரிவு 4)

பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமை மற்றும் நிறுவனம்)
பிரதிப் பொது முகாமையாளர் (பயிற்சி)
பிரதிப் பொது முகாமையாளர் (குடியியல் வேலைகள் மற்றும் கட்டடம்)
பிரதிப் பொது முகாமையாளர் (வேலைப் பட்டறை மற்றும் துணைச் சேவைகள்)
பிரதிப் பொது முகாமையாளர் (தொழில்சார் சுகாதாரமும் பாதுகாப்பும்)
மேலதிக நிதி முகாமையாளர் (சொத்து முகாமை)

பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்ற வடிவமைப்பும் சுற்றுச்சூழலும்)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்றச் செயற்றிட்டங்கள்)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்ற நிருமாணச் செயற்றிட்டங்கள்)
பிரதிப் பொது முகாமையாளர் (பொறியியல் ஆலோசனைச் சேவைகள்)
பிரதிப் பொது முகாமையாளர் (நிறுவனம் மற்றும் செயற்றிட்டங்களின் ஒருங்கிணைப்பு)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மேல் கொத்மலை நீர் மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (நிலக்கரி மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (புத்தளம் நிலக்கரி மின்வலுச் செயற்றிட்டம் கட்டம் II)
செயற்றிட்டப் பணிப்பாளர் (புத்தளம் நிலக்கரி மின்வலுச் செயற்றிட்டம் கட்டம் II TL & SS)
செயற்றிட்டப் பணிப்பாளர் (விரிநில நீர் மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (உமா ஓயா நீர் மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (பாரிய கொழும்பு மின் பரிமாற்ற மற்றும் மின் விநியோக இழப்பைக் குறைக்கும்
செயற்றிட்டப் பணிப்பாளர் (மொரகொல்ல நீர் மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (தேசிய மின் பரிமாற்றம் மற்றும் DND & EI செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (பசுமைச் சக்தி அபிவிருத்தி மற்றும் EEII செயற்றிட்டம் - கட்டம் II)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மன்னார் காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (LNG)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் மின் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மின்வலு முறைமையின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தும் செயற்றிட்டம்)
மேலதிக நிதி முகாமையாளர் (செயற்றிட்டங்கள்)

மேலதிக நிதி முகாமையாளர் (தலைமையகம்)
மேலதிக நிதி முகாமையாளர் (நிறுவனம்)
மேலதிக நிதி முகாமையாளர் (திறைசேரி முகாமை)

பிரதிப் பொது முகாமையாளர் (ஒருங்கிணைப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (ஆளணி)
பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்

பிரதம சட்ட அதிகாரி

புலனாய்வு முகாமையாளர்

சபைச் செயலாளர்

# துணைக் கம்பனிகளுடன் இ.மி.ச. இன் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு - 2020





*வேவல்வத்த மின்தொகுப்பு உபமின் நிலையம்*

# முகாமைத்துவ மீளாய்வு

# தலைவரின் மீளாய்வு

**"நிறுவனத்தின் நிதி நிலைமை பாதகமான வகையில் பாதிக்கப்பட்டிருந்த போதிலும், இ.மி.ச. வீட்டு மின் நுகர்வோர் வகையினருக்கு ரூபா 5.9 பில்லியன் சலுகையை வழங்கியிருந்தது. அத்துடன் அரசாங்கக் கொள்கைத் தீர்மானத்தின்படி, நோய்த் தொற்றைக் கையாள்வதற்காக நுகர்வோருக்கு உதவும் பொருட்டு கொடுப்பனவு செய்யப்படாமைக்கான மின்துண்டிப்புகள் பிற்போடப்பட்டதுடன் இ.மி.ச. மின்சாரக் கட்டணப் பட்டியல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கும் சலுகைக் காலமொன்று வழங்கப்பட்டது."**



2020 ஆம் ஆண்டு இலங்கை மின்சார சபையின் வழிகாட்டியாக அமைச்சர் கௌரவ டலஸ் அழகப்பெரும இருந்த முதலாவது ஆண்டாகும். "රට හදන සෞභාග්‍යයේ දැක්ම" என்ற தேசிய கொள்கை வேலைச் சட்டகத்திற்கு ஏற்ப "மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியை நோக்கிய மாற்றம்" என்ற இலக்குடனான ஆண்டின் நடவடிக்கைகள் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டன. இதன் விளைவாக இ.மி.ச. மிகவும் வினைத்திறனுடையதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் மாறியது.

கோவிட் நோய்த் தொற்றின் பாதகமான தாக்கங்கள் காணப்பட்ட போதிலும், இ.மி.ச. நாடு பூராகவும் 24 மணி நேரமும் தடையற்ற மின்சார வழங்கலை வழங்குகின்ற பணியினை தொடர்ந்திருந்தது. இவ்வாண்டின் நிகர மின் பிறப்பாக்கமாக 15,714 GWh பதிவாகியிருந்தது. இது கடந்த ஆண்டைவிட 1.3□ குறைவடைந்து காணப்பட்டமையானது நோய்த் தொற்றின் தாக்கத்தைப் பிரதிபலிக்கிறது. இந்தப் பிறப்பாக்கத்தில் 0.05□ ஆனவை மன்னார் காற்று மின்வலு ஆலையிலிருந்து (තම්බපවනි) கிடைக்கப் பெற்றவை ஆகும். තම්බපවනි இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பிரதம மந்திரி கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் 2020 டிசெம்பர் 8 ஆந் திகதி மின்தொகுப்புடன் இணைக்கப்பட்டது.

තම්බපවනි இனை மின்தொகுப்புடன் இணைப்பது அவ்வளவு இலகுவான பணியாக அமையவில்லை. திட்ட அதிகாரிகள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கோவிட் 19 நோய்ப் பரவல் முதல் பல பேரிடர்களைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. 2020 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் முதலாவது கட்டத்தின் செயற்பாட்டை உணர்ந்து, சாதாரண வாழ்க்கை, பயணம், சமூக இடைத்தொடர்பு என்பன தடைசெய்யப்பட்ட சூழ்நிலைகளுக்கும் மத்தியில், செயற்றிட்ட அதிகாரிகளின் அர்ப்பணிப்பு இன்றி இது சாத்தியமாகியிருக்காது. இந்த நிறுவனம் பொருளாதார நடவடிக்கைகளை அரைவாசியாகக் குறைத்துக் கொண்டதுடன், இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் தொந்தரவுக்குள்ளாகியிருந்த நிருவாக மற்றும் நிதித் தொழிற்பாடுகளையும் தாங்க வேண்டியிருந்தது. இருப்பினும், நாட்டின் மிகப் பெரிய காற்றாலை மின்வலு நிலையத்தை மின்தொகுப்புடன் இணைப்பதற்கு இந்த நிறுவனத்தால் முடிந்திருந்தது. இந்தக் காற்றாலை மின்வலு நிலையம் இ.மி.ச. இற்குச் சொந்தமானதாகவும் இ.மி.ச. இனால் இயக்கப்படுவதுமான ஓர் மின்வலு ஆலையாகும். செயற்றிட்ட முகாமைத்துவ அலகு மற்றும் ஒப்பந்தகாரர்களின் அர்ப்பணிப்பையும் பற்றுறுதியையும் நான் வெகுவாகப் பாராட்டுகின்றேன். அவர்களுடைய அர்ப்பணிப்பும் பற்றுறுதியுமே இந்த வெற்றியை உருவாக்கியிருந்தன.

புவி வெப்பமடைதலின் விளைவுகள் படிப்படியாகத் தென்படத் தொடங்கியுள்ளன. இலங்கையும் அதற்கு விதிவிலக்கல்ல. காலநிலை அமைப்புகளும் மாறியிருக்கின்றன. கடுமையான வறட்சி அல்லது எதிர்பாரா மழையின் வருகையை நாம் இன்று காண்கின்றோம். கடந்த 20 ஆண்டுகளில் இரண்டாவது ஆகக்குறைந்த உட்பாய்வு இந்த ஆண்டின் ஆரம்பத்தில் பதிவாகியிருந்தது. தென் மேற்கு பருவமழை 2020 ஆகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் மிகவும் தீவிரமாக இருந்தது. இதன் விளைவாக கடந்த 20 ஆண்டுகளில் இரண்டாவது ஆகக்கூடிய உட்பாய்வுகள் (நீர் வரத்து) கிடைக்கப் பெற்றன. அதற்கிணங்க, இ.மி.ச. இற்குச் சொந்தமான நீர் மின்வலு ஆலைகளிலிருந்து கிடைத்த நிகர மின் பிறப்பாக்கம் 127.94 GWh அதிகரித்திருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 3.38□ அதிகரிப்பாகும். மேலும், நிலக்கரி மின்வலு ஆலைகளிலிருந்து கிடைத்த நிகர மின் பிறப்பாக்கம் 393.38 GWh அதிகரிப்பைப் பதிவு செய்திருந்தது. இது கடந்த ஆண்டை விட அதிகமாகும். எனவே, IPP அனல்மின் பிறப்பாக்கத்தின் பங்களிப்பு 5.49□ குறைவடைந்தது. இது நிதி நிலையில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

பல வெளிவாரியான சவால்களை எதிர்கொண்டிருந்த போதிலும், இந்த நிறுவனம் 2020 ஆம் ஆண்டில் 239 பில்லியன் ரூபாவை வருமானமாக ஈட்டியிருந்தது. இது 2019 ஆம் ஆண்டையும்விட 2□ குறைவானதாகும். வருமானத்தில் ஏற்பட்ட இந்த வீழ்ச்சி பிரதானமாக கோவிட் 19 நோய்த் தொற்றின் தாக்கத்தினால் ஏற்பட்டதாகும். வீட்டு மின் நுகர்வுக்கான கேள்வியில் வளர்ச்சிப் போக்கு காணப்பட்டிருந்த போதிலும் கைத்தொழில் துறை, பொது நோக்கு மற்றும் ஹோட்டல் துறைகளின் கேள்விகளில் கணிசமானளவு குறைப்பொன்றை இந்த

# தலைவரின் மீளாய்வு (தொடர்ச்சி)

நோய்த் தொற்று ஏற்படுத்தியிருந்தது. சவால் மிகுந்த சமூக - பொருளாதார நிலைமைகள் காரணமாக, மின்சார அலகுகளுக்கான கேள்வியும் 2□ இனால் வீழ்ச்சி கண்டிருந்தது.

வீட்டு மின் நுகர்வு மற்றும், பொது நோக்கம் தவிர்ந்த ஏனைய வகைகளில் குறைந்தளவு மின்னை நுகரும் நுகர்வோருக்கு விற்பனைப் புள்ளியிலுள்ள கிரயத்தை விடவும் குறைந்த விலையில் மின்சாரத்தை வழங்குவது அரசாங்கத்தின் கொள்கையாகும். இதனால், வீட்டு மின் நுகர்வு வகை மற்றும் பொது நோக்க வகைகளில் உள்ள அதிகமான இறுதி நுகர்வோர்கள் இந்த மிகைக் கிரயத்தின் ஒரு பகுதியைத் தாங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. 2020 ஆம் ஆண்டிற்காக வசூலிக்கப்பட்ட மொத்த உபரித் (மிகை) தொகை ரூபா 14,883 மில்லியன் ஆகும். இது முன்னைய ஆண்டில் ரூபா 5,827 மில்லியனாகக் காணப்பட்டது. இந்த அதிகரிப்பு கோவிட் 19 நோய்த் தொற்றுக் காலப்பகுதியில் வீட்டு மின் நுகர்வோரின் சக்தி நுகர்வு அதிகரித்திருந்ததன் காரணமாக ஏற்பட்டதாகும். அரசாங்கத்தின் மானியக் கொள்கையின் விளைவாகவும் ஆகக்குறைந்த கிரய மின்வலுப் பிறப்பாக்கச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலில் காணப்படும் தாமதங்களின் விளைவாகவும் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் இந்நிறுவனம் ரூபா 62.5 பில்லியன் நிகர நட்டத்தைப் பதிவு செய்திருந்தது. எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 36□ இனால் நிகர நட்டத்தை குறைத்ததன் மூலம் இ.மி.ச. இனால் இழிவு மட்டத்தைச் சுருக்க முடிந்தது. இது பிரதானமாக முன்னைய நிதியாண்டிற்கு எதிராக நட்டக் குறைப்பானது தேவையின் பிரித்தெடுப்பு, எரிபொருள் விலைகளின் குறைப்பு மற்றும் இ.மி.ச. நீர்மின் மற்றும் நிலக்கரி மின்வலுப் பிறப்பாக்கத்தின் அதிகரிப்பு காரணமாக ஏற்பட்டதாகும்.

நிறுவனத்தின் நிதி நிலைமை பாதகமான வகையில் பாதிக்கப்பட்டிருந்த போதிலும், இ.மி.ச. வீட்டு மின் நுகர்வோர் வகையினருக்கு ரூபா 5.9 பில்லியன் சலுகையை வழங்கியிருந்தது. அத்துடன் அரசாங்கக் கொள்கைத் தீர்மானத்தின்படி, நோய்த் தொற்றைக் கையாள்வதற்காக நுகர்வோருக்கு உதவும் பொருட்டு கொடுப்பனவு செய்யப்படாமைக்கான மின்துண்டிப்புகள் பிற்போடப்பட்டதுடன் இ.மி.ச. மின்சாரக் கட்டணப் பட்டியல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கும் சலுகைக் காலமொன்று வழங்கப்பட்டது.

நோய்த் தொற்றின் பாதகமான தாக்கங்கள் இருந்த போதிலும், இ.மி.ச. தேசிய சக்தி வேலைச் சட்டகத்திற்கு ஏற்ப மீள்புதுப்பிக்கத்தக்க சக்திக்கான அதன் இலட்சிய இலக்குகளைத் தொடர்ந்திருந்தது. 210 MW காற்றாலை மற்றும் சூரிய சக்தி PV ஆலைகளைப் பெறுவதற்கு விலைமனுக்களை மிதக்கவிட முடிந்திருந்தது. இதற்கு மேலதிகமாக, 48 MW என்ற மொத்தக் கொள்ளளவைக் கொண்ட 23 புதிய NCRE ஆலைகளின் இயக்கத்திற்கு ஆண்டின் காலப்பகுதியில் அதிகாரம் அளிக்கப்பட்டது. கழிவுகளிலிருந்து (மாநகர திடக் கழிவுகள்) சக்தியைப் பிறப்பாக்கம் செய்யும் முதலாவது பெரிய அளவான செயற்றிட்டமும் இணைக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சிகள் எரிபொருள் பல்வகைப்படுத்தல் மூலம் நிறுவனத்தின் நிலைபேற்றுத் தன்மைக்கு கணிசமானளவு நேர்மறையான பங்களிப்பைச் செய்யும்.

மேலும், இ.மி.ச. இந்த ஆண்டில் அண்ணளவாக ரூபா 37.2 பில்லியன் பெறுமதியான செயற்றிட்டங்களைக் கையாண்டிருக்கிறது. அவற்றில், விரிநிலங்கள் 35 MW மற்றும் உமா ஓயா 120 MW நீர் மின்வலுச் செயற்றிட்டங்களும் LNG செயற்றிட்டமும் 2021 ஆம் ஆண்டிற்குள் வர்த்தக ரீதியான செயற்பாட்டை நோக்கி நகர்ந்துள்ளன. இந்தச் செயற்றிட்டங்கள் பிறப்பாக்கல் கிரயத்தைக் குறைப்பதற்கு நேர்மறையான பங்களிப்பினை நல்கும்.

கோவிட் 19 நோய்த் தொற்று நிலைமை காரணமாக தொந்தரவுகள் காணப்பட்ட போதிலும், பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம், தேசிய மின் பரிமாற்றம் மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம் மற்றும் மின்வலு முறைமையின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தும் செயற்றிட்டம் என்பன ஆண்டின் காலப்பகுதியில் பூர்த்தி நிலையை நோக்கி முன்னேறியுள்ளன. மன்னார் GS, மலிபோட GS, வேவல்வத்த GS மற்றும் மலிபோட - பொல்பிட்டிய மின் பரிமாற்ற வேலைகள் என்பவற்றிற்கு தூய சக்தி மற்றும் வலையமைப்பு வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம் மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் மின் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டம் ஆகியவற்றின் கீழ் வெற்றிகரமாக அதிகாரம் அளிக்கப்பட்டன. இந்தச் செயற்றிட்டங்கள் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்திகளுக்கு வசதியளித்திருந்தன.

சுறுசுறுப்பு மிக்க மின்வலு அமைச்சர் கௌரவ டலஸ் அழகப்பெரும மற்றும் சூரிய சக்தி, காற்றாலை, நீர் மின்வலுப் பிறப்பாக்கச் செயற்றிட்டங்கள் அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சர் கௌரவ துமிந்த திசாநாயக்கா ஆகியோர் அமைச்சின் ஊழியர்களுடன் இணைந்து வழங்கிய தலைமைத்துவம், பெறுமதிமிக்க நுகர்வோருக்கு அத்தியாவசிய சேவை ஒன்றினை வழங்குவதற்கும் பேரிடர்கள் ஊடாக இ.மி.ச. இனை வழிநடத்திச் செல்வதற்கும் உதவியாக அமைந்தன.

தகைமையும் பல்துறைப் பாண்டித்தியமும் கொண்ட பணிப்பாளர் சபை, தலைசிறந்த பொது முகாமையாளரும் குழுவினரும் மற்றும் அர்ப்பணிப்புமிக்க ஊழியர்கள் ஆகியோரால் வழங்கப்பட்ட துடிப்புமிக்க பங்குபற்றல் மற்றும் பங்களிப்பு இன்றி 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இ.மி.ச. இன் செயலாற்றுகை சாதனை படைத்திருக்காது.

எங்களது துணைக் கம்பனிகள், வங்கிகள் மற்றும் சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்கள் ஆகியோர் வழங்கிய ஆதரவையும் பங்களிப்பையும் ஏற்று, பாராட்டாதுவிடின், நான் எனது கடமையிலிருந்து தவறியவனாவேன். அத்துடன் எங்கள் நிதியிடல் முகவராண்மைகளான ஆசிய அபிவிருத்தி வங்கி, யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை மற்றும் சீனாவின் கைத்தொழில் மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கு அவர்கள் தொடர்ச்சியாக வழங்கிவரும் நிதியுதவிகளுக்கு எனது நன்றிகளைத் தெரிவிக்க இந்தச் சந்தர்ப்பத்தை எடுத்துக் கொள்கின்றேன்.

இறுதியாக, 2020 ஆம் ஆண்டின் ஊடாக இந்நிறுவனம் வெற்றிகரமாக பயணத்தை மேற்கொள்வதற்கு பெரிய, சிறிய பங்களிப்புகளை வழங்கிய ஒவ்வொருவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**பொறியியலாளர் எச்.எம். விஜித ஹேரத்**
தலைவர்
இலங்கை மின்சார சபை

# பொது முகாமையாளரின் மீளாய்வு

**"ஆண்டின் பிரதான சாதனையாக இருப்பது 2020 டிசெம்பர் 8 ஆந் திகதி இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பிரதம மந்திரியால் மன்னாரில் அமைக்கப்பட்ட முதலாவது பெரியளவு காற்றாலை மின்வலு நிலையத்தின் இயக்கத்திற்கான அதிகாரம் அளித்து, அதனைத் திறந்து வைத்தமை ஆகும். இது கடந்த 6 ஆண்டு காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட்ட முதலாவது பெரிய அளவு மின்வலு ஆலையாகும்."**



இலங்கை மின்சார சபையின் (இ.மி.ச.) பொது முகாமையாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியும் என்ற வகையில், 2020 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான இ.மி.ச. இன் முன்னேற்றத்தை / நிலைமையை மதிப்பீடு செய்ய விரும்புகின்றேன். இ.மி.ச. மற்றும் நாட்டிற்கு அதிக ஆதாயங்களைக் கொண்டு வந்த முந்தைய ஆண்டுகளில் பல மைல்கற்களைக் கடந்து, இந்த ஆண்டானது அதன் தொழில்நுட்பச் செயற்பாடுகளில் சிறந்து விளங்குவதற்கும் அதன் பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுடனான உறவை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவதற்குமான நிறைய எதிர்பார்ப்புகள் மற்றும் இலக்குகளுடன் ஆரம்பித்தது. எவ்வாறாயினும், நோய்த் தொற்று நிலைமையானது பல நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைக் கடுமையாகப் பாதித்திருந்தது. இந்த அசாதாரணமான சூழ்நிலையால் சவால்கள் காணப்பட்டிருந்த போதிலும், இ.மி.ச. இன் சேவைகளைச் சார்ந்திருக்கின்ற எமது வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியான மின் வழங்கலைப் பேண இ.மி.ச. இனால் முடிந்திருந்தது. கடுமையான சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி, இ.மி.ச. இனால் அதன் அலுவலகங்களையும் நிறுவல்களையும் செயற்படுத்த முடிந்திருந்தது. ஆண்டின் காலப்பகுதியில் சிரமங்களை எதிர்கொண்ட போதிலும், மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் காணப்பட்ட நாட்டின் முடக்க நிலையின்போது, நுகரப்பட்ட மேலதிக மின்சாரத்தில் வாடிக்கையாளர்களுக்கு நிவாரணமளிப்பதற்காக வீட்டு மின் நுகர்வோருக்கு ரூபா 5.9 பில்லியன் விசேட சலுகையொன்றை இ.மி.ச. வழங்கியிருந்தது.

அனைவருக்கும் தரமான மற்றும் நம்பகமான மின்சாரத்தை வழங்குவதற்கான அரசாங்கத்தின் கொள்கையால் வழிநடத்தப்பட்ட இ.மி.ச. தமது வாடிக்கையாளர்களுக்கு தரமானதும் நம்பகமானதுமான மின் வழங்கலைப் பேணுவதற்கும் சகல எதிர்கால வாடிக்கையாளர்களையும் சென்றடைவதற்கும் இ.மி.ச. அதன் வலுவான முயற்சிகளைத் தொடர்ந்திருந்தது. அதற்கிணங்க, ஆண்டின்போது 135,625 புதிய மின் இணைப்புகள் நுகர்வோருக்கு வழங்கப்பட்டிருந்தன. நோய்த் தொற்று நிலைமையானது நாட்டின் சக்தி நுகர்வில் கணிசமான குறைப்பை ஏற்படுத்தியது. ஆண்டின் காலப்பகுதியில் தொழிற்படுத்தப்பட்ட மொத்த சக்தித் தேவை 14,286 GWh ஆகும். இது கடந்த ஆண்டின் தேவையுடன் ஒப்பிடுகையில் 2□ குறைவானதாகும்.

மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மின்வலு ஆலைகளினால் வழங்கப்பட்ட மொத்தப் பங்களிப்பானது மொத்த மின் பிறப்பாக்கத்தில் 36.8□ ஆக இருந்தது. பிரதான நீர் மின்வலு ஆலைகளின் பங்களிப்பு 24.9□ ஆகவிருந்த அதே வேளை மொத்த மின் பிறப்பாக்கத்தில் மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி (NCRE) மின்வலு ஆலைகளிலிருந்து 11.9□ பங்களிப்பை வழங்க முடிந்திருந்தது. இலங்கையின் மிகப் பெரிய மின்வலு ஆலையான லக்விஜய மின்வலு ஆலை (LVPP) 5,754 GWh இனைப் பிறப்பாக்கம் செய்து, மொத்த மின் பிறப்பாக்கத்திற்கு 36.6□ பங்களிப்பினை நல்கியிருந்தது. இதுவே LVPP இனால் இதுவரையில் செய்யப்பட்ட உயர்ந்த வருடாந்தப் பங்களிப்பாகும். மீதி 26.6□ உம் இ.மி.ச. மற்றும் ஐ.பி.பி. எண்ணெய் எரிப்பு மின்வலு ஆலைகளைப் பயன்படுத்தி பிறப்பாக்கம் செய்யப்பட்டன. ஆண்டின் காலப்பகுதியில் செய்யப்பட்ட மொத்த மின் பிறப்பாக்கம் 15,714 GWh மட்டுமே. இது ஆண்டிற்காகத் திட்டமிடப்பட்ட பிறப்பாக்கத்தை விட 11□ குறைவானதாகும்.

ஆண்டின் பிரதான சாதனையாக இருப்பது 2020 டிசெம்பர் 8 ஆந் திகதி இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பிரதம மந்திரியால் மன்னாரில் அமைக்கப்பட்ட முதலாவது பெரியளவு காற்றாலை மின்வலு நிலையத்தின் இயக்கத்திற்கான அதிகாரம் அளித்து, அதனைத் திறந்து வைத்தமை ஆகும். இது கடந்த 6 ஆண்டு காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட்ட வேண்டியிருந்த முதலாவது பெரிய அளவு மின்வலு ஆலையாகும். இது வருடாந்தம் 400 GWh இனை பிறப்பாக்கம் செய்யுமென எதிர்பார்க்கப்படுவதுடன், புதைபடிவ எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட மின்சாரப் பிறப்பாக்கத்தின் அளவை பெரியளவில் குறைக்குமெனவும் இதனால் வருடாந்தம் 300 ஆயிரம் மெற்றிக் தொன் $CO_2$ வெளியீடு தவிர்க்கப்படும் எனவும் நம்பப்படுகிறது. எவ்வாறாயினும், இந்தச் செயற்றிட்டம் பல்வேறு பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக 10 மாதங்களுக்கும் மேலாக தாமதமடைந்திருந்தது. இந்த ஆண்டின் இறுதியில் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்த மற்றைய பாரிய மின்

# பொது முகாமையாளரின் மீளாய்வு (தொடர்ச்சி)

பிறப்பாக்கல் செயற்றிட்டமான விரிநில நீர் மின் செயற்றிட்டத்தை இயக்குவதற்கான அதிகாரத்தை பல்வேறு பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக அளிக்க முடியவில்லை.

ஆண்டின் காலப்பகுதியில் மன்னார், மலிபோட மற்றும் வேவல்வத்த மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் மற்றும் மலிபோட - பொல்பிட்டிய, மன்னார் - நடுக்குடா மின் பரிமாற்ற மார்க்கங்கள் ஆகியவற்றின் செயற்பாட்டிற்கு அதிகாரம் அளித்ததன் மூலம் மின் பரிமாற்ற வலையமைப்பின் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சலின் இயலளவு மேம்படுத்தப்பட்டுள்ளது. இது பசுமை சக்தியின் ஒருங்கிணைப்பை உத்தமமாக்குவதற்கு வசதியளிக்கக்கூடியதாகும். NCRE மின் பிறப்பாக்கத்தைக் கண்காணித்து எதிர்வுகூறுவதற்காக முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தில் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மேசை அமைக்கப்பட்டது. கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக சவால்கள் எதிர்நோக்கப்பட்ட போதிலும் ஏனைய மின் பரிமாற்றச் செயற்றிட்டங்களும் அவற்றின் அடைவுகளை மெதுவாக ஆனால் நியாயமான முன்னேற்றத்தை அடைந்திருந்தன.

உள்ளக பொறியியலாளர்களால் விருத்தி செய்யப்பட்ட CEBAssit என்பது வாடிக்கையாளர் சேவை, வாடிக்கையாளர் ஈடுபாடு, பணியிட வினைத்திறன், உள்ளகச் செயன்முறைகள் மற்றும் சேவைத் தரம் ஆகியவற்றை மேம்படுத்துகின்ற ஒரு செயலி (application) ஆகும். இது அரசாங்க மற்றும் அரசசாரா நிறுவனங்களின் கீழான சிறந்த டிஜிடல் - இயக்கப்பட்ட பொருள் / சேவைக்கான விருதையும் டிஜிடல் எக்செலன்ஸ் 2018/19 இற்கான SLT Zero One விருதுகளில் சிறந்த கையடக்கத் தொலைபேசிப் பாவனை விருதையும் வென்றிருந்தது. 2020 ஆம் ஆண்டில் எதிர்கொள்ளப்பட்ட விசேட சவால்களுக்கு முகம் கொடுப்பதற்காக இந்தச் செயலி இந்த ஆண்டின்போது மேலும் மேம்படுத்தப்பட்டு, திருத்தப்பட்டது.

நிதியாண்டு 2020 ஆனது கிரயத்தைப் பிரதிபலிக்காத விதிப்பனவுகள் மற்றும் முன்மொழியப்பட்ட ஆகக் குறைந்த கிரயத்தைக் கொண்ட மின்வலுப் பிறப்பாக்கல் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட தாமதங்கள் போன்ற காரணங்களால் இ.மி.ச. ரூபா 62.5 பில்லியன் நிகர நட்டத்தைப் பதிவு செய்த மற்றுமொரு கடினமான ஆண்டாக விளங்கியது. எவ்வாறாயினும், இந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட நிகர நட்டமானது முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட நட்டமான ரூபா 97.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் குறைவானதாகும். இதற்குக் காரணம், கேள்வியில் காணப்பட்ட வீழ்ச்சியும் நீர்மின் மற்றும் குறைந்த கிரயத்தைக் கொண்ட நிலக்கரிப் பிறப்பாக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பும் காரணமாக விலயுயர்ந்த எண்ணெய் எரிப்பு மின்வலு ஆலைகளின் அனுப்பீடு குறைவடைந்தமை ஆகும். அத்துடன் உலை எண்ணெயின் விலை ரூபா 96.00 இலிருந்து ரூபா 70.00 இற்கு குறைவடைந்திருந்தமை ஆனது நேரடி மின் பிறப்பாக்கம் மீதான நிதிச் சுமையைக் குறைத்திருந்தது. கிரயத்தை உத்ததமாக்குவது மீதான வலியுறுத்தல்கள், சர்வதேச சந்தைகளில் காணப்பட்ட ஒப்பீட்டளவில் குறைந்த எரிபொருள் மற்றும் நிலக்கரி விலைகள் என்பன ஆண்டின் காலப்பகுதியில் செயற்பாட்டுக் கிரயத்தை குறைப்பதற்கு உதவியிருந்தன. நாட்டின் பொருளாதாரமும் ஏனைய நடவடிக்கைகளும் வீழ்ச்சி கண்டிருந்ததுடன் செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதன் மீதான வலியுறுத்தல்கள் மற்றும் கிரய முகாமைத்துவத்தின் கடுமையான நடைமுறைகளும் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் செயற்பாட்டு மற்றும் பராமரிப்புக் கிரயத்தின் 19□ குறைப்பதற்கு வழிகோலின.

2020 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 953 பில்லியன் பெறுமதியான மொத்தச் சொத்துத் தளத்தினை இ.மி.ச. கொண்டிருந்தது. இது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4□ அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. எரிபொருள் விலை நிலைப்படுத்தல் நிதியிலிருந்து பெறப்பட்ட ரூபா 48 பில்லியன் உரிமையாண்மை முதலீட்டை இ.மி.ச. மிகவும் பாராட்டுகிறது. இந்த முழுத் தொகையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு (CPC) செலுத்தப்பட்டது. இதனால் CPC இற்குச் செலுத்த வேண்டிய கடன் நிலுவை கிட்டத்தட்ட பாதியாகக் குறைந்ததுடன் வருடாந்த வட்டிக் கிரயமும் பெருமளவில் குறைக்கப்பட்டது. சில்லறை வாடிக்கையாளர்கள் எதிர்கொண்ட இக்கட்டான நிலைமை காரணமாக அவர்களிடமிருந்து கடனை வசூலிப்பதில் இ.மி.ச. கஸ்டத்திற்கு முகம் கொடுத்ததால், இந்த காசு ஊட்டமானது காசுப் பாய்வு நிலைமைக்கு மிகவும் உதவியாக அமைந்தது.

மேலே விபரிக்கப்பட்ட பல தடைகளுக்கும் மத்தியில் இவ்வாண்டிற்கான நிறுவனத்தின் செயலாற்றுகை நம்பகமானதாகவும் நேர்மறையானதாகவும் இருந்ததுடன் இது 21,262 நிரந்தர ஊழியர்கள், 1,603 அமய / ஒப்பந்த ஊழியர்கள் மற்றும் 2,759 பயிற்சியாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிய இ.மி.ச. ஊழியர்களது கடின உழைப்பும் விசுவாசமும் இன்றி அடையப்பட்டிருக்க முடியாது என்பதை நான் வெகுவாக நம்புகின்றேன்.

அமைச்சின் அதிகாரிகளுடன் சேர்ந்து மின்வலு அமைச்சர் கௌரவ டலஸ் அழகப்பெரும அவர்களும் இராஜாங்க அமைச்சர் கௌரவ துமிந்த திசாநாயக்கா அவர்களும் வழங்கிய ஆதரவு மற்றும் வழிகாட்டல்களை நான் பெரிதும் பாராட்டுகின்றேன்.

இந்தச் சவாலான காலகட்டம் வழியாக நிறுவனத்தை வழிநடத்திச் சென்ற இ.மி.ச. இன் தலைவர் பொறியியலாளர் விஜித ஹேரத் மற்றும் பணிப்பாளர்கள் சபை ஆகியோருடன் இணைந்து பணியாற்றியதையிட்டு நான் பெருமிதம் கொள்ளவதுடன் அதனை எனது பாக்கியமாகவும் கருதுகின்றேன். மேலும், இந்தச் சாதனையை அடைவதற்கு எனக்கு உதவிய மற்றும் பக்கபலமாக இருந்த நிறுவன முகாமைத்துவ அணியின் சகாக்களுக்கும் எனது மூத்த அதிகாரிகளுக்கும் நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

அத்துடன், நிதி அமைச்சு, வங்கிகள், நிதியிடல் முகவராண்மைகள் மற்றும் நிறுவனத்தின் வெற்றிகரமான பயணத்திற்கு ஆதரவளித்த அனைத்து அதிகாரிகளுக்கும் எனது நன்றிகளைப் பதிவு செய்வதுடன் எனது செய்தியை ஒரு பணிவான நன்றியுடன் நிறைவு செய்கின்றேன்.

**பொறியியலாளர் டி.டி.கே. கருணாரத்ன**
பொது முகாமையாளர்

# 2020 ஆம் ஆண்டில் இலங்கையின் மின்வலு முறைமை





லக்விஜய மின்வலு ஆலை

செயற்பாட்டு மீளாய்வு

# மின் பிறப்பாக்கல் பிரிவு

# மின் பிறப்பாக்கல் பிரிவு

இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான சகல மின்வலு ஆலைகளையும் இயக்கிப் பராமரித்துப் புனரமைப்புச் செய்வதற்கு மின் பிறப்பாக்கல் பிரிவு பொறுப்பானதாகும். மின் பிறப்பாக்கல் பிரிவானது 1,383 MW கொள்ளளவைக் கொண்டு நிறுவப்பட்ட பதினேழு நீர் மின்வலு நிலையங்களையும், 654 MW கொள்ளளவைக் கொண்டு நிறுவப்பட்ட ஏழு எண்ணெய் எரிப்பு அனல் மின்வலு நிலையங்களையும், 900 MW கொள்ளளவுடன் நிறுவப்பட்டுள்ள ஒரு நிலக்கரி எரிப்பு மின்வலு ஆலையையும் கொண்டிருக்கிறது. இது யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சூழ வுள்ள தீவுகளில் ஒரு சில டீசல் ஆலைகளையும் இயக்குகிறது. 2020 ஆம் ஆண்டின் இறுதியில் இ.மி.ச. இற்குச் சொந்தமான மின்வலு ஆலைகளில் நிறுவப்பட்டுள்ள மொத்தக் கொள்ளளவு 2,968 MW ஆகும்.

## மின்வலு நிலையங்களின் செயலாற்றுகை

2020 ஆம் ஆண்டு மகாவலித் தொகுதிக்கு குறிப்பிடத்தக்கதொரு ஆண்டாக இருந்தது. மகாவலித் தொகுதியிலுள்ள மின்வலு நிலையங்கள் 1,890 GWh இனைப் பிறப்பாக்கம் செய்திருந்தன. இது இ.மி.ச. இன் மொத்த நீர்மின் பிறப்பாக்கத்தில் கிட்டத்தட்ட 48□ ஆகும். இது உக்குவளை மற்றும் போவத்தென்ன மின்வலு நிலையங்களின் வருடாந்த மின் பிறப்பாக்கல் இலக்குகளை விஞ்சிய அடைவைக் காட்டியிருந்ததுடன் கொத்மலை மற்றும் மேல் கொத்மலை மின்வலு நிலையங்களில் இருந்து பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்ட சக்தி இலக்குகளில் 80□ இனையும் தாண்டிய மின் பிறப்பாக்க அடைவையும் காட்டியிருந்தது.

லக்ஷபான தொகுதியானது 1,443 GWh இனைப் பிறப்பாக்கம் செய்திருந்தது. இது அத்தொகுதியின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த சக்தியான 1,550 GWh இல் 93□ ஆகும்.

சமனல தொகுதியின் உடவளவை மற்றும் இங்கினியாகல மின்வலு நிலையங்கள், நீர்பாசனத்திற்குரிய நீரை விடுவிப்பதற்கான ஒழுங்குபடுத்தப்பட்ட நிலைமைகளின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த சக்திப் பிறப்பாக்கத்தையும் விட அதிகமாகப் பிறப்பாக்கம் செய்திருந்தன.

ஆண்டின் காலப்பகுதியில் அனல் (எண்ணெய்) மின்வலு நிலையங்கள் 1,465 GWh இனைப் பிறப்பாக்கம் செய்திருந்த அதே வேளை இலங்கையில் உள்ள ஒரேயொரு நிலக்கரி மின்வலு ஆலையான லக்விஜய மின்வலு ஆலை (LVPP) தேசிய மின்தொகுப்பிற்கு 5,754 GWh இனைப் பங்களிப்புச் செய்திருந்தது. இது 2014 ஆம் ஆண்டில் சகல கட்டங்களுக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டதன் பின், LVPP இனால் செய்யப்பட்ட வருடாந்த பங்களிப்புகளில் மிகவுயர்ந்த பங்களிப்பாக இருக்கிறது.

2020 ஆம் ஆண்டில் மின்வலு நிலையங்களால் பிறப்பாக்கம் செய்யப்பட்ட மின்சாரம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட காரணிகள் என்பன கீழே நிரற்படுத்தப்பட்டுள்ளன:

அட்டவணை 01 : நீர் மின்வலு நிலையங்களின் பங்களிப்பு

| மின்வலு நிலையம் | நிறுவப்பட்ட கொள்ளளவு (MW) | பிறப்பாக்கம் (GWh) | கிடைப்பனவுக் காரணி (%) | ஆலைக் காரணி (%) |
|---|---|---|---|---|
| விக்டோரியா | 210 | 506 | 99.8 | 27.2 |
| கொத்மலை | 201 | 398 | 99.8 | 22.6 |
| மேல் கொத்மலை | 150 | 351 | 99.3 | 26.7 |
| ரந்தெனிகல | 122.6 | 266 | 99.4 | 23.9 |
| ரண்தம்பே | 50 | 127 | 99.7 | 29.2 |
| உக்குவளை | 40 | 180 | 99.1 | 50.9 |
| போவத்தென்ன | 40 | 55 | 99.8 | 15.7 |
| நில்லம்பே | 3.2 | 8 | 99.5 | 28.3 |
| **MC மொத்தம்** | **816.8** | **1,891** | | |

| மின்வலு நிலையம் | நிறுவப்பட்ட கொள்ளளவு (MW) | பிறப்பாக்கம் (GWh) | கிடைப்பனவுக் காரணி (%) | ஆலைக் காரணி (%) |
|---|---|---|---|---|
| சமனலவெவ | 120 | 243 | 80.5 | 23.3 |
| குக்குளேகங்கை | 75 | 296 | 93.2 | 48.6 |
| உடவளவை | 6 | 8 | 63.5 | 24.7 |
| இங்கினியாகல | 11.25 | 30 | 97.7 | 30.8 |
| **SC மொத்தம்** | **212.25** | **577** | | |
| பழைய லக்ஷபான கட்டம் I | 3x9.6 | 276 | 99.5 | 58.4 |
| பழைய லக்ஷபான கட்டம் II | 2x12.5 | | | |
| புதிய லக்ஷபான | 2x50 | 503 | 99.0 | 53.1 |
| சமனல | 2x45 | 418 | 98.8 | 52.5 |
| விமலசுரேந்திர | 2x25 | 102 | 93.8 | 23.3 |
| கன்யோன் | 2x30 | 145 | 94.4 | 27.6 |
| **LC மொத்தம்** | **353.8** | **1,444** | | |
| **நீர்மின் மொத்தம்** | **1,383.25** | **3,911** | | |

# பிறப்பாக்கல் பிரிவு (தொடர்ச்சி)

அட்டவணை 02 : அனல் (எண்ணெய்) மின்வலு நிலையங்களின்

| மின்வலு நிலையம் | நிறுவப்பட்ட கொள்ளளவு (MW) | அதிகபட்சம் கிடைக்கக் கூடிய மொத்தக் கொள்ளளவு (MW) | பிறப்பாக்கம் செய்யப்பட்ட சக்தி (GWh) | கிடைப்பனவுக் காரணி (%) | ஆலைக் காரணி (%) |
|---|---|---|---|---|---|
| சபுகஸ்கந்த - A | 80 | 70 | 331 | 93.8 | 55.7 |
| சபுகஸ்கந்த - B | 80 | 72 | 415 | 96.0 | 68.3 |
| களனிதிஸ்ஸ CCPP – GT | 110 | 110 | - | - | - |
| களனிதிஸ்ஸ CCPP – ST | 55 | 55 | -1 | - | - |
| களனிதிஸ்ஸ GT - 07 | 115 | 115 | 97 | 57.0 | 12.0 |
| களனிதிஸ்ஸ Frame V GT | 80 | 54 | 35 | 46.8 | 6.1 |
| அவசரகால மின்வலு | 50 | 40 | 78 | 90.1 | 23.6 |
| உத்துறு ஜனனி | 24 | 22 | 108 | 89.0 | 55.0 |
| மிதக்கும் மின்வலு ஆலை | 60 | 62.4 | 399 | 95.6 | 75.6 |
| **அனல் (எண்ணெய்) மொத்தம்** | **654** | **602.4** | **1,462** | | |

அட்டவணை 03 : லக்விஜய மின்வலு ஆலையின் பங்களிப்பு

| | | அலகு 01 | அலகு 02 | அலகு 03 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நிறுவப்பட்ட கொள்ளளவு | MW | 300 | 300 | 300 | 900 |
| பிறப்பாக்கம் செய்யப்பட்ட மொத்தச் சக்தி | GWh | 2,152 | 2,258 | 1,955 | 6,365 |
| அனுப்பப்பட்ட நிகர சக்தி | GWh | 1,948 | 2,036 | 1,770 | 5,754 |
| துணை நுகர்வு | GWh | 205 | 221 | 185 | 611 |
| கிடைப்பனவுக் காரணி | % | 97 | 95 | 90 | 94 |
| கொள்ளளவுக் காரணி | % | 82 | 86 | 74 | 81 |

## முக்கிய நிகழ்வுகள்

### விசேட பராமரிப்பு வேலைகள்

மின் பிறப்பாக்கல் அலகுகள் மற்றும் மின்வலு ஆலைகளின் துணை முறைமைகள் ஆகியவற்றின் வழமையான பராமரிப்பு வேலைகளுக்கு மேலதிகமாக, சொத்து முகாமை (நீர் - மின்) கிளை, சொத்து முகாமை (நீர் - எந்திரவியல்) கிளை, சொத்து முகாமை (அனல் - மின்) கிளை, சொத்து முகாமை (அனல் - எந்திரவியல்) கிளை, அணைக்கட்டுப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் குடியியல் கட்டமைப்புகள் பராமரிப்புக் கிளை, பிறப்பாக்கல் பாதுகாப்புக் கிளை ஆகியவற்றின் ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்புடன் மின் பிறப்பாக்கல் தொகுதி வாரியாக கீழ்வரும் விசேட பராமரிப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

### லக்ஷபான, கன்யோன் மற்றும் சமனல மின்வலு நிலையங்களில் IP கண்காணிப்பு முறைமையை நிறுவுதல்

லக்ஷபான மின்வலு நிலையத்தில் 76 IP கண்காணிப்புக் கமெராக்களைக் கொண்ட ஒரு CCTV **முறைமையும்** கன்யோன் மின்வலு நிலையத்தில் 46 IP கண்காணிப்புக் கமெராக்களைக் கொண்ட ஒரு CCTV முறைமையும் சமனல மின்வலு நிலையத்தில் 45 IP கண்காணிப்புக் கமெராக்களைக் கொண்ட ஒரு CCTV முறைமையும் நிறுவப்பட்டது.


IP கண்காணிப்பு முறைமை

செயற்றிட்டக் கிரயம் அண்ணளவாக ரூபா 21 மில்லியன் இலங்கை ரூபாயாக இருந்தது.

### மவுசாகலை நீர்த்தேக்கத்தின் உள்ளெடுப்பு வாயிலில் பழுதுபார்ப்பு

உள்ளெடுப்பு வாயில் கடுமையாக துருப்பிடித்திருந்ததுடன் இறப்பர் முத்திரைகளும் (சீல்) மோசமடைந்திருந்தன. அத்துடன் வாயிலின் பிரதான ஏற்றம் நீண்ட காலத்திற்கு முன்னர் நிறுவப்பட்டிருந்த காரணத்தால் அது செயற்பாட்டு நிலையிலும் காணப்படவில்லை. சகல உபகரணங்களும் பழுதுபார்க்கப்பட்டு, உள்ளெடுப்பு

# பிறப்பாக்கல் பிரிவு (தொடர்ச்சி)



மவுசாகலை உள்ளெடுப்பு வாயிலின் பழுதுபார்ப்பு

வாயிலின் பாதுகாப்பானதும் நம்பகமானதுமான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக மீள்-அதிகாரம் வழங்கப்பட்டது.

### மவுசாகலை நீர்த்தேக்கத்தில் ஹோவெல் பங்கர் வால்வில் பழுதுபார்ப்பு

வால்வின் வெளிப்புற மேற்பரப்பானது ஆழமான துருப்பிடிப்பு காரணமாக வெகுவாகப் பாதிப்படைந்திருந்ததுடன் பொருத்தப்பட்டிருந்த வோல்ட்டுகளும் (bolts) மோசமடைந்திருந்தன.

வால்வின் வெளிப்புற உடற்பகுதி TIG உருக்கி ஒட்டுதல் மற்றும் குளிர்விக்கப்பட்ட உருக்கி ஒட்டுதல் வேலைகள் மூலம் பழுதுபார்க்கப்பட்டது. நெம்புப் பெட்டி, பிரதான இணைப்புகள் மற்றும் தண்டு என்பனவும் தயாரிக்கப்பட்டு மாற்றீடு செய்யப்பட்டன. அதிகாரம் வழங்கும் வேலைகளை கன்யோன் சுரங்கப் பாதை செயலிழக்கச் செய்யப்படும்போது முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



மவுசாகலை ஹோவெல் பங்கர் வால்வு பழுதுபார்ப்பு

### கொத்மலை மின்வலு நிலையத்தில் 220 kV குறைந்தபட்ச எண்ணெய் சுற்று முறிப்பான்களின் முழுமையான பழுதுபார்ப்பு

கொத்மலை ஆளிமுற்றத்தில் உள்ள 220 kV குறைந்தபட்ச எண்ணெய் சுற்று முறிப்பான்கள் 1984 இல் நிறுவப்பட்டன. இதனால் CB 110 மற்றும் CB 330 இற்கான முழுமைத் திருத்த வேலைகள் திட்டமிடப்பட்டு, பூரணப்படுத்தப்பட்டன. முழுமைத் திருத்தத்தின்போது, worn-out பாகங்கள் மாற்றீடு செய்யப்பட்டதுடன் PRVs பழுதுபார்க்கப்பட்டு CBs ஆனது குறித்த எண்ணெய்யினால் நிரப்பப்பட்டது. பின்னர் நேரமும் ஏனைய பரமானங்களும் OEM குறிப்பீடுகளுக்கு இணங்கச் சீராக்கம் செய்யப்பட்டன.



கொத்மலை PS இல் சுற்றுமுறிப்பான் முழுமைப் பழுதுபார்ப்பு

### கொத்மலை மின்வலு நிலையத்தில் DAQ முறைமையின் அதிகாரம் வழங்குதல்

2020 இல் அலகு 02 மற்றும் அலகு 03 இற்கான தரவு கையகப்படுத்தல் முறைமைக்கு (DAQ) அதிகாரம் வழங்கப்பட்டது. சகல அலகுகளினதும் அறிவிப்பு முறைமையும் தொடக்க வரிசைகளும் கூட்டிணைப்புச் செய்யப்பட்டன. மேலும், மாற்றியமைத்தல்களும் மேம்படுத்தல்களும் 2021 இல் மேற்கொள்ளப்படும்.

### கொத்மலை மின்வலு நிலையத்தில் டிஜிடல் அழுத்த உணரிகள் நிறுவுதல்

தற்போதுள்ள அழுத்த உணரிகள் அனலொக் சாதனங்கள் ஆகும். டிஜிடல் அழுத்த உணரிகளை நிறுவியதன் மூலம் முறைமை மேம்படுத்தப்பட்டது. புதிய டிஜிடல் அழுத்த உணரிகளும் DAQ முறைமையுடன் இணைக்கப்பட்டன.

### கொத்மலை மின்வலு நிலையத்தில் மின்வலு இல்லத் திருத்தி 01 மற்றும் 02 இன் நிறுவலும் அதிகாரம் வழங்கலும்

மின்வலு நிலையத்தில் தற்போது இருக்கின்ற திருத்தி (rectifier) முறைமை 1984 இல் நிறுவப்பட்டிருந்தது. எனவே தற்போதைய



கொத்மலை PS இல் மின்வலு இல்லத் திருத்தியின் நிறுவல்

# பிறப்பாக்கல் பிரிவு (தொடர்ச்சி)

திருத்தி முறைமையை மறுசீரமைப்புச் செய்யத் திட்டமிடப்பட்டது. தேவையான பெறுகைகள் செய்யப்பட்டு, திருத்தி முறைமை மறுசீரமைப்புச் செய்யப்பட்டது.

**கொத்மலை மின்வலு நிலையத்தில் எழுச்சி அறை வாயில் மற்றும் கட்டமைப்புகளுக்கு மண்ணூதையிடலும் தீந்தை பூசுதலும்**

இந்த எழுச்சி அறை வாயில் வயது போனதன் காரணமாக துருப்பிடித்திருந்தது. இந்த வாயில் (மொத்தப் பரப்பு அண்ணளவாக 720 சதுர மீற்றர்) Sa2.5 மற்றும் ISO12944-1 ஆகிய நியமங்களுக்கு ஏற்ப மண்ணூதையிடல் (sandblasting) செய்யப்பட்டு தீந்தை பூசப்பட்டது.

**கொத்மலை மின்வலு நிலையத்தில் உள்ள காற்றோட்ட ஆலையின் காற்றோட்டக் கவிகைக் கூம்புகளின் பழுதுபார்ப்பு**

காற்றோட்ட ஆலையில் காற்றை உள்ளெடுக்கும் கூம்புகள் மின்வலு நிலையத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டபோது நிறுவப்பட்டிருந்தன. அது தற்போது வெகுவாகத் துருப்பிடித்து பழுதடைந்திருப்பது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க, ஒரு தொகுதி காற்றோட்ட காற்று உள்ளெடுப்புக் கூம்புகள் மாற்றீடு செய்யப்பட்டன.

**மேல் கொத்மலை மின்வலு நிலையம் - தலவாக்கலை அணைக்கட்டில் அசாதாரண காலநிலைக்கு எதிரான உபரி நீர் வெளியேறும் வடிகால் வாயிலில் கொங்கிறீற்று மேற்பரப்பைச் செப்பனிடுதல்**

தலவாக்கலை அணைக்கட்டின் கொங்கிறீற்று மேற்பரப்பு காலநிலையால் பாதிக்கப்பட்டிருந்தது. மேலும் காலநிலையால் பாதிப்படைவதைத் தடுக்க நீர் புகா கலவையால் உபரி நீர் வெளியேறும் வடிகால் வாயில் திறக்கும் பகுதிகளில் (முதலாவது கட்டமாக) கொங்கிறீற்று மேற்பரப்பைச் செப்பனிடத் தீர்மானிக்கப்பட்டது. DSE&CSM கிளையினால் விலைமனு கோரல் ஆரம்பிக்கப்பட்டு, ஒப்பந்தமானது வரையறுக்கப்பட்ட பைனெக்ஸ் என்ஜினியரிங் (தனியார்) நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. சகல ஐந்து உபரி நீர் வெளியேறும் வடிகால் வாயில்களினதும் கொங்கிறீற்று மேற்பரப்புகள் நீர்புகா கலவையால் மேற்பூச்சிடப்பட்டது.


தலவாக்கலை அணைக்கட்டின் வடிகால் வாயிலில் கொங்கிறீற்று மேற்பரப்பு செப்பனிடல்

**மேல் கொத்மலை மின்வலு நிலையம் - அலகு 1 மதகு வடிகால் வால்வு மாற்றீடு**

2020 பெப்ரவரி மாதம் அலகு 01 MIV வடிகால் வால்வின் கீழ்நிலை உருக்கியொட்டுதல் மூட்டில் ஒரு வெடிப்பு அவதானிக்கப்பட்டதுடன் அந்த வால்வு அதே வேறு வால்வு ஒன்றினால் மாற்றீடு செய்யப்பட்டது. 2020 செப்ரெம்பரில், வால்வு மாற்றீடு செய்யப்பட்ட அதே இடத்தில் புதிய ஒரு வெடிப்பு அவதானிக்கப்பட்டது. அது பழுது பார்க்கப்பட்ட முன்னைய வெடிப்பு காணப்பட்ட வால்வினால் மாற்றீடு செய்யப்பட்டது.


மேல் கொத்மலை PS இல் மதகு வடிகால் வால்வு மாற்றீடு

**சமனலவெவ மின்வலு நிலையம் - கட்டுப்பாடு / SCADA புனரமைப்புச் செயற்றிட்டம்**

அணைக்கட்டிற்கும் மின்வலு நிலைய கட்டுப்பாட்டு அறைக்கும் இடையிலான கட்டுப்பாடு மற்றும் தரவுப் பரிமாற்றங்கள், தொடர்பாடல் வழிமுறையொன்று கிடைக்காமையால் சாத்தியமற்றதாக இருந்தது. இ.மி.ச. பொறியியலாளர்கள் விருத்தி செய்த தீர்வும் VPN தொடுப்பும் அணைக்கட்டுத் தளத்தில் PLC முறைமை ஒன்றின் நிறுவலுடன் தாபிக்கப்பட்டது. தரவு மற்றும் கட்டுப்பாட்டுத் தொழிற்பாடுகள் என்பன தற்போது மின்வலு நிலைய கட்டுப்பாட்டு அறையில் இருக்கிறது.

**சமனலவெவ மின்வலு நிலையத்தில் LP எண்ணெய் குளிராக்கி புதுப்பிக்கப்பட்டது**

ஐந்து குறைந்த அழுத்த எண்ணெய் குளிராக்கிகள் உள்நாட்டிலேயே புதுப்பிக்கப்பட்டு, மின்வலு நிலையப் பொறியியலாளர்களின் மேற்பார்வையின் கீழ் மீளவும் நிறுவப்பட்டன.

மின்பிறப்பாக்கி தாழ் வழிகாட்டி உராய்வு தவிர்க்கும் பொறியின் எண்ணெய் குளிராக்கி ஆனது இலங்கையில் தயாரிக்கப்பட்டு மீளவும் நிறுவப்பட்டது.

**சமனலவெவ மின்வலு நிலையம் - உபரி நீர் வெளியேறும் வடிகால் வாயில்களின் மண்ணூதையிடலும் தீந்தை பூசுதலும் மற்றும் அணைக்கட்டுடன் தொடர்புடைய உருக்குக் கட்டமைப்புகளும்**

சமனலவெவ அணைக்கட்டு, நீரால் இயக்கப்படுகின்ற மூன்று உபரி நீர் வெளியேறும் வடிகால் வாயில்கள், நான்கு நிறுத்தக் கட்டைகள், நங்கூர முறைமை, தாங்குசட்டக பளுதூக்கி மற்றும் தொடர்புடைய உருக்குக் கட்டமைப்புகளைக் கொண்டுள்ளது. இந்த உருக்குக் கட்டமைப்புகளுக்கான பாதுகாப்புத் தீந்தையிடல் வெளிப்பூச்சு 1990 களில் மின்வலு நிலைய நிருமாணத்தின்போது செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கட்டமைப்புகளுக்கான உடனடி மண்ணூதையிடல் மற்றும் தீந்தை பூசுதல் என்பன மூன்றாம் தரப்பு தீந்தை பரிசோதகர்

# பிறப்பாக்கல் பிரிவு (தொடர்ச்சி)

ஒருவராலும் இ.மி.ச. ஊழியர்களின் நிபுணத்துவ அணி ஒன்றினாலும் பரிந்துரைக்கப்பட்டன.

மேற்படி பரிந்துரையின்மீது, விலைமனுக் கோரல் ஆரம்பிக்கப்பட்டதுடன் போட்டி விலைமனு கோரல் பின்பற்றப்பட்டதன் பின்னர், ஒப்பந்தமானது வரையறுக்கப்பட்ட டொக்கியாட் ஜெனரல் என்ஜினியரிங் சேர்விசஸ் (தனியார்) நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

தீந்தை பூசுகின்ற மொத்தப் பரப்பு 8,210 சதுர மீற்றர் என்பதுடன் இதற்கான மொத்தச் செலவு 85 மில்லியன் இலங்கை ரூபாய் ஆகும்.

தீந்தை பூசும் வேலை நடைபெற்றுக்கொண்டிருப்பதுடன் 50□ இற்கும் அதிகமான வேலை பூர்த்தி அடைந்துள்ளது.



மண்ணூதையிடலும் தீந்தை பூசுதலும் வேணலகளும்

### சமனலவெவ மின்வலு நிலையம் - அலகு இல. 02 நிலைக்கூறு (Stator) பழுதுபார்ப்பு மற்றும் அவசரமான முழுமைத் திருத்தம்

இந்தப் பழுதுபார்ப்பு 2019 நவெம்பர் 01 இல் செயலிழந்த சுற்றினைத் (winding) திருத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்டது. முழுமையான மின்பிறப்பாக்கிப் பக்க மேற்பார்வை Quartzelec, UK



சமனலவெவ PS இல் நிலைக்கூறு பழுதுபார்ப்பு வேலை

யினால் செய்யப்பட்ட அதே வேளை சுழலிப் பக்க பொறியியல் மற்றும் மேற்பார்வை இ.மி.ச. பொறியியலாளர்களால் பூரணமாகச் செய்யப்பட்டது.

முழுமையான திருத்த வேலைகள் பெரும்பாலும் பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதிகாரம் வழங்கல் நடைபெறுகிறது.

### குக்குளேகங்கை மின்வலு நிலையம் - உபரி நீர் வெளியேறும் வடிகால் வாயில்களில் மண்ணூதையிடலும் தீந்தை பூசுதலும்

இந்த வாயில்களுக்கு அவை நிறுவப்பட்டதன் பின்னர் முதல் தடவையாக தீந்தை பூசப்பட்டது. இதற்கான ஒப்பந்தம் டொக்கியாட் ஜெனரல் என்ஜினியரிங் சேர்விஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதுடன் அதனை மின்வலு நிலைய ஊழியர்கள் மேற்பார்வை செய்திருந்தனர். மண்ணூதையிடலும் நாகம் செறிந்த முதல்நிலைப் பூச்சும் எபோக்சியும் செய்யப்பட்டன.

### குக்குளேகங்கை மின்வலு நிலையம் - மின்வலு ஆலைக் கட்டுப்பாடு மற்றும் SCADA முறைமையின் மேம்படுத்தல்

ஆலைக் கட்டுப்பாடு மற்றும் SCADA முறைமை என்பவற்றின் செயற்பாட்டுக் காலம் காலாவதியாகியிருப்பதுடன் அதன் மூல உபகரண உற்பத்தியாளர்களும் பாகங்களைத் தயாரிக்கும் பணிகளை முடிவுறுத்தியிருந்தனர். இதனால் குக்குளேகங்கை மின்வலு நிலையத்தின் பொறியியலாளர்களும் AMHE உம் கட்டுப்பாட்டு முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருந்தனர். இந்த அணுகுமுறையின் மூலம், ஆகக்குறைந்த ஆலைச் செயலிழப்பு மற்றும் ஆகக் குறைந்த கிரயத்தில் மேம்பாட்டைச் செய்ய முடிந்திருந்தது.

இந்த மேம்பாட்டின் நடைமுறைப்படுத்தலின் மூலம் மதிப்பிடப்பட்ட சேமிப்பு கிட்டத்தட்ட 400 மில்லியன் இலங்கை ரூபாயாக இருக்கும். இந்தச் செயற்றிட்டம் 2020 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதனை 2021 இல் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

### உடவளவை மின்வலு நிலையம் - விசையாழி மின்பிறப்பாக்கி அலகு 01 இன் புனரமைப்பு

சில ஆண்டுகளாக இடது கரையில் செயலற்றிருந்த மின்பிறப்பாக்கி பழுதுபார்ப்புக்காக எடுக்கப்பட்டது. இந்த முழுமையான பழுதுபார்ப்பும் களைதல் செயன்முறையும் உடவளவை மின்வலு நிலையப் பொறியியலாளர்கள் மற்றும் தொழினுட்ப உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்டது. புழைக்கடை வாயில்கள், சேர்வோ மோட்டர் முத்திரையடைப்புகள், தடுப்புத் தூக்கிகள், ஆளிக் கட்டுப்பாட்டுப் பலகம் மற்றும் நீரியல் பம்புகள் என்பன பரிசீலிக்கப்பட்டு, சோதனை செய்யப்பட்டு பழுதுபார்க்கப்பட்டன.

### உடவளவை மின்வலு நிலையம் - தன்னியக்க ஒத்திசைவாக்கியின் நிறுவல்

உடவளவை மின்வலு நிலையம் தன்னியக்க ஒத்திசைவாக்கியைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன் மின்பிறப்பாக்கிகளின் ஒத்திசைவாக்கம் கைமுறையால் செய்யப்பட்டது. 2020 இல், மின்வலு நிலையப் பொறியியலாளர்கள் மற்றும் AMHE பொறியியலாளர்களால் உடவளவை மின்வலு நிலையத்தில் ஒரு தன்னியக்க ஒத்திசைவாக்கி முறைமை நிறுவப்பட்டது.

### உடவளவை மின்வலு நிலையம் - மேம்படுத்தல்கள்

- மின்னேகி (bus) மின்னழுத்த மானி நிறுவப்பட்டு, அதிகாரம் வழங்கப்பட்டது.
- டிஜிடல் பல்தொழிற்பாட்டு மானி மாற்றீடு செய்யப்பட்டு, அதிகாரம் வழங்கப்பட்டது.

# பிறப்பாக்கல் பிரிவு (தொடர்ச்சி)

- AMHE கிளையின் ஒருங்கிணைப்புடன் நெருக்கமான உணரி ஒன்றின் மூலம் விரைவான உணர்திறன் கொண்ட பொறிமுறை தாபிக்கப்பட்டது.
- இடது கரை ஒற்றைத் தண்டவாள பழுதூக்கி பழுதுபார்க்கப்பட்டு, மீளவும் பொருத்தப்பட்டு, மீளவும் நிறுவப்பட்டது.
- மின்மாற்றி 02 (T02) இன் NGR அதிகாரம் அளிக்கப்பட்டதுடன் T01 இன் NGR இற்கான அடித்தளம் தயார் செய்யப்பட்டது.
- களைகள் வளர்ந்ததன் காரணமாக ஆளிமுற்றப் பராமரிப்பு மிகவும் சிரமமாக இருந்தது. அத்துடன் உலோகமானது மண்ணுடன் கலந்திருந்தது. உலோகத்தைத் துப்புரவு செய்யும் இயந்திரம் உள்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டதுடன் துப்புரவாக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன.


உலோகத்தைத் துப்புரவாக்கும் இயந்திரம்

### இங்கினியாகல மின்வலு நிலையம்-அலகு 01 பாரிய முழுமைப் பழுதுபார்ப்பு

அலகு 01 இல் ஏற்பட்ட நிலைக்கூறுச் சுற்று மின்காப்பின் செயலிழப்பு 2015 இல் பழுதுபார்க்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, அலகு 01 மின்பிறப்பாக்கிச் சுமையேற்றல் தடைப்பட்டது. இதற்கு மேலதிகமாக வயது போனதன் காரணமாகவும் அரிப்பு ஏற்பட்டதன் காரணமாகவும் இந்த ஆண்டு விசையாழியில் ஒரு தவறு காணப்பட்டது. இதனால் விசையாழி உதிரிப்பாகம் ஒன்றினால் அந்த விசையாழியை மாற்றீடு செய்வதன் மூலம் அலகு 01 இனைப் பழுதுபார்ப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அலகு 01 இனைப் பழுதுபார்ப்பதற்கான பிரதான தடையாகக் காணப்படுவது MIV ஊடான நீர்க் கசிவு ஆகும். மாற்றீடு செய்து பழுதுபார்ப்பதற்கு முன் சுரங்கத்திலிருந்து சகல நீரும் வெளியேற்றப்பட்டு MIV முத்திரையடைப்புச் செய்யப்பட்டது.


இங்கினியாகல PS முழுமைத்திருத்த வேலை

### இங்கினியாகல மின்வலு நிலையம் - உள்ளெடுப்புக் கோபுரத்தின் நீருக்கடியிலான பரிசீலனை

நீர்ப் பாய்ச்சல் பாங்கினை அவதானித்தபோது, உள்ளெடுப்புக் கோபுரத்தில் பகுதியளவான அடைப்பொன்று இருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டது. எனவே, சுழியோடிகள் அணியொன்றினால் நீருக்கடியில் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டது. அங்கு எவ்வித அடைப்புகளோ அல்லது பாரிய வெடிப்புகளோ காணப்படவில்லை. இது அலகு 01 இன் பாரிய முழுமைப் பழுதுபார்ப்பு வேலைகளைத் தீர்மானிப்பதற்கு உதவியாக அமைந்தது.

### இங்கினியாகல மின்வலு நிலையம் - பளுதூக்கியின் மேந்தலைப் பகுதியில் சுமைச் சோதனை

அலகு 01 இன் முழுமையான பழுதுபார்ப்புக்கான முன்னாயத்தம் ஒன்றாக, IPS இன் மேம்பால பளுதூக்கி பரிசீலனை செய்யப்பட்டு, பழுதுபார்க்கப்பட்டு, முழுமைக் கொள்வனவுக்காக சுமையும் சோதிக்கப்பட்டது.

### சபுகஸ்கந்த மின்வலு நிலையம் - என்ஜின் இல. 04 இன் நெம்புருள் தண்டு மாற்றீடு

என்ஜினின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக என்ஜின் இல. 04 இன் தற்காலிகமாக பழுதுபார்க்கப்பட்ட நெம்புருள் தண்டானது புதிய நெம்புருள் தண்டினால் மாற்றீடு செய்யப்பட்டது. மாற்றீட்டிற்கான செலவு 35 மில்லியன் இலங்கை ரூபாய் ஆகும்.

### சபுகஸ்கந்த மின்வலு நிலையம் - 132 kV மின்னோட்ட மின்மாற்றிகளின் மாற்றீடு

படிநிலை மின்மாற்றிகளின் 132 kV பக்கத்தில் CTs இல் மாற்றீடு மேற்கொள்ளப்பட்டது.

### சபுகஸ்கந்த மின்வலு நிலையம் - என்ஜின் இல. 02 இன் வெளியகற்றி கொதிகலன் குழாய்த் தொகுதியின் மாற்றீடு

தற்போதிருக்கின்ற வெளியேற்ற வாயு கொதிகலன்களின் சுடு நீர்க் குழாய்கள் மற்றும் துடுப்புகள் அரிக்கப்பட்டதன் விளைவாக நீர்க் கசிவுகளும் மோசமான வெப்பப் பரிமாற்றங்களும் காணப்பட்டன. இதன் விளைவாக, எரிபொருள் மாற்றத்திற்காக எடுக்கும் நேரம் அதிகரித்துள்ளது. இதனால் என்ஜின்கள் டீசலில் இயங்குவதற்கு அதிக நேரம் எடுப்பதால் அது அதிகரித்த இயக்கச் செலவுகளுக்கு வழிவகுக்கிறது. இதனை நிவர்த்தி செய்வதற்கு என்ஜின் இல. 02 இன் வெளியேற்ற கொதிகலன் குழாய்த் தொகுதி 25 மில்லியன் இலங்கை ரூபா செலவில் மாற்றீடு செய்யப்பட்டது.

### லக்விஜய மின்வலு ஆலை - அலகு 03 இன் கடல் நீர் உள்ளெடுப்பு கல்வெட்டை சுத்தம் செய்தல்

இது அலகு 03 இன் திட்டமிடப்பட்ட செயலிழப்புக் காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டது. உள்ளெடுப்புக் கல்வெட்டின் மொத்த நீளம் அண்ணளவாக 438 m ஆகும்.

பொதுவாக, இந்த வகையான விசேட பணிகள் மூன்றாம் தரப்பு சுழியோடிகள் அணியினால் முன்னெடுக்கப்படுகின்றன. அதன்போது, கல்வெட்டு, உள்ளெடுப்புத் தலைப் பகுதி, பம்பி இல்லத்தின் கீழ்ப்பகுதி போன்றவற்றின் உட்பகுதிகளைக் கண்காணிக்கவோ அல்லது காட்சியாகக் கண்டு பரிசீலிக்கவோ இ.மி.ச. இற்கு வழி இருக்கவில்லை

எனவே, இ.மி.ச. வெளித்தரப்பு ஒப்பந்தகாரர் ஒருவரால் வழங்கப்படும் தகவல்களையே நம்ப வேண்டியிருந்தது.

# பிறப்பாக்கல் பிரிவு (தொடர்ச்சி)


LVPP சுழியோடிகள் அணி

எவ்வாறாயினும், LVPP சுழியோடிகள் அணியானது பரிசீலனைக்காக இறங்கியதன் மூலம் இந்த ஆபத்து நீங்கியது. அலகு 03 இன் கடல் நீர் உள்ளெடுப்பு கல்வெட்டின் இந்தச் சுத்தப்படுத்தலை நோக்கிச் செய்யப்பட்ட LVPP சுழியோடிகள் அணியின் அர்ப்பணிப்பும் பங்களிப்பும் வெற்றியடைந்திருந்தது.


LVPP இல் கடல் நீர் உள்ளெடுப்பின் சுத்தப்படுத்தல்

### விசேட புனரமைப்பு மற்றும் செயற்றிட்ட வேலைகள்

#### லக்விஜய மின்வலு ஆலை - நிலக்கரி முற்றத்தின் கையாளும் கொள்ளளவை மேம்படுத்தல்

நிலக்கரி மின்வலு ஆலை ஒன்றை இயக்கியதன் மூலம் கடந்த சில ஆண்டுகளாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட அனுபவத்துடன், நிலக்கரி இருப்பின் கிடைப்பனவுத் தன்மையை அதிகரிக்கக் கூடியதாக இருப்பின் ஆலையின் நம்பகத்தன்மையை மேம்படுத்தலாம் என்பது இனங்காணப்பட்டது. மோசமான காலநிலை, நிலக்கரியைப் பெறுவதில் ஏற்படும் தாமதம் மற்றும் நிலக்கரியைக் கையாளும் முறைமைகளில் உள்ள பிரச்சினைகள் என்பவற்றினால் ஏற்படும் பாதகமான விளைவுகளைத் தவிர்க்கும் பொருட்டு, தற்போது இருக்கின்ற நிலக்கரி முற்றத்தை 1.21 MMT இற்கு உயர்த்துவதன் மூலம் நிலக்கரி களஞ்சியப்படுத்தல் மற்றும் கையாளும் கொள்ளளவு ஆகியவற்றை உயர்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டதுடன், ஒப்பந்தமானது சீன எந்திரப் பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு 2019 அக்டோபரில் வழங்கப்பட்டது. செயற்றிட்டம் 10/9/2020


LVPP இல் நிலக்கரி முற்ற விரிவாக்க வேலைகள்

இல் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டதுடன் தற்போது அது முழு வீச்சில் நடைபெறுகிறது. ஆண்டின் இறுதியில் உள்ளவாறு, செயற்றிட்டத்தின் பௌதிக ரீதியான முன்னேற்றம் அண்ணளவாக 8 ஆக இருக்கிறது. செயற்றிட்டத்தை 2022 செம்ரெம்பர் மாதத்தினுள் நிறைவு செய்ய அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.


LVPP இல் நிலக்கரி முற்ற விரிவாக்க வேலைகள்

#### களனிதிஸ்ஸ மின்வலு நிலையம் - Frame V வாயு விசையாழிகளின் புனரமைப்பு

களனிதிஸ்ஸ மின்வலு நிலையத்திலுள்ள Frame-V வாயு விசையாழிகள் அவற்றின் குறிப்பான இயற்பண்புகள் காரணமாக பாரிய வகிபாகம் ஒன்றினை ஆற்றுகின்றன. இந்த வாயு விசையாழிகளை ஓய்வுறுத்தும் காலத்தை ஆகக் குறைந்தது ஆறு ஆண்டுகள் நீடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. GT-01, GT-02, GT-04 மற்றும் GT-05 எனப் பெயர்களைக் கொண்ட நான்கு Frame-V GTs களின் ஓய்வுறுத்தும் காலத்தை நீட்டிக்கும் பொருட்டு, போதுமானளவு உதிரிப் பாகங்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அலகுகளில் பாரிய பராமரிப்பு/புனரமைப்பை முன்னெடுப்பது அவசியமானதாகும்.

செயற்றிட்ட வேலைகள் பிறப்பாக்கச் செயற்றிட்டங்கள் கிளையின் கீழ் தாபிக்கப்பட்ட செயற்றிட்ட முகாமை அலகினால் பொறுப்பேற்கப்பட்டன. இச்செயற்றிட்டமானது பிரதானமாக மின்னியல், கருவிமயப்படுத்தலும் கட்டுப்பாடும், சமாந்தரமாகத் தொழிற்படுகின்ற இயந்திரவியல் உப அலகுகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

# பிறப்பாக்கல் பிரிவு (தொடர்ச்சி)

புனரமைப்பின் பின்னர், GT-01, GT-02 மற்றும் GT-04 என்பன தற்போது கொழும்பு நகரப் பிரதேசத்தில் முறைமை மின்னழுத்தத்தை ஒழுங்குபடுத்துவதற்காக அடிப்படைச் சுமை நிலையிலும் ஒத்திசைவான - மின்தேக்கி நிலையிலும் இயக்கப்படுகின்றன. GT-05 இன் மீதமுள்ள புனரமைப்பு வேலைகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதுடன் தற்போது வரை செயற்றிட்டத்தின் 60 ஆனவை நிறைவடைந்துள்ளன.

செயற்றிட்டத்தை 2021 நவெம்பர் இறுதிக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

அட்டவணை 04 : பிறப்பாக்கல் கிரயம்

| தொகுதி | ஆலை | திரண்ட உண்மையான பிறப்பாக்கம் (GWh) | திரண்ட உண்மையான செலவினம் (ரூபா மில்.) | சராசரி அலகுக் கிரயம் (ரூபா/KWh) |
|---|---|---|---|---|
| அனல் | KPS - வாயு விசையாழிகள் | 133.87 | 8,773.39 | 65.54 |
| | KPS - இணைந்த சுற்று | - | - | - |
| | சபுகஸ்கந்த | 775.31 | 18,786.09 | 24.23 |
| | தீவு - சிறிய மின்பிறப்பாக்கிகள் | 2.61 | 180.16 | 69.00 |
| | உத்துறு ஜனனி | 111.49 | 2,857.03 | 25.63 |
| | மிதக்கும் மின்வலு நிலையம் | 413.54 | 8,856.68 | 21.42 |
| | அவசரகால மின்வலு - 1MW x 50 | 78.24 | 2,621.55 | 33.68 |
| | **ஒட்டுமொத்த அனல் - எரிபொருள்** | **1,515.06** | **45,356.65** | **29.94** |
| **நிலக்கரி** | **நிலக்கரி** | **6,364.95** | **62,455.46** | **9.81** |
| **மொத்த அனல்** | **ஒட்டுமொத்த அனல்** | 7,880.01 | 107,812.10 | 13.68 |
| மகாவலி | விக்டோரியா | 507.13 | 963.10 | 1.90 |
| | கொத்மலை | 399.94 | 1,003.40 | 2.51 |
| | உக்குவளை | 180.12 | 277.38 | 1.54 |
| | போவத்தென்ன | 55.24 | 187.98 | 3.40 |
| | ரந்தெனிகல/ரண்தம்பே | 395.72 | 1,126.84 | 2.85 |
| | நில்லம்பே | 8.24 | 101.49 | 12.31 |
| | மேல் கொத்மலை | 352.19 | 1,342.77 | 3.81 |
| | **ஒட்டுமொத்த மகாவலி** | **1,898.58** | **5,002.96** | **2.64** |
| லக்ஷபான | பழைய மற்றும் புதிய லக்ஷபான | 781.48 | 889.92 | 1.14 |
| | சமனல | 418.61 | 629.96 | 1.50 |
| | விமலசுரேந்திர | 102.24 | 417.53 | 4.08 |
| | கன்யோன் | 145.12 | 354.50 | 2.44 |
| | **ஒட்டுமொத்த லக்ஷபான** | **1,447.45** | **2,291.90** | **1.58** |
| சமனல | சமனலவெவ | 245.78 | 1,096.50 | 4.46 |
| | குக்குளே | 298.52 | 481.57 | 1.61 |
| | இங்கினியாகல | 30.43 | 110.24 | 3.62 |
| | உடவளவை | 8.66 | 137.91 | 15.92 |
| | **ஒட்டுமொத்த சமனல** | **583.39** | **1,826.21** | **3.13** |
| **மொத்த நீர்மின்** | **ஒட்டுமொத்த நீர்மின்** | **3,929.42** | **9,121.07** | **2.32** |
| **மொத்த இ.மி.ச.** | **ஒட்டுமொத்த இ.மி.ச.* (பிறப்பாக்கல் நோக்கில்)** | **11,809.07** | **116,933.18** | **9.90** |

* - மன்னார் காற்றாலை மின்வலு ஆலையின் பிறப்பாக்கம் தவிர்ந்த



போலவத்த மின்தொகுப்பு உபமின் நிலையம்

செயற்பாட்டு மீளாய்வு

# மின் பரிமாற்றப் பிரிவு

# மின் பரிமாற்றப் பிரிவு

இ.மி.ச. ஆனது நாட்டிற்குச் சிக்கனமான மின்பரிமாற்ற முறைமை ஒன்றை விருத்தி செய்து, செயற்படுத்தி, பேணுவதற்கான சட்டநியதி பொறுப்பினைக் கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, நாட்டிற்கென எதிர்வுகூறப்படும் மின்சாரத்திற்கான கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கு போதுமானளவு மின் பிறப்பாக்கத்தைக் கொண்டிருப்பது இ.மி.ச. இன் சட்டநியதியான கடமை ஆகும். இத்தகைய சட்டநியதிக் கடமைகள் அதேபோன்று ஏனைய பொறுப்புக்களைக் கூட்டிணைத்து, இலங்கை மின்சாரச் சட்டத்திற்கு இணங்கியவாறு இ.மி.ச. இற்கான மின் பரிமாற்ற உரிமமொன்றை இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL) விநியோகித்துள்ளது.

இப்பிரிவின் செயற்பாட்டு நோக்கங்கள் கீழ்வருமாறு:

- வினைத்திறனான, ஒருங்கிணைக்கப்பட்ட, நம்பகமான மற்றும் சிக்கனமான மின் பரிமாற்ற முறைமையொன்றை விருத்தி செய்வதும் பேணுவதும்.
- நுகர்வோருக்கு பாதுகாப்பான, நம்பகத்தன்மை வாய்ந்த மற்றும் சிக்கனமான மின்சார வழங்கலை உறுதிப்படுத்துவதற்காக விநியோக உரிமதாரர்களுக்கு தொகையளவில் மின்சாரத்தைப் பெறுதலும் விற்பனை செய்தலும்.
- மின்சாரத்திற்கான நியாயமானளவு எதிர்வுகூறல் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கு மின்பிறப்பாக்கல் ஆலைகளிலிருந்து போதுமானளவு கொள்ளளவு இருக்கிறது என்பதை உறுதிப்படுத்தல்.
- 132 kV மற்றும் 220 kV இற்கான முறைமை மின்பரிமாற்ற மின்னழுத்து மாறுபாடுகளை ±10□ இனுள்ளும் 50 Hz மீடிறனை ±1□ இனுள்ளும் பேணுதல்.

மின் பரிமாற்றப் பிரிவானது இ.மி.ச. இன் ஏனைய பிரிவுகளுக்கான சேவைகளை வழங்குகின்ற அதே வேளை இ.மி.ச. சார்பாக இந்த நோக்கங்களுடன்கூடிய மேற்படி கடமைகளை ஆற்றுவதற்கு பொறுப்புடையதாக இருக்கிறது.

மின் பரிமாற்றப் பிரிவின் கீழ் பதின்மூன்று கிளைகள் தாபிக்கப்பட்டுள்ளன.

உரிய நேரத்தில் IPP ஆலைகளை நடைமுறைப்படுத்துகின்ற தேவையைக் கவனத்தில் கொண்டு, தனியார் மின்வலு அபிவிருத்திக் கிளை என்ற ஒரு புதிய கிளை 2020 இல் தாபிக்கப்பட்டது.

விபரமான ஆய்வுகளை முன்னெடுத்ததன் பின்னர், மின் பரிமாற்றப் பிரிவானது நீண்ட கால மின் பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டத்தினை (LTGEP) வெளியிட்டது. LTGEP ஆனது 20 ஆண்டுகள் காலப்பகுதி ஒன்றிற்கு நாட்டின் மின்வலு முறைமைக்கு தேவையான எதிர்கால மின் பிறப்பாக்கல் சேர்ப்பனவுகள் பற்றி விபரிக்கிறது. மேலும், LTGEP இன் அடிப்படையிலான நீண்ட கால மின் பிறப்பாக்கல் அபிவிருத்தித் திட்டமானது (LTTDP) அடுத்த 10 ஆண்டுகளுக்கு தேவையான மின் பரிமாற்ற மார்க்கங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்புச் சேர்ப்பனவுகள் பற்றிக் குறித்துரைக்கின்றது. LTTDP ஆனது ஒரு சுழற்சித் திட்டம் ஒன்றாகவும் வெளியிடப்பட்டுள்ளது.

மின் பரிமாற்றப் பிரிவானது அதன் முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தின் ஊடாக 220 kV மற்றும் 132 kV மின் பரிமாற்ற வலையமைபைப் பயன்படுத்தி சகல மின் பிறப்பாக்கல் நிலையங்களாலும் தேசிய மின்தொகுப்பிறகு வழங்கப்பட்ட மின்சாரத்தை அனுப்புகிறது. இப்பிரிவு மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகள் (PPA) தொடர்பான ஒப்பந்தங்களில் ஈடுபடுவதன் மூலம் தனியார் துறையுடன் சேர்ந்து IPP மின்வலு ஆலைகளைச் செயற்படுத்துதல், அபிவிருத்தி மற்றும் மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி (NCRE) அல்லது ஏனைய மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி (ORE) ஆலைகளைச் செயற்படுத்துதல் ஆகியவற்றிற்குப் பொறுப்பாக உள்ளது. இதற்கு மேலதிகமாக, பிரிவானது மின் பிறப்பாக்கல் உரிமதாரர்களிடமிருந்து (GLs) மின்சாரத்தைக் "கொள்வனவு" செய்வதிலும் LECO உள்ளிட்ட ஐந்து விநியோக உரிமதாரர்களுக்கு (DLs) விற்பனை செய்வதிலும் ஈடுபடுகிறது. அத்துடன் இது அங்கீகரிக்கப்பட்ட விதிப்பனவு முறையியல் 2015 இற்கிணங்க ஒவ்வொரு 6 மாதங்களுக்கு ஒரு முறை PUCSL இற்கு தொகையளவு வழங்கல் விதிப்பனவினை (BST) சமர்ப்பிக்கின்றது.

மின் பரிமாற்ற வலையமைப்பின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு என்பன இந்தப் பிரிவின் முதன்மையான பொறுப்பாகும். சொத்து முகாமையும் பராமரிப்பு முகாமையும் கணினிமயப்படுத்தப்பட்ட பராமரிப்பு முகாமை முறைமையின் (CMMS) அடிப்படையில் முன்னெடுக்கப்படுகிறது. செயற்பாடு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் பரவலாக்கப்பட்டுள்ளன.

மேலும், தேவையான பாதுகாப்புத் தத்துவங்களை அடையாளம் காண்பது மற்றும் தற்போதுள்ள மின்வலு வலையமைப்பின் பாதுகாப்பிற்காகவும் மின்வலு வலையமைப்பின் எதிர்கால அபிவிருத்தி அல்லது புனரமைப்பிற்காக அவற்றைப் பயன்படுத்துவதும் மேற்கொள்ளப்படுகிறது. மின் பரிமாற்றப் பிரிவானது இ.மி.ச. இனுள் தேவைப்படும் குரல் மற்றும் தரவுத் தொடர்பாடலையும் வழங்குகிறது. இது குரல் மற்றும் தரவுப் பராமரிப்பு மற்றும் செயற்பாடு, குரல் மற்றும் தரவுச் சமிக்ஞைகள் மற்றும் நிருவாகத்தின் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

இதற்கு மேலதிகமாக, கையளிப்புச் செய்யப்பட்ட HR மற்றும் நிதித் தொழிற்பாடுகளும்கூட இப்பிரிவினால் கையாளப்படுகிறது.

## மின் பரிமாற்றப் பிரிவின் செயலாற்றுகை

ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மின் பரிமாற்ற முறைமையின் விபரங்கள் கீழ்வருமாறு:

அட்டவணை T 1: 2020 டிசெம்பர் 31 இல் மின் பரிமாற்ற முறைமை

| மின்னழுத்த மட்டம் | உருப்படி | அலகு | கணியம் |
|---|---|---|---|
| 220kV | மேந்தலை மார்க்கங்கள் | கி.மீ. | 777 |
| | நிலத்தடி கம்பிவடங்கள் | கி.மீ. | 22 |
| 132kV | மேந்தலை மார்க்கங்கள் | கி.மீ. | 2,306 |
| | நிலத்தடி கம்பிவடங்கள் | கி.மீ. | 55 |
| 220/132/33kV | மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் | எ/கை | 4 |
| | மின்மாற்றிகள் | எ/கை | 8 |
| | | MVA | 1,600/380 |
| 220/132kV | மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் | எ/கை | 6 |
| | மின்மாற்றிகள் | எ/கை | 12 |
| | | MVA | 2,510 |
| 132/33 kV | மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் | எ/கை | 58 |
| | மின்மாற்றிகள் | எ/கை | 146 |
| | | MVA | 4,631.5 |
| 132/11 kV | மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் | எ/கை | 8 |
| | மின்மாற்றிகள் | எ/கை | 22 |
| | | MVA | 792 |
| 220/33 kV | மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் | எ/கை | 3 |
| | மின்மாற்றிகள் | எ/கை | 4 |
| | | MVA | 246 |

# மின் பரிமாற்றப் பிரிவு (தொடர்ச்சி)

### மின்வலு முறைமையின் செயலாற்றுகை

2020 ஆம் ஆண்டிற்கான நிகர மின்சாரப் பிறப்பாக்கம் 15,714 GWh ஆக இருந்தது. 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக நிகர மின்சாரப் பிறப்பாக்கம் 1.3% இனால் வீழ்ச்சி அடைந்துள்ளது.

2020 இல் இ.மி.ச. இற்குச் சொந்தமான நீர் மின்வலு ஆலைகளில் இருந்தான நிகர மின் பிறப்பாக்கம் 3,911 GWh ஆக இருந்ததுடன் இது 2019 ஆம் ஆண்டைக் காட்டிலும் 3.4% அதிகரிப்பாகப் பதிவாகியிருந்தது. 2020 ஆம் ஆண்டின் நிகரப் பிறப்பாக்கம் 24.9% பங்களிப்பாகும்.

மன்னார் காற்று மின்வலு ஆலை (MWPP) சோதனை நோக்கங்களுக்காக 2020-11-07 இல் செயற்பாட்டை ஆரம்பித்தது. MWPP இலிருந்து பெறப்பட்ட மொத்த மின் பிறப்பாக்கம் 8 GWh ஆக இருந்ததுடன் அது மொத்த மின்வலுப் பிறப்பாக்கத்தில் 0.05% பங்கினைப் பதிவு செய்திருந்தது. மேற்கூரை சூரிய மின்கல மின் பிறப்பாக்கம் தவிர்ந்த NCRE ஆலைகளிலிருந்து கிடைக்கப்பெற்ற மின் பிறப்பாக்கமானது மொத்தப் பிறப்பாக்கத்தில் 0.5% பங்கினைக் கொண்டிருந்தது.

2020 ஆம் ஆண்டிற்கான மேற்கூரை சூரிய ஒளி மின் பிறப்பாக்கம் தவிர்ந்த IPPs (சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்கள்) இடமிருந்தான மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி (NCRE) இன் பங்களிப்பு 1,589 GWh ஆக இருந்ததுடன் இது நிகர மின் பிறப்பாக்கத்தில் 10.1% ஆகக் காணப்பட்டது. இப்பிறப்பாக்கம் 2019 ஆம் ஆண்டிற்கான பிறப்பாக்கத்தைக் காட்டிலும் 10 GWh அதிகரிப்பைக் காட்டுகிறது.

**உரு T1: 2020 ஆம் ஆண்டின் நிகர சக்திப் பிறப்பாக்கக் கலவை**




(*) – உயிர்த்திணிவு, தாவரமூலம், மாநகர திடக்கழிவுகள்

2020 ஆம் ஆண்டில் இ.மி.ச. இன் LV மற்றும் MV வலையமைப்புக்கு ஏற்றப்பட்ட மேற்கூரை சூரிய மின்கல மின் பிறப்பாக்கம் 269 GWh ஆக இருந்ததுடன் அது நிகரப் பிறப்பாக்கத்தில் 1.7% இனைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 87 GWh அதிகரிப்பைக் காட்டி நிற்கிறது.

2020 ஆம் ஆண்டிற்கான மொத்த அனல் மின் பிறப்பாக்கம் 9,936 GWh ஆகக் காணப்பட்டது. லக்விஜய நிலக்கரி எரிப்பு மின்வலு ஆலையின் பங்களிப்பு 58% (5,754 GWh) ஆக இருந்ததுடன், இது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 393 GWh அதிகரித்த தொகையாகும். 2020 ஆம் ஆண்டின் மொத்த அனல் மின் பிறப்பாக்கம் 4% வீழ்ச்சியைப் பதிவு செய்திருந்ததுடன், இது 2019 ஆம் ஆண்டின் மொத்த அனல் மின் பிறப்பாக்கத்தை விட 441 GWh குறைவானதாகும். 2020 ஆம் ஆண்டின் IPP அனல் மின் பிறப்பாக்கம் 2,717 GWh ஆக இருந்ததுடன் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 158 GWh (5.5%) வீழ்ச்சியாகப் இது பதிவாகியிருந்தது.

2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற சராசரி மாதாந்த நிகர மின் பிறப்பாக்கத்தின் ஒப்பீடு உரு T2 இல் தரப்பட்டுள்ளது. ஆண்டின் முதல் இரண்டு மாத காலப்பகுதியில் மின் பிறப்பாக்கத்தில் வளர்ச்சி நிலை அவதானிக்கப்பட்ட போதிலும், கோவிட் 19 நோய்ப் பரவலுக்கு எதிராக எடுக்கப்பட்ட முழுமையான மற்றும் பகுதியளவிலான முடக்க நிலை காரணமாக மின்சாரத்திற்கான கேள்வி குறைவடைந்ததன் பிரதிபலிப்பாக பிறப்பாக்கமும் குறைவடைந்திருந்தது.

2019 ஆம் ஆண்டிற்கு எதிராக 2020 ஆம் ஆண்டின் மாதாந்த சக்திப் பிறப்பாக்கத்தின் சராசரி வளர்ச்சி / வீழ்ச்சியின் ஓர் ஒப்பீடு கீழே உரு T3 இல் தரப்பட்டுள்ளது. இது கோவிட் 19 நோய்ப் பரவலின் தாக்கத்தைத் தெளிவாகக் காட்டுகிறது.

**உரு T2: 2018/2019/2020 ஆண்டுகளின் சராசரி மாதாந்த நிகரப் பிறப்பாக்க விபரங்கள்**




**உரு T3: 2020 மற்றும் 2019 ஆம் ஆண்டின் சராசரி மாதாந்த சக்திப் பிறப்பாக்க வளர்ச்சி / வீழ்ச்சியின் ஒப்பீடு**




மீளாய்வு ஆண்டிற்கான நாள் ஒன்றின் வருடாந்த சராசரி சக்தி நுகர்வு 42.9 GWh ஆக இருந்தது. இது 2019 ஆம் ஆண்டை விட 1.6% வீழ்ச்சியைக் காட்டுகிறது. 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டின் சராசரி நாளாந்த மின்சார நுகர்வின் ஒப்பீடு கீழே உரு T4 இல் தரப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 2020-08-17 ஆந் திகதி 12:30 மணிக்கு மின்சாரம் தடைப்பட்டதுடன் வேறு 5 பாரிய செயலிழப்புகளும் 11 பகுதியளவான செயலிழப்புகளும் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்றிருந்தன.

# மின் பரிமாற்றப் பிரிவு (தொடர்ச்சி)

**உரு T4 : மாதாந்த அடிப்படையிலான சராசரி நாளாந்த சக்தி நுகர்வு [GWh]**




முறைமைத் தொந்தரவுகள் அல்லது பிறப்பாக்கல் குறைபாடு காரணமாக 2020 ஆம் ஆண்டில் மொத்தமாக முறைமை வழங்காத சக்தி 18.7 GWh ஆக இருந்தது.

2020 ஆம் ஆண்டின் உயர்ந்தபட்ச இரவு நேர உச்சக் கேள்வி 2020-03-11 ஆந் திகதி 19:15 மணிக்கப் பதிவாகியிருந்ததுடன் மின்சாரத்திற்கான கேள்வி 2,717 MW இனை அடைந்திருந்தது. அதே நாளின் பகல் நேர உச்சக் கேள்வி 2,377 MW ஆக 16:00 மணிக்குக் காணப்பட்டது. 2020-03-11 இலான சுமை விபரங்கள் உரு T5 இல் தரப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த மூன்று ஆண்டுகள் காலப்பகுதியில் உயர்ந்தபட்ச இரவு நேர உச்சக் கேள்விகள் காணப்பட்ட நாட்களின் சுமை வளையிகள் உரு T 6 இல் தரப்பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டின் உயர்ந்தபட்ச பகல் நேர உச்சக் கேள்வி 2020-03-12 ஆந் திகதி 16:00 மணிக்குப் பதிவாகியிருந்ததுடன் அதற்குரிய மின்சாரத்திற்கான கேள்வி 2,394 MW இனை அடைந்திருந்தது.

2020 ஆம் ஆண்டின் மிகக்குறைந்த கேள்வி 2020-09-07 ஆந் திகதி 03:15 மணிக்குப் பதிவாகியிருந்ததுடன் பதிவு செய்யப்பட்ட கேள்வியாக 892 MW காணப்பட்டது.

**உரு T5 : ஆண்டின் உயர்ந்தபட்ச உச்சக் கேள்வி காணப்பட்ட நாள் தொடர்பான அரை மணித்தியால ரீதியான மின் பிறப்பாக்கச் சுமை விபரங்கள்**



ஆகக்கூடிய நாளாந்தப் பிறப்பாக்கமான 49.4 GWh ஆனது 2020-03-12 ஆம் திகதியும் ஆகக்குறைந்த நாளாந்தப் பிறப்பாக்கமான 27.8 GWh ஆனது 2020-08-17 ஆம் திகதியும் பதிவு செய்யப்பட்டிருந்தன.

**உரு T6 : வருடாந்த உயர்ந்தபட்ச இரவு நேர உச்சப் பாவனை நாளின் சுமை வளையிகள் (2018 -2020)**



அதாவது மொத்தமாக செயலிழந்த தினம். எவ்வாறாயினும், இரண்டாவது ஆகக்குறைந்த நாளாந்தப் பிறப்பாக்கமான 28.4 GWh ஆனது 2020-04-14 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டிருந்தது. அதாவது, தமிழ், சிங்களப் புதுவருட தினத்தன்று ஆகும்.

## நீர்த்தேக்கச் செயலாற்றுகை

2020 ஆம் ஆண்டு 1,071 GWh என்ற மொத்த நீர்மின் சேமிப்புடன் ஆரம்பித்தது. இது முறைமையின் முழுமையான சேமிப்பான 1,194 GWh இன் 89.7□ ஆகும்.

2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற மொத்த உட்பாய்வு 3,732 GWh ஆக இருந்தது. இது சராசரியையும்விட குறைவானதாகக் கருதப்படுகின்றது. மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில், மிகவும் வறண்ட காலநிலை மற்றும், இரண்டாவது உள்ளக பருவமழை மற்றும் வட கிழக்கு பருவமழை ஆகியன காரணமாக நிலவிய சராசரிக்கும் குறைவான மழைவீழ்ச்சி காரணமாக மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் கடந்த 20 ஆண்டுகளில் இரண்டாவது ஆகக்குறைந்த உட்பாய்வு பதிவு செய்யப்பட்டது. 2020 அக்டோபர் மாதம் தொடக்கம் டிசெம்பர் மாத இறுதி வரை ஒப்பீட்டு ரீதியில் குறைந்தளவு உட்பாய்வுகள் அனுபவிக்கப்பட்டன. ஆகக்கூடிய

**உரு T7 : 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மொத்த நீர்த்தேக்கச் சேமிப்பின் மாறுபாடு**



# மின் பரிமாற்றுப் பிரிவு (தொடர்ச்சி)

சராசரி நாளாந்த உட்பாய்வான 19.9 GWh ஆனது 2020 செப்ரெம்பர் மாத காலப்பகுதியில் கிடைக்கப்பெற்றது.

ஆகக்குறைந்த சேமிப்பு 2020-05-05 ஆந் திகதி பதிவாகியிருந்தது. அந்தச் சேமிப்பின் அளவு 550 GWh ஆகும். ஆண்டின் இறுதியில் காணப்பட்ட சேமிப்பாக 888 GWh காணப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டைக் காட்டிலும் இது 17.6□ குறைவானதாகும்.

## NCRE செயற்றிட்டங்களின் செயலாற்றுகை

**அட்டவணை T 2 : அதிகாரம் அளிக்கப்பட்ட NCRE செயற்றிட்டங்கள்**

| வகை | 2020 இல் அதிகாரம் அளிக்கப்பட்டவை | | 2020 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான திரண்ட அதிகாரம் அளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | |
|---|---|---|---|---|
| | ஆலைகளின் எண்ணிக்கை | கொள்ளளவு (MW) | ஆலைகளின் எண்ணிக்கை | கொள்ளளவு (MW) |
| சிறியளவு நீர்மின் | 2 | - | 208 | 410 |
| உயிர்த்திணிவு | - | - | 13 | 40 |
| காற்றாலை | 2 | 20 | 17 | 148 |
| சூரிய மின்கலம் | 18 | 18 | 32 | 75 |
| மாநகர திண்மக் கழிவு | 1 | 10 | 1 | 10 |
| **மொத்தம்** | **23** | **48** | **271** | **683** |

### நியம விதிப்பனவின் கீழுள்ள PPA கைச்சாத்திடப்பட்ட அதிகாரம் அளிக்கப்படாத செயற்றிட்டங்கள்

PPAs கைச்சாத்திடப்பட்ட சில செயற்றிட்டங்கள், காணி, சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் காரணமாக இன்னும் அதிகாரம் அளிக்கப்படவில்லை. அவை தொடர்பான பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது:

**அட்டவணை T 3 : நியம விதிப்பனவின் கீழுள்ள அதிகாரம் அளிக்கப்படாத NCRE செயற்றிட்டங்கள்**

| | ஆலைகளின் எண்ணிக்கை | கொள்ளளவு (MW) |
|---|---|---|
| சிறியளவு நீர்மின் | 48 | 79 |
| உயிர்த்திணிவு | 11 | 58 |
| காற்றாலை | 1 | 11 |
| மாநகர திடக் கழிவு | 2 | 10.13 |
| **மொத்தம்** | **64** | **158.13** |

### விலைமனுக் கோரல் செயன்முறையின் கீழுள்ள செயற்றிட்டங்களின் பொழிப்பு

2013 ஆம் ஆண்டின் மின்சாரச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களுடன், NCRE அபிவிருத்தியும்கூட போட்டி விலைமனுக் கோரல் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. 2015 ஆம் ஆண்டில் இரண்டு 10 MW காற்று மின்வலு ஆலைகளுக்கான முதலாவது விலைமனு கோரப்பட்டிருந்தது. அதன் பின்னர் பல விலைமனுக்கள் கோரப்பட்டன. அதன் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

**அட்டவணை T 4 : விலமனு கோரல் செயன்முறையின் கீழுள்ள NCRE செயற்றிட்டங்களின் விபரங்கள்**

| விலைமனு | ஆலைகளின் எண்ணிக்கை | மொத்தக் கொள்ளளவு (MW) | குறிப்புகள் |
|---|---|---|---|
| சுன்னாகம் காற்றாலை | 2 | 20 | அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளன |
| 60x 1 MW சூரிய மின்கலம் | 60 | 60 | 35 செயற்றிட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன, PPA கைச்சாத்திடப்பட்ட 20 செயற்றிட்டங்கள் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளன |
| 90x 1 MW சூரிய மின்கலம் | 90 | 90 | 70 செயற்றிட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன 29 செயற்றிட்டங்கள் PPA கைச்சாத்திடப்பட்டுள்ளன 04 செயற்றிட்டங்கள் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளன |
| 2x 10 MW சூரிய மின்கலம் | 2 | 20 | விலைமனு வழங்கப்பட்டுள்ளது PPA கைச்சாத்திடுதல் நிலுவையில் உள்ளது |
| பண்ணையுடனான சூரிய PV | 1 | 10 | விலைமனு வழங்கப்பட்டுள்ளது LOI நிலுவையில் உள்ளது |
| (1~10)MW காற்றாலைகள் | தீர்மானிக்கப்பட வேண்டும் | 60 | விலைமனு மூடப்பட்டுள்ளது வழங்குதல் நிலுவையில் உள்ளது |
| (1~10)MW சூரியகல ஆலைகள் | தீர்மானிக்கப்பட வேண்டும் | 150 | விலைமனு மூடப்பட்டுள்ளது வழங்குதல் நிலுவையில் உள்ளது |
| **மொத்தம்** | | **410** | |

**அட்டவணை T 5 : PPA, LOI கட்டங்களின் கீழுள்ள செயற்றிட்டங்களின் விபரங்கள்**

| | SPPA கைச்சாத்திடப்பட்டவை | | LOI வழங்கப்பட்டவை | |
|---|---|---|---|---|
| | ஆலைகளின் எண்ணிக்கை | கொள்ளளவு (MW) | ஆலைகளின் எண்ணிக்கை | கொள்ளளவு (MW) |
| சூரிய மின்கலம் | 40 | 40 | 43 | 61 |

## NCRE அபிவிருத்தி மற்றும் கடந்தகால செயலாற்றுகை

**உரு T 8 : அதிகாரம் அளிக்கப்பட்ட NCRE செயற்றிட்டங்களின் திரண்ட மொத்தம் (மேற்கூரை சூரியகாலம் தவிர்ந்த)**



# மின் பரிமாற்றப் பிரிவு (தொடர்ச்சி)

**உரு T 9 : NCRE செயற்றிட்டங்கள் ஊடான சக்திப் பிறப்பாக்கம் (மேற்கூரை சூரிய மின்கலம் தவிர்ந்த)**




**உரு T 10 : தேசிய சக்திப் பிறப்பாக்கத்திற்கான NCRE பங்களிப்பு (மேற்கூரை சூரியகலம் தவிர்ந்த)**




**உரு T 11 : 2020 ஆம் ஆண்டில் NCRE இன் தொழினுட்ப ரீதியான பங்களிப்பு (மேற்கூரை சூரியகலம் தவிர்ந்த)**




**உரு T 12 : 2020 ஆம் ஆண்டிற்கான ஹேஹசுநு இன் சராசரிக் கிரயம் (மேற்கூரை சூரியகலம் தவிர்ந்த)**




## எதிர்கால NCRE அபிவிருத்திகள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்திகளுக்கு மேலதிகமாக கீழ்வரும் செயற்றிட்டங்கள் அபிவிருத்தி வரிசையில் காணப்படுகின்றன:

- பூநகரி 233 MW காற்றாலைப் பூங்கா
- சியம்பலாந்துவ 100 MW சூரியகலப் பூங்கா
- மன்னார் தீவு கட்டம் II - 100 MW காற்றாலைச் செயற்றிட்டம்
- 90 MW சிறியளவு நீர்மின் அபிவிருத்திகள்
- 190 MW சூரிய மின்கலம் மற்றும் காற்றாலை விலைமனு (150 MW சூரிய மின்கலம் மற்றும் 40 MW காற்றாலை)

## சிறப்பம்சங்கள்

2020 இல், பிரிவும் அதன் வேலைப்படையும் கோவிட் 19 நோய்ப் பரவலால் பாரிய பிரச்சினையை எதிர்கொண்டிருந்தது. சவால்கள் மிகவும் தீவிரமாக இருந்தது, விசேடமாக நடைமுறைக்கு மிகவும் கடினமாகக் காணப்பட்ட கண்டிப்பான சுகாதார வழிகாட்டல்களுடன் பராமரிப்பு மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளில் சவால்கள் மிகவும் தீவிரமாகக் காணப்பட்டன.

## எதிர்காலத்திற்கான புதிய ஆலைகள்

2020 - 2039 இற்கான திட்டமிடல் நிரலுக்குரிய வரைவு LTGEP ஆனது 2019 மே 24 ஆந் திகதி PUCSL இடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் PUCSL இன் கோரிக்கைக்கு அமையச் செய்யப்பட்ட திருத்தங்களுடனான வரைவு 2020 மார்ச் 12 இல் சமர்ப்பிக்கப்பட்டது. இது நீர்மின், அனல்மின் மற்றும் ஏனைய மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களைக் (காற்றாலை, சூரிய மின்கலம், சிறியளவு நீர்மின் மற்றும் உயிர்த்திணிவு) கொண்ட கலவை ஒன்றுடன் அடுத்த 20 ஆண்டுகள் காலப்பகுதியில் 10,782 MW பிறப்பாக்கல் கொள்ளளவை முறைமைக்குச் சேர்க்கிறது.

மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியின் பங்கினை உயர்த்துவதானது தேசிய சக்திக் கொள்கை மற்றும் இலங்கையின் மூலோபாயங்களின் (2019 ஆகஸ்ட்) ஒரு தூணாக இருக்கிறது. மேலும், செழுமையான மற்றும் ஒளிமயமான நோக்கு" என்பது 2030 ஆம் ஆண்டிற்குள் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியில் இருந்து உயர்ந்தபட்சப் பிறப்பாக்கத்திற்கான திட்டங்களைத் தயாரிப்பதற்குக் குறித்துரைக்கப்பட்ட ஒரு கொள்கை வேலைச்சட்டகம் ஆகும். அதற்கிணங்க, கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது, இ.மி.ச.

# மின் பரிமாற்றப் பிரிவு (தொடர்ச்சி)

ஆனது அடுத்த இருபது ஆண்டுகளில் குறிப்பிடத்தக்களவான மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி (RE) கொள்ளளவை சேர்ப்பதற்கு திட்டமிட்டிருக்கிறது. RE வளங்கள் 'உறுதியான' மின்வலுக் கொள்ளளவைக் கொண்டிருப்பதில்லை. அவை இயற்கையில் விட்டு விட்டு நிகழ்பவை ஆகும். உண்மையான நேரங்களில் மின்சாரத்திற்கான கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கு மாறுபட்ட RE மூலங்கள் மூலமாக மின் பிறப்பாக்கத்தைச் சமநிலைப்படுத்துவதற்கு வேறு மின்தொகுப்பு மட்ட உறுதியான கொள்ளளவுப் பிறப்பாக்கம் தேவையாக உள்ளது. அத்தகைய உறுதியான கொள்ளளவைச் சேர்ப்பதற்கு அதிகம் பொருத்தமுடைய, நீண்ட காலத் தீர்வாக உந்தப்பட்ட சேமிப்பு நீர் மின்வலு ஆலை (PSHPP) இனை இ.மி.ச. இனங்கண்டிருந்தது. 2020 ஆம் ஆண்டின் காலப்பகுதியில், இலங்கையின் முதலாவது உந்தப்பட்ட சேமிப்பு நீர் மின்வலுச் செயற்றிட்டத்தை அமைப்பதற்கு மிகவும் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்வதற்கும் சாத்தியவள ஆய்வுகளை முன்னெடுப்பதற்குமான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கு மகாவலி ஆற்றுப் பள்ளத்தாக்கில் உள்ள அரநாயக்காவில் இரண்டு நம்பிக்கைக்குரிய தளங்கள் காணப்படுவதுடன் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட மற்றுமொரு தளம் தற்போதைய விக்டோரியா நீர்த்தேக்கத்தின் போவத்தென்ன ஆற்றெதிர்ப்புறம் (upstream) என அழைக்கப்படும் ஓர் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**உரு T 13 : திருத்தப்பட்ட அடிப்படை விடயங்களிலுள்ள அடுத்த 20 ஆண்டுகள் ஈறான மின்பிறப்பாக்கல் கொள்ளளவுக் கலவை**




யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (JICA) இன் உதவியுடன் மின்வலுத் துறை பெருந் திட்ட நடைமுறைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் மீதான கொள்ளளவு அபிவிருத்திக்கான செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB), அபிவிருத்திக்கான பிரெஞ்சு முகவராண்மை (AFD) மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) ஆகிய மூன்று நிதியிடல் மூலங்களால் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூன்று பிரதான மின் பரிமாற்றச் செயற்றிட்டங்களுக்கான நிதியுதவிகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

இந்தச் செயற்றிட்டங்கள் புதிய ஆளி நிலையங்கள் மற்றும் மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் நிருமாணத்தையும் அதேபோன்று தற்போதுள்ள உபமின் நிலையங்களின் அபிவிருத்தி மற்றும் புதிய மின் பரிமாற்ற மார்க்கங்களின் நிருமாணங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்குகின்றன. இந்தச் செயற்றிட்டங்களுக்கான மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் கிட்டத்தட்ட 56 பில்லியன் இலங்கை ரூபாய் ஆகும். இந்த நிதியுதவிக்கான இறுதி உடன்படிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

### புதிய மின்தொகுப்பு உபமின் நிலையங்கள்

2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கீழ்வரும் மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் பிரிவிடம் கையளிக்கப்பட்டன.

| மின்தொகுப்பு உபமின் நிலையம் | மின்னழுத்த மட்டம் | கொள்ளளவு |
|---|---|---|
| மலிபோட | 132/33 kV | 63 MVA |
| வேவல்வத்த | 132/33 kV | 63 MVA |
| கொழும்பு A | 132/33 kV | 63 MVA |
| கொழும்பு F | 132/33 kV | 63 MVA |

### மலிவான விலைகளில் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி

இ.மி.ச. மீள்புதுப்பிக்கத்தக்க சக்திக்கான அதன் இலட்சிய இலக்குகளுடன் முன்னோக்கிச் செல்கிறது. இ.மி.ச. இனால் கட்டப்பட்டு, இயக்கப்படும் உரிமை (BOO) அடிப்படையில் காற்றாலை மற்றும் சூரிய மின்கல ஆலைகளுக்கான இரண்டு விலைமனுக்களைக் கோருவதற்கு முடிந்திருந்தது. ஒரு விலைமனு (ஒவ்வொன்றும் 10 MW ஆலைக் கொள்ளளவு கொண்ட) மொத்தம் 150 MW சூரிய மின்கலத்திற்கானது என்பதுடன் மற்றைய விலைமனு (ஒவ்வொன்றும் 10 MW ஆலைக் கொள்ளளவு கொண்ட) மொத்தமாக 60 MW காற்றாலை மின்வலுவுக்கானது ஆகும். விலைமனுக்களுக்கு ஏலம் எடுக்கப்பட்ட விதிப்பனவுகள், நியாயமான விதிப்பனவுகளிலுள்ள போட்டி ஏலத்தை விளைவிப்பதை உறுதிப்படுத்தின.



உரு **T 14 :** கெரவலப்பிட்டியில் உள்ள சக்தி மின்வலு ஆலைக்கான கழிவு

# மின் பரிமாற்றப் பிரிவு (தொடர்ச்சி)

மொத்தமாக 48 MW கொள்ளளவைக் கொண்ட 23 புதிய NCRE ஆலைகள் ஆண்டின்போது அதிகாரம் அளிக்கப்பட்டன. ஆண்டின் பிரதான சிறப்பம்சமாக இருந்தது போட்டி விலைமனுக் கோரலின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள முதலாவது காற்றாலை மின்வலுச் செயற்றிட்டங்களுக்கான அதிகாரம் அளிக்கப்பட்டமை ஆகும். 2017 ஆம் ஆண்டில் கோரப்பட்ட விலைமனுவைத் தொடர்ந்து BOO அடிப்படையில் வரையறுக்கப்பட்ட வாயுசக்தி விற்பன்னர் (தனியார்) நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட யாழ் வாயு பகவான் (தனியார்) நிறுவனம் ஆகியவற்றால் சாவகச்சேரியில் நடைமுறைப்படுத்தப்பட்ட இரண்டு 10 MW காற்றாலைச் செயற்றிட்டங்கள் 2020-05-27 ஆந் திகதி தேசிய மின்தொகுப்பிற்கு இணைக்கப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, முதலாவது பெரிய அளவு சக்திக்கான கழிவுச் (W2E) (மாநகர திடக் கழிவு) செயற்றிட்டமும்கூட 2020 இன் பிற்பகுதியில் தேசிய மின்தொகுப்பிற்கு இணைக்கப்பட்டது. W2E என்பது 10 MW ஆலையொன்றாக இருப்பதுடன், கெரவலப்பிட்டியில் அமைந்துள்ள இந்த ஆலை வரையறுக்கப்பட்ட வெஸ்டன் பவர் (தனியார்) நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படுகிறது.

### SCC இல் மீள்புதுப்பிக்கத்தக்க மேசை

2020 இல் முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தில் (SCC) "மீள்புதுப்பிக்கத்தக்க மேசை" ஒன்றைத் நிறுவியதன் மூலம் NCRE அபிவிருத்தி ஒன்றிணைப்பு வரலாற்றில் ஒரு மைல்கல் அடையப்பட்டது. இ.மி.ச. வழங்கல் - கேள்விச் சமநிலையைப் பேணுகின்ற அதே வேளை NCRE பிறப்பாக்கல் ஊடுருவலுக்கு எப்போதும் வசதியளித்துள்ளது. NCRE ஆலைகளின் நிகழ் நேரப் பிறப்பாக்கத்தைக் கண்காணிப்பதற்கான ஆற்றல் இன்மையே கவலையொன்றாக இருக்கிறது. NCRE பிறப்பாக்கமானது எதிர்மறைக் கேள்வியாகப் பிரதிபலிக்கிறது. R&D கிளையுடன் இணைந்து முறைமைக் கட்டுப்பாட்டுக் கிளையானது 50 NCRE ஆலைகளின் நிகழ் நேரப் பிறப்பாக்கத்தைக் கண்காணிப்பதற்கு ஒரு முன்னோடிச் செயற்றிட்டம் தொடங்கப்பட்டது. இரு கிளைகளினதும் பொறியியலாளர்களால் நிகழ் நேர கண்காணிப்பை இயலச் செய்யும் கட்டுப்பாட்டு அறையில் NCRE மேசை வெற்றிகரமாகத் தாபிக்கப்பட்டது. இது தலைப்பகுதி மின்சாரம் அனுப்பீடு செய்யும் திட்டத்தின் நாளின் துல்லியத்தன்மையை மேம்படுத்துவதற்கும் அதே போன்று அனுப்புவதில் சிக்கனத்தன்மையைப் பேணுவதற்கும் பாரியளவில் உதவி செய்கிறது.



**உரு T 15 : SCC இல் மீள்புதுப்பிக்கத்தக்க மேசை**



**உரு T 16 : மாதம்பே GS இல் மின்மாற்றி இணைப்பிறுக்கி மாற்றீடு செய்யும் வேலை**

### NCRE அபிவிருத்திகளுக்கான 15+இன் அறிமுகப்படுத்தல்

1996 தொடக்கம் 2008 வரையான காலப்பகுதியில், NCRE SPPAs ஆனது 15 வருட காலத்திற்கு தவிர்க்கப்பட்ட கிரய அடிப்படையிலான விதிப்பனவுடன் இருந்தது. அந்த SPPAs மேலும் 05 வருடங்கள் காலப்பகுதிக்காக மாத்திரம் நீடிக்கப்பட்டது. விதிப்பனவு மற்றும் முறையான கட்டணக் கட்டமைப்பு இல்லாததன் காரணமாக, SPPAs இனை நீடிப்பது நிறுத்தி வைக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டில், தீர்வொன்று முன்மொழிவு செய்யப்பட்டதுடன், தகைமையுள்ள சகல சிறியளவு நீர் மின்வலு ஆலைகளுக்கும் தங்களுடைய செயற்பாட்டுக் காலத்தை நீடிப்பதற்கு சந்தர்ப்பமொன்று வழங்கப்பட்டது.

### நோய்ப்பரவல் காலத்தில் வலையமைப்பைப் பராமரித்தல்

கோவிட் 19 நோய்ப்பரவல் இருந்த போதிலும், அதிகளவான தடுப்புப் பராமரிப்பு மற்றும் அவசர பழுதுபார்ப்பு வேலைகள் என்பன மேற்கொள்ளப்பட்டன.

கோவிட் 19 நோய்ப்பரவல் காரணமாக பாதகமான சூழ்நிலை காணப்பட்ட போதிலும், 218 மின்வலு மின்மாற்றிகளில் 81% ஆன கரைந்த வாயுப் பகுப்பாய்வுகள் (DGA) பூர்த்தி செய்யப்பட்டன. ஸ்வீப் அதிர்வெண் துலங்கல் பகுப்பாய்வு (SFRA) மூலம் கைரேகையைப் பெறுவது 64% பூர்த்தி செய்யப்பட்டது.

கணினிமயப்படுத்தப்பட்ட பராமரிப்பு முகாமைத்துவ முறைமையின் பயன்பாடு (CMMS) ஆனது சொத்து முகாமை மற்றும் பராமரிப்பு முகாமை ஆகியவற்றுக்கு 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு காணப்பட்டது. சம்பவ அறிக்கைகளின் உயர்வு, பராமரிப்பு அதே போன்று சோதனை வேலைகளுக்கான பணிக் கட்டளைகளை உருவாக்குதல், பராமரிப்பு நடவடிக்கைகளைப் பதிவு செய்தல், பராமரிப்பு அதே போன்று சோதனை வேலைகளுக்கான மின்தடைக் கோரிக்கையிடுதல் மற்றும் பொருள் கோரிக்கையிடுதல் போன்ற நடவடிக்கைகள் CMMS ஊடாகச் செய்யப்பட்டன. CMMS இன் விரிவான பாவனை ஆண்டின் இறுதிக் காலாண்டுக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்டது.

# மின் பரிமாற்றப் பிரிவு (தொடர்ச்சி)



உரு T17 : வெப்ப நிலைமையின் கீழ் மின்காப்பு மாற்றீடு நடைபெறுதல்

### மேம்படுத்தப்பட்ட நம்பகத்தன்மையை நோக்கிய நடவடிக்கைகள்

நுரைச்சோலை மின்வலு ஆலை தொடக்கம் புதிய சிலாபம் மின்தொகுப்பு உபமின் நிலையம் வரையிலான 220 kV மின் பரிமாற்ற மார்க்கமானது இலங்கை மின் பரிமாற்ற வலையமைப்பில் உள்ள சிக்கலானதொரு மார்க்கம் ஆகும். இந்த மார்க்கம் நியாயமானளவு அதிக காற்று நிலைமைகளைக் கொண்ட கனமான உப்புப் படிவுடைய சூழல் ஊடாகச் செல்கிறது. இதனால், மின்கோபுரங்கள் மற்றும் மின்காப்புகளில் உள்ள உருக்கினாலான பாகங்கள் விரைவில் துருப்பிடிப்பதுடன் மின்காப்புச் சரங்கள் (insulator strings) ஊடான சிதறொழி அனுப்பீடும் (corona discharge) அடிக்கடி அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமை மின் பரிமாற்ற வலையமைப்பின் நம்பகத்தன்மையை மோசமாகப் பாதித்தது.

துருப்பிடித்தல் மற்றும் உப்புப் படிதல் ஆகியவற்றைக் குறைப்பதற்கான ஒரு பரிகார நடவடிக்கையாக மின்காப்பு மேற்பரப்பின் மீது சிலிக்கன் பூசப்பட்டு, செருகி மீது காப்புறை போடப்பட்ட மூடி மற்றும் செருகி வகை (cap and pin type) கண்ணாடி மின்காப்பிகளை மின் பரிமாற்ற மார்க்கப் பராமரிப்பு அலகு நிறுவியது.

### இ.மி.ச. தொடர்பாடல் வலையமைப்பை அபிவிருத்தி செய்தல்

தொடர்பாடல் வலையமைப்புக்காக 2020 ஆம் ஆண்டில் பின்வரும் குறிப்பிடத்தக்க அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன.

- இ.மி.ச. கண்ணாடி ஒழியிழை வலையமைப்புக்கு மேலாக ஒரு புதிய தொடர்பாடல் வலையமைப்பு (ஜிகாபிற் ஈதர்நெற் வலையமைப்பு) தாபிக்கப்பட்டு, கீழ்வருவனவற்றுக்காக விரிவாக்கப்பட்டது
    - மின்தொகுப்பு உபமின் நிலையங்களில் இருந்து MITFIN மற்றும் CMMS மென்பொருளுக்கான அணுகல்
    - கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்புக் கிளைக்கான மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் உபமின் நிலைய தன்னியக்க முறைமை (SAS) சேவையகங்களுக்கான தொலைதூர அணுகல்
    - கென்ற் வீதியில் உள்ள இ.மி.ச. அலுவலக கட்டடத் தொகுதியில் இருந்து இ.மி.ச. உள்ளக இணைய வசதிகளுக்கான அணுகல்
- GPS கடிகார முறைமை NSCC இல் தாபிக்கப்பட்டதுடன் ஒத்திசைவான டிஜிடல் வரிசைமுறை (SDH) வலையமைப்பில் உள்ள சகல கண்ணாடி ஒளியிழை பல்பெருக்கி முனைகளினதும் உள்ளக நேரங்கள் ஒத்திசைவாக்கப்பட்டன.
- கொழும்பு 09, கென்ற் வீதியில் உள்ள இ.மி.ச. அலுவலகக் கட்டடத் தொகுதியிலிருந்து தொலைவியக்க கண்காணிப்பு வசதியை வழங்கும் SCADA உபகரணம் (RTU மற்றும் வாயிற்படலை) நிறுவப்பட்டது.

### புதிய இயல்பு நிலையை ஏற்றுக் கொள்ளல்

கோவிட் 19 கட்டுப்பாடுகளுக்கிடையில் தொலைதூர வேலைகளைச் செய்யும் பொருட்டு, யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (JICA) இனால் இ.மி.ச. இற்கு மூன்று முழு நீள காணொளி மாநாட்டு முறைமைகள் நன்கொடையாக வழங்கப்பட்டன. அவை தற்போது பொது முகாமையாளரின் அலுவலகம், பிறப்பாக்கல் மற்றும் மின் பரிமாற்றத் திட்டமிடல் கிளை மற்றும் முறைமைக் கட்டுப்பாட்டு நிலையம் ஆகியவற்றில் நிறுவப்பட்டுள்ளன.

### மின் பரிமாற்றத்திற்கான புதிய தலைமையகம்

**புதிய மின் பரிமாற்றக் கட்டடத்திற்கான வரைவு வடிவமைப்பு மற்றும் விலைமனு ஆவணங்கள் என்பன 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரச பொறியியல் கூட்டுத்தாபன ஆலோசகர்களால் பூர்த்தி செய்யப்பட்டன. மேலும், இ.மி.ச. இன் நிதிசார் சிக்கல்கள் காரணமாக முன்னேற்றம் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.**

### இனங்களின் கடைசி போய்விட்டது

சமனலவெவ - எம்பிலிப்பிட்டிய 132 kV மார்க்கம் 1 மற்றும் 2 இல் நிறுவப்பட்டிருந்த பிறவுண், போவேறி அன்ட் கொம்பாக்னி (BBC) இனால் தயாரிக்கப்பட்ட LZ32 என்ற மின்னியந்திரவியல் அஞ்சல் சுருள்கள் ஆண்டின் காலப்பகுதியில் புதிய SEL411L எண்சார் வேறுபாட்டு அஞ்சல் சுருள்களால் மாற்றீடு செய்யப்பட்டன. இங்கு அகற்றப்பட்ட இரண்டு அஞ்சல் சுருள்களும் பிரதான பாதுகாப்பு அஞ்சல் சுருள்களாக 220 kV / 132 kV மின் பரிமாற்ற வலையமைப்பில் செயற்பாட்டில் இருந்த கடைசி மின்னியந்திரவியல் அஞ்சல் சுருள்களாகும். இவற்றின் மாற்றீடானது மின்னியந்திரவியல் சகாப்தத்தில் இருந்து நிலைத்த மற்றும் எண்சார் சகாப்தத்திற்கு மாறியதில் ஒரு மைல்கல்லாகக் குறிக்கப்பட்டுள்ளது.



உரு T18 : பழைய அஞ்சல் சுருளும் புதிய அஞ்சல் சுருளும்



ஜா-எல QMS

செயற்பாட்டு மீளாய்வு

# விநியோகப் பிரிவுகள்

# விநியோகப் பிரிவுகள்

நாட்டின் மின்சார விநியோகத்தில் பாரிய பங்கினை இ.மி.ச. ஆற்றுகிறது. இது மொத்த விற்பனைத் தொகையில் 90% ஆக இருக்கிறது. எஞ்சிய தொகை, இ.மி.ச. இன் ஒரு துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனியால் நிறைவேற்றப்படுகிறது.

ஒட்டுமொத்த இ.மி.ச. விநியோக முறைமையும் விநியோகப் பிரிவு 1 (DD1), விநியோகப் பிரிவு 2 (DD2), விநியோகப் பிரிவு 3 (DD3), விநியோகப் பிரிவு 4 (DD4) என பூகோள ரீதியில் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிப்பானது பிரதானமாக நிருவாக மற்றும் செயற்பாடுகளை இலகுவாக்குவதற்காகவும் வினைத்திறன் மற்றும் மின்வழங்கலின் தரம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான இலக்குப் போட்டியை அடைந்து கொள்வதற்காகவும் ஏற்படுத்தப்பட்டதாகும்.

விநியோக வலையமைப்பானது 33 kV மற்றும் 11 kV இடைநிலை மின்னழுத்த (MV) மார்க்கங்களையும், 400 V தாழ் நிலை மின்னழுத்த (LV) மார்க்கங்களையும் விநியோக மின்மாற்றிகளையும் கொண்டிருக்கிறது. 220 kV மற்றும் 132 kV மின்பரிமாற்ற முறைமைகள் நாடு பூராகவும் உள்ள மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் ஊடாக விநியோக வலையமைப்புக்கு மின்வலுவை மாற்றுகிறது.

## செயற்பாட்டுக் கட்டமைப்பு

ஒவ்வொரு பிரிவும் இ.மி.ச. இன் பொது முகாமையாளருக்கு நேரடியாக அறிக்கையிடும் மேலதிகப் பொது முகாமையாளர் ஒருவரால் தலைமை தாங்கப்படுகிறது. விநியோகப் பிரிவுகள் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு மாகாணமும் ஒரு பிரதிப் பொது முகாமையாளரால் தலைமை தாங்கப்படுகிறது. ஒவ்வொரு பிரிவின் கீழும் வருகின்ற மாகாணங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| பிரிவின் பெயர் | மாகாணம் |
|---|---|
| பிரிவு 1 (DD1) | கொழும்பு நகர், வட மேல் மாகாணம், வட மத்திய மாகாணம் மற்றும் வட மாகாணம் |
| பிரிவு 2 (DD2) | மேல் மாகாணம் வடக்கு, மத்திய மாகாணம், கிழக்கு மாகாணம் |
| பிரிவு 3 (DD3) | மேல் மாகாணம் தெற்கு II, ஊவா மாகாணம், சப்ரகமுவ மாகாணம் |
| பிரிவு 4 (DD4) | மேல் மாகாணம் தெற்கு I மற்றும் தென் மாகாணம் |

ஒரு மாகாணம் பல பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த ஒவ்வொரு பிரதேசமும் அப்பிரதேசத்தால் சேவை வழங்கப்படுகின்ற நுகர்வோரின் எண்ணிக்கையைப் பொறுத்து பிரதேச பிரதம பொறியியலாளர்கள் அல்லது பிரதேச மின் பொறியியலாளர்களால் நிருவகிக்கப்படுகிறது. ஒரு பிரதேசம் பல நுகர்வோர் சேவை நிலையங்களாக (CSCs) மேலும் பிரிக்கப்படுகிறது. இந்த ஒவ்வொரு நுகர்வோர் சேவை நிலையமும் ஒரு மின் அத்தியட்சகரால் தலைமை தாங்கப்படுகிறது.

## செயற்பாட்டுப் பிரதேசம்

விநியோகப் பிரிவு 1 ஆனது வட மேல் மாகாணம், வட மத்திய மாகாணம், வட மாகாணம் மற்றும் கொழும்பு மாநகரப் பிரதேசம் ஆகிய நான்கு நிருவாக மாகாணங்களைக் கொண்டுள்ளது. வட மத்திய மாகாணமானது மூன்று பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள அதே வேளை வட மாகாணம் நான்கு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வட மேல் மாகாணமானது 2020 இல் புதிதாகச் சேர்க்கப்பட்ட மாகோ பிரதேசத்துடன் சேர்த்து எட்டு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள அதே வேளை கொழும்பு நகர் பிரதேசம் நான்கு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

| பிரிவு | மாகாணம் | பிரதேசம் |
|---|---|---|
| விநியோகப் பிரிவு 1 | வட மேல் | சிலாபம், குருநாகல், குளியாப்பிட்டி, வாரியப்பொல, வென்னப்புவ, புத்தளம், நாரம்மல மற்றும் மாகோ |
| | வட மத்திய | அநுராதபுரம், கெக்கிராவ மற்றும் மின்னேரியா |
| | வடக்கு | யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் கிழக்கு, கிளிநொச்சி மற்றும் வவுனியா |
| | கொழும்பு நகர் | கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, கொழும்பு மேற்கு மற்றும் கொழும்பு கிழக்கு |

விநியோகப் பிரிவு 2 ஆனது கிழக்கு மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்தை முழுமையாகவும் மேல் மாகாணம் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களை பகுதியளவிலும் உள்ளடக்கியதாக 24 பிரதேச அலுவலகங்களைக் கொண்டுள்ளது. மூன்று மாகாணங்களிலும் கிழக்கு மாகாணம் ஐந்து பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள அதே வேளை மத்திய மாகாணம் பன்னிரெண்டு பிரதேசங்களாகவும் மேல் மாகாணம் வடக்கு ஆனது 2020 ஆம் ஆண்டு புதிதாகச் சேர்க்கப்பட்ட கிரிந்திவெல பிரதேசத்துடன் சேர்த்து ஏழு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

| பிரிவு | மாகாணம் | பிரதேசம் |
|---|---|---|
| விநியோகப் பிரிவு 2 | கிழக்கு மாகாணம் | அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வாழைச்சேனை மற்றும் கல்முனை |
| | மத்திய மாகாணம் | கேகாலை, மாவனெல்ல, கண்டி நகர், பேராதனை, குண்டசாலை, கட்டுகஸ்தோட்டை, கலகெதர, மாத்தளை, தம்புள்ள, நுவரெலியா, கினிகத்தென்ன, நாவலப்பிட்டிய |
| | மேல் மாகாணம் வடக்கு | கம்பஹா, களனி, நீர்கொழும்பு, ஜா-எல, திவுலப்பிட்டிய, வெயாங்கொடை மற்றும் கிரிந்திவெல |

விநியோகப் பிரிவு 3 ஆனது மேல் மாகாணம் தெற்கு II என்ற மேல் மாகாணத்தின் ஒரு பகுதியையும் சப்ரகமுவ மாகாணம் மற்றும் ஊவா மாகாணம் ஆகியவற்றையும் உள்ளடக்குகிறது. மேல் மாகாணம் தெற்கு II ஆனது ஐந்து பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சப்ரகமுவ மாகாணமானது இரத்தினபுரி மாவட்டத்தை முழுமையாகவும் கேகாலை மாவட்டத்தின் ஒரு பகுதியையும் உள்ளடக்கியதாக ஐந்து பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஊவா மாகாணமானது பதுளை மற்றும் மொணராகலை மாவட்டங்களை உள்ளடக்கியதாக நான்கு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

| பிரிவு | மாகாணம் | பிரதேசம் |
|---|---|---|
| விநியோகப் பிரிவு 3 | மேல் மாகாணம் தெற்கு II | பண்டாரகம, ஹோமாகம, அவிசாவளை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மற்றும் ஹொரணை |
| | சப்ரகமுவ | இரத்தினபுரி, கஹவத்தை, ருவன்வெல்ல, எஹலியகொடை மற்றும் எம்பிலிப்பிட்டிய |
| | ஊவா | பதுளை, தியத்தலாவ, மொணராகலை மற்றும் மஹியங்கணை |

# விநியோகப் பிரிவுகள் (தொடர்ச்சி)

விநியோகப் பிரிவு 4 ஆனது மேல் மாகாணத்தின் ஒரு பகுதியையும் (மேல் மாகாணம் தெற்கு I), தென் மாகாணத்தை முழுமையாகவும் சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் சில பகுதிகளையும் உள்ளடக்குகிறது. மேல் மாகாணம் தெற்கு I ஆனது நான்கு பிரதேசங்களை உள்ளடக்குகின்ற அதே வேளை தென் மாகாணம் ஏழு பிரதேசங்களை உள்ளடக்குகிறது.

| பிரிவு | மாகாணம் | பிரதேசம் |
|---|---|---|
| விநியோகப் பிரிவு 4 | தென் மாகாணம் | அம்பலாங்கொடை, காலி, அக்குரஸ்ஸ, பத்தேகம, தங்காலை, ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை |
| | மேல் மாகாணம் தெற்கு I | இரத்மலானை, களுத்துறை, தெஹிவளை மற்றும் மத்துகம |

மாகாணங்களுக்குப் புறம்பாக, ஒவ்வொரு பிரிவினதும் நீடித்திருக்கத்தக்க செயற்பாட்டிற்குத் தேவையான ஆதரவுச் சேவைகளை மேற்கொள்வதற்காக அனைத்து விநியோகப் பிரிவுகளிலும் மூன்று பிரத்தியேகமான கிளைகள் தாபிக்கப்பட்டுள்ளன. அவையாவன, செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்புக் கிளை, திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் கிளை மற்றும் வர்த்தகம் மற்றும் நிறுவனக் கிளை. மேலும், விநியோகப் பிரிவு 1 ஆனது விநியோக ஒருங்கிணைப்புக் கிளையையும் கொண்டிருக்கிறது.

### விநியோகப் பிரிவுகளின் பிரதான நோக்கங்கள்

- பிரிவினுள் சட்ட நியதி மட்டங்களில் அனைத்து நுகர்வோருக்கும் நம்பகரமான மின்சார வழங்கலை ஏற்பாடு செய்தல்.
- தற்போதைய கேள்வி மற்றும் எதிர்பார்க்கப்படும் எதிர்காலத் தேவைகள் ஆகியவற்றை நிறைவேற்றுகின்ற அதே வேளை மின்சாரத்தை விற்பனை செய்வதும் திட்டமிடப்பட்ட வருமானங்களை அடைந்து கொள்வதும்.
- உயர் தரம், வினைத்திறன் மற்றும் நவீன தொழில்துறையின் பெரும்பாலான கடுமையான நியமங்களைப் பூர்த்தி செய்கின்ற பாதுகாப்பான தொழில்நுட்பங்கள் ஆகியவற்றுடன் அனைவருக்கும் உயர்ந்தபட்ச நுகர்வோர் திருப்தியை உறுதிப்படுத்துகின்ற மின்சாரத்திற்கு ஏற்பாடு செய்தல்.
- முறைமை இழப்புகளைக் குறைக்கின்ற அதே வேளை சர்வதேச நியமங்களுடன் இணக்கமாக இருக்கும் வகையில் நம்பகத்தன்மை, தரம் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான மின்சார விநியோக முறைமையின் அபிவிருத்தியை உறுதிப்படுத்தல்.
- பராமரிப்புச் சேவைகள் மற்றும் செயற்பாட்டு வினைத்திறனை ஒருங்கிணைப்பதும் மேம்படுத்துவதும்.
- மின்சாரத்தை விநியோகிப்பதற்கான புதிய தொழினுட்பங்களை விருத்தி செய்வதற்கு ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதும் மேம்படுத்துவதும்
- பாதுகாப்பான, பத்திரமான மற்றும் ஆரோக்கியமான வேலைச் சூழல் ஒன்றைப் பேணுவதன் மூலம் திறமையான வேலைப்படையை உருவாக்குவதும் அவர்களது வெற்றிக்கான சந்தர்ப்பங்களை உச்சப்படுத்துதலும்.
- செயற்பாடுகள் நிகழும் சூழலை பாதுகாப்பதிலும் முற்காப்பு செய்வதிலும் அர்ப்பணிப்பை வெளிக்காட்டுதல்.

# விநியோகப் பிரிவுகள் (தொடர்ச்சி)



# விநியோகப் பிரிவுகள் (தொடர்ச்சி)

## விநியோகப் பிரிவுகளின் எல்லை

| விபரம் | DD1 | DD2 | DD3 | DD4 |
|---|---|---|---|---|
| சேவைப் பிரதேசம் (சதுர கி.மீ.)* | 26,929 | 17,935 | 12,178 | 6,870 |
| பிரதேசங்கள் (எண்ணிக்கை) | 19 | 24 | 14 | 11 |
| நுகர்வோர் சேவை நிலையங்கள் (எண்ணிக்கை) | 58 | 89 | 49 | 41 |
| இ.மி.ச. இயக்கிய சேகரிப்பு நிலையங்கள் (POS) (எண்ணிக்கை) | 15 | 21 | 13 | 28 |
| கட்டுப்பாட்டு நிலையங்கள் (எண்ணிக்கை) | 4 | 3 | 2 | 0 |
| அழைப்பு நிலையங்கள் (எண்ணிக்கை) | 4 | 4 | 3 | 2 |
| தொகையளவு நுகர்வோர் (எண்ணிக்கை) | 4,388 | 3,605 | 2,124 | 1937 |
| சில்லறை நுகர்வோர் (எண்ணிக்கை) | 1,912,516 | 2,273,110 | 1,345,825 | 1,092,759 |
| SAIDI (நிமிடங்கள் / ஆண்டு) | 4705 | 4722 | 4711 | 4981 |
| SAIFI (குறுக்கீடுகள் / வாடிக்கையாளர் / ஆண்டு) | 25.9 | 35.9 | 44.5 | 35.8 |
| *மின்சார வலையமைப்பைக் கொண்டிராத காடுகள் மற்றும் தீவுகள் தவிர்ந்த. | | | | |

## விநியோக உட்கட்டமைப்பு

| விபரம் | அலகு | DD1 | DD2 | DD3 | DD4 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| விநியோக மார்க்கங்கள் | | | | | | |
| 33 kV | km | 11,114 | 9,990 | 7,371 | 4,735 | 33,209 |
| 11 kV | km | 694 | 428 | 40 | 220 | 1,382 |
| LV | km | 46,559 | 41,589 | 32,516 | 29,509 | 150,173 |
| நிலத்தடி கம்பிவடங்கள் | | | | | | |
| 33 kV | km | 21.88 | 9.4 | 7.87 | 8.6 | 47.78 |
| 11 kV | km | 835.46 | 141.76 | 5.04 | 26.2 | 1,008.46 |
| LV | km | 731.35 | 73.72 | 1.11 | 7.4 | 813.54 |
| உபமின் நிலையங்கள் | | | | | | |
| 33/11 kV முதன்மை உபமின் நிலையங்கள் | No. | 43 | 29 | 12 | 41 | 125 |
| LV விநியோக உபமின் நிலையங்கள் | No. | 12,174 | 10,688 | 6,456 | 5,337 | 34,655 |
| ஏனையவை | | | | | | |
| தாங்கு சட்டங்கள் | No. | 67 | 96 | 42 | 47 | 252 |
| A/R | No. | 422 | 498 | 193 | 155 | 1,268 |

## 2020 ஆம் ஆண்டின் பிரதான தரவுகள் - ஒரே பார்வையில்

| விபரம் | அலகு | DD1 | DD2 | DD3 | DD4 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்ட அலகுகள் | GWh | 4,149 | 4,785 | 2,689 | 2,073 | 13,696 |
| பிரிவினுள் விற்பனை செய்யப்பட்ட அலகுகள் | GWh | 3,936 | 4,390 | 2,465 | 1,890 | 12,681 |
| விற்பனை செய்யப்பட்ட அலகுகளில் இருந்து ஈட்டப்பட்ட வருமானம் | LKR Million | 71,383 | 70,058 | 40,006 | 31,747 | 213,194 |
| சராசரி விற்பனை விலை | LKR | 18.14 | 15.96 | 16.23 | 16.80 | 16.81 |
| விநியோக இழப்பு | % | 5.13 | 8.25 | 8.33 | 8.83 | 7.41 |
| வழங்கப்பட்ட புதிய இணைப்புகளின் எண்ணிக்கை | No | 41,052 | 46,941 | 27,123 | 20,509 | 135,625 |

# விநியோகப் பிரிவுகள் (தொடர்ச்சி)

## செயற்பாட்டுத் தரவுகள்

### விதிப்பனவு வகை ரீதியான கணக்குகளின் எண்ணிக்கை - 2020

(எ/கை)

| விதிப்பனவு வகை | DD1 | DD2 | DD3 | DD4 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வீட்டு நுகர்வு | 1,624,745 | 1,978,566 | 1,185,492 | 961,478 | 5,750,281 |
| சமயத்தலம் | 14,107 | 14,178 | 7,613 | 5,907 | 41,805 |
| தொழில்துறை | 36,163 | 15,281 | 8,808 | 6,579 | 66,831 |
| ஹோட்டல் | 116 | 152 | 39 | 150 | 457 |
| அரசாங்கம் | 163 | 2,886 | 58 | 1,509 | 4,616 |
| பொது நோக்கு | 241,610 | 265,652 | 145,939 | 119,073 | 772,274 |
| **மொத்தம்** | **1,916,904** | **2,276,715** | **1,347,949** | **1,094,696** | **6,636,264** |

### விதிப்பனவு மூலமான விற்பனைகள் - 2020

(GWh.)

| விதிப்பனவு வகை | DD1 | DD2 | DD3 | DD4 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வீட்டு நுகர்வு | 1,474 | 1,746 | 985 | 885 | 5,090 |
| சமயத்தலம் | 32 | 26 | 12 | 12 | 82 |
| தொழில்துறை | 968 | 1,753 | 946 | 496 | 4,163 |
| ஹோட்டல் | 83 | 48 | 6 | 55 | 192 |
| அரசாங்கம் | 79 | 64 | 23 | 42 | 208 |
| பொது நோக்கு | 1,259 | 716 | 482 | 381 | 2,838 |
| தெரு விளக்கு | 41 | 37 | 11 | 19 | 108 |
| **மொத்தம்** | **3,936** | **4,390** | **2,465** | **1,890** | **12,681** |

### விதிப்பனவு மூலமான வருமானம் - 2020

(மில்.இல.ரூபா)

| விதிப்பனவு வகை | DD1 | DD2 | DD3 | DD4 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வீட்டு நுகர்வு | 23,363 | 24,930 | 13,905 | 13,468 | 75,666 |
| சமயத்தலம் | 240 | 181 | 82 | 86 | 589 |
| தொழில்துறை | 14,492 | 25,926 | 13,975 | 7,396 | 61,789 |
| ஹோட்டல் | 1,449 | 926 | 123 | 998 | 3,496 |
| அரசாங்கம் | 1,433 | 1,155 | 426 | 738 | 3,752 |
| பொது நோக்கு | 30,406 | 16,937 | 11,495 | 9,061 | 67,899 |
| தெரு விளக்கு | - | 3 | - | - | 3 |
| **மொத்தம்** | **71,383** | **70,058** | **40,006** | **31,747** | **213,194** |

# விநியோகப் பிரிவுகள் (தொடர்ச்சி)

### நுகர்வோர் கணக்குகளின் ஐந்தாண்டு முன்னேற்றம்




| | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|
| DD1 | 1,701,790 | 1,782,105 | 1,832,829 | 1,875,852 | 1,916,904 |
| DD2 | 2,045,063 | 2,122,740 | 2,178,082 | 2,229,774 | 2,276,715 |
| DD3 | 1,214,109 | 1,260,090 | 1,291,700 | 1,320,826 | 1,347,949 |
| DD4 | 1,003,230 | 1,028,194 | 1,051,668 | 1,074,187 | 1,094,696 |

## முன்னேற்றச் செயற்பாடுகள் - 2020 ஆம் ஆண்டு

### மின்சாரத்திற்கான அணுகல்

ஒப்பீட்டளவில் தரப்பட்ட மாகாணம் ஒன்றிலுள்ள மக்களின் மின்சாரத்திற்கான அணுகல், மாகாணத்தின் அபிவிருத்தி மட்டத்தில் தங்கியுள்ளது. பன்னிரெண்டு மாகாணங்களில் கொழும்பு நகர், மேல் மாகாணம் வடக்கு, மேல் மாகாணம் தெற்கு 1 மற்றும் தென் மாகாணம் ஆகிய நான்கு மாகாணங்களும் மின்சாரத்திற்கான 100% அணுகலை அடைந்துள்ளன. மின்னூட்டலின் நன்மைகளைக் கவனத்தில் கொண்டு, நன்கொடை அளிக்கும் அமைப்புக்கள், இலங்கை அரசாங்கம் (GOSL) மற்றும் இ.மி.ச. ஆகியவற்றால் செய்யப்பட்ட நிதிசார் அர்ப்பணிப்புகள் ஊடாக மின்சாரத்திற்கான 100% அணுகலை அடைவதற்கு கிராமிய மின்னூட்டல் செயற்றிட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

உரு D1 : மின்னூட்ட மட்டம் - 2019/2020 ஆம் ஆண்டு




### மின்னூட்டல் திட்டங்களும் விரிவாக்கங்களும்

| பிரிவு | மாகாணம் | திட்டங்கள் | | விரிவாக்கங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | நிறைவடைந்த பணிகளின் எண்ணிக்கை | கிரயம் மில்.இல.ரூபா | நிறைவடைந்த பணிகளின் எண்ணிக்கை | கிரயம் மில்.இல.ரூபா |
| DD1 | வடக்கு | 1 | 8.9 | 78 | 74.3 |
| | வட மேல் | - | - | 159 | 73 |
| | வட மத்திய | 1 | 3.68 | 46 | 39 |
| | கொழும்பு நகர் | - | - | - | - |
| DD2 | மேல் மாகாணம் வடக்கு | - | - | 300 | 31.41 |
| | மத்திய மாகாணம் | 3 | 3.04 | 3 | 1.82 |
| | கிழக்கு | 1 | 12.34 | 46 | 55.38 |
| DD3 | மேல் மாகாணம் தெற்கு II | 1 | 5.7 | 2 | 1.53 |
| | ஊவா | 2 | 11.34 | 7 | 11.31 |
| | சப்ரகமுவ | - | - | 22 | 49.03 |
| DD4 | மேல் மாகாணம் தெற்கு I | - | - | 19 | 8.31 |
| | தென் மாகாணம் | 13 | 39.40 | 3 | 3.49 |

# விநியோகப் பிரிவுகள் (தொடர்ச்சி)

### பங்களிப்பு வேலைச் செயலாற்றுகை

| பிரிவு | மாகாணம் | HV (km) | LV (km) | விநியோக உபமின் நிலையம் | LV மார்க்க மாற்றம் (km) | கிரயம் மில்.இல.ரூபா |
|---|---|---|---|---|---|---|
| DD1 | வடக்கு | 31.51 | 14.07 | 54 | - | 109.58 |
| | வட மேல் | 100.00 | 80.00 | 237 | 59 | 1,085.00 |
| | வட மத்திய | 34.59 | 104.23 | 168 | 42.11 | 626.40 |
| | கொழும்பு நகர் | 10.42 | 7.63 | 31 | - | 680.92 |
| DD2 | மேல் மாகாணம் வடக்கு | 77.47 | 48.77 | 220 | 380.16 | 1,416.85 |
| | மத்திய மாகாணம் | 161.09 | 217.07 | 164 | 414.18 | 1,173.99 |
| | கிழக்கு | 71.57 | 83.53 | 109 | 395.54 | 1,276.72 |
| DD3 | மேல் மாகாணம் தெற்கு II | 4.03 | 35.15 | 59 | 74.13 | 345.14 |
| | ஊவா | 92.69 | 204.94 | 35 | 137.16 | 330.14 |
| | சப்ரகமுவ | 20.20 | 1.80 | 9 | 264.67 | 556.26 |
| DD4 | மேல் மாகாணம் தெற்கு I | 6.83 | 27.22 | 37 | 32.67 | 275.19 |
| | தென் மாகாணம் | 49.46 | 119.60 | 122 | 31.84 | 829.09 |

### மேற்கூரை சூரிய மின்கலம் (PV)

மின் நுகர்வோர் தமது வளாகங்களிலுள்ள மேற்கூரைகளில் மின்சாரத்தைப் பிறப்பாக்கம் செய்வதற்கும் தங்களுடைய மின் பிறப்பாக்கத்தை இ.மி.ச. முறைமையுடன் ஒத்திசைவாக்குவதற்கும் அதே வேளை சக்தியை நுகர்தல் மற்றும் முறைமைக்கு ஏற்றுமதி செய்தல் என்பவற்றை நிகர மானியிடல், நிகரக் கணக்கீடு மற்றும் நிகரக் கூட்டல் ஆகிய மூன்று திட்டங்களின் கீழ் மேற்கொள்வதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

| விதிப்பனவு வகை | DD1 | DD2 | DD3 | DD4 | Total |
|---|---|---|---|---|---|
| **நுகர்வோர் (எண்ணிக்கை)** | | | | | |
| நிகர மானியிடல் | 3,235 | 2,151 | 2,183 | 1,891 | 9,460 |
| நிகரக் கணக்கீடு | 2,939 | 2,612 | 1,924 | 2,261 | 9,736 |
| நிகரக் கூட்டல் | 466 | 220 | 216 | 243 | 1,145 |
| **மொத்தம்** | **6,640** | **4,983** | **4,323** | **4,395** | **20,341** |
| **கொள்ளளவு (kW)** | | | | | |
| நிகர மானியிடல் | 23,893 | 13,615 | 12,922 | 13,864 | 64,294 |
| நிகரக் கணக்கீடு | 30,059 | 20,608 | 14,379 | 18,137 | 83,183 |
| நிகரக் கூட்டல் | 29,676 | 40,568 | 31,916 | 25,379 | 127,539 |
| **மொத்தம்** | **83,628** | **74,791** | **59,217** | **57,380** | **275,016** |

### வலையமைப்பு மேம்பாடுகள்

ஆண்டின் காலப்பகுதியில் விநியோக வலையமைப்பின் நம்பகத்தன்மையை உயர்த்துவதற்கும் மேம்படுத்துவதற்குமென கீழ்வரும் வேலைகள் விநியோகப் பிரிவுகளால் செய்யப்பட்டன.

| விபரம் | அலகு | DD1 | DD2 | DD3 | DD4 |
|---|---|---|---|---|---|
| 33 kV மின்கோபுர மார்க்கங்களின் நிருமாணம் | km | 65 | 232 | 138 | 140 |
| முதன்மை உபமின் நிலையங்களின் நிருமாணம் | Nos. | 03 | - | - | 01 |
| விநியோக உபமின் நிலையங்களின் நிருமாணம் | Nos. | 440 | 448 | 117 | 174 |

### சிறப்பம்சங்கள்

#### கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்திச் செயற்றிட்டம் (CPCDP)

கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்திச் செயற்றிட்டம் என்பது வடிவமைத்து, கட்டப்பட்டு, மாற்றப்படும் (DBT) ஒரு செயற்றிட்டமாகும். வரையறுக்கப்பட்ட CHEC துறைமுக நகர் கொழும்பு (தனியார்) கம்பனி CPCDP இற்கான ஒப்பந்தகாரர் ஆகும். இந்தச் செயற்றிட்டம் இரண்டு கட்டங்களைக் கொண்டுள்ளது. கட்டம் I ஆனது 220 / 33 kV, 4 x 120 MW GSS இன் நிருமாணத்தைக் கொண்டிருப்பதுடன் 33 kV விநியோக கம்பிவட வலையமைப்பு 14 கம்பிவட தடம்மடக்கிகளையும் (loops) கொண்டிருக்கிறது.

பெரும்பாலான வடிவமைப்பு வேலைகளும் பொருள் தெரிவுகளும் ஆண்டின்போது நிறைவு செய்யப்பட்டன. குடியியல் கட்டமைப்புகள் நிருமாணிக்கப்பட்டுக் கொண்டிருப்பதுடன் பிரதான உபகரணத் தயாரிப்புகளும் ஆரம்பிக்கப்பட்டன.

# விநியோகப் பிரிவுகள் (தொடர்ச்சி)

செயற்றிட்டக் கிரயப் பகுப்பாய்வு கீழ்வருமாறு:

| ஆண்டு | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 |
|---|---|---|---|---|---|
| கிரயம் (அமெ. டொலர்) | 42,329,322 | 3,417,240 | 3,417,240 | 3,417,240 | 3,417,240 |

### முதன்மை உபமின் நிலையம் D விருத்தியாக்கல் செயற்றிட்டம்

வைத்தியசாலைகள், அரச நிறுவனங்கள் உள்ளிட்ட கொழும்பு 07, 08, மற்றும் 09 இலுள்ள நுகர்வோருக்கான மின்சாரம் முதன்மை உபமின் நிலையம் D இனால் வழங்கல் செய்யப்படுகிறது. இந்த உபமின் நிலையம் அரசாங்க மின் திணைக்களத்தினால் ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்கு முன்னர் அதிகாரம் அளிக்கப்பட்டதாகும்.

பிரதேசத்தின் மின்சார வலையமைப்பினது நம்பகத்தன்மையை அதிகரிக்கும் பொருட்டு, கொழும்பு நகர ஊழியர்கள் 650 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 11 kV, 33 kV இணைப்பியமைப்புகள் (சுவிட்ச்கியர்) மற்றும் துணைப் பொருட்களுடன் மூன்று 16 MVA மின்மாற்றிகளை நிறுவியதன் மூலம் முதன்மை உபமின் நிலையத்தை விருத்தி செய்வதைப் பூரணப்படுத்தியிருந்தனர். அனைத்து நிதியிடல், திட்டமிடல், பெறுகை, நிறுவுதல் மற்றும் அதிகாரம் அளித்தல் நடவடிக்கைகளும் தமது சாதாரண கடமைகளுக்கு மேலதிகமாக கொழும்பு நகர ஊழியர்களால் கையாளப்பட்டன.

புனரமைக்கப்பட்ட உபமின் நிலையம் தேசிய மின்சார விநியோக முறைமையுடன் 2020-09-29 ஆந் திகதி இணைப்புச் செய்யப்பட்டது.

### நிகழ்நிலை (ஒன்லைன்) பராமரிபபு முகாமைத்துவ முறைமை

மின் மார்க்க நிருமாணம் மற்றும் பராமரிப்பு அலகானது இடைநிலை மின்னழுத்த பராமரிப்பு முகாமைத்துவ முறைமை (MVMMS) ஊடாக 33 kV மின்கோபுர மார்க்கப் பராமரிப்புக்காக நிகழ்நிலை வழிமுறைகளை நோக்கி நகர்ந்திருந்தது. நேரடி மற்றும் நேரடியற்ற வகையிலான தொலைபேசி அழைப்புப் பராமரிப்பு முகாமையானது வருடாந்த பராமரிப்புத் திட்டத்திற்கு இணங்க இந்த வழிமுறை ஊடாக ஆரம்பிக்கப்பட்டது. முறையான திட்டமிடல், முழுமையான பராமரிப்பு வரலாற்றைப் பேணுதல், அறிக்கையிடல் மற்றும் முன்னேற்றக் கணிகாணிப்புகளை செய்வதற்கான வழிமுறைகளை எளிதாக்குதல் என்பன இந்த முறைமையின் பிரதான அம்சங்களாக உள்ளன.



உரு D 2: MVMMS பயனர் இடைமுகம்

### லக்ஷ உயன தொடக்கம் கதுருவெல வரை 33 kV Lynx D/C மின்கோபுர மார்க்கத்தை நிருமாணித்தல்

லக்ஷ உயன தொடக்கம் கதுருவெல வரை 33 kV, Lynx, இரட்டைச் சுற்று, மின்கோபுர மார்க்கத்தின் (7.8 கி.மீ.) நிருமாணமானது விநியோகப் பிரிவு 1 இன் இடைநிலை மின்னழுத்த விநியோகத் திட்டம் - 2016/2025 இற்கேற்ப பூர்த்தி செய்யப்பட்டது. செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு 144 மில்லியன் இலங்கை ரூபாய் ஆகும்.

### புதிய அநுராதபுரம் GSS தொடக்கம் நொச்சியாகம வரையில் 33 kV, Lynx, D/C மின்கோபுர மார்க்கத்தை நிருமாணித்தல்

இந்தச் செயற்றிட்டம் 3 கட்டங்களைக் கொண்டிருந்தது. கட்டம் 1 நொச்சியாகம தொடக்கம் தலாவ வரை - 15 km, கட்டம் 2 தலாவ தொடக்கம் அநுராதபுரம் வரை - 11 km மற்றும் கட்டம் 3 அநுராதபுரம் தொடக்கம் புதிய அநுராதபுரம் GSS வரை - 2.5 km.

செயற்றிட்டத்தின் கட்டம் 1 ஆனது பூர்த்தி அடைந்துள்ளது. கட்டம் II இன் கீழ் கடத்திகளைச் சரமிடும் (conductor stringing) வேலைகள் நடைபெறுகின்றன. (20% சரமிடும் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன). கட்டம் III மின்கோபுர மார்க்கத்தின் வடிவமைப்பு வேலைகள் நிறைவடைந்துள்ளன.

செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு 386.5 மில்லியன் இலங்கை ரூபா ஆகும்.



உரு D 3 : லகஷ உயன - கதுருவெல மார்க்கத்தில் இடம்பெறும் நிருமாண வேலைகள்

### யந்தம்பலாவ PSS இனை விருத்தி செய்தல

யந்தம்பலாவ முதன்மை உபமின் நிலையம் ஆனது 2MVA இலிருந்து 5MVA ஆக விருத்தி செய்யப்பட்டது. செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு 17 மில்லியன் இலங்கை ரூபா ஆகும்.



உரு D 4: யந்தம்பலாவ PSS இல் இடம்பெறும் விருத்தியாக்கல் வேலைகள்

# விநியோகப் பிரிவுகள் (தொடர்ச்சி)

### மன்னம்பிட்டியில் 2SSBB தாங்குசட்டத்தை நிருமாணித்தல்

பொலநறுவை மாவட்டத்தில் உள்ள மன்னம்பிட்டி பிரதேசத்தில் இரண்டு பிரிவு தனித்த பல மின்சுற்றுக் கொண்ட மின்னேகி தாங்குசட்டம் நிருமாணிக்கப்பட்டு, அதிகாரம் வழங்கப்பட்டது. செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு 28.9 மில்லியன் இலங்கை ரூபாய் ஆகும்.

### கொழும்பு நகரில் உள்ள விநியோக உபமின் நிலையங்கள்/ மின்னூட்டித் தூண்கள்/ சிறிய மின்னூட்டித் தூண்களின் புனரமைப்பு

கொழும்பு நகர விநியோக வலையமைப்பு அதேபோன்று காட்சியமைப்புகளின் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்காக விநியோக உபமின் நிலையங்கள்/ மின்னூட்டித் தூண்கள்/ சிறிய மின்னூட்டித் தூண்கள் என்பன புனரமைப்புச் செய்யப்பட்டன.

### வரிசை முகாமைத்துவ முறைமையை அறிமுகப்படுத்தல் (QMS)

2020 ஆம் ஆண்டில் குருநாகல், குளியாப்பிட்டி, சிலாபம் மற்றும் புத்தளம் ஆகிய பிரதேச அலுவலகங்களில் QMS ஆரம்பிக்கப்பட்டது.

### நிகழ்நிலையில் பட்டியலிடும் முறைமையை ஆரம்பித்தல்

2020-01-17 ஆந் திகதி இ.மி.ச. இன் நிகழ்நிலையில் (online) பட்டியலிடும் முறைமை வைபவரீதியாக நீர்கொழும்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது மானி வாசிப்பு மீதான பட்டியலிடல் விபரங்களின் அதே நேர இற்றைப்படுத்தலைத் தருகிறது. மானி வாசிப்பாளர் ஒருவர் மின்சாரப் பட்டியலை விநியோகித்து ஒரு சில செக்கன்களிலேயே மத்திய பட்டியலிடல் முறைமையில் பட்டியல் பற்றிய தரவுகள் இற்றைப்படுத்தப்படுகின்றன. இதனை முன்னர் செய்வதற்கு கிட்டத்தட்ட ஒரு மாத காலம் எடுத்திருந்தது. வாடிக்கையாளர்களால் எந்தவொரு நிகழ்நிலை ஊடகத்தின் ஊடாகவும் இற்றைப்படுத்தப்பட்ட பட்டியலிடல் விபரங்களைப் பார்க்க முடியும். இதனால் செலுத்தப்படாதிருக்கின்ற எந்தவொரு கட்டணப் பட்டியலையும் தீர்ப்பனவு செய்வதற்கு அச்சடிக்கப்பட்ட கட்டணப்பட்டியல் சிட்டை கிடைக்கும் வரை காத்திருக்கின்ற தேவை இல்லை. கோவிட் 19 நோய்ப்பரவலின் தாக்கம் காணப்பட்ட போதிலும் 2020 ஆம் ஆண்டில் அனைத்து மாகாணங்களிலும் நிகழ்நிலை பட்டியலிடல் முறைமை கூட்டிணைக்கப்பட்டதுடன் தற்போது வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. இதனால் நிகழ்நிலையில் கட்டணப் பட்டியல்களுக்குப் பணம் செலுத்துபவர்கள் நிகழ்நிலையிலேயே சரியான நிலுவைத் தொகையைக் கண்டறிய முடிவதுடன் இ.மி.ச. இன் வசூலிப்புக்கும் சிறந்ததாக இருக்கிறது.



**உரு D 5:** நிகழ்நிலை பட்டியலிடல் முறைமை தொடங்கிவைப்பு

### பதுளை - பசறை 33 kV மின்கோபுர மார்க்கத்தில் உள்ள 33 kV மின்கோபுரங்களை இடமாற்றுதல்

பதுளை GSS இலிருந்து ரந்தெனிகல (உமா ஓயா செயற்றிட்டம்) 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணத்திற்குத்



**உரு D 6:** மின்கோபுரத்தை இடமாற்றும் வேலை நடைபெறுதல்

தேவையான மார்க்கத் தடையகற்றல் வசதிகளுக்காக இரண்டு மாத காலப்பகுதியினுள் இரண்டு மின்கோபுரங்கள் இடமாற்றம் செய்யப்பட்டன. செயற்றிட்டத்தின் மொத்தக் கிரயம் 25 மில்லியன் இலங்கை ரூபாய் ஆகும்.

### 2SSBB ஒழுங்குபடுத்தலுக்காக துரக்கந்த தாங்குசட்டத்தை விருத்தி செய்தல்

DD3 இன் இடைநிலை மின்னழுத்த விநியோக முறைமை அபிவிருத்தித் திட்டத்தின்படி, மின்வலுவின் நம்பகத்தன்மையையும் தரத்தையும் மேம்படுத்துவதற்காக இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள துரக்கந்த பிரதேசத்தில் இரண்டு பிரிவு ஒற்றை மின்னேகிச்சட்ட உருக்கிலான தாங்குசட்டமொன்று நிரமாணிக்கப்பட்டது. மேலும், இந்தத் தாங்குசட்டமானது சிறிய நீர் மின்வலு ஆலைகளால் பிறப்பாக்கம் செய்யப்படும் மின்வலுவை புதிதாக நிருமாணிக்கப்பட்ட வேவல்வத்த GSS இற்கு மாற்றுவதற்கு வசதி அளிக்கிறது. இச்செயற்றிட்டத்தின் மொத்தக் கிரயம் 32 மில்லியன் இலங்கை ரூபாய் ஆகும்.

### ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் 4SSBB தாங்குசட்டம் மற்றும் 4 x 5 MVA முதன்மை உபமின் நிலையம் ஆகியவற்றை நிருமாணித்தல்

ஹம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் தொடர்புடைய தொழில் துறைகளுக்கு மின்சார வழங்கலை மேற்கொள்வதற்காக



**உரு D 7:** ஹம்பாந்தோட்டை துறைமுக முதன்மை உபமின் நிலையம்

# விநியோகப் பிரிவுகள் (தொடர்ச்சி)

ஹம்பாந்தோட்டை துறைமுக வளாகத்தில் 4SSBB தாங்குசட்டம் மற்றும் 4 x 5 MVA 33/11 kV முதன்மை உபமின் நிலையம் என்பன நிருமாணிக்கப்பட்டன. இச்செயற்றிட்டத்திற்கான மொத்தக் கிரயம் 250 மில்லியன் இலங்கை ரூபாய் ஆகும்.

### இரத்மலானை தொடக்கம் அங்குலான PSS வரை நிலத்தடி கம்பிவட நிருமாணம்

அங்குலான PSS இன் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்காக இரத்மலானை GSS இலிருந்து அங்குலான PSS வரை, 2 km நீளமான 33 kV நிலத்தடி கம்பிவடம் பதிக்கப்பட்டது. கிடைமட்டத் திசை துளைப்பான் (HDD) ஐப் பயன்படுத்தி காலி வீதிக்குக் குறுக்காக கம்பிவடம் பதிக்கும் பணி வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது. இந்தக் கம்பிவடம் அங்குலான PSS (20 MW) இன் மொத்தக் கொள்ளளவினையும் வழங்கும் இயலுமையைக் கொண்டுள்ளது. இரத்மலானை GSS இன் மின்னூட்டியையும் அங்குலான PSS ஐயும் இணைத்து நிலத்தடி கம்பி வடத்திற்குச் சமாந்தரமாக ஒரு 24 - மைய ஒளியிழை கம்பிவடம் (Core Optical Fiber Cable) பதிக்கப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டத்தின் மொத்தக் கிரயம் 70 மில்லியன் இலங்கை ரூபாய் ஆகும்.




**உரு D 8: கம்பிவடம் பதித்தல் நடைபெறுகிறது**




தம்பபவனி காற்று மின்வலு ஆலை

செயற்பாட்டு மீளாய்வு

# செயற்றிட்டங்கள் பிரிவு

# செயற்றிட்டங்கள் பிரிவு

இலங்கை மின்சார சபையின் செயற்றிட்டங்கள் பிரிவு சகல பெரியளவான மின் பிறப்பாக்கல் மற்றும் மின் பரிமாற்றச் செயற்றிட்டங்களின் (வெளிநாட்டு நிதியுதவி / இலங்கை அரசாங்கம் / இ.மி.ச. இனால் நிதியிடப்படுகின்ற) நடைமுறைப்படுத்தல் நோக்கங்களுக்காக 2010 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. இத்தகைய செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலானது முழு மின்வலு முறைமையினதும் நம்பகத்தன்மையை மேம்படுத்தல், கொள்ளளவை அதிகரித்தல் போன்றவற்றில் பிரதான வகிபாகத்தை வகிக்கின்றன. இந்தப் பிரிவு மேலதிகப் பொது முகாமையாளர் ஒருவரால் தலைமை தாங்கப்படுகிறது. அவரின் கீழ் ஆறு பிரதிப் பொது முகாமையாளர்களும் பதினொரு செயற்றிட்டப் பணிப்பாளர்களும் (வகுப்பு 1 ஐச் சேர்ந்த அதிகாரிகள்), ஒரு மேலதிக நிதி முகாமையாளரும் செயற்றிட்டங்கள் பிரிவின் இலக்குகளை அடைவதற்காகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

நோய்ப் பரவல் நிலைமையின் கீழ், 37 பில்லியன் இலங்கை ரூபாவுக்கும் அதிக பெறுமதியான செயற்றிட்ட வேலைகளை கையாள்வதற்கும் மேற்கொள்வதற்கும் வேண்டியிருந்ததால் 2020 ஆம் ஆண்டு செயற்றிட்டங்கள் பிரிவுக்கு மற்றுமொரு சவால்மிக்க ஆண்டாகத் திகழ்ந்தது.

2020 இல் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்ட நடவடிக்கைகளின் விபரங்கள் கீழ்வருமாறு:

## மன்னார் காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம்

மன்னார் காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் (MWWP) என்பது இலங்கையில் உள்ள இ.மி.ச. இற்குச் சொந்தமான பெரிய அளவு இன்றைய நவீன தொழினுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட முதலாவது காற்று மின்வலு ஆலை ஆகும். இது மன்னார் தீவின் தென்பகுதி கரையோரத்தில் அமைந்துள்ளது. பெரிய அளவிலான மின்வலுப் பிறப்பாக்கத்தை ஒருங்கிணைப்பதில் ஏற்படும் சிரமங்களைச் சமாளிக்கும் நோக்கில் இ.மி.ச. ஆனது 'பகுதியளவில் அனுப்பத்தக்க' காற்றாலை மின்வலு பற்றிய ஒரு புதிய எண்ணக்கருவை முன்னெடுத்திருந்தது.

உலகப் புகழ்பெற்ற டேனி' காற்று விசையாழித் தயாரிப்பாளரான வெஸ்டாஸ் ஆசியா பசிபிக் AS நிறுவனம் EPC ஒப்பந்தகாரராக இருந்தது. இச்செயற்றிட்டம் ஒவ்வொன்றும் 3.45 MW கொண்ட 90 m உயரத்தில் நிறுவப்பட்ட 30 காற்று விசையாழிகளை உள்ளடக்கியுள்ளது. காற்றாலைப் பண்ணையில் மொத்தமாக நிறுவப்பட்டுள்ள கொள்ளளவு 103.5 MW ஆகும். டென்மார்க் நாட்டின் COWI AS நிறுவனம் இச்செயற்றிட்டத்திற்கான தொழினுட்ப உதவிகளை வழங்கியது.

மன்னார் காற்றாலை மின்வலுச் செயற்றிட்டத்தின் முதலாவது கட்டம் 2020-12-08 ஆந் திகதி வலுவூட்டப்பட்டது. இது இலங்கையின் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தியில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகக் கருதப்படுகிறது. இது தூய மின்சாரத்தை உற்பத்தி செய்தல் மற்றும் புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான மின் பிறப்பாக்கத்தை இடம்பெயர்த்தல் ஆகியவை தொடர்பான இ.மி.ச. இன் நீண்ட கால அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தச் செயற்றிட்டம் 2019 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நிகழ்ந்த உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் மற்றும் 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து உலகை ஆக்கிரமித்த கோவிட் 19 நோய்ப் பரவல் வரையிலான பல பேரிடர்களுக்கு மத்தியில் செயற்படுத்தப்பட்ட ஒன்றாகக் காணப்படுகிறது. மக்களின் இயல்பான வாழ்க்கை, பயணங்கள், சமூக இடைத்தொடர்புகள் போன்றவை சாத்தியமில்லாதிருந்த சூழ்நிலையில் 2020 ஆம் ஆண்டிற்குள் செயற்றிட்டத்தின் முதலாவது கட்டத்தை நிறைவேற்றுவது என்பது ஒரு பெரிய சாதனையாகவும் அதே நேரம் கடினமானதொன்றாகவும் காணப்பட்டது. இந்தச் செயற்றிட்டம் பொருளாதார நடவடிக்கைகளின் முழுமையான நிறுத்தத்தைத் தாங்க வேண்டியிருந்ததுடன் பல சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு உள்ளேயும் இலங்கைக்கு வெளியேயுமான நிருவாக மற்றும் நிதிசார் தொழிற்பாடுகளின் சீர்குலைவுகளையும் தாங்க வேண்டியிருந்தது.

செயற்றிட்ட முகாமை, செயற்றிட்டப் பணியாளர்கள், பிரதான ஒப்பந்தகாரர், அதன் BOP உப ஒப்பந்தகாரர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்பும் விடாமுயற்சியும் இதன் வெற்றிக்கான பாதையை அமைத்திருந்தன.

அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய தொலைதூர இடமொன்றில், கடுமையான காலநிலை, இரவு, பகலாக தொடர்ச்சியான வேலை, சுட்டெரிக்கும் வெயில், கொட்டும் மழை மற்றும் கடுமையான சூறாவளி போன்றவற்றை செயற்றிட்டப் பணியாளர்கள் துணிச்சலுடன் எதிர்கொள்ள வேண்டியிருந்த அதே வேளை, தளத்தின் பௌதிக நிலைமைகளும் சுற்றுச்சூழலும் வலிமையான எதிரிகளாக மாறியிருந்தன.

## விரிநில நீர் மின்வலுச் செயற்றிட்டம்

கொழும்பில் இருந்து வட - கிழக்காக கிட்டத்தட்ட 90 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள விரிநில நீர் மின்வலுச் செயற்றிட்டம் (BHPP) ஆனது கித்துல்கல நகருக்கு அருகில் களனி ஆற்றில் கட்டப்பட்டுள்ள ஒரு நீரோட்ட வகை செயற்றிட்டம் ஆகும். இந்தச் செயற்றிட்டத்தின் பிரதான நோக்கம் தற்போதிருக்கின்ற பொல்பிட்டிய மின்வலு நிலையத்தில் நீரோட்டத்தில் உள்ள நீர்மின் ஆற்றலை அறுவடை செய்வதாகும். இச்செயற்றிட்டம் 2 X 17.5 MW என்ற நிறுவப்பட்ட கொள்ளளவைக் கொண்டிருக்கும். மின்வலு ஆலையின் மூலம் வருடாந்தம் 126 GWh மின் சக்தியைப் பிறப்பாக்கம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கித்துல்கல பகுதியில் உள்ள படகுச் சவாரி விளையாட்டைப் பாதுகாப்பதற்காக உறுதியான நீர் விடுவிப்பைப் பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது,



**உரு P 1:** மன்னார் காற்றாலை மின்வலுச் செயற்றிட்டத்தின் கண்கவர் காட்சி



**உரு P 2:** மின்வலு இல்லம்

# செயற்றிட்டங்கள் பிரிவு (தொடர்ச்சி)

இதன் விளைவாக வருடாந்த சக்திப் பிறப்பாக்கத்தில் ஒரு குறைவு ஏற்படும். பிறப்பாக்க இழப்பினைக் குறைக்கும் வகையில் நீர் விடுவிப்பானது ஒரு சிறியளவான நீர் மின்வலு ஆலையூடாகச் செய்யப்படுகிறது.

சீன தேசிய மின் உபகரணக் கூட்டுத்தாபனம் (CNEEC) செயற்றிட்டத்தின் பிரதான ஒப்பந்தகாரராகத் தெரிவு செய்யப்பட்டது. மொத்தச் செயற்றிட்டச் செலவு 82 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். இதற்கான நிதி சீன கைத்தொழில் மற்றும் வர்த்தக வங்கி (ICBC), இலங்கையின் ஹட்டன் நெஷனல் வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுகிறது.

ஒப்பந்தகாரர் தளத்திற்கு திரட்டப்பட்டதுடன் 2013 ஆகஸ்ட்டில் நிருமாண வேலைகள் தொடங்கப்பட்டன. பிரதான அணை, பிரதான சுரங்கம், திசைதிருப்பும் சுரங்கம், மின்வலு இல்லம் மற்றும் ஆளி முற்றத் தளம் ஆகியவற்றின் நிருமாண வேலைகள் சமாந்தரமாக நடைபெறுகின்றன. செயற்றிட்டத்தை 2021 நடுப்பகுதிக்குள் நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. விரிநில நீர் மின்வலுச் செயற்றிட்டமானது இலங்கையில் CDM பதிவினைப் பெற்றுக் கொண்ட முதலாவது பெரிய அளவிலான நீர் மின்வலுச் செயற்றிட்டமாகும்.

## மொரகொல்ல நீர் மின்வலுச் செயற்றிட்டம்

புதைபடிவ எரிபொருள் மூலமான மின்வலுப் பிறப்பாக்கமானது கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக எளிதில் சுரண்டப்படக்கூடிய நீர் மின்வலு இடங்கள் ஏற்கனவே பயன்படுத்தப்படுவதன் காரணமாக நீர் மின்வலுவையும் விட மிஞ்சிச் செல்கிறது. புதைபடிவ எரிபொருள் மூலமான மின்வலுப் பிறப்பாக்கத்தின் பாவனையைக் குறைப்பதற்காக இலங்கை அரசாங்கத்தினால் அடையாளம் காணப்பட்ட பல்வேறு நீர் மின்வலுச் செயற்றிட்டங்களில் மொரகொல்ல நீர் மின்வலுச் செயற்றிட்டமும் (MHPP) ஒன்றாகும். நிதியுதவியை ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) வழங்குவதுடன் 30.5 MW நிறுவப்பட்ட கொள்ளளவைக் கொண்ட இச்செயற்றிட்டத்தின் மூலம் வருடாந்தம் 100 GWh சக்தியைப் பிறப்பாக்கம் செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.



உரு P3: மின்வலு இல்லத்தின் நிருமாண வேலைகள்

EIA ஆனது செயற்றிட்டத்தை அங்கீகரிக்கின்ற அதிகாரசபையான இலங்கை மகாவலி அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

செயற்றிட்டத்திற்கான ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டதுடன் இயந்திரவியல் மற்றும் மின்னியல் வசதிகளுக்கான வடிவமைப்பு வேலைகளும் பிரதான குடியியல் வேலைகளுக்கான மேற்பார்வை வேலைகளும் நடைபெறுகின்றன.

செயற்றிட்டத்தால் பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கான (PAPs) மீள்குடியேற்ற வீட்டுத் திட்டத்தின் நிருமாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் செயற்றிட்டத்தால் பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கான (PAPs) இருபது வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

செயற்றிட்டப் பாகங்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| பாகம் | ஒப்பந்தகாரர் | தற்போதைய நிலை |
|---|---|---|
| **துண்டம் - A1- முன்னாயத்த வேலைகள்** | விவி கருணாரத்ன அன்ட் கம்பனி<br>2018 மார்ச் 27 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. | மகாவலி ஆற்றுக்குக் குறுக்கே ஆற்றிடைப் பாலத்தை நிருமாணிப்பதுடன் மின் இல்லத்திற்கான அணுகு வழியின் நிருமாணமும் தொழில் தருநர்களுக்கான அலுவலகக் கட்டட நிருமாணமும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.<br>ஒட்டுமொத்த முன்னேற்றம் ஏறத்தாழ 55%. |
| **துண்டம் A2- பிரதான குடியியல் வேலைகள்** | சீன ஜெஜுவா குழுமக் கம்பனி<br>2019 அக்டோபர் 04 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. | அவசரத் தேவைக்காக உருவாக்கப்படும் பாலம் உள்ளிட்ட அணைக்கட்டிற்கான தற்காலிக அணுகு வழி, ஒப்பந்தகாரருக்கான முகாம் கட்டடம், என்பன பெரும்பாலும் பூர்த்தி அடைந்துள்ளன. அணைக்கட்டின் இடது மற்றும் வலது கரைகளின் அகழ்வு வேலைகள் என்பன நடைபெறுகின்றன. திசைதிருப்பும் சுரங்கத்தை குடையும் வேலைகள் கீழ்ப்பகுதி அந்தத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குடைவு வேலைகளும் மின்வலு இல்லத் தளத்திற்கான தற்காலிக அணுகு வழிகளின் நிருமாண வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (உரு G03).<br>வேலையின் ஒட்டுமொத்த முன்னேற்றம் ஏறத்தாழ 7.5% ஆகும். |
| **துண்டம் B - இயந்திரவியல் மற்றும் மின்னியல் வசதிகள்** | டோன்ங்பேங் எலக்ரிக் இன்டநெ'னல் கோப்பரேஷன், சீனா.<br>2020 மே 13 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. | ஒப்பந்த உடன்படிக்கை 2020 யூன் 30 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது. ஒப்பந்தத்தின் செயல்வலுப் பெறும் திகதி 2020 அக்டோபர் 02 ஆகும். ஒப்பந்தகாரர் வடிவமைப்பு வேலைகளை ஆரம்பித்துள்ளார். |

# செயற்றிட்டங்கள் பிரிவு (தொடர்ச்சி)

### உமா ஓயா பலநோக்கு அபிவிருத்திச் செயற்றிட்டம்

உமா ஓயா பலநோக்கு அபிவிருத்திச் செயற்றிட்டம் (UOMDP) என்பது நீர்பாசனத்திற்காக உமா ஓயா ஆற்றுப் படுகையில் இருந்து கிரிந்தி ஓயா ஆற்றுப் படுகைக்கு ஆண்டொன்றுக்கு 168 MCM நீரை திசைதிருப்புகின்ற இரு பக்கமும் இடமாற்றக்கூடிய (டிரான்ஸ்பேசின்) நீர் திசைதிருப்பும் செயற்றிட்டம் ஒன்றுடன் இணைந்த நீர் மின் சக்தி பிறப்பாக்கல் செயற்றிட்டம் ஒன்றாகும். செயற்றிட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு 514 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும்.

இச்செயற்றிட்டம் 35 m உயரமுடைய புகுல்பொல RCC அணைக்கட்டு, 50 m உயரமான டைரபா RCC அணைக்கட்டு ஆகியவற்றை உள்ளடக்குகிறது. இரண்டு நீர்த்தேக்கங்களும் 3.7 கிலோமீற்றர் நீளமான தொடுப்புச் சுரங்கம் ஒன்றின் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. டைரபா உள்ளெடுப்பின் பிரதான நீர் வழிப்பாதை ஆனது 15.1 கிலோமீற்றர் நீளமுள்ள தலைப்பகுதிச் சுரங்கம் (HRT), 630 மீற்றர் உயரமான உருக்கிலான நிலைக்குத்து அழுத்தத் தண்டு, 2 X 60 MW நீர்மின் பிறப்பாக்கிகள் மற்றும் 3.6 கிலோமீற்றர் நீளமான வால்ப்பகுதிச் சுரங்கம் ஆகியவற்றின் வழியாக செக்கனுக்கு 19.50 கன மீற்றர் நீரை அலிகொட்டா-அரா அணைக்கு வழங்குகிறது.

உமா ஓயா பல நோக்கு அபிவிருத்திச் செயற்றிட்டமானது ஆரம்பத்தில் நீர்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இது தற்போது நீர்பாசன அமைச்சின் செயல் எல்லையின்கீழ் வருகின்றது. செயற்றிட்டத்தை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படும் திகதி 2021 யூன் ஆகும். ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட பௌதிக ரீதியான முன்னேற்றம் 96% ஆகும்.

பின்வரும் நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

#### உமா ஓயா மின்வலு இல்லத்தின் உலர் அதிகாரம் வழங்குதல் பூர்த்தி

அலகு 1 மற்றும் அலகு 2 ஆகியவற்றின் பிரதான உள்வாயில் வால்வு (MIV), விசையாழியும் ஆளியும், மின் பிறப்பாக்கி, அருட்டல், மின் பிறப்பாக்கியின் துணை உறுப்புகள், AC முறைமை, DC முறைமை, நீர் குளிர்மைப்படுத்தும் முறைமை, நெருக்கப்பட்ட காற்று முறைமைகள் ஆகியன உள்ளடங்கலாக உமா ஓயா மின்வலு இல்லத்தின் பிரதான உபகரணங்களுக்கு சகல சோதனைகளும் செய்யப்பட்டு அவற்றை இயக்குவதற்கான அதிகாரம் வழங்கும் செயற்பாடுகள் 2020 பெப்ரவரி மாதத்தினுள் பூர்த்தி செய்யப்பட்டன.

மூல உபகரணத் தயாரிப்பாளர்களின் பரிந்துரைகளுடன் AC முறைமை, DC முறைமை, நீரைக் குளிர்விக்கும் முறைமை மற்றும் நெருக்கப்பட்ட காற்று முறைமை ஆகியவற்றின் சகல சோதனைகளும் நிறைவு பெற்றதன் பின்னரான அவற்றை இயக்குவதற்கான அதிகாரம் அளித்தல் ஆனது ஈரானியன் EPC ஒப்பந்தகாரர் பராப் (FC) இனால் மேற்கொள்ளப்பட்ட அதே வேளை பிரதான உள்வாயில் வால்வு (MIV), விசையாழியும் ஆளியும், மின்பிறப்பாக்கி, அருட்டல் மற்றும் மின்பிறப்பாக்கியின் துணையுறுப்புகள் ஆகியவற்றின் சகல சோதனைகளும் நிறைவு பெற்றதன் பின்னரான அவற்றை இயக்குவதற்கான அதிகாரம் அளித்தல் ஆனது ஒஸ்ரியாவின் அன்ட்ரிட்ஸ் ஹைட்ரோவினால் மேற்கொள்ளப்பட்டது.



**உரு P 4: உமா ஓயா மின்வலு நிலையத்தின் சோதனைகளின் பின்னரான இயக்குவதற்கான அதிகாரம் வழங்கல்**

#### 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்திற்கான பணிகளையும் ஒற்றை முனை மின் கோபுரங்களை நாட்டுவதற்கான அடித்தளமிடும் பணிகளையும் ஆரம்பித்தல்

132 kV மின் பரிமாற்ற மார்க்கத்திற்கான மின்கம்பம் நாட்டும் பணிகள் 2020 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் இடம்பெற்றன. மேலும், பதுளை ஆளிமுற்றத்திற்கு அருகில் உமா ஓயா மின்வலு நிலையத்தை இணைக்கின்ற 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் முடிவிடத்தில் மூன்று விசேடமான ஒற்றை முனை மின் கோபுரங்களை நாட்டுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. ஒற்றை முனை இணைப்புக் கோபுரங்கள் இலங்கையில் பயன்படுத்தப்படுவது இதுவே முதல் முறை ஆகும். அந்தக் கோபுரங்களுக்கான அடித்தளத்தின் நிருமாணப் பணிகள் 2020 டிசெம்பரில் ஆரம்பிக்கப்பட்டன.



**உரு P 5: 132 kV மின் பரிமாற்ற மார்க்கக் கோபுரம் நாட்டுதல்**

#### புகுல்பொல அணைக்கட்டின் பூர்த்தி

புகுல்பொல மற்றும் டைரபா என்பன உமா ஓயா பலநோக்கு அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் நிருமாணிக்கப்பட்ட இரண்டு நீர்த்தேக்கங்கள் ஆகும். புகுல்பொல அணைக்கட்டை அமைத்தல் மற்றும் H&M அதிகாரம் அளித்தல் நடவடிக்கைகள் ஆகியன 2020 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் நிறைவு பெற்றன.



**உரு P 6: புகுல்பொல அணையின் வான்வழித் தோற்றம்**

### திரவநிலை இயற்கை எரிவாயுச் செயற்றிட்டம் (LNGP)

2018 ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) உதவியுடன் கொழும்பை மையமாகக் கொண்ட மின்வலு ஆலைகளுக்கு திரவநிலை இயற்கை எரிவாயுவை (LNG) பயன்படுத்துவதற்கான முன் சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு நாட்டிலுள்ள மின்வலுத் துறைக்கு இயற்கை எரிவாயுவை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளதுடன் அதற்கிணங்க LNG உட்கட்டமைப்பின் அபிவிருத்திக்குத் தேவையான தொழினுட்ப வடிவமைப்புகள், இடம் மற்றும் ஒரு பொருத்தமான வணிக மாதிரியையும் பரிந்துரைத்துள்ளது. மின் பிறப்பாக்கத்திற்கு LNG ஐப் பயன்படுத்துவதற்கு கெரவலப்பிட்டிய கடலோரத்தில் மிதக்கும் களஞ்சியம் மற்றும் திரவநிலை இயற்கை எரிவாயுவை வளிமண்டல வெப்பநிலையில் உள்ள இயற்கை எரிவாயுவாக மாற்றும் அலகினை (மறுசீரமைப்பு அலகு) (FSRU) நங்கூரமிடுதல் சிறந்த தெரிவாக இருக்கும் என முன்சாத்தியவள ஆய்வு முடிவு செய்திருந்தது.

# செயற்றிட்டங்கள் பிரிவு (தொடர்ச்சி)

முன்சாத்தியவள ஆய்வைத் தொடர்ந்து, விரிவான சாத்தியவள ஆய்வினை முன்னெடுப்பதற்காக இ.மி.ச. சகாக்களுடன் இணைந்து பணியாற்றுவதற்காக ADB இனால் பிரைஸ்வாட்டர்ஹவுஸ்கூப்பர்ஸ் (PwC) இன் ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டனர்.

லங்கா நீரியல் நிறுவகம் மற்றும் போர்ஸ் டெக்னோலொஜி (டென்மார்க்) என்பன கடல்களின் சங்கமம் / நீரியக்க ஆய்வுகள் மற்றும் கடல்களின் சங்கமம்/ நீரியக்க நிலைமைகளின் பல்வேறு மாதிரி அமைப்புகளின் கீழான கப்பல் இயக்கங்களின் எண்ணிமையான உருவகப்படுத்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளன. அதே சமயத்தில், இ.மி.ச. உம் PwC இன் ஆலோசகர்களும் இணைந்து கீழ்வருவனவற்றுக்கு சர்வதேச போட்டி விலைமனு ஊடாக முன்மொழிவுகளைக் கோருவதற்கான செயற்றிட்ட உடன்படிக்கைகள் உள்ளிட்ட முன்மொழிவு ஆவணத்திற்கான கோரிக்கை ஒன்றை விருத்தி செய்தனர் :

- கெரவலப்பிட்டிய கடலோரத்தில் FSRU மற்றும் நங்கூரமிடும் முறைமையை அமைத்தல்
- துணைக் கடல் மற்றும் கடலோர குழாய் அமைப்பு முறைமையை நிருமாணித்தல்
- FSRU இற்கான LNG மூலமிடுதல்

2020 யூன் மாதத்தில், LNG ஐப் பயன்படுத்தும் செயற்றிட்டத்திற்கான அங்கீகாரம் அமைச்சரவையினால் வழங்கப்பட்டதுடன் FSRU மற்றும் நங்கூரமிடும் முறைமையை அமைப்பதற்கும் FSRU இற்கு LNG ஐப் பெறுவதற்கும் இ.மி.ச. இற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

கெரவலப்பிட்டிய கடலோரத்திலிருந்து 5 கிலோமீற்றர் தொலைவில் நங்கூரமிடப்படும் முன்மொழியப்பட்ட இந்த FSRU ஆனது களனிதிஸ்ஸ மற்றும் கெரவலப்பிட்டிய ஆகிய இடங்களில் தற்போதிருக்கின்ற மின்வலு ஆலைகளுக்கும் அதே போல் எதிர்கால இணைந்த சுற்று மின்வலு ஆலைகளுக்கும் LNG இனை வழங்குவதுடன் அதிகதிகமான சுற்றுச்சூழல் நன்மைகளை தேசத்திற்கு வழங்கக்கூடியதாகவும் இருக்கும்.

### திருகோணமலை நிலக்கரி மின்வலுச் செயற்றிட்டம் (TCPP)

யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையின் (JICA) உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மின்வலு முறைமையின் மேம்பாட்டிற்குத் தேவையான ஹபரணை - வெயாங்கொடை மின் பரிமாற்ற மார்க்கச் செயற்றிட்டத்திற்கென 500 MW மின்வலு ஆலை ஒன்றை சம்பூரில் அமைப்பதற்கு முன்மொழியப்பட்ட போதிலும் அது இடைநிறுத்தப்பட்டது.

செயற்றிட்டத்தின் துண்டம் A இல் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு புதிய 220 kV/ 132 kV / 33 kV ஹபரணை மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் நிருமாணம் மற்றும் வெயாங்கொடை மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் விருத்தியாக்கம் என்பன 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 84% முன்னேற்றத்தைப் பதிவு செய்திருந்தன.

செயற்றிட்டத்தின் துண்டம் B இல் மேற்கொள்ளப்படும் வெயாங்கொடை தொடக்கம் புதிய ஹபரணை மின்தொகுப்பு உபமின் நிலையம் வரையிலான 148 km, 220 kV மின் பரிமாற்ற மார்க்கம் மற்றும் அதனோடிணைந்த மார்க்கத் திசைதிருப்பல்கள் என்பவற்றின் நிருமாணப் பணிகள் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 85% முன்னேற்றத்தைப் பதிவு செய்திருந்தன.



**உரு P 7: 220/132/33kV புதிய ஹபரணை மின்தொகுப்பு உபமின் நிலையம்**

### சீத்தாவாக்கை கங்கை நீர் மின்வலுச் செயற்றிட்டம்

செயற்றிட்டத்தின் விபரமான வடிவமைப்பும் வரைவு விலைமனு ஆவணங்களும் 2020 சனவரியில் பூர்த்தி செய்யப்பட்டன. மேலும், நட்ட ஈடு மற்றும் காணி கையகப்படுத்தல்கள், இறுதிப்படுத்தப்பட்ட மீள்குடியேற்ற நடவடிக்கைத் திட்டம் ஆகியன தொடர்பில் 2020 யூனில் சபையால் அங்கீகாரம் அளிக்கப்பட்டதுடன் இ.மி.ச. சட்டத்தின் ஏற்பாடுகளின்படி காணி கையகப்படுத்தல் கட்டளை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்கள் 2020 ஆகஸ்ட்டில் பிரசுரிக்கப்பட்டன. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின் இறுதி அறிக்கை அங்கீகாரத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இறுதி அங்கீகாரமானது கோவிட் 19 நோய்ப் பரவல் பிரச்சினைகள் காரணமாக இன்னும் முடிவுறாதுள்ளது. எவ்வாறாயினும், மாற்று வழிமுறை ஒன்றின் ஊடாக இ.மி.ச. இன் சொந்தச் செயற்றிட்டம் ஒன்றாக இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (கட்டம் 2)

பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 2 ஆனது மின் பரிமாற்ற உட்கட்டமைப்பு மேம்பாடு, இடைநிலை மட்ட மின்னழுத்த வலைமைப்பின் வினைத்திறன் மேம்பாடு அத்துடன் திறன் மின்தொகுப்பு மற்றும் மானியிடல் முன்னோடி உப செயற்றிட்டத்துடன் தொடர்புடைய கேள்விப் பக்க முகாமைத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

செயற்றிட்டத்தின் நோக்கெல்லையானது காற்றாலை மின்வலுச் செயற்றிட்டத்திலிருந்து பிறப்பிக்கப்படும் சக்தியை வெளியெடுப்பதற்காக மன்னாரில் 220 kV மின் பரிமாற்ற அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்தல், பொல்பிட்டிய தொடக்கம் ஹம்பாந்தோட்டை வரையில் 220 kV மின் பரிமாற்ற மார்க்கம் மற்றும் ஹொரணை தொடக்கம் பாதுக்கை வரையில் 132 kV மின் பரிமாற்ற மார்க்கம் ஆகியவற்றை நிருமாணித்தல், ஹபரணை தொடக்கம் வாழைச்சேனை வரையிலான 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் இரண்டாம் சுற்று இழுத்துக்கட்டல் வேலைகளை மேற்கொள்ளுதல், ஹம்பாந்தோட்டையில் 220 kV மின்தொகுப்பு உபமின் நிலையம், 132/33 kV கொழும்பு B உபமின் நிலையம் மற்றும் தெஹிவளை, ஹொரணை, பாதுக்கை, கொலன்னாவை, மாதம்பே மற்றும் கொட்டுகொட மின்தொகுப்பு உபமின் நிலையங்களை விருத்தி செய்தல், பியகம மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் 220/33 kV கொள்ளளவை மேம்படுத்தல், அநுராதபுர பிரதேச எத்தகலவில் இடைநிலை மின்னழுத்த (MV) விநியோகத்தை மேம்படுத்தல், கப்பல்துறை தொடக்கம் சீனக்குடா வரை 33 kV மின் மார்க்கத்தை நிருமாணித்தல், மேல் மற்றும் தென் மாகாணங்களில் மின்னழுத்த மேம்பாடு மற்றும் கட்டுப்பாட்டிற்கான வலையமைப்பை விருத்தி செய்தல் ஆகியவற்றை உள்ளடக்குகிறது. அத்துடன் விநியோக மற்றும் கேள்விப் பக்க முகாமைத்துவப் பகுதிகளையும் புத்தாக்கமான திறன் மின்தொகுப்பு மற்றும் மானியிடல் முன்னோடி உப செயற்றிட்டம் ஒன்றை விருத்தி செய்வதையும் இது உள்ளடக்கியுள்ளது.

ஊவா மாகாணம் தவிர்ந்த இலங்கையில் உள்ள ஏனைய சகல மாகாணங்களும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மின் பரிமாற்ற, விநியோக மற்றும் கேள்விப் பக்க முகாமைத்துவ பகுதிகளின் நடைமுறைப்படுத்தலின் மூலம் நேரடி நன்மைகளைப் பெறவுள்ளன.

கட்டம் 2 இற்கான மொத்த முதலீட்டுக் கிரயம் 260 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். ADB ஆனது 150 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதுடன் AFD ஆனது 30 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கும். மீதித் தொகை இ.மி.ச. இனால் இடப்படுகிறது. இச்செயற்றிட்டம் 2021 டிசெம்பரில் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மின் பரிமாற்ற உட்கட்டமைப்பு மேம்பாட்டு பகுதிக்கான கிரயம் 154.6 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும்.

மின் பரிமாற்ற உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பகுதியில் மூன்று பொதிகளின் கீழ் 8 துண்டங்கள் காணப்படுகின்றன. இந்த ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டதன் மீது அண்ணளவாக 31 மில்லியன் அமெரிக்க டொலர் சேமிக்கப்பட்டதுடன் இந்தச் சேமிப்பைப் பயன்படுத்தி மேலும் இரண்டு பொதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

# செயற்றிட்டங்கள் பிரிவு (தொடர்ச்சி)

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பொதி 8 இன் நோக்கெல்லை, அதிகளவான மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல்களுக்கு வசதியளிப்பதற்காகவும் பிரதேசத்தில் அமைந்துள்ள தொழில்துறைகள் காரணமாக அதிகரிக்கின்ற மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் சுன்னாகம், நடுக்குடா, ஆனியகந்தை, பன்னல மற்றும் அம்பலாங்கொடை ஆகிய இடங்களில் காணப்படும் ஐந்து உபமின் நிலையங்களை விருத்தி செய்வதையும் உள்ளடக்கியுள்ளது.



**உரு P 8:** மன்னார் - நடுக்குடா மின்பரிமாற்ற மார்க்கம்

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பொதி 9 இன் நோக்கெல்லையானது, கெரவலப்பிட்டியில் அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள LNG ஆலைகளில் இருந்து சக்தியை உறிஞ்சுவதற்கு வசதியளிப்பதற்காக கெரவலப்பிட்டியில் 220 kV GIS இனை நிருமாணிப்பதை உள்ளடக்குகிறது.

பொதி 1 இன் கீழான மன்னார் - நடுக்குடா 220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணப் பணிகள் 2020 ஆகஸ்ட்டில் பூர்த்தி செய்யப்பட்டதுடன், நடுக்குடா 220/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் நிருமாணப் பணிகள் 2021 ஏப்ரலில் பூர்த்தி அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.



**உரு P 9:** புதிய பொல்பிட்டிய - ஹம்பாந்தோட்டை மின் பரிமாற்ற மார்க்கம்



**உரு P 10:** தெஹிவளை மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் 132 kV/ 33 kV 31.5 MVA மின்மாற்றியைப் பொருத்துதல்



**உரு P 11:** பியகம 220 / 33 kV GS இல் கட்டுப்பாட்டு நிலையக் கட்டடத்தின் நிருமாணம்

பொதி 2 இன் கீழ் ஹம்பாந்தோட்டையில் மேற்கொள்ளப்படும் 220 kV அபிவிருத்திகள் அண்ணளவாக 60% பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அது 2021 செப்ரம்பரில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆண்டின் இறுதியில் பொதி 3 இன் கீழ் மேற்கொள்ளப்படும் ஆறு GSS (துண்டம் A2) களை விருத்தி செய்யும் பணிகள் 70% முன்னேற்றத்தைப் பதிவு செய்திருந்த அதே வேளை, கொழும்பு B GS இன் நிருமாணப் பணிகள் 25% முன்னேற்றத்தையும் 220/33 kV பியகம GS இன் நிருமாணப் பணிகள் 73% முன்னேற்றத்தையும் பதிவு செய்திருந்தன.

புதிதாகச் சேர்க்கப்பட்ட பொதிகளுக்கான விலைகோரல்கள் மிதக்க விடப்பட்டு, பொதி 8 இற்கான விலைமனு கோரல் மூடப்பட்டு ஒப்பந்தமும் வழங்கப்பட்டதுடன் பொதி 9 இன் பணிகள் தொடங்கப்பட்டன.

மீளாய்வு செய்யப்படும் ஆண்டின் காலப்பகுதியில் செயற்றிட்ட வேலைகளின் முன்னேற்றம் திருப்திகரமானதாக அமைந்திருந்த போதிலும், கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக ஏற்பட்ட தாமதத்தைச் சமாளிப்பதற்கும் வேலைகளில் சேர்க்கப்பட்ட நோக்கொல்லையைப் பூரணப்படுத்துவதற்கும் கடன்கள் மற்றும் ஒப்பந்தங்களுக்கான நீடிப்புகள் தேவைப்படும்.

## தேசிய மின் பரிமாற்றம் மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தியும் வினைத்திறன் மேம்பாட்டிற்குமான செயற்றிட்டம் (NTDND & EIP)

இந்தச் செயற்றிட்டத்திற்கு கடன் இல. SLP-113 இன் கீழ் JICA அமைப்பினால் நிதியுதவி அளிக்கப்பட்டது. செயற்றிட்டம் நான்கு பொதிகளை உள்ளடக்கியுள்ளது.

# செயற்றிட்டங்கள் பிரிவு (தொடர்ச்சி)

பொதி 1 ஆனது 132 kV/ 220 kV / 400 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணத்திற்கானதாகும். பொதிக்கான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், நிருமாண முன்னேற்றம் ஆண்டின் இறுதியில் 19% ஆகப் பதிவாகியிருந்தது.

பொதி 2 ஆனது 220/132 kV கிரிந்திவெல ஆளி நிலையம், 132/33 kV கிரிந்திவெல மின்தொகுப்பு உபமின் நிலையம், 132/33 kV பத்தரமுல்ல உள்ளக உபமின் நிலையம் ஆகியவற்றின் நிருமாணங்கள் மற்றும் தற்போதுள்ள பல உபமின் நிலையங்களை விருத்தி செய்யும் பணிகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. பொதிக்கான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் நிருமாணங்களின் முன்னேற்றம் ஆண்டின் இறுதியில் 30% ஆகக் காணப்பட்டது.

பொதி 3 ஆனது கொத்மலை GSS தொடக்கம் புதிய பொல்பிட்டிய GSS வரையான 220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம் மற்றும் பொல்பிட்டிய GSS தொடக்கம் புதிய ஹபரணை GSS வரையிலான 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. பொதிக்கான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் நிருமாணங்களின் முன்னேற்றம் ஆண்டின் இறுதியில் 25% ஆகப் பதிவாகியிருந்தது.

பொதி 4 ஆனது முதன்மை உபமின் நிலையங்களின் நிருமாணம், தெஹிவளை, கல்கிசை மற்றும் பத்தரமுல்ல ஆகிய இடங்களில் SCADA/DAS உடன்கூடிய 11 kV கம்பிவடங்களின் நிருமாணம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. பொதிக்கான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் நிருமாணங்களின் முன்னேற்றம் ஆண்டின் இறுதியில் 5% ஆகப் பதிவாகியிருந்தது.

### பாரிய கொழும்பு மின் பரிமாற்றமும் விநியோகமும் மற்றும் இழப்புக் குறைத்தல் செயற்றிட்டம் (GCT&DLRP)

கொழும்பு நகர நிலத்தடி மின் பரிமாற்ற முறைமையின் கொள்ளளவானது GCT&DLRP இனைப் பூர்த்தி செய்வதன் மூலம் இரட்டிப்பாக்கப்படும். வேலையின் நோக்கெல்லையின் நிறைவேற்றத்திற்கு மேலதிகமாக, கெரவலப்பிட்டிய GSS இற்கும் கொழும்பு L GSS இற்குமிடையில் மற்றுமொரு ஒற்றைச் சுற்று 220 kV, 1600 mm2, 3 x ஒற்றை மைய XLPE காப்பிடப்பட்ட நிலத்தடி கம்பிவட முறைமையைப் பதிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கம்பிவடம் மின் பரிமாற்ற வலையமைப்பின் கொள்ளளவை மேலும் உயர்த்துவதுடன், கெரவலப்பிட்டியில் நிருமாணிக்கப்படவுள்ள புதிய LNG ஆலைகளால் பிறப்பிக்கப்படும் மின்வலுவையும் இடமாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும். மேலும், CT கொள்ளளவுகளில் தற்போது காணப்படுகின்ற முட்டுக்கட்டைகளை அகற்றுவதற்கு கொழும்பு E மற்றும் F GSS களின் பாதுகாப்புத் திட்டம் மற்றும் மின் மார்க்க நுழைவழி மின்னேகிச் சட்ட CT களின் மாற்றீடு என்பன இதே செயற்றிட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும்.

இதற்கான ஒப்பந்தம் ABB பவர் கிறிட்ஸ் என்ற ஜேர்மனிய நிறுவனம் மற்றும் "ஸீடர் எலக்ரிக் லங்கா (தனி) நிறுவனம் ஆகியவற்றுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதுடன் செயற்றிட்டத்தை 2021 செப்ரெம்பர் மாதத்தினுள் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

### மின்வலு முறைமையின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தும் செயற்றிட்டம்

மின்வலு முறைமையின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தும் செயற்றிட்டமானது (PSRSP) நம்பகமான மற்றும் தடையற்ற மின் வழங்கலை நிறைவேற்றுவது, நுரைச்சோலை லக்விஜய மின்வலு ஆலையினால் பிறப்பிக்கப்படும் மின்வலுவை வெளியெடுப்பது மற்றும் நாட்டின் அபிவிருத்திக்கான உபாயத்தைச் சமாளிப்பது போன்றவற்றை நோக்காகக் கொண்டு தாபிக்கப்பட்டது. இதற்கான கிரயம் 123 மில்லியன் அமெரிக்க டொலர் என்பதுடன் இதற்கு ADB இன் கடன் பொதியின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. இதற்கான ஒப்பந்தத்தை 2021 ஆம் ஆண்டு கைச்சாத்திட எதிர்பார்க்கப்படுகிறது.

இச்செயற்றிட்டத்தை 2023 ஆம் ஆண்டிற்குள் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டம் மீரிகமவில் 220 / 33 kV மின்தொகுப்பு உபமின் நிலையம் ஒன்றை நிருமாணித்தல், பேலியகொட, ஹோமாகம, திஸ்ஸமகாராம, பத்தேகம, கலவான மற்றும் நீர்கொழும்பு ஆகிய இடங்களில் 132/3 kV மின்தொகுப்பு உபமின் நிலையங்களை நிருமாணித்தல், 132/33 kV மாத்தறை மின்தொகுப்பு உபமின் நிலையத்தை விருத்தி செய்தல், அதனோடிணைந்த மின் பரிமாற்ற மார்க்கங்களை நிருமாணித்தல் மற்றும் மேலுள்ள மின்தொகுப்பு உபமின் நிலையங்களை ஒன்றுடனொன்று இணைப்பதற்கான நிலத்தடி கம்பிவடங்களை அமைத்தல், புதிய ஹபரணை மின்தொகுப்பு உபமின் நிலையத்திற்கும் புதிய அநுராதபுரம் மின்தொகுப்பு உபமின் நிலையத்திற்கும் இடையில் 46 km இரட்டைச் சுற்று 220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தை நிருமாணித்தல், மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மின்தொகுப்பு உபமின் நிலையங்களுக்கு இடையே 77 km இரட்டைச் சுற்று 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தை நிருமாணித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

மாத்தறை - ஹம்பாந்தோட்டை, ஹம்பாந்தோட்டை - திஸ்ஸமகாராம மின் பரிமாற்ற மார்க்கங்கள் மற்றும் ஹோமாகம மின்தொகுப்பு உபமின் நிலையத்திற்கான மின் பரிமாற்ற மார்க்கம் ஆகியவற்றின் சுருக்கமான அளவையீடு பூரணப்படுத்தப்பட்டதுடன் புதிய ஹபரணை - புதிய அநுராதபுரம் மற்றும் குக்குளே - கலவான மின் பரிமாற்ற மார்க்கங்களின் சுருக்கமான அளவையீடு நடைபெறுகிறது.

பொதி 3 இன் விலைமனுக் கோரல் (திஸ்ஸமகாராம, பத்தேகம, ஹோமாகம மற்றும் பேலியகொட 132/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் நிருமாணப் பணிகள்) மற்றும் பொதி 2 - துண்டம் A (மாத்தறை - ஹம்பாந்தோட்டை, ஹம்பாந்தோட்டை - திஸ்ஸமகாராம ஆகியவற்றுக்கிடையிலான 132 kV மின் மார்க்கத்தின் நிருமாணம், ஹோமாகம GS இன் உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் இணைப்புகள், பத்தேகம GS இன் உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் இணைப்புகள், களனிப் பல்கலைக்கழகத்தில் மின்கோபுர நிருமாணம்) என்பன 2020-10-01 இல் செய்யப்பட்டதுடன் முன்னாயத்த விலைமனுக் கூட்டங்களும் கள விஜயங்களும் பூர்த்தி செய்யப்பட்டன. இந்த விலைமனுக் கோரல்களை முறையே 2021-01-03 மற்றும் 2021-01-20 ஆந் திகதிகளில் மூடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## மின் பரிமாற்றச் செயற்றிட்டங்கள் கிளை

### பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (கட்டம் 1) பகுதி 2

இந்த மின் பரிமாற்றச் செயற்றிட்டத்திற்கு ADB (23.9 மில்லியன் அமெரிக்க டொலர்) உம் AFD (30.0 மில்லியன் அமெரிக்க டொலர்) உம் கூட்டாக நிதியுதவி அளித்துள்ளனர்.

இந்தச் செயற்றிட்டத்தின் கீழ், திருகோணமலை, கட்டுநாயக்கா மற்றும் புதிய அநுராதபுரத்தில் உள்ள 132/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையங்களையும் கெரவலப்பிட்டியில் உள்ள 220/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தையும் விருத்தி செய்யும் பணிகள் பூரணப்படுத்தப்பட்டு, வர்த்தகரீதியான செயற்பாட்டிற்காக 2019 ஆம் ஆண்டு சக்தியூட்டப்பட்டன.

மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் கப்பல்துறை, அநுராதபுரம், களுத்துறை மற்றும் கெஸ்பேவ ஆகிய இடங்களிலுள்ள மின்தொகுப்பு உபமின் நிலையங்களுடன் இணைந்த மின் பரிமாற்ற மார்க்கங்கள் பூரணப்படுத்தப்பட்டு சக்தியூட்டப்பட்டன.

அநுராதபுரம், களுத்துறை மற்றும் கெஸ்பேவயில் முன்மொழியப்பட்ட புதிய 132/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் மற்றும் கப்பல்துறையில் 220 kV / 33 kV மின்தொகுப்பு உபமின் நிலையம் என்பன நிருமாணிக்கப்பட்டுக் கொண்டிருப்பதுடன் அவற்றை 2021 ஆம் ஆண்டில் பூரணப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

# செயற்றிட்டங்கள் பிரிவு (தொடர்ச்சி)

**மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டம்**

இந்தச் செயற்றிட்டத்தின் நோக்கம் மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் அதிகரிக்கின்ற மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதும் தேசிய மின்தொகுப்பிற்கான மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சலுக்கு வசதி அளிப்பதுமாகும்.

மேற்படி தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் மலிபோட, வேவல்வத்த, நாவலப்பிட்டி மற்றும் ராகலை பிரதேசங்களில் புதிய மின்தொகுப்பு உபமின் நிலையங்களையும் அதனுடன் சம்பந்தப்பட்ட மின் பரிமாற்ற மார்க்கங்களையும் நிருமாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

செயற்றிட்ட மதிப்பீட்டுச் செலவு 48 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். இதில் 30 மில்லியன் யூரோக்கள் AFD பிரான்ஸ் இனால் அளிக்கப்படுவதுடன் மீதித் தொகையை இ.மி.ச. இடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டம் முன்னோடிச் செயற்றிட்டம் ஒன்றாக நேரடியாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன், இதன் வடிவமைப்பு, பெறுகை மற்றும் நிருமாண வேலைகளுக்கு இ.மி.ச. இன் பொறியியலாளர்கள் பொறுப்பாக இருக்கின்றனர். இது ஆயத்தத் தயாரிப்பு (Turnkey) எண்ணக்கருவிலிருந்து மாறுபட்டது. இந்தப் புதிய எண்ணக்கருவானது செயற்றிட்ட வேலைகளில் இ.மி.ச. பொறியியலாளர்கள் மற்றும் தொழினுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஈடுபடுத்தலை அதிகரித்துள்ளது. அது இ.மி.ச. ஊழியர்களின் திறன்களை விருத்தி செய்வதில் சாதகமான போக்கு ஒன்றாகக் கருதப்படுகிறது.



உரு P 12: மலிபோட GS



உரு P 13: மலிபோட - பொல்பிட்டிய மின் பரிமாற்ற மார்க்கம்

இந்தச் செயற்றிட்டத்திற்கான பொருட்களைப் பெறுவதற்கு பன்னிரெண்டு ஒப்பந்தங்கள் காணப்பட்டதுடன் செயற்றிட்டப் பணிகளுக்காக மூன்று ஒப்பந்தங்கள் காணப்பட்டன. போட்டி விலைமனுக் கோரல், AFD மற்றும் இலங்கை அரசாங்கத்தின் தேவைப்பாடுகளுடனான இணக்கம் என்பன பெறுகைச் செயன்முறையின் போது கடைப்பிடிக்கப்பட்டன. மேலும், இந்த புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நேரடிப் பெறுகை எண்ணக்கருவின் வாயிலாக இ.மி.ச. குறிப்பிடத்தக்களவு சேமிப்பை ஈட்டியிருந்தது.

கோவிட் 19 நோய்ப்பரவலின் தாக்கத்தால் பல்வேறு தடைகள் ஏற்பட்டிருந்த போதிலும், மலிபோட GS, வேவல்வத்த GS மற்றும் மலிபோட - பொல்பிட்டிய மின் பரிமாற்ற மார்க்கம் என்பவற்றைச் செயற்படுத்துவதற்கு 2020 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக அதிகாரம் அளிக்கப்பட்டது. நாவலப்பிட்டி மற்றும் ராகலை மின்தொகுப்பு உபமின் நிலையங்களை 2021 யூன் மாதம் சக்தியூட்ட எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் செயற்றிட்டத்தின் பூர்த்தியுடன், மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் உள்ள தேசிய மின்தொகுப்புகளுக்கு மேலதிகமாக 100 MW சிறிய நீர்மின் அபிவிருத்திகளை உள்ளீர்க்க முடியும்.

**தூய சக்தி மற்றும் வலையமைப்பு வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம்**

இந்தச் செயற்றிட்டம் நான்கு பொதிகளை உள்ளடக்கியிருந்தது. பெரும்பாலான நிருமாண வேலைகள் 2019 ஆம் ஆண்டின் நடுப் பகுதியினுள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன. இந்தச் செயற்றிட்டத்திற்கான நிதியுதவியை ஆசிய அபிவிருத்தி வங்கி அதன் கடன் இல. 2892/2893 இன் கீழ் வழங்கியிருந்தது.

எவ்வாறாயினும், செயற்றிட்டத்தின் கீழ்வரும் பகுதிகள் இ.மி.ச. இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களால் தாமதமடைந்ததுடன், தாமதமடைந்த பாகங்களின் தற்போதை நிலை பின்வருமாறு:

**பொதி 01 - துண்டம் A**

மன்னார் மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் நிருமாணம் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 2020 பெப்ரவரியில் சக்தியூட்டப்பட்டது.



உரு P 14: மன்னார் GS

**பொதி 02: 132 kV மின் பரிமாற்ற உட்கட்டமைப்புச் செயற்றிட்டம்**

அத்துருகிரிய - கொலன்னாவை மின் மார்க்கத்தின் மீள் - நிருமாணமானது, மின் மார்க்கம் வேலைக்காக விடுவிக்கப்படாத காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அத்துருகிரிய - பாதுக்க 132 kV மின் பரிமாற்ற மார்க்கம் நிருமாணிக்கப்பட்டுக் கொண்டிருப்பதுடன் அதனை 2021 பெப்ரவரி மாதத்திற்குள் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

**பொதி 03 - துண்டம் B**

பாதுக்க - பன்னிப்பிட்டிய மின் பரிமாற்ற மார்க்கப் பகுதி ஆண்டின் காலப்பகுதியில் நிருமாணிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அதனை 2021 ஆம் ஆண்டிற்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

# செயற்றிட்டங்கள் பிரிவு (தொடர்ச்சி)



உரு P 15: பாதுக்க - பன்னிப்பிட்டிய மின்பரிமாற்ற மார்க்க இழுத்துக்கட்டல் வேலைகள்

## மின் பரிமாற்ற நிருமாணச் செயற்றிட்டங்கள் கிளை

இந்தக் கிளையானது இ.மி.ச. மின் பரிமாற்ற வலையமைப்பின் புதிய நிருமாணங்கள், விருத்தியாக்க வேலைகள், மீள்நிருமாணங்கள் மற்றும் புனரமைப்பு வேலைகளுடன் தொடர்புடைய மின் பரிமாற்ற நிருமாண வேலைகளை மேற்கொள்வதற்காக 2012 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. இந்தக் கிளை, நிருமாண நடவடிக்கைகளுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்களைக் கொள்வனவு செய்வதிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வேலைகளின் அதிகபட்சம் சாத்தியமான பகுதிகளைப் பொறுப்பெடுப்பதற்கு தனது சொந்த ஊழியர்களை அணிதிரட்டுவதில் கவனம் செலுத்துகிறது. தனது சொந்த ஊழியர்களைக் கொண்டு ஆற்றப்பட முடியாத வேலைகளின் இனங்காணப்பட்ட பகுதிகளை மாத்திரம் போட்டி விலைமனுக் கோரல் ஊடாக உப ஒப்பந்தமாக வழங்குகிறது.

### மின்தொகுப்பு உபமின் நிலைய நிருமாணச் செயற்றிட்டங்கள் (GSCP) அலகு

2020 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நிருமாண வேலைகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது:

| வேலை | விபரம் / தற்போதைய நிலை |
|---|---|
| **புதிய அநுராதபுரம் GS இல் 100 MVAr மின் உலைகளும் மன்னார் GS இல் 50 MVAr மின் உலைகளும் நிறுவப்பட்டன.** | • முறைமையின் 220 kV மின்னழுத்தத்தை வரையறைகளுக்குள் பேணுவதற்கு.<br>• இந்தச் செயற்றிட்டம் 2019 ஆகஸ்ட்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2021 மார்ச்சில் பூர்த்தி அடையும்.<br>• இந்தச் செயற்றிட்டத்திற்கான மொத்த மதிப்பிடப்பட்ட செலவு 1,375 மில்லியன் இலங்கை ரூபா. |
| **வேகவத்த மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் நிருமாணம்** | • வேகவத்த கைத்தொழில் பேட்டைக்கு 30 MVA மின்வலு வழங்கலைச் செய்வதற்கும் முன்மொழியப்பட்டுள்ள மில்லானியா கைத்தொழில் பேட்டைக்கு 25 MVA மின்வலு வழங்கலைச் செய்வதற்கும்.<br>• இந்தச் செயற்றிட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவு 1,898 மில்லியன் இலங்கை ரூபா ஆகும். இதற்கான நிதியை இலங்கை முதலீட்டு சபை (BOI) வழங்குகிறது.<br>• செயற்றிட்டத்தை 2021 டிசெம்பரில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. |
| **புதிய பொல்பிட்டிய ஆளி நிலையத்தில் இரண்டு 220 kV இரட்டை மின்னேகிச் சட்ட பரிமாற்ற மார்க்கத்தின் நுழைவுவழியை நிருமாணித்தல்** | • புதிய பொல்பிட்டிய - ஹம்பாந்தோட்டை 220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் மின்தொகுப்பு இணைப்புகளுக்கு வசதியளிப்பதற்கு.<br>• செயற்றிட்டத்தை 2021 ஏப்ரலில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. |
| **ரத்மலானை மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் இரண்டு (02) 33 kV மின்னூட்டி நுழைவுவழிகளை நிருமாணித்தல்** | • முன்மொழியப்பட்டுள்ள கரடியனா கழிவு மின்வலுச் செயற்றிட்டம் (10 MW) இனை தேசிய மின்தொகுப்புடன் இணைப்பதற்கு.<br>• இச்செயற்றிட்டம் நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன் இதற்கான மதிப்பிடப்பட்ட செலவு 147.9 மில்லியன் இலங்கை ரூபா ஆகும். |
| **களனிதிஸ்ஸ 132 kV GIS இனை விரிவாக்குதல்** | • களனிதிஸ்ஸ புதிய எரிவாயு விசையாழிச் செயற்றிட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மூன்று (03) எரிவாயு விசையாழிகளை இணைப்பதற்கு. இச்செயற்றிட்டம் நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன் இதற்கான மதிப்பிடப்பட்ட செலவு 465 மில்லியன் இலங்கை ரூபா ஆகும். |
| **களுத்துறை GS இல் 33 kV மின்னூட்டி நுழைவு வழிகளின் நிருமாணம்** | • இந்தச் செயற்றிட்டம் நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன் இதற்கான மதிப்பிடப்பட்ட செலவு 35 மில்லியன் இலங்கை ரூபா ஆகும். |

# செயற்றிட்டங்கள் பிரிவு (தொடர்ச்சி)

### மின் பரிமாற்ற மார்க்க நிருமாணச் செயற்றிட்டங்கள் (TLCP) அலகு

2020 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நிருமாண வேலைகள் பற்றிய விபரம் கீழ்வருமாறு:

| வேலை | விபரம் / தற்போதைய நிலை |
|---|---|
| **பதுளை - மெதகம 132 kV, 32.5 km இரட்டைச் சுற்று, சீப்ரா மின் பரிமாற்ற மார்க்கத்தின் மீள் நிருமாணம்** | • பதுளை மின்தொகுப்பு உபமின் நிலையம் தொடக்கம் இங்கினியாகல மின்வலு நிலையம் வரை 132 kV தனிச் சுற்று மின் பரிமாற்ற மார்க்கம் 1963 இல் கட்டப்பட்டது.<br>• 1963 ஆம் ஆண்டில் நிருமாணிக்கப்பட்ட தற்போதைய பதுளை - இங்கினியாகல 132 kV ஓறியோல், தனிச் சுற்று மின் பரிமாற்ற மார்க்கத்தின் மின்னோட்டத்தைக் காவும் கொள்ளளவு மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கு.<br>• இதன் பொருட்டு பதுளை - மெதகம 32.5 km, 132 kV மின் பரிமாற்ற மார்க்கப் பகுதியை இரட்டைச் சுற்று, சீப்ரா மின் பரிமாற்ற மார்க்கமாக மீள நிருமாணிப்பதற்கு முன்மொழியப்பட்டது.<br>• நிருமாணங்கள் 2020 யூனில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், உமா ஓயா மின் பரிமாற்ற மார்க்கத்துடன் பகிரப்பட்டுள்ள மூன்று முனைமங்களும் பூர்த்தியானதும் அது சக்தியூட்டப்படும். |
| **வேகவத்தையில் அத்திவாரத்தை நிருமாணித்தலும் மின்கோபுரத்தை நாட்டுதலும்** | • முன்மொழியப்பட்ட வேகவத்த மின்தொகுப்பு உபமின் நிலையத்தை பன்னிப்பிட்டிய/மத்துகம - ஹொரணை 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்துடன் இணைப்பதற்கு மின் கோபுரமொன்று நிருமாணிக்கப்பட்டது. |
| **அத்துருகிரிய - பாதுக்க 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்திற்காக இரண்டு மின்கோபுரங்களின் நிருமாணிப்பு** | • நிருமாணங்கள் 2020 ஆம் ஆண்டின் இறுதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டன. |

### மின் பரிமாற்ற வடிவமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் கிளை

மின் பரிமாற்ற வடிவமைப்பு அலகும் சுற்றுச்சூழல் அலகும் இந்தக் கிளையின் செயல் எல்லையின் கீழ் செயற்படுகின்றன.

### மின் பரிமாற்ற வடிவமைப்பு அலகு

இந்த அலகினால் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் சுருக்கம் கீழ்வருமாறு:

- கீழ்வரும் செயற்றிட்டங்களுக்கான விலைமனு கோரல் ஆவணங்களின் தயாரிப்பு பூர்த்தியடைந்துள்ளது :
  - பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டச் செயற்றிட்டம் (GPD&EEIPP) - கட்டம் 2 - பொதி 8 துண்டம் A மற்றும் துண்டம் B
  - மின்வலு முறைமையின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தும் செயற்றிட்டம் (PSRSP) பொதி 2 துண்டம் A மற்றும் பொதி 3
- PSRSP – பொதி 3, 4 மற்றும் 5 இன் வழங்குநர் கடன் திட்டத்திற்கான வரைவு விலைமனு ஆவணங்களின் தயாரிப்பு பூர்த்தி அடைந்துள்ளது.
- PSRSP - பொதி 1B மற்றும் 2B இற்கான வரைவு விலைமனுக் கோரல் ஆவணங்களின் தயாரிப்பு ADB வழிகாட்டலுக்கு ஏற்ப பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
- பின்வரும் செயற்றிட்டங்களின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட வடிவமைப்புகளுக்கான வடிவமைப்பு மீளாய்வுகள் செய்யப்பட்டுள்ளன :
  - CE&NEIP-P1, P2 மற்றும் P3
  - GPD&EEIPP- கட்டம் 1 – பகுதி 2 – துண்டம் B1
  - உமா ஓயா நீர் மின்வலுச் செயற்றிட்டம் - 132 kV மின் பரிமாற்ற மார்க்கம்
  - GPD&EEIPP – கட்டம் II - பொதி 3: துண்டம் A2 மற்றும் துண்டம் B
  - REATDP
  - ஹபரணை - வெயாங்கொடை மின் பரிமாற்றச் செயற்றிட்டம்
  - NTDND & EIP பொதி I, பொதி II மற்றும் பொதி III
  - கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்திச் செயற்றிட்டம்
  - மன்னார் காற்றுப் பண்ணை அபிவிருத்திச் செயற்றிட்டம்
  - SESRIP-P7- துண்டம் A1 மற்றும் துண்டம் A2
- கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக எட்டு மின்மாற்றிகள் மற்றும் மின்காப்புச் சரம்களின் தொகுதிகளுக்கு சான்றுரைக்கப்பட்ட தொழிற்சாலை ஏற்பனவுச் சோதனைகள் ஒன்லைன் மூலம் செய்யப்பட்டன.
- 132 kV / 220 kV UG கம்பிவடங்களுக்கான புதிய விபரக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டன
  - கெரவலப்பிட்டிய - GSS "L" - இரண்டாவது கம்பிவடம் நிறுவலுக்கான ஒரு பொறியியல் அறிக்கை தயாரிக்கப்பட்டது.
  - நுரைச்சோலை 245 kV GIS இல் 1.5 பிரிகலன் (பிறேக்கர்) திட்டத்திற்கான வடிவமைப்பு மேற்கொள்ளப்பட்டது.
  - வெயாங்கொடை - துல்கிரிய 132 kV மின் பரிமாற்ற மார்க்கம், பியகம - பன்னிப்பிட்டிய மின் மார்க்கம் ஆகியவற்றுக்கான சுருக்கமான அளவீட்டுப் பணிகளும், மீரிகம GSS, கொட்டதெனியாவ, நுரைச்சோலை மற்றும் துல்கிரிய GSS களுக்கான விபரமான அளவீட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.
  - பொதுமக்களின் தேவைகளுக்காக தற்போதுள்ள மின் பரிமாற்ற மார்க்கங்களுக்கான பாதுகாப்பு அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.
  - புதிய பொல்பிட்டிய, பாதுக்கை மற்றும் வேவல்வத்த GSS களுக்கு இயக்குவதற்கான அதிகாரம் அளித்தலுக்கும் சக்தியூட்டலுக்கும் உதவிகள் வழங்கப்பட்டன.

# செயற்றிட்டங்கள் பிரிவு (தொடர்ச்சி)

### சுற்றுச்சூழல் அலகு

சுற்றுச்சூழல் அலகானது இ.மி.ச. இனால் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சுற்றுச்சூழலுக்கான குவியப் புள்ளியாக விளங்குகிறது. சுற்றுச்சூழல் அலகின் பிரதான பொறுப்புகளில் இ.மி.ச. இன் புதிய மின் பரிமாற்ற மற்றும் மின் பிறப்பாக்கல் செயற்றிட்டங்களுக்கான சுற்றுச்சூழல் அங்கீகாரச் செயன்முறையை மேற்கொள்ளுதல், தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு (NEA) ஏற்ப சுற்றுச்சூழல் காப்பு ஆவணங்கள் மற்றும் நிதியுதவி அளிக்கும் முகவராண்மைகளின் வழிகாட்டல்கள் (பொருத்தமானதாயின்) தயாரித்தல், சம்பந்தப்பட்ட சுற்றுச்சூழல் அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளல், பாதுகாப்பு நடைமுறைப்படுத்தலைக் கண்காணித்தல் மற்றும் இ.மி.ச. இற்கும் அதன் நாட்டதாரர்களுக்குமான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில், மின்வலுத் துறையின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் உள்ள உப செயற்றிட்டங்களுக்கான சுற்றுச்சூழல் பற்றிய ஆய்வுகள் பூரணப்படுத்தப்பட்டு, அது தொடர்பான அறிக்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டது. பூநகரி மற்றும் சியம்பலாந்துவ ஆகிய இடங்களில் உள்ள மீள்புதுப்பிக்கத்தக்க சக்திப் பிறப்பாக்கச் செயற்றிட்டங்களுடன் இணைந்த மின் பரிமாற்ற மார்க்கங்கள் இறுதி செய்யப்பட்டதுடன் நிலைபேறான சக்தி அதிகாரசபையுடன் இணைந்து சுற்றுச்சூழல் ஆய்வுகளும் பூர்த்தி செய்யப்பட்டன. கெரவலப்பிட்டிய - கிரிந்திவெல 400 kV மின் பரிமாற்ற மார்க்கத்திற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு நடத்தப்பட்டு, பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக CEA இடம் சமர்ப்பிக்கப்பட்டது. கெரவலப்பிட்டிய - உப L 220 kV நிலத்தடி கம்பிவடத்திற்கான சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தாக்க மதிப்பீடு AIIB இன் நிதியுதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.

### நிறுவனம் மற்றும் செயற்றிட்டங்கள் ஒருங்கிணைப்புக் (C&PC) கிளை

இந்தக் கிளை நிறுவனத்தின் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அதே வேளை பிரிவினுள் செயற்றிட்டங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதையும் கையாள்கிறது.

நிறுவனத் தொழிற்பாடுகளின் கீழ், செயற்றிட்டப் பிரிவுக்கான வழங்கல்களைச் செய்வதும், எல்லா நேரங்களிலும் ஒரு முழுமையான பயிற்சி பெற்ற, திறமையான மற்றும் பொறுப்புள்ள முகாமைப் பணியாளர்களையும் வேலைப்படையும் உயர் மட்ட செயல்திறன் மற்றும் உத்தம மட்ட ஊதியத்துடன் பாதுகாப்பான மற்றும் உகந்த பணிச் சூழலில் செயற்பட வைப்பது இதன் கடமை ஆகும். இது பல்வேறு தரங்களையும் சேர்ந்த 176 நிறைவேற்றுத்தர அதிகாரிகளுக்கும் 540 ஊழியர்களுக்கும் சேவை வழங்குகிறது. ஒப்பந்த ஊழியர்கள் உட்பட பிரிவில் மொத்தமாக 716 ஊழியர்கள் இருக்கின்றனர்.

செயற்றிட்டங்களின் ஒருங்கிணைப்பின் கீழ், உரிய நேர இறுதிப் பூரணப்படுத்தலை முடிவாக்கும் பொருட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்ற அனைத்து செயற்றிட்டங்களினதும் முறையான ஒருங்கிணைப்பில் இது ஈடுபடுகிறது.



லக்விஜய மின்வலு ஆலை

செயற்பாட்டு மீளாய்வு

# சொத்து முகாமைத்துவப் பிரிவு

# சொத்து முகாமைத்துவப் பிரிவு

சொத்து முகாமைத்துவம் என்பது உட்கட்டமைப்பு அபிவிருத்தி உருமாற்றத்தின் ஒரு பகுதியாகும். இந்தப் பிரிவு இ.மி.ச. இன் பொருளாதார வளர்ச்சி, சமூக மேம்பாடுகள் மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்தி ஆகியன தொடர்பில் இ.மி.ச. இல் ஒரு முக்கிய வகிபாகத்தை வகிக்கிறது. இந்தப் பிரிவு கீழே விபரிக்கப்பட்டவாறான ஐந்து கிளைகளைக் கொண்டுள்ளது.

## சொத்து முகாமைத்துவம் மற்றும் நிறுவனக் கிளை

மனித வளங்களை உத்தமமான வகையில் பயன்படுத்துவதன் மூலம் சொத்துகள் முகாமைத்துவப் பிரிவின் முறையான தொழிற்பாட்டை உறுதிப்படுத்துவது சொத்துகள் முகாமைத்துவம் மற்றும் நிறுவனக் கிளையின் பொறுப்பாகும். ஊழியர்களின் மனிதவள மற்றும் நிறுவனத் தொழிற்பாடுகளைத் தவிர, கிளையானது இ.மி.ச. இன் சொத்து முகாமைத்துவம் தொடர்பான தொழிற்பாடுகளையும் கையாள்கிறது.

இ.மி.ச. காணிகள் மற்றும் கட்டடங்களை சிறப்பான முறையில் முகாமை செய்வதும் பிரதான சட்டநியதித் தொழிற்பாடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வண்ணம் பிரதான நடவடிக்கைகள் தவிர்ந்த ஏனைய நோக்கங்களுக்காக இருக்கின்ற வளங்கள் மற்றும் சொத்துக்களைப் பயன்படுத்துவதன் மூலம் மேலதிக வருமானமொன்றை ஈட்டுவதும் இந்தக் கிளையின் பிரதான நடவடிக்கைகள் ஆகும்.

ஆண்டின் காலப்பகுதியில் கிளையினால் ஆற்றப்பட்ட பிரதான நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

- காணிகள் மற்றும் கட்டடங்கள் தரவுத்தளத்தின் சொத்துப் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டன. (ஆண்டின் காலப்பகுதியில், மின் பிறப்பாக்கல் பிரிவிலிருந்து 786 காணித் துண்டங்களும், மின் பரிமாற்றப் பிரிவிலிருந்து 5 காணித் துண்டங்களும் மின் விநியோகப் பிரிவுகளிலிருந்து 12 காணித் துண்டங்களும் அடையாளம் காணப்பட்டன. இதன் மூலம் மின் பிறப்பாக்கல் பிரிவுக்கான மொத்தத் துண்டங்களின் எண்ணிக்கை 1056 ஆகவும் ஏனைய பிரிவுகளுக்கான மொத்தத் துண்டங்களின் எண்ணிக்கை 1008 ஆகவும் கொண்டுவரப்பட்டது.)
- சகல மாகாணங்களிலும் காணி தொடர்பான தரவுகளைச் சேமிப்பதற்கு ஒரு பிரத்தியேகமான வலையமைப்பு அடிப்படையிலான CEBAssist தரவு முகாமைத்துவ முறைமை மற்றும் இறுதிப் பயனர் மட்டத்திலிருந்து காணி தொடர்பான தரவுகளைச் சேமிப்பதற்கான வசதி என்பன நிறுவப்பட்டன. மேற்படி முறைமையின் ஆரம்ப அபிவிருத்திக் கட்டத்தில், நில அளவைப் படங்கள், உரிமைத்துவ ஆவணங்கள், விலைமதிப்புத் தொகைகள், அமைவிடம், காணியின் பாவனையாளர் போன்ற பல்வேறு தரவுகளுடன் 1031 காணிப் பதிவுகள் முறைமையில் சேமிக்கப்பட்டன.
- காசல்றீ நீர்த்தேக்க வளாகத்தில் உள்ள இ.மி.ச. இற்கு மாற்றப்பட்ட அரசாங்க மின் திணைக்களத்திற்குரிய காணிகளின் எல்லைகள் மீளவும் வரையறை செய்யப்பட்டு, ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- கொலன்னாவை இ.மி.ச. வளாகம் மற்றும் உக்குவளை மின்வலு நிலையம் ஆகியவற்றின் விலைமதிப்பீட்டுப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன. அவற்றின் மொத்த மதிப்பு 2.6 பில்லியன் இலங்கை ரூபாய் ஆகும். இது விலைமதிப்பீடு பூரணப்படுத்தப்பட்ட காணிச் சொத்துக்களின் கூட்டு மொத்தத்தை 29.2 பில்லியனாக ஆக்குகிறது. போவத்தென்ன மின்வலு நிலையத்தின் விலைமதிப்பீடு தொடர்கிறது.
- மவுசாகலை நீர்த்தேக்க வளாகம் மற்றும் களனிதிஸ்ஸ மின்வலு நிலைய வளாகம் ஆகியவற்றுக்கான நில அளவைப் படங்களின் தயாரிப்பு பூர்த்தி அடைந்துள்ளன. விமலசுரேந்திர மின்வலு நிலையம் மற்றும் நோட்டன் நீர்த்தேக்கப் பிரதேச வளாகம் ஆகியவற்றில் உள்ள இ.மி.ச. இன் காணிகளின் எல்லைகளை மீள் வரையறை செய்யும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன.
- இ.மி.ச. வாகனங்களை முகாமை செய்வதற்காக இ.மி.ச. வாகனத் தரவுத்தளம் ஒன்று விருத்தி செய்யப்பட்டு பேணப்படுகிறது.
- இ.மி.ச. இன் நீர்த்தேக்கங்கள் படகுச் சேவைகள் மற்றும் மிதவை விமானங்களின் இயக்கங்கள் போன்ற சுற்றுலா மற்றும் பொழுதுபோக்குச் செயற்பாடுகளுக்காக குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.
- சொத்து முகாமைப் பிரிவின் நிறுவனத் தொழிற்பாடுகள் தொடரப்படுகின்றன.



உரு **A 1:** மவுசாகலை இ.மி.ச. வளாகம் அளவீடு செய்யப்படுதல்

## பயிற்சிக் கிளை

தொடர்ச்சியான கற்றல் கொள்கை ஒன்றை உருவாக்குவது நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்கு இனங்காணப்பட்ட ஒரு பிரதான மூலோபாயம் ஆகும். இ.மி.ச. இன் பயிற்சிக் கிளையானது உயர்ந்தபட்ச கல்விச் சேவைகளை வழங்குவதற்கு உறுதிபூண்டுள்ளது. மேலும், தற்போதைய மற்றும் எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளத் தேவையான அறிவு மற்றும் திறமைகளை வழங்குவதற்காக ஊழியர்களுக்கு தொடர் பயிற்சிகளை வழங்குகின்ற அதே வேளை அவர்களின் மனப்பான்மை விருத்தியைத் பேணுவதிலும் தோள்கொடுக்கிறது. இவற்றுக்கு மேலதிகமாக, இக்கிளையானது எங்களது ஊழியர்களின் விழுமியங்களை பலப்படுத்துவதிலும் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. விழுமியங்கள் அரச துறைக் கொள்கைகளால் வழிகாட்டப்படுகின்றன.

2020 ஆம் ஆண்டு வேறு எந்த ஆண்டையும் போல இருக்கவில்லை. கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக பயிற்சிக் கிளையானது அசாதாரணமான சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. நோய்ப் பரவலுக்கு பதிலளிக்கும் விதமாக, கிளையானது இதுவரை செய்யாத தொலைவியக்க மற்றும் நெகிழ்வான கற்றலுக்க மாற வேண்டியிருந்தது.

ஊழியர்களால் செய்யப்பட்ட அர்ப்பணிப்பின் காரணமாக கிளையினால் தனது பிலியந்தலை பயிற்சி நிலையத்தை தேசிய மட்ட பயிற்சி நிலையமொன்றாக உயர்த்துவதற்கு முடிந்திருந்தது. இதன் மூலம்

# சொத்து முகாமைத்துவப் பிரிவு (தொடர்ச்சி)

மின்னியலாளர், மின்தடப் பணியாளர், எந்திரவினைஞர், உருக்கி ஒட்டுபவர் ஆகிய தொழில்களுக்கான தேசிய தொழில் தகைமை (NVQ) மட்டம் நான்கிற்குரிய பயிற்சிகளை எந்தவொரு நபருக்கும் வழங்கக்கூடிய நிலையமாக இது திகழ்கிறது. தற்போது பயிற்சிக் கிளையானது பல்தொழினுட்பப் பயிலகமொன்றாக இந்தப் பயிற்சி நிலையத்தை மாற்றுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

இந்தக் கிளையில் காணப்படுகின்ற பல்வேறு அலகுகளின் கடமைகளும் பொறுப்புக்களும் கீழே தரப்பட்டுள்ளன.

### தொழினுட்பப் பயிற்சி அலகு

இந்த அலகானது இ.மி.ச. இன் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்திற்கு இணங்க, சாரதிகள், இடைநிலை மட்ட தொழினுட்பப் பணியாளர்கள் உள்ளிட்ட இ.மி.ச. இன் களச் சேவை மற்றும் திறன்மிக்க தரத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு பதவியுயர்வுகளுக்குத் தேவையான பயிற்சிகளையும், நிறைவேற்றுத் தர அதிகாரிகளுக்கான தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் கனிஷ்ட நிறைவேற்றுத்தர அதிகாரிகள் மற்றும் இடைநிலை மட்டத் தொழினுட்பப் பணியாளர்கள் ஆகியோருக்கத் தேவையான பயிற்சிகளையும் ஒழுங்கமைத்தல், எழுதுநர்களும் அதனோடிணைந்த சேவை ஊழியர்களும் மற்றும் அலுவலக ஊழியர்கள் தவிர்ந்த ஏனைய சகல வகை ஊழியர்களுக்காகவும் தொழிலுக்கு அறிமுகப்படுத்தல் பயிற்சிச் செயலமர்வுகளை ஒழுங்கமைத்தல், வெளி நிறுவனங்களுக்கான தொழினுட்பப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல், வெளி நிறுவனங்களுக்கு TC - பிலியந்தலை, TC - கலவான மற்றும் TC - கிஞ்சிகுண ஆகிய இ.மி.ச. வளங்களை வழங்குதல் போன்றவற்றை மேற்கொள்கிறது.

### உள்ளகப் பயிற்சி அலகு

இந்த அலகு, இ.மி.ச. ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்திற்கு இணங்க, இ.மி.ச. இன் எழுதுநர்கள் மற்றும் அதனோடிணைந்த சேவை வகுதியினர், அலுவலக ஊழியர் சேவை வகுதியைச் சேர்ந்தவர்கள் மற்றும் பாதுகாப்புச் சேவை ஊழியர்கள் ஆகியோரின் பதவியுயர்வுகளுக்குத் தேவையான பயிற்சிச் செயலமர்வுகளை ஒழுங்கு செய்தல், தொழிலுக்கு அறிமுகப்படுத்தும் பயிற்சிகளை ஒழுங்கு செய்தல், பொறியியல் பட்டதாரிகள், பொறியியல் டிப்ளோமாதாரிகள் மற்றும் தொழினுட்ப மாணவர்களுக்கு தொழில்துறைப் பயிற்சிகளை ஒழுங்கு செய்தல், வேறு அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு நிறுவனங்கள் ஊடாக ஊழியர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல் ஆகியவற்றை மேற்கொள்கிறது.

### பயிற்சி நிலையம், காசல்ரீ

காசல்ரீ பயிற்சி நிலையமானது இ.மி.ச. ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்திற்கு இணங்க, பயிற்சி பெறும் கனிஷ்ட தொழினுட்பச் சகாக்கள், கனிஷ்ட தொழினுட்பச் சகாக்கள், மின் பிறப்பாக்கல் பிரிவின் தொழினுட்பச் சகாக்கள் ஆகியோருக்கான பயிற்சிச் செயலமர்வுகளை ஒழுங்கு செய்கிறது. மேலும், இ.மி.ச. ஊழியர்கள், சேவை வழங்குநர்களின் ஊழியர்கள் மற்றும் வெளிவாரி தனியாட்கள் ஆகியோருக்கு பல தொடர் தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் (CPD) நடத்துகிறது.

### முறைமைப் பயிற்சி அலகு

இந்த அலகானது சகல தரங்களையும் சேர்ந்த ஊழியர்களின் தரம், உற்பத்தித்திறன் மற்றும் வாடிக்கையாளர் சேவை இயலுமைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான பயிற்சிச் செயலமர்வுகளை ஒழுங்கமைத்தல், முதலுதவி மற்றும் தீ விபத்துப் பாதுகாப்புடன் தொடர்புடைய பயிற்சிச் செயலமர்வுகளை ஒழுங்கமைத்தல், யப்பானிய 5S முறையியலின் நடைமுறைப்படுத்தல் மற்றும் ISO நியமங்களின் நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றை மேற்கொள்கிறது.

பொறியியலாளர்கள், MLTS, எழுதுநர்கள் மற்றும் அதனோடிணைந்த சேவை வகுதியினர், களச் சேவைப் பணியாளர்கள் உள்ளிட்ட மொத்தமாக 436 ஊழியர்களுக்கு வெளிவாரிப் பயிற்சி நிறுவனங்கள் மூலம் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக அவர்களின் கடமைகளுடன் தொடர்புடைய பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஆண்டின் காலப்பகுதியில் நாட்டிலுள்ள சகல அரச பல்கலைக்கழகங்களினதும் பொறியியல் பீடங்களில் கல்வி பயிலும்

**உரு A 2 : TC- பிலியந்தலையில் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள்**




**உரு A 3 : TC – காசல்ரீயில் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள்**




**உரு A 4 : முதலுதவி மற்றும் தீவிபத்துப் பாதுகாப்புப் பற்றி நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள்**



# சொத்து முகாமைத்துவப் பிரிவு (தொடர்ச்சி)

300 பட்டதாரிகளுக்கும் அரசாங்க பல்தொழினுட்ப பயிலகங்களில் பயிலும் 120 டிப்ளோமா மட்ட மாணவர்களுக்கும் இ.மி.ச. இல் தொழில்துறைப் பயிற்சி வழங்கப்பட்டது.

கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக, இந்த ஆண்டில் நடத்தப்படக்கூடியதாக இருந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு குறைவானதாகும்.

நிலவுகின்ற பயிற்சித் தேவைகள் மற்றும் வளர்ந்துவரும் தொழினுட்பங்களைக் கருத்திற்கொண்டு புதிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் பயிற்சி நிலையத்தின் உற்பத்தித்திறன் மேம்படுத்தப்பட்டது. சேவைத் தரத்தை மேம்படுத்துவதற்காக உட்கட்டமைப்பு வசதிகள் மேலும் விருத்தி செய்யப்பட்டன.

## வெளிவாரிப் பயிற்சி அலகு

இந்த அலகு சகல இ.மி.ச. ஊழியர்களுக்காகவும் வெளிநாட்டுப் பயிற்சிச் செயலமர்வுகளுக்கு வசதிசெய்து கொடுக்கிறது.

கோவிட் 19 நோய்ப்பரவல் காரணமாக, இந்த ஆண்டில் அதிகமான பயிற்சிகள், செயலமர்வுகள் மற்றும் கப்பலில் ஏற்றுவதற்கான முன் பரிசீலனைகள் என்பன ஒன்லைன் மூலமே மேற்கொள்ளப்பட்டன.

**உரு A 5 : நடைபெற்ற பரீட்சைகள் பற்றிய விபரங்கள்**




## பரீட்சை அலகு

உத்தம மட்டக் கிரயத்தில் பரீட்சைச் செயன்முறையின் தரம் மற்றும் இரகசியத்தன்மையைப் பேணிய அதே நேரம் ஆளணி முகாமைத்துவ பட்டய நிறுவனம் (CIPM), தேசிய தொழிற்பயிற்சி நிறுவனம் (NVTI) மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகம் (UOM) போன்ற வெளிவாரி நிறுவனங்களின் உதவியுடன் வெளிவாரியான ஆட்சேர்ப்பு, உள்வாரியான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுகளுக்கான பரீட்சைகளை இந்த அலகு ஒழுங்கமைத்து நடத்துகிறது. ஆண்டின் காலப்பகுதியில் அனுபவிக்கப்பட்ட நோய்ப் பரவல் காரணமாக, ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட பரீட்சை நாட்காட்டிக்கேற்ப பரீட்சைகளை நடத்துவது தடை செய்யப்பட்டதால், அடையப்பெற்ற முன்னேற்றம் குறைவானதாகும்.

**உரு A 6 : நடத்தப்பட்ட பரீட்சைகள் விபரம்**




2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில், MBA மற்றும் MSc பாடநெறிகளைப் பின்பற்றுவதற்கு 12 சிரேஷ்ட நிறைவேற்றுத்தர அதிகாரிகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட அதே வேளை 08 துணைநிலை ஊழியர்களுக்கு டிப்ளோமா மற்றும் அதுபோன்ற மட்ட பாடநெறிகளைப் பின்பற்ற அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

## வேலைப்பட்டறை மற்றும் துணைச் சேவைகள் கிளை

வேலைப்பட்டறை மற்றும் துணைச் சேவைகள் கிளையானது மின்வலு ஆலை அலகு, மின்தூக்கிகள் அலகு, காற்று பதனமாக்கி மற்றும் குளிர் பதனப்படுத்தல் அலகு, மத்திய வேலைப்பட்டறை மற்றும் வாகனக்கூட அலகு என நான்கு செயற்பாட்டு அலகுகளைக் கொண்டுள்ளது.

### மின்வலு ஆலை அலகு

மின்வலு ஆலை அலகானது தயார்நிலையில் வைத்திருக்கும் மின்பிறப்பாக்கிகளைப் பராமரித்தல், டீசல் மின்பிறப்பாக்கிகளின் பழுதுபார்ப்பு / புனரமைப்பு, இ.மி.ச., தனியார் நிறுவனங்கள், சனாதிபதி பாதுகாப்புப் பிரிவு மற்றும் பிரதம மந்திரி பாதுகாப்புப் பிரிவு ஆகியவற்றின் தேவைகளுக்காக டீசல் மின்பிறப்பாக்கிகளை வாடகைக்கமர்த்தல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளது. ஆண்டின் காலப்பகுதியில் ஆற்றப்பட்ட வேலைகளின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது:

| வேலை வகை | வேலைகளின் எண்ணிக்கை | பெறுமதி (மில்லியன் இல.ரூபா) |
|---|---|---|
| தயார்நிலை டீசல் மின்பிறப்பாக்கி வருடாந்தப் பராமரிப்பு | 94 | 103 |
| டீசல் மின்பிறப்பாக்கிகளின் பழுதுபார்ப்பு/புனரமைப்பு | 47 | 73 |
| இ.மி.ச. இன் தேவைகளுக்காக டீசல் மின்பிறப்பாக்கிகளின் வாடகைக்கமர்த்தல் | 38 | 11 |
| டீசல் மின்பிறப்பாக்கி வாடகைக்கமர்த்தல் - தனியார், சனாதிபதி பாதுகாப்புப் பிரிவு, பிரதம மந்திரி பாதுகாப்புப் பிரிவு ஆகியவற்றின் தேவைக்காக | 67 | 61 |
| ஏனைய வேலைகள் | 18 | 0.6 |
| **மொத்தம்** | | **248.6** |

### காற்று பதனமாக்கி மற்றும் குளிர் பதனப்படுத்தல் அலகு

காற்று பதனமாக்கி மற்றும் குளிர் பதனப்படுத்தல் அலகானது சகல ஒருமுகப்படுத்தப்பட்ட மற்றும் வேறுபட்ட வகை காற்று பதனமாக்கி அலகுகள், குளிர் அறைகள் அதேபோன்று அரசாங்க வைத்தியசாலைகளில் நிறுவப்பட்டுள்ள பிணவறை குளிராக்கிகள், அரச நிறுவனங்கள், இ.மி.ச. செயற்பாட்டு அலகுகள் மற்றும் நாடுபூராகவும் உள்ள மின்வலு நிலையங்கள் ஆகியவற்றுக்கான சேவைகள் மற்றும் பராமரிப்புகளை வழங்குகிறது.

| வேலை வகை | வெளிவாரி | | உள்வாரி | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பெறுமதி மில். இல.ரூபா | எண்ணிக்கை | பெறுமதி மில். இல.ரூபா |
| வருடாந்தப் பராமரிப்பு | 33 | 243.6 | 283 | 54.7 |
| புதிய நிறுவல்கள் | - | - | 35 | 23.0 |
| பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு | 6 | 1.6 | 29 | 3.2 |
| **மொத்தம்** | **39** | **245.2** | **347** | **80.9** |

# சொத்து முகாமைத்துவப் பிரிவு (தொடர்ச்சி)

2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்ட வேலைகளின் மொத்தப் பெறுமதி கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது :



**உரு A 7: கண்டி தேசிய வைத்தியசாலையில் புனரமைப்பு வேலைகள்**

## மின்தூக்கி அலகு



**உரு A 8: கொதிகலன் இல. 02 – LVPP இல் மின்தூக்கியின் இழுவை மோட்டரது மாற்றீட்டு வேலை**

மின்தூக்கிகள் அலகானது அரசாங்க வைத்தியசாலைகள், அரச நிறுவனங்கள், இ.மி.ச. செயற்பாட்டு அலகுகள் மற்றும் நாடு பூராகவும் உள்ள மின்வலு நிலையங்கள் ஆகியவற்றில் நிறுவப்பட்டுள்ள இழுவை வகை மற்றும் நீரியக்க வகை மின்தூக்கிகள் மீதான சகல சேவைகளையும் வழங்குகிறது. மேலும், இது இ.மி.ச.

| வேலை வகை | வெளிவாரி | | உள்வாரி | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பெறுமதி மில். இல.ரூபா | எண்ணிக்கை | பெறுமதி மில். இல.ரூபா |
| வருடாந்தப் பராமரிப்பு | 20 | 23.6 | 9 | 3.7 |
| புதிய நிறுவல்கள் | - | - | 1 | 7.0 |
| பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு | 4 | 4.2 | 3 | 0.8 |
| ஏனையவை (சோதனை மற்றும் ஆலோசனை) | 3 | 0.5 | - | - |
| **மொத்தம்** | **27** | **28.3** | **13** | **11.5** |

தலைமை அலுவலகத்தில் பேட்டர்னோஸ்டரைப் பராமரிக்கிறது. இது உலகிலுள்ள மின்தூக்கி வகைகளில் ஒன்றாகும்.

ஆண்டின் காலப்பகுதியில் செய்யப்பட்ட வேலைகளின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

## மத்திய வேலைப்பட்டறை மற்றும் வாகனக்கூட அலகு

ஆண்டின் காலப்பகுதியில் மத்திய வேலைப்பட்டறை மற்றும் வாகனக்கூட அலகினால் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

| வேலை வகை | வேலை விபரம் | எ/கை | பெறுமதி (மில். இல.ரூபா) |
|---|---|---|---|
| இயந்திரவியல் | படிநிலை மின்மாற்றி குளிர்ச்சியூட்டும் மின்விசிறிப் பாதுகாப்புப் பாகங்களின் உருவாக்கம், காட்சித்திரைத் தொகுதிக்கான உருக்கு உறை, இ.மி.ச. தலைமையகத்திற்கான திசைவி அதிர்வுதாங்கிகள் மற்றும் வெண்கல பெல்தன் சக்கர நினைவுச் சின்னம் | 04 | 0.82 |
| மின்னியல் | சபுகஸ்கந்த மின்வலு நிலையத்தில் உள்ள குளிர்சியூட்டும் மின்விசிறி மோட்டார்களின் மீள்சுற்றல் | 33 | 3.20 |
| உற்பத்தி | விநியோகப் பிரிவுகளுக்கான D – தாங்குசட்டங்கள், T – கவ்விகள் ஆகியவற்றின் உற்பத்தி | 16 | 11.9 |
| வாகனப் பழுதுபார்ப்பு | இ.மி.ச. வாகனங்களுக்கான பழுதுபார்ப்புகள், தீந்தை பூசுதல்கள் மற்றும் ஓட்டை உடைசல்களின் சீர்படுத்தல்கள் | 67 | 7.24 |
| வாகனச் சுத்திகரிப்பு | இ.மி.ச. வாகனங்களின் சுத்திகரிப்புகள் | 66 | 1.62 |
| ஏனையவை | தன்னியக்க தீயணைப்பு பம்பிக் கட்டுப்பாட்டுப் பலகத்தின் பழுதுபார்ப்பு | 01 | 0.46 |
| **மொத்தம்** | | | **25.24** |

இ.மி.ச. தலைமையகக் கட்டடத்தின் நுழைவாயிலுக்கு அருகில் நினைவுச் சின்னமொன்றாக ஒரு பெல்தன் ஓடுதண்டை நிறுவும் பணியை இந்த அலகு பொறுப்பேற்றிருந்தது.

லக்ஷபான மின்வலு நிலையத்திலிருந்து (கட்டம் 1) அகற்றப்பட்ட ஒரு பெல்தன் ஓடுதண்டு வேலைப் பட்டறைக்கு கொண்டுவரப்பட்டு பொருத்தமான தாங்குசட்டம் உருவாக்கப்பட்டது. இது 2020.12.03 ஆந் திகதி இ.மி.ச. தலைமையகத்தில் வெற்றிகரமாக நிறுவப்பட்டது.



**உரு A 9: இ.மி.ச. தலைமையகத்தில் நிறுவப்பட்ட பெல்தன் ஓடுதண்டு**

## குடியியல் வேலைகள் மற்றும் கட்டடங்கள் கிளை

குடியியல் வேலைகள் மற்றும் கட்டடங்கள் கிளையானது புதிய கட்டடங்களின் நிருமாணம், தற்போதிருக்கின்ற கட்டடங்கள் / அலுவலகங்களின் புனரமைப்புகள் / விரிவாக்கங்கள் மற்றும் நாடு பூராகவும் உள்ள இ.மி.ச. இற்குச் சொந்தமான தலைமை அலுவலகக்

# சொத்து முகாமைத்துவப் பிரிவு (தொடர்ச்சி)

கட்டடம் மற்றும் சுற்றுலா பங்களாக்களின் பராமரிப்பு ஆகியவற்றை கவனிக்கிறது. இந்தக் கிளை மிகப் பிந்தைய மென்பொருளைப் பயன்படுத்தி கட்டமைப்புசார் வடிவமைப்புகளையும் தொடர்புடைய வரைதல்களையும் மேற்கொள்வதற்காக அதற்குச் சொந்தமான கட்டமைப்புசார் வடிவமைப்பு அலகினையும் கொண்டிருக்கிறது. CW&B உடன் இணைக்கப்பட்டுள்ள வசதியளித்தல் முகாமை அலகானது தலைமை அலுவலகக் கட்டடம் மற்றும் சுற்றுலா பங்களாக்களின் பராமரிப்பு வேலைகளை முன்னெடுப்பதற்கு பொறுப்புடையதாகும்.

ஆண்டின் காலப்பகுதியில் பூரணப்படுத்தப்பட்ட வேலைகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது :

| விபரம | பெறுமதி (மில். இல.ரூபா) |
|---|---|
| அநுராதபுரத்தில் பிரதிப் பொது முகாமையாளர் (வட மத்திய மாகாணம்) அலுவலகத்தின் நிருமாண மற்றும் உள்ளக வடிவமைப்பு வேலைகள் | 232 |
| புத்தளத்தில் பிரதேச பொறியியலாளரின் அலுவலக நிருமாணம் | 65 |
| ஜா-எல இல் பிரதேச மின் பொறியியலாளரின் அலுவலக விரிவாக்கமும் புனரமைப்பும் | 48 |
| இ.மி.ச. தலைமை அலுவலக கட்டடத்தின் புதுப்பிப்பு வேலைகள் | 143 |
| கொடகவெலவில் நுகர்வோர் சேவை நிலையத்தின் நிருமாணம் | 38 |
| வெயாங்கொடையில் CSC கட்டடத்தின் புனரமைப்பு | 17 |
| ஆனியகந்தையில் மத்திய வேலைப்பட்டறை மற்றும் வாகனக்கூட பழுதுபார்ப்பு வேலைகள் | 8 |
| பிரதிப் பொது முகாமையாளர் (ஊவா) அலுவலகத்தின் புனரமைப்பு | 10 |
| ஹாலி-எல இல் மாகாணக் களஞ்சியத்தின் புனரமைப்பு | 28 |
| கொலன்னாவையில் பாதுகாப்பு தலைமையகத்தின் பழுதுபார்ப்பு | 11 |



உரு A 10: அநுராதபுர DGM (NCP) அலுவலகத்தின் நிருமாண மற்றும் உள்ளக வடிவமைப்பு வேலைகள்



உரு A 11: புனரமைப்பின் பின்னரான ஜா-எல பிரதேச அலுவலகம்

## தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கிளை

விபத்துக்கள் மற்றும் காயமடையும் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக பாதுகாப்பான வேலைச் சூழலை உறுதிப்படுத்துவதன் மூலமும் ஊழியர்களிடையே சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும் நிறுவனத்தினுள் பாதுகாப்புக் கலாசாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் 2015 ஆம் ஆண்டில் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் (OH&S) கிளை இ.மி.ச. இல் அமைக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 1394 களச் சேவைப் பணியாளர்கள் மற்றும் எழுதுநர்களும் அதனோடிணைந்த சேவை வகுதியினருக்காகவும் 35 தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டதுடன் 270 மின்வலு நிலையப் பணியாளர்களுக்காக 07 தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களும் நடத்தப்பட்டன.

ஊழியர்கள் தங்களது நாளாந்தக் கடமைகளின்போது ஆற்றுகின்ற அபாயகரமான பணிகளுடன் தொடர்புடைய பாதுகாப்பு அம்சங்கள் பற்றி அவர்களுக்கு அறிவூட்டுவதற்கான தேவையை இக்கிளை இனங்கண்டிருந்தது. சிறந்த பாதுகாப்பு நடைமுறைகளைத் தெரிவிக்கின்ற ஒரு முறையாக, பாதுகாப்புச் செய்தி மடல்கள் காலமுறைதோறும் கிளையினால் வெளியிடப்படுவதுடன் அவை ஊழியர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. பாதுகாப்புச் செய்திமடலின் மூன்றாவது தொகுதி வெளியிடப்பட்டுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டில் அவை பகிர்ந்தளிக்கப்பட்டன.

இ.மி.ச. இன் ஊழியர்களுக்கான பாதுகாப்பான வேலைச் சூழலை உறுதிப்படுத்துவதற்காக பாதுகாப்புச் சோதனைகளை முன்னெடுக்கும் பணி இக்கிளைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் முதல் படியாக, களப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விபத்தை ஏற்படுத்தக்கூடிய குறைபாடுகளை இனங்காண்பதற்காக நாடு பூராகவும் சிதறிக் கிடக்கின்ற முதன்மை உபமின் நிலையங்கள் மற்றும் மின்கம்பிகளின் தாங்கு கோபுரங்கள் ஆகியவற்றைப் பரிசோதிப்பதற்கான நடவடிக்கைகளை இக்கிளை எடுத்திருக்கிறது. ஆண்டின் காலப்பகுதியில் நடத்தப்பட்ட இவ்வாறான பரிசோதனைகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| பிரிவு | பரிசோதிக்கப்பட்ட முதன்மை உபமின் நிலையங்களின் எண்ணிக்கை | பரிசோதிக்கப்பட்ட மின்கம்பி தாங்கு கோபுரங்களின் எண்ணிக்கை | பரிசோதிக்கப்பட்ட நுகர்வோர் சேவை நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| விநியோகப் பிரிவு 1 | 07 | - | - |
| விநியோகப் பிரிவு 2 | 17 | 06 | - |
| விநியோகப் பிரிவு 3 | 04 | - | 01 |
| விநியோகப் பிரிவு 4 | 05 | 01 | 01 |
| **மொத்தம்** | **33** | **07** | **02** |

மேலும், இ.மி.ச. இனுள் விபத்துகள் அற்ற பாதுகாப்பான வேலைச் சூழலை உருவாக்குவதற்கும் ஆரோக்கியமான வேலைப் படையொன்றை உருவாக்குவதற்குமான பிரதான வகிபாகமொன்றை வகிப்பதற்காக இக்கிளை அமைக்கப்பட்டுள்ளது. விபத்துகள் தொடர்பான பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது :

# சொத்து முகாமைத்துவப் பிரிவு (தொடர்ச்சி)

**உரு A 12 : விபத்துகள் தொடர்பான பொழிப்பு**




## பாதுகாப்புப் பிரிவு

இ.மி.ச. இன் பாதுகாப்புப் பிரிவானது இ.மி.ச. இன் சகல உயிர்கள் மற்றும் மின் பிறப்பாக்கல் பிரிவு, மின் பரிமாற்றப் பிரிவு, மின் விநியோகப் பிரிவு மற்றும் சொத்து முகாமைத்துவப் பிரிவு ஆகியவற்றின் பாதிப்புக்குள்ளாகக்கூடிய சகல ஆதனங்களினதும் பாதுகாப்பிற்குப் பொறுப்பானதாகும். தனியார் பாதுகாப்புச் சேவை அதே போன்று குடியியல் காப்பு பாதுகாப்புச் சேவையைச் சேர்ந்த பாதுகாப்பு அலுவலர்கள் இ.மி.ச. இன் சில வளாகங்களில் நாடுபூராகவும் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களைக்கூட இ.மி.ச. இன் பாதுகாப்புப் பிரிவு மேற்பார்வை செய்து கண்காணிக்கிறது.

ஆயுதங்களைக் கையாளுதல், துப்பாக்கிச் சூடு நடத்துதல், தீ பாதுகாப்பு, பணத்திற்கான வழிக்காவல் மற்றும் VIP இற்கான மெய்க் காவல் கடமைகள், முதலுதவி, இடரின்போது வெளியேற்றுதல் தொடர்பான பயிற்சி, தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் ஆகியன தொடர்பில் 2020 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் பாதுகாப்பு அலுவலர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்பட்டது.

ஆண்டின் காலப்பகுதியில் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது:

| நிகழ்ச்சித்திட்டம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|
| உண்மையான துப்பாக்கியில் சுடும் தோட்டாவைக் கையாளும் பயிற்சி | 765 |
| தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு | 200 |
| புதிதாக பதவியுயர்த்தப்பட்ட பாதுகாப்பு அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 11 |
| பாதுகாப்பு அலுவலர் தரம் II A இற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 31 |



செயற்பாட்டு மீளாய்வு

# நிறுவன உபாயப் பிரிவு

# நிறுவன உபாயப் பிரிவு

நிறுவன உபாயப் பிரிவு என்பது இ.மி.ச. இன் நிறுவன நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக உபாயங்களை விருத்தி செய்து நடைமுறைப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த அமைப்பு ஆகும். இந்தப் பிரிவு மேலதிகப் பொது முகாமையாளர் ஒருவரால் தலைமை தாங்கப்படுகிறது. இது வணிகம் மற்றும் செயற்பாட்டு உபாயக் கிளை, நிறுவன உபாயம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அலுவல்கள் கிளை, தொழிற்பாட்டு உபாயம் மற்றும் செயன்முறை அபிவிருத்திக் கிளை, தகவல் தொழில்நுட்பக் (IT) கிளை, ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளை என ஐந்து கிளைகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு கிளையும் ஒரு பிரதிப் பொது முகாமையாளரால் தலைமை தாங்கப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, இ.மி.ச. இற்கான நிறுவன வளத் திட்டமிடல் (ERP) முறைமையொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக செயற்றிட்டப் பணிப்பாளர் ஒருவரால் தலைமை தாங்கப்படும் ஒரு செயற்றிட்டமானது நிறுவன உபாயப் பிரிவின் நோக்கெல்லையின் கீழ் தொழிற்படுகிறது. 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒவ்வொரு கிளையினதும் செயலாற்றுகைகள் கீழே குறிப்பிடப்படுகின்றன.

## வணிகம் மற்றும் செயற்பாட்டு உபாயக் கிளை

இ.மி.ச. இன் அவசியமான வணிக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான உபாயங்களை அமைத்தல், வணிகம் மற்றும் செயற்பாட்டு உபாயக் (B&OS) கிளையின் முதன்மையான பொறுப்பு ஆகும். நிறுவன பிம்பத்தைக் கட்டியெழுப்புவதும் உயர்த்துவதும்கூட B&OS கிளையின் நோக்கெல்லையின் கீழ் வருகிறது. மேலும், நிறுவனத் திட்டத்தில் (2019–2023) குறிப்பிடப்பட்டுள்ள உபாயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான நிறுவனத்தின் செயற்பாட்டைக் கண்காணிப்பதும் பிரதான நடவடிக்கைகளினும் அடங்குகிறது.

நிறுவனத்தின் இலக்குகள் எந்தளவிற்கு அடையப்பட்டுள்ளன என்பதை அளவிடுவதற்காக இ.மி.ச. முகாமைக்காக 2020 ஆம் ஆண்டின்போது காலாண்டிற்கு ஒரு முறை இலக்குகளுக்கான (மட்டம் - I) பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகளின் (KPI's) செயற்பாட்டு மீளாய்வு நடத்தப்பட்டது.

நிறுவன பிம்பத்தைக் கட்டியெழுப்பி, நிலைபேறானதாகப் பேணுவது தொடர்பான நடவடிக்கைகளுக்கென அர்ப்பணிக்கப்பட்ட ஒரு உபாயத் தொடர்பாடல் அலகினை (SCU) உருவாக்குவதற்கான முன்மொழிவுக்கு சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. இது கிளையின் நோக்கத்திற்கு ஏற்ப உள்ளது. லக்விஜய நிலக்கரி மின்வலு ஆலையின் செயற்பாடுகள் குறித்து பத்திரிகையாளர்களால் தவறான கருத்துக்கள் பிரசுரிக்கப்படுவதால், பத்திரிகையாளர்களிடையே காணப்படுகின்ற தவறான கருத்துக்களைப் போக்குவதற்காக B&OS கிளையானது 2020 மார்ச் 4 ஆந் திகதி லக்விஜய மின்வலு ஆலைக்கு பத்திரிகையாளர்களின் வருகை ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தது. லக்விஜய மின்வலு ஆலையின் முகாமை ஒரு பயனுள்ள செய்தியாளர் சந்திப்பை நடத்தியிருந்ததுடன் அச்சு, இலத்திரனியல் மற்றும் இணைய ஊடகங்களில் நேர்மறையான செய்திகள் வழங்கப்பட்டன.

இ.மி.ச. இன் 51 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இ.மி.ச. இன் நிறுவன பிம்பத்தை உயர்த்துவதற்காக, தொடர் கலந்துரையாடல்கள் மற்றும் ஆவணப்படங்கள் தயாரிக்கப்பட்டு இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் (SLRC) மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (SLBC) ஆகியவற்றின் ஊடாக ஒளிபரப்பு மற்றும் ஒலிபரப்புச் செய்யப்பட்டன. பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக நிபுணர்களாக இருக்கின்ற இ.மி.ச. இன் அதிகாரிகள் தங்களுடைய அறிவைப் பகிர்ந்து கொண்டனர்.

- லக்விஜய மின்வலு ஆலை பற்றிய ஒரு கலந்துரையாடல் 2020 அக்டோபர் 02 ஆந் திகதி SLRC இன் "காலை நேர" நிகழ்ச்சியில் ஒளிபரப்புச் செய்யப்பட்டது.
- "இ.மி.ச. இன் வாடிக்கையாளர் சேவை மற்றும் நன்மைகள்" குறித்தான ஒரு கலந்துரையாடல் SLRC இல் 2020 அக்டோபர் 10 ஆந் திகதி ஒளிபரப்புச் செய்யப்பட்டதுடன் "51 ஆம் ஆண்டு நிறைவு மற்றும் இ.மி.ச. இன் எதிர்காலம்" தொடர்பிலான கலந்துரையாடல் "ශනිදා ආයුබෝවන්" என்ற நிகழ்ச்சியில் 2020 அக்டோபர் 31 ஆந் திகதி ஒளிபரப்புச் செய்யப்பட்டது.
- "லக்ஷபான மின்வலு நிலையத்தின் 70 ஆம் ஆண்டு நிறைவு" பற்றிய ஒரு ஆவணப்படம் SLRC இனால் 2020 அக்டோபர் 31 ஆந் திகதி ஒளிபரப்புச் செய்யப்பட்டது.
- இ.மி.ச. இன் வரலாறு, நிகழ்காலமும் எதிர்காலமும்" பற்றிய ஒரு கலந்துரையாடல் SLRC இன் "ඉරිදා ආයුබෝවන්" என்ற நிகழ்ச்சியில் 2020 நவெம்பர் 01 ஆந் திகதி ஒளிபரப்புச் செய்யப்பட்டது.
- ஒரு விசேட ஆண்டு நிறைவு பற்றிய நிகழ்ச்சி 2020 நவெம்பர் 01 ஆந் திகதி SLBC இனால் ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

மேற்படி நிகழ்ச்சியை ஊக்கப்படுத்தும் முகமாக போட்டிகள் நடத்தப்பட்டதுடன் நிறுவனத்தின் ஆண்டு நிறைவும் நினைவுகூரப்பட்டது. இதன்போது வெற்றியாளர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்பட்டன.



**உரு C 1: SLRC உடன் 51 ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்ட நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டியோரைத் தெரிவு செய்தல்**

B&OS கிளையினால் அச்சு ஊடகங்களில் நேர்மறையான செய்திகளை பெற முடிந்தது. இ.மி.ச. அதிகாரிகளின் பின்வரும் மூலோபாய மற்றும் சூழல் சார்ந்த முக்கிய விடயங்கள் பற்றிய நேர்காணல்கள் தேசிய செய்தித்தாள்களில் பிரசுரமாகியிருந்தன. இது நிறுவன பிம்பத்தைக் கட்டியெழுப்புவதற்கும் பொதுமக்களிடையே காணப்பட்ட தவறான கருத்துக்களை நீக்குவதற்கு உதவியது.

- மவ்பிம பத்திரிகை (2020 நவெம்பர் 01) - மின் பரிமாற்றப் பிரிவின் மேலதிகப் பொது முகாமையாளரான பொறியியலாளர் (கலாநிதி) சுசந்த பெரேராவினால் எழுதப்பட்ட இரண்டு பக்க கட்டுரையும் இ.மி.ச. பற்றிய SME துறையிடமிருந்தான கூற்றுக்களும்.
- சண்டே டைம்ஸ் (2020 நவெம்பர் 01) - விநியோகப் பிரிவு 04 இன் மேலதிகப் பொது முகாமையாளர் பொறியியலாளர் ரொஹான் செனவிரத்னவுடனான முழுப் பக்க நேர்காணல்
- ஞாயிறு காலையும் "சதி அக அருணவும்" (2020 நவெம்பர் 01) - செய்தித்தாள் விளம்பரங்கள்
- மவ்பிம செய்தித்தாளின் இணையத்தளத்தில் இணைய விளம்பரப்படுத்தல்.
- இ.மி.ச. தலைவர் பொறியியலாளர் விஜித ஹேரத் மற்றும் இ.மி.ச. இன் பொது முகாமையாளர் பொறியியலாளர் கீர்த்தி கருணாரத்ன ஆகியோரின் சிறுவர் தின நிகழ்வுக்கான செய்திகள்.
- சிறுவர் தின நிகழ்வு தொடர்பான மேலதிகப் பொது முகாமையாளர் (DD1) பொறியியலாளர் (திருமதி) என். டபிள்யு.கே. ஹேரத்துடனான கலந்துரையாடல்
- மேலதிகப் பொது முகாமையாளரான (நிறுவன உபாயம்) பொறியியலாளர் (கலாநிதி) டி.சி.ஆர். அபேசேகரவினால் CEBCare கைத்தொலைபேசிச் செயலி பற்றிய ஒரு கட்டுரை

# நிறுவன உபாயப் பிரிவு (தொடர்ச்சி)

மன்னாரில் அமைக்கப்பட்ட "தம்பபவனி" என்ற காற்றுப் பண்ணையின் திறப்பு விழா இ.மி.ச. மற்றும் மின்வலு அமைச்சினால் கூட்டாக ஒழுங்கு செய்யப்பட்டது. மின்வலு அமைச்சர் கௌரவ டலஸ் அழகப்பெரும மற்றும் சூரியசக்தி, காற்றாலை மற்றும் நீர் மின்வலுப் பிறப்பாக்கச் செயற்றிட்டங்களுக்கான இராஜாங்க அமைச்சர் கௌரவ துமிந்த திசாநாயக்க ஆகியோரின் பங்குபற்றலுடன் இலங்கை சனநாயக சோ'லிசக் குடியரசின் பிரதம மந்திரி கௌரவ மஹிந்த ராஜபக்' அவர்களால் 2020 டிசெம்பர் 08 ஆந் திகதி வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

## நிறுவன உபாயம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அலுவல்கள் கிளை

நிறுவன உபாயம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அலுவல்கள் (CS&RA) கிளையானது இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்ட மின் பிறப்பாக்கம், மின் பரிமாற்றம் மற்றும் மின் விநியோக உரிமங்கள், உரிமதாரர்கள் அதே போன்று இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL) ஆகியவற்றிலிருந்து எழுகின்றதும் அவை தொடர்பானதுமான விடயங்களை ஒருங்கிணைக்கிறது. ஒழுங்குபடுத்தல் அலுவல்களைக் கையாள்வதற்கு மேலதிகமாக, இந்தக் கிளையானது இ.மி.ச. இற்கான நிறுவன உபாய உருவாக்கத்தை ஒருங்கிணைப்பதற்கும் பொறுப்பானதாக இருக்கிறது.

ஆண்டின் காலப்பகுதியில், ஒழுங்குபடுத்தல் அலுவல்கள் அலகானது சகல இ.மி.ச. உரிமதாரர்களினதும் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக உரிமதாரர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றியது போலவே PUCSL உடனும் நெருங்கிச் செயலாற்றியிருந்தது. குறிப்பாக, மின்சார (விநியோகம்) செயலாற்றுகை நியமங்கள், மின்சார (பரிமாற்றம்) செயலாற்றுகை நியமங்கள், மின்சார (பாதுகாப்பு, தரம் மற்றும் தொடர்ச்சித்தன்மை) ஒழுங்குவிதிகள் மற்றும் மின்சார (உந்தப்பட்ட பயன்பாட்டு கேள்விப் பக்க முகாமைத்துவம்) ஒழுங்குவிதிகள் போன்ற ஒழுங்குவிதிகளின் நடைமுறைப்படுத்தலைக் கவனிப்பதில் இந்த அலகு கவனத்தைச் செலுத்தியது. இவற்றுக்கு மேலதிகமாக, தற்போதுள்ள வழிகாட்டல்களை மேம்படுத்துவதற்கும், அதே போன்று தகுதி வரிசை அடிப்படையில் அனுப்பீடு செய்யும் நடைமுறை மற்றும் பொது வீதிகளில் காணப்படும் மின் கம்பம் (கம்பங்கள்) / மின் மார்க்கம் (மார்க்கங்கள்) இனை இடமாற்றுதல்/ அகற்றுதல் ஆகியவற்றுக்காக புதிய வழிகாட்டல்களை அமைப்பதற்கும் PUCSL உடனும் இ.மி.ச. உரிமதாரர்களுடனும் ஒழுங்குபடுத்தல் அலுவல்கள் அலகானது சேர்ந்து பணியாற்றுகிறது. முந்தையதை பூரணப்படுத்தியதன் பின்னர் முறைமை கட்டுப்பாட்டு நிலையத்தின் தற்போதைய செயற்பாட்டு நடைமுறையானது ஆவணப்படுத்தல் மற்றும் அறிக்கையிடல் தொடர்பில் வலுப்படுத்தப்படும். இது தற்போதுள்ள அட்டவணைப்படுத்தல் மற்றும் அனுப்பீடு செய்தல் நடைமுறைகளை மீளாய்வு செய்யவுள்ளது. பிந்தையது பூர்த்தியடைந்ததும் பொது வீதிகளில் உள்ள மின் கம்பங்களை இடமாற்றுவதற்கான ஒரு நிலையான பயனுள்ள மற்றும் பங்கேற்பு நடைமுறை அமுலில் இருக்கும்.

இதற்கு மேலதிகமாக, 300 MW LNG மின்வலு ஆலையின் (2 ஆவது) RFP, LVPP இனது 300 MW நிலக்கரி மின்வலு ஆலை விரிவாக்கத்தின் RFP மற்றும் கெரவலப்பிட்டியில் உள்ள 300 MW LNG மின்வலு ஆலையின் (1 ஆவது) PPA ஆகியவற்றுக்கான இணக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காக RA அலகானது PUCSL உடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

தீர்வுகளின்றி பல வருடங்களாக நடைபெற்ற தொழிற்பாடுகளை மீளவும் செயல்நிலைப்படுத்துவதற்கு அமைச்சரவையின் இணக்கத்தை எதிர்பார்த்து 2013 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்டதான 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தில் இருந்த சிக்கல்களைத் தொகுப்பதில் RA அலகானது முன்னணி வகிபாகமொன்றை வகித்திருந்தது. வினைத்திறனை மேம்படுத்துவதற்குத் திருத்தங்கள் தேவைப்படுகின்ற குறிப்பிட்ட சரத்துக்கள் பொது முகாமையாளரால் நியமிக்கப்பட்ட குழு ஒன்றினால் பட்டியலிடப்பட்டன.

2020 ஆம் ஆண்டானது கிரயப் பிரதிபலிப்பு விதிப்பனவொன்றைப் பெற்றுக்கொள்ளாத மற்றுமொரு தொடர் ஆண்டாகக் கருதப்படுகிறது. இது 2020 ஆம் ஆண்டிற்கான எதிர்மறையான ஐந்தொகை ஒன்றை உருவாக்கியிருந்தது. 2013 ஆம் ஆண்டிலிருந்து 7 வருடங்களாக விதிப்பனவுக் கட்டணத்தில் திருத்தம் செய்யாத அரசாங்கக் கொள்கையின் விளைவாக மாதாந்த மானிய நிலுவைகளுக்கு இ.மி.ச. நினைவூட்டிக்கொண்டே இருந்தது. 2016 தொடக்கம் 2020 யூன் மாதம் வரையான தற்போதைய விதிப்பனவுக் காலப்பகுதிக்காக அரசாங்கத்திடமிருந்தான திரண்ட மானிய நிலுவை 307.5 பில்லியன் இலங்கை ரூபா ஆகும்.

2020 சனவரி தொடக்கம் யூன் வரை மற்றும் 2020 யூலை தொடக்கம் டிசெம்பர் வரை என்ற இரு காலப்பகுதிக்குமான தொகையளவு வழங்கல் விதிப்பனவுத் தாக்கல் நடவடிக்கைகளை விதிப்பனவு அலகு ஒருங்கிணைத்தது. இதற்கு மேலதிகமாக, ஆண்டின் சகல நான்கு காலாண்டுகளுக்குமாக PUCSL உடன் சேர்ந்து சீரான தேசிய விதிப்பனவு (UNT) சீராக்கல் வேலைகளை இவ்வலகு ஒருங்கிணைத்திருந்தது. மேலும், அலகானது தொகையளவு வழங்கல் பரிமாற்றக் கணக்குகளை (BSTA) நிதி அமைச்சுக்கும் PUCSL இற்கும் மாதாந்த அடிப்படையில் சமர்ப்பித்திருந்தது.

2020 ஆம் ஆண்டானது 2021 - 2025 வரையான காலப்பகுதிக்கான பல்லாண்டு விதிப்பனவுத் தாக்கலின் தொடக்கத்துடனான பரபரப்பான ஓர் ஆண்டாக இருந்தது.

பல்லாண்டு விதிப்பனவுச் சட்டக மின் பரிமாற்ற உரிமதாரர் மற்றும் நான்கு மின் விநியோக உரிமதாரர்கள் ஆகியோரின் கீழான ஒருங்கிணைந்த வருவாய்த் தேவை மற்றும் ஒவ்வொரு உரிமதாரருக்கும் ஐந்து வருட காலப்பகுதிக்காக ஒதுக்கப்படுகின்ற வணிகத்திற்கான விதிப்பனவிலிருந்து எதிர்பார்க்கப்படும் வருமானம் ஆகியன கணக்கிடப்படுகின்றன. நடப்பு விதிப்பனவுத் தாக்கல் என்பது மின்சார ஒழுங்குமுறை அமுலுக்கு வந்த பின்னர் இ.மிச. இனால் செய்யப்பட்ட 3 ஆவது தாக்கல் ஆகும். இ.மி.ச. இன் சகல பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி நியமிக்கப்பட்ட குழு ஒன்றுடன் 2020 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இது பொறியியலாளர்கள் மற்றும் கணக்கீட்டு அலுவலர்களை உள்ளடக்கிய அதிகளவு ஆட்களைக் கொண்ட குழு ஒன்றின் பங்களிப்புடன் ஆற்றப்பட்ட ஒரு செயற்பாடாகும். சகல கிரய நிலையங்களையும் உள்ளடக்கிய விதிப்பனவு மாதிரிக்கான பிரதான உள்ளீடுகளைச் சேகரிப்பதற்கு பத்திற்கும் மேற்பட்ட குழுக் கூட்டங்கள், இரண்டு PUCSL கூட்டங்கள் மற்றும் ஒரு DCC கூட்டம் என்பன தேவைப்பட்டிருந்தது. சமர்ப்பணங்கள் 2020 நவெம்பர் நடுப் பகுதியளில் உரிய நேரத்தில் PUCSL இடம் செய்யப்பட்டன.

2020 முற்பகுதியில், விதிப்பனவு முறையியலைத் திருத்துவதற்காக PUCSL ஆரம்பித்த ஆய்வில் இவ்வலகு பங்கேற்றிருந்தது. இந்த ஆய்வு நடைமுறையில் இருந்த விதிப்பனவு அமைப்புச் செயன்முறை மற்றும் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட விதிப்பனவு முறையியல் ஒழுங்குபடுத்தல் கணக்கீட்டு முறைமைக்கு ஏற்ப உரிமதாரர்களால் செய்யப்பட்ட தாக்கல்கள் மற்றும் விதிப்பனவுத் தீர்மானங்களின் பகுப்பாய்வு ஆகியவற்றின் மீளாய்வை உள்ளடக்கியிருந்தது.

நிறுவன உபாயத் தொழிற்பாடுகளுக்கு ஏற்ப, இக்கிளையானது நிறுவனத் திட்டங்கள், நடவடிக்கைத் திட்டங்கள், வருடாந்த அறிக்கைகள், புள்ளிவிபரத் திரட்டுகள், விற்பனை மற்றும் மின் பிறப்பாக்கல் தரவுப் புத்தகங்கள், இ.மி.ச. இன் செயலாற்றுகை மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளிட்ட இ.மி.ச. இன் நிறுவன ஆவணங்களைத் தொகுத்து, வெளியிடும் பணிகளைப் பொறுப்பேற்றிருந்தது.

2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில், பின்வரும் ஆவணங்கள் இந்தக் கிளையினால் தொகுக்கப்பட்டிருந்தன :

- வருடாந்த அறிக்கை - 2019
- நடவடிக்கைத் திட்டம் 2020
- புள்ளிவிபரத் திரட்டு 2019
- விற்பனை மற்றும் மின் பிறப்பாக்கல் தரவுப் புத்தகம் 2019
- செயலாற்றுகை 2020 மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 2021

மேலும், இனங்காணப்பட்ட சிரமங்கள் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக நடவடிக்கைத் திட்டத் தயாரிப்பு மற்றும்




உரு C 2: புள்ளிவிபரத் திரட்டு - 2019

# நிறுவன உபாயப் பிரிவு (தொடர்ச்சி)

முன்னேற்ற அறிக்கையிடல் ஆகியவற்றை தன்னியக்கமாக மேற்கொள்வதற்கான முயற்சிகள் செய்யப்பட்டன. இதற்கு இ.மி.ச. இன் IT கிளையின் உதவி பெறப்பட்டது. இந்த தன்னியக்கச் செயன்முறையை 2021 யூன் மாதத்திற்குள் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

## தொழிற்பாட்டு உபாயம் மற்றும் செயன்முறை அபிவிருத்திக் கிளை

நோய்ப் பரவல் காரணமாக பௌதிக ரீதியான சந்திப்புகள், நாட்டதாரருடனான கலந்துரையாடல்கள், மூளைச்சலவை செய்யும் செயலமர்வுகள், நெருக்கமான குழு விவாதங்கள் ஆகியவற்றுக்கான தடைகளால் கிளையின் பிரதான செயற்பாடுகள் பல சவால்களை எதிர்கொண்ட போதிலும், தொழிற்பாட்டு உபாயம் மற்றும் செயன்முறை அபிவிருத்தி (FS & PD) கிளையானது 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதன் பெரும்பாலான வழமையான செயற்பாடுகளை வெற்றிகரமாகக் கையாண்டிருந்தது.

கோவிட் 19 நோய்ப் பரவலின் முதலாவது அலை குறையத் தொடங்கிய உடனேயே, மின் வழங்கலின் நம்பகத்தன்மை மற்றும் சேவைத் தரத்தை மேம்படுத்துவதற்காக விநியோகப் பிரிவுகளில் நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட மறுசீரமைப்பானது 2020 மே 20 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட சபைப் பத்திரம் ஒன்றின் ஊடாக பாதை வரைபடம் ஒன்றிற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் மூலம் தேறியிருந்தது. இந்தப் பாதை வரைபடத்தின் ஒப்புதலானது FS & PD கிளையினால் நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளின் விளைவாகவும் மற்றும் பல்வேறு பிரிவுப் பிரதிநிதிகளால் செய்யப்பட்ட பல ஆலோசனைகளின் விளைவாகவும் அடுத்த ஐந்து ஆண்டுகள் ஈறாக 05 மாகாணங்கள், 16 பிரதேசங்கள் மற்றும் 35 CSCs களின் உருவாக்கங்களுக்கு வழிவகுத்தது. முன்மொழியப்பட்ட சில புதிய அலுவலகங்களை உருவாக்குதல் உரிய பிரிவுகளால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையானது இ.மி.ச. தனது வாடிக்கையாளர்களுக்கு இன்னும் வினைத்திறனான சேவையை வழங்குவதற்கு அனுமதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு மேலதிகமாக, பயிற்சிக் கிளையின் மறுசீரமைப்புக்கான ஒரு பத்திரமும் ஆளணிக் கிளையின் மறுசீரமைப்புக்கான இன்னுமொரு பத்திரமுமாக மேலும் இரண்டு பிரதான சபைப் பத்திரங்கள் செம்மைப்படுத்தப்பட்டு, மீளாய்வுக்காக நாட்டதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. பொது முகாமையாளரின் நிறுவன அலுவலகத்திற்குத் தேவைப்படும் கட்டமைப்பு சார்ந்த மாற்றங்களுக்காக சபையின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ள மற்றுமொரு முக்கியமான சபைப் பத்திரமும் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த முன்மொழிவு சபையினால் அங்கீகரிக்கப்பட்டதும் நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட பொறியியல் சோதனைக் கிளை அதே போன்று டிஜிடல் ஆளுகைக் கிளை ஆகியவற்றை உருவாக்கும்போது வலுவான முதுநிலை அலுவலக ஆதரவு மூலம் பொது முகாமையாளரின் நாளாந்த முகாமையையும் நிருவாகத்தையும் அது வலுப்படுத்தும்.




**உரு C 3: விநியோகிக்கப்பட்ட புதிய கையேடுகள்**

நாளாந்தச் செயற்பாடுகளுக்கான வழிகாட்டி ஒன்றாக கிளைகளால் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்ற FS & PD செயற்பாட்டுக் கையேடுகளுக்கான வரலாறு காணாத கேள்வி ஒன்று காணப்பட்டதை 2020 ஆம் ஆண்டு அறியக்கூடியதாக இருந்தது. DGM (C&C) கையேடு, DGM (P&D) கையேடு மற்றும் DFM (மின் விநியோகம்) கையேடு போன்ற புதிய கையேடுகளுக்கு பொது முகாமையாளரின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது. சம்பந்தப்பட்ட கிளைகளின் பயன்பாட்டிற்காக அவற்றை அச்சிடுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன. அச்சிடப்பட்ட கையேடுகளுக்கு அதிகமான கேள்வி காணப்பட்டதன் காரணமாக, பல ஆளணி மற்றும் செயற்பாட்டுக் கையேடுகள் மீளவும் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

சம்பளங்களும் வேதனங்களும் தொடர்பான கையேடு, இடமாற்றம் தொடர்பான கையேடு மற்றும் லீவு தொடர்பான கையேடு என்பன திருத்தப்பட்டு, நிகழ்நிலைப்படுத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன. பௌதிக ரீதியான சந்திப்புக்களுக்கான வாய்ப்புகள் கிடைத்த போதெல்லாம் ஒழுக்காற்று நடைமுறை விதிகளின் தமிழ் மொழிபெயர்ப்பு முன்னெடுக்கப்பட்டது. சம்பளங்களும் வேதனங்களும் மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவுகள் தொடர்பான கையேடுகளின் சிங்கள மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புகளை அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தச் சகல நடவடிக்கைகளும் நோய்ப் பரவலுக்கான சுகாதார வழிகாட்டல்களின் கடுமையான கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்து முன்னெடுக்கப்பட்டன. பௌதிக ரீதியான கூட்டங்களின் மூலம் ஏற்படும் பயனுறுதித்தன்மையைப் போன்று, செயற்பாட்டுக் கையேடுகளின் வரைவுகளைத் தயாரிக்கும்போது தேவைப்படும் கலந்துரையாடல்களின் விரிவான தன்மையை நிகழ்நிலை (ஒன்லைன்) கூட்டங்களால் முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியவில்லை. எனவே, FS & PD கிளையானது அனைத்து பங்கேற்பாளர்கள் மற்றும் கிளையின் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இதுபோன்ற கூட்டங்களை ஏற்பாடு செய்வதில் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்தது. அதே நேரத்தில் சுகாதார வழிகாட்டல்களின்படி, அலுவலகத்தில் குறைந்தபட்ச ஊழியர் மட்டத்தையும் பேணுகிறது.

## தகவல் தொழினுட்பக் கிளை

வினைத்திறன் மற்றும் வாடிக்கையாளர் திருப்தியைக் கொண்டுவருவதற்காக இ.மி.ச. இன் வணிகச் செயன்முறைகளை விளங்கிக் கொள்ளும் நோக்கில் அவற்றை பொருத்தமான தொழில்நுட்பத்துடன் சீரமைப்பதற்கு தகவல் தொழில்நுட்பக் கிளை பொறுப்பாக இருக்கிறது.

நிறுவனத்திற்கான டிஜிடல்மயப்படுத்தல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு IT கிளையானது நான்கு உபாயங்களைப் பயன்படுத்துகிறது. அவையாவன, உள்ளக ரீதியான அபிவிருத்தி, நிறுவனத் தேவைகளுக்காக தனிப்பயனாக்கப்பட்ட உடனடியாகப் பெறக்கூடிய பொருட்கள், IT கிளைக்கு வெளியே இருந்தான அபிவிருத்திகள், புத்தாக்கங்களைப் பின்பற்றுதல் மற்றும் வெளிமூலமிடுதல் என்பனவாகும்.

2020 ஆம் ஆண்டு தகவல் தொழினுட்பக் கிளைக்கு சவால்மிக்க ஓர் ஆண்டாகத் திகழ்ந்தது. நோய்ப் பரவல் காரணமாக ஊழியர்கள் வீட்டிலிருந்து பணியாற்றுவதற்கும் வாடிக்கையாளர்களுக்கு தடையில்லா சேவைகளை முன்னெடுப்பதற்கு நிகழ்நிலைக் கூட்டங்களை நடத்துவதற்கும் IT கிளை வெற்றிகரமாக அதிகாரம் அளித்திருந்தது.

சவாலான சூழ்நிலைகள் இருந்த போதிலும் IT கிளையானது வெற்றிகரமான ஓர் ஆண்டை நிறைவு செய்திருந்தது. உட்கட்டமைப்பு




**உரு C 4: CEB Assist ஊடான வணிகச் செயற்பாடுகளைக் கையாளுதல்**

# நிறுவன உபாயப் பிரிவு (தொடர்ச்சி)

அடுக்கு ஒன்றிற்கு மாற்றியமைக்கும் ஒரு தொழில்துறைக்கு இணையான ஒரு வெற்றிக் கதையினை இது ஆற்றுகிறது. புதிய மெய்நிகராக்கப்பட்ட மற்றும் தன்னியக்கப்படுத்தப்பட்ட வன்பொருள் இயங்குதளமானது தவறு சகிப்புத்தன்மை மற்றும் உயர் கிடைப்பனவுத்தன்மை ஆகியவற்றுடன் நம்பகமான வன்பொருள் சேவைகளை உறுதிசெய்கிறது.

மானி வாசிப்பாளர் தளத்திற்கு விஜயம் செய்ததும் வாடிக்கையாளர்கள் தங்களது துல்லியமான கணக்கு மீதிகளைப் பெறுவதற்கும் அதே போன்று இ.மி.ச. தனது விற்பனை நிலையினை இனங்காண்பதற்கும் என மற்றுமொரு மைல்கல்லாக நிகழ்நிலை (ஒன்லைன்) மானி வாசிப்பு மற்றும் உடனடி கட்டணப் பட்டியல் செயன்முறைப்படுத்தல் என்பன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இது மேல் மாகாணம் வடக்கில் (WPN) ஒரு முன்னோடிச் செயற்றிட்டமாக ஆரம்பிக்கப்பட்டதுடன் அது சகல விநியோகப் பிரிவுகளுக்கும் விரிவாக்கப்படுகிறது.

2020 ஆம் ஆண்டில் சிறந்த தகவல் தொழினுட்பத் தீர்வான CEBAssist இற்கு இரண்டு விருதுகள் வழங்கப்பட்டிருந்தன. அரசாங்கம் மற்றும் அரச சாரா நிறுவனங்களின் (NGO) கீழான சிறந்த டிஜிடல்மயப்படுத்தப்பட்ட பொருள் / சேவையின் வெற்றியாளர் விருது மற்றும் டிஜிடல் எக்செலன்ஸ் 2018/19 இற்கான SLT Zero One விருதுகளில் சிறந்த கைத்தொலைபேசப் பயன்பாட்டு விருது என்பனவே அவ்விரு விருதுகளுமாகும். CEBAssist தீர்வானது வாடிக்கையாளர் சேவை, வாடிக்கையாளர் ஈடுபாடு, பணியிட வினைத்திறன், உள்ளகச் செயன்முறைகள் மற்றும் சேவைத் தரம் ஆகியவற்றை மேம்படுத்துகிறது. CEBAssist மேம்பட்ட அம்சங்கள் மற்றும் தகவலுக்கான முழு அணுகலுடன் இணைந்து வாடிக்கையாளர்களுக்கு டிஜிடல் சேவைகளை விரைவாக வழங்குவதன் மூலம் பயன்பாட்டுச் சந்தையை தொந்தரவு செய்கிறது.




**உரு C 5: டிஜிடல் எக்செலன்ஸ் 2018/19 இற்கான SLT Zero One விருதுகளில் சிறந்த கைத்தொலைபேசிப் பயன்பாட்டு விருது**

மேலும், PIV நிகழ்நிலை முறைமை மற்றும் PoS முறைமைகளின் மறுசீரமைப்பின் மூலம் வாடிக்கையாளர்கள் அந்தந்த மாகாணத்திற்குரிய கட்டணம் செலுத்தும் கருமபீடங்களில் மட்டுமே பணம் செலுத்த வேண்டும் என்றிருந்த சில வரையறைகளை தகவல் தொழினுட்பக் கிளை நீக்கியுள்ளது. இது வாடிக்கையாளர்களினதும் நிதிப் பிரிவினதும் சௌகரியத்தை மேம்படுத்தியுள்ளது.

IT கிளையானது வளங்களை உத்தமமாக்குவதற்காகவும் செலவினங்களைக் குறைப்பதற்காகவும் பயன்படுத்தப்படும் தொழினுட்பத் தளங்களை ஒருங்கிணைப்பதற்கான ஒரு பயணத்தைத் தொடங்கியுள்ளது. IT கிளை தற்போது தளத்தை ஒரு சேவையாகவும் (PaaS) உட்கட்டமைப்பை ஒரு சேவையாகவும் (IssS) மற்றைய கிளைகளுக்கு வழங்குவதுடன் சேவைத் தரத்தையும் பாதுகாப்பையும் தொடர்ச்சியாக மேம்படுத்திச் செல்கிறது.

மேலும், டிஜிடல்மயப்படுத்தலின் அடுத்த கட்டத்திற்கு இ.மி.ச. இன் பயணத்தை நகர்த்துவதற்காக, திறன் மானியிடல் மற்றும் திறன் மின்தொகுப்பு முன்னோடிச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு R&D கிளையுடனும் ஏனைய பிரிவுகளுடனும் IT கிளை கூட்டாகப் பணியாற்றுகிறது.

பயனர்கள் டிஜிடல் செயன்முறையுடன் சௌகரியமான முறையில் உறவாடுவதை பயனர் பயிற்சிகள் மற்றும் IT ஆதரவுச் சேவைகள் என்பன உறுதிப்படுத்துகின்றன.

IT கிளையானது அதன் ஊழியர்களுக்கு தொழில்துறையில் நிரூபிக்கப்பட்ட தொழினுட்பங்களால் ஆதரவளிக்கப்படும் சிறந்த பணிச் சூழலை வழங்குவதற்கு சித்தம் கொண்டுள்ளது. இதனால் நிறுவனத்தின் செயற்பாட்டு வினைத்திறனானது மேம்பாடடையும். தூரநோக்குடன், IT கிளையானது தற்போதுள்ள மின்னஞ்சல் சேவைகளை மேம்படுத்துவதற்கும், ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைந்த தொடர்பாடல் உட்கட்டமைப்பு, கூட்டு ஆவண முகாமைத்துவ வழிமுறை மற்றும் சேவை நாடுநர் சாதன முகாமைத்துவம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் செயற்றிட்டம் ஒன்றை வடிவமைத்துள்ளது.

தகவல் தொழினுட்பக் கிளையின் ஐந்து தூண்களாக இருக்கின்ற உட்கட்டமைப்பு அலகு, டிஜிடல் சேவைகள் அலகு, வணிகச் செயன்முறைகள் அலகு, தகவல் முறைமை அபிவிருத்தி அலகு மற்றும் தகவல் முறைமை செயற்பாட்டு அலகு ஆகியன இ.மி.ச. மற்றும் வாடிக்கையாளர்களுக்கு முன்பிருந்ததை விட மேம்பட்ட நிலையில் IT சேவைகளை மேம்படுத்துவதற்காக தொடர்ச்சியாகப் பணியாற்றுகின்றன.

## ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளை

ஆய்வு மற்றும் அபிவிருத்திக் (R&D) கிளையானது கேள்விப் பக்க முகாமைத்துவ அலகு, ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகு மற்றும் ஒளியூட்டலுக்கான பிராந்திய நிலையம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. அத்துடன் 2020 ஆம் ஆண்டில் கட்டுநாயக்கா திறன் மானியிடல் கட்டம் 2 செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு செயற்றிட்ட முகாமைத்துவ அலகு (PMU) அமைக்கப்பட்டது.

### கேள்விப் பக்க முகாமைத்துவ அலகு

அண்மையில், நாட்டில் பிற்பகல் வேளை உச்சப் பாவனை நேரங்களில் நிலவும் உயர்ந்தளவு மின் சுமையினைத் தணிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வீட்டு மின் நுகர்வு வகைக்கான விதிப்பனவுக் கட்டமைப்பு என்பது அத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றாகும். நெருக்கடி நேரக் கேள்விக்கும் சராசரிக் கேள்விக்கும் இடையிலான விகிதமாக வரையறுக்கப்படுகின்ற வருடாந்த சுமைக் காரணியானது தெளிவாக அதிகரித்துச் செல்லும் போக்கினைத் தொடர்ச்சியாகக் காட்டுகிறது. இதனால், முறைமைச் சுமை விபரத்தை ஆய்வு செய்வது மற்றும் முறைமைச் சுமை விபரத்தை கிடை மட்டமாக்குவதற்கான மேலதிக தெரிவுகளைக் கண்டறிவது என்பன காலத்தின் தேவையாகும். கேள்விப் பக்க முகாமைத்துவ (DSM) அலகு இத்தகைய சிக்கல்களைத் தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும்.

கிழக்கு மாகாணத்தில் சுமை ஆய்வு நிகழ்ச்சித் திட்டமொன்று (LRP) நடத்தப்பட்டதுடன் இறுதி அறிக்கை வரைவு செய்யப்பட்டுள்ளது. DSM அலகு மேலும், வாடிக்கையாளர்களின் கோரிக்கையின் அடிப்படையில் சக்திப் பரிசோதனை ஒத்திகைகளை நடத்தியுள்ளது. சக்தி முகாமைத்துவம் மற்றும் சக்தி வினைத்திறன் பற்றிய ஒரு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் மத்திய மாகாண இ.மி.ச. ஊழியர்களுக்காக நடத்தப்பட்டது.

ADB நிதியுதவி அளித்த திறன் மானியிடல் முன்னோடி DSM செயற்றிட்டம் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறைவடைந்ததுடன் 1,000 திறன் மானிகள் நிறுவப்பட்டு முன்னோட்ட அடிப்படையில் கண்காணிக்கப்பட்டன. உள்ளக காட்சித்திரை மற்றும் குட்டித் துணை பொருத்துவாய்களை அறிமுகப்படுத்தியதன் பயனுறுதித்தன்மையை மதிப்பிடுவதற்கு ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. கற்றுக் கொண்ட பாடங்களுடன் கட்டுநாயக்கா புவியியல் பிரதேசத்தில் 13,000 திறன் மானிகளுக்கு இந்தச் செயற்றிட்டம் விரிவாக்கப்படும்.

CS & RA கிளையினால் ஆரம்பிக்கப்பட்ட முற்கொடுப்பனவு மானியிடல் பற்றிய ஒரு ஆய்வுக்கு R&D கிளையினால் வசதியளிக்கப்பட்டது. இந்த ஆய்வுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியுதவி அளிக்கப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டில் ஆலோசகரால் பணி பூர்த்தி செய்யப்பட்டது.

# நிறுவன உபாயப் பிரிவு (தொடர்ச்சி)

## ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகு

இ.மி.ச. இல் நடத்தப்பட்ட ஊட்டமளிக்கும் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் எதிர்பார்ப்புடன், R&D அலகானது இனங்காணப்பட்ட பல்வேறு ஆய்வுத் தலைப்புகளிலான ஆய்வுகளை ஒருங்கிணைக்கிறது. அத்தகைய ஆய்வுகளின் சேர்க்கையின் வெளியீடு இ.மி.ச. R&D இதழில் தொகுக்கப்பட்டுள்ளது. இதழில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆய்வுத் தலைப்புகளாக குறைந்த மின்னழுத்த வலையமைப்பு மற்றும் தணித்தல் நடவடிக்கைகள் பற்றிய மேற்கூரை சூரியசக்தி முறைமைகளின் மின்னழுத்த விளைவு, தற்போதுள்ள இ.மி.ச. மின் பரிமாற்ற முறைமையின் எதிர்வினை மின்வலுப் பாய்ச்சலின் பொருளாதார மதிப்பீடும் உத்தமமாக்கலும், இன்வேட்டர் மற்றும் இன்வேட்டர் அல்லாத குளிர்சாதனங்களின் சக்தி நுகர்வு பற்றிய ஒப்பீடு, உணவின் நுண்ணுயிரியல் நிலைப்புத்தன்மை பற்றிய குளிர்சாதனங்களின் மூன்று மணி நேர மின்தொடுப்பகற்றலின் தாக்கம், விநியோக வலையமைப்பு மீதான மின்னல் தாக்கங்கள் பற்றிய மதிப்பீடு மற்றும் உயர் மின்னல் தாக்கம் ஏற்படக்கூடிய பகுதிகளுக்கான சாத்தியமான தீர்வுகளைக் கண்டறிதல், டீசல் மின்பிறப்பாக்கி ஒலி காப்பு பற்றிய ஆய்வும் நடைமுறைப்படுத்தலும், NAMA செயற்றிட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட PV பிளஸ் மின்கல சேமிப்பு வீட்டு முறைமைகளின் தொழினுட்ப மற்றும் பொருளாதார செயலாற்றுகை ஆகியன இருந்தன.

R&D அலகானது விநியோக உபமின் நிலையப் பராமரிப்பு தொடர்பான ஆவணப்படம் ஒன்றின் தயாரிப்பை நிறைவு செய்திருந்தது. இது DCC யிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் விநியோக உபமின் நிலையங்கள் போன்ற நிறுவல்களின் பராமரிப்பின் சிறந்த நடைமுறைகள் பற்றிய அறிவைப் பரப்புவதற்காக அது இ.மி.ச. முழுவதும் சுற்றோட்டத்தில் இருக்கிறது.




**உரு C 6: இ.மி.ச. R&D இதழ் யூன், 2020**

மேலும், R&D அலகானது இ.மி.ச. இனுள் நடைபெறும் இ.மி.ச. புத்தாக்கப் போட்டிகளில் விருதுகளை வெற்றிகொள்ளும் புத்தாக்கக் பரப்புரைகளில் ஈடுபட்டிருந்தது. அதன் ஒரு பகுதியாக, R&D அலகானது இ.மி.ச. இன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு 4 புத்தாக்கங்கள் மீதான கருத்துரைகளையும் வழங்கியிருந்தது. ஆளில்லா முதன்மை உபமின் நிலையங்களில் உள்ள மின்மாற்றிகளுக்கான குறைந்த செலவிலான மேம்பட்ட பாதுகாப்பு முறைமையின் புத்தாக்க அபிவிருத்தியை நடைமுறைப்படுத்துவதன் சாத்தியத்தன்மையை கவனத்திற் கொண்டு DCC இற்கான பரிந்துரைகள் வழங்கப்பட்டன. சமனலவெவ மின்வலு நிலையத்தில் விருத்தி செய்யப்பட்ட சூழல் நேய மசகு எண்ணெய் வடிகட்டியின் புத்தாக்கத்துடன் தொடர்புடைய செயன்முறைகளை உள்ளடக்கியதாக ஒரு ஆவணப் படம் தயாரிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மின் பிறப்பாக்கல் பிரிவு மற்றும் நீர் மின்வலுத் தொகுதிகள் மத்தியில் அது சுற்றோட்டத்திற்கு விடப்பட்டது.

ஒரு AMI இனை நடைமுறைப்படுத்துவதற்காக GPRS அடிப்படையிலான தொடர்பாடல் தொகுதிகளுடன் தற்போதுள்ள ANTE LECO திறன் மானிகளைப் பயன்படுத்துவதற்கான சாத்தியத்தன்மை பற்றி ஆராயப்பட்டது. ANTE LECO தொடர்பாடல் தொகுதிகளுடன் கொழும்பு நகர மாகாணத்தில் நிறுவப்பட்டுள்ள 50 திறன் மானிகள் இந்த ஆய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டன. தொலைவியக்க மானி வாசிப்பு மற்றும் கட்டணப் பட்டியல் தயாரிப்புக்காக CEBAssist மென்பொருளுடன் இந்த மானிகள் ஒருங்கிணைக்கப்பட்டன. இந்த நடவடிக்கைக்குச் சமாந்தரமாக, R&D கிளையில் உள்ள நிபுணர்கள் தொடர்பாடல் தொகுதியொன்றை நிறுவனத்தினுள்ளேயே வடிவமைப்பதற்கு ஆரம்பித்தனர். தொடர்பாடல் தொகுதிகளை உள்ளடக்கிய ஒரு பூரணமான முறைமை, தலைமுனைய (Headend) முறைமை மற்றும் ஏனைய இடையீட்டு மென்பொருள்கள் என்பன விருத்தி செய்யப்பட்டன. இந்த நடைமுறையில் குறைந்த செலவிலான இருபக்க தொடர்பாடலை இயலச் செய்கின்ற IoT தொழினுட்பத்துடன்கூடிய GPRS தொடர்பாடல் தொழினுட்பம் பயன்படுத்தப்படுகிறது. பல களச் சோதனைகள் செய்யப்பட்டதன் பின், CEBAssist முறைமையுடன் ஒன்றிணைக்கப்பட்டதும் கட்டணப் பட்டியலிடல் செயற்பாடுகளுக்குப் பொருத்தமான தீர்வாக இது இருக்குமென முடிவு செய்யப்பட்டது.

R&D கிளையானது IoT அடிப்படையிலான தரவு கையகப்படுத்தல் முறைமை ஒன்றை வடிவமைத்து விருத்தி செய்ததன் மூலம் NCRE மின்வலு ஆலைகளின் மீள்புதுப்பிக்கத்தக்க சக்திப் பிறப்பாக்கக் கண்காணிப்பில் நீண்ட காலமாக நிலுவையிலுள்ள பிரச்சினைகளுக்கான ஒரு தீர்வைக் கண்டறிவதற்கு முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்திற்கு உதவியிருந்தது. கட்டணப்பட்டியலிடல் சக்தி மானிகளிலிருந்து சக்தித் தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் அவை MQTT இடைத்தரகு மூலம் மத்திய சேவையகம் ஒன்றுக்கு மாற்றப்பட்டது. சக்தித் தரவுகளையும் அதே போன்று முறைமையின் ஆரோக்கியத்தையும் கண்காணிப்பதற்காக முகப்புப்பெட்டி ஒன்று விருத்தி செய்யப்பட்டது. இந்தத் தீர்வு மூலதன மற்றும் மீண்டுவரும் செலவினங்கள் தொடர்பில் கிரய - விளைதிறன்மிக்க தீர்வொன்றாக இனங்காணப்பட்டுள்ளது.



**உரு C 7: NCRE மின்வலு ஆலையொன்றில் நிறுவப்பட்டுள்ள தொடர்பாடல் சாதனம்**

LT மின்சார வலையமைப்பிலுள்ள SLS 1680:2020 இற்கு இணக்கமான கலப்பின இன்வேட்டரின் ஒரு கருவிசார் ஒருங்கிணைப்பு R&D அலகினால் பூர்த்தி செய்யப்பட்டது. இந்த முறைமையானது TOU விதிப்பனவு முறையைக் கொண்டுள்ள வீட்டு மின் நுகர்வு வாடிக்கையாளர்கள் மின்கலத்துடனான மேற்கூரை சூரிய மின்சக்தி PV முறைமை ஒன்றை நிறுவுவதற்கு வசதியளிக்கிறது. இதன் மூலம் மின்தொகுப்பு மின்வழங்கல்களில் தடைகள் ஏற்பட்டால்கூட, தடங்கலற்ற மின்வழங்கலை வாடிக்கையாளர்கள் பெறுவதால் அவர்களின் திருப்தி அதிகரிக்கும்.

## ஒளியூட்டலுக்கான பிராந்திய நிலையம் (RCL)

ஒளியூட்டலின் மூலம் மின்சாரத்திற்கான கேள்வியைக் குறைப்பதற்காக சக்தி வினைத்திறன், நம்பகத்தன்மை மற்றும் தூ ய ஒளியூட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் அவற்றின் பிரயோகங்கள் பற்றிய விழிப்புணர்வையும் சிக்கனத்தன்மையையும் அதிகரித்தல், பிராந்தியத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக சக்தி வினைத்திறனான ஒளியூட்டல் பொருட்களின் பிராந்தியத் தயாரிப்புகளுக்கு வினையூக்கம் அளித்தல், பல பின்தங்கிய குடிமக்களுக்காக மலிவான விலையில் ஒளியூட்டல் பொருட்களைத் தயாரித்தல், தெற்கு ஆசியாவில் நிலைபேறான ஒளியூட்டலை உருவாக்குவதற்காக பிராந்தியத்தில் தேவையான ஊழியர்களைப் பயிற்றுவித்தலும் அவர்களுக்கு அறிவூட்டுதலும் என்பன RCL இன் நோக்கங்களாகும்.

# நிறுவன உபாயப் பிரிவு (தொடர்ச்சி)

### உற்பத்திப்பொருள் சோதனை

RCL ஆனது முழுமையாகத் தயார்படுத்தப்பட்ட, சான்றளிக்கப்பட்ட ஒளி அளவியல் ஆய்வுகூடம் ஒன்றைக் கொண்டிருக்கிறது. இது 1 m மற்றும் 2 m விட்டங்களைக் கொண்ட இரண்டு ஒருங்கிணைந்த கோளங்களையும் ஒரு கோணமானியையும் பிரதான உபகரணங்களாகக் கொண்டிருக்கிறது. இதுவே இலங்கையில் நிறுவப்பட்ட முதலாவது கோணமானியாக இருப்பதுடன் இது ஒளிப் பரம்பலில் உள்ள ஒளிச் செறிவினை பிடிக்கக்கூடிய வல்லமையையும் கொண்டிருக்கிறது. மேலும், சாதாரண ஒளி மூலங்களுக்கு மேலதிகமாக நீண்ட நேர்கோட்டு ஒளி மூலங்களின் ஒளி அளவியல் பரமானங்களை அளவீடு செய்வதற்காக பெரியளவான ஒருங்கிணைந்த கோளமும் எங்களுக்கு உதவும்.

RCL ஆனது மரபுசார்ந்த ஒளியூட்டல் பொருட்களினதும் திட நிலை ஒளியூட்டல் (SSL) பொருட்களினதும் ஒளி அளவியல் மற்றும் மின் அளவுருக்கள் ஆகியவற்றின் சோதனைகளை மேற்கொண்டிருந்தது. தற்போது, இறக்குமதி செய்யப்படும் சகல CFL விளக்குகள் மீதும் இலங்கை நியமங்கள் நிறுவனத்தினால் அடையாள முத்திரையிடும் நிகழ்ச்சித் திட்டமொன்று செயற்படுத்தப்படுகிறது. சகல CFL களும் SLS 1231 மற்றும் SLS 1225 ஆகிய நியமங்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். RCL ஆனது மேலே குறிப்பிடப்பட்ட SLS நியமங்களுடன் இறக்குமதி செய்யப்பட்ட CFL மாதிரிகள் ஒத்திசைவாக உள்ளனவா என்பதைப் பரிசோதிக்கின்றது. மேலும் RCL ஆனது, IEC 62612 நியமத்தின்படி LED உற்பத்திப் பொருட்களின் சோதனையை நடத்துவதுடன், SLS 1530:2016, பொது ஒளியூட்டல் சேவைகளுக்கான சுய நிலைப்படுத்தப்பட்ட LED விளக்குகளுக்கான இலங்கை நியமமான குறைந்தபட்ச சக்தி செயலாற்றுகை நியமம் (MEPS) ஆகியவற்றின்படி, LED மாதிரிகள் ஒத்திசைவாக உள்ளனவா என்பதையும் பரிசோதிக்கிறது.

### கட்டுநாயக்கா திறன் மானியிடல் செயற்றிட்டம் கட்டம் 2 இற்கான செயற்றிட்ட முகாமை அலகு

கட்டுநாயக்காவில் நடைமுறைப்படுத்தப்பட்ட திறன் மின்தொகுப்பு முன்னோடிச் செயற்றிட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, அண்ணளவாக 13,000 நிறுவல்களை உள்ளடக்கிய முழு கட்டுநாயக்கா CSC பிரதேசத்தையும் உள்ளடக்கிய வகையில் அதே செயற்றிட்டத்தின் கட்டம் 2 இனை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு செயற்றிட்ட முகாமை அலகு (PMU) அமைக்கப்பட்டது. PMU ஆனது வெளிவாரியான ஆலோசனை சேவைகளின் உதவியின்றி முழுமையான விலைமனுக் கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றை விருத்தி செய்தது. அந்த விலைமனுக் கோரல் ஆவணங்கள் 2020 டிசெம்பரில் பிரசுரிக்கப்பட்டதுடன் அது 2021 பெப்ரவரியில் மூடப்படும். இதன் நடைமுறைப்படுத்தலை 300 நாட்களில் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. செயற்றிட்டம் பூர்த்தி செய்யப்பட்டதும், தன்னியக்க மானி வாசிப்பும் தொலைவியக்க மின்துண்டிப்பு வசதிகளும் இந்த முறைமையின் முக்கிய வசதிகளாக இருப்பதால் கட்டுநாயக்கா CSC பிரதேசத்திற்கு மானி வாசிப்பாளர்களோ, மின்துண்டிப்பு அணியினரோ தேவைப்பட மாட்டார்கள். இதற்கு மேலதிகமாக, ஒரு விநியோக உபமின் நிலைய கண்காணிப்பு முறைமையும் சுமை விபரங்கள் போன்ற பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளும் கிடைக்கக் கூடியதாக இருக்கும். இ.மி.ச. இன் ERP செயற்றிட்டத்தினால் அறிமுகப்படுத்தப்படவுள்ள MDMS உடன் எதிர்காலத்தில் இந்த முறைமையை ஒன்றிணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு 2.0 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும்.

### நிறுவன வளத் திட்டமிடல்

இ.மி.ச. இன் நிறுவன வளத் திட்டமிடல் (ERP) முறைமை ஆனது முழு நிறுவனத்திலும் தகவல்களை ஒருங்கிணைப்பதை நோக்காகக் கொண்ட ஒரு தன்னியக்க வணிகச் செயன்முறை ஆகும். மின் பிறப்பாக்கம், மின் பரிமாற்றம், மின் விநியோகம் மற்றும் ஒருமுகப்படுத்தப்பட்ட சேவை என்பவற்றிலிருந்தான தனித்துவமான வணிகச் செயன்முறைகள் ஒருங்கிணைக்கப்படுவதால் நிறுவனம் முழுவதும் சகல மட்டங்களிலும் தகவலானது பாயும்.

ERP செயற்றிட்ட விலைமனுச் செயன்முறையானது 2020 ஆம் ஆண்டில் முன்னேற்றம் கண்டுள்ளது. ERP செயற்றிட்டப் பெறுகைக்காக ADB யிடமிருந்து கடன் பெறுபவர்களுக்கான பெறுகை ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியவாறு சர்வதேச போட்டி விலைமனுக் கோரல், தனி நிலை இரு கடிதவுறை விலைமனுக் கோரல் நடைமுறை ஆகியன பின்பற்றப்பட்டன. இ.மி.ச. இலிருந்து கிட்டத்தட்ட 50 விடய நிபுணர்களினதும் விலைமனுதாரர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 30 நிபுணர்களினதும் பங்குபற்றலுடன் இ.மி.ச. இனுள் முதலாவது மெய்நிகர் எண்ணக்கரு ஆதாரச் (POC) செயன்முறையை நடத்துவதற்கு இ.மி.ச. யினால் முடிந்திருந்தது. 2020 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டிற்குள், விலைமனு மதிப்பீட்டின் இறுதிக் கட்டம் அடையப்பட்டிருந்தது.

செயற்றிட்டத்தின் கட்டம் 01 இனை 02 வருடங்களிலும் செயற்றிட்டத்தின் கட்டம் 02 இனை இன்னும் 01 வருடத்திலும் பூர்த்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.




**உரு C 8: ERP செயற்றிட்ட அணுகுமுறை**



செயற்பாட்டு மீளாய்வு

# ஆளணிக் கிளை

# உள்ளகக் கணக்காய்வுக் கிளை

# சட்ட அலகு

# விசேட புலனாய்வு அலகு

# ஏனைய நிகழ்வுகள்

## ஆளணிக் கிளை

இ.மி.ச. இன் ஆளணிக் கிளையானது நிறுவனத்தின் முக்கிய தொழிற்பாடுகளுக்கு உதவுவதற்காக உத்தம மட்டத்தில் மனித வளங்களை ஆட்சேர்ப்புச் செய்து, பயிற்சியளித்து, தக்கவைத்துக் கொள்வதற்குப் பொறுப்பாக உள்ளது. இந்த இலக்கை அடைந்து கொள்வதற்காக, ஆளணிக் கிளையானது மனித வளத் திட்டமிடல், ஆட்சேர்ப்பு, இடப்படுத்தல், பதவியுயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள், பல்வேறு பணித்தொகுதியினருக்குமான கொள்கைகளை வகுத்தல், வெகுமதி முகாமைத்துவம் மற்றும் ஒழுக்காற்று விடயங்களைக் கையாளுதல் போன்ற பல்வேறு மனித வளத் தொழிற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் நிறுவனத்தின் புதிய ஆட்சேர்ப்பு விபங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

உரு 01 : புதிய ஆட்சேர்ப்பு விபரங்கள் - 2020 ஆம் ஆண்டு




மேலும், 399 ஊழியர்கள் இந்தக் காலப்பகுதியினுள் சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருப்பதுடன் 81 ஊழியர்கள் இராஜினாமா, இறப்பு மற்றும் தொழில் முடிவுறுத்தல் போன்ற பல்வேறு காரணங்களால் நிறுவனத்தை விட்டு விலகியிருந்தனர். ஆண்டின் இறுதியில் உள்ளடங்கலான மொத்த ஊழியர்களில், நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை 21,262 ஆகவும் அமய ஊழியர்களின் எண்ணிக்கை 1,485 ஆகவும், ஒப்பந்த ஊழியர்களின் எண்ணிக்கை 118 ஆகவும், 4 வருட பயிலுநர் பயிற்சித் திட்டத்தின் கீழுள்ள பயிற்சியாளர்களின் எண்ணிக்கை 2,759 ஆகவும் காணப்பட்டது. இந்த ஊழியர்கள் 18 வயது தொடக்கம் 60 வயது வரையான பல்வேறு வயதுக் பிரிவுகளிலும் இருக்கின்றனர்.

கீழ்வரும் வரைபு 2020 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ஊழியர்களின் வயதுப் பகுப்பாய்வினைக் காட்டுகிறது.

உரு 02 : 2020 டிசெம்பர் 31 இலான வயதுப் பகுப்பாய்வு




அதன் மாறுபட்ட வேலைப்படை காரணமாக, இ.மி.ச. ஆனது 3 ஆண்டு தொடக்கம் 30 ஆண்டிற்கும் மேற்பட்ட சேவை அனுபவங்களைக் கொண்ட ஊழியர்களைக் கொண்டிருக்கிறது. அடுத்துவரும் விளக்கப்படமானது ஒட்டுமொத்த இ.மி.ச. ஊழியர்களின் சேவை அனுபவங்கள் எதிர் அவர்கள் நிறுவனத்தில் சேவையாற்றிய ஆண்டுகளின் எண்ணிக்கையைக் குறிக்கிறது.

உரு 03 : 2020 செம்பர் 31 இலான ஊழியர்களின் சேவைப் பகுப்பாய்வு




இ.மி.ச. இன் ஒட்டுமொத்த வேலைப்படையையும் நிறைவேற்றுத் தரத்தினர், நடுத்தர மட்ட தொழில்நுட்ப சேவையினர், திறன்மிக்க தொழில்நுட்ப சேவையினர், கனிஷ்ட மற்றும் திறனற்ற தொழில்நுட்ப சேவையினர், எழுதுவினைஞர் மற்றும் அதனோடிணைந்த சேவை வகுதியினர் மற்றும் ஏனைய தொழில்நுட்பமற்ற பணித்தொகுதி சேவைத் தரத்தினர் என பல்வேறு தரங்களில் மேலும் வகைப்படுத்த முடியும். ஊழியர் சேவை வகைகளுக்கேற்ப, அவர்களின் பகுப்பாய்வு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

உரு 04 : 2020 டிசெம்பர் 31 இலான ஊழியர்களின் வகைப் பகுப்பாய்வு




### கொள்கை அலகு

இந்த அலகானது மனித வளத் (HR) திட்டமிடல், உரிய நேர இற்றைப்படுத்தல்களுடன் சகல இ.மி.ச. ஆளணி தொடர்பான கொள்கைகளையும் பேணுதல், இ.மி.ச. ஊழியர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்தைப் பேணுதலும் தேவையானவிடத்து அவசியமான திருத்தங்களைச் செய்தலும், மனித வள நிருவாகம் தொடர்பான சிக்கல்கள் மீது தெளிவுபடுத்தல்களை வழங்குதல், ஊழியர்களின் சம்பளம் தொடர்பான விடயங்களைக் கையாளுதல், ஆளணி தொடர்பான கணிசமானளவு சட்ட வழக்குகளைக் கையாளுதல், மனித வளக் கொள்கைகள் மற்றும் நிருவாகம் தொடர்பான சுற்றறிக்கைகளை விநியோகித்தல் ஆகியவற்றுக்குப் பொறுப்பானதாகும்.

2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில், கொள்கை அலகானது 21 சுற்றறிக்கைகளை விநியோகித்திருப்பதுடன் ஆளணி விடயங்கள் தொடர்பான 12 முக்கியமான சபைப் பத்திரங்களையும் சமர்ப்பித்துள்ளது.

### ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மற்றும் ஒழுக்காற்று விடயங்கள் அலகு

இந்த அலகானது சகல உள்ளக மற்றும் வெளிவாரியான ஆட்சேர்ப்பு, நிறைவேற்றுத் தரப் பதவிகளுக்கான உள்ளக ரீதியான விளம்பரங்களை மிதக்கவிடுதலும் பதவி வெற்றிடங்களை நிரப்புதலும், நிறைவேற்றுத்தர அதிகாரிகளின் சகல தரங்களுக்குமிடையிலான பதவியுயர்வுகள் மற்றும் சகல பதவியணியால் கட்டுப்படுத்தப்பட்ட பதவியுயர்வுகளைக் கையாளுதல், மற்றும் பொது முகாமையாளரின் செயலெல்லையின் கீழ் வருகின்ற ஒழுக்காற்று விடயங்கள் போன்றவற்றைக் கையாளுகிறது.

### இடமாற்றங்கள் மற்றும் பொது அலகு

பிரிவுகளுக்கிடையிலான சகல வகை வருடாந்த இடமாற்றங்கள் மற்றும் ஒத்துமாறல் இடமாற்றங்கள் ஆகியவற்றின் நடைமுறைப்படுத்தல் இந்தக் கிளையினால் முன்னெடுக்கப்படுகிறது.

மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் அலகின் முன்னேற்றம் கீழ்வருமாறு :

உரு 05 : 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றங்களின் விபரங்கள்




### பெயர்வழிக் கோப்பு அலகு

நிறுவன உபாயப் பிரிவில் பணியாற்றுகின்ற அனைத்து ஊழியர்களினதும் பொது முகாமையாளரின் கீழுள்ள கிளைகள் மற்றும் அலகுகளினதும் பெயர்வழிக் கோப்புகள் இந்த அலகின் செயல் எல்லையின் கீழ் வருகின்றன. 92 சிரேஷ்ட நிறைவேற்றுத்தர அதிகாரிகளின் கோப்புகள் உள்ளிட்ட ஒட்டுமொத்தமாக 608 பெயர்வழிக் கோப்புகள் இந்த அலகினால் கையாளப்படுகின்றன.

### சேமநலன் அலகு

இ.மி.ச. ஊழியர்களின் சேமநலன்களைக் கவனிப்பதற்காகவும் அவர்களுடைய வேலையையும் வாழ்க்கையையும் சமநிலையில் பேணுவதற்காகவும் இ.மி.ச. ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற வசதிகள் மற்றும் நலங்களின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்கான தொழிற்பாடுகளை ஆற்றுவதற்காகவும் சேமநலன் அலகு தாபிக்கப்பட்டுள்ளது.

மலிவான விலையில் பாதுகாப்பான தங்குமிடங்களையும் ஏனைய வசதிகளையும் வழங்கும் எதிர்பார்ப்புடன், நாடு பூராகவும் உள்ள முக்கியமான இடங்களில் இ.மி.ச. ஆனது சுற்றுலா பங்களாக்களின் ஒரு வலையமைப்பைப் பேணுகிறது. எல்லாமாக, 33 சுற்றுலா பங்களாக்கள் ஊழியர்களுக்கான களியாட்ட மற்றும் உத்தியோகபூர்வ தங்கல்களுக்கு வழங்கப்படுவதற்காக நாடு பூராகவும் செயற்படுகின்றன. இந்த வசதி ஊழியர்களுக்குக் கிடைக்கக்கூடிய பாரிய நன்மைகளில் ஒன்றாகும். ஊழியர்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்குடன்



உரு 06 : புதுப்பிக்கப்பட்ட சுற்றுலா பங்களா - நுவரெலியா

இத்தகைய பங்களாக்களில் வழங்கப்படுகின்ற வசதிகளுக்கான தொடர்ச்சியான மேம்படுத்தல்கள் செய்யப்படுகின்றன.

இ.மி.ச. ஊழியர்களுக்கான உத்தியோகபூர்வ தங்கல்களுக்கு வசதியளிப்பதற்காக நோய்ப் பரவல் காலப்பகுதியிலும்கூட கடுமையான விதிகள், தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் கோவிட் 19 தடுப்பு வழிகாட்டல்களின் பின்பற்றல் ஆகியவற்றின் கீழ், இந்த பங்களாக்கள் இயக்கப்படுகின்றன.

மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில், கடமை நோக்கங்களுக்காக கொழும்பு நகரின் இதயப் பகுதியான கொழும்பு 02 இல் ஒரு புதிய சுற்றுலா பங்களா தாபிக்கப்பட்டதுடன் நுவரெலியாவில் அமைந்துள்ள சுற்றுலா பங்களாவும் நவீன கட்டடக்கலை தோற்றத்துடன் புதுப்பிக்கப்பட்டது.

சமய நிகழ்வுகளை ஊக்கப்படுத்தும் முகமாக, இ.மி.ச. பௌத்த சங்கம் மற்றும் கிறிஸ்தவ சங்கம் போன்ற சங்கங்கள் ஊடாக ஊழியர்களால் ஏற்பாடு செய்யப்படுகின்ற வெசாக், பொசன் மற்றும் நத்தார் பண்டிகைகளுக்கு இ.மி.ச. வருடாந்தம் தமது பங்களிப்புகளை நல்குகிறது.

2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில், நாடு நோய்ப் பரவலுக்கு முகம் கொடுத்திருந்த போதிலும், அத்தகைய அனைத்துத் தொழிற்பாடுகளும் எளிமையாக ஆனால் வைபவரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டன. இ.மி.ச. இன் இணை அனுசரணையுடன் மிஹிந்தலையில் நடைபெற்ற "ජාතික පොසොන් උත්සවය" மற்றும் "මිහින්තලා ආලෝක පූජාව-2020" ஆகிய நிகழ்வுகளை கலாசார அலுவல்கள் அமைச்சு ஏற்பாடு செய்திருந்தது. சேமநலன் அலகானது இத்தகைய நிகழ்வுகள் வெற்றிகரமாக நடப்பதற்கு அரசாங்க நிறுவனங்கள் மத்தியிலான அனைத்து உத்தியோகபூர்வ ஒருங்கிணைப்புகளுக்கும் வசதியளித்திருந்தது.

சேமநலன் அலகானது 2020-02-28 ஆந் திகதி நாடு பூராகவுமுள்ள இ.மி.ச. வளாகங்களில் "சிரமதான நிகழ்ச்சித் திட்டம்" ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. பொறியியலாளர் டி.ஜே. விமலசுரேந்திரவின் 146 ஆவது ஜனன தினத்தை நினைவுகூரும் முகமாகவும் நிறுவனத்தின் 51 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட உத்தியோகபூர்வ வைபவங்கள் முறையே 2020-09-17 மற்றும் 2020-11-02 ஆந் திகதிகளில் இ.மி.ச. தலைமையகத்தில் இடம்பெற்றன.

கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக, இ.மி.ச. இன் பொழுதுபோக்கு கழகத்தினால் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட விளையாட்டுச் செயற்பாடுகள் முன்னைய ஆண்டைப்போல இடம்பெறவில்லை. எவ்வாறாயினும், இலங்கை மின்சார சபை மட்டைப்பந்தாட்ட அணி சகல மூன்று போட்டிகளையும் வெற்றி கொண்டதுடன் அரச சேவை மட்டைப்பந்தாட்ட போட்டிப் பந்தயம் 2019/2020 இன் C/D பிரிவுக்கு தெரிவு செய்யப்பட்டது.

## உள்ளகக் கணக்காய்வுக் கிளை

உள்ளகக் கணக்காய்வுக் கிளையானது பிரதம உள்ளகக் கணக்காய்வாளரால் தலைமை தாங்கப்படுகிறது. இது தனது நிறுவன ஆளுகை பொறுப்புக்கூறலை நிறைவேற்றுவதில் சபை மற்றும் முகாமைக்கு உதவுவதற்காக 85 உதவி அலுவலர்களைக் கொண்டிருக்கின்ற அதே வேளை நிறுவனத்தினுள் பயனுறுதி மற்றும் வினைத்திறன் வாய்ந்த வணிக மற்றும் செயற்பாட்டுச் செயன்முறைகளை மேம்படுத்தி, ஊக்குவிக்கிறது.

செயன்முறைகள் நோக்கம் கொண்டவையாகத் தொழிற்படுகின்றனவா எனவும் நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் அடையப்பட வேண்டிய இலக்குகளைப் பூர்த்தி செய்ய உதவுமா என்பதையும் சுயாதீனமாக மதிப்பீடு செய்யும் பொருட்டு, ஒரு நிறுவனத்தின் தற்போதைய இடர் முகாமைத்துவம், கட்டுப்பாடுகள் மற்றும் ஆளுகைச் செயன்முறைகள் ஆகியவற்றின் போதுமான தன்மை மற்றும் பயனுறுதித் தன்மை ஆகியவற்றை மதிப்பீடு செய்வதே உள்ளகக் கணக்காய்வின் நோக்கம் ஆகும்.

சகல அலகுகள், கிளைகள் மற்றும் பிரிவுகளில் ஓர் அடுக்கு நிகழ்வுகளின் அடிப்படையில் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுவதுடன் இவற்றின் எண்ணிக்கையை மதிப்பீடு செய்யப்பட்ட இடர் மட்டம் மற்றும் ஊழியர் கிடைப்பனவு ஆகியன தீர்மானிக்கின்றன. 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில், மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் விபரங்கள் கீழ்வருமாறு :

**உரு 07 : 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற கணக்காய்வுகளின் விபரங்கள்**




2020 ஆம் ஆண்டின் காலப்பகுதியில், இ.மி.ச. இல் அறிமுகப்படுத்தப்பட்ட குறித்த முறைமைகள் இருக்கின்றனவா என்பதையும் அவை அக்கறையுள்ள அதிகாரிகளால் பயனுறுதிமிக்க வகையில் செயற்படுத்தப்படுகின்றனவா என்பதையும் பரிசோதிப்பதற்கு முறைமைக் கணக்காய்வுகளின் போது கவனத் செலுத்தப்பட்டது.

## சட்ட அலகு

இ.மி.ச. இனால் தாக்கல் செய்யப்படும் நீதிமன்ற வழக்குகளிலிருந்து எழுகின்ற வழக்காடல் வேலைகள் அதே போன்று இ.மி.ச. இற்கு எதிராக வேறு தரப்பினரால் தாக்கல் செய்யப்படுகின்ற நீதிமன்ற வழக்குகளுக்கான வழக்காடல் வேலைகள் உள்ளிட்ட நிறுவனத்தின் சகல சட்ட வேலைகளும் வழக்காடல் விடயங்களும் சட்ட அலகினால் கையாளப்படுகின்றன.

முதலாவது வகையில் உள்ளடக்கப்படுபவை :

- மானிக் குறைபாடுகள்/மானியில் மோசடியாக திருத்தம் செய்தல் ஆகியவற்றின் விளைவாக மேற்கொள்ளப்படும் மின்சாரப் பட்டியல் திருத்தங்கள்/ மின் துண்டிப்புகளை அடுத்து ஏற்படுகின்ற நிலுவைத் தொகைகளை வசூலித்தல்
- உடன்படிக்கை/ஒப்பந்த மீறுகையால் எழுகின்ற பிரச்சினைகள்
- இ.மி.ச. ஆதனங்கள்/ வாகனங்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கான மீட்பு நடவடிக்கைகள்
- இ.மி.ச. தங்குவிடுதிகள்/ காணி விடயங்களின் உடமை மீட்பு

இரண்டாவது வகையில் உள்ளடக்கப்படுபவை :

- மின் துண்டிப்புகள் மற்றும் மின்சாரக் கட்டணப் பட்டியல்களுக்கு எதிரான நிறுவனமயப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள்
- மூன்றாம் தரப்பினரின் ஆதனங்களுக்கு மேலாக மின்சார மார்க்கங்களை கொண்டு செல்வதற்கு எதிரான தடை உத்தரவுகள்/ இடைநிறுத்தல் கட்டளைகள். / சொல்லப்பட்ட ஆதனங்கள், காணிகள், மரங்கள்/ பயிர்ச் செய்கை போன்றவற்றிற்கு ஏற்படும் சேதங்களுக்கான உரிமைக் கோரிக்கைகள்
- விலைமனுக்கள்/ஒப்பந்த விடயங்களை மீறுதல், நடைமுறையை மீறுதல், சேதங்களுக்கு உரிமைக் கோரிக்கை செய்தல்.
- அடிப்படை உரிமைப் பிரயோகங்கள், தொழிலை முடிவுறுத்தல், தொழில் தருநர் எதிர் ஊழியர் பிரச்சினைகள் போன்றவற்றுடன் தொடர்புடைய தொழில் நியாயசபை/ கைத்தொழில் நீதிமன்றம்/ தொழில் திணைக்கள விடயங்கள்

மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் அலகினால் கையாளப்பட்ட நீதிமன்றப் பணிகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| நீதிமன்றத்தின் பெயர் | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| உயர் நீதிமன்றம் | 35 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 45 |
| சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்றம் | 23 |
| மாவட்ட நீதிமன்றம் | 164 |
| தொழில் நியாயசபை மற்றும் கைத்தொழில் நீதிமன்றம் | 32 |
| நீதிவான் நீதிமன்றம் | 12 |

மேலுள்ளவற்றுக்கு மேலதிகமாக, சபைக்கும் ஊழியர்களுக்கும் இடையிலான பிணக்குகள், தொழிலை முடிவுறுத்தல், தொழிலை விட்டு தாமாகவே நீங்கியமை பற்றிய அறிவித்தல்கள் மற்றும் மனக்குறைகள் தொடர்பான ஊழியர்களின் விடயங்கள் என்பனவும் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு ஏற்ப பின்வரும் தீர்ப்பாயங்களில் கையாளப்படுகின்றன :

- தொழில் நியாயசபை
- தொழில் திணைக்களம்
- மனித உரிமை ஆணைக்குழு
- கைத்தொழில் நீதிமன்றம்

சட்ட அலகானது குற்றச்சாட்டுப் பத்திரங்கள், நிரந்தர அடிப்படையிலான ஒப்பந்தங்கள் பற்றிய நியமனக் கடிதங்கள் மற்றும் பெறுநர்களுக்கு உத்தியோகபூர்வமாக வழங்கப்படுவதற்கு முன்னர் தொழிலாளர் விடயங்களுடன் தொடர்புடைய ஆவணங்கள் போன்றவற்றை நுணுகி ஆராய்வதற்குப் பொறுப்பாக உள்ளது.

சகல நிதிசார் உடன்படிக்கைகள், வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகள் ஆகியவை உள்ளிட்ட வெளித் தரப்பினருடன் இ.மி.ச. செய்து கொள்ளும் உடன்படிக்கைகள் / ஒப்பந்தங்களின் சட்ட வலிதாந்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் இந்த அலகு பொறுப்பானதாகும்.

இதற்கு மேலதிகமாக, 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐந்து மத்தியஸ்த விடயங்கள் சட்ட அலகினால் கையாளப்பட்டிருந்தன.

## விசேட புலனாய்வு அலகு

சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெறுதல் (கொழுவல்) மற்றும் மின்மானியில் மோசடியாக திருத்தம் செய்தல் ஆகியன பற்றிய புலனாய்வுகளைத் துரிதப்படுத்தும் நோக்கில் 1995 ஆம் ஆண்டில் விசேட புலனாய்வு அலகு தாபிக்கப்பட்டது. பதினெட்டு பறப்புப் படையணிகள் இவ்வாறான புலனாய்வுகளை முன்னெடுப்பதற்காக மாகாணங்களில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக, 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அலகினால் ஆறு மாதங்களுக்கு மாத்திரமே திடீர் சோதனைகளை முன்னெடுக்க முடிந்ததுடன் அவை தொடர்பான தகவல்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன :

| வழக்குகள் | வெற்றியளித்த வழக்குகள் | நீதிமன்றத் தண்டப்பணம் (மில். ரூபா) | இ.மி.ச. இழப்பு (மில். ரூபா) | மொத்தம் (மில். ரூபா) |
|---|---|---|---|---|
| மின்மானி வழக்குகள் | 1090 | 3.09 | 60.25 | 63.34 |
| கொழுவல் வழக்குகள் | 149 | 0.43 | 2.05 | 2.48 |
| மொத்தம் | 1239 | 3.51 | 62.31 | 65.82 |

மேற்படி நடவடிக்கைகளுக்குப் புறம்பாக, பல்வேறு மூலங்கள் ஊடாகக் கிடைக்கப்பெற்ற ஒழுங்கீனங்கள் தொடர்பில் SIU இனால் பரிசீலனைகள் செய்யப்பட்டதுடன் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

## சனவரி

2020 சனவரி 09 ஆந் திகதி அரிமா சங்கத்துடன் இணைந்து மேல் கொத்மலை PS இன் சேமநலன் சங்கத்தால் இரத்த தானச் செயற்பாடும் இலவச மருத்துவ முகாமும் ஒழுங்கு செய்யப்பட்டன. இந்த நிகழ்வின்போது 200 பைன்டுகள் இரத்தம் வழங்கப்பட்டது.

## மே

கொடகவெல CSC ஆனது 2020 மே 23 ஆம் திகதி புதிய இடத்திற்கு இடமாற்றப்பட்டது.



## யூன்

மட்டக்களப்பு பிரதேசத்தில் கிரான் CSC ஆனது 2020 யூன் 26 ஆந் திகதி தாபிக்கப்பட்டது.



## யூலை



ஹாலிஎல மாகாணக் களஞ்சியம் 2020 யூலை 22 ஆந் திகதி புதிய கட்டடம் ஒன்றில் தாபிக்கப்பட்டது.



இரத்மலானை பிரதேச அலுவலகம் 2020 யூலை 30 ஆந் திகதி ஒரு புதிய இடத்திற்கு இடமாற்றப்பட்டது.

# ஏனைய நிகழ்வுகள் (தொடர்ச்சி)

## ஆகஸ்ட்



ஒரு புதிய பிரதேச அலுவலகம் 2020 ஆகஸ்ட் 14 ஆந் திகதி மஹியங்கணையில் தாபிக்கப்பட்டது.



ஒரு புதிய CSC ஆனது 2020 ஆகஸ்ட் 14 ஆந் திகதி ஹெதீமாலியத்தவில் தாபிக்கப்பட்டது.



2020 ஆகஸ்ட் 30 ஆந் திகதி தெஹிவளையிலுள்ள புதிய மின் விநியோகப் பிரிவு 4 இற்கான தலைமையகக் கட்டடத் தொகுதியில் குடியேறி முதலாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக தானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

## செப்ரெம்பர்

- மதுரங்குளிய CSC ஆனது 2020 செப்ரெம்பர் 17 இல் தாபிக்கப்பட்டது.
- கேகாலை பிரதேசத்தில் உள்ள அலகாமவில் ஒரு புதிய CSC ஆனது 2020 செப்ரெம்பர் 17 இல் தாபிக்கப்பட்டது.
- கம்பளை பிரதேசத்தில் உள்ள குருந்துவத்தையில் புதிய POS கருமபீடம் 2020 செப்ரெம்பர் 18 ஆந் திகதி தாபிக்கப்பட்டது.
- 2020 செப்ரெம்பர் 23 ஆந் திகதி DD4 தலைமையகத்தில் பிரித் ஓதும் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது.
- புதிதாக புனரமைப்புச் செய்யப்பட்ட உபமின் நிலையம் D ஆனது 2020 செப்ரெம்பர் 29 ஆந் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.
- சேருநுவர ECSC ஆனது 2020 செப்ரெம்பர் 29 ஆந் திகதி தாபிக்கப்பட்டது.
- அம்பாறை பிரதேசத்தில் உகண CSC ஆனது 2020 செப்ரெம்பர் 30 ஆந் திகதி தாபிக்கப்பட்டது.







# ஏனைய நிகழ்வுகள் (தொடர்ச்சி)

## அக்டோபர்

மாகோ பிரதேச அலுவலகம் 2020 அக்டோபர் 6 ஆந் திகதி தாபிக்கப்பட்டது.



## நவெம்பர்

- 2020 நவெம்பர் 18 ஆந் திகதி அரசாங்க முகவராண்மையின் (DD4 தலைமையகம்) உள்ளகத் தொடர்பாடல் நோக்கங்களுக்காக நாட்டில் முதன் முறையாக டிஜிடல் கையெழுத்து வசதி அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2020 நவெம்பர் 27 ஆந் திகதி அம்பலாந்தோட்டை CSC தாபிக்கப்பட்டது.



## டிசெம்பர்

- புத்தளம் பிரதேச அலுவலகம் 2020 டிசெம்பர் 09 ஆந் திகதி புதிய கட்டடம் ஒன்றிற்கு இடமாற்றப்பட்டது.
- 2020 டிசெம்பர் 10 ஆந் திகதி யாழ்ப்பாணம் கிழக்கு பிரதேச அலுவலகம் தாபிக்கப்பட்டது.
- 2020 டிசெம்பர் 24 ஆந் திகதி மேல் மாகாணம் தெற்கு 1 மின்மாற்றி பராமரிப்பு அலகு தாபிக்கப்பட்டது.
- இரத்மலானையில் ஒரு புதிய நிருமாண சாலை தாபிக்கப்பட்டது.
- தம்புள்ள பிரதேசத்தில் கலேவெல CSC தாபிக்கப்பட்டது.
- கம்பஹா பிரதேசத்தில் 2020 டிசெம்பர் 31 ஆந் திகதி கிரிந்திவெல பிரதேச அலுவலகம் தாபிக்கப்பட்டது.







செயற்பாட்டு மீளாய்வு

இடர் மீளாய்வு

நிலைபேற்று அறிக்கை

நிறுவன சமூகப் பொறுப்பு அறிக்கை

# இடர் மீளாய்வு

இதுவரை இ.மி.ச. ஒரு இடர் கொள்கையைப் பின்பற்றியிருக்கவில்லை அல்லது முறையான இடர் முகாமைத்துவ வேலைச் சட்டகத்தை அதன் செயற்பாடுகளில் முழுமையாக ஒன்றிணைத்திருக்கவில்லை. நிறுவன உபாயப் பிரிவினால் முன்னதாக இடர் கொள்ளை ஒன்றைத் தயாரிப்பதற்கும் இடர் மதிப்பீட்டு நடைமுறையொன்றைக் கூட்டிணைப்பதற்கும் தற்காலிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால், உயர் எதிர்மறையான பின்விளைவுகளைத் தருகின்ற நிகழ்வுகள், கோவிட் 19 நோய்ப் பரவல் போன்றவற்றால் அந்தச் செயற்பாடு திடீரென முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. எவ்வாறாயினும், நிதிப் பிரிவு, நிதிசார் இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகம் ஒன்றை நடைமுறைப்படுத்தியது.

கோவிட் 19 நோய்ப் பரவல் ஆனது முழு இ.மி.ச. இலும் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தது. இதனால் அனைத்துச் செயற்பாட்டுப் பிரிவுகளும் பாதிக்கப்பட்டன. பயணக் கட்டுப்பாடுகள், முடக்கங்கள், கடுமையான ஆனால் கட்டுப்பாடான சுகாதார ஒழுங்குவிதிகள் மற்றும் உலகளாவிய ரீதியிலான சமூக, நிருவாக மற்றும் நிதித் தொழிற்பாடுகளின் இடையூறு ஆகியவற்றைச் சமாளிப்பதற்கு வேலை நடைமுறைகளை மாற்ற வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், இடர்கள் எதிர்மறையான பின்விளைவுகளை மாத்திரமே ஏற்படுத்தும் என்பதற்கான அவசியம் ஏதுமில்லை. கோவிட் 19 நோய்ப் பரவலின் ஒரு நேர்மறையான பின்விளைவு இ.மி.ச. அதன் டிஜிடல் தீர்வுகளை விருத்தி செய்யும் உந்துதல் ஆகும்.

வெள்ளப் பெருக்குகள், சூறாவளிகள் போன்ற இயற்கை அனர்த்தங்களுடன் தொடர்புடைய மற்றைய குறைந்த சாத்தியக்கூறுள்ள உயர்ந்த எதிர்மறையான பின்விளைவுகள் 2020 இல் ஏற்படவில்லை. தேசிய இடர் முகாமைத்துவ அதிகாரிகாரிகளுடனான இ.மி.ச. இன் உறவினால் இந்த இடர்கள் தணிக்கப்படுகின்றன.

## உயர் பின்விளைவு இடர் காரணிகள்

### தொழினுட்ப அம்சங்கள்

### இடரை அடையாளம் காணுதல்

இ.மி.ச. இன் செயற்பாடுகளின் தன்மை மற்றும் மின்சார ஆபத்துகள் காரணமாக அதன் செயல்பாடுகளின் ஒரு பகுதியாக இடர் தணிப்பு நடைமுறைகள் காணப்படுகின்றன. தரம், நம்பகத்தன்மை மற்றும் சிக்கனத் தன்மை கொண்ட மின்சார வழங்குநர் ஒருவராக நிறுவனத்தின் முறையான தொழிற்பாட்டைப் பாதிக்கின்ற இடர்களை இலங்கை மின்சார சபை அடையாளம் கண்டிருந்தது.

இடர்களை இனங்கண்டு, அவை நிகழ்வதற்கான வாய்ப்பு மற்றும் அளவு, அதன் சாதகங்கள் மற்றும் பாதகங்கள் ஆகியவற்றுக்கு இணங்க வகைப்படுத்தி, பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பது மிகவும் முக்கியமானதாகும். இனங்காணப்பட்டு, வகைப்படுத்தப்பட்ட அதிக பின்விளைவு கொண்ட சில இடர்கள் பற்றி திட்டமிடல் செயன்முறைகள், நிறுவனத் திட்டம், நீண்ட கால மின் பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டம், நீண்ட கால மின் பரிமாற்ற அபிவிருத்தித் திட்டம் மற்றும் பாதீடுகளில் சேர்க்கப்படுகின்றன. ஏனையவை பொறுப்பு வாய்ந்த பிரிவுகளால் அவசரகால நடைமுறைகளில் கையாளப்படுகின்றன. இதற்கான உதாரணமாக, 2020-08-17 ஆந் திகதி நாடுபூராகவும் ஏற்பட்ட மின்தடையின் பின்னர் முறைமையை மறுசீரமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட நடைமுறைகளைக் குறிப்பிடலாம். அதிக எதிர்மறை கொண்ட பின்விளைவைத் தரும் நிகழ்வானது அதிக வாய்ப்புள்ள ஒரு நிகழ்வாகக் கருதப்படுகிறது.

### நிதிசார் இடரும் தொழினுட்பச் செயலாற்றுகை மீது அதன் தாக்கமும்

கிரயப் பிரதிபலிப்பு / கிரய மீட்பு விதிப்பனவைக் கொண்டிராதது அதிக பின்விளைவைக் கொண்ட இடர் காரணி ஒன்றாகும். அந்த இடர் நிதிச் செயலாற்றுகையை மாத்திரமின்றி தொழினுட்பச் செயலாற்றுகையையும்கூட பாதித்திருக்கிறது.

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் பிரிவு 30(2)(b) இன் கீழ், அதிகாரமளிக்கப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஏற்படும் அனைத்து நியாயமான செலவுகளையும் மீட்பதற்கு இ.மி.ச. அனுமதிக்கப்படுகிறது. அந்தச் சரத்தானது, இ.மி.ச. தனது அதிகாரமளிக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகளை நிதி ரீதியாக சாத்தியமான முறையில் தொடர முடியும் என்பதை உறுதிப்படுத்துகிறது. எவ்வாறாயினும், கிரய மீட்பு விதிப்பனவு ஒன்றைக் கொண்டிராமை, இ.மி.ச. அதன் முக்கிய தொழிற்பாடுகளை வினைத்திறனாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் ஆற்ற முடியாமலிருக்கின்ற இடரை அதிகரித்திருந்தது.

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் பகுதி V இன் கீழ், இ.மி.ச. தனது கிரயங்களை மீட்பதற்காக விதிப்பனவுகள் மற்றும் கட்டணங்களை வகுத்தமைப்பதற்கு அதிகாரத்தைக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த அதிகாரம் இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் இரத்துச் செய்யப்பட்டு, ஒழுங்குபடுத்துநரான இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு (PUCSL) அவ்வதிகாரம் வழங்கப்பட்டது. நாடு முழுவதும் ஒரே சீரான தேசிய விதிப்பனவை (UNT) அரசு கொள்கையாகக் கொண்டிருப்பதால், UNT நடைமுறையிலிருக்கும் காலப்பகுதியில் சகல நுகர்வோருக்கும் ஏற்புடைய வகையில் இறுதிப் பயனர் விதிப்பனவு அட்டவணையை நிர்ணயிப்பது PUCSL இன் பொறுப்பாகும். ஒரு தனி உரிமதாரர் அவ்வாறு செய்ய முடியாது. இருப்பினும், 2014 இல் விதிப்பனவில் குறைப்பொன்று செய்யப்பட்ட போதிலும் 2013 ஆம் ஆண்டிலிருந்து இறுதிப் பயனர் விதிப்பனவில் அதிகரிப்பு எதுவும் செய்யப்படவில்லை. குறைந்த கிரய மின்வலு ஆலைகளை நிருமாணிப்பதற்கான இயலாமைகூட நிதிசார் நட்டத்தை அதிகப்படுத்தியது. திரவநிலை இயற்கை எரிவாயுவின் (LNG) அறிமுகப்படுத்தலுடன், இ.மி.ச. மின் பிறப்பாக்கல் கிரயத்தில் சில குறைப்புகளை எதிர்பார்த்தது. எனினும், LNG யுடனும்கூட இ.மி.ச. இன் வருவாய், விதிப்பனவு அதிகரிப்பு அல்லது மானியங்களின் வழங்கல் மூலமான அரசாங்கத்தின் தலையீடு இன்றி கிரய மீட்பு மட்டத்தை அடையுமென எதிர்பார்க்க முடியவில்லை.

அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளால் தேவைப்படும் மானியத்தைச் திருப்பிச் செலுத்துவதற்கான நடவடிக்கைகளுக்காக இ.மி.ச. இன்று வரை தொடர்ந்தும் PUCSL ஐக் கோருகிறது.

### போதுமானதல்லாத பிறப்பாக்கல் கொள்ளளவு இடர்

இ.மி.ச. இன் நீண்ட கால மின் பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டங்களில் அடையாளம் காணப்பட்டவாறான மின்வலுக் கொள்ளளவுகள் (நீண்ட காலத் தேவைகள் மற்றும் நடுத்தர கால நிறுத்த இடைவெளி தேவைகள் ஆகிய இரண்டிற்குமான) திட்டமிட்டபடி நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் இ.மி.ச. விரும்பியதைவிட குறைந்த ஒதுக்கக் கொள்ளளவு எல்லையுடன் இயங்குகிறது. திட்டமிடப்பட்ட பிறப்பாக்கல் சேர்க்கைகளை உரிய நேரத்தில் நிருமாணிக்க முடியாமையானது ஒரு பாதகமான சுழற்சியை உருவாக்குகிறது. குறைந்த ஒதுக்க எல்லையானது தற்போதுள்ள மின்வலு ஆலைகளை தடுப்புப் பராமரிப்பு அல்லது வேறு வழக்கமான பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்காக அட்டவணைப்படி எடுப்பதிலிருந்து தடுக்கிறது. அது இயந்திரங்களின் நம்பகத்தன்மையைப் பாதிப்பதுடன் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கு கிடைக்கக்கூடிய கொள்ளளவை மேலும் குறைக்கிறது. ஒதுக்கக் கொள்ளளவின் பற்றாக்குறையானது ஒரு பெரிய ஆலையின் நாள்பட்ட செயலிழப்பின் போது கைமுறையாக சுமை உதிர்தலுக்கு வழிவகுக்கிறது. மேலும், முறைமையில் போதுமானதல்லாத ஒதுக்க பிறப்பாக்கல் கொள்ளளவு காரணமாக நீண்ட வறட்சியான காலங்களிலும் அல்லது ஒரு பெரிய பிறப்பாக்கல் அலகின் செயலிழப்பின் போதும் அவ்வப்போது இ.மி.ச. இற்கு குறுகிய கால குறைநிரப்பு மின்வலுவைப் பெறுவதற்குக் காரணமாக அமைகிறது.

# இடர் மீளாய்வு (தொடர்ச்சி)

### வலையமைப்பு விரிவாக்கல் இடர் - வலையமைப்பு விரிவாக்கத்தின் தாமதம்

எதிர்கால மின்வலு ஆலைகளிலிருந்து மின்வலுவைக் காவுவதற்கும் மிகவும் நம்பகரமான முறையில் அதிகரிக்கின்ற சக்திக் கேள்விகளுக்கு அதனை வழங்குவதற்குமான உயர், இடைநிலை மற்றும் தாழ் மின்னழுத்தங்களுக்கான வலையமைப்பு விரிவாக்கங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. இவை புதிய மின் பரிமாற்ற மற்றும் விநியோகச் சுற்றுக்களை நிருமாணித்தல், புதிய உபமின் நிலையங்களை விருத்தி செய்தல்/ நிருமாணித்தல், மின்தொகுப்பின் தரத்தை மேம்படுத்தல் போன்றவற்றை உள்ளடக்குகிறது. மின் பிறப்பாக்கல் ஆலைகளிலிருந்து மின்வலுவை வெளியெடுப்பதற்கு புதிய மின் பரிமாற்ற மார்க்கங்களை நிருமாணிப்பது மின் பிறப்பாக்கல் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலுடன் சரியான நேரத்தில் செய்யப்பட வேண்டும். முந்தையவற்றின் தாமதம் பிந்தையவற்றிலிருந்து மின்வலுவை வெளியெடுப்பதில் தாமதத்தை ஏற்படுத்துகிறது. அத்துடன், 20 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் சேவையில் இருக்கின்ற இடைநிலை மட்ட மின்னழுத்த வலையமைப்பில் உள்ள கச்சிதமாக எரிவாயு காப்பிடப்பட்ட உபமின் நிலையங்கள் உள்ளிட்ட சில சொடுக்கிபல்லினைகளின் (சுவிட்ச்கியர்) நம்பகத்தன்மையை பகுப்பாய்வு செய்வதற்கு நேரம் வந்துள்ளது. நீர் வழங்கல், பெற்றோலியம் மற்றும் ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் பகுதிகள் போன்ற தொழில்துறைகளுக்கு முக்கிய பயன்பாட்டுச் சேவையை வழங்குகின்ற அத்தகைய உபமின் நிலையங்களின் நம்பகத்தன்மையானது அந்தப் பிரதான சேவைகள் மற்றும் தொழில்துறைகளுக்கான தடையற்ற மின் வழங்கலை உறுதி செய்வதற்கு மாற்று மின்வலு வழங்கல் தெரிவுகளைக் கொண்டிருக்கின்றனவா என்பதை அறிய புதிய கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும். மேலும், மின்தொகுப்பு நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கு மாற்றீடு செய்யப்பட வேண்டிய வயதான மின்தொகுப்பு உபகரணங்களும் காணப்படுகின்றன. அத்தகைய மாற்றீடுகளுக்கான நிதியைப் பெற்றுக்கொள்வதும் மின் பிறப்பாக்கம் மற்றும் பரிமாற்ற வலையமைப்புகளில் இருப்பு இல்லாத மற்றும் தேவையற்ற திறன் ஆகியவற்றுக்கிடையிலான வேலைகளைச் செய்வதற்கான மின் தடங்கல்களைப் பெற்றுக் கொள்வதும் கடுமையான சவால் மிகுந்ததாகவும் இடர் மிகுந்த ஒன்றாகவும் கருதப்படுகிறது. இந்த வலையமைப்பு உபகரணங்கள் சிலவற்றில் கிடைக்காமையுடன் இணைந்த இடர்கள், தோல்வி நிகழ்வுகளை முன்கூட்டியே அறிய உதவுகின்ற தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகள் ஊடாக ஒரு அளவிற்குக் குறைக்கப்படுகின்றன. இதனால் கால தாமதமின்றி அல்லது எந்தவொரு அனர்த்தத்தையும் ஏற்படுத்தாமல் சீக்கிரம் சரிசெய்யும் நடவடிக்கைகள் தொடங்கப்பட முடியும்.

### மனித வள இடர் - திறன்மிக்க மற்றும் ஊக்கமளிக்கப்பட்ட வேலைப் படையொன்றைப் பராமரிப்பதில் உள்ள சவால்கள்

திறன்மிக்க வேலைப்படையைக் கொண்டிருப்பது அருவச் சொத்து ஒன்றாக இருப்பதுடன் இது வலையமைப்பு உபகரணத்தின் சிறந்த பராமரிப்புக்கு முக்கியமானதாகும். தேசத்திற்கான தரமான சேவையை வழங்க நினைக்கும் இ.மி.ச. இன் முக்கிய வணிகத்தைப் பேணுவதற்கு பணியாளர் ஊக்கம் முக்கியமானதாகும். அத்துடன், தொழில்துறைப் பிணக்குகளைத் தவிர்ப்பதற்கு ஊழியர் திருப்தி பிரதானமானதாகும். இ.மி.ச. தொடர்ச்சியான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வேலைப் பயிற்சி ஊடாக ஒரு திறன்மிக்க வேலைப்படையை பேணுகிறது. இந்த நடவடிக்கைகளின் தொடர்ச்சித் தன்மையை கோவிட் 19 நோய்த் தொற்று மோசமான முறையில் பாதித்திருந்தாலும், இந்த நிபுணத்துவத்தை பேண முடிந்தவரை நிகழ்நிலை (ஒன்லைன்) பயிற்சி மற்றும் கொள்ளளவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றை முன்னெடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பிட்ட சில வேலைத் தொழிற்பாடுகளின் உயர் விசேடத்துவத் தன்மையைக் கருத்திற் கொண்டு, முக்கிய தொழில்நுட்பக் துறைகளில் நிபுணத்துவத்தைத் தக்கவைக்கும் நோக்கில் பாரம்பரிய மாற்றக் கொள்கையின் புதிய எதிர்காலம் பற்றிப் பார்க்கப்படுகிறது.

### கடன் வழங்கும் முகவராண்மைகளிடமிருந்து கிடைக்கும் அழுத்தம் காரணமாக முன்னுரிமைப் பிரதேசங்களிலிருந்து திசைதிருப்பப்படும் நிதிகளின் இடர்

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் பிரிவு 38 இன் கீழ், சபையின் சேவைகளின் அபிவிருத்திக் கிரயத்தின் நியாயமான விகிதத்தை நிறைவேற்றுவதற்கு சபையின் வருவாய் போதுமானதாக இருக்கிறது என்பதை உறுதிப்படுத்தும் கடமை சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், அத்தகைய நிதிகளைப் பெறுவதற்கு இ.மி.ச. இற்கு கிடைக்கப்பெற்ற “கருவி” அதாவது விதிப்பனவுகள் மற்றும் கட்டணங்களை நிர்ணயிக்கின்ற அதிகாரம், 2009 இல் இ.மி.ச. இடமிருந்து எடுக்கப்பட்டதுடன் அது இலங்கை மின்சாரச் சட்டத்தின் மூலம் PUCSL இடம் கையளிக்கப்பட்டது. சொந்த நிதிகள் கிடைக்காமை என்பது மின் பிறப்பாக்கச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல் மற்றும் மின் பரிமாற்ற/ விநியோக வலையமைப்பு மேம்பாட்டுச் செயற்றிட்டங்களுக்கு, குறிப்பாக சர்வதேச நிதிகளைப் பெற முடியாத ஒரு பொதுவான பிரச்சினையாகக் காணப்படுகிறது. மின்வலுத் துறையின் முதலீட்டுத் தீர்மானங்கள் மின்சாரத்திற்கான கேள்வி, மாறிவரும் அரசாங்கக் கொள்கைகள், நாட்டதாரர்களின் எதிர்பார்ப்புகள், வழங்கல் சங்கிலிப் பிரச்சினைகள், வணிக ஒருங்கிணைப்புகள் அதே போன்று காலநிலை தொடர்பான கொள்கைகளில் இருந்தான அழுத்தங்கள் உள்ளிட்ட சிக்கலான காரணிகளின் ஒரு சேர்வையால் வடிவமைக்கப்படுகின்றன. புதைபடிவ எரிபொருட்கள், அரசுக்குச் சொந்தமான பயன்பாட்டுக் கட்டமைப்புக்கள் போன்றவற்றைப் பற்றிய உலகின் மாறுபட்ட பார்வைகளைப் பூர்த்தி செய்ய நிதி வழங்கும் நிறுவனங்களும் தங்கள் சொந்த நிதிக் கொள்கைகளை உருவாக்கியுள்ளன. இதனால், இ.மி.ச. இன் உண்மையான தேவையை விட நிதி வழங்கும் நிறுவனங்களின் கொள்கைகளை நிறைவேற்றும் பகுதிகளுக்கு மாத்திரமே நிதி கிடைக்கப்பெறுகிறது.

கடன் உடன்படிக்கைகள் வாயிலாக நிபந்தனைகளை வலியுறுத்துவது, முன்னுரிமைப் பகுதிகளைக் காட்டிலும் கடன் வழங்கும் நிறுவனங்கள் கடன் வழங்கத் தயாராக இருக்கின்ற பகுதிகளுக்கு வரையறுக்கப்பட்ட கடன் பெறுகை வெளியைப் பயன்படுத்தவும் நிறுவனத்தை கட்டாயப்படுத்தியுள்ளன.

### பொதுக் கருத்து இடரும் பயன்பாட்டுத் திட்டங்களுக்கான சவால்களும்

நாட்டின் மொத்தச் சக்திப் பயன்பாட்டில் மின்சாரத்தின் பங்கு 12% மாத்திரமே. ஆயினும்கூட, மின்சாரத் துறையானது ஊடகங்கள், அரசசாரா நிறுவனங்கள், சுற்றுச்சூழல் அழுத்தக் குழுக்கள் போன்றவற்றிலிருந்து அதிக கவனத்தை ஈர்க்கிறது. இது, 88% மீதமுள்ளதைவிட அதிக வர்த்தக நாட்டம் காரணமாக இருக்கலாம். மின்வலு முறைமை என்பது மிகவும் விசேடத்துவம் மிக்க ஒரு விடயமாகும். இது பெரும்பாலும் பொதுமக்களுக்கு மட்டுமன்றி அடிப்படைப் பொறியியல் கல்வி பெற்ற ஆனால் மின்வலு முறைமை தொடர்பில் அனுபவம் இல்லாதவர்களுக்கும் விளங்கிக்கொள்ள முடியாதது. இதனால் பயன்பாட்டுத் திட்டங்கள் மற்றும் முடிவுகள் பற்றி பொதுமக்களையும் ஊடகங்களையும் நியாயப்படுத்துவதும் நம்ப வைப்பதும் மிகவும் கடினமானது. மின்வலுத் துறை மிகவும் கவர்ச்சிகரமான வணிக வாய்ப்புகளை வழங்குவதால், அவர்கள் ஈடுபடக்கூடிய வணிகப் பகுதிகளை ஆதரிப்பதற்கும் அவர்கள் வர்த்தகம் செய்யும் தொழில்நுட்பங்களுக்கு வழிவகை செய்வதற்கும் திட்டங்கள் மற்றும் கொள்கைகளை மாற்றுவதற்கான வணிக ஆர்வத்தைக் கொண்ட குழுக்களிடமிருந்தான அழுத்தத்தின் கணிசமானளவு இடர் காணப்படுகிறது.

இ.மி.ச. திட்டங்கள், செயற்றிட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பான இத்தகைய தவறான புரிதல் இடரை ஓரளவு தணிப்பதற்காக நிறுவன பிம்பத்தைக் கட்டியெழுப்பி, நிலைபேற்றுத்தன்மையுடன் பேணுவது தொடர்பான நடவடிக்கைகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு உபாயத் தொடர்பாடல் அலகினை (SCU) உருவாக்குவதற்கான முன்மொழிவுக்கு சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# இடர் மீளாய்வு (தொடர்ச்சி)

## கொள்கை மாற்ற இடர்

மின்வலுச் செயற்றிட்டங்கள் நீண்ட பேறு காலத்தைக் கொண்டவை. எனவே, முன்கூட்டியே அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடங்குவதற்காக, தேவையான திகதிக்கு முன்பே திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. மின்வலு விரிவாக்கத்திற்கான திட்டமிடலுக்குக்கூட குறிப்பிடத்தக்க காலம் எடுக்கும். எனவே, அரசாங்கக் கொள்கைகள் தெளிவானதாகவும் உறுதியானதாகவும் இருத்தல் வேண்டும். மாறிவருகின்ற மற்றும் சீரற்ற அரசாங்கக் கொள்கைகள் பயன்பாட்டுத் திட்டமிடல் மற்றும் செயற்றிட்ட அமுலாக்கங்களுக்கு முன்னால் பாரிய சவால்களையும் இடர்களையும் உருவாக்குகின்றன.

## இணைய இடர்

நிறுவனங்கள் அதிகரித்த வகையில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனங்களாக மாறிவருகின்றன. பெரும்பாலும் அனைத்துக் கிளைகளும் வலையமைப்புச் செய்யப்பட்டு ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. இது அவர்களை வெளிவாரியான இணையத் தாக்குதலால் மிகவும் பாதிக்கக்கூடியதாக ஆக்குகிறது. ஏனெனில் ஒரு இடத்திற்கு ஊடுருவினால் அது வலையமைப்பின் ஊடாக அனைத்து இடங்களுக்கும் பரவக்கூடும்.

இ.மி.ச. போன்ற மின்சாரப் பயன்பாடுகளால் பொதுவாகப் பயன்படுத்தப்படும் செயற்பாட்டுத் தகவல் தொழில்நுட்ப முறைமையானது தொடர்பாடல் மற்றும் கட்டுப்படுத்தல் நோக்கங்களுக்காக தகவல் தொழில்நுட்பவியலில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. எவ்வாறாயினும், இந்தச் செயற்பாடுகளும் முறைமைகளும் பெரும்பாலும் தனிமைப்படுத்தப்பட்ட அமைப்புகளாக செயற்படுத்தப்பட முனைப்புக் காட்டப்படுவதுடன் முகாமைத்துவ தகவல் தொழில்நுட்ப முறைமைகளைப் போலல்லாது வெளிப்புறத்துடன் குறைந்தளவு இணைப்புகளைக் கொண்டுள்ளன. மேலும், செயற்பாட்டுத் தகவல் தொழில்நுட்ப முறைமைகள் வெளிப்புறத்துடன் இணைக்கப்படும்போது, அவை உயர்நிலை பாதுகாப்புச் சாதனங்களை நுழைவுவாயில்களாகக் (Gateways) கொண்டிருக்கின்றன. எனவே, அவர்களுக்கு வெளியிலிருந்து வரும் தாக்குதல்கள் மற்றும் ஊடுருவல்களின் சற்றே குறைந்தளவான அச்சுறுத்தல்களே காணப்படுகின்றன. இருப்பினும், இணையத் தாக்குதல்களின் இடர் எப்போதும் இருக்கிறது. இது பாதுகாப்பு முறைமைகளில் உள்ள ஓட்டைகளை தாக்குபவர்கள் சுரண்டுவதன் காரணமாக இருக்கலாம். அத்துடன் மனித வழுக்கள் மற்றும் தவறுகள் காரணமாக இருக்கலாம். ஊடுருவல் செய்பவர்களால் செயற்பாட்டுத் தகவல் தொழில்நுட்ப முறைமைகள் வசப்படுத்தப்பட்டு மிகவும் தொழில்நுட்பரீதியாக முன்னேறிய நாடுகள்கூட இலக்கு வைக்கப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளன. எனவே, தம்வசப்படுத்துவதற்கான இடரைக் குறைப்பதற்கு சரியாக ஒழுங்கமைக்கப்பட்டு முகாமிக்கப்பட்ட சாதனங்களும் வலிமையான IT கொள்கைகளும் தேவையாகும்.

## நிதிசார் அம்சங்கள்

அரசாங்கத்திற்குச் சொந்தமான குறிப்பான வணிக நிறுவனமொன்றாக இருக்கின்ற இலங்கை மின்சார சபை தேசத்திற்கு மின்சாரத்தை வழங்குவதில் பெரும்பாலும் ஏகபோக உரிமையைக் கொண்டிருப்பதால் பல இடர்களுக்கு ஆளாகிறது. நிதிசாராத பிறப்பாக்கம், பரிமாற்றம் மற்றும் விநியோக இடர்களுக்கு பெரியளவில் ஆளாகக்கூடிய பயன்பாட்டு நிறுவனமொன்றாக இருந்த போதிலும், இ.மி.ச. பல்வேறு பிரச்சார வழிகள் மூலம் நிதிசார் இடர்களுக்கும் ஆளாகின்றது.

விதிப்பனவுக் கட்டமைப்பில் உள்ள தடைகள் காரணமாக, இ.மி.ச. இன் வணிக மாதிரியானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து நெகிழ்ச்சியான வட்டி வீதங்கள் மற்றும் நாணயப் பரிமாற்ற வீதங்களில் கடன் பெறுவதை உள்ளடக்குகிறது. மின்சார விற்பனையிலிருந்தான இ.மி.ச. இன் பிரதான காசு உட்பாய்வு உள்நாட்டு நாணயத்தில் குறிப்பிடப்படுவதால், கடன் பெறுகைகள் மற்றும் சக்தி மூலங்களின் கொள்வனவு ஆகியவற்றுக்கான வெளிநாட்டு நாணயங்களிலுள்ள காசு வெளிப்பாய்வுகளை சமான வெளிநாட்டு நாணய உட்பாய்வொன்றுடன் எதிரீடு செய்ய முடியாது.

இ.மி.ச. பல்வேறு பேரண்டப் பொருளாதாரக் காரணங்களால் நிதிக் கிரய அதிகரிப்புக்கு ஏற்றாற்போல் விற்பனை வருமானத்தை அதிகரிக்கின்ற நிலையில் இல்லை. எனவே, நிறுவனத்தின் பொருளாதார மதிப்பினைப் பாதுகாப்பதற்கு தொடர்ச்சியான நிதிசார் இடர் பகுப்பாய்வு மற்றும் இடர் முகாமை என்பன தலையாய முக்கியத்துவம் உடையவை ஆகும்.

## நிதிசார் இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகம்

இ.மி.ச. இன் பொது முகாமையாளரும் பணிப்பாளர் சபையும் நிறுவனத்தின் இடர் முகாமைத்துவம் மற்றும் பகுப்பாய்வுக்கு இறுதிநிலைப் பொறுப்பாளர்களாவர். இருப்பினும், பொது முகாமையாளரின் கீழ் பணியாற்றும் நிதி முகாமையாளருக்கு நேரடியாக அறிக்கையிடுகின்ற மேலதிக நிதி முகாமையாளர் ஒருவரால் தலைமைதாங்கப்படும் திறைசேரி முகாமைத்துவக் கிளை 2018 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டு, இ.மி.ச. இன் நிதிசார் இடர் முகாமைத்துவத்தில் முக்கிய வகிபாகத்தை ஆற்றுகிறது.

## நிதிசார் இடர் முகாமைத்துவக் கொள்கை

இ.மி.ச. இன் இடர் முகாமைத்துவக் கொள்கையானது இ.மி.ச. மற்றும் அதன் பிரிவுகளுக்காகத் தாபிக்கப்பட்ட ஒட்டுமொத்த இடர், திரவத்தன்மை மற்றும் காசுப் பாய்வு முகாமைத்துவ வேலைச்சட்டகம் ஆகியவற்றின் பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது. கொள்கையின் முதன்மையான நோக்கம் பொருண்மையான நிதி இடர்களை இனங்கண்டு, அளவீடு செய்து, வரையறுத்து, முகாமை செய்து கண்காணிப்பதற்காக ஒரு வலுவான வேலைச்சட்டகத்தை வரையறுப்பதாகும். இது நிறுவனத்தினுள் நிதிசார் இடருக்கான புலப்படுதன்மை மற்றும் விழிப்புணர்வை மேம்படுத்துகின்ற ஒரு பயனுறுதிமிக்க இடர் கலாசாரத்தை நிறுவுவதை நோக்காகக் கொண்டுள்ளது. மேலும், இது சாத்தியமான நிலைக்கு இடர் வெளிப்பாட்டை கட்டுப்படுத்துவதன் மூலம் நிதிச் சந்தைகளிலிருந்து ஏற்படும் அதிர்ச்சிகளுக்கு எதிராக இ.மி.ச. சேவைகளுக்கு தாங்குசக்தியை (எதிர்ப்பு சக்தி) அளிக்கிறது. அதற்கிணங்க, திறைசேரி முகாமைத்துவ அணியானது, நடப்பு இடர் வெளிப்பாடுகளை இனங்காண்பதற்காக நிதிசார் தரவுகளைத் தொடர்ச்சியாக பகுப்பாய்வு செய்வதுடன் இடர்களைத் தணிப்பதற்கான பரிகார நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு பொது முகாமையாளர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைகளை வழங்குகிறது.

## நிதிசார் இடர் முகாமைத்துவச் செயன்முறை

இ.மி.ச. இன் நிதிசார் இடர் முகாமைத்துவச் செயன்முறை 5 படிமுறைகளைக் கொண்டுள்ளது.




"இடரை இனங்காணல்" என்பது ஒரு வருடாந்த மேலிருந்து கீழான செயன்முறை ஆகும். ஆரம்பப் படிநிலையாக, குறைந்த வருமானம் மற்றும் உயர்ந்த கிரயங்களுக்கு வழிவகுத்த சூழ்நிலைகளைக் கண்டறிவதற்கு வருமானக் கூற்று பிரதான கூறுகளாகப் பிரிக்கப்பட்டு, பின்னர் திரவத்தன்மை நிலையை அழுத்தத்திற்கு உள்ளாக்குகின்ற எதிர்பாரா உயர்ந்த வெளிப்பாய்வுக்கு வழிவகுத்த ஊடுசெயல்கள் (கொடுக்கல் வாங்கல்கள்) மற்றும் சூழ்நிலைகள் ஆராயப்படுகின்றன. அதற்கிணங்க, எதிர்கால வருவாய் மற்றும் கிரயங்களை அளவீடு செய்ய உதவும் மின்சாரத்திற்கான தேவையைப் பூர்த்தி செய்வதற்கான மின் பிறப்பாக்கல் கலவை மற்றும் தேவைப்படும் எதிர்காலக் கேள்வியை இனங்காண்பதற்கு நீண்ட கால மின் பிறப்பாக்கல் திட்டத்தை திறைசேரி முகாமைத்துவ அணி கவனமாக நுணுகி ஆராய்கிறது. அதன்படி, எதிர்கால காசுப் பற்றாக்குறை மற்றும் திரவத்தன்மை இடர்கள் இனங்காணப்பட்டு, நிலைமைகளை எதிர்கொள்வதற்கான நிதிசார் திட்டம் தயாரிக்கப்படுகிறது.

# இடர் மீளாய்வு (தொடர்ச்சி)

“இடர் அளவீடு” என்பது விலை மாற்றங்களுக்கு உட்பட்ட அளவிலும் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் சாத்தியமான விலை மாற்றங்களின் அளவையும் அளவீடு செய்வதாகும். வேறுபட்ட மின் பிறப்பாக்கல் கலவையை அடிப்படையாகக் கொண்ட நிலைமைப் பகுப்பாய்வு என்பது நிதிசார் தாக்கம் மற்றும் தொடர்புடைய இடர்களை அளவீடு செய்வதற்கு பல்வேறு சூழ்நிலைகளின் கீழ் சபையின் இலாபம் / நட்டம், நிதி நிலை மற்றும் காசுப் பாய்வு நிலை ஆகியவற்றை அளவிடப் பயன்படுத்தப்படும் ஒரு பிரதான கருவி ஆகும்.

“இடர் வேட்கை” ஆனது பணிப்பாளர் சபை எடுக்க வசதியாகவிருக்கின்ற (இடர் கொள்ளளவு) இடரின் அளவை வரையறுக்கிறது. இது ஆண்டுதோறும் தயாரிக்கப்பட்டு, இ.மி.ச. இன் பொது முகாமையாளரின் பரிந்துரையின் மீது சபையினால் அங்கீகரிக்கப்படுகிறது. இடர் வேட்கை “வரையறை அமைத்தல்” ஊடாகச் செயல்படுகிறது. இது இடர் வேட்கையை முகாமிக்கக்கூடிய அளவுகளாக உடைத்து, குறிப்பிட்ட இடரை எதிர்கொள்பவர்கள் எவ்வளவு இடரை எதிர்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள் என்பதை வரையறுக்கிறது. ஒவ்வொரு நிறைவேற்றுத்தர வகைகளுக்கும் அதே போன்று பெறுகைக் குழுவின் பல்வேறு மட்டங்களுக்கும் நிதிசார் அதிகார எல்லைகளை நிறுவுவதற்கான சுற்றறிக்கைகள் காலத்திற்குக் காலம் வெளியிடப்படுகின்றன. அதிக பெறுமதி மிக்க பரிமாற்றங்கள், அதிக இயல்திறனும் அதிக இடர்களை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டவர்களுமான உயர் அனுபவம் மற்றும் இயலுமை கொண்ட அதிகாரிகளால் நுணுகி ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்படுவதை இது உறுதி செய்கிறது.

பரவலாக்கப்பட்ட இடரை எடுத்துக் கொள்ளல், ஆனால் ஒருமுகப்படுத்தப்பட்ட இடர் என்பது இ.மி.ச. இல் “இடர் முகாமைத்துவத்தின்” அடிப்படைக் கோட்பாடாகும். பல சிறியளவானவற்றையும்விட பெரியளவான இடர் தணிப்பு பரிவர்த்தனைகளினுள் உள்நுழைவதன் ஊடான அளவீட்டு பொருளாதாரங்கள் வெளிப்பாடுகளின் உயர்ந்தபட்ச எதிரீட்டிற்கான ஆற்றலின் அனுகூலங்கள் காரணமாக இடர் முகாமைத்துவம் ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளது. நாளாந்த சேகரிப்புகளுடன் பொருந்துகின்ற நாளாந்தக் காசுத் தேவைகளை மதிப்பிடும் ஒவ்வொரு பிரிவினதும் வாராந்த காசுத் தேவைகள் நிதிப் பிரிவிலுள்ள கொடுப்பனவு அலகிற்கு ஏற்றப்படுகின்றன. அதற்கிணங்க, ஒட்டுமொத்த இ.மி.ச. இற்கும் தேவைப்படுகின்ற நிதி இனங்காணப்பட்டு, காசுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் ஒவ்வொரு பிரிவுக்கும் அவர்களின் செலவுகளுக்கான நிதிகளை ஒதுக்கீடு செய்வதற்காகவும் சாதகமான வட்டி வீதங்கள் மற்றும் நிதி ஏற்பாடுகளுக்காக வங்கிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது.

“இடர் அறிக்கையிடல்” என்பது இ.மி.ச. இனால் பொறுப்பேற்கப்பட்ட உண்மையான இடர் பற்றி அடிக்கடி அறிக்கையிடுவதும் அதனைச் சமாளிப்பதற்கான பரிந்துரைகளைச் செய்வதுமாகும். நிதிசார் செயலாற்றுகை, நிதி நிலை மற்றும் காசுப் பாய்வுகளின் அசைவுகள் குறித்த முற்றநடக்கமான விளக்கங்களை வழங்குகின்ற மாதாந்த செயலாற்றுகை அறிக்கை நிதிப் பிரிவினால் தயாரிக்கப்பட்டு, பொது முகாமையாளரின் பரிந்துரையின் மீது சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும், மேற்படி பகுப்பாய்வின் ஊடாக இனங்காணப்பட்ட சாத்தியமான நிதிசார் இடர்கள் எடுத்தியம்பப்படுவதுடன் அதன் பரிந்துரைகளை பணிப்பாளர் சபை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானங்களை எடுப்பதற்கும் உதவுகிறது.

### நிதிசார் இடர் பகுப்பாய்வு 2020

2020 ஆம் ஆண்டு இ.மி.ச. இற்கு மட்டுமல்லாது முழு உலகிற்கும் செயற்பாட்டு ரீதியில் சவாலான ஆண்டாக இருந்தது. நாட்டை முடக்குதல், தனிமைப்படுத்தல், சமூக இடைவெளி பேணுதல் மற்றும் அத்தியாவசியமற்ற சேவைகளை மூடுதல் போன்றவை உள்ளிட்ட கோவிட் 19 வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், வணிகங்களுக்கு குறிப்பிடத்தக்க இடையூறுகளை ஏற்படுத்தியதுடன் பொருளாதார மந்தநிலையையும் விளைவித்தது.

### காசு மற்றும் திரவத்தன்மை முகாமைத்துவம்

வினைத்திறனான காசு மற்றும் திரவத்தன்மை முகாமைத்துவம் ஒரு நிறுவனத்தின் இலாபத்தன்மை, வணிகத் தொடர்ச்சி மற்றும் வளர்ச்சியை கணிசமானளவு மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. போட்டிச் சூழல்கள் இ.மி.சபையை அதன் சேகரிப்பு மற்றும் கொடுப்பனவுகளை மீளவும் கவனிக்கக் கட்டாயப்படுத்தியுள்ளதுடன், அதன் உள்ளகச் செயன்முறைகளை நியமப்படுத்தி அதன் உள்ளகக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதன் மூலம் அதி நவீன காசு முகாமைத்துவத் தீர்வுகளையும் விருத்தி செய்கின்றன.

வைரஸ் பரவலுடன், வாடிக்கையாளர்களின் செலவழிக்கத்தக்க வருமானம் குறைந்து வருகிறது. மின் கட்டணப் பட்டியல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு சலுகைக் காலத்தை வழங்குதல் மற்றும் மின் கட்டணப் பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்யாததன் காரணமாக மேற்கொள்ளப்படும் மின்துண்டிப்புகளை பிற்போடுதல் போன்ற அரசாங்கத்தின் தீர்மானமானது ஏற்கனவே தடைப்பட்டிருந்த காசுப் பாய்வுகளில் கணிசமானளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. எனவே, இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு திறைசேரி முகாமைத்துவ அணியின் பரிந்துரைகளுடன் பின்வரும் உத்திகளை சபை அங்கீகரித்திருந்தது.

- ரூபா 20 பில்லியன் மதிப்புள்ள மூத்த பட்டியலிடப்பட்ட தனிச்சங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள், குறுகிய கால பொறுப்புக்களை ஒரு இடைக்கால கடன் கருவியாக மாற்றுதல், என்பன இ.மி.ச. மற்றும் இலங்கை அரசாங்கத் துறையில் ஒரு வரலாற்றுத் தருணம் ஆகும்.
- காசுப் பரிமாற்றங்களுக்கு கண்டிப்பான முன்னுரிமையளித்தல் மற்றும் மூலதனச் செலவுகளை அத்தியாவசியமாகக் கட்டுப்படுத்துதல் ஆகியவை கணிசமானளவு காசுப் பரிவர்த்தனைகளைக் கண்காணிக்க உதவும்.
- MITFIN முறைமையில் உள்ள சென்மதித் தொகுதியின் தொழினுட்ப முன்னேற்றமானது எதிர்காலக் காசுத் தேவையை திட்டமிட உதவும் சபையின் நாளாந்த கடன் வெளிப்பாட்டை வழங்குகிறது.
- வழங்குநர்களின் கடன் காலத்தின் அதிகபட்சப் பயன்பாடு முன்னுரிமையளிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கான காசு இருப்பினை நீட்டித்தது.
- வட்டி வீதங்களைக் குறைப்பதற்காகவும் மீளச்செலுத்தல் காலத்தை நீடிப்பதற்காகவும் தற்போதைய கடன் தொகுதியை மறுசீரமைத்தல்
- நிகழ்நிலை (ஒன்லைன்) சேகரிப்பு வசதிகளை விரிவாக்குவது வாடிக்கையாளர்களுக்கு இந்த நோய்ப் பரவல் சூழ்நிலையில் மின் கட்டணப் பட்டியல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு அதிக தெரிவுகளை வழங்குவதுடன் விற்பனை பெறுவனவுகளையும் உரிய நேரத்தில் சேகரிப்பதை மேம்படுத்துகிறது.
- போட்டி வட்டி வீதங்களை ஈர்ப்பதற்காக அரசாங்க வங்கிகளுக்குப் புறம்பாக தனியார் வர்த்தக வங்கிகளுக்கும் நிதியிடல் தெரிவுகள் விரிவாக்கப்பட்டன.
- நிதி நிலையை வலுப்படுத்துவதற்காக நிதி மீட்டல் மாதிரியை உருவாக்குதல்

# நிலைபேற்று அறிக்கை

## மின்சாரத் தொழில்துறையின் நிலைபேற்றுத்தன்மைக்கான எமது அணுகுமுறை

நிலைபேற்றுத்தன்மை என்பது இ.மி.ச. இன் பணிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள அதன் அடிப்படை விழுமியங்களில் ஒன்றாகும். நிலைபேற்றுத்தன்மை மூன்று தூண்களாக நிற்கிறது என இ.மி.ச. நம்புகிறது. அதாவது சமூகம், சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரம். எனவே, இ.மி.ச. சமூக, பொரருளாதார மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்கள் மத்தியில் சரியான சமநிலையை பேணியவாறு அதன் பிரதான செயற்பாடுகளை ஆற்றுவதற்கு உறுதி பூண்டுள்ளது.




## பொருளாதார நிலைபேற்றுத்தன்மை

இலங்கைப் பொருளாதாரத்தின் மின்வலுத் துறையில், இ.மி.ச. என்பது ஒரு மேலாதிக்கம் கொண்ட நிறுவனமாக விளங்குகிறது. மற்றுமொரு மூலத்தால் பிரதியீடு செய்வது கடினமாக இருப்பதும், படிப்படியாக அதிகரித்து வருவதுமான ஒரு அத்தியாவசிய உருப்படியான மின்சாரத்திற்கான கேள்வியினை இது பூர்த்தி செய்கிறது. அடிப்படைப் பொருளாதாரக் கோட்பாடானது, இ.மி.ச. ஒரு நட்டத்திலுள்ள நிறுவனமாக இருக்கக்கூடாது என்று பரிந்துரைக்கும். இருப்பினும், இ.மி.ச., 1969 இல் தாபிக்கப்பட்டதில் இருந்து பல ஆண்டுகளாக நட்டத்தில் இருக்கிறது. ஏனெனில், சமூக மற்றும் அரசியல் சூழலில், இ.மி.ச. மக்களுக்கான ஒரு சேவை நிறுவனமாகக் கருதப்படுகிறது.

அதற்கிணங்க, இ.மி.ச. ஆனது மின்சாரப் பிறப்பாக்கம், பரிமாற்றம் மற்றும் விநியோகம், அவற்றின் விளைவான நிருமாணங்கள் மீதான முதலீடுகள், செயற்படுத்தல் மற்றும் பராமரிப்புக் கட்டங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய அதன் திட்டமிடல் தொழிற்பாடுகளை முன்னெடுக்கிறது. இந்த நடவடிக்கைகள் 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க SLE சட்டம் (திருத்தப்பட்டதான), 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க SEA சட்டம், 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க PUCSL சட்டம், 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க CEA சட்டம், மாகாண / மாநகர / உள்ளூராட்சி விதிகள் ஆகியவற்றால் வழிகாட்டப்பட்டு, ஆளுகை செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

இதன் நீண்ட கால பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டம் (LTGEP) ஆனது நிறுவனத்தின் நிதிக் கோட்பாடுகளின் சாத்தியத் தன்மைக்கு மாறாக முழு நாட்டிற்குமான பொருளாதாரக் கோட்பாடுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. LTGEP இலங்கையில் கணிசமானளவு உட்கட்டமைப்பு முதலீடுகளைக் கொண்டுள்ளது. நீண்ட கால மின் பரிமாற்றத் திட்டம் மற்றும் பிரிவுகளின் மின் விநியோகத் திட்டங்கள் தற்போது மின்வலு நிலையங்களை வீட்டு மின் நுகர்வு, சமயத்தல, தொழில்துறை மற்றும் வர்த்தக ரீதியான நுகர்வோருக்கு உகந்ததாக இணைக்கின்றன.

நிறுவனத்தினதும் அதே போன்று நாட்டினதும் பொருளாதார நிலைபேற்றுத்தன்மையைப் பாதுகாக்கும் பொருட்டு, பிறப்பாக்கல் கலவையின் சரியான சமநிலையுடன் நீர்பாசனத் தேவைகளின் சரியான தொழிற்பாட்டிற்குத் தொந்தரவு செய்யாத வண்ணம், உகந்த பிறப்பாக்கல் அனுப்பீட்டை இ.மி.ச. உறுதிப்படுத்துகிறது. இதன் விளைவாக, நிறுவனம் சராசரி உற்பத்திக் கிரயத்தை இல. ரூபா 21.19/kWh என்ற வீதத்தில் பராமரிக்க முடிந்தது. இருப்பினும், கடந்த 8 வருடங்களாக மின்சார விதிப்பனவு திருத்தம் செய்யப்படாத காரணத்தால், இ.மி.ச. மின்சாரத்தை இல. ரூபா 16.72/kWh என்ற குறைந்த வீதத்தில் விற்பனை செய்ய வேண்டியிருந்தமை நிதிசார் நிலைபேற்றுத்தன்மையை மோசமாகப் பாதித்தது எனலாம்.

## சுற்றுச்சூழல் நிலைபேற்றுத்தன்மை

இ.மி.ச. மரபுசார்ந்த மீள்புதுப்பிக்கத்தக் சக்தி செயற்றிட்டங்கள் உள்ளிட்ட அதன் நடவடிக்கைகளில் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு மனச்சாட்சிப்படி இணங்கிச் செல்கிறது.

இலங்கை காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய நாடாக இருப்பதுடன் இதற்கு தணித்தல் மற்றும் தழுவல் ஆகிய இரண்டும் தேவைப்படுகின்றன. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் சவால்களுக்கு பதிலளிக்கும் வகையில், இலங்கை அரசாங்கம் தேசிய கொள்கைகள், உபாயங்கள் மற்றும் சாத்தியமான பாதிப்புகளை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் பல நேர்மறையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மரபுசார்ந்த புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான சக்தி ஆதாரங்களுடன் இணைந்து அதிகமான மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி ஆதாரங்களை ஒன்றிணைப்பது உபாயங்களில் ஒன்றாகும். தேசிய சக்திக் கொள்கை மற்றும் உபாயம், மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி ஆதாரங்களின் ஊடுருவலை வெளிப்படுத்தி அதிகரித்துள்ளது. அதற்கிணங்க, இ.மி.ச. அதன் மீள்புதுப்பிக்கத்தக்க சக்திக் கொள்ளளவை, 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறுவப்பட்ட மொத்தக் கொள்ளளவில் 49% வரை அதிகரித்திருந்தது. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 3.2% அதிகரிப்பாகும்.

தூய்மையான சுற்றுச்சூழலை உறுதிப்படுத்துவதற்காக, மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் பெரிய அளவான காற்று மின்வலுப் பண்ணைகள், சூரியசக்திப் பண்ணைகள் போன்றவற்றை மேலும் நிறுவுதல் மற்றும் ஏனைய மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களைத் தழுவுதலும் கண்டறிதலும் ஆகியன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன் விளைவாக, இ.மி.ச., தனக்குச் சொந்தமான முதலாவது பெரிய அளவிலான காற்றாலை மின்வலு நிலையத்தை தேசத்திற்கு வழங்கியது. இது மன்னாரில் உள்ள தம்பபவனி காற்றாலை மின் நிலையமாகும்.

மறுபுறத்தில், குறைந்த கிரயத்தில் மின்சாரத்தைப் பிறப்பாக்கம் செய்வது பொருளாதார நிலைபேற்றுத் தன்மைக்கு முக்கியமானதாகும். நிறுவனத்தினதும் ஒட்டுமொத்த நாட்டினதும் பொருளாதார நிலைபேற்றுத் தன்மையைப் பேணுவதற்கு நிலக்கரி மற்றும் LNG போன்ற குறைந்த கிரயம் கொண்ட மின்சாரப் பிறப்பாக்கல் ஆதாரங்களைச் சேர்ப்பதற்கு இ.மி.ச. போராடுகிறது.

எந்தவொரு மின்வலு ஆலை, மின் பரிமாற்ற மார்க்கம் அல்லது மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் பெரும்பாலும் அனைத்து கட்டுமானங்களிலும் காடுகளை அழிப்பது அல்லது மரத்தின் பகுதிகளை வெட்டுவது என்பது தவிர்க்கமுடியாதது என்பது உண்மையாகும். இருப்பினும், இத்தகைய கட்டுமானங்கள் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு (EIA) ஆய்வுகளின் பரிந்துரைகளுக்கு இணங்கவே முன்னெடுக்கப்படுகின்றன. கவனத்தில்

# நிலைபேற்று அறிக்கை (தொடர்ச்சி)

கொள்ளப்படுகின்ற அபிவிருத்தித் தெரிவுகள் சுற்றுச்சூழல் ரீதியாக பத்திரமானதாகவும் நிலைபேறானதாகவும் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்துவதற்காக EIA ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. எனவே, செயற்றிட்ட வடிவமைப்பின் ஆரம்பத்திலேயே சுற்றுச்சூழல் பின்விளைவுகள் ஏற்பிசைவு செய்யப்பட்டு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதால், பொதுமக்களையும் மற்றைய நாட்டதாரர்களையும் திட்டமிடல் அபிவிருத்தி காரணமாக ஏற்படும் பாதிப்புகள் குறித்தான தங்கள் கருத்துக்களையும் உள்ளீடுகளையும் முன்வைக்க அனுமதித்துள்ளோம். உதாரணமாக, EIA ஆய்வுகளில் காட்டப்பட்டுள்ளவாறு, காடழிப்பை உள்ளடக்கிய ஒவ்வொரு கட்டுமானத்திற்கும் காடுகளை மீண்டும் நடவு செய்வதற்கும் பராமரிப்பதற்கும் ஆகும் செலவை ஈடுசெய்ய வனத் திணைக்களத்திற்கு (FD ஆல் மதிப்பீடு செய்யப்பட்ட) இ.மி.ச. இழப்பீடு வழங்குகிறது.

மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில், மின் பிறப்பாக்கல் மற்றும் மின் பரிமாற்றச் செயற்றிட்டங்களை ஆரம்பிக்கும்போது எதிர்மறையான தாக்கங்களைத் தடுப்பதற்கும் அல்லது குறைப்பதற்கும் நேர்மறையான தாக்கங்களை அதிகரிப்பதற்கும் பல நடவடிக்கைகளை அந்த ஆய்வுகள் பரிந்துரைத்திருந்தன.

EIA செயன்முறை முறையாக முன்னெடுக்கப்படும்போது, செயற்றிட்ட ஆதரவாளர்களும் இயற்கை வளங்களைப் பயன்படுத்த விரும்புகின்ற ஏனைய அபிவிருத்தியாளர்களும் முதலும் முதன்மையுமான நன்மைகளை அடைகின்றனர். இதற்கு மேலதிகமாக, சுற்றுச்சூழல் (பௌதிக மற்றும் உயிரியல்) மற்றும் சமூக அக்கறைகள் ஆகிய இரண்டும் பெரியளவான அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் பொறுப்பேற்கப்படுவதற்கு முன்னர் கவனத்தில் கொள்ளப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுக்கான வழியொன்றை EIA செயன்முறை வழங்குகிறது. சுருக்கமாக, EIA ஆனது அபிவிருத்தியாளர்களுக்கான நிலைபேறான முதலீடு மற்றும் மக்களுக்கான வாழக்கூடிய சூழல் ஆகியவற்றை உறுதி செய்கிறது.

மின்பிறப்பாக்கிகளின் செயற்பாடுகளின்போது, இ.மி.ச. நாட்டிற்குப் பொருத்தமான பெரும்பாலும் அனைத்து சுற்றுச்சூழல் வழிகாட்டுதல்களையும் பின்பற்றுகிறது. இதன் விளைவாக மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் இ.மி.ச. சராசரி உமிழ்வுச் சுட்டெண்ணை 0.555 kg / kWh என்ற மட்டத்தில் பேண முடிந்தது. உரிமதாரரால் விதிக்கப்பட்ட வரையறைகளுக்குள் செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக ஆண்டு முழுவதும் லக்விஜய நிலக்கரி மின்வலு ஆலையின் செயல்பாடுகள் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், மக்களினதும் உபகரணங்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பல்வேறு மட்டங்களிலும் உள்ள மின்வலு மார்க்கங்களின் அண்ணளவாக 187,848 km சரியான வழியை (ROW) பராமரிப்பதற்காக இ.மி.ச. மரங்களை (காடுகளில், தோட்டங்களில் அல்லது வீட்டுத் தோட்டங்களில் உள்ளவை) அகற்ற வேண்டியிருந்தது. பொறுப்புமிக்க நிறுவனம் என்ற வகையில், இ.மி.ச. காடழிப்பை ஈடுசெய்யும் முகமாகவும் சுற்றுச்சூழல் நிலைபேற்றுத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காகவும் கடந்த வருடங்களின் போதும் அதே போன்று மீளாய்வு ஆண்டிலும் மர நடுகை நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியிருந்தது. 2020 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் அண்ணளவாக 6,500 மரக்கன்றுகள் வெற்றிகரமாக நடவு செய்யப்பட்டன.

மறுபுறத்தில், வெற்றுக் கடத்திகளை காப்பிடப்பட்ட கடத்திக் கட்டுகளுடன் மாற்றீடு செய்தல் போன்ற மின் விநியோக அபிவிருத்திகள் முதன்மையான தொழில்நுட்பக் காரணங்களுக்கு அப்பால், மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக உகந்த தாவர முகாமைத்துவம் போன்றவற்றால் சுற்றியுள்ள சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது தொடர்பான சமூகப் பிரச்சினைகளை மறைமுகமாக எடுத்தியம்புகின்றன. மின்சார நுகர்வோர் தமது வீட்டு வளாகங்களில் மேற்கூரை சூரிய சக்தி மூலமான மின்சாரப் பிறப்பாக்கத்திற்கு அனுமதிக்கப்படுவதுடன், தமது மின்பிறப்பாக்கிகளை இ.மி.ச. முறைமையுடன் ஒத்திசைவாக்கவும் அனுமதிக்கப்படுகின்ற அதே வேளை நிகர மானியிடல், நிகரக் கணக்கீடு மற்றும் நிகரக் கூட்டல் என்ற மூன்று திட்டங்களின் கீழ் நுகர்வு மற்றும் ஏற்றுமதியாகும் சக்தி என்பன கணக்கெடுக்கப்படுகின்றன. இது புதைபடிவ எரிபொருள் பாவனை மீது தங்கியிருக்கும் நிலையைக் குறைப்பதற்கான ஒரு நடவடிக்கையாக உள்ளது.

## சமூக நிலைபேற்றுத்தன்மை

மின்சாரத் தொழில்துறையின் முன்னோடியாக, இ.மி.ச. மின்வலு முறைமையின் நம்பகமான செயற்பாடே தேசத்தின் சமூக, பொருளாதார நிலைபேற்றுத்தன்மையின் அடிப்படையாக இருக்கிறது.

இந்நிறுவனம் சில வருடங்களுக்கு முன்பே மின்மயமாக்கலுக்கான 100% அணுகலை அடைந்திருந்ததுடன் சமூக நிலைபேற்றுத்தன்மைக்கும் அடித்தளமிட்டிருந்தது. இது இ.மி.ச. பெருமை கொள்ளக்கூடிய ஒரு சாதனை ஆகும். மின்சாரம் பிரதேசங்களைச் சென்றடையும்போது, சமுதாய வாழ்க்கை வியத்தகு முறையில் மாற்றமடைகிறது. கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்கள் மக்களுக்காகத் திறக்கப்படுகின்றன. இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்குமிடையிலான இடைவெளி குறைக்கப்படுகிறது.

2020 மார்ச் மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட முடக்கல் நடவடிக்கைகளுக்கான விரைந்த பதிலளிப்பு ஊடாக இலங்கை முழுவதும் 24 மணி நேர சேவையைப் பராமரிப்பதன் மூலம் கோவிட் 19 நோய்ப் பரவலின் பின்னரும்கூட இ.மி.ச. அதன் விழுமியங்களுடன் வாழ்ந்து வருகிறது. நாங்கள் எங்கள் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை நிலைநாட்டியதாக நம்புவதுடன் இடர்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மை காணப்பட்ட போதிலும் புதியதொரு செயற்பாட்டு மட்டத்திற்கு இ.மி.ச. இனை நகர்த்துவதற்காக அவர்களுடைய ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.

மேற்குறிப்பிட்டவற்றுக்குப் புறம்பாக, 2020 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில், மாநகரக் குப்பைகளை அடிப்படையாகக் கொண்ட இலங்கையின் முதலாவது மின்வலு ஆலையை (IPP) மின்தொகுப்புடன் இணைப்பதற்கான நடவடிக்கைகளை இ.மி.ச. எடுத்திருந்தது. ஏனைய மலிவான வளங்களுடன் ஒப்பிடும்போது இந்த ஆலையின் அலகுக் கிரயம் ஒப்பீட்டளவில் உயர்வானதாக இருந்த போதிலும், இ.மி.ச. நிறுவனமானது மாநகரக் குப்பைகள் குவிகின்ற தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக இந்த ஆலையின் அபிவிருத்தியை ஆதரிக்கிறது. மேலும் கொழும்பு மாநகரப் பிரதேசத்தில் உள்ள திடக் கழிவுகளை மீள்சுழற்சி செய்வதன் மூலம் 11.5 MW மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு 500 - 700 மெற்றிக் தொன் மாநகரக் கழிவுகள் பயன்படுவதால் இது ஒட்டுமொத்த நாட்டினதும் சுற்றுச்சூழல் நிலைபேற்றத் தன்மைக்கு வழிவகுக்கும் என நம்பப்படுகிறது.

மேலே குறிப்பிட்டபடி, நிலைபேற்றுத்தன்மை என்பது சுற்றுச்சூழல், சமூக மற்றும் பொருளாதாரம் அத்துடன் நிறுவனம் மற்றும் பொருளாதாரத்தின் நிலைபேற்றுத்தன்மைக்கான இந்த மூன்று தூ ண்களுக்குமிடையிலான சமநிலையைப் பேணுவதற்கு கடினமான நேரங்களில் கடுமையான தீர்மானங்களை எடுப்பது ஆகியவற்றுக்கான அக்கறையுடன் எமது விழுமியங்கள் வாழ்கின்றன.

# நிறுவன சமூகப் பொறுப்பு அறிக்கை

மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் சமூக சுகாதாரம், சேமநலன் மற்றும் நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிய பங்களிப்புக்கு இ.மி.ச. சகல முயற்சிகளையும் எடுத்திருந்தது. அத்தகைய சில முயற்சிகள் பற்றி இந்தப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளது.



## முதலில் பிள்ளைகள்

கோவிட் 19 நோய்ப் பரவலானது மக்கள் மத்தியில் அதிகளவான பயத்தையும் நிச்சயமற்ற தன்மையையும் உருவாக்கியிருந்தது. இதில் பிள்ளைகள் மிகவும் பாதிப்புக்குள்ளாகும் நிலையில் இருந்தனர். எனவே, நிறுவன சமூகப் பொறுப்புடமை (CSR) என்ற கருப்பொருளின் கீழ், ஒரு புதிய சிறுவர் பாடல் ஒன்றின் அறிமுகப்படுத்தலுடன் உலக சிறுவர் தினத்தை கொண்டாடும் முகமாக இ.மி.ச. தலைமையகத்தில் 2020 செப்ரெம்பர் 30 ஆந் திகதி நிகழ்வொன்று நடத்தப்பட்டது. இது கோவிட் 19 தொடர்பான கவலைகளை அனுபவித்து வரும் சிறுவர்களை தனிமையில் உற்சாகப்படுத்துவதாக அமைந்திருந்தது. "விதுலி எலியென் அக்குரு கரண" என்ற பாடலை இ.மி.ச. சார்பாக புகழ்பெற்ற இசைக்கலைஞர் திரு. கீர்த்தி பாஸ்குவால் வழங்கியிருந்தார்.



இளம் பராயத்தினருக்கு வசதி செய்து கொடுப்பதற்காக 3.72 மில்லியன் ரூபா மொத்தச் செலவில் பு/கல்/ பனையடி R.C.T. வித்தியாலயத்திற்கு 25' x 50' வகுப்பறைக் கட்டடம் மின் பிறப்பாக்கல் பிரிவினால் நிருமாணிக்கப்பட்டது.



## சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கான உட்கட்டமைப்பு அபிவிருத்தி

மின் பிறப்பாக்கல் பிரிவினால் கிராம மக்களின் மேம்பாட்டிற்காக 48.58 மில்லியன் ரூபா மொத்தச் செலவில் நுரைச்சோலை - பனையடி வீதி புனரமைக்கப்பட்டது.



## நோய்ப் பரவலைச் சமாளித்தல்

உலகம் பூராகவும் கோவிட் 19 நோய்ப் பரவல் தொடர்பான முடங்கங்களைச் சமாளிக்கும் இலங்கையர்களுக்கு உதவுவதற்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (SLBC) மற்றும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் (SLRC) ஆகியவற்றுடன் இணைந்து B&OS கிளையினால் இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த இசை நிகழ்ச்சி 2020 நவெம்பர் 1 ஆந் திகதி நடைபெற்றதுடன் அது உள்நாட்டில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இது இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நிறுவன இணையத்தளம் ஊடாக வெளிநாட்டுப் பார்வையாளர்களுக்குக் கிடைக்கச் செய்யப்பட்டது.

தமிழ் - சிங்கள புது வருட காலப்பகுதியில், B&OS கிளையானது குடிமக்களின் மன உறுதியை அதிகரிக்க தொடர்ச்சியான SLBC நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தது. இ.மி.ச. இன் அனுசரணையுடன் City FM இன் බක්මහ සැණකෙළිය என்பது இந்த முயற்சியின் ஒரு முக்கிய நிகழ்ச்சியாக இருந்தது.

## இலவச மின்சாரம்

இ.மி.ச. இன் 51 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் முகமாக, நாடு பூராகவும் உள்ள 51 குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவசமாக மின்சார இணைப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கும் பூரணமான உள்ளக கம்பியிடுதல் வேலைகளைச் செய்வதற்கும் உதவுவதற்கு B&OS கிளையினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

## உள்ளூர் மக்களை வலுப்படுத்தல்

மன்னார் காற்றாலை மின்வலுச் செயற்றிட்டமானது காற்றாலை மின்வலு அபிவிருத்தியில் சர்வதேச ரீதியில் பாராட்டப்பட்ட சிறந்த நடைமுறைகளை கூட்டிணைக்கும் ஒரு திறன்மதிப்புமிக்க செயற்றிட்டமாகும். இது எதிர்கால காற்றாலை மின்வலு அபிவிருத்திக்கான ஒரு மாதிரிச் செயற்றிட்டமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அநேகமாக இச்செயற்றிட்டத்தின் மிகவும் பயனளிக்கின்ற அம்சமாக இருப்பது உள்ளூர் சமூகத்தை எவ்வாறு ஈடுபடுத்துவது, நேரடியான மற்றும் மறைமுகமான வேலை வாய்ப்புகளை வழங்குவது, பாதை வலையமைப்பை மேம்படுத்துவது மற்றும் மீனவ சமூகத்திற்கு சுகாதார வசதிகளை மேம்படுத்துவது என்பனவாகும். திடக் கழிவுகளை முகாமை செய்வதற்கான உள்ளூர் அதிகார சபைகளுக்கு வழங்கப்பட்ட உதவியும் அத்தகைய வேறு பல முயற்சிகளும் அனைத்து உள்ளூர் மக்களின் ஆதரவையும் வென்றுள்ளது.

# நிறுவன சமூகப் பொறுப்பு அறிக்கை (தொடர்ச்சி)

### தூய்மையான சுற்றுச்சூழல்

காடழிப்பு என்பது இலங்கையில் காணப்படும் ஒரு தீவிரமான பிரச்சினையாகும். மின் பரிமாற்ற மார்க்கங்களின் சரியான வழித்தடத்திற்காக மரங்களை (காடுகளில், தோட்டங்களில் அல்லது வீட்டுத் தோட்டங்களில்) அகற்றுவதற்கான தேவை அடிக்கடி காணப்படுகிறது. இ.மி.ச. இன் மின்வலு நிலையம்/ மின்தொகுப்பு உபமின் நிலையம் அல்லது ஏனைய செயற்றிட்டக் கூறுகளை நடைமுறைப்படுத்தும்போது நிலம் வெற்றிடமாக்கப்படலாம்/ வெள்ளத்தில் மூழ்கடிக்கப்படலாம். இவ்வாறு காடுகள் அழிக்கப்படுவதைக் குறைக்கும் பொருட்டு பொருத்தமான இடங்களில் காடுகளை மீண்டும் நடவு செய்து பராமரிப்பதற்காக இ.மி.ச. வனத் திணைக்களத்திற்கு இழப்பீடு வழங்குவது குறிப்பிடத்தக்கது. அது மாத்திரமின்றி, பொறுப்புமிக்க நிறுவனம் என்ற வகையில், இ.மி.ச. தூய சுற்றுச்சூழலை உறுதிப்படுத்துவதற்காக ஆண்டுதோறும் பல மர நடுகை நிகழ்ச்சித் திட்டங்களையும் ஏற்பாடு செய்கிறது.



மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில், கும்புக், மீ, ஜாக், கெடா கெல, மூலிகை மற்றும் பழ மரங்களை நாடு பூராகவும் நடவு செய்திருந்தது.



செயற்பாட்டு மீளாய்வு

# நிதிப் பிரிவு மற்றும் நிதி தகவல்கள்

# நிதிப் பிரிவு

நிதிப் பிரிவானது வணிக நடவடிக்கைகளின் நிலைபேறானதன்மை மற்றும் வளர்ச்சிக்கு வசதியளிப்பதற்கான நிதிசார் திட்டமிடல், திறைசேரி முகாமைத்துவம், நிதி மற்றும் முகாமைத்துவ அறிக்கையிடல், சட்டநியதித் தொடர்புகள், வரிவிதிப்பு, காசு முகாமைத்துவம் மற்றும், நிறுவன மற்றும் செயற்றிட்ட நிதி ஆகியவற்றுடன் தொடர்புபட்டுள்ளது. இதன் பிரதான பொறுப்பாக இருப்பது சகல நிதிசார் தீர்மானங்களும் இ.மி.ச. முழுவதும் கிரய வினைத்திறனுக்கு பங்களிப்புச் செய்யும் சிறந்த தேர்வுநிபந்தனையின் அடிப்படையிலானவை என்பதை உறுதிப்படுத்துவதாகும்.

## செயற்பாட்டுக் கட்டமைப்பு

நிதிப் பிரிவானது இ.மி.ச. இன் பொது முகாமையாளருக்கு நேரடியாக அறிக்கையிடும் நிதி முகாமையாளரால் தலைமை தாங்கப்படுகிறது. அவருக்கு நேரடியாக அறிக்கையிடுகின்ற AFM (HQ), AFM (நிறுவனம்) மற்றும் AFM (TM) என்ற மூன்று மேலதிக நிதி முகாமையாளர்களும், பிரிவுக்கான AGM களுக்கு நேரடியாக அறிக்கையிடுகின்ற எட்டு மேலதிக நிதி முகாமையாளர்களும் ஒவ்வொரு பிரிவினது நிதி சார்ந்த விடயங்களுக்கும் தொழிற்பாட்டு ரீதியில் நிதி முகாமையாளருக்கு பொறுப்புக் கூறக்கூடியவர்களாக இருக்கின்றனர்.

AFM (தலைமையகம்) ஆனது காசு முகாமைத்துவம், செயற்றிட்ட ஒருங்கிணைப்பு மற்றும் சேகரிப்பு முகாமைத்துவம் தொடர்பில் பிரதான வகிபாகத்தை ஆற்றுகிறது. மேலும், பாதீடுகள் உள்ளிட்ட இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்கள் மற்றும் முகாமைத்துவத் தகவல்களைத் தயாரித்தலும் அவற்றை முன்வைத்தலும் AFM (நிறுவனம்) இன் பிரதான தொழிற்பாடுகளாகும். AFM (TM) இன் கீழ் திறைசேரி முகாமைத்துவக் கிளையின் தாபிப்பு, சேமலாப மற்றும் ஓய்வூதிய நிதியங்களின் முகாமைத்துவம் மற்றும் நாளாந்தச் செயற்பாடுகளுக்கும் மூலதனச் செயற்றிட்டங்களுக்குமான நிதியினை ஏற்பாடு செய்தல் என்பன AFM (TM) இனால் கையாளப்படுகிறது. பிரதான முயற்சிகளின் சுருக்கமான விபரங்களும் ஒவ்வொரு தொழிற்பாட்டின் இயக்கத்தையும் மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

## காசு முகாமைத்துவம்

இ.மி.ச. இன் நிதிப் பிரிவில் உள்ள பிரதான தொழிற்பாடுகளில் ஒன்றை கொடுப்பனவு அலகு ஆற்றுவதுடன் சகல பணங்கொடுத்தல்களும் இந்த அலகினால் கையாளப்படுகிறது. இந்த ஆண்டு கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக கொடுப்பனவு அலகிற்கு கடுஞ் சோதனையான காலகட்டமாக இருந்தது. நோய்ப் பரவலின் விளைவாக, இ.மி.ச. ஆனது மின்சாரக் கட்டணப் பட்டியல் தொடர்பில் நுகர்வோருக்கு பல சலுகைகளை அறிவித்திருந்த அதே வேளை சாத்தியமான திரவத்தன்மை பிரச்சினைகள் உள்ளிட்ட காசு மற்றும் தொழிற்படு மூலதனம் மீது குறிப்பிடத்தக்களவு தடைகள் அனுபவிக்கப்பட்டன. எவ்வாறாயினும், திறைசேரி முகாமைத்துவக் கிளையின் உதவியுடன், கொடுப்பனவு அலகானது கொடுப்பனவுகளை முன்னுரிமைப்படுத்தியிருந்ததுடன் கிடைக்கக்கூடிய நிதிகளை ஒரு வினைத்திறனான வழியில் ஒதுக்கீடு செய்திருந்தது.

தொழினுட்ப அம்சங்களில், செயற்பாட்டு முறைமையை தங்குதடையின்றி நடத்திச்செல்லம் பொருட்டு "ஒன்லைன் PIV தீர்ப்பனவு முறைமையை கொடுப்பனவு அலகு ஆரம்பித்திருந்தது.

## சேகரிப்பு முகாமைத்துவம்

கோவிட் 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக பொது முடக்கங்கள், ஊரடங்குச் சட்டம், சமூக இடைவெளியைப் பேணுதல் மற்றும் அத்தியாவசிய சேவைகள் அல்லாதவற்றைத் தற்காலிகமாக மூடுதல் போன்ற அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்பட்ட கட்டுப்பாடுகளால் கட்டணப் பட்டியலிடுவதற்காக மின் மானி வாசிப்புகளைப் பெற மின்சார வாடிக்கையாளர்களை அணுகுவதும் மின்சாரக் கட்டணக் கொப்பனவுகளும் கட்டுப்படுத்தப்பட்டன. சகல POS கருமபீடங்களும் வாடிக்கையாளர்கள் அதேபோன்று ஊழியர்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு சுகாதார வழிகாட்டல்களுக்கு இணங்க மீள ஒழுங்குபடுத்தப்பட்டன. மேலும், மின்சார கட்டணப் பட்டியல்களுக்கான கொடுப்பனவுகளை மிகவும் சௌகரியமான முறையிலும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதை இலகுபடுத்துவதற்காக ஆண்டின் காலப்பகுதியில் பின்வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

- யூனியன் வங்கி மற்றும் ஹற்றன் ந'னல் வங்கி (HNB) சேகரிப்பு முகவர்களுக்கு, கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளைச் "செலுத்தும் நேரத்திலேயே நிகழ்நிலைப்படுத்தும" (OLRT) வசதி விரிவாக்கப்பட்டது.
- கொமர்'ல் வங்கி, சம்பத் வங்கி மற்றும் செலான் வங்கி ஆகியவற்றின் மூலம் ஒன்றிணைக்கப்பட்ட தன்னியக்கமான மின்சாரக் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளை (ஒன்லைன் நிலையியற் கட்டளைகள் ஊடாக) நடைமுறைப்படுத்தப்பட்டன.
- இ.மி.ச. இணையத்தளம் மூலமான கொடுப்பனவு வழிமுறையானது (IPG - இணையத்தளம்) தற்போதுள்ள VISA/Master கடன் அட்டைகளுக்கு மேலதிகமாக, மேலதிக கட்டணம் எதுவுமின்றி "AMEX அட்டைகள்" மூலமாக ஒன்லைன் கடனட்டைக் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.
- ஊநுடீயுளளளைவ செயலி ஊடாக மின்மானி வாசிப்புகள் பெறப்பட்டவுடன் அவை கட்டணப் பட்டியலிடும் முறைமையில் நிகழ்நிலைப்படுத்தப்படுவதானது கட்டணப்பட்டியல் சுற்றுக் காலத்தை நாட்காட்டி மாதமாக்குவதை இயலச் செய்யும். இது பட்டியலிடும் முறைமைக்கும் பேரேட்டிற்கும் இடையிலான வருமானம் மற்றும் சேகரிப்பின் இணக்கத்தன்மை தொடர்பாக நீண்ட காலமாக நிலவும் சிக்கல்களை நீக்கும்.

## செயற்றிட்டங்கள் ஒருங்கிணைப்பு

செயற்றிட்டங்கள் ஒருங்கிணைப்பு அலகானது நிதியுதவி அளிக்கும் முகவராண்மை, செயற்றிட்ட முகாமைத்துவ அலகுகள் (PMUs), வெளிவாரி வளங்கள் திணைக்களம் (ERD) மற்றும் பொதுத் திறைசேரிக்கு கடன் தொடர்பான விடயங்களை ஒருங்கிணைப்பதில் உதவுவதன் மூலம் சகல வெளிநாட்டு நிதியுதவி பெற்ற செயற்றிட்டங்களுக்கும் ஒரு ஒருங்கிணைப்பு அலகாகத் தொழிற்படுகிறது. கடன் உடன்படிக்கைகளின்படி நிதியுதவி அளிக்கும் முகவராண்மைகளால் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது கோரப்படுகின்ற கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய தகவல்களை வழங்குவது இதன் பிரதான வகிபாகத்தில் அடங்கும். மேலும், கடனிலிருந்து உரிமையாண்மை என்ற மாற்றீட்டில் பொதுத் திறைசேரியுடனான ஒருங்கிணைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தும் முகவராண்மையின் எதிர்காலச் செயற்பாடுகளைத் திட்டமிடுதல் மற்றும் தீர்மானமெடுத்தலுக்குத் தேவையான கடன் தொடர்பான தகவல்களை வழங்குவதன் மூலம் இ.மி.ச. இன் முகாமைக்கு உதவுதல் என்பனவும் இந்த அலகின் செயல் எல்லையின் கீழ் வருகிறது.

கடன் வழங்கும் முகவராண்மைக்கு செயற்றிட்டத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடுவினுள் அவற்றைச் சமர்ப்பிப்பதில் கோவிட் 19 நோய்ப் பரவலின் தாக்கம் செல்வாக்குச் செலுத்தியதால் 2020 ஆம் ஆண்டு ஒரு சவால்மிக்க காலப்பகுதியாக அமைந்திருந்தது. எவ்வாறாயினும், செயற்றிட்டங்கள் ஒருங்கிணைப்பு அலகானது PUMs மற்றும் கணக்காய்வாளர்களுடன் கைகோர்த்து பணியாற்றியிருந்ததுடன் சகல தேவையான சமர்ப்பித்தல்களையும் உரிய நேரத்தில் சமர்ப்பிக்க முடிந்திருந்தது. மேலும், புத்தளம் நிலக்கரி மின்வலுச் செயற்றிட்டத்தின் கடன் மீள்கொடுப்பனவு ஆனது நிதி அமைச்சின் ஒருங்கிணைப்புடன் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாகவும் உரிமையாண்மைக்கு மாற்றப்பட்டது. நிதி அமைச்சானது கடன் - உரிமையாண்மை விகிதத்தை வலுவானதாக்குவதற்காக கடனை உரிமையாண்மைக்கு மாற்றியிருந்தது.

# நிதிப் பிரிவு (தொடர்ச்சி)

## திறைசேரி முகாமைத்துவம்

திறைசேரி முகாமைத்துவக் கிளையானது காசு, முதலீடுகள் மற்றும் ஏனைய நிதிச் சொத்துக்களை முகாமை செய்வதன் மூலம் ஒரு முக்கிய வகிபாகத்தை ஆற்றுகிறது. எவ்வாறாயினும், இந்த நிதி ஆண்டு பிந்தைய அண்மையில் ஏற்பட்ட கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக மிகவும் சவால்மிக்க ஆண்டுகளில் ஒன்றாகத் திகழ்ந்தது. 2020 மார்ச் மாத நடுப்பகுதியில் நாடு பூராகவும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதில் இருந்து இ.மி.ச. பல நிதிசார் சிரமங்களை எதிர்கொண்டது. திறைசேரி முகாமைத்துவக் கிளையானது அனைத்து குறைந்த முன்னுரிமை பெற்ற மூலதனச் செலவினங்களையும் முடக்குதல், காலக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்காக வர்த்தக வங்கிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துதல் மற்றும் திரவத்தன்மை நிலையினைப் பேணுவதற்காக காசு உட்பாய்வு மற்றும் வெளிப்பாய்வை பொருத்துவதற்கான சென்மதித் தொகுதியை நடைமுறைப்படுத்தல் உள்ளிட்ட அத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தொடர் நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

மேலும், பட்டியலிடப்பட்ட கடன் பிணையங்களை வழங்குவதற்கான அரசுக்குச் சொந்தமான முதலாவது சட்டநியதி சபையாக மாறிவருகின்ற இ.மி.ச. ஆனது மரபு சாரா நிதிக் கருவிகள் ஊடாக நிதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு முன்வந்திருந்தது.

மேலும், தீர்மானம் எடுப்பதற்கான உரிய நேரத் தகவல்களுக்காக, திறைசேரி முகாமைத்துவக் கிளையானது சந்தைத் தகவல்களை அடைவதற்கு ரொயிட்டர்ஸ் நிதித் தளத்தில் பதிவு செய்துள்ளது.

## நிதியங்களின் முகாமைத்துவம்

### இ.மி.ச. சேமலாப நிதியம்

இலங்கை மின்சார சபை சேமலாப நிதியம் என்பது 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு தனியான சேமலாப நிதியம் ஆகும்.

இது ஏழு அங்கத்தவர்களைக் கொண்ட முகாமைத்துவக் குழு ஒன்றினால் நிருவகிக்கப்படுகிறது. இக்குழுவின் தலைவராக இ.மி.ச. இன் தலைவரும் பிரதித் தலைவராக இ.மி.ச. இன் பொது முகாமையாளரும் இருக்கின்றனர். நிதி முகாமையாளரும் பிரதிப் பொது முகாமையாளர் (ஆளணி) உம் ஏனைய பதவிவழி அங்கத்தவர்களாவர். வேறு மூன்று அங்கத்தவர்கள் இ.மி.ச. இன் சபையினால் தெரிவு செய்யப்படுகின்றனர். நாளாந்த நிருவாகத்திற்குப் பொறுப்பாக இருப்பதற்காக இந்நிதியத்தின் செயலாளரும் கணக்காளரும் சபையினால் நியமிக்கப்படுவதுடன் அந்தச் செயலாளரும் கணக்காளருமே நிதியத்தின் பொருளாளராகவும் இருப்பர்.

நிதியம் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தைப் பதிவு செய்திருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க சாதனைகளை அடைந்திருந்தது. சில சாதனைகள் கீழே எடுத்தியம்பப் பட்டுள்ளன.

- ஆண்டிற்கான தொழில்தருநர் மற்றும் ஊழியரிடமிருந்தான மொத்தப் பங்களிப்பு 4.80 பில்லியன் இலங்கை ரூபா ஆகும். இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.74% என்ற சிறியளவான குறைவைக் காட்டுகிறது.
- ஆண்டின் காலப்பகுதியில் மொத்த முதலீட்டு வருமானமாக 6.2 பில்லியன் இலங்கை ரூபா பதிவாகியிருந்தது. இது 2019 ஆம் ஆண்டிற்கான 6.8 பில்லியன் இலங்கை ரூபாவுடன் ஒப்பிடுகையில் 9.6% குறைவானதாகும். அறிக்கையிடல் திகதியில் முதலீட்டுப் பெறுமதி 45.4 பில்லியனிலிருந்து 50 பில்லியன் இலங்கை ரூபாயாக அதிகரித்திருந்த போதும் பொருளாதார வட்டி வீதங்களில் ஏற்பட்ட கடுமையான குறைப்பே இதற்குக் காரணமாக அமைந்திருந்தது.
- இந்நிதியத்தால் முன்னைய ஆண்டில் ஈட்டப்பட்ட நிகர இலாபமான 5.8 பில்லியன் இலங்கை ரூபாவுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 5.3 பில்லியன் இலங்கை ரூபாய் நிகர இலாபமாக ஈட்டப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் தமது அங்கத்தவர்களுக்கு 8% பங்கிலாபம் அறிவிக்கப்பட்ட அதே வேளை முதலீட்டு ஒதுக்க நிதிக்காக 450 மில்லியன் இலங்கை ரூபா மாற்றப்பட்டிருந்தது.
- ஆண்டின் இறுதியில் நிதியத்தினது மொத்த நிகரச் சொத்தின் பெறுமதி 66 பில்லியன் இலங்கை ரூபாவைக் கடந்திருந்தது.
- மொத்த வருமானத்தில் 0.07% ஆகக் காணப்பட்ட செயற்பாட்டுச் செலவினங்கள் 2020 ஆம் ஆண்டில் 0.06% இற்குக் குறைவடைந்திருந்தது. இது அந்தக் காலப்பகுதிக்கான நிதியத்தின் செயற்பாட்டு வினைத்திறனில் ஏற்பட்ட மேம்பாட்டைப் பிரதிபலிக்கிறது.
- ஒரே நேரத்தில் 05 அங்கத்தவர் அழைப்புகளைக் கையாள்வதற்கான IVR (ஊடாடும் குரல்வழிப் பதிலளிப்பு) வசதியுடன்கூடிய PABX முறைமையானது அங்கத்தவர்கள் தமது மாதாந்தப் பங்களிப்பு, இருக்கின்ற கடன் மீதிகள் ஆகியவற்றைப் பார்வையிடுவதற்காக சேமலாப நிதிய முறைமையை அணுகுவதற்கு அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதன் மீது விசேட கவனம் செலுத்தி, ஆண்டின் காலப்பகுதியில் பயனுறுதிமிக்க தொழிற்பாட்டைத் தொடர்ந்தும் முன்னெடுக்கிறது.
- டிஜிடல் வடிவிலான பதிவேட்டு அறையில் 2017 ஆம் ஆண்டு வரையிலான பதிவுகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் கிடைக்கக்கூடிய அலுவலக வெளியை வெற்றிகரமான முறையில் உத்தமமாகத் பயன்படுத்தித் பணியினைத் தொடர எதிர்பார்க்கப்படுகிறது.



# நிதிப் பிரிவு (தொடர்ச்சி)

உரு F 1 : ஐவட்டியும் பங்கிலாபமும் (ரூபா பில்லியனில்)




உரு F 5 : செலுத்தப்பட்ட வருமான வரி (ரூபா மில்.)




உரு F 2 : வருமானம் (ரூபா பில்லியனில்) எதிர் செலவினம் (ரூபா மில்.)




உரு F6 : அரசாங்க வங்கிகளில் மொத்த முதலீடு (ரூபா மில்.)




உரு F 3 : வழங்கிய கடன் (ரூபா மில்லியனில்)




உரு F 4 : முதலீட்டுச் சுருக்கம் %




### இ.மி.ச. ஓய்வூதிய நிதியம்

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் பிரிவு 12(j) இன் கீழ் 1994 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி ஓய்வூதிய நிதியம் தாபிக்கப்பட்டது. இது எட்டு அங்கத்தவர்களைக் கொண்ட முகாமைத்துவக் குழுவினால் முகாமை செய்யப்படுகிறது. இ.மி.ச. இன் தலைவரும் இ.மி.ச. இன் பொது முகாமையாளரும் முறையே குழுவின் தலைவராகவும் பிரதித் தலைவராகவும் பணியாற்றுகின்றனர். நிதி முகாமையாளரும் பிரதிப் பொது முகாமையாளர் (ஆளணி) உம் குழுவின் ஏனைய பதவிவழி அங்கத்தவர்களாக இருக்கின்றனர். மீதமுள்ள நான்கு அங்கத்தவர்களும் சபையினால் தெரிவு செய்யப்படுகின்ற இ.மி.ச. இன் நிரந்தர ஊழியர்களாக இருக்கின்றனர். செயலாளரும் கணக்காளரும் பொருளாளராக இருப்பதுடன் நிதியத்தின் நிருவாகத்தையும் கவனிக்கின்றனர். இது இ.மி.ச. திறைசேரி முகாமைத்துவ அலகின் செயல் எல்லையின் கீழ் தொழிற்படுத்தப்படுகிறது.

2020 ஆம் ஆண்டின் இறுதியில் செயல்நிலையில் உள்ள ஓய்வூதியகாரர்களின் மொத்த எண்ணிக்கை 7839 ஆக இருந்ததுடன் கடந்த ஐந்து வருடங்களில் ஓய்வூதியகாரர்களின் அதிகரிப்பை கீழேயுள்ள அட்டவணை சித்தரிக்கிறது.

| ஆண்டு | ஓய்வூதியகாரர்களின் எண்ணிக்கை | ஓய்வூதியகாரர்களின்அதிகரிப்பு | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % |
| 2015 | 5721 | | |
| 2016 | 6194 | 473 | 8.3% |
| 2017 | 6622 | 428 | 6.9% |
| 2018 | 7061 | 439 | 6.6% |
| 2019 | 7533 | 472 | 6.7% |
| 2020 | 7839 | 306 | 3.9% |

# நிதிப் பிரிவு (தொடர்ச்சி)

உரு F7 : ஓய்வூதியகாரர்களின் எண்ணிக்கை




| ஆண்டு | நிகரச் சொத்துக்கள் (ரூபா மில்.) | பெறுமதி அதிகரிப்பு (ரூபா மில்.) | % இன் அதிகரிப்பு |
|---|---|---|---|
| 2015 | 16,962 | | |
| 2016 | 18,211 | 1,249 | 7% |
| 2017 | 19,863 | 1,652 | 9% |
| 2018 | 21,384 | 1,521 | 7.6% |
| 2019 | 22,695 | 1,311 | 6% |
| 2020 | 23,919 | 1,224 | 5% |

ஓய்வூதிய நிதியத்திற்கான பிரதான மூலங்களாக செயல்நிலையில் உள்ள ஊழியர்கள் சார்பாக இ.மி.ச. இனால் செய்யப்படும் பங்களிப்பு மற்றும் முதலீடுகள் மீதான வருவாய் ஆகியன காணப்படுகின்றன. ஓய்வூதியக் கொடுப்பனவு 50% இனால் அதிகரித்ததன் காரணமாகவும் 2015 ஆம் ஆண்டிலிருந்து புதிய ஓய்வூதியகாரர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டதன் காரணமாகவும் கடந்த ஐந்து ஆண்டு காலப்பகுதியில் ஆண்டுதோறும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கான நிதியில் குறுகியதொரு வீழ்ச்சி அதிகரித்திருந்தது. 2015 ஆம் ஆண்டிலிருந்து ஓய்வூதியகாரர்களின் சராசரி அதிகரிப்பு 8% ஆகும்.

| ஆண்டு | இ.மி.ச. பங்களிப்பு (ரூபா மில்.) | வட்டி வருமானம் (ரூபா மில்.) | வருடாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு | வளர்ச்சி (%) |
|---|---|---|---|---|
| 2015 | 921 | 20 | 941 | |
| 2016 | 974 | 158 | 1,132 | 20% |
| 2017 | 1,029 | 364 | 1,393 | 23% |
| 2018 | 1,420 | 480 | 1,900 | 36% |
| 2019 | 1,405 | 499 | 1,904 | 0.21% |
| 2020 | 1,389 | 431 | 2,035 | 7% |

உரு F8 : வருடாந்த ஓய்வூதியக் கொடுப்பனவின் தொகுப்பு




உரு F9 : நிகரச் சொத்துக்கள் (இல. ரூபா மில்.)



# ஒட்டுமொத்த செயற்பாட்டு மற்றும் நிதி மீளாய்வு

தடையற்ற மின்சாரம் இலங்கையர்களின் வாழ்வை வளப்படுத்தும் ஒரு முன்நிபந்தனையாக இருப்பதனால் தேசிய வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியில் மின்சாரம் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றது. 2020 ஆம் ஆண்டளவில் இலங்கையின் தேசிய மின்மயமாக்கல் மட்டம் 99.5% ஐ எட்டியுள்ளதுடன், இது ஆசிய சூழலில் குறிப்பிடத்தக்க சாதனையாகும். தெற்காசியாவில் 24 மணி நேர மின்சார வசதியுடன் கிட்டத்தட்ட 100% மின்சாரம் கிடைக்கும் ஒரே நாடு இலங்கை ஆகும்.

இலங்கையில் ஒரு பொறுப்புமிக்க கூட்டிணைந்த அமைப்பாக, கைத்தொழில் துறை, விவசாயத் துறை மற்றும் சேவைத் துறை ஆகியவற்றுக்கு வசதிகளை வழங்குவதன் மூலம் பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட உதவிகளை வழங்குவதில் இ.மி.ச. ஈடுபட்டுள்ளது. சமீபத்திய ஆண்டுகளில், நிலைபேற்றுத் தன்மைக்காக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களை உருவாக்கும் முயற்சியினை இ.மி.ச. தொடர்கிறது. இந்த முயற்சிகள் எங்கள் பங்குதாரர்கள் அனைவருக்கும் பெறுமதி சேர்ப்பதற்கு வழி வகுத்துள்ளது.

## நிதிச் செயலாற்றல்

### வருமானம்

2020 ஆம் ஆண்டில் இ.மி.ச. ரூபா 239 பில்லியன் வருமானத்தை அடைந்திருந்துடன் பல்வேறு வெளிப்புற சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தமையால் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2% வருமான வீழ்ச்சியை இது பிரதிபலிக்கின்றது. கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக வீட்டுத் துறையினரின் கேள்வி அதிகரித்திருந்த போதிலும், கைத்தொழில், பொது நோக்கம் மற்றும் ஹோட்டல் துறையினரின் கேள்வி கணிசமாகக் குறைவடைந்தமையே இந்த வருமான வீழ்ச்சிக்கு முக்கியமாக தாக்கமளித்திருந்தது. நாட்டின் சவால்மிக்க சமூக-பொருளாதார நிலைமைகள் காரணமாக, மின்சார அலகுகளுக்கான கேள்வி 2% குறைவடைந்துள்ளது. மின் உற்பத்தி தொடர்பான அனைத்து செலவுக் காரணிகளும் வேகமாக அதிகரித்து வரும் நிலையில், அரசாங்கக் கொள்கைத் தீர்மானம் காரணமாக 2014 ஆம் ஆண்டு முதல் கட்டண அமைப்பு மாறாமல் உள்ள அதேவேளை மின்வலு பிறப்பாக்கத்துடன் தொடர்புடைய அனைத்துக் கிரயங்களும் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றன.

உரு F 1 : விற்பனை வருமானம் மற்றும் விற்கப்பட்ட அலகுகளின் மாற்றம்




உரு F 2 : மின்பிறப்பாக்கம் மற்றும் விற்கப்பட்ட GWh அலகுகளின் மாற்றம்




## தேறிய இலாபம்/ (நட்டம்)

கிரயத்தை கருத்திற்கொள்ளாத கட்டண அமைப்பு மற்றும் முன்மொழியப்பட்ட குறைந்த கிரய மின்வலு பிறப்பாக்கல் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் தாமதம் காரணமாக 2020 நிதியாண்டு, இ.மி.ச. இற்கு ரூபா 62.5 பில்லியன் தேறிய நட்டத்தை பதிவுசெய்த மற்றொரு ஆபத்தான ஆண்டாக அமைந்திருந்தது. ரூபா 97.4 பில்லியன் தேறிய நட்டத்தை பதிவு செய்திருந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், தேறிய நட்டத்தை 36% குறைத்ததன் மூலம் இ.மி.ச. அதன் கீழ்மட்டச் சரிவை ஓரளவு சீர்படுத்தியிருந்தது. கேள்வி குறைடைதல், எரிபொருள் விலை குறைப்பு மற்றும் இ.மி.ச. இன் நீர் மற்றும் நிலக்கரி மூலங்களின் ஊடான அதிக உற்பத்தி காரணமாகவே முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நட்டம் குறைவடைந்திருந்தது.

உரு F 3 : 2019/2020 ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல்




குறிப்பு : வரையறுத்த நலக் கடப்பாடுகளின் உள்ளபடியான ஆதாயம்/ (நட்டம்) ஏனைய வருமானத்துடன் சேர்க்கப்பட்டது.

இ.மி.ச. இன் - நீர் மற்றும் நிலக்கரி மின்வலு பங்களிப்பு 2019 ஆம் ஆண்டின் 57% உடன் ஒப்பிடுகையில் 62% வருடாந்த தேறிய பிறப்பாக்க அதிகரிப்பை பிரதிபலிக்கின்றது. அனல்மின் மூலங்களிலிருந்தான எரிசக்தி பிறப்பாக்கம் ஒப்பீட்டளவில்

# ஒட்டுமொத்த செயற்பாட்டு மற்றும் நிதி மீளாய்வு

குறைவடைந்தமை மற்றும் பொருட்களின் விலைகளில், அதாவது சா்வதேச சந்தையில் எரிபொருள் மற்றும் நிலக்கரி விலைகள் குறைவடைந்தமையால் செயற்பாட்டுக் கிரயங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியானது, கிரய முன்னேற்றத்தின் பரவலான முக்கியத்துவத்தை பிரதிபலிக்கிறது. மேலும், எரிபொருள் எண்ணெய் மீது இ.மி.ச. இற்கும் சுயாதீன மின் உற்பத்தி நிறுவனங்களுக்கும் (அனல்மின்) லிட்டருக்கு ரூபா 70 என்ற விலை திருத்தத்தை அரசு முறையே 2020 மாா்ச் 19 மற்றும் 2020 ஏப்ரல் 08 முதல் வழங்கியுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேறிய சோ்ப்பனவு/ தேறிய கணக்கீட்டுத் திட்டங்களுடன் (Net Plus/ Net Accounting schemes) கூடிய கூரையின் மேல் சூரிய எரிசக்தி பிறப்பாக்க இணைப்புகளின் கேள்வி சீராக வளா்ச்சியடைந்து வருகின்றன.

உரு F 4 : பிறப்பாக்கக் கலவை 2019/2020




## கிரயக் கட்டமைப்பு

முன்னைய ஆண்டைக் காட்டிலும் நேர் பிறப்பாக்கக் கிரயத்திலேற்பட்ட 17% குறைவுக்கு முக்கியமாக நிலக்கரி மற்றும் IPP-NCRE கிரயங்களின் வீழ்ச்சியுடன் எரிபொருள் மற்றும் சுயாதீன அனல் மின்வலு உற்பத்தியாளா் (ஐபிபி-அனல்) கிரயங்களின் குறைவே காரணமாகும். 2020 ஆம் ஆண்டில் எரிபொருளின் மீதான செலவுகள் குறைவடைந்தமைக்கு பிரதான காரணம் பிறப்பாக்கக் கலவையின் ஏற்ற இறக்கம், இ.மி.ச. இன் பராமரிப்பில் இருந்த சில அனல்மின் ஆலைகளிலிருந்து எரிசக்தி பிறப்பாக்கம் குறைவடைதல் மற்றும் உலை எண்ணெய் மீது வழங்கப்பட்ட குறைக்கப்பட்ட விலை திருத்தம் என்பனவாகும். இ.ம.ச.- நிலக்கரியின் முன்னேற்றகரமான பங்களிப்புடன் நீா் மின்வலு பிறப்பாக்கத்தில் சிறிது முன்னேற்றம் என்பன இ.மி.ச. - அனல்மின் இலிருந்தான எரிசக்தி பிறப்பாக்கத்தின் இழப்பை ஈடுசெய்துள்ளது. 2019 ஆம் ஆண்டில் 7% நிலக்கரி எரிசக்தி பிறப்பாக்க அதிகரிப்பு காணப்பட்ட போதிலும், அதற்கு எதிராக 2020 ஆம் ஆண்டில் நிலக்கரி செலவுகளில் 8% சேமிப்பு காண்பிக்கப்பட்டது. எரிசக்தி கேள்வியின் குறைவு காரணமாக சுயாதீன மின்வலு உற்பத்தியாளா்கள்-அனல்மின்வலு (IPP-Thermal) இடமிருந்தான மின்வலுக் கொள்வனவு குறைவடைந்தமையால் IPP அனல்மின்வலுக் கிரயத்தின் வீழ்ச்சிக்கு அது பங்களித்திருந்தது.

2019 இன் அலகுக்கான ரூபா 15.74/kWh நேர் பிறப்பாக்கக் கிரயத்துடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் அது ரூபா 13.53/kWh ஆக காணப்பட்டமையால் அலகுக்கான எரிசக்தி பிறப்பாக்கக் கிரயத்தின் சேமிப்பு சாதகமான தாக்கத்தை காண்பித்தது.

உரு F 5 : கிரயக் கட்டமைப்பு - 2020




உரு F 6 - கிரயக் கட்டமைப்பு - 2019




வினைத்திறனை அதிகரித்து கிரயங்களை இழிவுபடுத்துவதில் தொடா்ந்து கவனம் செலுத்தியமையால் அதன் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு கிரயத்தை ரூபா 95.94 பில்லியனாக பராமரிக்க இ.ம.ச. இற்கு முடிந்ததுடன் 2019 ஆம் ஆண்டிற்கு எதிராக இது 14 சதவீதக் குறைவாகும் மேலும், அமைச்சரவைத் தீா்மானத்தின் படி, கொவிட் -19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட உள்நாட்டு நுகா்வோருக்கு இ.மி.ச. ரூபா 5.91 பில்லியன் சலுகையினை வழங்கியது.

இறுதி நுகா்வோருக்கான விற்பனை கட்டம் வரை இ.மி.ச. இன் அலகொன்றுக்கான கிரயம் 2019 இன் ரூபா 24.12 kWh க்கு எதிராக 2020 ஆம் ஆண்டில் ரூபா 21.21 ஆக இருந்தது. அதன்படி, முன்னைய நிதி ஆண்டை விட விற்பனைக் கிரயம் 12% குறைந்துள்ளது.

## கடன்பெறுதல் மற்றும் நிதிக் கிரயம்

2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 13% வீழ்ச்சியை பிரதிபலிக்கும் வகையில் 2020 ஆம் ஆண்டில் நிதிச் செலவுகள் ரூபா 19.71 பில்லியனாகக் குறைந்திருந்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன

# ஒட்டுமொத்த செயற்பாட்டு மற்றும் நிதி மீளாய்வு

மின்வலு உற்பத்தியாளர் கொடுப்பனவுகளின் தாமத வட்டி முறையே 38% மற்றும் 39% ஆல் குறைவடைந்தமையே இதற்கு முக்கியமாக பங்களித்திருந்தது. 2020 மார்ச் இல் அரசாங்க மானியத்தின் மூலம் கிடைத்திருந்த ரூபா 48 பில்லியன் தொகையை பயன்படுத்தி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்கள் போன்ற பிரதான வழங்குனர்களின் நிலுவைத் தொகையை பகுதியளவில் தீர்த்து வைத்ததன் விளைவாகவே இது குறைவடைந்திருந்தது.

வருடத்தில் ரூபா 29 பில்லியன் தொகை புதிய கடன்களாகப் பெறப்பட்டிருந்த போதிலும், வட்டி விகிதங்களை திருத்தியத்து, கடன் திருப்பிச் செலுத்தும் காலத்தை நீடித்ததன் மூலம் தற்போதுள்ள கடன் தொகுதியின் மறுசீரமைப்பை மேம்படுத்தி வட்டிக் கிரயம் முகாமைத்துவம் செய்யப்பட்டது. மேலும், அரசாங்க வங்கிகள் தவிர தனியார் வணிக வங்கிகளிடமிருந்து இ.மி.ச. இற்கு புதிய கடன் வசதிகளை சாதகமான வட்டி விகிதத்தில் பெற முடிந்திருந்தமையால் ஆண்டின் போது ஒட்டுமொத்த நிதிச் செலவிற்கு சாதகமான பங்களிப்பு வழங்கப்பட்டது.

## நிதி நிலைமை

எரிசக்தி துறையில் முன்னோடியாக இருப்பதால், 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4% அதிகரிப்பை பிரதிபலிக்கும் வகையில் ரூபா 953 பில்லியன் பெறுமதியான மொத்த சொத்து தளத்தை இ.மி.ச. வைத்திருந்தது. இதற்கிடையில், 2020 திசெம்பர் இறுதியில் சொத்து உள்ளடக்கம் 88% : 12% ஆகக் காணப்பட்டதன் விளைவாக நடைமுறை அல்லாத சொத்துக்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் முறையே 4% மற்றும் 5% அதிகரித்துள்ளது.

உரு F 7 : சொத்துக்களில் அசைவு




மொத்த சொத்துகளில் 86% வீதத்தினை ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் உள்ளடக்குகின்ற அதேவேளை 2020 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான ஐந்தொகையில் இ.மி.ச. இன் இருப்புக்கள், வியாபார மற்றும் பிற பெறவேண்டியவை என்பன ரூபா 44 பில்லியன் இருப்புக்களையும் ரூபா 66 பில்லியன் பெறவேண்டியவைகளையும் உள்ளடக்கி 12% ஆகக் காணப்பட்டது.

இ.மி.ச. இன் மொத்த சொத்துக்களில் 39% கடன்கள் மூலம் நிதியிடப்பட்டுள்ளதுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அளவில் மாறாமல் காணப்பட்டு, மொத்தப் பொறுப்புகளில் 5% அதிகரிப்பையும் உரிமைத்துவத்தில் 3% அதிகரிப்பையும் பிரதிபலிக்கின்றது. மீளாய்வாண்டின் போது தடையற்ற விதத்தில் மின்சாரத்தை வழங்குவதற்காக வணிக வங்கிகள் மற்றும் துணை கம்பனி (லெகோ லிமிடட்) இடமிருந்து ரூபா 29 பில்லியன் தொகையினை இ.மி.ச. கடனாகப் பெற வேண்டியிருந்தது.

வியாபார மற்றும் பிற பெறவேண்டியவை அதிகரிப்பதற்கு சவால்மிக்க தொற்றுநோய் சூழல் காரணமாக இருந்தபோதிலும், ஆண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் வசதியளிக்கப்பட்டமையால் இ.மி.ச. இன் திரவத்தன்மை நிலை 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் முன்னேற்றமடைந்திருந்ததுடன் வியாபார மற்றும் பிற செலுத்த வேண்டியவற்றில் குறைவும் ஏற்பட்டிருந்தது. இ.மி.ச. இன் நெம்பு விகிதம் முன்னைய ஆண்டின் 52% இலிருந்து 49% ஆக குறைந்துள்ளது.

புத்தளம் நிலக்கரி மின்வலு செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்ட திறைசேரிக் கடனில் இருந்து ரூபா 17.3 பில்லியன் தொகையினை உரிமைத்துவமாக மாற்றியமை இ.மி.ச. இன் தேறிய சொத்துக்களை உயர்த்துவதற்கு கணிசமாக பங்களித்தது.

## நிதிசார் குறிகாட்டிகள்

மொத்தச் சொத்துக்கள்






# ஒட்டுமொத்த செயற்பாட்டு மற்றும் நிதி மீளாய்வு

## மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் உரிமைத்துவம்




## நடைமுறையல்லாத சொத்துக்களின் உள்ளடக்கம்




## நடைமுறைச் சொத்துக்களின் உள்ளடக்கம்



# ஒட்டுமொத்த செயற்பாட்டு மற்றும் நிதி மீளாய்வு

**நிதிசார் விகிதங்கள்**

| விகிதம் | 2020 | 2019 |
|---|---|---|
| நடப்பு விகிதம் | 0.55:1 | 0.49:1 |
| சொத்துக்களிற்கு கடன் | 39% | 38% |
| உரிமைக்கு கடன் | 95% | 107% |
| நெம்பு விகிதம் | 49% | 52% |
| உரிமை மீதான திரும்பல் | -16% | -30% |
| கடன் காப்பு விகிதம் | -0.26 | -0.38 |

## இறுதிப் பாவனையாளர் கட்டணமும் அரச கொள்கையும்

குறைந்த நுகர்வு மட்டத்திலுள்ள வீட்டுத் துறையினர் மற்றும் பொது நோக்கம் தவிர்ந்த ஏனைய வகைகளிலுள்ள பெரும்பாலான நுகர்வோருக்கு அரசாங்கக் கொள்கை என்ற வகையில் இ.மி.ச. அதன் உண்மையான கிரயத்தைக் காட்டிலும் குறைவான கட்டணத்தில் மின்சாரத்தை வழங்குகிறது.

எனவே, வீட்டுத் துறையினர்/ பொது நோக்கம் பிரிவில் உள்ள உயர்நிலை நுகர்வோர் இந்த கிரயத்தில் ஒரு பகுதியை அதிகமாக தாங்கிக்கொள்ள வேண்டும். கொவிட் -19 தொற்றுநோய் காலத்தில் உள்நாட்டு நுகர்வோரின் அதிகரித்த எரிசக்தி நுகர்வு காரணமாக, கடந்த ஆண்டின் ரூபா 5,827 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டிற்கான மொத்த மிகைக் கட்டணம் ரூபா 14,883 மில்லியன் ஆகும்.

அதன்படி, அரசாங்க மானியக் கொள்கையால் இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்களிற்கான தேறிய தாக்கம் பின்வருமாறு:

| | 2020 (ரூபா மில்லியன்) | 2019 (மீளமைத்த) (ரூபா மில்லியன்) |
|---|---|---|
| அரசாங்க (மானியக்) கொள்கையால் ஏற்பட்ட நட்டம்/ பற்றாக்குறை | (78,922) | (115,243) |
| மேலதிக கட்டணம் | 14,883 | 5,827 |
| தேறிய நட்டம் | (64,039) | (109,416) |
| ஏனைய வருமானம் | 1,477 | 11,994 |
| நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் இலாபம்/ (நட்டம்) | (62,561) | (97,422) |

## கொவிட் - 19 இன் தாக்கம்

மின்சார விநியோகம் அத்தியாவசிய சேவையாக காணப்படுவதனால், கொவிட் -19 தொற்றுநோய் அலை ஏற்பட்டதனைத் தொடர்ந்து சவால்கள் எதிர்நோக்கப்பட்ட போதிலும், நாடு முழுவதும் மின்சார பிறப்பாக்கம், பரிமாற்றம் மற்றும் விநியோகம் ஆகிய பிரதான செயற்பாடுகளை தங்குதடையின்றி இ.மி.ச. தொடர்ந்தும் மேற்கொண்டு வந்தது. வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த அரசாங்கம் வழங்கிய வழிகாட்டுதல்களைை இ.ம.ச. கண்டிப்பாக கடைபிடித்து செயற்பட்டிருந்ததுடன்ளூ அனைத்து பணியிடங்களிலும் சுத்திகரிப்பு மற்றும் பிற பாதுகாப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்துவதன் மூலம் அதன் ஊழியர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் எமது அலுவலக ஊழியர்களுக்கு வீட்டிலிருந்து பொருத்தமான வேலை செய்தலையும் தொலைதூர வேலை நடவடிக்கைகளை எளிதாக்குதலையும் அது மேற்கொண்டது.

2020 மார்ச் முதல் மே நடுப்பகுதி வரை நாடளாவிய ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டதாலும், 2020 ஒக்தோபர்-திசெம்பர் மாதங்களில் நாட்டின் சில பகுதிகளில் பூட்டுதல்ளூ மற்றும் நாட்டில் நிலவிய பிற கட்டுப்பாடுகள் காணப்பட்டதாலும், உள்நாட்டு நுகர்வோரின் மின்சாரத்திற்கான கேள்வி அதிகரிப்பை பிரதிபலித்ததுடன், கைத்தொழில், பொது நோக்கம் மற்றும் ஹோட்டல் வகைகளின் கேள்வி கணிசமாக குறைந்திருந்தது. எவ்வாறாயினும், கொவிட் -19 தொற்றுநோயால் மின்சாரத்திற்கான கேள்வி குறைவடைந்தமையால், அதிக கிரயம் கொண்ட அனல்மின் எரிசக்தி மூலங்களில் தங்கியிருப்பதை குறைத்து சாதகமான பிறப்பாக்க கலவைக்கு இட்டுச் சென்றிருந்ததுடன், இது இ.மி.ச. இன் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிசார் இழப்பைக் குறைப்பதற்கு ஆக்கப்பூர்வமாக பங்களித்திருந்தது.

ஆயினும்கூட, 2020.07.17 ஆம் திகதியிட்ட 20/1063/22/062 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் படி வீட்டுப் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 5.9 பில்லியன் சலுகையால் இ.மி.ச. இன் நிதி செயலாற்றல் மோசமாக பாதிக்கப்பட்டது. மேலும், அரசு விதித்த சுகாதார மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக மின்மானி வாசிப்பு மற்றும் சேகரிப்பு செயல்முறைகள் பாதிக்கப்பட்டன.

நுகர்வோரின் தடைக்குட்பட்ட செலவழிப்பு வருமானம் மற்றும் மின்சார கட்டணத்தை தீர்ப்பதற்கும் மின் கட்டணம் செலுத்தப்படாத நுகர்வோர் மின் துண்டிப்பை பிற்போடுவதற்கும் எடுக்கப்பட்ட அரசாங்கத்தின் தீர்மானம் காரணமாக, ஏற்கனவே தடைபட்டிருந்த இ.மி.ச. இன் காசோட்டம் மிகக்கடுமையாக பாதிக்கப்பட்டது. சேகரிப்பு செயல்பாட்டில் ஏற்பட்ட இடையூறு காரணமாக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சிபிசி), சுயாதீன மின் உற்பத்தியாளர்கள் (ஐபிபி) மற்றும் நிலக்கரி கொள்வனவு உள்ளிட்ட முக்கிய வழங்குனர்களுக்கான தீர்ப்பனவை பாதித்திருந்தது.

காசோட்டம் தொடர்பான சவால்களைத் தணிக்கும் பொருட்டு, மின் உற்பத்தியுடன் நேரடியாக தொடர்புடைய மூலதனச் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்தது. மேலும், 2020 ஆம் ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட OPEX பாதீட்டுக்கு எதிராக 20% அளவுக்கு மேந்தலைக் கிரயங்களைக் குறைப்பதற்கும் (நிதிச் செலவு தவிர்த்து) தீர்மானிக்கப்பட்டது. திரவத்தன்மை நிலைமையினை வினைத்திறனாக நிர்வகிப்பதற்காக இ.மி.ச. இன் திறைசேரிக் குழு ஏற்கனவே உள்ள கடன்களின் விதிமுறைகளை மறுசீரமைப்பதற்கும் போட்டிமிக்க வட்டி விகிதத்தில் புதிய குறுங்கால கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியிலும் ஈடுபட்டது.

இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் தொற்றுநோயின் காலம் மற்றும் தீவிரம் குறித்த தற்போதைய நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு, இ.மி.ச. இன் நிதி செயலாற்றலில் கொவிட் -19 இன் சரியான தாக்கத்தை மதிப்பிடுவதும் அளவிடுவதும் அவசியமாகும். இருப்பினும், இ.மி.ச. இன் நிதி ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதற்கான உத்திகள் பணிப்பாளர் சபையால் செயல்படுத்தப்பட்டு மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.

# பத்தாண்டுப் பொழிப்பு

கடந்த பத்து ஆண்டுகளுக்கான இலங்கை மின்சார சபையின் செயற்பாட்டுப் பெறுபேறுகளும் சொத்துக்களின் நிலைமையும் கீழே தரப்பட்டுள்ளன.

| டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2020 இல. ரூபா மில்லியன் | 2019 (மீளமைக்கப்பட்ட) இல. ரூபா மில்லியன் | 2018 (மீளமைக்கப்பட்ட) இல. ரூபா மில்லியன் | 2017 (மீளமைக்கப்பட்ட) இல. ரூபா மில்லியன் | 2016 (மீளமைக்கப்பட்ட) இல. ரூபா மில்லியன் | 2015 (மீளமைக்கப்பட்ட) இல. ரூபா மில்லியன் | 2014 (மீளமைக்கப்பட்ட) இல. ரூபா மில்லியன் | 2013 (மீளமைக்கப்பட்ட) இல. ரூபா மில்லியன் | 2012 (மீளமைக்கப்பட்ட) இல. ரூபா மில்லியன் | 2011 (மீளமைக்கப்பட்ட) இல. ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **செயல்பாடுகளின் பெறுபேறு** | | | | | | | | | | |
| வருமானம் | 238,910 | 242,950 | 229,571 | 218,450 | 206,811 | 188,684 | 202,645 | 194,147 | 163,513 | 132,460 |
| விற்பனைக் கிரயம் | (270,134) | (322,522) | (251,964) | (260,273) | (222,097) | (168,781) | (213,646) | (165,509) | (222,419) | (151,448) |
| மொத்த இலாபம் / (நட்டம்) | (37,131) | (79,571) | (22,393) | (41,823) | (15,286) | 19,903 | (11,001) | 28,638 | (58,907) | (18,988) |
| பிற வருமானங்களும் ஆதாயமும் | 8,817 | 10,307 | 9,450 | 8,143 | 10,323 | 8,292 | 5,871 | 5,107 | 4,225 | 3,810 |
| நிருவாகச் செலவினங்கள் | (7,149) | (7,280) | (5,832) | (5,110) | (4,965) | (4,086) | (3,146) | (2,556) | (2,997) | (1,636) |
| நிதி வருமானம் | 1338 | 1,751 | 1,466 | 1,194 | 1,049 | 434 | 304 | 1,677 | 2,429 | 416 |
| நிதிக் கிரயம் | (19,705) | (22,526) | (13,036) | (8,415) | (4,312) | (5,134) | (7,030) | (10,601) | (6,198) | (3,787) |
| வருமான வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்) | (53,830) | (97,319) | (30,345) | (46,011) | (13,191) | 19,409 | (15,002) | 22,265 | (61,448) | (20,185) |
| வருமான வரிச் செலவினங்கள் | (52,970) | (39) | (51) | (231) | (263) | (61) | (95) | - | - | - |
| பிற்போடப்பட்ட வரி (தாக்கல்)/மாற்றல் | - | - | - | - | - | - | 996 | (1,325) | (16,198) | (830) |
| முற்றடக்க வருமானம் | (62,561) | (97,422) | (31,936) | (47,581) | (14,457) | 20,300 | (17,285) | 20,900 | (77,770) | (21,323) |

| திசெம்பர் 31 இல் உள்ளவாறு | 2020 இல. ரூபா மில்லியன் | 2019 (மீளமைக்கப்பட்ட) இல. ரூபா மில்லியன் | 2018 (மீளமைக்கப்பட்ட) இல. ரூபா மில்லியன் | 2017 (மீளமைக்கப்பட்ட) இல. ரூபா மில்லியன் | 2016 (மீளமைக்கப்பட்ட) இல. ரூபா மில்லியன் | 2015 (மீளமைக்கப்பட்ட) இல. ரூபா மில்லியன் | 2014 (மீளமைக்கப்பட்ட) இல. ரூபா மில்லியன் | 2013 (மீளமைக்கப்பட்ட) இல. ரூபா மில்லியன் | 2012 (மீளமைக்கப்பட்ட) இல. ரூபா மில்லியன் | 2011 (மீளமைக்கப்பட்ட) இல. ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 815,972 | 781,517 | 747,012 | 724,068 | 704,695 | 694,415 | 681,471 | 648,130 | 621,088 | 493,050 |
| துணைக் கம்பனிகளில் முதலீடு | 912 | 912 | 912 | 912 | 912 | 912 | 785 | 785 | 762 | 737 |
| கூட்டு முயற்சிகளில் முதலீடு | 329 | 329 | 329 | 329 | 329 | 329 | 150 | 150 | 150 | |
| காப்புறுதி ஒதுக்க நிதியில் முதலீடு | 9,980 | 8,997 | 8,070 | 7,246 | 6,496 | 6,036 | 5,653 | 5,250 | 4,433 | 3,710 |
| பிற நிதிச் சொத்துக்கள் | 8,859 | 9,951 | 10,204 | 8,912 | 8,983 | 3,848 | 2,291 | - | - | - |
| பிற நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 1,074 | 1,489 | 1,242 | 961 | 949 | 896 | - | - | - | - |
| விற்பனைக்காக வைக்கப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 0.076 | 0.076 | 0.076 | 0.655 | 1,022 | 1,025 | 1,023 | 1,021 | - | - |
| நடைமுறைச் சொத்துக்கள் | 116,180 | 110,576 | 102,338 | 89,065 | 80,968 | 69,391 | 72,662 | 91,423 | 101,295 | 109,173 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **953,306** | **913,771** | **870,107** | **831,494** | **804,354** | **776,852** | **764,035** | **746,759** | **727,728** | **606,671** |
| **பொறுப்புக்கள்** | | | | | | | | | | |
| வட்டிக் கடன்கள் மற்றும் கடன் பெறுவனவுகள் | 345,387 | 318,149 | 281,262 | 236,129 | 220,476 | 214,299 | 221,735 | 355,043 | 345,700 | 184,243 |
| பாவனையாளர் வைப்புக்கள் | 15,641 | 15,014 | 14,311 | 13,557 | 12,753 | 11,484 | 10,458 | 9,722 | 8,899 | 7,544 |
| ஏற்பாடு மற்றும் ஏனைய பிற்போட்ட பொறுப்புக்கள் | 20,121 | 10,482 | 10,038 | 8,622 | 7,262 | 6,116 | 6,572 | 3,236 | 3,593 | 2,930 |
| அரசாங்க மானியங்கள் | 200 | 213 | 228 | 243 | 211 | - | - | - | - | - |
| பிற்போட்ட வருமானம் | - | - | - | - | - | 71,696 | 66,292 | 60,343 | 55,208 | 44,390 |
| ஒப்பந்த பொறுப்புக்கள் | 95,770 | 89,746 | 86,335 | 82,564 | 77,628 | - | - | - | - | - |
| பிற்போட்ட வரி | - | - | - | - | - | - | - | 22,182 | 20,857 | 17,142 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 212,927 | 223,803 | 145,712 | 123,682 | 72,661 | 43,630 | 64,147 | 69,134 | 96,171 | 84,945 |
| மொத்தப் பொறுப்புக்கள் | **690,046** | **657,407** | **537,886** | **464,797** | **390,991** | **347,225** | **369,204** | **519,660** | **530,428** | **341,194** |
| **உரிமையாண்மை** | | | | | | | | | | |
| பங்களித்த மூலதனம் | 391,731 | 323,194 | 302,695 | 302,695 | 302,695 | 302,228 | 289,038 | 121,708 | 110,862 | 83,311 |
| ஒதுக்கங்கள் | 39,254 | 37,110 | 34,881 | 32,783 | 30,283 | 28,463 | 27,434 | 25,999 | 24,460 | 23,436 |
| நிறுத்திவைத்த உழைப்புக்கள் | (167,725) | (103,940) | (5,355) | 31,219 | 80,385 | 98,936 | 78,359 | 79,392 | 61,978 | 158,730 |
| **மொத்த உரிமையாண்மை** | **263,260** | **256,364** | **332,221** | **366,697** | **413,363** | **429,627** | **394,831** | **227,099** | **197,300** | **265,477** |
| **மொத்த உரிமைத்துவமும் பொறுப்புக்களும்** | **953,306** | **913,771** | **870,107** | **831,494** | **804,354** | **776,852** | **764,035** | **746,759** | **727,728** | **606,671** |

# பெறுமதி சேர் கூற்று

| | 2020<br>ரூபா மில்லியனில் | 2019<br>ரூபா மில்லியனில் |
|---|---|---|
| **உருவாக்கப்பட்ட பெறுமதி** | | |
| வருமானம் | 238,911 | 242,950 |
| பிற வருமானங்கள் | 8,817 | 10,307 |
| நிதி வருமானம் | 1,338 | 1,751 |
| வெளித் தரப்பினரால் வழங்கப்பட்ட வளங்களின் கிரயம் | (148,011) | (141,255) |
| | **101,054** | **113,753** |
| **விநியோகிக்கப்பட்ட பெறுமதி** | | |
| **ஊதியம் மற்றும் பிற நன்மைகளாக ஊழியர்களுக்கு** | **38,224** | **39,743** |
| **அரசாங்க வருவாய்க்கு** | | |
| வருமான வரி | 53 | 40 |
| பிற வரிகள் | 3,173 | 7,862 |
| **மூலதனக் கடன் வழங்கியோருக்கு** | | |
| கடன் பெறுகைகள் மீதான வட்டி | 19,705 | 22,526 |
| **சமூகத்திற்கு** | | |
| நிறுவன சமூகப் பொறுப்பு | 69 | 306 |
| கோவிட் காரணமாக வழங்கப்பட்ட சலுகைகள் | 5,908 | - |
| மானியக் கட்டணத்தில் வழங்கப்பட்ட மின்சாரம் | 64,039 | 109,416 |
| **வளர்ச்சிக்காகவும் விரிவாக்கத்திற்காகவும் நிறுத்திவைத்த பெறுமதி** | | |
| நிறுத்திவைத்த | (62,561) | (97,422) |
| பெறுமானத்தேய்வு | 32,445 | 31,283 |
| | **101,054** | **113,753** |



# ணிப்பாளர் அறிக்கை
# கணக்காய்வு செய்யப்பட்ட ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள்

# பணிப்பாளர்கள் அறிக்கை

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 49 ஆம் பிரிவின் படி, இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபை (சபை) 2020 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் கணக்காய்வு செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை முன்வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றது.

### பிரதான செயற்பாடுகள்

மின்சார பிறப்பாக்கம், கொள்வனவு, பரிமாற்றம், வினைத்திறனான விநியோகம் மற்றும் மின்சார விற்பனை ஆகியவை சபையின் பிரதான செயற்பாடுகளாகும். நாட்டின் சட்டங்களுக்கும் விதிமுறைகளுக்கும் முரணான எந்தவொரு செயற்பாட்டிலும் சபை ஈடுபட்டிருக்கவில்லை.

### துணைக் கம்பனிகள் மற்றும் கூட்டுத்தொழில் முயற்சிகள்

துணைக் கம்பனிகள் மற்றும் கூட்டுத்தொழில் முயற்சிகளின் பிரதான செயற்பாடுகள் நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புக்களின் கீழுள்ள 110 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டில் சபை மற்றும் குழுமத்தின் பிரதான செயற்பாடுகளின் தன்மையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை.

### குழுமத்தின் கட்டமைப்பு மாற்றங்கள்

இந்த ஆண்டின் போது குழுமத்தின் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் இந்த அறிக்கையின் 138 முதல் 139 வரையான பக்கங்களிலுள்ள நிதிக்கூற்றுக்களிற்கான 12 மற்றும் 13 ஆம் குறிப்புகளில் தரப்பப்பட்டுள்ளன.

### ஆண்டின் செயலாற்றல் மீளாய்வு

சபை/குழுமத்தின் ஆண்டிற்கான செயலாற்றல் மீதான கருத்துரைகள் 12 முதல் 13 வரையான பக்கங்களிலுள்ள தலைவரின் செய்தியில் விபரிக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டில் சபையின் இயக்கச் செயற்பாடுகள் குறித்த விரிவான விளக்கத்தை 14 முதல் 15 வரையான பக்கங்களிலுள்ள பொது முகாமையாளரின் மீளாய்வு வழங்குகின்றது. 92 முதல் 98 வரையான பக்கங்களிலுள்ள “நிதிப் பிரிவு” என்ற தலைப்பு, சபையின் நிதி செயலாற்றல் மற்றும் நிதி நிலைமை குறித்த விரிவான பகுப்பாய்வை வழங்குகின்றது. வருடாந்த அறிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக காணப்படுகின்ற இந்த அறிக்கைகள் சபையின் விவகாரங்கள் குறித்த நியாயமான மீளாய்வை வழங்குகின்றன.

### கூட்டிணைந்த சமூகப் பொறுப்பு (CSR)

மீளாய்வாண்டுக்கான செயற்பாடுகள் பக்கங்கள் 85 முதல் 86 வரை தரப்பட்டுள்ளன.

### நிதிக் கூற்றுக்களிற்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

விவகாரங்களின் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பணிப்பாளர்கள் பொறுப்புடையவர்களாவர். இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்று பணிப்பாளர்கள் கருதுகின்றனர். துணைக் கம்பனிகளைப் பொறுத்தவரை, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளிற்கமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன.

### கணக்காய்வாளரின் அறிக்கை

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 ஆவது உறுப்புரை மற்றும் 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் பிரிவு 51 இன் படி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி இலங்கை மின்சார சபையின் கணக்காய்வாளராக காணப்படுகின்றார். 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் சபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை இந்த அறிக்கையின் 173 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

### கணக்கீட்டுக் கொள்கைகள்

குழுமம் மற்றும் சபை என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்.கே.ஏ.எஸ்) மற்றும் இலங்கை நிதி அறிக்கையில் நியமங்கள் (எஸ்.எல்.எ∴ப்.ஆர்.எஸ்) ஆகியவற்றின் படி தங்கள் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்துள்ளன. நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் 110 முதல் 126 வரையான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன. சபையால் மீளாய்வாண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் பொருண்மையான மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை.

### சபையுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் ஆர்வம்

பொறியியலாளர். எச் எம் விஜித ஹேரத் 2019 திசெம்பர் 23 ஆம் திகதி இ.மி.ச. இன் தலைவராக நியமிக்கப்பட்டதுடன் அவர் 2020 ஆம் ஆண்டு முழுவதும் தலைவராக பணியாற்றினார். அவ்வாறு பணியாற்றிய காலத்தில் அவர் இ.மி.ச. இன் துணை கம்பனிகளான எல்டிஎல் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடட், மற்றும் ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் (பிரைவட்) லிமிடட் ஆகியவற்றின் தலைவராகவும் லங்கா மின்சார கம்பனி (பிரைவட்) லிமிடட் இன் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் பணியாற்றியிருந்தார். மேலும், 2020 ஆம் ஆண்டில் அவர் இ.மி.ச. இற்கும் வேூஉ- இந்தியா இற்கும் இடையிலான கூட்டுத்தொழில் முயற்சியான திருகோணமலை பவர் கம்பனி லிமிடட் (டிபிசிஎல்) இல் தலைவராகவும் பணியாற்றியிருந்தார்.

திரு. வை ஜி ஐ சமன் குமார அவர்கள், 2020 சனவரி 30 அன்று இ.மி.ச. இன் துணைத் தலைவராகவும் சபை பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டு அவர் 2020 திசெம்பர் 14 வரை இ.மி.ச. இல் பணியாற்றினார். அத்துடன், அவர் ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் (பிரைவட்) லிமிடட் இன் சபை பணிப்பாளர் ஒருவராகவும் சேவையாற்றியிருந்தார். திரு. என் எஸ் இலங்ககோன் அவர்கள் 2020 திசெம்பர் 16 ஆந் திகதி இ.மி.ச. இன் உப தலைவராக∴ சபை பணிப்பாளர்களில் ஒருவராக கடமையேற்றார். அவர் எல்டிஎல் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடட், ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் (பிரைவட்) லிமிடட் மற்றும் திருகோணமலை பவர் கம்பனி லிமிடட் (டிபிசிஎல்) ஆகியவற்றின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

திரு. என் ஏ ரன்ஜித் அவர்கள் 2020 சனவரி 16 ஆம் திகதி இ.மி.ச. இன் சபை உறுப்பினர் / தொழிற்பாட்டுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன், அவர் 2020 ஏப்ரல் 24 வரை இ.மி.ச. இல் பணியாற்றினார்.

கைத்தொழில் மற்றும் விநியோக சங்கிலி முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. ஏ எச் கே ஜகத் சந்தரசிறி அவர்கள் 2020 பெப்ரவரி 26 அன்று சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டதுடன், 2020 ஒக்தோபர் 07 அன்று கைத்தொழில் அமைச்சின் பிரதம நிதி உத்தியோகத்தரான திரு. எல் ஜி பிரேமசிறி அவர்கள் திரு.

# பணிப்பாளர்கள் அறிக்கை

ஏ எச் கே ஜகத் சந்தரசிறி அவர்களுக்குப் பதிலாக சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமான திரு. எஸ் டி ஜுட் நிலுக்'ன் அவர்கள் 2020 சனவரி 13 அன்று சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டதுடன், 2020 ஆம் ஆண்டில் அவர் பணியாற்றயிருந்தார்.

பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. எம் எம் நயிமுதீன் அவர்கள், 2020 சனவரி 17 ஆம் திகதி சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டதுடன் அவர் 2020 ஆம் ஆண்டில் பணியாற்றியிருந்தார்.

திரு. பி கே ஜகத் பெரோ அவர்கள் 2020 சனவரி 14 ஆம் திகதி சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டதுடன் அவர் 2020 ஆம் ஆண்டில் பணியாற்றியிருந்தார்.

திரு. ரூபன் விக்ரமராச்சி அவர்கள் 2020 ஏப்ரல் 24 ஆம் திகதி சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டதுடன் அவர் 2020 ஆம் ஆண்டில் இ. பணியாற்றியிருந்தார்.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்பு 30 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளதைத் தவிர, 2020 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான எந்தவொரு ஒப்பந்தத்திலும் அல்லது சபையின் முன்மொழியப்பட்ட ஒப்பந்தத்திலும் பணிப்பாளர்களிற்கு நேரடியான அல்லது மறைமுகமான ஆர்வம் காணப்படவில்லை.

பின்வரும் உப குழுக்கள் சபையால் நியமிக்கப்பட்டிருந்தன.

| குழுவின் பெயர் | நியமிக்கப்பட்ட திகதி |
|---|---|
| ஊழியர்கள் குறைகேள் குழு | சனவரி 28, 2020 |
| ஒழுக்காற்று மேன்முறையீட்டு சபை | சனவரி 28, 2020 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு | சனவரி 28, 2020 |
| சபை பெறுகைகள் குழு | சனவரி 28, 2020 |
| சட்டக் குழு | யூன் 30, 2020 |

## 01. ஊழியர்கள் குறைகேள் குழு

ஊழியர்களின் குறைகேள் குழு (ஈ.ஜி.சி) என்பது இ.மி.ச. இன் ஊழியர்கள் / முன்னாள் ஊழியர்களின் தனிப்பட்ட மனக்குறைகளைக் கையாள்வதற்காக சபையால் நியமிக்கப்பட்ட துணைக் குழு ஆகும்.

குறைகேள் குழுவில் 02 சபை உறுப்பினர்கள் மற்றும் இ.மி.ச. இன் பல சிரேஷ்ட நிறைவேற்று நிர்வாகிகள் உள்ளடங்கியுள்ளனர்.

இந்த குழு 2020 ஆம் ஆண்டில் முறையாக ஒரு தடவை கூடியிருந்ததுடன், இ.மி.ச இன் ஊழியர்கள் / முன்னாள் ஊழியர்களின் 03 தனிப்பட்ட குறைகளை மீளாய்வுக்கு உட்படுத்தியது.

குழுக் கூட்டங்களின் அறிக்கைகள் அங்கீகாரத்திற்காக பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் தாக்கல் செய்யப்பட்டதுடன், பொது முகாமையாளர் / இ.மி.ச. இனால் அந்த தீர்மானங்களை அதற்கேற்ப செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டிற்கான குழுவின் சபை உறுப்பினர் உள்ளடக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

i. குழுவின் தலைவராக இ.மி.ச. இன் உப தலைவரான திரு வை ஜி ஐ சமன் குமார
ii. குழுவின் உறுப்பினராக இ.மி.ச. இன் தொழிற்பாட்டு பணிப்பாளரான திரு. என் ஏ ரன்ஜித் (2020 ஏப்ரல் 24 வரை)
iii. குழுவின் உறுப்பினராக இ.மி.ச. இன் உறுப்பினரான திரு ரூபன் (2020 ஏப்ரல் 24 முதல்)

சபையின் செயலாளர் இந்த துணைக் குழுவின் ஒருங்கிணைப்பாளராக உள்ளார்.

## 02. ஒழுக்காற்று மேன்முறையீட்டு சபை

ஒழுக்காற்று மேன்முறையீட்டு சபையானது சபையின் ஒரு துணைக் குழு ஆகும். இ.மி.ச. இன் ஊழியர்களின் ஒழுக்காற்று விடயங்களை கையாள்வதற்காக இந்த குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழு 2020 நிதியாண்டில் முறையாக 10 தடவை கூடியிருந்ததுடன் 24 வழக்குகளை கையாண்டிருந்தது.

குழுக் கூட்டங்களின் அறிக்கைகள் அங்கீகாரத்திற்காக பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் தாக்கல் செய்யப்பட்டதுடன், இ.மி.ச. இன் பொது முகாமையாளர் அந்த தீர்மானங்களை அதற்கேற்ப செயல்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தார்.

2020 ஆம் ஆண்டிற்கான குழுவின் கட்டமைப்பு பின்வருமாறு.

i. தலைவராக இ.மி.ச. இன் உப தலைவரான திரு வை ஜி ஐ சமன் குமார (2020 திசெம்பர் 14 வரை)
ii. தலைவராக இ.மி.ச. இன் உப தலைவரான திரு திரு என் எஸ் இலங்ககோன் (2020 திசெம்பர் 14 முதல்)
iii. உறுப்பினராக இ.மி.ச. இன் தொழிற்பாட்டு பணிப்பாளரான திரு. என் ஏ ரன்ஜித் (2020 ஏப்ரல் 24 வரை)
iv. உறுப்பினராக இ.மி.ச. இன் உறுப்பினரான திரு ரூபன் விக்ரமாரச்சி (2020 ஏப்ரல் 24 முதல்)
v. உறுப்பினராக மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சின் பணிப்பாளரான திரு ஜே ஜி எல் எஸ் ஜயவர்தன
vi. உறுப்பினராக திரு. ஜகத் சந்ரசிறி (2020 செப்தெம்பர் வரை)
vii. உறுப்பினராக திரு. எல் ஜி பிரேமசிறி (2020 ஒத்தோபர் 20 முதல்)
viii. உறுப்பினராக தொழில் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற மேலதிக பணிப்பாளர் நாயகமான திரு. பி எஸ் பதிரத்ன

சபையின் செயலாளர் இந்த துணைக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் ஆவார்.

## 03. சட்டக் குழு

சட்டக் குழுவானது சபையின் ஒரு துணைக் குழு ஆகக் காணப்படுவதுடன் இக்குழு இ.மி.ச. இன் சிறந்த ஆர்வத்திற்கமைய அனைத்து நடவடிக்கைகளும் சீராக இடம்பெறுவதனை உறுதிப்படுத்துவதற்காக இ.மி.ச. இன் சட்டரீதியான விடயங்கள் / வழக்ககள் தொடர்பில் மீளாய்வுசெய்து சபைக்கு அறிவுரை வழங்குகின்றது.

இந்த குழு 2020 நிதியாண்டில் முறையாக ஒரு தடவை கூடியிருந்தது.

2020 ஆம் ஆண்டிற்கான குழுவின் கட்டமைப்பு பின்வருமாறு.

i. தலைவராக இ.மி.ச. இன் உப தலைவரான திரு வை ஜி ஐ சமன் குமார (2020 திசெம்பர் 14 வரை)
ii. தலைவராக இ.மி.ச. இன் உப தலைவரான திரு என் எஸ் இலங்ககோன் (2020 திசெம்பர் 14 முதல்)
iii. உறுப்பினராக திரு ரூபன் விக்ரமாரச்சி
iv. உறுப்பினராக எம் எம் நயீமுதீன்

# பணிப்பாளர்கள் அறிக்கை

சட்ட உத்தியோகத்தர் இந்த துணைக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் ஆவார்.

### 04. கணக்காய்வுக் குழு

ஆளுகைக் சபையின் துணைக் குழுவான கணக்காய்வுக் குழுவிற்கு நிறுவனத்தின் ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவ முறைமைகளை மீளாய்வு செய்தல், உள்ளகக் கட்டுப்பாட்டு செயல்முறையை கண்காணித்தல் மற்றும் உள்ளக கணக்கய்வு மற்றும் வெளியகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்தல் ஆகியவற்றின் ஒட்டுமொத்த பொறுப்பு உள்ளது.

### உள்ளடக்கம்

கணக்காய்வுக் குழுவில் நிதி, கணக்காய்வு மற்றும் தொடர்புடைய துறையில் சிறந்த திறன்கள் மற்றும் விரிவான அனுபவம் கொண்ட நான்கு சுயாதீன பணிப்பாளர்கள் உள்ளடங்குவதுடன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் தலைவர் குழுவுக்கு ஒருங்கிணைப்பாளராக பணியாற்றுகின்றார். பிரதான நிறைவேற்று அதிகாரியான பொது முகாமையாளர், நிதி முகாமையாளர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினதும் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சினதும் பிரதிநிதிகள் அழைப்பின் பேரில் இக்குழுவின் கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

2020 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுக் குழுவின் கட்டமைப்பு பின்வருமாறு.

| | |
|---|---|
| திரு எஸ் டி ஜே நிலுக்'ன் | - தலைவர் |
| திரு எம் எம் நயீமுதீன் | - உறுப்பினர் |
| திரு பி கே ஜகத் பெரேரா | - உறுப்பினர் |
| திரு. ஜகத் சந்ரசிறி | - உறுப்பினர் |
| திரு எல் ஜி பிரேமசிறி | - உறுப்பினர் |

செயற்பாட்டு மற்றும் நிதி மீளாய்வுப் பரப்புகளில் மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வு மற்றும் நியதிச்சட்ட கணக்காய்வுகளால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்து கலந்துரையாடுகின்றது. கணக்காய்வுக் குழு இந்த அறிக்கைகளை அதன் விரிவான அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி மீளாய்வு செய்வதுடன் தற்போதுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை வலுப்படுத்துவதற்காக செயற்படுத்தக்கூடிய மேலதிக கட்டுப்பாடுகள் மற்றும் இடர் குறைப்பு உத்திகளைப் அது பரிந்துரைக்கின்றது. அதன்மூலம் மோசடிகள் மற்றும் தவறுகள், நிறுவனத்தால் எதிர்கொள்ளப்படுகின்ற செயற்பாட்டு மற்றும் நிதி அபாயங்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளையும் அதன் தாக்கங்களையும் இதன்மூலம் குறைத்துக்கொள்ள முடிகின்றது. இந்த குழு 2020 ஆம் ஆண்டில் முறையாக மூன்று முறை கூடியது.

### சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குதல்

பணிப்பாளர்கள், அவர்களின் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை, குழுமம் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு முரணான எந்தவொரு செயற்பாட்டிலும் ஈடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றர்.

### நிலுவையிலுள்ள வழக்குகள்

பணிப்பாளர்கள் / சபை உறுப்பினர்களின் கருத்திலும் சபையின் வழக்கறிஞர்களால் உறுதிப்படுத்தப்பட்டதற்கு அமையவும், சபைக்கு எதிராக தற்போது நிலுவையில் உள்ள வழக்குகள், அறிக்கையிடப்பட்ட நிதி விளைவுகள் அல்லது சபையின் எதிர்கால செயற்பாடுகளில் பொருண்மையான தாக்கத்தை ஏற்படுத்த மாட்டாது.

### நியதிச்சட்ட கொடுப்பனவுகள்

அரசு மற்றும் ஊழியர்கள் தொடர்பான அனைத்து சட்டரீதியான கொடுப்பனவுகளும் சரியான நேரத்தில் செய்யப்பட்டுள்ளன என்பதை சபை உறுதிப்படுத்துகிறது.

### அறிக்கையிடல் திகதிக்கு பிந்திய நிகழ்வுகள்

சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் தேவைப்படுகின்ற எந்தவொரு பொருண்மையான நிகழ்வுகளும் நிதியாண்டு முடிவிற்கும் இந்த அறிக்கையின் திகதிக்கும் இடையிலான கால இடைவெளியில் இடம்பெறவில்லை என்பது பணிப்பாளர்களின் கருத்தாகும்.

### தொடர்ந்தியங்குதல் எண்ணக்கரு

சபையின் செயற்பாடுகளைத் தொடர்வதற்கு அதன் வளங்கள் போதுமானவை என்று பணிப்பாளர்கள் நம்புகின்றனர்.

எனவே, நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு அடிப்படை பிரயோகிக்கப்பட்டுள்ளது.

# இலாபம் அல்லது நட்டக் கூற்று

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| | | குழுமம் | | சபை | |
|---|---|---|---|---|---|
| | குறிப்பு | 2020 | 2019 | 2020 | 2019 |
| **தொடரும் செயற்பாடுகள்** | | | மீளமைக்கப்பட்டது | | மீளமைக்கப்பட்டது |
| வருமானம் | 4 | 264,266,258 | 267,041,265 | 238,910,553 | 242,950,327 |
| வீட்டுப் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் | 5 | (5,907,770) | - | (5,907,770) | - |
| விற்பனைக் கிரயம் | | (280,777,548) | (336,463,749) | (270,134,142) | (322,521,607) |
| **மொத்த இலாபம்/(நட்டம்)** | | **(22,419,060)** | **(69,422,484)** | **(37,131,359)** | **(79,571,280)** |
| ஏனைய செயற்பாட்டு வருமானமும் ஆதாயமும் | 6 | 9,843,996 | 17,021,754 | 8,817,160 | 10,306,591 |
| விநியோகக் கிரயம் | | (166,221) | (392,611) | - | - |
| ஏனைய செலவினம் | | (3,163,877) | (355,200) | - | - |
| நிர்வாக செலவினம் | | (11,588,301) | (11,967,383) | (7,149,157) | (7,280,014) |
| **செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)** | | **(27,493,463)** | **(65,115,924)** | **(35,463,356)** | **(76,544,703)** |
| நிதி வருமானம் | 7.1 | 2,823,643 | 3,848,623 | 1,337,772 | 1,751,170 |
| நிதிச் செலவினம் | 7.2 | (21,429,720) | (24,103,238) | (19,705,301) | (22,525,622) |
| நிதிக் கிரயம் -தேறியது | | (18,606,077) | (20,254,615) | (18,367,529) | (20,774,452) |
| கூட்டுத் தொழில்முயற்சி நட்டப் பங்கு | 13 | (6,143) | (6,850) | - | - |
| **வருமான வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்)** | **8** | **(46,105,683)** | **(85,377,389)** | **(53,830,885)** | **(97,319,155)** |
| வருமான வரிச் செலவினம் | 9.1 | (2,641,845) | (1,901,477) | (52,970) | (39,529) |
| பிற்போட்ட வரி (அறவீடு)/மீளமைத்தல் | 9.2 | 211,805 | (522,385) | - | - |
| **தொடரும் செயற்பாடுகளிலிருந்து ஆண்டிற்க இலாபம்‌ஃ(நட்டம்)** | | **(48,535,723)** | **(87,801,251)** | **(53,883,855)** | **(97,358,684)** |
| **கீழ்வருமாறு பகிரப்படுகின்றது:** | | | | | |
| **தாய்க் கம்பனியின் பங்குதாரர்களுக்கு** | | (52,593,156) | (93,860,667) | | |
| **கட்டுப்பாடற்ற வட்டி** | | 4,057,433 | 6,059,416 | | |
| | | (48,535,723) | (87,801,251) | | |

பக்கங்கள் 110 முதல் 172 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

# முற்றுமடங்கிய வருமானக் கூற்று

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| | குழுமம் | | சபை | |
|---|---|---|---|---|
| | **2020** | **2019**<br>மீளமைக்கப்பட்டது | **2020** | **2019**<br>மீளமைக்கப்பட்டது |
| **தொடரும் செயற்பாடுகளிலிருந்து ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)** | **(48,535,723)** | **(87,801,251)** | **(53,883,855)** | **(97,358,684)** |
| **ஏனைய முற்றுமடங்கிய வருமானம்** | | | | |
| பிந்திய தொழில் நலக் கடப்பாடுகள் மீதான உள்ளபடியான நட்டம் | (8,877,951) | (65,714) | (8,677,629) | (63,710) |
| காணி மற்றும் கட்டிடங்களின் மீள் மதிப்பீடு | 55,961 | 562 | - | - |
| வெளிநாட்டு மானிய செயற்பாட்டு மாற்றல்கள் மீதான பரிமாற்று வேறுபாடுகள் | 336,800 | (115,468) | - | - |
| விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்கள் மீதான நியாயப் பெறுமதி ஆதாயம் | 126,398 | 466,166 | - | - |
| **உள்ளபடியான ஆதாயம்/நட்டம் மீதான பிற்போட்ட வரித் தாக்கம்** | **(56,894,516)** | **(87,515,705)** | **(62,561,484)** | **(97,422,394)** |
| கீழ்வருமாறு பகிரப்படுகின்றது: | | | | |
| தாய்க் கம்பனியின் பங்குதாரர்களுக்கு | (61,181,043) | (93,713,405) | | |
| கட்டுப்பாடற்ற வட்டி | 4,286,527 | 6,197,700 | | |
| | **(56,894,516)** | **(87,515,705)** | | |

பக்கங்கள் 110 முதல் 172 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

# நிதி நிலைமைக் கூற்று

**2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான**

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| | குறிப்பு | குழுமம் | | | சபை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2020 | 2019 மீளமைக்கப்பட்டது | சனவரி 01 இல் உள்ளவாறானவை 2019 மீளமைக்கப்பட்டது | 2020 | 2019 மீளமைக்கப்பட்டது | சனவரி 01 இல் உள்ளவாறானவை 2019 மீளமைக்கப்பட்டது |
| **சொத்துக்கள்** | | | | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 10 | 835,795,922 | 799,116,029 | 763,064,685 | 815,809,520 | 781,408,827 | 746,885,067 |
| குத்தகைக்காணிக்கு செலுத்திய வட்டம் | | - | 235,577 | 229,042 | - | - | - |
| அருவச் சொத்துக்கள் | 11 | 512,455 | 499,056 | 532,736 | 161,508 | 107,718 | 127,226 |
| உபகம்பனிகளில் முதலீடுகள் | 12 | - | - | - | 911,813 | 911,813 | 911,813 |
| கூட்டுத் தொழில்முயற்சியில் முதலீடு | 13 | 30,757 | 36,900 | 43,750 | 328,606 | 328,606 | 328,606 |
| பெறவேண்டிய நிதிக் குத்தகை | 14 | 19,588,944 | 19,899,441 | 9,775,319 | - | - | - |
| பிறநடைமுறையல்லா நிதிச்சொத்துககள் | 15 | 24,418,096 | 25,353,078 | 2,303,439 | 8,859,225 | 9,951,461 | 10,204,445 |
| ஏனைய நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 16 | 2,160,224 | 2,591,430 | 36,461,582 | 1,073,891 | 1,489,354 | 1,241,869 |
| காப்புறுதி ஒதுக்கத்தில் முதலீடு | 17 | 9,980,730 | 8,996,893 | 8,070,253 | 9,980,730 | 8,996,893 | 8,070,253 |
| **மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள்** | | 892,487,128 | 856,728,404 | 820,480,806 | 837,125,293 | 803,194,672 | 767,769,279 |
| விற்பனைக்கான நடைமுறையல்லா சொத்துக்கள் | 18 | 76 | 76 | 76 | 76 | 76 | 76 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | | | |
| இருப்புக்கள் | 19 | 52,113,549 | 55,852,975 | 48,309,728 | 44,174,621 | 48,253,593 | 42,712,420 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 20 | 79,261,983 | 56,491,746 | 57,740,010 | 60,252,638 | 49,126,626 | 48,515,530 |
| தொடர்புடைய தரப்பிலிருந்து வருமதி | 21 | - | - | - | 5,322,241 | 5,984,849 | 4,986,694 |
| பெறவேண்டிய உப குத்தகை | | - | 21,109 | - | - | - | - |
| பெறவேண்டிய நிதிக் குத்தகை | 14 | 1,015,236 | 910,171 | 569,718 | - | - | - |
| ஏனைய நமைுறை நிதிச்சொத்துக்கள் | 15 | 33,652,650 | 27,080,350 | 19,565,808 | 2,826,654 | 3,485,735 | 3,872,615 |
| காசும் வங்கி மீதிகளும் | 32 | 9,632,295 | 7,282,167 | 5,503,939 | 3,604,157 | 3,725,333 | 2,250,515 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | 175,675,713 | 147,638,518 | 131,689,203 | 116,180,311 | 110,576,136 | 102,337,774 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 1,068,162,917 | 1,004,366,998 | 952,170,085 | 953,305,680 | 913,770,884 | 870,107,129 |
| **உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | | | | | | |
| **மூலதனம் மற்றும் உரிமையாண்மை** | | | | | | | |
| பங்களிக்கப்பட்ட மூலதனம் | 22 | 391,730,584 | 323,194,038 | 302,694,797 | 391,730,584 | 323,194,038 | 302,694,797 |
| ஒதுக்கங்கள் | 23 | 52,807,114 | 50,082,923 | 44,511,162 | 39,253,987 | 37,109,568 | 34,881,039 |
| நிறுத்திவைத்த இலாபம்∴(நட்டம்) | | (142,625,240) | (88,317,951) | 9,897,996 | (167,725,235) | (103,940,037) | (5,355,297) |
| **தாய்க் கம்பனி உரிமையாளர்களிற்கு பகிரத்தக்க உரிமையாண்மை** | | 301,912,458 | 284,959,010 | 357,103,955 | 263,259,336 | 256,363,569 | 332,220,539 |
| கட்டுப்பாடற்ற நட்டம் | | 34,622,332 | 31,655,308 | 25,758,561 | - | - | - |
| **மொத்த உரிமையாண்மை** | | 336,534,790 | 316,614,318 | 382,862,516 | 263,259,336 | 256,363,569 | 332,220,539 |
| **நடைமுறையல்லா பொறுப்புக்களும் பிற்போட்ட வருமானமும்** | | | | | | | |
| வட்டிக் கடன்கள், கடன்படுகைகள் | 24 | 357,676,324 | 324,004,981 | 288,351,654 | 345,386,873 | 318,149,176 | 281,262,195 |
| நுகர்வோர் வைப்புக்கள் | 25 | 15,640,571 | 15,013,791 | 14,311,008 | 15,640,571 | 15,013,788 | 14,311,005 |
| ஏற்பாடுகள், பிற பிற்போட்ட பொறுப்புக்கள் | 26 | 21,801,592 | 11,788,539 | 11,257,055 | 20,120,599 | 10,482,144 | 10,038,368 |
| அரசாங்க மானியம் | 27 | 278,934 | 297,697 | 318,228 | 200,334 | 213,303 | 228,022 |
| ஒப்பந்தப் பொறுப்புக்கள் | 28 | 100,694,746 | 94,421,389 | 90,809,989 | 95,770,723 | 89,746,084 | 86,335,217 |
| பிற்போட்ட வரியீடு | 29 | 489,800 | 753,562 | 276,157 | - | - | - |
| | | 496,581,967 | 446,279,959 | 405,324,091 | 477,119,100 | 433,604,495 | 392,174,807 |
| **நடைமுறைப் பொறுப்புக்களும்** | | | | | | | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 30 | 189,330,262 | 200,461,069 | 136,393,678 | 180,956,115 | 191,130,723 | 125,515,300 |
| செலுத்தவேண்டிய பங்கிலாபம் | | 905,034 | 2,303,807 | 2,258,669 | - | - | - |
| தொடர்புடைய தரப்பினருக்கு சென்மதி | 31 | - | - | - | 4,213,942 | 2,989,787 | 3,557,973 |
| வட்டிக் கடன்கன், கடன்படுகைகள் | 24 | 41,798,351 | 36,492,272 | 22,995,033 | 26,486,421 | 28,411,544 | 15,367,744 |
| செலுத்தவேண்டிய வருமானவரி | | 3,012,513 | 2,215,573 | 2,336,098 | 1,270,766 | 1,270,766 | 1,270,766 |
| | | 235,046,160 | 241,472,721 | 163,983,478 | 212,927,244 | 223,802,820 | 145,711,783 |
| **மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | 1,068,162,917 | 1,004,366,998 | 952,170,085 | 953,305,680 | 913,770,884 | 870,107,129 |

பக்கங்கள் 110 முதல் 172 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

பணிப்பாளர் சபையும் முகாமைத்துவமும் இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு பொறுப்பாக உள்ளன.

| தலைவர் | உப தலைவர் | பொது முகாமையாளர் | நிதி முகாமையாளர் |
|---|---|---|---|

கொழும்பு
2021.06.15

# உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

| குழுமம் | பங்களித்த மூலதனம் | மூலதன ஒதுக்கம் | தேய்மான ஒதுக்கம் | சொத்து மீள்வைப்பு ஒதுக்கம் |
|---|---|---|---|---|
| **2019 சனவரி 01 இல் மீதி (மீளமைத்த)** | 302,694,797 | 19,179,474 | 23,000 | 294,930 |
| ஆண்டிற்கான இலாப/ (நட்டம்) | - | - | - | - |
| ஏ.வி.வ. ஊடான முதலீடுகளின் நியாயப் பெறுமதி | - | - | - | - |
| மீதான நயம்/நட்டம் | - | - | - | - |
| பரிமாற்று சமப்படுத்தல் ஒதுக்கம் | - | (39,667) | - | - |
| **மொத்த முற்றுமடங்கிய வருமானம்** | 302,694,797 | 19,139,807 | 23,000 | 294,930 |
| பரிமாற்று சமப்படுத்தல் ஒதுக்கம் | 16,942,799 | - | - | - |
| புத்தளம் நிலக்கரி மின்வலு செயற்திட்டம் | 3,556,442 | - | - | - |
| சொத்துக்கள் மீளவைத்தல் ஒதுக்கம் | - | - | - | - |
| சுய காப்புறுதி ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | - | - |
| பெறுமானத்தேய்வு ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | 1,000 | - |
| ஆர்எச்சீபி செயற்திட்டம் | - | 58,045 | - | - |
| முதலீட்டு ஒதுக்கம் | - | - | - | - |
| சொத்துக்கள் மீளவைத்தல் ஒதுக்கம் | - | - | - | 17,564 |
| அபிவிருத்தி ஒதுக்கம் | - | - | - | - |
| கட்டுப்பாட்டு அதிகாரத்தில் மாற்றமின்றி உரிமையினை மாற்றுதல் | - | - | - | - |
| துணைக் கம்பனிகளின் பங்கு வழங்கல் | - | - | - | - |
| பங்கிலாப கொடுப்பனவு - எல்ரீஎல் | - | - | - | - |
| பங்கிலாப கொடுப்பனவு - லெகோ | - | - | - | - |
| **2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | 323,194,038 | 19,197,852 | 24,000 | 312,494 |
| காலப்பகுதிக்கு இலாப/ (நட்டம்) | - | - | - | - |
| ஓய்வூதிய நலனாளிகள் மீதான உள்ளபடியான ஆதாயம்/(இழப்பு) | - | - | - | - |
| ஏ.வி.வ. ஊடான முதலீடுகளின் நியாயப் பெறுமதி மீதான நயம்/நட்டம் | - | - | - | - |
| பரிமாற்று சமப்படுத்தல் ஒதுக்கம் | - | 103,426 | - | - |
| **மொத்த முற்றுமடங்கிய வருமானம்** | 323,194,038 | 19,301,278 | 24,000 | 312,494 |
| உரிமைத்துவத்திற்கான கடன்களின் மாற்றம் | 17,361,455 | - | - | - |
| புத்தளம் நிலக்கரி மின்வலு செயற்திட்டம் | 3,175,091 | - | - | - |
| காப்புறுதி ஒதுக்க நிதியத்திலிருந்தான வட்டி வருமானம் | - | - | - | - |
| எரிபொருள் விலை நிலைப்படுத்தல் நிதியத்திலிருந்தான மேலதிக உரிமைத்துவ முதலீடு (FPSF) | 48,000,000 | - | - | - |
| சுய காப்புறுதி ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | - | - |
| பெறுமானத்தேய்வு ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | 1,000 | - |
| வாடிக்கையாளரிடமிருந்து கிடைத்த வட்டி | - | 36,601 | - | - |
| முதலீட்டு ஒதுக்கம் | - | - | - | |
| அபிவிருத்தி ஒதுக்கம் | - | - | - | - |
| துணைக் கம்பனிகளின் பங்கு வழங்கல் | - | - | - | - |
| இறுதிப்பங்கிலாபம் - LTL | - | - | - | - |
| பங்கிலாபம் வழங்கள் லெகோ | - | - | - | - |
| **2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | 391,730,584 | 19,337,879 | 25,000 | 312,494 |

பக்கங்கள் 110 முதல் 172 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

# உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| முதலீட்டு ஒதுக்கம் | சுய காப்புறுதி ஒதுக்கம் | நியாயப் பெறுமதி ஒதுக்கம் | அபிவிருத்தி ஒதுக்கம் | நிறுத்திவைத்த வைப்புக்கள | கட்டப்பாடற்ற வட்டி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2,821,145 | 16,370,888 | 5,810,700 | 11,025 | 9,897,996 | 25,758,561 | 382,862,516 |
| - | - | - | - | (93,860,667) | 6,059,416 | (87,801,251) |
| - | - | - | - | (62,901) | (2,252) | (65,153) |
| - | - | 249,829 | - | - | 216,338 | 466,167 |
| - | - | - | - | - | (75,801) | (115,468) |
| 2,821,145 | 16,370,888 | 6,060,529 | 11,025 | (84,025,572) | 31,956,262 | 295,346,811 |
| - | - | - | - | - | - | 16,942,799 |
| - | - | - | - | - | - | 3,556,442 |
| - | 1,008,138 | - | - | - | - | 1,008,138 |
| - | 1,161,346 | - | - | (1,161,346) | - | - |
| - | - | - | - | (1,000) | - | - |
| - | - | - | - | - | - | 58,045 |
| 3,109,206 | - | - | - | (3,109,206) | - | - |
| - | - | - | - | (17,564) | - | - |
| - | - | - | 6,300 | (6,300) | - | - |
| - | - | - | - | 3,037 | (20,022) | (16,985) |
| - | - | - | - | - | 2,550,207 | 2,550,207 |
| - | - | - | - | - | (2,223,548) | (2,223,548) |
| - | - | - | - | - | (607,591) | (607,591) |
| 5,930,351 | 18,540,372 | 6,060,529 | 17,325 | (88,317,951) | 31,655,308 | 316,614,318 |
| - | - | - | - | (52,593,156) | 4,057,433 | (48,535,723) |
| - | - | - | - | (80,227) | (64,135) | (144,362) |
| - | - | 66,154 | - | - | 59,857 | 126,011 |
| - | - | - | - | - | 233,374 | 336,800 |
| 5,930,351 | 18,540,372 | 6,126,683 | 17,325 | (140,991,334) | 35,941,837 | 268,397,044 |
| - | - | - | - | - | - | 17,361,455 |
| - | - | - | - | - | - | 3,175,091 |
| - | 884,104 | - | - | - | - | 884,104 |
| - | - | - | - | - | - | 48,000,000 |
| - | 1,222,714 | - | - | (1,222,714) | - | - |
| - | - | - | - | (1,000) | - | - |
| - | - | - | - | - | - | 36,601 |
| 400,192 | - | - | - | (400,192) | - | - |
| - | - | - | 10,000 | (10,000) | - | - |
| - | - | - | - | - | 119,925 | 119,925 |
| - | - | - | - | - | (1,100,732) | (1,100,732) |
| - | - | - | - | - | (338,698) | (338,698) |
| 6,330,543 | 20,647,190 | 6,126,683 | 27,325 | (142,625,240) | 34,622,332 | 336,534,790 |

# உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| சபை | பங்களிப்பு மூலதனம் | ஏனைய மூலதன ஒதுக்கம் | RHCP ஒதுக்கம் | காணி மீட்பு ஒதுக்கம் | தேய்வு ஒதுக்கம் | சுய காப்புறுதி ஒதுக்கம் | நிறுத்திவைத்த உழைப்புக்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **2019 சனவரி 01 இல் மீதி (மீளமைத்த)** | 302,694,797 | 165,446 | 890,594 | 17,447,062 | 23,000 | 16,354,937 | (5,355,297) | 332,220,539 |
| ஆண்டின் போதான முன்னைய ஆண்டுச் சீராக்கம் | - | - | - | - | - | - | (97,422,394) | (97,422,394) |
| வவனியா கிளிநொச்சி மின்கட-த்தல் திட்டம் | - | - | - | - | - | 1,008,138 | - | 1,008,138 |
| உரிமைத்துவத்திற்கு கடன்களை | 16,942,799 | - | - | - | - | - | - | 16,942,799 |
| புத்தளம் நிலக்கரிச் செயற்திட்டம் | 3,556,442 | - | - | - | - | - | - | 3,556,442 |
| பெறுமானத்தேய்வு ஒதுக்கத்தி-ற்கு மாற்றியது | - | - | - | - | 1,000 | - | (1,000) | - |
| ஆர்எச்சீபி செயற்திட்டத்திற்காக யுனுடீ இடமிருந்து கிடைத்த நிதி | - | - | - | - | - | 1,161,346 | (1,161,346) | - |
| ஆர்எச்சீபி செயற்திட்டம் | - | - | 58,045 | - | - | - | - | 58,045 |
| **2019 திசெம்பர் 31 இல் மீதி (மீளமைத்த)** | 323,194,038 | 165,446 | 948,639 | 17,447,062 | 24,000 | 18,524,421 | (103,940,037) | 256,363,569 |
| காலப்பகுதிக்கு இலாப/ (நட்டம்) | - | - | - | - | - | - | (62,561,484) | (62,561,484) |
| வவனியா கிளிநொச்சி மின்கடத்தல் திட்டம் | - | - | - | - | - | 884,104 | - | 884,104 |
| உரிமைத்துவத்திற்கு கடன்களை மாற்றுதல் | 3,175,091 | - | - | - | - | - | - | 3,175,091 |
| புத்தளம் நிலக்கரிச் செயற்திட்டம் | 17,361,455 | - | - | - | - | - | - | 17,361,455 |
| எரிபொருள் விலை நிலைப்படுத்-தல் நிதியத்திலிருந்தான மேலதிக உரிமைத்துவ முதலீடு (FPSF) | 48,000,000 | - | - | - | - | - | - | 48,000,000 |
| பெறுமானத்தேய்வு ஒதுக்கத்தி-ற்கு மாற்றியது | - | - | - | - | 1,000 | - | (1,000) | - |
| சுய காப்புறுதி ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | - | - | - | 1,222,714 | (1,222,714) | - |
| ஆர்எச்சீபி செயற்திட்டம் | - | | 36,601 | - | - | - | - | 36,601 |
| **2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | 391,730,584 | 165,446 | 985,240 | 17,447,062 | 25,000 | 20,631,239 | (167,725,235) | 263,259,336 |

பக்கங்கள் 110 முதல் 172 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

# காசுப் பாய்ச்சல் கூற்று

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| | குழுமம் | | சபை | |
|---|---|---|---|---|
| | **2020** | **2019** | **2020** | **2019** |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து/(பயன்படுத்திய) காசுப் பாய்ச்சல்** | | | | |
| வரிக்கு முன்னர் இலாபம்.'.(நட்டம்) | (46,105,683) | (85,377,389) | (53,830,885) | (97,319,155) |
| **சீராக்கம்:** | | | | |
| ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு | 34,126,242 | 32,893,574 | 32,445,270 | 31,282,934 |
| பாவனையாளர் பங்களிப்பின் காலத்தேய்மானம் | (3,841,968) | (3,975,636) | (3,440,050) | (3,594,603) |
| அரசாங்க மானியம் மீதான காலத்தேய்மானம் | (20,511) | (20,531) | (14,718) | (14,718) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை இலாபம்.'.(நட்டம்) | (48,658) | 13,234 | (31,285) | (3,131) |
| நிதிக் கிரயம் | 21,445,900 | 15,758,216 | 19,719,633 | 14,177,340 |
| பழுதடைந்த மற்றும் பயன்படுத்த முடியாத இருப்பு ஏற்பாடு | 15,069 | (12,887) | 71,706 | 61,228 |
| விலை முரண் ஏற்பாடு | 347,263 | (958,460) | 347,263 | (958,460) |
| கடன்பட்டோர் நட்டக்கடன் ஏற்பாடு | 1,842,072 | 1,657,181 | 1,343,916 | 938,432 |
| பதிவழித்த ஐயக் கடன் | - | 11,165 | - | 11,165 |
| மின்சார வாகன உயிர்ப்பித்தல் வருமானம் | (2,836) | (3,782) | (2,836) | (3,782) |
| கூட்டுத்தொழில் முயற்சி இலாப.'.(நட்டப்) பங்கு | 6,143 | 6,850 | - | - |
| கற்புலனாகச் சொத்துக்களின் காலத்தேய்மானம் | 44,868 | 39,722 | - | - |
| நிதி வருமானம் | (2,823,644) | (3,848,624) | (1,337,772) | (1,751,170) |
| பங்கிலாப வருமானம் | (807,188) | (8,609,571) | (1,129,505) | (2,746,968) |
| அந்நியச் செலாவணி இலாபம்.'.(நட்டம்) | 51,963 | 650,805 | - | - |
| பெறவேண்டிய நிதிக் குத்தகை மீதான வருமானச் சீராக்கம் | 1,461,389 | 887,365 | - | - |
| குறித்துரைத்த நலத் திட்டங்கள் | 1,342,111 | 1,299,692 | 1,117,957 | 1,106,619 |
| ஓய்வூதிய நிதியம் மீதான தனியாள் கிரயம் | 534,584 | 212,058 | 534,584 | 212,058 |
| முற்செலுத்திய பதவியினர் கிரயம் | 770,929 | 982,973 | 770,928 | 982,972 |
| **தொழிற்படு மூலதன மாற்றத்திற்கு முன்னர் செயற்பாட்டு இலாபம் இலாபம்/(நட்டம்)** | 8,338,045 | (48,394,045) | (3,435,794) | (57,619,239) |
| இருப்புக்களில் (அதிகரிப்பு).'.குறைவு | 3,739,426 | (5,603,865) | 5,013,879 | (3,621,559) |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளின் (அதிகரிப்பு)/குறைவு | (22,770,237) | 611,495 | (10,534,141) | (1,798,544) |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகளின் (அதிகரிப்பு)/குறைவு | (11,130,807) | 63,100,741 | (4,931,331) | 64,098,696 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவான காசு** | (21,823,573) | 9,714,326 | (13,887,387) | 1,059,354 |
| செலுத்திய நிதிக் கிரயம் | (21,431,568) | (12,190,937) | (19,705,300) | (10,610,061) |
| ஓய்வூதிய நிதியக் கடப்பாடுகள் | (740,303) | (1,045,981) | (691,714) | (938,612) |
| செலுத்திய வருமான வரி | (1,947,109) | (2,543,303) | - | (39,529) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து/(பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்ச்சல்** | (45,942,553) | (6,065,895) | (34,284,401) | (10,528,848) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து/(பயன்படுத்திய) காசுப் பாய்ச்சல்** | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவும் மூலதன முடிவுறா வேலைகளும் | (71,268,227) | (69,395,632) | (68,376,154) | (66,868,244) |
| துணைக் கம்பனியொன்றிடமிருந்து பெறவேண்டிய நிதிக் குத்தகை கையேற்பு | (68,224) | (13,449,665) | - | - |
| கற்புலனாகாச் சொத்துக்களின் கையேற்றல் | (89,732) | (20) | (89,732) | - |
| காப்புறுதி ஒதுக்க நிதியத்தில் மீள் முதலீடு | (983,837) | (926,640) | (983,837) | (926,640) |
| காப்புறுதி ஒதுக்க நிதியத்திலிருந்து பெற்ற வட்டி | 884,104 | 1,008,138 | 884,104 | 1,008,138 |
| நிதிச் சொத்துக்களில் முதலீடு | 12,607,086 | 3,289,048 | - | - |
| யுஉ ஙரளைவைழை ழக ழேெ-ஊழவெசழடடபைெ ஐவெநசநளவ | 96,300 | 2,569,179 | - | - |
| வெளிநாட்டு முதலீட்டு வருமானம் | - | (5,218) | - | - |
| பெற்ற பங்கிலாபம் | 807,188 | 8,609,571 | 2,204,559 | 2,636,334 |
| பெற்ற வட்டி | 1,445,566 | 2,864,461 | 566,843 | 767,007 |
| நிலையான சொத்து கைதவிர்த்தல் காசு சேகரிப்பு | 36,009 | 7,541 | 31,322 | 3,131 |
| செலுத்திய பங்கிலாபம் | (3,209,977) | (2,825,529) | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து/(பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்ச்சல்** | (59,743,744) | (68,254,766) | (65,762,895) | (63,380,274) |
| **நிதியீட்டல் நடவடிக்கைகளிலிருந்து/(பயன்படுத்திய) காசுப் பாய்ச்சல்** | | | | |
| பங்களித்த மூலதனப் பெறுவனவுகள் | 51,175,091 | - | 51,175,091 | - |
| பங்களித்தல் மூலதனப் பெறுவனவு | 5,964,166 | 8,534,901 | 5,445,429 | 7,953,336 |
| மின்சார வாகன ஈ-அட்டை கொடுப்பனவுகள் | 2,977 | 4,458 | 2,977 | 4,458 |
| ஆர்எச்சீபி செயற்திட்டத்திற்காக கிடைத்த நிதி | 36,601 | 58,045 | 36,601 | 58,045 |
| மானியம் - பெறப்பட்டவை | 1,749 | - | 1,749 | - |
| பாவனையாளர் வைப்பு - மீளளிக்கத்தக்க | (101,908) | (205,990) | (101,908) | (205,995) |
| பெற்ற பாவனையாளர் வைப்புக்கள் | 728,688 | 908,773 | 728,688 | 908,773 |
| குத்தகைக் கடன்கொடுத்தோர்/(குத்தகைக் கொடுப்பனவு) தேறிய அசைவு | (98,328) | (16,917) | (64,629) | (107,645) |
| வட்டிக் கடன்கள் மற்றும் ஏனைய பெறுகைகள் | 83,786,760 | 124,553,253 | 63,196,153 | 111,822,169 |
| வட்டிக் கடன்கள் மற்றும் ஏனைய பெறுகைகளை மீளளித்தல் | (34,068,909) | (62,930,314) | (20,656,691) | (50,409,795) |
| முன்னுரிமைப் பங்குகளை மீட்புச் செய்தல் | (689,477) | (679,297) | - | - |
| **நிதியீட்டல் நடவடிக்கைகளிலிருந்து/(பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்ச்சல்** | 106,737,410 | 70,226,912 | 99,763,460 | 70,023,346 |
| **காசினதும் காசுக்கு சமமானவற்றினதும் தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | 1,051,113 | (4,093,749) | (283,836) | (3,885,776) |
| **ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு காசும் காசுக்கு சமமானவைகளும்** | (8,054,916) | (3,961,167) | (9,312,387) | (5,426,611) |
| **ஆண்டின் இறுதியில் உள்ளவாறு காசும் காசுக்கு சமமானவைகளும்** | (7,003,803) | (8,054,916) | (9,596,223) | (9,312,387) |

பக்கங்கள் 110 முதல் 172 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள்

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

## 1. கூட்டிணைப்புத் தகவல்கள்

### 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

இலங்கை மின்சார சபையானது 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது. சபையின் தலைமை பணிமனை இல 50. சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தை, கொழும்பு 02 இல் அமைந்துள்ளது.

### 1.2 ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள்

சபையின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை மின்சார சபை (சபை) மற்றும் அதன் சகல துணைக் கம்பனிகள் (குழுமம்) உள்ளிட்டஅவ்வாறு ஒன்றிப்புச் செய்யப்பட வேண்டிய நிதிக் கூற்றுக்களை உள்ளடக்குகின்றது.

### 1.3 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

**சபை**

மின்சாரத்தின் பிறப்பாக்கம், கொள்வனவு,மின்பரிமாற்றம், விளைவுதிறனான விநியோகம் மற்றும் விற்பனை போன்றன இந்த ஆண்டின்போது சபையின் பிரதான செயற்பாடுகளாக காணப்பட்டன.

சபையின் துணைக் கம்பனிகளினதும் கூட்டுத்தொழில் முயற்சியினதும் பிரதான செயற்பாடுகள் கீழ்வருமாறு:

### 1.3.1 துணைக் கம்பனிகள்

**அ) வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனி) கம்பனி**

இலங்கை மின்சார சபையிலிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்து காலி, களுத்துறை, மொறட்டுவை, களனி, நுகேகொடை, கோட்டே மற்றும் நீர்கொழும்பில் அமைந்துள்ள கம்பனியின் கிளைகள் ஊடாக, வீட்டு மற்றும் கைத்தொழில் வாடிக்கையாளருக்கு சில்லறையாக விற்பனை செய்வதே இந்த ஆண்டில் கம்பனியின் பிரதான செயற்பாடுகளாக காணப்பட்டன. குழுமத்தின் துணை கம்பனிகள் மின் மானிகளின் உற்பத்தி மற்றும் வியாபாரம் உள்ளிட்ட மின் விநியோகத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளன.

**ஆ) வரையறுக்கப்பட்ட LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி**

ஆண்டின் போது, கம்பனியின் முக்கிய செயல்பாடுகள் அதன் கீழுள்ள துணை கம்பனிகளின் முதலீடுகளை வைத்திருப்பதாகும். குழுமத்தின் துணை கம்பனிகள் மின் பிறப்பாக்கம், மின் பிறப்பாக்கத்துடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்,மின்மாற்றிகள் மற்றும் மின் கம்பங்களை உற்பத்தி செய்தல் மற்றும் கால்வனைசிங் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன.

**இ) வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி (தனி) கம்பனி**

நுரைச்சோலையில் உள்ள நிலக்கரிமின்வலுஆலையில மின்வலுபிறப்பாக்கத்திற்காகஉயர்தரமான, குறைந்த கந்தக நிலக்கரியினை வழங்குதல்..

**ஈ) வரையறுக்கப்பட்ட சிறீலங்கா எனர்ஜீஸ் (தனி) கம்பனி**

பரிமாற்றக் கம்பிவழிகளையும் துணை மின்நிலையங்களையும் நிர்மாணித்தல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயற்திட்டங்களை நிர்மாணித்துப் பராமரித்தல் மற்றும் மின் எரிசக்தி பிறப்பாக்கத்துக்குத் தேவையான வேலைகளிலும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அபிவிருத்திக்குத் தேவையான செயல்பாடுகளிலும் ஈடுபடுதல்,மின்மானி பெட்டிகளை உற்பத்திசெய்தல் மற்றும் சபையின் சேவைகளுக்காக ஆட்சேர்ப்பில் ஈடுபட்டு மனிதவளத்தை வழங்குதல் என்பன கம்பனியின் பிரதான செயற்பாடுகள் ஆகும்.

குழுமத்தின் துணை கம்பனிகள் சபை மற்றும் நீர் மின்வலு பிறப்பாக்கச்சேவைகளுக்கான ஆட்சேர்ப்பை மேற்கொண்டு மனிதவளத்தை வழங்குவதில் ஈடுபட்டுள்ளன.

### 1.3.2 கூட்டுத்தொழில் முயற்சி

**வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்வலு கம்பனி**

இலங்கை மின்சார சபையின் தேசிய கட்டகத்திற்கு மின் சக்தியை பிறப்பித்து விற்பனை செய்தலே கம்பனியின் பிரதான செயற்பாடாகும். .கம்பனி தற்போது நிலக்கரி மின் நிலையம் அமைக்கும் செயற்திட்டத்தை கைவிட்டுள்ளது. இருப்பினும், சம்பூரில் 50 மெகாவாட் சூரிய மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

### 1.4 தாய்க் கம்பனி மற்றும் சபையின் இறுதியான தாய்க் கம்பனி

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு கீழ் இயங்குகின்றது. பணிப்பாளர்களின் அபிப்பிராயத்தின் படி, சபையின் இறுதியான தாய்க் கம்பனியும் கட்டுப்பாட்டு அதிகாரியுமாக இலங்கை அரசாங்கம் காணப்படுகின்றது.

### 1.5 வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி

இலங்கை மின்சார சபையின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்காக 2021.06.15 ஆந் திகதி பணிப்பாளர் சபையால் அதிகாரம் வழங்கப்பட்டது.

## 2. தயாரிப்பு அடிப்படையும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

### 2.1 தயாரிப்பின் அடிப்படை

குழுவின் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகள் நிதிச் சாதனங்கள் தவிர லாப அல்லது இழப்பு மூலம் நியாயமான மதிப்பு தவிர வரலாற்று செலவு மாநாட்டின் கீழ் திரட்டப்பட்ட அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளனமற்றும் நிதிக் கருவிகள் விரிவான வருமானத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றன. ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் வழங்கப்படுகின்றன.வேறுவிதமாக குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த ஏனைய அனைத்து பெறுமதிகளும் கிட்டிய ரூபா ஆயிரத்திற்கு (ரூ .000) சுறுக்கப்படுகின்றன.

ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள் முன்னைய காலத்துடன் தொடர்புடைய ஒப்பீட்டுத் தகவல்களை வழங்குகின்றன. அத்துடன், ஒரு கணக்கீட்டுக் கொள்கையின் பின்னோக்கியபிரயோகம் காணப்படுகையில்,முன்னைய காலத்தின் தொடக்கத்தில் குழுமம் மேலதிக நிதி நிலைமை கூற்றொன்றை சமர்ப்பிக்கின்றது. குறிப்பு 34 இல் வெளிப்படுத்தப்பட்ட காரணங்களால் 2019 சனவரி 1 ஆம் திகதியில் உள்ளவாறான ஒரு மேலதிக நிதிநிலைமை கூற்றை இந்த நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுகின்றன.

### 2.2 இணக்கப்பாட்டு அறிக்கை

இலாபம் அல்லது நட்டக்கூற்று, முற்றுமடங்கிய வருமானக் கூற்று, நிதி நிலைமைக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடனும் குறிப்புக்களுடனும் கூடிய குழுமத்தின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் (“நிதிக்கூற்றுக்கள்”) இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (SLFRS/LKAS) இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. (சீஐ இலங்கை)

### 2.3 தொடர்ந்தியங்கும்எண்ணக்கரு

தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் படி குழுமத்தின் தொடர்ந்தியங்கு நிலை மதிப்பீடொன்றை பணிப்பாளர்கள் மேற்கொண்டதுடன் பின்வருந தவிர்த்து வியாபாரத்தை

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

கலைப்பதற்கு அல்லது இடைநிறுத்துவதற்கான எதிர்பார்ப்பை அவர்கள் கொண்டிருக்கவில்லை.

**தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு - வரையறுக்கப்பட்ட ஹெலதனவி கம்பனி**

ஹெலதனவி கம்பனிக்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையே 2009 மே 09 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ள மின்சார கொள்வனவு உடன்படிக்கை 2014 டிசம்பர் 08 ஆம் திகதி காலாவதியாகின்றது. உடன்படிக்கை காலாவதியானதன் பின்னர் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமை தொடர்பில் நிறுவனத்தின் பார்வையில் பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது.

அறிக்கை திகதியில் உள்ளவாறான தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் படியான நிறுவனததின் தொடர்ந்தியங்கும் ஆற்றல் பணிப்பாளர்கள் அவர்கள் தீர்மானித்தார்கள் தொடர்ந்தியங்கம் எண்ணக்கருவிற்கு அமைய நிறுவனத்தின் தொடர்ந்தியங்கம் இயலுமை மீது குறிப்பிடத்தக்க அளவு சந்தேகம் காணப்பட்டுவதனை அவர்கள் தீர்மானித்தார்கள். ஆகையால் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு வரையறுக்கப்பட்ட ஹெலதனவியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் பொருத்தமானதாக காணப்படவில்லை.

**தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு - லங்கா இன்டஸ்ட்ரியல் புரடக்கஸன் இன்ஜினியரிங் தனியார் கம்பனி**

2015 நவம்பர், 01 ஆம் திகதியில் இருந்து செயல்வலுப்பெறும் வண்ணம் அதன் இயக்கப்பாட்டை முடிவுருத்துவதற்கு பணிப்பாளர்கள் தீர்மானித்தார்கள் அத்துடன் அதன் இயக்கப்பாட்டை எல்.ரி.எல் டிரான்ஸ்போர்மஸ் தனியார் கம்பனிக்கு மாற்றுவதற்கு தீர்மானித்தார்கள் ஆகவே, தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவானது லங்கா இன்டஸ்ட்ரியல் புரடக்சன் இன்ஜினியரிங் பிரைவட் லிமிட்டினது நிதிக்கூற்றுக்களை தயாரிக்கையில் பொருந்தவில்லை

**தொடர்ந்தியங்குதல் எண்ணக்கரு - ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் எச்ஆர் (பிரைவட்) லிமிடட்**

இக்கம்பனியின் பெரும்பான்மையான மனித சக்தி ஊழியர்கள் இலங்கை மின்சார சபையின் கீழ் நிரந்தர ஊழியர்களாக நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த தீர்மானத்தின் காரணமாக, இந்த இடமாற்றத்திற்குப் பிறகு கம்பனியின் வருவாய் வெகுவாகக் குறைந்துள்ளது. எவ்வாறாயினும், அறிக்கையிடல் தேதியின்போது கம்பனி தொடர்பில் அவர்கள் என்ன செய்ய எண்ணுகிறார்கள் என்பது குறித்து பணிப்பாளர்கள் எந்த முடிவும் எடுக்கவில்லை என்பதாலும் கம்பனியைக் கலைக்க எந்த நோக்கமும் இல்லை என்பதாலும் கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணம் கொண்டுள்ளது என்ற அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 2.4 ஒப்பீட்டுத் தகவல்கள்

முன்னைய ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பித்தல் மற்றும் வகைப்படுத்தல் என்பனதேவைப்படுமிடத்து பின்வருவன உட்பட சிறந்த சமர்ப்பித்தல் மற்றும் நடப்பு ஆண்டுடன் ஒப்பிடத்தக்க விதத்தில்திருத்தப்பட்டுள்ளன.

## 2.5 ஒன்றித்தலின் அடிப்படை

ஒன்றிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் குழுமத்தினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களை உள்ளடக்கும். முதலீடு செய்யப்பட்டவர்களுடனான ஈடுபாடுகளிலிருந்து பல்வேறு திரும்பல்களை தொகுதி வெளிப்படுத்துகின்ற போதும் அல்லது உரிமையைக் கொண்டுள்ள போதும் முதலீடு செய்யப்பட்டவர்களின் மீது அதன் வலுவின் ஊடாக அத் திரும்பல்கள் மீது தாக்கம் செலுத்துவதற்கு ஆற்றல் உள்ளபோதும் கட்டுப்பாடு அடையப்படுகின்றது. விசேடமாக, குழுமக் கட்டுப்பாடுகள் மற்றும் முதலீடு செய்யப்பட்டவர்கள் இருப்பின்,குழுமம்:

- முதலீடு செய்யப்பட்டவர்கள்மீது வலுவைக் கொண்டிருக்கும். (அதாவது : முதலீடு செய்யப்பட்டவர்களின் தொடர்புடைய செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்கு நடைமுறை ஆற்றலை தற்போதுள்ள உரிமைகள் வழங்கும்)
- முதலீடு செய்யப்பட்டவர்களுடனானஅதன் ஈடுபாட்டிற்கு பல்வேறு திரும்பல்களிற்கான வெளிப்படுத்தல் அல்லது உரிமைகள்.
- முதலீடு செய்யப்பட்டவர் மீது அவர்களது திரும்பல்கள் மீது தாக்கம் செலுத்துவதற்கான இயலுமை அல்லது அதன் அதிகாரங்கள்

பொதுவாக கட்டுப்பாட்டின் விளைவாகவே வாக்களித்தல் உரிமைகளில் அதிகமானவை தோன்றுகின்றது. இந்த தோன்றலுக்கு உதவுவதற்காகவும் குழுமம் வாக்களித்தலில் பெரும்பான்மைக்கு குறைவாக கொண்டிருக்கின்ற அல்லது முதலீடு செய்யப்பட்டவர்களின் ஒத்த உரிமை காணப்படுகின்ற போதும் அதற்கு முதலீடு செய்யப்பட்டவர்கள் மீது அதிகாரம் உள்ளதா என்பதனை மதிப்பிடுவதற்காக பின்வருவன உள்ளடங்கலாக அந்த சகல தொடர்புடைய விடயங்களையும் நிலைமைகளையும் குழுமம் கருத்திற்கொள்கின்றது.

- முதலீடு செய்யப்பட்டவர்களின் ஏனைய வாக்குரிமை கொண்டுள்ளவர்களுடன் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகள்
- ஏனைய ஒப்பந்தரீதியான ஏற்பாடுகளிலிருந்து எழுகின்ற உரிமைகள்
- குழுமத்தின் வாக்களித்தல் உரிமைகள் மற்றும் எதிர்கால வாக்களித்தல் உரிமைகள்

துணைக் கம்பனிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| துணைக் கம்பனியின் பெயர் | கூட்டிணைக்கப்பட்ட நாடு | பிடிப்பு விகிதாசாரம் |
|---|---|---|
| வரையறுக்கப்பட்டடுவுடு ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி | இலங்கை | 63% |
| வரையறுக்கப்பட்டலங்கா மின்சார (தனி) கம்பனி (LECO) | இலங்கை | 55.2% |
| வரையறுக்கப்பட்டலங்கா நிலக்கரி (தனி) கம்பனி (LCC) | இலங்கை | 60% |
| வரையறுக்கப்பட்டசிறீ லங்கா எனர்ஜீஸ் (தனி) கம்பனி | இலங்கை | 100% |
| **கூட்டுத்தொழில் முயற்சியின் பெயர்** | **கூட்டிணைக்கப்பட்ட நாடு** | **பிடிப்பு விகிதாசாரம்** |
| திருகோணமலை கோல் பவர் கம்பனி லிமிடட் (TPCL) | இலங்கை | 50% |

வரை. ஏல்ரீஎல் ஹோல்டிங் (தனியார்) கம்பனியின் பின்வரும் உப துணைக் கம்பனிகள் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

| துணைக் கம்பனியின் பெயர் | கூட்டிணைக்கப்பட்ட நாடு |
|---|---|
| பிரைட் இன்டர்நெ'னல் பிரைவட் லிமிடட் | சிங்கப்பூர் |
| ராஜ் லங்கா பவர் கொம்பனி லிமிடட் | வங்காலதேசம் |
| லக்தனவி பங்லா பவர் கம்பனி லிமிடட் | வங்காலதேசம் |
| மகரிகாட் ஹைட்ரோபவர் பிரைவட் லிமிடட் | நேபாளம் |
| ஆசியாரிக் இலக்ரிகல் & சுவிட்ச்கியர் பிரைவட் லிமிடட் | இந்தியா |
| ∴பர்னி லங்கா பவர் லிமிடட் | வங்காலதேசம் |

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

இலங்கை மின்சார சபை, LECO, வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி (தனி) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை எனர்ஜிஸ் (தனி) கம்பனி ஆகியவை 31 டிசம்பரில் முடிவடையும் ஆண்டை பொதுவான நிதியாண்டாகவும்,வரையறுக்கப்பட்ட LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி மார்ச் 31 இல் முடிவடையும் ஆண்டை பொதுவான நிதியாண்டாகவும் கொண்டுள்ளன. எனினும், குறிப்பிட்ட கம்பனிகளின் கணக்காய்வாளர்கள் சான்றுபடுத்திய நிதிக்கூற்றுக்கள் குழுமத்தின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு ஏதுவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

துணைக்கம்பனிகளின் மொத்த இலாப, நட்டம் ஒன்றித்த வருமானக் கூற்றில் உட்படுத்தப்பட்டு உள்ளதுடன், வெளிவாரி பங்குதாரர்களுக்கு உரிய வரிக்குப் பிந்திய இலாப, நட்டமானது இலங்கை மின்சார சபையின் பங்குதாரர்களுக்கு உரிய இலாப, நட்டத்தை கணித்தலில் "சிறுபான்மையினர் ஆர்வம்" என்ற தலைப்பின் கீழ் செம்மையாக்கம் செய்யப்பட்டுள்ளது.

சபை மற்றும் அதன் உபகம்பனிகளின் சகல சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றித்த நிதி நிலைமைக் கூற்றில் உட்படுத்தப்பட்டுள்ளன. உப கம்பனிகளின் நிகரச் சொத்துக்களில் வெளிவாரி பங்குதாரர்களின் நாட்டம் ஒன்றித்த நிதி நிலைமைக் கூற்றில் கட்டுப்படுத்தப்படாத வரி என்ற தலைப்பின் கீழ் வேறாக காட்டுப்பட்டுள்ளது. ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை தயாரித்தலில் குழுமக் கம்பனிகளுக்கு இடையிலான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகளும் குழுமக் கம்பனிகளுக்கு இடையேயான கொடுக்கல் வாங்கல்களின் விளைவும் தேறாத இலாபங்களும் நீக்கப்பட்டுள்ளன.

கட்டுப்பாட்டை இழக்காது, துணைக் கம்பனியொன்றில் உரிமைநாட்ட மாற்றம், ஒரு உரிமையாண்மை கொடுக்கல் வாங்கலாக கொள்ளப்பட்டு கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது. குழுமம் துணைக் கம்பனிமீதான கட்டுப்பாட்டை இழக்கும்பட்சத்தில் அது:

- துணைக் கம்பனியின் சொத்துக்கள் (நன்மதிப்பு உட்பட) மற்றும் பொறுப்புக்களை அங்கீகரிக்காதிருக்கும்.
- கட்டுப்பாடற்ற ஆர்வம் ஏதுமிருப்பின் அதன் முன்கொணரற் தொகையை அங்கீகரிக்காதிருக்கும்.
- உரிமையாண்மையில் பதிவு செய்யப்பட்ட திரண்ட நாணயமாற்று வித்தியாசங்களை அங்கீகரிக்காதிருக்கும்.
- சந்தைப் பெறுமதிகளை கவனத்திற் கொண்டு பெறப்பட்ட சந்தைப் பெறுமதியை அங்கீகரிக்கும்.
- தொடர்ந்து வைத்திருக்கும் முதலீடு ஏதுமிருப்பின், அதன் சந்தைப்பெறுமதியை அங்கீகரிக்கும்.
- மிகை அல்லது பற்றாக்குறை ஏதுமிருப்பின் அதனை இலாப, நட்டத்தில் அங்கீகரிக்கும்.
- முன்னர் ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தில் அங்கீகரித்த கூறுகளின் மேன்னிலை உரிமத்தின் பங்கினை பொருத்தமான வகையில் இலாப, நட்டத்தில் அல்லது நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களில் மீள்வகைப்படுத்தும்.

மூன்று கட்டுப்பாட்டுக் கூறுகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றில்மாற்றங்களைக் காட்டுகின்ற நிலமைகள் காணப்படுமாயின் உண்மையில் முதலீடு செய்யப்பட்டவர்கள் மற்றும் கட்டுப்பாடுகள் உள்ளனவா அல்லது இல்லையா என்பதனை குழுமம் மீள்மதிப்பீடு செய்யும். துணைக் கம்பனிகள் மீது கட்டுப்பாட்டினை குழுமம் பெறுகின்றபோதே துணைக் கம்பனிகளின் ஒன்றிணைத்தல் இடம்பெறுவதுடன் துணைக் கம்பனியின் மீதான கட்டுப்பாட்டை குழுமம் இழக்கின்ற போது அது கைவிடப்படுகின்றது.ஆண்டின் போது துணைக் கம்பனியொன்றின் ஈட்டுதல் அல்லது கைதவிர்த்தலின் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம் என்பன துணைக் கம்பனியின் கட்டுப்பாட்டை குழுமம் ஈட்டிய திகதியிலிருந்து குழுமம் கட்டுப்பாட்டை இழக்கும் வரை ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுகின்றது.

இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தின் (ஓசீஐ) ஒவ்வொரு கூறும் இதன் விளைவாக கட்டுப்பாடற்ற ஆர்வத்தில் பற்றாக்குறை மீதி ஏற்படினும் குழுமத்தின் தாய்க் கம்பனியின் உரிமை பங்குதாரர்களுக்கும் கட்டுப்பாடற்ற ஆர்வமுள்ளவர்களிற்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. கூட்டிணைப்பின் நிமித்தம் குழுமம் முற்றாக இல்லாதொழிகையில் அங்கத்தவர்களிடையிலான கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், உரிமைத்துவம், வருமானம், செலவினம் மற்றும் காசுப்பாய்ச்சல்கள் அவசியமானவிடத்து நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படுகின்றது. கட்டுப்பாடொன்றின் இழப்பல்லாத துணைக் கம்பனியின் உரிமைத்துவ ஆர்வத்திலான மாற்றம் உரிமைத்துவக் கொடுக்கல் வாங்கலொன்றாக பதிவுசெய்யப்படுகின்றது.

துணைக்கம்பனி ஒன்றின் மீதான கட்டுப்பாட்டை குழுமம் இழக்குமாயின் தொடர்புடைய சொத்துக்கள் (நன்மதிப்பு உள்ளடங்கலாக), பொறுப்புக்கள், கட்டுப்பாடற்ற ஆர்வம் மற்றும் உரிமைத்துவத்தின் ஏனைய கூறுகள் அங்கீகரிக்கப்படுவதுடன் இலாப நட்ட விளைவுகள் ஏதுமிருப்பின் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. தொடர்ந்தும் காணப்படுகின்ற எவையேனும் முதலீடுகள் சந்தை பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன

## 2.6 முக்கியத்துவம்வாய்ந்த கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் பிரயோகிக்கப்பட்ட அடிப்படை கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. வேறுவிதத்தில் குறிப்பிடப்பட்டாலன்றி, இந்தக் கொள்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆண்டுகளிலும் நிலையானதாக பிரயோகிக்கப்பட்டுள்ளன.

### 2.6.1 நடைமுறை எதிர் நடைமுறையல்லாத வகைப்படுத்தல்

சபை நடைமுறை.'.நடைமுறையல்லாத வகைப்படுத்தலின் அடிப்படையில் அதனுடைய நிதி நிலைமைக் கூற்றில் பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்களை முன்னிலைப்படுத்துகின்றது. சொத்தொன்று நடைமுறைச் சொத்தாக இருப்பது எப்போதெனில்:

- சாதாரண செயற்பாட்டுச் சுற்றோட்டத்தில் தேறுமென எதிர்பார்க்கப்படுகின்ற அல்லது விற்பனைக்காக வைத்திருக்கப்படுகின்ற அல்லது நுகரப்படுகின்றவையாக இருத்தல்.
- பிரதானமாக வியாபார நோக்கத்திற்காக வைத்திருக்கப்படுபவையாக இருத்தல்.
- அறிக்கையிடல் திகதியின் பின்னரான பன்னிரெண்டு மாதத்தினுள் தேறுமென எதிர்பார்க்கப்படுவையாக இருத்தல். அல்லது,
- அறிக்கையிடல் திகதியின் பின்னரான குறைந்தபட்சம் பன்னிரெண்டு மாதத்தினுள் பரிமாற்றம் செய்தல் அல்லது பொறுப்பொன்றை தீர்ப்பதிலிருந்து விடுபட்டதாகவுள்ள காசும் காசுக்கு சமனானவையாக இருத்தல்.

ஏனைய அனைத்துச் சொத்துக்களும் குழுமத்தினால் நடைமுறையல்லாதவையாக வகைப்படுத்தப்படுகின்றன.

பொறுப்பொன்று நடைமுறைப் பொறுப்பாக இருப்பது எப்போதெனில்:

- சாதாரண செயற்பாட்டுச் சுற்றோட்டத்தில் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றவையாக இருத்தல்.

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

- பிரதானமாக வியாபார நோக்கத்திற்காக வைத்திருக்கப்படுதல்.
- அறிக்கையிடல் திகதியின் பின்னரான பன்னிரெண்டு மாதத்தினுள் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுதல். அல்லது,
- குறைந்தபட்சம் அறிக்கையிடல் திகதியின் பின்னரான பன்னிரெண்டு மாதத்தினுள் காசு அல்லது ஏனைய சொத்துக்களின் பரிமாற்றத்தினால் பொறுப்பொன்றின் தீர்ப்பனவை பிற்போடுவதற்கு அறிக்கையிடல் திகதியில் உரிமை காணப்படாதிருக்கையில்.

ஏனைய அனைத்துப் பொறுப்புக்களையும்சபை நடைமுறையல்லாதவையாக வகைப்படுத்தப்படுகின்றது.

பிற்போட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

### 2.6.2 வணிக சேர்க்கைகள், கட்டுப்பாடற்ற ஆர்வங்கள் மற்றும் நன்மதிப்பை கையகப்படுத்தல்

வணிகச் சேர்க்கைகள் கட்டம் கட்டமாக அடையப்படுகையில்,முன்பு வைத்திருக்கப்பட்ட எந்தவொருஉரிமைத்துவ ஆர்வமும் அதன் கையகப்படுத்தல்-திகதியில் நியாயமான பெறுமதியில் மீண்டும் அளவிடப்படுவதுடன் அதனால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டமானது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

கையகப்படுத்தல் முறையைப் பயன்படுத்தி வணிகச் சேர்க்கைகள் கணக்கீடு செய்யப்படுகின்றன. கையகப்படுத்தல் கிரயமானது, கையகப்படுத்தல் திகதியிலுள்ள நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட பரிமாற்றப்பட்ட உருப்படிகளின் ஒட்டுமொத்தமாகவும் கையகப்படுத்துபவர் மீதான கட்டுப்பாடற்ற ஆர்வத்தின் ஏதேனும் தொகையிலும் அளவிடப்படுகின்றது. ஒவ்வொரு வணிக சேர்க்கைக்கும், கையகப்படுத்துபவரின் கட்டுப்பாடற்ற ஆர்வத்தை நியாயமான பெறுமதியில் அளவிடுவதா அல்லது கையகப்படுத்துபவரின் அடையாளம் காணக்கூடிய நிகர சொத்துகளின் விகிதாசார பங்கை அளவிடுவதா என்பதை குழுமம்தெரிவு செய்கின்றது. கையகப்படுத்தல் தொடர்பான கிரயங்கள்இடம்பெற்ற செலவுகளாகக் கருதப்பட்டு நிர்வாக செலவுகளில் உள்ளடக்கப்படுகின்றன.

குழுமம் ஒரு வணிகத்தை கையகப்படுத்தும்போது, பொருத்தமான வகைப்படுத்தல் எடுகோள்களைப் பயன்படுத்தி நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களாக அது மதிப்பிடப்படுவதுடன், கையகப்படுத்தல் தேதியின்படியான ஒப்பந்த விதிமுறைகள், பொருளாதார சூழ்நிலைகள் மற்றும் தொடர்புடைய நிபந்தனைகளுக்கு ஏற்ப அங்கீகரிக்கப்படுகின்றன.

மாற்றப்பட்ட விடயங்களானது கையகப்படுத்தியதேறிய அடையாளம் காணக்கூடிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மீதான கட்டுப்படுத்தப்படாத ஆர்வத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட தொகையினது மொத்தத்தை விட அதிகமாக காணப்படுமாயின் அந்த நன்மதிப்பானது ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றது. இந்த கையகப்படுத்தப்பட்ட தேறிய சொத்துகளின் நியாயமான பெறுமதியானது மாற்றப்பட்ட ஒட்டுமொத்த விடயங்களின் பெறுமதியைக் காட்டிலும் அதிகமாக இருந்தால்,அந்த ஆதாயம் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

கையகப்படுத்தப்பட்ட தேறிய சொத்துகளின் நியாயமான பெறுமதி மாற்றப்பட்ட மொத்த பெறுமதியைக் காட்டிலும் அதிகமாக இருந்தால், குழுமம் அனைத்து சொத்துகளையும் சரியாக அடையாளம் கண்டுள்ளதா மற்றும் அனைத்து பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டுள்ளதா என்பதை மறுபரிசீலனை செய்து,கையகப்படுத்தல் தேதியில் அங்கீகரிக்கப்பதற்காக தொகைகளை அளவிடுவதற்குப் பயன்படுத்திய நடைமுறையை மீளாய்வு செய்கின்றது. மறுபரிசீலனைப் பெறுமதியானது இதுவரை மாற்றப்பட்ட ஒட்டுமொத்த விடயங்களின் மீது பெறப்பட்ட நிகர சொத்துக்களின் நியாயமான பெறுமதியைக் காட்டிலும் அதிகமாக இருந்தால்,அந்த ஆதாயம் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

ஆரம்ப அங்கீகாரத்திற்குப் பின்னர்,நன்மதிப்பானது ஏதேனும் திரட்டப்பட்ட நட்ட இழப்புகள் இருப்பின் அவை கழிக்கப்பட்டு அளவிடப்படுகிறது. நட்ட இழப்பு பரிசோதனை நோக்கத்திற்காக, ஒரு வணிகச் சேர்க்கையின் போது கையேற்கப்பட்ட நன்மதிப்பானது, கையகப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து,இந்தச் சேர்க்கையினால் பயனடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற குழுமத்தின் ஒவ்வொரு காசு உருவாக்கும் அலகுகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. கையகப்படுத்துபவரின் ஏனைய சொத்துக்கள் அல்லது பொறுப்புகள் எதுவாக இருந்தாலும் அந்த அலகுகளுக்கே ஒதுக்கப்படுகின்றன.

காசு உருவாக்கும் அலகுகளுக்கு நன்மதிப்பு ஒதுக்கப்பட்டு, அந்த அலகுக்கு உட்பட்ட செயற்பாட்டின் ஒரு பகுதி கைதவிர்க்கப்பட்டால், கைதவிர்க்கப்பட்ட இலாபம் அல்லது நட்டத்தை நிர்ணயிக்கும் போது கைதவிர்ப்புச் செயற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட நன்மதிப்பானது செயற்பாட்டின் முன்கொண்டு செல் தொகையில் உள்ளடக்கப்படுகின்றது. இந்தச் சூழ்நிலையில் கைதவிர்க்கப்பட்ட நன்மதிப்பானது கைதவிர்க்கப்பட்ட செயற்பாட்டின் ஒப்பீட்டு பெறுமதிகள் மற்றும் காசு உருவாக்கும் அலகு வைத்திருந்த பகுதியின் அடிப்படையில் அளவிடப்படுகிறது.

### 2.6.3 கூட்டுத்தொழில் முயற்சியில் முதலீடு

கூட்டுத்தொழில் முயற்சி என்பது கூட்டாக ஒழுங்குபடுத்தும் கட்டுப்பாட்டினைக் கொண்டுள்ள தரப்பினர்களின் கூட்டுத்தொழில் முயற்சிக்கான தேறிய சொத்துக்களை வைத்துள்ள ஒரு கூட்டு ஒழுங்குமுறையாகும். கூட்டுக் கட்டுப்பாடென்பது ஏற்பாடொன்றின் கட்டுப்பாட்டினை பங்கிடுவதற்கான ஒப்பந்தரீதியான இணக்கப்பாடாகும். தொடர்புடைய செயற்பாட்டுகளின் தீர்மானத்தின் போது கட்டுப்பாட்டினை பங்கிடும் தரப்பினர்களின் கருத்து தேவையாயிருப்பின் மாத்திரம் இவ்விணக்கப்பாடு காணப்படும். திருகோணமலை பவர் கம்பனி லிமிட்ட் ஆனது இலங்கை மின்சார சபைக்கும் வேஹீஊ லிமிட்ட் இற்கும் இடையே கூட்டாக கட்டுப்படுத்தப்படுகின்றதோர் நிறுவகமாகும். கூட்டுக் கட்டுப்பாட்டினை நிச்சயிப்பதில் மேற்கொள்ளப்பட்ட கருதுகோள்கள் துணைக் கம்பனிகளின் மீதான கட்டுப்பாட்டினை நிச்சயிப்பதற்கு தேவையானவற்றை ஒத்திருந்தன.

அதன் கூட்டுத்தொழில்முயற்சி மீதான சபையினது முதலீடு, உரிமைத்துவ முறையினைப் பயன்படுத்தி கணக்கீடு செய்யப்படுகின்றது. உரிமைத்துவ முறையின் கீழ், கூட்டுத்தொழில் முயற்சி ஒன்றின் மீதான முதலீடு, ஆரம்பத்தில் கிரயத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. முதலீட்டின் முன்கொண்டுசெல் தொகை,கையேற்கப்பட்ட திகதியிருந்து கூட்டுத்தொழில்முயற்சியினது தேறிய சொத்துக்களில் சபையின் பங்கில் மாற்றங்களை அங்கீகரிப்பதற்காக சீராக்கப்படுகின்றது. கூட்டுத்தொழில் முயற்சியுடன் தொடர்புடைய நன்மதிப்பு, முதலீட்டின் முன்கொண்டு சென்ற தொகையில் உள்ளடக்கப்படுவதுடன் அது தனிப்பட்ட ரீதியில் காலத்தேய்மானத்திற்காக சோதிக்கப்படுவதில்லை. இலாபம் அல்லது நட்டக் கூற்று, கூட்டுத் தொழில் முயற்சியினது செயற்பாட்டு விளைவுகளின் சபையின் பங்கைப் பிரதிபலிக்கின்றது. முதலீடு மேற்கொள்ளப்படவரின் OIC இலான ஏதேனும் மாற்றம் சபையினது OIC இன் பகுதியாக முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

அத்துடன், மாற்றமொன்று நேரடியாக கூட்டுத்தொழில் முயற்சியினது உரிமைத்துவத்தில்

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

அங்கீகரிக்கப்பட்டிருக்கையில், அது பிரயோகிக்கத்தக்கதாக இருப்பின் எந்தவொரு மாற்றத்தினையும் உரிமைத்துவ மாற்றக் கூற்றிலுள்ள அதனது பங்கில் சபை அங்கீகரிக்கின்றது. சபைக்கும் கூட்டுத் தொழில் முயறிச்சிக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான தேறப்படாத ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள், கூட்டுத்தொழில் முயற்சியின் ஆர்வத்திலிருந்து நீக்கப்படுகின்றது. கூட்டுத்தொழில் முயற்சியொன்றின் இலாபம் அல்லது நட்டத்தில் சபைக்குரிய மொத்தப் பங்கானது இலாபம் அல்லது நட்டக் கூற்றின் முகப்பில் செயற்பாட்டு இலாபமல்லாது காண்பிக்கப்படுவதுடன் வரிக்குப் பிந்திய இலாபம் அல்லது நட்டத்திலும் கூட்டுத்தொழில் முயற்சியின் மீதான கட்டுப்பாடற்ற ஆர்வங்களிலும் பிரிதிபலிக்கின்றது.

### 2.6.4 அந்நியச் செலாவணிபரிவர்த்தனை,அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகள்

#### அ). தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்

குழுமத்தின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமான இலங்கை ரூபா (ரூபா) இல் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

#### ஆ). கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகள்

அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலவும் நாணயமாற்று விகிதங்களை உபயோகித்து சபை பதிவு செய்யும.அறிக்கையிடப்படும் திகதியிலுள்ள வெளிநாட்டு நாணயங்களில் எடுத்துரைக்கப்பட்ட நிதிசார்ந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன அத்தகைய திகதியில் செயல்வலுப்பெறும் அதேவிடத்து நாணயமாற்று வீதத்தைப் பயன்படுத்தி புழக்கத்திலுள்ள இலங்கை ரூபாவுக்கு பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளன. வர்த்தகம் சாராத செயற்பாடுகளிலிருந்து எழுகின்ற சகல வித்தியாசங்களும் இலாப அல்லது நட்டத்திற்கு எடுக்கப்படுகின்றன.

அந்நியச் செலாவணியொன்றில் வரலாற்றுக் கிரயத்தின் அடிப்படையில் அளவிடப்படுகின்ற நிதி சாராத விடயங்கள் ஆரம்ப கொடுக்கல் வாங்கல் தேதிகளில் நிலவிய நாணயமாற்று விகிதங்களைப் பயன்படுத்தி பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. நிதி சாராத விடயங்களின் பரிவர்த்தனையால் ஏற்படுகின்ற இலாபம் அல்லது நட்டமானது பரிவர்த்தனை வேறுபாட்டிற்கு வழிவகுத்த விடயத்தின் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஏற்ப அங்கீகரிக்கப்படுகிறது. (ஏனைய விரிவான வருமானத்தில் அல்லது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் இலாபம் அல்லது நட்டமாக அங்கீகரிக்கப்படுகின்ற விடயங்களின் பரிவர்த்தனை வேறுபாடுகளும் கூட முறையே ஏனைய விரிவான வருமானத்தில் அல்லது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன).

1969 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் 42 ஆம் பிரிவின் 6 ஆம் உபபிரிவுக்கு அமைவாக அந்நியச் செலாவணிக் கடன் மற்றும் வட்டி தொடர்பில் நாணயமாற்று ஏற்றத் தாழ்வுகளினால் ஏற்படும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் இலங்கை அரசாங்கத்திற்கு உரியதாகையினால் இலங்கை மின்சார சபை அவற்றை கருத்திற் கொள்வதில்லை. சென்மதியாகவுள்ள கடன் நிலுவைகள் சபை யினால் கடன் பெறப்பட்டபோது இணங்கப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் மதிப்பிடப்பட்டுள்ளன.

#### இ). வெளிநாட்டுச் செயற்பாடுகள்

வெளிநாட்டுச் செயற்பாடுகள் எனக் கருதப்படுகின்ற வெளிநாட்டு துணைக் கம்பனிகளினதும் கூட்டுத் தொழில் முயற்சிகளினதும் நிதி நிலைமைக் கூற்று மற்றும் வருமானக் கூற்று என்பன முறையே அறிக்கையிடல் தேதியில் நிலவுகின்ற மற்றும் சராசரி வருடாந்த நாணயமாற்று விகிதத்தில்இலங்கை ரூபாய்க்கு பரிவர்த்தனை செய்யப்படுகின்றன.

பரிவர்த்தனையில் எழுகின்ற நாணயமாற்று வேறுபாடுகள் நேரடியாக ஏனைய விரிவான வருமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஒரு வெளிநாட்டு நிறுவனத்தை கைதவிர்க்கும்போது,குறிப்பிட்ட அந்த வெளிநாட்டு செயற்பாட்டுடன் தொடர்புடைய ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட பிற்போட்ட ஒட்டுமொத்த தொகையானது வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.6.5 வரிகள்

இக்காலப்பகுதிக்கான வரிச் செலவுகள் நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரிகளை கொண்டுள்ளன.பிற முற்றுமடங்கிய வருமானமாக அங்கீகரித்த வருமான அல்லது செலவு உருப்படியொன்று தொடர்புபட்ட மாற்றங்கள் நேரடியாக பிற முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிப்புச இலாபம் அல்லது நட்டம் , வரிகள் முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

#### அ). நடப்பு வரிகள

இக்காலப்பகுதிக்கான வரிச் செலவுகள் நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரிகளை கொண்டுள்ளன. மீளாய்வுகளுள் மற்றும் முன்னய காலப்பகுதிக்கான தற்போதைய வருமானவரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்து அறவிட அல்லது அவருக்கு செலுத்தவேண்டிய தொகைகளில் மதிப்பிடப்பட்டுள்ளது. தொகைகளை கணிக்க உபயோகித்த வரி விகிதங்களும் வரிச் சட்டங்களும் கம்பனி தொழிற்பட்டு வரிவிதி வருமானத்தை பிறப்பிக்கும் நாட்டில் அறிக்கையிடற் திகதியில் சட்டமாக்கியுள்ள அல்லது கிட்டத்தட்ட சட்டமாக்கிய சட்டங்களின் அடிப்படையில் அமைந்தவையாகும். உரிமைத்துவத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய நடப்பு வருமான வரி உரிமைத்துவத்தில் அங்கிகரிக்கப்படுகின்றதேயன்றி வருமானக் கூற்றுக்களில் அல்லை.

வருமான வரிக்கான ஏற்பாடானது வரி நோக்கத்திற்காக சீராக்கப்பட்டவாறு, 2018 ஏப்ரல் 01 முதல் அமுலாகும் வகையில், 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது.

#### ஆ). பிற்போடப்பட்ட வரி

பிற்போடப்பட்ட வருமானவரிப் பொறுப்புக்கள்,வனிக இணைப்பாக அமையாத கொடுக்கல் வாங்கலொன்றில் அது கணக்கீட்டு இலாபத்தை அல்லது வரிவிதி இலாப நட்டத்தை பாதிக்காதபோது, சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் ஆரம்ப அங்கீகரிப்பின் போது ஏற்படும் பிற்போட்ட வருமான வரிப் பொறுப்பு நீங்கலாக சகல தற்காலிக வரிவிதி வித்தியாசங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

வனிக இணைப்பாக இல்லாததும் அது கணக்கீட்டு இலாபத்தை அல்லது வரிவிதி இலாப நட்டத்தை பாதிக்காததுமான கொடுக்கல் வாங்கலில் சொத்து அல்லது பொறுப்பின் ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து ஏற்படாத வரை

(i) பயன்படுத்தாத வரிச் சொத்துகள் மற்றும் பயன்படுத்தாத வரி நட்டங்களின் முன்கொணரற் தொகைகளுக்கு, கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்கள், பயன்படுத்தாத வரிச் சொத்துகள்

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

மற்றும் பயன்படுத்தாத வரி நட்டங்களின் முன்கொணரற் தொகைகளை பயன்படுத்த வரி விதி இலாபம் கிடைப்பது சாத்தியமான அளவுக்கு, சகல கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்கள், பயன்படுத்தாத வரிச் சொத்துகள் மற்றும் பயன்படுத்தாத வரி நட்டங்களின் முன்கொணரற் தொகைகளுக்கு பிற்போட்ட வருமானவரிச் சொத்து அங்கீகரிக்கப்படும்.

(ii) துணைக் கம்பனிகளில், கூட்டுக் கம்பனிகளில் முதலீடுகள் மற்றும் கூட்டுத் தொழில்முயற்சிகளில் நாட்டங்கள் தொடர்புபட்ட வரிவிதிப்புக்கு உள்ளாகும் தற்காலிக வித்தியாசங்களைப் பொறுத்தமட்டில், தற்காலிக வித்தியாசத்தின் எதிர்ப்பதிவுக்கான கால அட்டவணையினை கட்டுப்படுத்தக்கூடியவை தவிர்ந்து, மற்றும் அது சாத்தியமானபோது, தற்காலிக வித்தியாசங்கள் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் எதிர்ப்பதிவு செய்யப்படமாட்டாது.

வனிக இணைப்பாக இல்லாததும் அது கணக்கீட்டு இலாபத்தை அல்லது வரிவிதி இலாப நட்டத்தை பாதிக்காததுமான கொடுக்கல் வாங்கலில் சொத்து அல்லது பொறுப்பின் ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து ஏற்படாத வரை

(i) பயன்படுத்தாத வரிச் சொத்துகள் மற்றும் பயன்படுத்தாத வரி நட்டங்களின் முன்கொணரற் தொகைகளுக்கு, கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்கள், பயன்படுத்தாத வரிச் சொத்துகள் மற்றும் பயன்படுத்தாத வரி நட்டங்களின் முன்கொணரற் தொகைகளை பயன்படுத்த வரி விதி இலாபம் கிடைப்பது சாத்தியமான அளவுக்கு, சகல கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்கள், பயன்படுத்தாத வரிச் சொத்துகள் மற்றும் பயன்படுத்தாத வரி நட்டங்களின் முன்கொணரற் தொகைகளுக்கு பிற்போட்ட வருமானவரிச் சொத்து அங்கீகரிக்கப்படும்.

(ii) துணைக் கம்பனிகளில், கூட்டுக் கம்பனிகளில் முதலீடுகள் மற்றும் கூட்டுத் தொழில்முயற்சிகளில் நாட்டங்கள் தொடர்புபட்ட கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்களைப் பொறுத்தமட்டில் பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்கள், தற்காலிக வித்தியாசங்களை பயன்படுத்துவதற்கு வரிவிதி இலாபங்கள் கிடைத்து, எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் அது எதிர்ப்பதிவு செய்யக்கூடிய அளவுக்கு மாத்திரம் அங்கீகரிக்கப்படும்.

பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்களின் முன் கொணரப்படும் தொகையானது அறிக்கையிடப்படும் ஒவ்வொரு திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு,பயன்படுத்தப்படும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களை அல்லது அவற்றின் பாகத்தை அனுமதிக்கும் வகையில் கிடைக்கக்கூடிய போதிய வரிவிதிக்கத்தகு இலாபம் இல்லையென்ற அளவுக்கு குறைக்கப்படுகின்றது.

அங்கீகரிக்கப்படாத பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீள மதிப்பிடப்பட்டு,பிற்போட்ட வரி சொத்துக்களை மீட்பதற்கு அனுமதிக்கும் சாத்தியமான எதிர்கால வரிவிதிக்கத்தக்க இலாபங்களிற்கு அங்கீகரிக்கப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன அறிக்கையிடப்படும் திகதியிலுள்ளவாறு சட்டமாக்கப்பட்ட அல்லது அதன்பின்னர் சட்டமாக்கப்பட்டுள்ள வரி வீதங்களின் (வரிசார்ந்த சட்டங்கள்) அடிப்படையில் சொத்து மாற்றப்படுகின்ற அல்லது பொறுப்பு தீர்ப்பனவு செய்யப்படுகின்ற போதுள்ள ஆண்டிற்கு ஏற்புடையதாக்கிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் வரிவீதங்களில் அளவிடப்படுகின்றன.

இலாபம் அல்லது நட்டக் கூற்றுக்கு வெளியே அங்கீகரிக்கப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய பிற்போட்ட வரியானதுஇலாபம் அல்லது நட்டக் கூற்றுக்கு வெளியே அங்கீகரிக்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய பிற்போட்ட வரி ஏனைய முழுமையான வருமானத்தில் அல்லது நேரடியாக உரிமைத்துவத்தில் காணப்படும் முக்கியமான கொடுக்கல்வாங்கல் தொடர்பில் அங்கீகரிக்கப்படுகின்றது.

பிற்போடப்பட்ட அந்த வரிகள் அதே வரிவிதிக்கத்தகு நிறுவனத்துடனும் மற்றும் அதே வரிவிதிப்பு அதிகாரத்துடனும் சம்பந்தப்படும் பட்சத்தில் நடைமுறை வரிப்பொறுப்புக்களுக்கு எதிரான நடைமுறை வரிச் சொத்துக்களை சமப்படுத்துவதற்கு சட்ட ரீதியில் நடைமுறைப்படுத்தக்கூடிய உரிமை இருந்தால், பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் மற்றும் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுகின்றன.

### பங்கிலாப வருமானம் மீதான வரி

துணைக் கம்பனிகளிடமிருந்து பெறப்படும் பங்கிலாப வருமானம் மீதான வரி,இலாபம் அல்லது நட்டக் கூற்றில் செலவொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றது.

### விற்பனைகள் வரி

பின்வரும் சந்தர்ப்பங்களைத் தவிர்த்துவருமானம், செலவினம் மற்றும் சொத்து விற்பனை வரிகள் அவற்றின் தேறிய தொகையில் அங்கீகரிக்கப்படுகின்றன:

- சொத்தை அல்லது சேவையினை கொள்வனவு செய்கையில் ஏற்படுகின்ற விற்பனை வரி விதித்தல்களை அதிகாரத்தரப்பிடமிருந்து வசூலிக்க முடியாதுள்ள சந்தர்ப்பத்தில்,விற்பனை வரியானதுபொருந்துகின்றவாறு ஒன்றில் சொத்தின் கொள்வனவுக் கிரயத்தில் ஒரு பகுதியாக அல்லது குறித்த உருப்படிச் செலவின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப்படுகையில்;
- விற்பனை வரித் தொகையினை உள்ளடக்கி குறிப்பிடப்படும் பெறவேண்டியவை மற்றும் செலுத்த வேண்டியவை காணப்படுகையில்;

வசூலிக்கக்கூடிய விற்பனை வரி மற்றும் அதிகாரிகளிற்கு செலுத்த வேண்டிய தொகை என்பன நிதி நிலைமைக் கூற்றின் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டியவற்றின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படுகையில்;

## 2.6.6 இருப்புக்கள்

இருப்புக்கள் வழக்கிழந்த மற்றும் குறைவாக அசைவுருகின்ற விடயங்களுக்கு ஏற்பாடாகவுள்ள கொடுப்பனவுகளின் பின்னர் இருப்புக்காக உரிய கிரயம் மற்றும் நிகர தேறுகைப் பெறுமதியில் குறைந்த பெறுமதியில் அளவிடப்படும். நிகர தேறுகைப் பெறுமதி வழமையான வியாபாரத்தின்போது விற்கக்கூடிய பெறுமதியிலிருந்து பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கும் கிரயம் மற்றும் விற்பனை செய்வதற்கு அவசியமான கிரயங்களை கழிக்க வரும் தொகையாகும். இருப்புக்கள் தற்போதைய அமைவிடம் மற்றும் நிலைக்கு கொண்டுவருவதற்கு இறுக்கப்படும் கிரயங்களில் கீழ்வருமாறு கணக்கிடப்படும்.

### இலங்கை மின்சார சபை

அனேகமாக உபயோகிக்கப்படுகின்ற மற்றும் வருடாந்த விலைப் பட்டியலில் நிரற்படுத்தப்படும் தொக்குகள் நியம விலைகளிலும் நுகர்வுப்பண்டம் மற்றும் உதிரிப் பாகங்கள்

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

போன்ற ஏனைய தொக்குகள் கிரயம் மற்றும் நிகர தேறுகைப் பெறுமதியில் குறைந்த பெறுமதியிலும் அளவிடப்படும்.

எனினும், இ.மி.ச. நியம விலைகளில் மதிப்பிடப்பட்ட தொக்குகளை கிரயப் பெறுமதிக்கு குறைப்பதற்கு ஏதுவாக தேறாத இலாபங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

| | |
|---|---|
| **வரையறுக்கப்பட்டலங்கா மின்சார (தனி) கம்பனி** | |
| தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பொருட்கள் | - நிறையளித்த சராசரி அடிப்படையின் மீது உண்மைக் கிரயத்தில் |
| வழிச்சரக்குகளும் ஏனையவையும | - உண்மைக் கிரயத்தில் |
| மூலப் பொருட்கள் | - நிறையளித்த சராசரி அடிப்படையின் மீது உண்மைக் கிரயத்தில் |
| முடிவுப் பொருட்கள் மற்றும் முடிவுறா வேலைகள் | - சாதாரண நிலமைகளில் பொருளை உற்பத்தி செய்வதற்கு ஏற்படுகின்ற நேர் பொருள், நேர் கூலி மற்றும் நிலையான உற்பத்தி மேந்தலையின் பொருத்தமான பகிர்வின் அடிப்படையில். |
| **வரையறுக்கப்பட்ட LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி** | |
| மூலப் பொருட்கள் | - முதல்-உள்-முதல் வெளி அடிப்படையில் உண்மைக் கிரயத்தில்.எ முடிவுப் பொருட்களும் |
| முடிவுறா வேலையும் | - நேர் பொருள், நேர் கூலி மற்றும் நிலையான உற்பத்தி மேந்தலையின் பொருத்தமான பகிர்வின் அடிப்படையில். நுகர்வுப் பொருட்களும் |
| உதிரிப் பாகங்களும் | - முதல்-உள்-முதல் வெளி அடிப்படையில் உண்மைக் கிரயத்தில் |
| வழிச்சரக்குகள் | - உண்மைக் கிரயத்தில |

## 2.6.7 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

### அ) இனங்காணல் அடிப்படை

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் அநேகமாக குழுவுக்கு கிடைக்கும் என்றிருந்தால் மற்றும் அதன் கிரயம் நம்பத்தகுந்தளவில் அளவிடப்பட முடியும் என்றிருந்தால் அவை இனங்காணப்படுகின்றன.

### ஆ) அளவிடுதல் அடிப்படை

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத் தேய்மானம் மற்றும் திரண்ட சேத இழப்பு ஏதுமிருப்பின் அவற்றை கழித்த தொகையில் காட்டப்பட்டுள்ளன. அத்தகைய கிரயம் பிரதியீட்டுக் கூறுகளின் கிரயம், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உதிரிப் பாகங்களின் கிரயம் மற்றும் தேர்வு நிபந்தனைகள் திருப்தி செய்யப்படும் பட்சத்தில், நீண்டகால நிர்மான செயற்திட்டங்களின் கடன் படுகைக் கிரயம் ஆகியவற்றை உள்ளடக்கும். குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தடவை ஆதனம், பொறி மற்றும் உபகரண கணிசமான பகுதிகள் பிரதியீடு செய்ய வேண்டியிருப்பின், குழுமம் பிரதியீடு செய்யும் பகுதியின் நிகர ஏட்டுப் பெறுமதியை அங்கீகரிக்காதிருப்பதுடன், புதிய பகுதியை அதன் தொடர்புடைய பயன்தரு ஆயுட்காலம் மற்றும் பெறுமானத் தேய்மானம் ஆகியவற்றின் அடிப்படையில் அங்கீகரிக்கும். அவ்வாறே, பாரிய பரீட்சிப்பு மேற்கொள்ளப்படும் போது அதன் கிரயம், அங்கீகரிப்பு நிபந்தனைகளை திருப்தி செய்தால் ஆதனம், பொறி மற்றும் உபகரண முன்கொணரற் தொகையில் அங்கீகரிக்கப்படும். ஏற்பட்ட ஏனைய அனைத்து திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு கிரயங்களும் இலாபம் அல்லது நட்டக் கூற்றுக்கு சாட்டப்படுகின்றது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் முன்கொண்டு செல்லும் பெறுமதிகள் தேறாதிருப்பதற்கான நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளில் மாற்றங்கள் காணப்படுகையில் அந்த முன்கொண்டு செல்லும் பெறுமதிகள் நட்டக்கழிவுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன.

### அ) மூலதன முடிவுறா வேலை

தொடர்பாக ஏற்பட்ட மூலதனச் செலவுகள் மூலதன முடிவுறா வேலைகளாகக் காட்டப்பட்டு கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றது. அவை பூரணப்படுத்தப்பட்டவுடன், தொடர்புடைய சொத்துக்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு மாற்றப்படுகின்றன.

### ஆ) இனங்காணாதிருத்தல்

ஒரு ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதியானது அதன் அகற்றலின் அல்லது அந்தச்சொத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகள் ஏதுமில்லை என்பதன் பேரில் இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றது. ஒருசொத்தின் இனங்காணாது விட்டு விடுவதிலிருந்து எழும் இலாபம் அல்லது நட்டம் (தேறிய அகற்றுல் பெறுமதிக்கும் சொத்தின் முன்கொண்டு செல்லும் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாக கணக்கிடப்படுகிறது) அத்தகைய சொத்து இனங்காணாது விட்டுவிடப்படும் போது இலாப அல்லது நட்டக் கணக்கில் உள்ளடக்கப்படுகின்றது.

### இ) பெறுமானத்தேய்வு

குறித்த சொத்துக்களின்மதிப்பிடப்பட்ட பயனுள்ள பொருளாதார பாவனை காலத்திற்கு பொருத்தமான காலப்பகு முழுவதற்கும் பதிவழிக்கக்கூடிய விதத்தில், நேர்கோட்டு அடிப்படையினைப் பயன்படுத்தி ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படுகின்றது. இறையில்காணிகள் தொடர்பில் தேய்மான ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதில்லை.குறிப்பு 2.6.7 இல் விபரிக்கப்பட்டவாறுஒரு சொத்தின் தேய்மானம் அந்தச் சொத்து விற்பனைக்கென வகைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்படும் திகதிற்கு அல்லது அந்தச் சொத்து இனங்காணாது விட்டுவிடப்படும் திகதிற்கு முன்னரே நீங்கிவிடும்.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள பாவனை காலம் கீழே தரப்பட்டுள்ளது.

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

**இலங்கை மின்சார சபை**

| | |
|---|---|
| இறையிலி கட்டடம் மற்றும் குத்தகைக் காணி மற்றும் கட்டடங்கள் | 40 ஆண்டுகள் |
| **சிவில் வேலைகள்:** | |
| வழிந்தோடும் கான்கள் மற்றும் அணைக்கட்டுகள் | 100 ஆண்டுகள் |
| உருக்கு நீர்க்குழாய்கள் மற்றும் அது சார்ந்த தொக்குகள | 40 ஆண்டுகள் |
| உபநிலையமும் ஆளித்தொகுதியும் | 35 ஆண்டுகள் |
| **மின் பிறப்பாக்க பொறிகள்:** | |
| பொறிஉட்பட்டசக்திவலு நிலையங்கள் (நீர்மின்) | 35 ஆண்டுகள் |
| பொறி உட்பட்ட மின் நிலையங்கள் (அனல்மின்) | 25 ஆண்டுகள் |
| பொறி உட்பட்ட மின் நிலையங்கள் (டீசல்) | 12-15 ஆண்டுகள் |
| பொறி உட்பட்ட மின் நிலையங்கள் (வாயுஅமுக்கி) | 12 ஆண்டுகள் |
| பொறி உட்பட்ட மின் நிலையங்கள் (நிலக்கறி) | 30 ஆண்டுகள் |
| பொறி உட்பட்ட மின் நிலையங்கள் (காற்று) | 15 ஆண்டுகள் |
| **மின்கடத்தி கம்பி வழிகள்:** | |
| 220kv,132kv மற்றும் 66kv | 35 ஆண்டுகள் |

**வினியோகக் கம்பி வழிகள்:**

| | |
|---|---|
| HT நிலக்கீழ் - 33 kv | 50 ஆண்டுகள் |
| HT நிலக்கீழ் - 132 kv | 50 ஆண்டுகள் |
| HT நிலக்கீழ் - 11 kv | 40 ஆண்டுகள் |
| HT தலைக்கு மேலாகவுள்ள வழிகள் | 35 ஆண்டுகள் |
| LT நிலக்கீழ் | 40 ஆண்டுகள் |
| LT தலைக்கு மேலாகவுள்ள வழிகள் | 35 ஆண்டுகள் |
| LT ஊட்டும் தூண்கள் | 35 ஆண்டுகள் |

| | |
|---|---|
| நுகர்வோர் உபமின் நிலையம் | 35 ஆண்டுகள் |
| HT ஆளித்தொகுதி | 35 ஆண்டுகள் |
| முதன்மை, கட்டக உபமின் நிலையம் | 35 ஆண்டுகள் |
| பிரதான சேவை வழி | 35 ஆண்டுகள் |
| சேவை வழி - நிலக்கீழ் | 40 ஆண்டுகள் |
| SCADA மத்திய நிலையம் மற்றும் தொடர்பாடல் உபகரணம் | 15 ஆண்டுகள் |
| வாகனங்கள் | 07 ஆண்டுகள் |
| மோட்டார் படகுகள் | 07 ஆண்டுகள் |
| இயந்திரங்களும் ஆயுதங்களும் | 05 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணங்கள் | 05 ஆண்டுகள் |
| தளபாட பொருத்துக்கள் | 05 ஆண்டுகள் |
| சூரிய மின்வலு திட்டம் | 10 – 25 ஆண்டுகள் |

**வரையறுக்கப்பட்ட LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி**

| | |
|---|---|
| கட்டடங்கள் | 25-50 ஆண்டுகள் |
| பொறி மற்றும் இயந்திரம் | 8-20 ஆண்டுகள் |
| மின்சாரப் பொறி | 10–20 ஆண்டுகள் |
| தொழிற்சாலை உபகரணம் | 10 ஆண்டுகள் |
| அகத் தொடர்பாடல் உபகரணம் | 10 ஆண்டுகள் |
| தீயணைப்பு உபகரணம் | 10 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | 03-10 ஆண்டுகள் |
| தளபாடமும் பொருத்துக்களும் | 03-10 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 04 ஆண்டுகள் |
| தொழிற்பாட்டு, பராமரிப்பு உதிரிப்பாகங்கள் | உள்ளபடியான பாவனை |
| சூரிய மின்சாரPV பொறி | 15 ஆண்டுகளிற்கு மேல் |

**வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனி) கம்பனி.**

| | |
|---|---|
| கட்டடங்கள் | 40 ஆண்டுகள் |
| உட்கட்டமைப்பு வழங்குதல்: | |
| உள்ளூராட்சி அதிகார சபைகள் மற்றும் ஊடூடீ இடமிருந்துபெற்றுக்கொண்ட உப மின் நிலையங்கள், தலைக்கு மேலான கம்பி வழிகள் மற்றும் சேவைக் கம்பி வழிகள் | 10 ஆண்டுகள் |
| LECO நிருமானித்த உப மின் நிலையங்கள், தலைக்கு மேலான கம்பி வழிகள் மற்றும் | 20 – 25 ஆண்டுகள் |
| சேவைக் கம்பி வழிகள் | 05–07 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 03– 05 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | 03– 07 ஆண்டுகள் |
| பொறியும் இயந்திரமும் | 03– 04 ஆண்டுகள் |

**வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி (தனி) கம்பனி**

| | |
|---|---|
| தளபாட, இணைப்புக்கள் | 5 ஆண்டுகள் |
| உபகரணங்கள் | 4 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 4 ஆண்டுகள் |
| கணனிகள் | 4 ஆண்டுகள் |
| குத்தகையிலுள்ள மேம்படுத்தல்கள் | 2 ஆண்டுகள் |
| வலைதள முறைமை | 2 ஆண்டுகள் |

**ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் (பிரைவட்) லிமிடட்**

| | |
|---|---|
| பொறி மற்றும் இயந்திரம் | 5 ஆண்டுகள் |
| தளபாடம், உபகரணம் மற்றும் கருவிகள் | 3 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 5 ஆண்டுகள் |

**வரையறுக்கப்பட்ட திருகோணமலை பவர் கம்பனி**

| | |
|---|---|
| தளபாட, இணைப்புக்கள் | 5 ஆண்டுகள் |
| உபகரணம் | 5 ஆண்டுகள் |
| மடி கணனி மற்றும் கணனிகள் | 3 ஆண்டுகள் |

இறுதி அறிக்கையிடல் தேதியிலிருந்து குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கான அறிகுறிகள் காணப்பட்டு, அது பொருத்தமானதாக இருந்தால் சொத்துகளின் எஞ்சிய பெறுமதிகள், பயனுள்ள வாழ்க்கை காலம் மற்றும் தேய்மான முறைகள் ஆகியவை மீளாய்வு செய்யப்பட்டு,அதற்கேற்ப சீராக்கப்படுகின்றன.

### (க) டன்பெறுதல் கிரயங்கள்

கடன்பெறுகை கிரயங்கள் நிதி பெறுவது தொடர்பில் சபை செலுத்தும் வட்டி மற்றும் கிரயங்களை கொண்டிருக்கும். எதிர்பார்க்கப்பட்ட உபயோகம் அல்லது விற்பனைக்கு தயாராக்க கணிசமான காலம் தேவைப்படும் சொத்துக்களான தகைமை பெறும் சொத்துக்களின் கொள்வனவு, நிருமானம் அல்லது உற்பத்தியுடன் தொடர்புபட்ட பொதுவான மற்றும் குறிப்பான கடன்படுகைக் கிரயங்கள் அந்தச் சொத்துக்களில் எதிர்பார்க்கப்பட்ட உபயோகம் அல்லது விற்பனைக்காக கணிசமான அளவில் தயார்படுத்தப்படும் வரையில் அந்தச் சொத்துக்களின் கிரயத்துடன் கூட்டப்படும். ஏனைய சகல கடன்படுகைக் கிரயங்களும் செலுத்தப்படும் காலத்திலேயே செலவாகக் கொள்ளப்படும்.

தகுதிவாய்ந்த சொத்துக்களுடன் தொடர்புடைய அவற்றின் நிலுவையிலுள்செலவினங்களின் குறிப்பிட்ட கடன்பெறுகைகளின் தற்காலிக முதலீட்டின் மீது உழைக்கப்பட்ட முதலீட்டு வருமானம், மூலதனமாக்கலுக்கு தகுதியான கடன்பெறுதல் கிரயங்களிலிருந்து கழிக்கப்படுகின்றது.

### 2.6.8 விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள நடைமுறையல்லாச் சொத்துக்கள

தொடர்ச்சியான பாவனையின் ஊடாக அன்றிஅடிப்படை ரீதியாக விற்பனை செய்யப்படுவதன் மூலம் முன்கொண்டுசெல் தொகை அறவிடப்படுமாயின் குழுமம் அந்த நடைமுறையல்லாச் சொத்துக்களை விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவை என வகைப்படுத்துகின்றது. அவ்வாறு விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளவையாக வகைப்படுத்திய நடைமுறையல்லாச் சொத்துக்கள்,

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

அவற்றின் முன்கொண்டுசெல் தொகை மற்றும் சந்தைப் பெறுமதியிலிருந்து விற்பனைக்கான கிரயம் கழிக்கப்பட்டுவரும் தொகை ஆகியவற்றில் குறைந்த பெறுமதியில் அளவிடப்படுகின்றது. விற்பனைக்கான கிரயங்கள் எனப்படுபவை, நிதிக் கிரயங்கள் மற்றும் வருமான வரிச் செலவுகளைத் தவிர்த்து, ஒரு சொத்தை அகற்றுவதற்கு நேரடியாக பகிரக்கூடிய கிரயங்களாகும்.

முகாமைத்துவத்தால் (பணிப்பாளர் சபை) வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் மீது விற்பனை மிகவும் சாத்தியமானதாக இருக்கையில் மாத்திரமே விற்பனைக்காக வைத்திருக்கப்படுதலின் வகைப்படுத்தலிற்கான அளவுகோள்கள் கருத்திற்கொள்ளப்படுகின்றன மற்றும் தற்போதுள்ள நிலையில் உடனடியாக விற்பனை செய்வதற்கு காணப்படும் சொத்தாகும்.

விற்பனையை பூரணப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் விற்பனையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் செய்யப்பட வாய்ப்பில்லை என்பதை அல்லது விற்பனைக்கான தீர்மானம் மீளப்பெறப்படும் என்பதைக் குறித்தல் வேண்டும். சொத்துக்களை விற்கும் திட்டத்திற்கு முகாமைத்துவம் கடப்பாடுடையதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் விற்பனைக்காக வகைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடத்திற்குள் விற்பனை பூரணப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வகைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் எதிர்பார்க்கப்படும் விற்பனையை பூரணப்படுத்தும் கடப்பாடு முகாமைத்துவத்துக்கு உள்ளது.

ஆதனம், பொறி மற்றும் உாபரணங்கள் விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்பட்ட பின்னர் அவற்றிற்கான பெறுமானத்தேய்வு செய்தல் நிறுத்தப்படுகின்றது.

விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்திய சொத்துக்களும் பொறுப்புக்களும் நிதி நிலைமைக் கூற்றில் புறம்பான நடைமுறை விடயங்களாக முன்வைக்கப்படுகின்றன.

### அங்கீகரிக்காமை

விற்பனைக்காக வைத்திருக்கப்பட்டுள்ள நடைமுறையல்லா சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட்டவற்றை சபைத் தீர்மானத் திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் கைதவிக்கப்பதற்கு தவறும் பட்சத்தில் அவை மீண்டும் அவற்றின் இடைநிறுத்திய காலப்பகுதிக்கான பெறுமானத்தேய்வுச் சீராக்கத்துடன் சேர்த்து ஆதனம், பொறி உபகரணங்களுக்கு மீள-வகைப்படுத்தப்படும்.

## 2.6.9 நிதிசாராத சொத்துக்களின் கழிவுநட்டம்

ஒரு சொத்துக்கு நட்டம் ஏற்படலாம் என்பதற்கான ஒரு அறிகுறிதென்படுகின்றதா என்பதை அறிந்துகொள்ளும் பொருட்டு, குழு அறிக்கையிடப்படும் ஒவ்வொரு திகதியிலும் மதிப்பீடு செய்யும். சொத்தொன்றின் நட்டக்கழிவு தொடர்பில் ஏதாவதொரு அறிகுறிதென்படுகின்றது எனில்,அச்சொத்தின் முன்கொண்டு செல்லல் பெறுமதி (அல்லது குறித்த சொத்து ஒதுக்கப்பட்டுள்ள காசு ஈட்டும் அலகு (CGU)) நட்டக்கழிவுக்காக பரீட்சிக்கப்படுகின்றது.சொத்தென்றின் மீளப்பெறும் தொகையைக் காட்டிலும் அதன் முன்கொண்டு செல்லும் தொகை அதிகமாக இருப்பின் ஒரு நட்டக்கழிவு இனங்காணப்படுகிறது. திரும்பப் பெறக்கூடிய தொகை ஒரு சொத்தின் (அல்லது CGU இன்) நியாயமான மதிப்பை விட அதிகமாக இருப்பது,சொத்தின் சந்தைப் பெறுமதியிலிருந்து அதனை விற்பதற்கான செலவுகளை மற்றும் பயன்பாட்டிலுள்ள பெறுமதியை கழிப்பதனாலாகும். பயன்பாட்டிலுள்ள பெறுமதியை மதிப்பிடுகையில்,வரிக்கு முந்தைய கழிவு விகிதத்தைப் பயன்படுத்தி, பணத்தின் காலப் பெறுமதி மற்றும் சொத்துக்கான குறிப்பிட்ட அபாயங்களின் தற்போதைய சந்தை மதிப்பீட்டை பிரதிபலிக்கின்ற அவற்றின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசோட்டங்களின் தற்போதைய பெறுமதிக்குகழிவுநீக்கம் செய்யப்படுகின்றன,

நட்டக்கழிவின் மதிப்பீட்டு நோக்கத்திற்காக, சபை முழுவதும் ஒரு தனிப்பட்ட காசு உருவாக்கல் அலகாக கருதப்படுகின்றது.

தொடரும் செயற்பாடுகளின் நட்டக்கழிவு இழப்புகள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஆகையால், சொத்தின் கொணரப்படும் தொகை அதன் மீளறவிடப்பட வேண்டிய தொகையை விஞ்சாது அல்லது நிர்ணயிக்கப்பட்டிருக்கக்கூடும் என்ற அந்தக் கொணரப்படும் தொகையையும் விஞ்சாது. அவ்வாறான நிலையில், சொத்துக்களின் முன்கொண்டு செல்லும் தொகை அதன் மீளப்பெறும் தொகைக்கு அதிகரிக்கப்படும். முன்னைய ஆண்டுகளில் சொத்துகளுக்கு எந்த நட்டக்கழிவு இழப்பும் அங்கீகரிக்கப்பட்டிருக்காவிட்டால்,அந்த அதிகரித்த தொகை நிர்ணயிக்கப்பட்டிருக்கும் முன்கொண்டு செல்லும் தொகையை விட அதிகமாக இருக்க முடியாது. அவ்வாறான மீளவைத்தல்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

## 2.6.10 குத்தகைகள

ஒருஒப்பந்தத்தின் தொடக்கத்தில், அந்த ஒப்பந்தத்தில் அல்லது உள்ளடக்கத்தில் ஒரு குத்தகை உள்ளதா என்பதை சபை மதிப்பிடுகிறது. அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையை ஒரு ஒப்பந்தம் உள்ளடக்கி இருப்பின், அந்த ஒப்பந்தம் என்பது ஒருகுத்தகை ஆகும். அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் உரிமையை ஒரு ஒப்பந்தம் தெரிவிக்கிறதா என்பதை மதிப்பிடுவதற்கு, சபை SLFRS 16 இல் உள்ள குத்தகைக்கான வரைவிலக்கணத்தை பயன்படுத்துகிறது.

### 2.6.10.1 குத்தகைதாரராக குழுமம

குறுங்கால குத்தகைகள் மற்றும் குறைந்த பெறுமதியடைய சொத்துக்களின் குத்தகைகளைத் தவிர, அனைத்து குத்தகைககளுக்கும் ஒற்றை அங்கீகார மற்றும் அளவீட்டு அணுகுமுறையை குழுமம்பிரயோகிக்கின்றது. குத்தகைக் கொடுப்பனவுகளைச் செய்வதற்கான குத்தகைப் பொறுப்புக்களையும் குறித்துரைத்த சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களையும் குழுமம் அங்கீகரிக்கிறது.

### பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள்

குறித்துரைத்த சொத்துக்கள் பயன்படுத்துவதற்காக கிடைக்கும் போது குழுமம் பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களை அங்கீகரிக்கின்றது. ஏதேனும் திரண்ட தேய்மானம் மற்றும் நட்டக்கழிவு இழப்புக்கள் கழிக்கப்பட்டும் குத்தகைப் பொறுப்புக்களின் சீராக்கத்தின் பின்னரும் பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களின் கிரயத்தினுள் அங்கீகரிக்கப்பட்ட குத்தகைப் பொறுப்புத் தொகை, ஏற்பட்ட ஆரம்ப நேரடி கிரயங்கள் மற்றும் குத்தகை தொடக்க திகதியில் பெறப்பட்ட குத்தகை சலுகைகள் கழிக்கப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகள் ஆகியவை உள்ளடங்குகின்றது. குத்தகை காலத்தின் முடிவில், குத்தகைக்கு விடப்பட்ட சொத்தின் உரிமையைப் பெறுவதற்கு சபை நியாயமான உறுதிப்பாட்டை கொண்டிருக்காவிட்டால்,அங்கீகரிக்கப்பட்ட பயன்பாட்டு உரிமை சொத்துகள் அதன் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் அல்லது குத்தகை காலத்திற்கு நேர்கோட்டு அடிப்படையில் பெறுமானத் தேய்விடப்படுகின்றன. பயன்பாட்டு உரிமை சொத்துகள் நட்டக்கழிவுக்கு உட்பட்டவையாகும்.

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

குழுமத்தின் பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் உள்ளடங்கியுள்ளன.

#### குத்தகைப் பொறுப்புக்கள்

குத்தகையின் தொடக்க தேதியில், குத்தகை காலத்தின் மீது செய்யப்பட வேண்டிய குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியில் குத்தகைப் பொறுப்புக்களை குழுமம் அங்கீகரிக்கிறது. குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியை கணிப்பிடுகையில்,குத்தகையில் உள்ளடங்கியுள்ள வட்டி வீதத்தை உடனடியாக நிச்சயிக்க முடியாதிருக்கும் போது சபை குத்தகையின் தொடக்க திகதியிலுள்ள அதிகரிக்கும் கடன் வட்டி விகிதத்தைப் பயன்படுத்துகிறது. குத்தகையின் தொடக்க திகதிக்குப் பின்னர், குத்தகைப் பொறுப்புக்களின் அளவானது வட்டியின்அதிகரிப்பை பிரதிபலிக்கும் வகையில் அதிகரிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகளுக்கு ஏற்ப குறைக்கப்படுகிறது. அத்துடன்குத்தகையில் திருத்தமொன்று, குத்தகைக் காலத்தில் மாற்றமொன்று, நிலையான குத்தகைக் கொடுப்பனவுகளில் மாற்றமொன்று அல்லது குறித்த சொத்தை கொள்வனவு செய்வதற்கான மதிப்பீட்டில் மாற்றமொன்று காணப்பட்டால் குத்தகைப் பொறுப்புக்களின் முன்கொண்டு செல்லும் தொகை மீள அளவிடப்படுகின்றது. குழுமத்தின் குத்தகைப் பொறுப்புக்கள் வட்டியுடன் கூடிய கடன்கள் மற்றும்கடன்பெறுவனவுகளில் உள்ளடங்குகின்றன.

### 2.6.10.2 குத்தகை தருனராக குழுமம் - LTL ஹோல்டிங் (பிரைவட்) லிமிடட்

#### செயற்பாட்டுக் குத்தகை

குழுமம் சொத்துக்களின் உரிமை சம்பந்தமான கிட்டத்தட்ட முழுமையான இடர் மற்றும் பயன்களை மாற்றாத நீர்மின், காற்றாலை மின் மற்றும் அனல் மின் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், சொத்துக்கள் செயற்பாட்டுக்குத்தகையாக வகைப்படுத்தப்படும். சகல மின்வலுப் பொறிகளிலும் இருந்து குத்தகை வருமானமானது, குத்தகைச் சொத்துக்களிலிருந்து பெறப்படும் பயன்களின் காலஅட்டவணை தீர்மானிக்கப்படும் மிகப் பொருத்தமான மின்வலு உற்பத்தி அடிப்படையில்,அங்கீகரிக்கப்படும். குத்தகை வருமானத்தை உழைப்பதில் ஏற்படும் தேய்மானம் உள்ளிட்ட கிரயங்கள் செலவுகளாக அங்கீகரிக்கப்படும். தேய்மானம் செய்யக்கூடிய குத்தகைச் சொத்துக்களுக்கான தேய்மானக் கொள்கை, ஒத்த சொத்துக்களுக்கு குழுமத்தின் தேய்மானக் கொள்கையாகவே இருக்கும

#### நிதிகுத்தகை

ராஜ் லங்கா பவர் கம்பெனி லிமிடெட் மற்றும் பங்களாதேஷ் பவர் டெவலப்மென்ட் சபை மற்றும் லக்தனவி பங்களா பவர் லிமிடெட் மற்றும் பங்களாதேஷ் பவர் டெவலப்மென்ட் சபை ஆகியவற்றுக்கு இடையிலான உடன்படிக்கை ஏற்பாடுகளின் கீழ் "இ.்.ப்ரிக் 4 - இன் படிகுத்தகை ஏற்பாடு ஒன்று உள்ளதா என்பதைத் தீர்மானித்தல்" பின்வரும் அளவுகோல்களின் திருப்திப்படுதல் காரணமாக "SLFRS-16- குத்தகைகள்" இன் கீழ் குத்தகைக்கு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டுமென குழுமம் கருதுகின்றது;

- மின்வலுக் கொள்வனவுஉடன் படிக்கைகளிலுள்ளநிபந்தனைகளைநிறை வேற்றுவதுஎன்பதுபங்களாதேஷில் அமைந்துள்ளகுழுமத்தின் குறிப்பிட்டமின்நிலையத்தின் பிரத்தியேகபயன்பாட்டைப் பொறுத்தது.
- மின் நிலையத்தை இயக்குவதற்கு பங்களாதேஷ் மின்சாரச பைக்கு உரிமை உண்டு அல்லது மின் உற்பத்தி நிலையத்தை இயக்க மற்றவர்களை அச்சபை வழிநடத்தும்.
- பங்களாதேஷ் மின் அபிவிருத்திசபையைத் தவிரவேறுஎந்தக் கட்சியும் நிறுவனத்தின் மின் உற்பத்திநிலையத்தால் உற்பத்திசெய்யப்படும் எந்தவொருஉற்பத்தியையும் எடுப்பதற்குமுடியாதுள்ளதுடன்பங்களாதேஷ் மின் மேம்பாட்டுசபைசெலுத்தும் ஒருயூனிட்டிற்கானதிறன் கட்டணம் வெளியீட்டைஅடிப்படையாகக் கொண்டதல்ல.

இந்தஏற்பாடு "எஸ்.எல்.எ.்.ப்.ஆர்.எஸ் 16" இன் கீழ் "நிதிகுத்தகை" என்று கணக்கீடு செய்யப்படுவதுடன் அதில் ராஜ் லங்கா கம்பெனி லிமிடெட் மற்றும் லக்தனவி பங்களா பவர் லிமிடெட் குத்தகைதாரராகவும், பங்களாதேஷ் பவர் டெவலப்மென்ட் சபை குத்தகைதாரராகவும் உள்ளன. குழுமத்தின் மின்வலு ஆலை பங்களாதேஷ் மின் மேம்பாட்டு சபைக்கு மாற்றப்படுகிறது.

### 2.6.11 அருவச் சொத்துக்கள்:

#### இனங்காணல் அடிப்படை

அருவச் சொத்துக்களிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் அநேகமாக குழுமத்துக்கு கிடைக்கும் என்றிருந்தால் மற்றும் அதன் கிரயம் நம்பத்தகுந்தளவில் அளவிடப்பட முடியும் என்றிருந்தால் அவை இனங்காணப்படுகின்றன.

#### அளவீட்டு அடிப்படை

தனியாக கொள்வனவு செய்யப்படும் அருவச் சொத்துக்கள் ஆரம்ப அங்கீகரிப்பின் போது கிரயத்தில் அளவிடப்படும். வியாபார இணைப்பு ஒன்றின் போது கொள்வனவு செய்யப்படும் அருவச் சொத்துக்களின் கிரயம் கொள்வனவுத் திகதியில் உள்ள அவற்றின் சந்தைப் பெறுமதியாகும். ஆரம்ப அங்கீகரிப்பைத் தொடர்ந்து அருவச் சொத்துக்கள் அவற்றின் கிரயத்திலிருந்து திரண்ட காலத் தேய்மானம் மற்றும் திரண்ட சேத இழப்பு நட்டங்களை கழித்த தொகையில் முன் கொணரப்படும். அகத்தே உருவாக்கப்படும், மூலதனப்படுத்திய அபிவிருத்திச் செலவுகள் தவிர்ந்த, அருவச் சொத்துக்கள் மூலதனப்படுத்தப்படாது ஏற்பட்ட ஆண்டில் செலவாகக் கொள்ளப்படும்..

#### காலத்தேய்மானம் / நட்டக்கழிவு

அருவச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம் முடிவுள்ளதாகவோ அல்லது முடிவற்றதாகவோ மதிப்பிடப்படும்.

முடிவுள்ள ஆயுட்காலத்தை கொண்ட அருவச் சொத்துக்கள் அவற்றின் பயன்தரு பொருளியல் ஆயுட்காலம் முழுவதற்கும் காலத் தேய்மானம் செய்யப்படுவதுடன் அவை சேத இழப்பிற்கு ஆளாகியமைக்கான குறிகாட்டிகள் இருக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் சேத இழப்பிற்காக மதிப்பிடப்படும். அருவச் சொத்து ஒன்றிற்கான காலத் தேய்மானக் காலமும், முறையும் குறைந்தது ஒவ்வொரு அறிக்கையிடற்கால முடிவிலும் மீளாய்வு செய்யப்படும். எதிர்பார்க்கப்படும் பயன்தரு ஆயுட்காலத்தில் அல்லது சொத்தில் அடங்கிய எதிர்கால பொருளியற் பயன்களின் எதிர்பார்க்கும் நுகர்வு முறையில் மாற்றங்கள், ஏற்றவாறு காலத் தேய்மானக் காலம் அல்லது முறையை மாற்றி கணக்கில் கொள்ளப்படுவதுடன், அவை கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றமாகக் கொள்ளப்படும். முடிவுக் காலத்தை கொண்ட அருவச் சொத்துக்களின் காலத் தேய்மான செலவுகள் அருவச் சொத்துகளின் தொழிற்பாட்டுக்கு இசைய வருமானக் கூற்றில் செலவாக வகைப்படுத்தப்படும்.

#### சபை

மென்பாகங்கள் அவற்றின் பயனுள்ள 5 ஆண்டுகளிற்கு காலத்தேய்மானம் செய்யப்படுவதுடன் அனுமதிப்பத்திரங்கள் அதற்கான உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலம் முழுவதற்கும் காலத்தேய்மானம் செய்யப்படுகின்றது.

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

**எல்.ரீ.எல். ஹோல்டிங் (பிரைவட்) லிமிடட்**

கனணி மென்மாகங்கள் அவை கையகப்படுத்திய மற்றும் அபிவிருத்திசெய்த திகதியிலிருந்து 4 ஆண்டுகளிற்கு காலத்தேய்மானம் செய்யப்படுகின்றன.

**லங்கா மின்சார (தனியார்) கம்பனி லிமிடட்**

கணனி மென்பாக அனுமதிப்பத்திரங்கள் பயனுள்ள 5 ஆண்டுகளிற்கு காலத்தேய்மானம் செய்யப்படுகின்றன.

தொழில்நுட்ப திறன்கள் அவற்றின் 15 வருட ஒப்பந்த காலத்திற்குகாலத்தேய்மானம் செய்யப்படுகின்றன.

முடிவற்ற பயன்தரு ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள் காலத் தேய்மானம் செய்யப்படுவதில்லை. அவை தனியாகவோ அல்லது காசு பிறப்பாக்க அலகு மட்டத்திலோ ஆண்டு தோறும் சேத இழப்புச் சோதனைக்கு ஆளாகும். முடிவற்ற ஆயுட்கால மதிப்பீடு முடிவற்ற ஆயுட்காலம் தொடர்ந்தும் ஏற்றுக் கொள்ளக்கூடியதா என்பதனை உறுதி செய்து கொள்வதற்கு ஆண்டு தோறும் மீளாய்வு செய்யப்படும். அவ்வாறு உறுதி செய்ய முடியாத போது, பயன்தரு ஆயுட் காலத்தின் முடிவற்ற காலத்திலிருந்து முடிவுள்ள காலத்திற்கான மாற்றம் பொருத்தமான அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

**அங்கீகரிக்காதிருத்தல்**

அருவச் சொத்தொன்றின் அங்கீகரிப்பின்மையால் ஏற்படும் பெறுகை அல்லது இழப்பு அதன் நிகர விற்பனைப் பெறுவனவுக்கும் சொத்தின் முன்கொணரற் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாக கணித்து சொத்து அங்கீகரிக்காதிருக்கையில் வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

## 2.6.12 நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

### 2.6.12.1 நிதிச் சொத்துக்கள்

**நிதிச் சொத்துக்களின் ஆரம்ப அங்கீகரிப்பு மற்றும் அளவீடு**

நிதிச் சொத்துக்கள் ஆரம்ப அங்கீகரிப்பில் வகைப்படுத்தப்பட்டு, அதன்பின்னர், ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தின் ஊடாக நியாயப் பெறுமதி (எ.்ப்வீஓசீஐ) யிலும்இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதி(எ.்ப்வீபிஎல்) யிலும் காலத்தேய்மானக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

ஒரு நிதிச் சொத்து (ஒரு குறிப்பிடத்தக்க நிதிக் கூறு அல்லாத வியாபார பெறவேண்டியவையாக இல்லாதிவிடத்து) அல்லது நிதிப் பொறுப்பும்எ.்ப்வீபிஎல் இல் இல்லாத ஒரு விடயத்தின் கையகப்படுத்தலுக்காக அல்லது வழங்கலுக்காக நேரடியாக பகிரத்தக்க அவ்வாறான கொடுக்கல் வாங்கல் கிரயங்களும்ஆரம்பத்தில் நியாயப்பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

ஒரு குறிப்பிடத்தக்க நிதிக் கூறு அற்ற ஒரு வியாபாரப் பெறவேண்டியவை ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் விலையில் அளவிடப்படுகிறது.

**பிந்திய அளவீடு**

பிந்திய அளவீட்டு நோக்கத்திற்காக,நிதிசார்ந்த சொத்துக்கள் பின்வருமாறு நான்கு வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

- காலத்தேய்மானக் கிரயத்திலுள்ள நிதிச் சொத்துக்கள் (கடன் கருவிகள்)
- திரண்ட நயங்கள் மற்றும் நட்டங்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்தி ஓசீஐ ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள் (கடன் கருவிகள்)
- அங்கீகரிக்காதிருக்கும் திரண்ட நயங்கள் மற்றும் நட்டங்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்துவதன் மூலம் ஓசீஐ ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள நிச்சயிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் (உரிமைத்துவ கருவிகள்)
- இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள்

**காலத்தேய்மானக் கிரயத்திலுள்ள நிதிச் சொத்துக்கள் (கடன் கருவிகள்)**

பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்படுமாயின், கம்பனி நிதிச் சொத்துக்களை காலத்தேய்வுக் கிரயத்தில் அளவிடுகின்றது.

- ஓப்பந்த காசுப் பாய்ச்சலை சேகரிக்கும் நோக்குடன் வணிக முறையில் வைத்திருக்கப்படும் ஒரு நிதிச் சொத்ததாக காணப்படுதல், மற்றும்
- நிதிச் சொத்தின் ஒப்பந்த விதிகள் குறிப்பிட்ட திகதிகளில் காசுப் பாய்ச்சலிற்கு வழிவகுத்து அவை அசல் மற்றும் வட்டி நிலுவைத் தொகைகளை மட்டுமே செலுத்துகின்றனவாக காணப்படுதல்.

காலத்தேய்வுக் கிரயத்திலுள்ள நிதிச் சொத்துக்கள் பின்னர் பயனுள்ள வட்டிவீத (ஈஐஆர்) முறையினைப் பயன்படுத்தி அளவிடப்படுவதுடன் அவை நட்டக்கழிவிற்கு உட்படுகின்றன. சொத்தானது அங்கீகரிக்காது, மாற்றியமைக்கப்படாது அல்லது நட்டக்கழிவு அடையும் போது இலாபம் அல்லது நட்டத்தில் நயங்களும் நட்டங்களும் அங்கீகரிக்கப்படுகின்றன.

குழுமத்தின் காலத்தேய்வுக் கிரயத்திலுள்ள நிதிச் சொத்துக்களில், வியாபார பெறவேண்டியவை, ஊழியர்களுக்கான கடன்கள், ஏனைய தரப்பினருக்கான கடன்கள் மற்றும்ஏனைய நிதிச் சொத்துக்களின் கீழுள்ள ஏனைய முதலீடுகள் என்பன உள்ளடங்குகின்றன.

**ஓசீஐ ஊடாக நியாயப் பெறுமதியில் நிச்சயிக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் (கடன் கருவிகள்)**

பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்படுமாயின்,குழுமம்கடன் கருவிகளை ஓசீஐ இன் ஊடான நியாயப் பெறுமதியில் அளவிடுகின்றது.

- ஓப்பந்த காசுப் பாய்ச்சலை சேகரிக்கும் நோக்குடன் வணிக முறையில் வைத்திருக்கப்படும் நிதிச் சொத்ததாக காணப்படுதல், மற்றும்
- நிதிச் சொத்தின் ஒப்பந்த விதிகள் குறிப்பிட்ட திகதிகளில் காசுப் பாய்ச்சலிற்கு வழிவகுத்து அவை அசல் மற்றும் வட்டி நிலுவைத் தொகைகளை மட்டுமே செலுத்துகின்றனவாக காணப்படுதல்.

ஓசீஐ ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள கடன் கருவிகளுக்கான வட்டி வருமானம், அந்நிய செலாவணி மறுமதிப்பீடு மற்றும் நட்டக்கழிவுகள் அல்லது மீளவைத்தல்கள் என்பனஇலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டு,கட்டக்கழிவுக் கிரயத்தில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்களைப் போன்றே இதுவும் கணிப்பிடப்படுகிறது. மீதமுள்ள நியாய பெறுமதி மாற்றங்கள் ஓசீஐ இல் அங்கீகரிக்கப்படுகின்றன. அங்கீகரிக்காதிருப்பதன் மீது,ஓசீஐ இல் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட நியாய பெறுமதி மாற்றமானது இலாபம் அல்லது நட்டத்திற்குமீழ்சுழற்சி செய்யப்படுகிறது.

**ஓசீஐ ஊடாக நியாயப் பெறுமதியில் நிச்சயிக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் (உரிமைத்துவ முதலீடுகள்)**

ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், குழுமம் அதன் உரிமைத்துவ முதலீடுகளை எஸ்எல்எ.்ப்ஆர்எஸ் 3 -இன் கீழ் விற்பனைக்காக வைத்திருக்காத அல்லது நிகழத்தக்கவையற்றாதாக ஓசீஐ

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

இன் ஊடான நியாயப் பெறுமதியில் நிச்சயிக்கப்பட்ட உரிமைத்துவக் கருவிகளாக வகைப்படுத்துவதற்கு தெரிவுசெய்யலாம். வகைப்படுத்தலானது கருவிக்குக் கருவி என்ற அடிப்படையில் நிச்சயிக்கப்படுகின்றது.

இந்த நிதிச் சொத்துக்களின் நயங்களும் நட்டங்களும் ஒருபோதும் இலாபம் நட்டத்திற்கு மீள்சுழற்சி செய்யப்படுவதில்லை. நிதிச் சொத்தின் ஒரு பகுதியை மீட்டெடுத்தல் போன்ற வருமானங்களிலிருந்து குழுமம் நலன் பெறுவது தவிர்ந்த,கொடுப்பனவுக்கான உரிமை உறுதிப்படுத்தப்படுகையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் பங்கிலாபம் ஏனைய வருமானமாக அங்கீகரிக்கப்படுவதுடன்,அத்தகைய ஆதாயங்கள் ஓசீஐ இல் பதிவுசெய்யப்படுகின்றது. ஓசீஐ ஊடாக நியாயமான பெறுமதியில் நிச்சயிக்கப்பட்ட உரிமைத்துவக் கருவிக் நட்டக்ழிவு மதிப்பீட்டிற்கு உட்படுவதில்லை.

### நிதி சொத்துக்களின் மீள வகைப்படுத்தல்

நிதி சொத்துக்களை நிர்வகிப்பதற்காக குழுமம் அதன் வணிக மாதிரியை மாற்றுகின்ற போது மற்றும் அவ்வாறான நிலையின் போது மாத்திரம் குழுமம் அதன் நிதிச் சொத்துக்களை மீள வகைப்படுத்துகின்றது. காலத்தேய்மானக் கிரயத்திலுள்ள, ஏனைய விரிவான வருமானத்தின் ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள அல்லது இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள நிதி சொத்துக்களை குழுமம் மீள வகைப்படுத்துமாயின்,முன்னைய மீள வகைப்படுத்தல் தேதியிலிருந்து அவ்வாறான மீள வகைப்படுத்தலை குழும் பிரயோக்கின்றது. அதன்போது குழுமம் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட ஆதாயங்கள்,நட்டங்கள் (குறைபாடு நட்டக்கழிவு இலாபங்கள் அல்லது நட்டங்கள் உட்பட) அல்லது வட்டி ஆகியவற்றை மீண்டும் வைப்பதில்லை.

காலத்தேய்மானக் கிரய அளவீட்டு வகையின் கீழ் மற்றும் இலாப அல்லது நட்ட அளவீட்டு வகையின் ஊடான நியாயப் பெறுமதியின் கீழ் இல்லாத நிதிச் சொத்தொன்றை குழும் மீண்டும் வகைப்படுத்தினால்,மீள வகைப்படுத்தல் தேதியில் அதன் நியாயப் பெறுமதி அளவிடப்படுகின்றது. நிதிச் சொத்தின் முன்னைய காலத்தேய்மானப் பெறுமதிக்கும் நியாயப் பெறுமதிக்கும் இடையேயான வேறுபாட்டிலிருந்து எழுகின்ற எந்த இலாபமும் அல்லதுநட்டமும்இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

காலத்தேய்மானக் கிரய அளவீட்டு வகையின் கீழ் மற்றும் ஏனைய விரிவான வருமான அளவீட்டு வகையின் ஊடான நியாயப் பெறுமதியின் கீழ் இல்லாத நிதிச் சொத்தொன்றை குழும் மீண்டும் வகைப்படுத்தினால், மீள வகைப்படுத்தல் தேதியில் அதன் நியாயப் பெறுமதி அளவிடப்படுகின்றது. நிதிச் சொத்தின் முன்னைய காலத்தேய்மானப் பெறுமதிக்கும் நியாயப் பெறுமதிக்கும் இடையேயான வேறுபாட்டிலிருந்து எழுகின்ற எந்த இலாபமும் அல்லது நட்டமும் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

ஏனைய விரிவான வருமான அளவீட்டு வகையின் ஊடான நியாயப் பெறுமதியின் கீழ் மற்றும் காலத்தேய்மான கிரய அளவீட்டு வகையின் கீழ் இல்லாத நிதிச் சொத்தொன்றை குழும் மீண்டும் வகைப்படுத்தினால், மீள வகைப்படுத்தல் தேதியில் அதன் நியாயப் பெறுமதியில் அந்த நிதிச் சொத்து மீள வகைப்படுத்தப்படுகின்றது.

எவ்வாறாயினும்,முன்னர் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட ஆதாயம் அல்லது நட்டம் உரிமைத்துவத்தில் இருந்து நீக்கப்பட்டு மீள வகைப்படுத்தல் தேதியிலுள்ள நிதிச் சொத்தின் நியாயப் பெறுமதிக்கு எதிராக சீராக்கப்படுகிறது. இதன் விளைவாக, நிதிச் சொத்து எப்போதும் காலத்தேய்மானக் கிரயத்தில் அளவிடப்பட்டிருக்குமாயின்,மீள வகைப்படுத்தல் தேதியிலும் அது அளவிடப்படுகிறது. இந்த சீராக்கம் விரிவான வருமானத்தை பாதிக்கின்ற போதிலும், இலாபம் அல்லது நட்டத்தை பாதிப்பதில்லை. ஆகையால், இது மீள வகைப்படுத்தல் சீராக்கமாக காணப்படுவதில்லை. மீள வகைப்படுத்தல் விளைவொன்றாக பயனுள்ள வட்டி விகிதம் மற்றும் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளின் அளவீடு என்பன சீராக்கப்படுவதில்லை.

ஏனைய விரிவான வருமான அளவீட்டு வகையின் ஊடான நியாயப் பெறுமதியின் கீழ் மற்றும் இலாபம் அல்லது நட்ட அளவீட்டு வகையின் ஊடான நியாயப் பெறுமதியின் கீழ் இல்லாத நிதிச் சொத்தொன்றை குழும் மீண்டும் வகைப்படுத்தினால்,நிதி சொத்தானது நியாயமான பெறுமதியிலேயே தொடர்ந்தும் அளவிடப்படுகிறது. முன்னர் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட ஆதாயம் அல்லது நட்டமானதுமீள வகைப்படுத்தல் தேதியில் மீள வகைப்படுத்தல் சீராக்கமொன்றாக உரிமைத்துவத்தில் இருந்து இலாபம் அல்லது நட்டத்துக்கு மீள மீள வகைப்படுத்தப்படுகிறது.

### இனங்காணாது விட்டுவிடுதல்

நிதிச் சொத்தொன்று பின்வரும் நிலமைகளில் அங்கீகரிக்கப்படுவதில்லை.

- காலாவதியாகிய சொத்துக்களிலிருந்து காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான உரிமைகள் இருக்கின்ற போதும்
- குழு, அத்தகைய சொத்திலிருந்து வரும் காசுப்பாய்ச்சல்களைப் பெறுவதற்கான தனது உரிமைகளை மாற்றிக்கொடுத்துள்ளது அல்லது ஹஒரு பாரப்படுத்தலுடடான' ஏற்பாட்டின் கீழ், ஒரு மூன்றாந்தரப்புக்கு பொருண்மையான தாமதமின்றி, தனக்குக் கிடைத்த காசுப்பாய்ச்சல்களை முழுமையாக செலுத்துவதற் கான ஒரு கடப்பாட்டைப் பொறுப்பேற்றுள்ளது எனும் போதும், இல்லையெனில் பின்வரும் இரண்டிலொரு விதத்தில்,

(அ) குழுமம், சொத்தின் சகல விதமான பொறுப்புக்களையும் மற்றும் சொத்துக்கள் வழங்கல்களையும் கணிசமானளவில் மாற்றிக் கொடுத்துள்ளது, அல்லது.

(ஆ) குழுமம், அவ்வாறு சொத்தின் சகல விதமான பொறுப்புகளையும் மற்றும் சொத்துக்கள் வழங்கல்களையும் கணிசமானளவில் மாற்றிக் கொடுக்கவோ அல்லது பித்துவைக்க வோ இல்லையென்றாலும், சொத்தின் மீதுள்ள கட்டுப்பாட்டை மாற்றிக் கையளித்துள்ளது எனும் போதும், இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றது.

குழு, ஒரு சொத்திலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான தனது உரிமைகளை மாற்றிக் கொடுத்துள்ளது அல்லது பாரப்படுத்தலூடான ஒரு ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளது எனும் போதும், மற்றும் சொத்தின் சகல விதமான பொறுப்புகளையும் மற்றும் சொத்துக்கள் வழங்கல்களையும் கணிசமானளவில் மாற்றிக்கொடுக்கவோ அல்லது பித்துவைக்கவோ அல்லது தனது கட்டுப்பாட்டை மாற்றிக் கையளிக்கவோ இல்லை எனும் போதும், அந்த சொத்து கம்பனிக்கு அந்த சொத்தின் மீதுள்ள ஈடுபாட்டின் அளவுக்கு இணங்காணமல் விட்டுவிடப்படும். அத்தகைய சந்தர்ப்பத்தில், குழு அதனை தொடர்புடைய ஒரு பொறுப்பாக வும் இனங்காணும். மாற்றிக்கொடுக்கப்பட்ட சொத்துக்களும் மற்றும் தொடர்புடைய பொறுப்புக்களும் அந்தக் குழுவிடமுள்ள உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் என்பவற்றைப் பிரதிபலிக்கும் ஒரு அடிப்படையில் அளவிடப்படுகின்றன.

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

மாற்றிக் கொடுக்கப்பட்ட அந்த சொத்தின் மீதான ஒரு பிணையுத்தரவாத வடிவத்தைப் பெறுகின்ற தொடர் ஈடுபாடானது அந்த சொத்தின் உண்மையான கொணரப்படும் குறைந்த தொகையிலும் மற்றும் குழு மீளச்செலுத்துவதற்குத் தேவைப்படுத்தக் கூடும் எனும் ஆகக் கூடிய தொகையிலும் அளவிடப்படுகின்றது.

### 2.6.12.2 நிதி சார்ந்த சொத்துக்களின் நட்டம்

நிதிசார்ந்த ஒரு சொத்துக்கு அல்லது நிதி சார்ந்த சொத்துக்கள் தொகுதிற்கு நட்டம் ஏற்பட்டிருக்கின்றதா என்பதற்கு தெளிவான ஏதாவதொரு சான்று காணப்படுகின்றதா என நிர்ணயித்துக்கொள்ளும் பொருட்டு அறிக்கையிடப்படும் ஒவ்வொரு திகதியிலும் குழுஅத்தகைய சொத்தை மதிப்பிடும். நிதிசார்ந்த ஒரு சொத்துக்கு அல்லது நிதிசார்ந்த சொத்துக்களின் தொகுதிற்கு நட்டம் ஏற்பட்டிருக்கின்றது என ஊகிக்கப்படும், மற்றும் சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின்னர் நிகழ்ந்த (ஒன்று அல்லது அதற்கு அதிகமான) நிகழ்வுகளின் விளைவாக நட்டம் ஏற்பட்டுள்ளது என்பதற்கான தெளிவான ஒரு சான்று காணப்படும் பட்சத்தில் மாத்திரம், அந்த நிதி சார்ந்த சொத்துக்களின் அல்லது நிதிசார்ந்த சொத்துக்கள் தொகுதியின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் மீது ஒரு தாக்கத்தைக் கொண்டுள்ள அந்த நட்டத்தை நம்பத்தகுந்தளவில் மதிப்பிடலாம். கணிசமானளவு நிதிசார்ந்த பிரச்சினை, கடன் செலுத்துவதில் தவறுகை அல்லது வட்டி அல்லது அடிப்படைக் கட்டணங்கள் செலுத்துவதில் தவறுகை, அத்தகைய பற்றுக்களும் பற்றுத்தொகுதிகளும் திவால் நிலைக்கு அல்லது ஏனைய நிதிசார்ந்த மீளொழுங்கமைப்புக்கு உள்ளாகுதல் முதலிய அம்சங்களை கடன் பற்றுக்கள் அல்லது கடன் பற்றுத் தொகுதிகள் கொண்டுள்ளன. என்பதை சுட்டிக்காட்டுகின்ற சுட்டிகளும், மற்றும் அந்த தவறுகையுடன் தொடர்புடைய பொருளாதார ரீதியான நிலைமைகள் அல்லது நிலுவைகளிலுள்ள மாற்றங்கள் போன்ற மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களில் அளவிடக்கூடிய ஒரு குறைப்பு இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்டுகின்ற அவதானிக்கக்கூடிய தரவுகள் என்பன நட்டம் தொடர்பான சான்று விடயத்தில் உள்ளடங்கியிருக்கலாம்.

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நியாயப் பெறுமதியில் வைத்திருக்கப்படாத அனைத்து கடன் கருவிகளினதும் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்காக (ECLs) ஒரு படியை கம்பனி அங்கீகரிக்கிறது. ஒப்பந்தத்திற்கு ஏற்ப செலுத்த வேண்டிய காசுப் பாய்ச்சலிற்கும் குழுமம் பெறுவதற்கு எதிர்பார்க்கின்ற அனைத்து அசல் பயனுள்ள அண்ணளவான வட்டி விகிதத்திற்கு கழிவுசெய்யப்பட்ட காசு பாய்ச்சலிற்கும் இடையிலான வேறுபாட்டின் அடிப்படையில் ECLs மதிப்பிடப்படுகின்றது. பிணைப்பின் விற்பனையிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள அல்லது ஒப்பந்த விதிமுறைகளுக்கு இணையான பிற கடன் மேம்பாடுகள் ஆகியவற்றை எதிர்பார்க்கப்படும் காசுப் பாய்ச்சல்கள் உள்ளடக்குகின்றது.

ECLsஇரண்டு கட்டங்களில் அங்கீகரிக்கப்படுகின்றன.

- ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படாத கடன் வெளிப்பாடுகளுக்கு - அடுத்த 12 மாதங்களுக்குள் (12 மாத ECL) கடன் கிடைக்காமைக்கான சாத்தியமான நிகழ்வுகளால் ஏற்படும் கடன் இழப்புகளுக்காக நுஊடுமேற்கொள்ளப்படுதல்.

- ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கடன் இடரில் கணிசமான அதிகரிப்பு காணப்படுகின்ற கடன் வெளிப்பாடுகளுக்கு - கடன் கிடைக்காதிருப்பதற்கான காலத்தை பொருட்படுத்தாது, எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்களின் எஞ்சியுள்ள ஆயுட்காலம்(நுஊடு ஆயுட்காலம்) முழுவதற்கும் நட்டப் படியொன்று தேவைப்படுதல்.

வியாபாரறெவேண்டியவை மற்றும் ஒப்பந்த சொத்துக்களுக்காக,நுஊடுளஇனைக் கணிப்பிடுகையில் கம்பனி எளிமையான அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது. எனவே, கடன் இடரின் அபாயத்தில் மாற்றங்களைக் கண்காணிக்காத போதிலும்,மாறாக ஒவ்வொரு அறிக்கையிடல் தேதியிலும் ECLs இன் ஆயுட்காலத்தின் அடிப்படையில் இழப்புக்கான படியொன்றை அங்கீகரிக்கிறது. கம்பனி அதன் வரலாற்றுரீதியான கடன் இழப்பு அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு முன்னேற்றகரமான கணிப்பீட்டு அட்டவணையை நிறுவியுள்ளது.

### 2.6.12.3 நிதிசார்ந்த பொறுப்புக்கள்

#### ஆரம்ப இனங்காணலும் அளவீடும்

நிதிசார்ந்த பொறுப்புக்கள் ஆரம்ப இனங்காணலின் போது எஸ்எல்எ˙ப்ஆர்எஸ் 9 இன் நோக்கெல்லையில் வகைப்படுத்தப்படுகின்றது. குழுமம் அதன் நிதிசார்ந்த பொறுப்புக்களின் வகைப்படுத்தலை ஆரம்ப அங்கீகரித்தலின் போது நிச்சயிக்கின்றது.

நிதிசார்ந்த சகல பொறுப்புக்களும் அடிப்படை ரீதியில் நியாய விலைப் பெறுமானத்தில் இனங் காணப்படுகின்றன. கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள், ஏனைய நிதிசார்ந்த பொறுப்புக்கள் என்பவற்றை பொறுத்த வரையில் கழிக்கப்பட்ட ஆகுசெலவில் இனங்காணப்படுகின்றன.

#### தொடர்ந்து வரும் அளவீடு

நிதி சார்ந்த பொறுப்புக்களின் அளவீடு பின்வருமாறு அவற்றின் வகுதியில் தங்கியிருக்கும்.

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நியாயப் பெறுமதி என வகைப்படுத்திய நிதிப் பொறுப்புக்கள் அதன்பின்னர் நியாயப் பெறுமதியில் மதிப்பிடப்படுவதுடன் ஏனைய பொறுப்புக்களாக வகைப்படுத்திய நிதிப் பொறுப்புக்கள் அதன்பின்னர் காலத்தேய்மானக் கிரயத்தில் அளவிடப்படும்.

#### இனங்காணாது விட்டுவிடுதல்

கடப்பாடு விடுவிக்கப்படும் அல்லது நீக்கப்படும் அல்லது காலாவதியாகும் போது நிதிசார்ந்த ஒரு பொறுப்பு இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றது

### 2.6.12.4 நிதிசார்ந்த கருவிகளை எதிரீடுசெய்தல்

இனங்காணாது விட்டுவிடப்பட்ட தொகைளை சமப்படுத்தும் பொருட்டு தற்போது நடைமுறைப்படுத்தக்கூடிய சட்டமுறையான உரிமை அல்லது அதே சமயத்தில் சொத்துக்களையும் மற்றும் பொறுப்புக்களையும் ஒரு நிகர அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கான அல்லது உணரச்செய்வதற்கான ஒரு எண்ணம் இருந்தால் அல்லது இருக்கின்ற நேரத்தில் மாத்திரம் நிதிசார்ந்த சொத்துக்களும் மற்றும் நிதிசார்ந்த பொறுப்புக்களும் சமப்படுத்தப்பட்டு நிதி நிலைக் கூற்றில் பதியப்படுகின்றன.

### 2.6.12.5 நிதிக் கருவிகளின் நியாயப் பெறுமதி

பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள் போன்ற நிதிக் கருவிகளை ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் நியாயப் பெறுமதியில் குழுமம் அளவிடுகின்றது.

நியாயப் பெறுமதி என்பது ஒரு சொத்தின் விற்பனைக்காக கிடைக்கின்ற அல்லது அளவிடல் திகதியில் சந்தை பங்கேற்பாளர்களிடையே ஒரு ஒழுங்கான கொடுக்கல் வாங்கலில் ஒரு பொறுப்பை கைமாற்றுவதற்காக செலுத்தப்படும் விலையாகும்.

நியாய பெறுமதி அளவீடு என்பது சொத்தை விற்பதற்கு அல்லது பொறுப்பை கைமாற்றுவதற்கான கொடுக்கல் வாங்கல் நடைபெறுகிறது என்ற ஊகத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. அதாவது:

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

- சொத்து அல்லது பொறுப்புக்கான முதன்மை சந்தையில் அல்லது
- ஒரு முதன்மைச் சந்தை இல்லாத நிலையில், சொத்து அல்லது பொறுப்புக்கு மிகவும் சாதகமான சந்தையில்
- மிகவும் சாதகமான சந்தையை குழுவால் அணுக முடிதல் வேண்டும்.

ஒரு சொத்தின் அல்லது பொறுப்பின் நியாயப் பெறுமதியானது சந்தை பங்கேற்பாளர்கள் தங்கள் பொருளாதார சிறந்த நலனுக்காக செயல்படுவதாகக் கருதி சொத்தை அல்லது பொறுப்பை விலை நிர்ணயம் செய்யும் போது சந்தை பங்கேற்பாளர்கள் பயன்படுத்தும் அனுமானங்களைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

சூழ்நிலைக்கேற்பவும்நியாயப் பெறுமதியை அளவிடுவதற்கு போதுமான தரவு கிடைக்கின்ற போதும் தொடர்புடைய அவதானிக்கத்தக்க உள்ளீடுகளின் பயன்பாட்டை உச்சப்படுத்துகின்ற மற்றும் அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளின் பயன்பாட்டை இழிவுபடுத்துகின்ற பொருத்தமான மதிப்பீட்டு நுட்பங்களை குழுமம் பயன்படுத்துகின்றது.

நியாயப் பெறுமதியில் மதிப்பிடப்படுகின்ற அல்லது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்ற அனைத்து சொத்துக்களும் பொறுப்புக்களும் நியாயப் பெறுமதி உயர்வரிசைக்கேற்ப வகைப்படுத்தப்பட்டு முழுமையாக நியாயப் பெறுமதிக்கு முக்கியத்துவமானதாக உள்ள ஆகக்குறைந்த மட்ட உள்ளீட்டின் அடிப்படையில் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றன.

மட்டம் 1 : இனங்காண முடியுமான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களிற்காக செயற்படு சந்தையில்நிரற்படுத்திய (சீராக்கப்படாத) சந்தை விலைகள்.

மட்டம் 2 : நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்க நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கக்கூடிய ஆகக்குறைந்த மட்ட உள்ளீட்டிற்கான பெறுமதியிடல் நுட்பங்கள்.

மட்டம் 3 : நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்க நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக் முடியாத ஆகக்குறைந்த மட்ட உள்ளீட்டிற்கான பெறுமதியிடல் நுட்பங்கள்.

தொடர்ச்சியான அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படுகின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்காக வகைப்படுத்தலை மீள்மதிப்பீடு செய்வதன் மூலம் உயர் வரிசைக்குட்பட்ட மட்டங்களுக்கு இடையில் இடமாற்றங்கள் நிகழ்ந்துள்ளனவா என்பதனை (ஒட்டுமொத்தமாக நியாயப் பெறுமதி அளவீட்டுக்கு குறிப்பிடத்தக்க ஆகக்குறைந்த அளவிலான உள்ளீட்டின் அடிப்படையில்) ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் குழுமம் தீர்மானிக்கிறது.

குழுமத்தின் முகாமைத்துவம் ஏனைய விரிவான வருமானத்தின் ஊடாக அளவிடப்பட்ட நிரற்படுத்திய நிதிச் சொத்துக்கள் போன்ற தொடர்ச்சியான நியாயப் பெறுமதி அளவீட்டுக்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை தீர்மானிக்கிறது.

நியாயப் பெறுமதி வெளிப்படுத்தல்கள் நோக்கத்திற்காக, சொத்துக்கள்அல்லது பொறுப்புக்களின் தன்மை, பண்புகள் மற்றும் இடர்கள் மற்றும் மேலே விளக்கப்பட்டுள்ளபடி நியாய பெறுமதி உயர்வரிசை மட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் குழுமம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வகுப்புக்களைத் தீர்மானித்துள்ளது.

### 2.6.13 ஏற்பாடுகள்

பொறுப்புத் தொகையை மேற்கொள்ளக்கூடிய நம்பத்தகுந்த ஒரு மதிப்பீடு மற்றும் பொறுப்பு என்பவற்றைத் தீர்ப்பனவு செய்வதற்கு அவசியப்படுத்தப்படும் பொருளாதார நன்மைகள் பொதிந்துள்ள வளங்களின் வெளிப்பாய்ச்சல் அநேகமாக இருக்கலாம் என்ற கடந்த கால ஒரு விளைவின் பயனாக குழு தற்பொழுது ஒரு கடப்பாட்டை (சட்டமுறையாக அல்லது ஆக்கபூர்வ) கொண்டுள்ளது எனும் போது ஏற்பாடுகள் இனங் காணப்படுகின்றன.

பணத்தினது காலப் பெறுமானத்தின் தாக்கம்பொருண்மையானதாக இருப்பின்,பணத்தின் காலப் பெறுமதியின் நடப்புச் சந்தை மதிப்பீடுகளை பிரதிபலிக்கின்ற எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களை ஒருவரிக்கு முற்பட்ட வீதத்தைப் பயன்படுத்தி கழிவுநீக்கம் செய்வதன் மூலம் ஏற்பாடுகள் நிச்சயிக்கப்படுவதுடன்,பொருத்தமானவிடத்து,காலப் பகுதிக்குரிய குறித்துரைத்த இடர்கள் நிதிக் கிரயமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.6.14 ஓய்வூதிய நலக் கடப்பாடுகள

#### விபரிக்கப்பட்ட நலத் திட்டம் - ஓய்வூதிய கடப்பாடு

ஒரு ஊழியர் ஓய்வின் போது ஓய்வூதியம் பெறுதலானது, வழமையாக அவரது வயது, சேவைக் காலம் மற்றும் வேதனம் போன்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணிகளில் தங்கியுள்ளது.

விபரிக்கப்பட்ட நலஓய்வூதியத் திட்டம் தொடர்பாக நிதிநிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்பொறுப்பு, அறிக்கையிடற் கால இறுதியில் விபரிக்கப்பட்ட நலக்கடப்பாட்டின் இற்றைப் பெறுமதியிலிருந்து திட்டச் சொத்துக்களின் நியாயப் பெறுமதியை கழிக்க வரும் தொகையினை அங்கீகரிக்காத கடந்தகால சேவைக் கிரயங்களுக்காக செம்மையாக்கம் செய்ய வரும் தொகையாகும். விபரிக்கப்பட்ட நலக்கடப்பாடு எதிர்வு கூறப்பட்ட அலகுக் கிடைப்பனவினை உபயோகித்து சுயாதீன ஆயுள்முறை கணிப்பீட்டாளர்களினால் ஆண்டுதோறும் கணிக்கப்படும். விபரிக்கப்பட்ட நலக்கடப்பாட்டின் இற்றைப் பெறுமதியானது மதிப்பிடப்பட்ட எதிர்கால காசு வெளிப்பாய்வுகளை, இலங்கையில் உயர்ந்த தரத்திலான பாரிய கூட்டிணைவுப் பிணைமுறிச் சந்தை இல்லாத காரணத்தால், அரச பிணை முறிகளின் வட்டி விகிதத்தை உபயோகித்து கழிவீடு செய்வதன்மூலம் தீர்மானிக்கப்படும். அரச பிணைமுறிகள் பயன்கள் செலுத்தப்படவுள்ள நாணயத்தில் இருப்பதுடன், அதன் முதிர்வுகாலம் தொடர்புபட்ட ஓய்வூதிய கடப்பாட்டுக் காலத்தை அண்மித்ததாக இருக்கும்.

எழுகின்ற ஏதேனும்உள்ளபடியான நயங்கள் அல்லது நட்டங்கள் உடனடியாக ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஓய்வூதியத் திட்டத்தில் மாற்றங்கள் - ஊழியர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு (ஒப்படைக் காலம்) சேவையில் இருக்கவேண்டும் என்ற நிபந்தனையை கொண்டிருந்தாலன்றி, கடந்தகால சேவைக்கிரயமானது உடனடியாக முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். இந்தச் சந்தர்ப்பத்தில் கடந்தகால சேவைக் கிரயம் ஒப்படைக் காலம் முழுவதற்கும் நேர்கோட்டு அடிப்படையில் காலத்தேய்மானம் செய்யப்படும்.

#### விபரிக்கப்பட்ட நலத் திட்டம் - பணிக்கொடை

விபரிக்கப்பட்ட நலத் திட்டம் - பணிக்கொடை, ஓய்வின்போது ஊழியர் ஒருவர் பெறும் பயன் தொகையை வரையறுக்கின்றது. இது வழக்கமாக சேவைக்காலம், ஊதியம் போன்ற ஒன்று அல்லது மேற்பட்ட காரணிகளில் தங்கியிருக்கும். விபரிக்கப்பட்ட நலத் திட்டம் 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சட்டத்தில் ஏற்பாடுசெய்துள்ள பணிக்கொடையை கொண்டுள்ளது.

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

நிதி நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட பணிக்கொடைப் பொறுப்பு என்பது, சுயாதீன மதிப்பீட்டாளர்களால் எதிர்வுகூறப்பட்ட அலகுக் கடன் முறையைப் பயன்படுத்தி அளவிடப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் திகதியில் உள்ளவாறான வரையறுக்கப்பட்ட நலப் பொறுப்புக்களின் தற்போதைய பெறுமதியாகும்.

எழுகின்ற எந்வொரு ஆதாயங்கள் அல்லது இழப்புகள் உடனடியாக பிற விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படும்.

பணிக்கொடைப் பொறுப்புக்காக வெளியில் முதலீட்டு நிதியம் ஆக்கப்படவில்லை.

**விபரிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்**

ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதிக்கும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் உரிய சட்டவாக்கங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக உரிமை உடையவராவர். குழுமம் ஊழியர் சேமலாப நிதிக்கும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் மொத்த ஊதியத்தில் முறையே 12% மற்றும் 3% பங்களிப்பு செய்கின்றபோதிலும், இலங்கை மின்சார சபையானது ஊழியரின் மொத்த ஊதியத்தில் 15% இலங்கை மின்சார சபையின் சேமலாப நிதிக்கு பங்களிப்பு செய்கின்றது.

### 2.6.15 சுய காப்புறுதி ஒதுக்கம

இலங்கை மின்சார சபையினதும் (இ.மி.ச) அதன் துணைக் கம்பனிகளினதும் (குழுமம்) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும். எல்ரீஎல் ஹோல்டிங் (பிரைவட்) லிமிடட் மற்றும் திருகோணமலை பவர் கம்பனி லிமிடட் ஆகியவற்றின் நிதிக்கூற்றுக்கள், அந்த துணைக் கம்பனிகளின் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றால் கணக்காய்வு செய்யப்பட்டன.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, குழுமத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.2.1 திருகோணமலை பவர் கம்பனி லிமிடட் (ரீபிசீஎல்) இன் நிதிக்கூற்றுக்கள் மீது பின்வரும் கருத்திலெடுக்க வேண்டிய விடயங்களை அதன் கணக்காய்வாளர் சுட்டிக் காண்பித்திருந்தார்.

சம்பூரில் 500 மெகா வாற்ஸ் நிலக்கரி மின்வலுப் பொறியை அபிவிருத்தி செய்யும் ஒரே நோக்கில் செயற்பட்ட இக்கம்பனி, அதன் மின்வலுப் பொறியின் அபிவிருத்தி நடவடிக்கைகளை 2016 ஆம் நிதி ஆண்டில் கைவிட்டிருந்ததுடன் முன்னர் மூலதனமாக்கப்பட்ட செலவினங்கள் 2018 ஆம் ஆண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தன. அதற்குப் பதிலாக, சம்பூரில் நிலக்கரி மின்வலுப் பொறியை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட அதே காணியில் ரீபிசீஎல் ஆல் 50 மெகா வாற்ஸ் சூரிய மின்வலுப் பொறியை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. மேலும் கரவலப்பிட்டியவில் 500 மெகா வாற்ஸ் எல்என்ஜீ மின்வலுப் பொறியை அபிவிருத்தி செய்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், மேற்படி மின்வலுப் பொறிகளின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் எவ்வித முன்னேற்றமும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான கம்பனிக்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றமையை இது சுட்டிக்காட்டுகின்றது.

#### 1.2.2 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் மீது கீழே தரப்பட்டுள்ள அவதானிப்புக்கள் காரணமாக என்னால் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

**(அ) லங்கா மின்சார கம்பனி (பிரைவட்) லிமிடட்**

(i) எல்கேஏஎஸ் 1 இன் 32 ஆம் பந்தியின் படி, கம்பனி அதன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அல்லது வருமானம் மற்றும் செலவினத்தை எஸ்எல்எவ்ஆர்எஸ் ஒன்றினால் அனுமதித்தால் அன்றி எதிரீடு செய்தல் ஆகாது. இருப்பினும்,

- வழங்குனரிடமிருந்து கிடைத்த ரூபா 64.3 மில்லியன் தாமதக் கட்டணங்கள் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுச் செலவினத்திற்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது.
- ரூபா 9 மில்லியன் தொகையான வாடிக்கையாளர் செலவு மீதிகள் மீளாய்வாண்டின் வியாபார பெறவேண்டியவைக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

- ரூபா 9.4 மில்லியன் தொகையான முற்பணக் கொடுப்பனவுகளின் வரவு மீதி மீளாய்வாண்டின் சில்லறைக் கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறுச் செலவினம் ஆகியவற்றுக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய சேமிப்பு வங்கியின் சூரிய பல சங்ராமய கடன்களுக்கான வட்டிச் செலவினம் ரூபா 37.4 மில்லியன் ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(iii) நிதிக் கூற்றுக்களின் படி, 2020 திசெம்பர் 31 இல் உள்ளபடி நுகேகொட, நீர்கொழும்பு மற்றும் காலி கிளைகளின் நடைபெற்றுவருகின்ற மூலதன வேலைகளின் மீதிகள் முறையே ரூபா 215.8 மில்லியன் ரூபா 29.97 மில்லியன் மற்றும் ரூபா 77 மில்லியன் ஆகும். இருப்பினும், நடைபெற்றுவருகின்ற மூலதன வேலைகளின் அறிக்கையின் படி, மேற்படி மீதிகள் முறையே ரூபா 237.3 மில்லியன், ரூபா 35.3 மில்லியன் மற்றும் ரூபா 65.3 மில்லியன் ஆகும். அதன்படி, அந்த மீதிகளிற்கடையே முறையே ரூபா 21.49 மில்லியன் ரூபா 5.3 மில்லியன் மற்றும் ரூபா 11.9 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது.

(iv) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட கடன்பட்டோர் மீதிக்கும் பட்டியலிடல் முறைமையிலுள்ள அந்த மீதிக்கும் இடையே ரூபா 13.5 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது.

(v) கால வைப்புக்கள் மற்றும் நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் மீளாய்வாண்டில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ஏனைய நிதிச் சொத்துக்களின் வட்டி வருமானம் முறையே ரூபா 136.8 மில்லியன் மற்றும் ரூபா 67.9 மில்லியன் ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(vi) நுகேகொட கிளையால் 2020 திசெம்பர் 31 இல் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 6 மில்லியன் தொகையான காசு வைப்பு மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் வங்கி மேலதிகப்பற்றாக இனங்காணப்பட்டிருந்தது.

(vii) நிதிக் கூற்றுக்களின் படி, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் மற்றும் பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் மீதான தேய்மானம் என்பன முறையே ரூபா 10 மில்லியன் மற்றும் ரூபா 5.8 மில்லியனால் ஆல் அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(viii) மீளாய்வாண்டிற்கான வரையறுக்கப்பட்ட அன்டெ லெகோ மீற்றரிங் (தனியார்) கம்பனியின் வருமான வரிச் செலவினம் ரூபா 6 மில்லியன் ஆகக் காணப்பட்டது. இருப்பினும், மீளாய்வாண்டிற்கான ஒன்றித்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் இது கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ix) பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களின் ரூபா 48.7 மில்லியன் தொகையான பெறுமானத்தேய்வு இருப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன்விளைவாக, மீளாய்வாண்டிற்கான இலாபம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(x) 2020 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிற்காக பாதுகாப்பு வைப்பு மீது கிடைத்திருந்த ரூபா 8.7 மில்லியன் வட்டியானது முதலீடுகளின் மீது பெறப்பட வேண்டிய வட்டியின் கீழ் பிழையாக பதியப்பட்டிருந்தது. அதன்விளைவாக, மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(xi) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வரையறுக்கப்பட்ட லங்கா புரோட் பேன்ட் நெட்வேர்க் (தனியார்) கம்பனியின் சாதாரண பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 5 மில்லியன் தொகையான முதலீட்டுடன் தொடர்புடைய பங்குச் சான்றிதழை அல்லது வேறு ஏதேனும் போதியளவு பொருத்தமான கணக்காய்வுச் சான்றை எனக்குப் பெற்றுக்கொள்ள முடிந்திருக்கவில்லை.

**(அ) லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட்**

(i) வருமான வரி தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 12) 88 ஆவது பந்தியின் படி, 2017/2018 மதிப்பீட்டு ஆண்டிற்கான பொருளாதார சேவை கட்டணம் (இஎஸ்சி) தொடர்பான ரூபா 159.54 மில்லியன் மதிப்பீடு மற்றும் ரூபா 75.46 மில்லியன் அபராதங்கள் குறித்த எந்த தகவலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) இ.மி.ச. இடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 12.07 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2.5 மில்லியன் வரவு மீதியினைக் கொண்ட தொங்கல் கணக்கில் வைத்திருக்கப்பட்டுள்ளதுடன் 2020.01.01 இல் உள்ளவாறான ஆரம்ப மீதி ரூபா 4.67 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டில், எந்த காரணமும் இல்லாமல் கம்பனி ரூபா 1.6 மில்லியனை மேற்படி தொங்கல் கணக்கில் வரவிலும் ரூபா 3.7 மில்லியன் தொகையை செலவிலும் பதிந்திருந்தது.

(iii) நிலக்கரியை இறக்குமதி செய்யும் போது, சுங்கத்தின் நோக்கத்திற்கான பெறுமதியை மதிப்பிடுகையில், ஒரு கற்பனையான சீராக்கமாக உண்மையில் ஏற்பட்டிருக்காத 10 சதவீத வரி எல்லை சேர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும், கம்பனி ரூபா 3.65 பில்லியன் என்ற 10 சதவீத இலாப எல்லையினை வருவாயில் சேர்த்துள்ளதுடன் பின்னர் கம்பனி கடன்பட்டோருக்கான கழிவாக அத்தொகையை வழங்கி அதனை விற்பனை கிரயத்துக்கு சாட்டுதல் செய்துள்ளது. இதன் விளைவாக, விற்பனை கிரயம் மற்றும் வருவாய் என்பன ஒத்த தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(iv) நிதிக் கூற்றுக்களின் படி 2020.12.31 இல் உள்ளவாறு இ.மி.ச. இடமிருந்தான இறுதி பெ.சே.வரியும் ஏனைய பெறப்பட வேண்டியவையும் மற்றும் வியாபாரக் கடன்பட்டோர் என்பன முறையே ரூபா 197.45 மில்லியன் மற்றும் ரூபா 12.07 மில்லியன் ஆகும். எனினும், அது இ.மி.ச. ஆல் உறுதிப்படுத்தப்படவில்லை. எனவே, கணக்காய்வுக்கு எந்தவொரு சான்றும் கிடைக்காததால், வியாபாரக் கடன்பட்டோர் மீதியின் சரியான தன்மையை கணக்காய்வில் கண்டறிய முடியவில்லை.

(v) 2020.12.31 இல் உள்ளவாறு நீண்டகாலமாக நிலுவையில் உள்ள ரூபா 10.62 மில்லியன் பெறவேண்டிய முகாமைத்துவக் கட்டணத்தின் ஐயப்பாட்டிற்காக கம்பனி எந்தவொரு ஏற்பாட்டையும் செய்திருக்கவில்லை.

(vi) 2016 செப்தெம்பர் 19 முதல் 2018 ஏப்ரல் 09 வரையிலான கால கட்டத்தில் நிலக்கரி இறக்குமதியின் சரியான கொடுக்கல் வாங்கல் பெறுமதியை அறிவிக்காதது குறித்து ரூபா 205 மில்லியன் தொகையை கம்பனி இலங்கை சுங்கத்திற்கு தண்டமாக செலுத்தியிருந்தது. 2019 இல் கம்பனி செலுத்திய தண்டத் தொகையினை குறித்த ஆண்டிற்கான செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக இலங்கை சுங்கத்தின் வெற் கணக்கிற்கும், வெற் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் சீஎஸ்சீஎல் பொறுப்புக் கணக்கிற்கும் தவறுதலாக வரவு வைத்திருந்தது. அதன் விளைவாக, நிறுத்திவைத்த உழைப்புக்கள் ரூபா 205 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் இலங்கை சுங்கத்தின் வெற் கணக்கிற்கு, வெற் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு மற்றும்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

சீஎஸ்சீஎல் பொறுப்புக் கணக்கிற்கு என்பன முறையே ரூபா 158.19 மில்லியன், ரூபா 39.97 மில்லியன் மற்றும் ரூபா 6.8 மில்லியன் தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

(vii) தௌரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் கம்பனி லிமிடட் (வுஜளுஊடு) இடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 539.19 மில்லியன் தொகையினை இணங்கப்பட்ட முறையில் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் (ஊநுஊடு) ஊடாக அறவிடுவதற்கு கம்பனி தவறியிருந்தது. இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் மேற்படி மீதியினை 2020.12..31 இல் உள்ளவாறான அதன் நிதிக் கூற்றுக்களில் பதிந்திருக்கவில்லை. வுஜளுஊடு.்.ஊநுஊடு இந்த மீதியினை உறுதிப்படுத்தியிருக்காததுடன், நட்டக் கடனிற்கான எந்தவொரு ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவுமில்லை. ஆகையால், மேற்படி மீதியின் சரியான தன்மை மற்றும் காணப்படு தன்மையினை கண்டறிய முடிந்திருக்கவில்லை.

(viii) இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டிய ரூபா 578.67 மில்லியன் தொகையான ஈ.எஸ்.சி மற்றும் ரூபா 18.07 மில்லியன் சில்லறைக் கடன்பட்டோர், நோபல் ரிசோர்சஸ் இன்டர்நே'னல் பிரைவேட் லிமிடெட் இடமிருந்து பெறத்தக்க ரூபா 1.1 மில்லியன் மற்றும் வியாபாரக் கடன் கொடுத்தோர் - நோபல் ரிசோர்சஸ் இன்டர்நே'னல் பிரைவேட் லிமிடெட் ரூபா 85.89 மில்லியன் தொகை மற்றும் லிபர்டி கொமோடிரீஸ் இடமிருந்து பெறப்பட வேண்டிய 50 சதவீத எஸ்ஜிஎஸ் கட்டணமான ரூபா 8.04 மில்லியன் என்பவற்றை மெய்மையாய்வு செய்வதற்குத் தேவையான மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் தொடர்புடைய சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

(ix) எதிர்வரும் நிதியாண்டிற்காக இ.மி.ச. ஆல் செலுத்தப்பட்ட ரூபா 285,375,105 கப்பலேற்றல் மற்றும் பெ.சே.வ. கட்டணத்தை வெவ்வேறாக வெளிப்படுத்தாது அத்தொகை, “அனல் நிலக்கரி கப்பலேற்றலுக்கான வியாபாரக் கடன்பட்டோர் (இ.மி.ச.)” கணக்கிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, “அனல் நிலக்கரி கப்பலேற்றலுக்கான வியாபாரக் கடன்பட்டோர் (இ.மி.ச.)” மற்றும் இ.மி.ச. இடமிருந்து பெறப்பட்ட முற்பணம் என்பன ரூபா 285.37 மில்லியன் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(x) நிதிக் கூற்றுக்களில் எந்தப் பொறுப்பும் இல்லாமல் கம்பனி 2019 ஆம் ஆண்டில் சிலோன் 'ிப்பிங் கார்ப்பரே'ன் லிமிடெட் (CSCL) ஊடாக மெர்கேட்டர் சிங்கப்பூர் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு ரூபா 4 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தது. இருப்பினும், கம்பனி இந்தத் தொகையை ஊளுஊடு இற்குச் செலுத்த வேண்டிய நிலுவையில் இருந்து தவறாகக் கழித்திருந்தது. எனவே, பொறுப்புகள் இதே தொகையால் குறைத்து கூறப்பட்டுள்ளன.

(xi) கம்பனி கப்பலேற்றல் இல. 123 இற்கான சுங்க பெ.சே.வ. ஆக ரூபா 136.23 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தது. எனினும், சுங்கத்தின் படி, உண்மையான பெ.சே.வ. தொகை ரூபா 106.97 மில்லியன் ஆகும். எனவே, மேலதிகமாகச் செலுத்திய தொகை ரூபா 29.27 மில்லியன் ஆகும்.

## 1.2.3 இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்ஏஎஸ்/எஸ்எல்எவ்ஆர்எஸ்) மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்குதல்

#### (அ) நிதிசார் அறிக்கையிடலுக்கான எண்ணக்கருவாக்க சட்டகம்

(i) சட்டகத்தின் 4.1 (ஆ) பந்திக்கு முரணாக, சபைக்கு ஏற்பட்ட கிரயத்திற்கும் குறிப்பிட்ட வருமான உழைப்புக்கும் இடையே நேரடி தொடர்பு இல்லாத மற்றும் தனிப்பட்ட நிறுவனத்தின் நிர்வாகச் செலவுகளான ரூபா 43.97 மில்லியன் தொகையான செலவுகள் சபையின் வருமானக் கூற்றில் அதற்குரிய செலவினமாக இனங்காணப்பட்டிருந்தது.

(ii) சட்டகத்தின் 4.3 ஆம் பந்திக்கு முரணாக, சபைக்கு பொருளாதார நலன்களை உட்பாச்சல் செய்யாத மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரமும் சொத்தின் உரிமையும் சபைக்குக் காணப்படுகின்ற ரூபா 8 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் வேறொரு நிறுவனத்தால் பயன்படுத்தப்படுகின்றன.

(iii) சொத்தின் உரிமையுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இன்மை காரணமாக தலைமை அலுவலகக் கட்டிடக் காணியின் உரிமைத்துவத்தை மெய்மையாய்வு செய்ய முடியாதுள்ளது.

#### (ஆ) எல்கேஏஎஸ் 2 - இருப்புக்கள் மற்றும் எல்கேஏஎஸ் 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

சீஈபீயானது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக ஏற்பட்ட மேந்தலைக் கிரயங்களை பெறுமதியிடுவதற்காக மேற்படி நியமங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உண்மைக் கிரயங்களை பிரயோகிப்பதற்குப் பதிலாக நியமக் கிரய முறையை பிரயோகிக்கின்றது. இதன் விளைவாக, அவற்றின் மீது ஏற்பட்ட ரூபா 2.61 பில்லியன் கூட்டுத்தொகையான சாதக மேந்தலை விகித முரண்கள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருந்தன.

இதன் விளைவாக, இ.மி.ச. இன் செயற்பாட்டு விளைவுகள், சொத்துக்கள் மற்றும் உரிமை மூலதனம் என்பன அந்த மூலதன வேலைகள் தொடர்பில் உயர் நிதிசார் ஈடுபடுத்தல் காரணமாக குறிப்பிடத்தக்களவு பாதிக்கப்பட்டிருந்தன. எனினும் அம்மூலதன வேலைகள் தொடர்பில் தேவையான தகவல்கள் காணப்படாததன் காரணமாக அது தொடர்பான நிதிக்கூற்றுக்களிற்கான தாக்கத்தை கணக்காய்வின் போது மதிப்பிட முடியாதிருந்தது.

#### (இ) LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

பரிமாற்றல் பிரிவிலுள்ள ரூபா 172,019,335,924 பில்லியன் சொத்துக்கள் மீளாய்வாண்டில் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### (ஈ) கணக்கீட்டுக் கொள்கைகள்

இ.மி.ச. இனால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாகத் தேய்விடப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் கணக்கீட்டுக் கொள்கை 2.4.6(உ) மற்றும் 3(இ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளாய்வு செய்யப்பட்டு பின்னோக்கி சீராக்கப்பட்டிருக்கவில்லை. எடுத்துக்காட்டாக ரூபா 187.58 பில்லியன் தொகையான முழுமையாகத் தேய்விடப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அவற்றின் உண்மையான ஆயுட்காலம் மதிப்பிடப்படாது தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

### 1.2.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ரூபா 189.54 மில்லியன் வரவு மீதி (இருப்பு பற்றாக்குறை) மற்றும் ரூபா 114.64 மில்லியன் செலவு மீதி (இருப்பு மிகை) என்பன தீர்வு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக இருப்பு சீராக்கல் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) அமைச்சரவையின் 2010 ஒக்தோபர் 13 ஆந் திகதிய 10/2434/423/034 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் லக்விஜயா மின்வலு ஆலையின் நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 159.18 மில்லியன் கடன் தொகை திறைசேரியினால் லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட் (எல்சிசி) இற்கு மாற்றப்பட வேண்டுமென்பதுடன் எல்சிசி இற்கான கடன் சேவைக்காக அதற்குச் சமமான தொகையினை இ.மி.ச. செலுத்துதல் வேண்டும். திறைசேரியின் செயலாளரால் வழங்கப்பட்ட ரூ.்.நூ.ே.ஊநுடீ.்.நுநரவைல.்.2014 ஆம் இலக்க 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதிய கடிதத்தின் படி, இக்கடன்கள் இ.மி.ச. இன் நேரடிக் கடன்களாகக் கருதப்படுதல் வேண்டும். இருப்பினும், இ.மி.ச. பொதுத் திறைசேரியுடன் எவ்வித உப கடன் உடன்படிக்கையிலும் கைச்சாத்திட்டிருக்காத போதிலும், இக்கடன்கள் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கடன்களாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. ஆகையால், இக்கடன்களின் காணப்படும் தன்மை ஐயத்திற்குரியதாக உள்ளதுடன் இக்கடன்களின் மீளச் செலுத்துகை தொடர்பில் நிதிக் கூற்றுக்களிற்கான தாக்கத்தை அளவிட முடியவில்லை.

மேலும், ரூபா 3.56 பில்லியன் வட்டிக் கொடுப்பனவு உள்ளிட்ட ரூபா 20.5 பில்லியன் ஆனதோர் தொகை மற்றும் திறைசேரியால் செய்யப்பட்ட ரூபா 3.15 பில்லியன் வட்டிக் கொடுப்பனவு உள்ளிட்ட ரூபா 20.54 பில்லியன் தொகை என்பன முறையே 2019 மற்றும் 2020 இல் இ.மி.ச. இன் உரிமைத்துவத்திற்கு மாற்றப்பட்டது. எவ்வாறாயினும், இந்த செலவினம் இ.மி.ச. ஆல் செய்யப்படாத போதிலும், உரிமைத்துவத்திற்கு வட்டி என மாற்றப்பட்டிருந்த இந்த வட்டிச் செலவினத்தை இ.மி.ச. அதன் வருமானக் கூற்றிற்கு சாட்டியிருந்தது. ஆகையால், 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்கான நட்டம் முறையே ரூபா 3.56 பில்லியன் மற்றும் ரூபா 3.15 பில்லியன் ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

மேலும், 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின 42 (6) ஆம் பிரிவில் அரசாங்கத்தின் அங்கீகாரம் மற்றும் உத்தரவாதத்துடன் சபைக்கு வழங்கப்பட்ட கடன்களை இலங்கை ரூபாவுக்கு மீள்மதிப்பீடு செய்வதுடன் தொடர்புடைய எந்த இழப்பும் அல்லது இலாபமும் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு திரட்டிய நிதியத்துக்கு சாட்டப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், சபை 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அதன் வருமான கூற்றில் முறையே ரூபா 11.89 பில்லியன் மற்றும் ரூபா 20.86 மில்லியன் தொகையினை நாணயமாற்று இழப்பாக சாட்டியிருந்தது. ஆகையால், 2019 மற்றும் 2020 ஆண்டுகளிற்கான நட்டங்கள் முறையே ரூபா 11.89 பில்லியன் மற்றும் ரூபா 20.86 மில்லியன் தொகைகளால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2014 திசெம்பர் 31 இற்கு பின்னர் திறைசேரியின் நிதிக் கூற்றுக்களில் உப கடன்களாக கருதப்பட்டிருக்காத போதிலும், ரூபா 25.23 பில்லியன் கடன் தொகையினை 2014 இற்கு பின்னர் செயற்திட்டங்களிற்கான உப கடன்களாக பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைத்த வெளிநாட்டு கடன்கள் என இ.மி.ச. பதிவுசெய்திருந்தது. மேலும், 2015 மார்ச் 18 ஆந் திகதிய 15.்0228.்613.்012 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த கடன்களை திருப்பிச் செலுத்துதல் இ.மி.ச. இற்கு ஒப்படைக்கப்பட்டது. இருப்பினும், இந்த கடன்களுக்கான மூலதன திருப்பிச் செலுத்துதல் மற்றும் வட்டி செலுத்துதல் தொடர்பில் எவ்வித கொடுப்பனவையும் இ.மி.ச. செலுத்தவில்லை அல்லது அதற்கான ஏற்பாடுகளை செய்யவில்லை. எனவே, இந்தக் கடன்களின் காணப்படு தன்மை ஐயத்துக்குரியதாக உள்ளதுடன் திருப்பிச் செலுத்தும் நிலைமைகள் (மூலதனம் மற்றும் வட்டி செலுத்துதல்) மீதான நிதிக் கூற்றுக்கான தாக்கத்தை அளவிட முடியவில்லை.

(ஈ) பொதுத் திறைசேரியுடன் எவ்வித உப கடன் உடன்படிக்கைளிலும் கைச்சாத்திட்டிருக்காத போதிலும், ரூபா 54.71 பில்லியன் பெறுமதியான ஆறு வெளிநாட்டுக் கடன்கள் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கடன்களாக சபையின் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனவே, இந்தக் கடன்களின் காணப்படு தன்மை ஐயத்துக்குரியதாக உள்ளதுடன் இக் கடன்களின் திருப்பிச் செலுத்துதல் தொடர்பில் நிதிக் கூற்றுக்கான தாக்கத்தை அளவிட முடியவில்லை.

(உ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசாங்க நிறுவனங்களின் மின் பிறப்பாக்கிகள், மின்தூக்கிகள் மற்றும் வளிப் பதனாக்கிகளின் வழங்கல், பராமரிப்பு மற்றும் திருத்தத்திற்காக இ.மி.ச. ஆல் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அவற்றின் விலைச்சிட்டுப் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கிரயத்தில் பெறுமதியிடப்பட்டு அதற்கிணங்க அவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறவேண்டியவைகள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் என்பன 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 66.99 மில்லியனால் ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த நிலுவையிலுள்ள மீதிகளிற்கான தீர்ப்பனவு விபரங்கள் மற்றும் பட்டியல்களை இ.மி.ச. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.

(ஊ) 2016 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரிக்கு தீர்வையாகச் செலுத்திய ரூபா 5 பில்லியனில் ரூபா 500 மில்லியன் மீளாய்ண்டில் முகாமைத்துவக் கட்டணம் செலுத்துதல் என வகைப்படுத்தி வருமானக் கூற்றுக்கு காலத்தேய்மானம் செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1.5 பில்லியன் தொகை நிறுத்திவைத்த உழைப்புக்களிற்கு தாக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீதமுள்ள ரூபா 3.0 பில்லியன் தொகையினை உரிமைத்துவத்திற்கு மாற்றுவதற்குப் பதிலாக நிதிக் கூற்றுக்களில் ஏனைய கடன்பட்டோராகக் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும், பொது பொதுத் திறைசேரியிடமிருந்து இ.மி.ச. ஆல் எந்தவொரு முகாமைத்துவச் சேவைகளும் பெறப்பட்டிருக்கவில்லை. எனவே இந்த ஆண்டிற்கான நட்டம் ரூபா 500 மில்லியனால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

(எ) விநியோக பிரிவிலுள்ள சொத்துகளுக்கு மாற்றப்படாமல் ரூபா 6.18 பில்லியன் மதிப்புள்ள 7,546 பூரணப்படுத்திய வேலைகள் நடைபெற்றுவரும் வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. அந்த சொத்துக்கள் தொடர்பான தேய்மானம் வருமான கூற்றிற்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2012 இல் நிறைவடைந்த மேல் கொத்மலை நீர் மின்வலு செயற்திட்டம் தொடர்பான ரூபா 979.88 மில்லியன் மொத்தக் கிரயம் மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக இத்திகதி வரை முடிவுறா வேலைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆகவே மீளாய்வாண்டுக்கான தேய்மானம் மற்றும் நிறுத்திவைத்த உழைப்புகள் என்பன முறையே ரூபா 27.99 மில்லியன் மற்றும் ரூபா 195.98 மில்லியன் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன.

(ஐ) 2014 இல் நிறைவடைந்த புத்தளம் நிலக்கரி மின்வலுச் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 179.19 மில்லியன் மொத்தக் கிரயம் கொண்ட வாகனங்கள் மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக இதுவரை முடிவுறா வேலைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆகவே நிறுத்திவைத்த உழைப்புகள் ரூபா 179.19 மில்லியன் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

(ஔ) பதிவழிக்கப்பட்ட மீதிகளுக்கு எதிராக இறுதியாக்கப்பட்ட மொத்த வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 18.76 மில்லியன் வட்டி வருமானம், பெ.சே.வ. மற்றும் மிகைக்கட்டணம் என்பன கடன்பட்டோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. எனவே கடன்பட்டோர் மீதிகள் ஒத்த தொகையால் குறைத்து கூறப்பட்டுள்ளது.

(ஓ) ரூபா 30.56 மில்லியன் தொகையான அறவிட முடியாத தெரு விளக்கு பராமரிப்பு செலவுகளிற்கான ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஃ) ரூபா 29.97 மில்லியன் செலுத்த வேண்டிய மீதி, தவறுதலாக கொழும்பு நகர அலுவலகத்திலுள்ள சேகரிப்பு கட்டுப்பாட்டு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. எனவே கடன்பட்டோர் மீதி ஒத்த தொகையால் குறைத்து கூறப்பட்டுள்ளது.

(க) 2021 சனவரி 01 முதல் 2021 சனவரி 15 வரையிலான காலத்திற்குரிய வருவாயை மீளாய்வாண்டின் வருவாயாக அங்கீகரித்தமையால் சில்லறைக் கடன்பட்டோர் மீதி ரூபா 585.69 மில்லியன் தொகையால் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது. எனவே ஆண்டிற்கான வருவாயும் அதே தொகையால் மிகைப்படுத்தப்பட்டிருந்தது.

(கா) உரிமை கோரக்கூடிய காலம் முடிவடைந்துள்ள ரூபா 1.57 பில்லியன் பொருளாதார சேவை கட்டணம் (ESC) வருமான கூற்றுக்கு தாக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, அதே அளவு தொகையால் நட்டம் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.

(கி) அசாதாரண செலவு மீதித் தொகையை எதிரீடு செய்தமையால், விநியோகப் பிரிவிலுள்ள முடிவுறா வேலை ரூபா 52.06 மில்லியன் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(கீ) சம்பந்தப்பட்ட செலவுகளுக்கு மாற்றப்படாமல், ரூபா 912.69 மில்லியன் தொகை ஒரு வருடத்திற்கும் மேலாக வழிச்சரக்குக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. எனவே அதே அளவு தொகையால் நட்டம் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அசாதாரண செலவு மீதியான ரூபா 245.53 மில்லியன் தொகை அகற்றப்படாது வழிச்சரக்குக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

(கு) 12 வாகனங்கள் நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தமையால் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு என்பன குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

(கூ) களனிதிஸ்ஸ ஒருங்கிணைந்த சுழற்சி மின்வலு நிலையத்துடன் தொடர்புடைய பூரணப்படுத்தப்படாத சொத்துகளின் செலவுகளை மூலதனமாக்கியமையால், மின்வலு நிலையத்தின் பெறுமதி ரூபா 175.10 மில்லியனால் மிகைத்துக் கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த பூரணப்படுத்தப்படாத சொத்துடன் தொடர்புடைய ரூபா 323.28 மில்லியன் மூலதனச் செலவு தொகை மற்றும் ரூபா 27.04 மில்லியன் தேய்மானத் தொகை என்பன மீளாய்வாண்டில் வருமான கூற்றுக்கு தாக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே ஆண்டிற்கான நட்டம் ரூபா 350.32 மில்லியன் தொகையால் அதிகரித்தும் முடிவுறா வேலைகள் கணக்கு மீதி ரூபா 498.38 மில்லியன் தொகையால் குறைத்தும் கூறப்பட்டிருந்தன.

(கெ) 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் பூரணப்படுத்திய சொத்துக்களுடன் தொடர்புடைய ரூபா 54.14 மில்லியன் தேய்மானத் தொகை மீளாய்வாண்டில் பிறப்பாக்கப் பிரிவில் செலவுகளாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனவே மீளாய்வாண்டின் நட்டம் அதே தொகையால் மிகைப்படுத்தப்பட்டிருந்தது.

(கே) 2015 ஆம் ஆண்டு முதல் முடிக்கப்படாதுள்ள ரூபா 167.25 மில்லியன் மதிப்புள்ள இரண்டு செயற்திட்டங்கள் அகற்றப்படாது முடிவுறா வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன.

(கொ) அனல் மின் கொள்வனவு அட்டுறுக்கள் தொடர்பில் மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 0.99 பில்லியன் தொகையால் மிகைத்துக் கூறப்பட்டிருந்தது.

(கோ) 77.2 புறா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்வனவு விடுபட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 1.1 பில்லியன் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ச) 2019 ஆம் ஆண்டில் ரூபா 212 மில்லியன் தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட 12.2 புறா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி 2020 ஆம் ஆண்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்வனவு கணக்கிற்கு பதியப்பட்டிருந்தது. ஆகையால், ஆண்டிற்கான நட்டம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(சா) 15 வருட ஒப்பந்த காலம் முடிவடைந்திருந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியாளர்களிடமிருந்து 2020 திசெம்பர் 31 வரை கொள்வனவு செய்யப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்காக செலுத்த வேண்டிய ரூபா 808 மில்லியன் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆதலால், ஆண்டிற்கான நட்டம் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(சி) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான தாமதக் கொடுப்பனவு வட்டி ரூபா 2,481 மில்லியன் ஆனதுடன் மீளாய்வாண்டிற்கான சான்றுறுதிப்படுத்திய தாமதக் கொடுப்பனவு வட்டிக் கணிப்பீடுகளின் படி அத்தொகை ரூபா 2,885 மில்லியன் ஆகும். ஆகையால், ஆண்டிற்கான நட்டம் ரூபா 404 மில்லியன் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(சீ) கைதவிர்க்கப்பட்ட ரூபா 14 மில்லியன் தொகையான நிலையான சொத்துக்கள் பரிமாற்றப் பிரிவின் நிலையான சொத்துக்களில் தற்போதும் காண்பிக்கப்பட்டுள்ளது.

(சு) இரண்டு தரப்பினர்களினாலும் கைச்சாத்திட்ட உடன்படிக்கை இல்லாமை காரணமாக 2020 மார்ச் மாதத்தில் உறவுமுறைத் தரப்பினரிடமிருந்து கிடைத்த ரூபா 2 பில்லியன் கடன் தொகையின் காணப்படும் தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை. ஆகையால், கடன் மீளளித்தல் தொடர்பில் நிதி நிலைமைக் கூற்றுக்கான தாக்கத்தை அளவிட முடியவில்லை.

(சூ) நிலக்கரி கப்பலேற்றல் கட்டணத்திற்கான ரூபா 63.56 மில்லியன் ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால், ஆண்டிற்கான நட்டம் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(சொ) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரித்து உண்மையாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. இருப்பினும், சபையால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் காரணமாக இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்கள் 2013 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக மீளமைக்கப்பட்டு வரப்படுகின்றது.

(சோ) ரூபா 557.94 மில்லியன் வரவு மீதியொன்றும் ரூபா 556.81 மில்லியன் செலவு மீதியொன்றும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரிவுகளிற்கு இடையிலான நடைமுறைக் கணக்கு மீதியாக 2002 இலிருந்து அகற்றப்படாது வைத்திருக்கப்பட்டுள்ளது.

(ட) கடன் செயன்முறைப்படுத்தல் கட்டணமான ரூபா 1.25 மில்லியன் தொகையொன்று வருமனக் கூற்றிற்கு சாட்டுவதற்குப் பதிலாக கடன் மீதிக்கு சாட்டப்பட்டிருந்தது. ஆகையால், மீளாய்வாண்டிற்கான நட்டமும் கடன் மீதியும் ஒத்த தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

### 1.2.3.3 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

(அ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இ.ம.ச. இன் நிதிக்கூற்றுக்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டியதாக காட்டப்பட்ட மீதிக்கும் அத்திகதியில் உள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டியதாக காட்டப்பட்ட நேரொத்த மீதிக்கும் இடையில் ரூபா 753.61 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

மேலும், இந்த விடயம் 2013 முதல் தொடர்ச்சியாக கடந்தகால கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கூட இச்சிக்கல் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விலைப்பட்டியலிடல் முறைமையிலும் அதே போல் நிதிக்கூற்றுக்களிலும் சில மீதிகள் தவறவிடப்பட்டதன் காரணமாக விநியோகப் பிரிவு 01, 02, 03 மற்றும் 04 இன் விலைப்பட்டியலிடல் முறைமையில் காட்டப்பட்ட 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளிற்கும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த தொகைக்கும் இடையில் ரூபா 41.18 மில்லியன் கூட்டுமொத்தமான கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. மேலும், ரூபா 423.76 மில்லியன் தொகை 2012 ஆம் ஆண்டு முதல் இனங்காணப்படாது வைத்திருக்கப்பட்டுள்ளது.

(இ) 2020 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு சேகரிப்பு கட்டுப்பாட்டு பேரேட்டுக் கணக்கிலுள்ள ரூபா 2,343 மில்லியன் மற்றும் ரூபா 149 மில்லியன் வரவு மற்றும் செலவு மீதிகளிற்கான கணக்கிணக்கம், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே சேகரிப்புக் கட்டுப்பாட்டு கணக்கிலுள்ள மீதிகளின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை.

(ஈ) ரூபா 117.58 மில்லியன் தொங்கல் மீதியின் தன்மையினை இனங்காண்பதற்காக அந்த மீதியுடன் தொடர்புடைய வயது பகுப்பாய்வு மற்றும் விபரமான பட்டோலை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையால் வாடிக்கையாளருக்கான தவறான கட்டண முறைப் பிரயோகம் காரணமாக ரூபா 38.76 மில்லியன் தொகை 2019 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்படுகின்றது.

(ஊ) நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள செலுத்தவேண்டிய அனல்மின் - சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களுடன் தொடர்புடைய மீதிக்கும் தீர்க்கப்படாத சான்றுறுதிப்படுத்திய பட்டியல்களின் மீதிகளிற்கும் இடையே ரூபா 5.9 பில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து, சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது குழுமத்தின் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் குழுமத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

குழுமத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் குழுமத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் குழுமத்தின் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்த ஒன்றித்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி குழுமத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக குழுமத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக குழுமத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் குழுமம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.
- ஒன்றித்த நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

### 2.1 சபையின் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு அப்பாற்பட்டு சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்த தொழிற்பாடுகள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை சபை பேணி வந்திருந்தது.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.
- இந்த அறிக்கையின் 1.2.1 (அ)இ (ஷ)இ (ஸ)இ (ஆ)இ (இ)இ 1.2.2இ 1.2.3 (அ)இ (ஆ)இ (இ)இ (ஈ)இ (உ)இ (ஊ)இ (எ)இ (ஏ)இ (ஐ)இ (கா)இ (சீ)இ (சு)இ 1.2.4 (அ)இ (ஆ)இ (இ)இ (ஈ) ஆம் பந்திகளிலுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஷ)(ஈ)(ii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள

**இலங்கை மின்சார சபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்**

**1. ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தகவல் பந்தி

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**1.2.1 வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்வலுக் கம்பனியின் (டிபிசிஎல்) கணக்காய்வாளர் அதன் நிதிக்கூற்றுக்கள் மீது பின்வரும் கருத்திலெடுக்க வேண்டிய விடயங்களை சுட்டிக் காண்பித்திருந்தார்.**

**கம்பனியின் தொடந்தியங்கும் இயலுமை எண்ணக்கரு தொடர்பில் குறிப்பிடத்தக்க பொருண்மையான நிச்சயமற்றதன்மை நிலவுகின்றமை**

50 மெகாவாட் சூரிய சக்தி மற்றும் 500 மெகாவாட் எல்.என்.ஜி மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்க அமைச்சரவை 2018 மே மாதத்தில் அங்கீகாரம் வழங்கியிருந்து. சாம்பூர் இல் ஒதுக்கப்பட்ட இடத்தைப் பயன்படுத்தி 50 மெகாவாட் சூரியசக்தி மின்வலு ஆலையை டிபிசிஎல் ஆல் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. மேலும், என்பிரீசீ மற்றும் இ.மி.ச. இனால் 50:50 பங்குகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய கம்பனியினால் கெரவலபிடியவில் 500 மெகாவாட் எல்.என்.ஜி மின் உற்பத்தி நிலையம் உருவாக்கப்படும்.

கடந்த காலங்களில் நடைபெற்ற டிபிசிஎல் இன் பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் இந்த விடயம் தொடர்ந்து விவாதிக்கப்பட்டதுடன் தற்போது டிபிசிஎல் இல் சூரியசக்தி திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு டிபிசிஎல் இன் அமைப்பு அகவிதியை திருத்துவதற்கு பணிப்பாளர் சபை முடிவு செய்துள்ளது. சூரிய சக்தி திட்டத்தை தொடங்குவதற்காக இ.மி.ச. இற்கும் இந்தியாவின் நெ'னல் தெர்மல் பவர் கம்பெனி லிமிடெட் (என்.டி.பி.சி) இற்கும் இடையே கூட்டு முயற்சியில் கையெழுத்திட தேவையான நடவடிக்கைகளை 2021 இல் பணிப்பாளர் சபை மேற்கொள்ளவுள்ளது. எவ்வாறாயினும், கூட்டு முயற்சி உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கு முன்பு சட்டமா அதிபரிடமிருந்து தேவையான சட்ட விளக்கங்கள் பெறப்படுதல் வேண்டும்.

இ.மி.ச. இற்கும் என்டிபிசி இற்கும் இடையிலான தொடர்ச்சியான கலந்துரையாடல்களுக்குப் பின்னர், இரு கட்சிகளும் 2019 அக்டோபர் 25 ஆம் தேதி கெரவலப்பிட்டியில் உள்ள எல்என்ஜி மின்நிலையத்தை மேம்படுத்துவதற்காக கூட்டு முயற்சியில் கையெழுத்திட்டன. மேலும், கம்பனியின் அகவிதிக்கான சட்டமா அதிபரின் தெளிவுபடுத்தல்கள் 2021 யூலை மாதத்தில் கிடைத்தது.

கொவிட் 19 இன் தாக்கம் காரணமாக கலந்துரையாடல்களின் செயல்முன்னேற்றம் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், எதிர்காலத்தில் முன்மொழியப்பட்ட திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று டிபிசிஎல் இன் பணிப்பாளர் சபை கருதுகிறது.

**1.2.2 பின்வரும் அவதானிப்புக்களை அடிப்படையாயகக் கொண்டு 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கீழ்வரும் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் மீது முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.**

**(அ) லங்கா மின்சார கம்பனி (பிரைவட்) லிமிடட் (லெகோ)**

**(i) எல்கேஏஎஸ் 1 இன் 32 ஆம் பந்தியின் படி, கம்பனி அதன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அல்லது வருமானம் மற்றும் செலவினத்தை எஸ்எல்எவ்ஆர்எஸ் ஒன்றினால் அனுமதித்தால் அன்றி எதிரீடு செய்தல் ஆகாது. இருப்பினும்,**

**வழங்குனரிடமிருந்து கிடைத்த ரூபா 64.3 மில்லியன் தாமதக் கட்டணங்கள் செயற்பாட்டுச் செலவினத்திற்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது.**

எதிர்காலத்தில் தாமதக் கட்டணங்கள் கால ரீதியாக பிரித்தெடுக்கப்பட்டு கொள்வனவுக் கிரயத்திற்கு எதிராக எதிரீடு செய்வதற்குப் பதிலாக ஏனைய வருமானமாகக் காண்பிக்கப்படும்.

**ரூபா 9,174,474 தொகையான வாடிக்கையாளர் செலவு மீதிகள் வியாபார பெறவேண்டியவைக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது.**

செலவு மீதி பெறுமதிகளை நிதிக் கூற்றுக்களில் புறம்பாகக் காணிபித்தல் நடைமுறைச் சாத்தியமற்றதாகும். கடன்பட்டோர் மீதிகளின் பெறுமதிகளுடன் ஒப்பிடுகையில் இச்செலவு மீதிகள் பொருண்மையானதாகக் காணப்படவில்லை.

பாவனையாளர்களால் செலுத்தப்பட்ட சூரியவலு கடன் தவணைகளே இச்செலவு மீதிகளிற்கான பிரதான காரணமாகும். ஊடன்படிக்கையின் பிரகாரம் சூரியவலு கடன் தவணைகள் உரிய காலத்தில் செலுத்தப்படுதல் வேண்டுமாயினும், பாவனையாளர்கள் இவற்றை வேறுபட்ட திகதிகளில் செலுத்துகின்றனர். ஆகையால், பட்டியலிடல் முறைமைக்கு இதனை இனங்காண முடியாதுள்ளது. இந்த குறித்துரைத்த திகதிகளின் பின்னர் கொடுப்பனவு முறைகளை ஒருங்கிணைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

இருப்பினும், செலவு மீதிகளை இனங்கண்டு அவற்றை தே.சே.வங்கிக்கு செலுத்துவதற்காக பட்டியலிடல் முறைமையிலிருந்து பல்வேறு அறிக்கைகளை உருவாக்குவதற்கு அவ்வப்போது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**ரூபா 9.4 மில்லியன் தொகையான முற்பணக் கொடுப்பனவுகளின் வரவு மீதி சில்லறைக் கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறுச் செலவினத்துக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது.**

2020.12.31 இல் உள்ளவாறு முறைமைக்கு பதியப்படாத நாணயக் கடிதங்களுடன் தொடர்புடைய ரூபா 8,772,473 பெறுமதியை இது உள்ளடக்குகின்றமையால் அத்தொகை கடன்கொடுத்தோரில் வரவு மீதியாகக் காட்டப்பட்டுள்ளது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

**(ii) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய சேமிப்பு வங்கியின் சூரிய பல சங்ராமய கடன்களுக்கான வட்டிச் செலவினம் ரூபா 37,420,500 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.**

அவதானிப்புடன் இனங்குவதுடன் 2021 ஆம் ஆண்டில் இது திருத்தப்படும்.

**(iii) நிதிக் கூற்றுக்களின் படி, 2020 திசெம்பர் 31 இல் உள்ளபடி நுகேகொட, நீர்கொழும்பு மற்றும் காலி கிளைகளின் நடைபெற்றுவருகின்ற மூலதன வேலைகளின் மீதிகள் முறையே ரூபா 215,834,467, ரூபா 29,970,666 மற்றும் ரூபா 77,226,400 ஆகும். இருப்பினும், நடைபெற்றுவருகின்ற மூலதன வேலைகளின் அறிக்கையின் படி, மேற்படி மீதிகள் முறையே ரூபா 237,329,923, ரூபா 35,308,260 மற்றும் ரூபா 65,301,260 ஆகும். அதன்படி, அந்த மீதிகளிற்கடையே முறையே ரூபா 21,495,456 ரூபா 5,337,952 மற்றும் ரூபா 11,925,140 வேறுபாடு காணப்பட்டது.**

2016 இல் ப்ரோன்டோ முறைமையின் முன்னைய பதிப்பிலிருந்து சில பதிவுகள் பெயர்த்தெடுக்கப்பட்டன. சில தொழில்களிற்கான பதிவுகள் வேலைக் கிரயமிடல் முறையில் இருதடவைகள் பதியப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது. இந்த இடைவெளிக்கு இதுவே காரணமாக இருக்கலாம். புரோண்டோ சிஸ்டம் சேவை வழங்குநர்களுடன் இந்த விடம் குறித்து ஐரீ திணைக்களம் விசாரித்து வருகிறது.

**(iv) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட கடன்பட்டோர் மீதிக்கும் பட்டியலிடல் முறைமையிலுள்ள மீதிக்கும் இடையே ரூபா 13.5 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது.**

அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. 2016 இல் முறைமையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றம் காரணமாக புரண்டோ இல் இந்த மீதி காண்பிக்கப்படுகின்றது. இந்த விடயம் கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு அதற்கேற்ப திருத்தம் மேற்கொள்ளப்படும்.

**(v) முறையே ரூபா 136.8 மில்லியன் மற்றும் ரூபா 67.9 மில்லியன் கால வைப்புக்கள் மற்றும் நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் மீளாய்வாண்டில் இனங்காணப்பட்டிருக்கவில்லை.**

குறித்துக் கொள்ளப்பட்டதுடன் 2021 இல் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படும்.

**(vi) ரூபா 6 மில்லியன் தொகையான காசு வைப்பு, வங்கி மேலதிகப்பற்றாக இனங்காணப்பட்டிருந்தது.**

2021 மார்ச் மாதத்தில் தேவையான சீராக்கம் கணக்குப் புத்தகங்களில் மேற்கொள்ளப்பட்டது.

**(vii) பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் (சுழரு) மற்றும் பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் மீதான தேய்மானம் என்பன முறையே ரூபா 10 மில்லியன் மற்றும் ரூபா 5.8 மில்லியனால் ஆல் அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.**

மாதாந்த வாடகை அடிப்படையில் லெகோ ஆல் பெறப்பட்ட நிலங்கள் மற்றும் கட்டிடங்களுக்கு கையெழுத்திடப்பட்ட வாடகை உடன்படிக்கையின் படி இந்த சுழரு மற்றும் கடன் வாங்கும் பொறுப்பு என்பன உருவாக்கப்பட்டது. முன்னைய ஆண்டிலிருந்து நடப்பாண்டுக்கு எதிர்பார்த்த குத்தகை கால மதிப்பீட்டின் வேறுபாடு காரணமாக இந்த கணக்கீட்டு இடைவெளி எழுவதுடன், அதன் விளைவாக தேறிய தற்போதைய பெறுமதி வேறுபாடுகளைக் கொண்டதாக உள்ளது. 2021 ஆம் ஆண்டில் கணக்கீடுகளை மறுபரிசீலனை செய்து கணக்கு புத்தகங்களில் பொருத்தமான சீராக்கல்களைச் செய்வோம்.

**(viii) மீளாய்வாண்டிற்கான வரையறுக்கப்பட்ட அன்டெ லெகோ மீற்றரிங் (தனியார்) கம்பனியின் வருமான வரிச் செலவினம் ரூபா 6 மில்லியன் ஒன்றித்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.**

அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டதுடன் தேவைப்படுமாயின் 2021 இல் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படும்.

**(ix) பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களின் ரூபா 48.7 மில்லியன் தொகையான பெறுமானத்தேய்வு இருப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது.**

RoU சொத்துக்களின் தேய்மானத்துடன் தொடர்புடைய கணக்கீட்டுப் பதிவுகள் பொதுப் பேரேட்டுக் கணக்குகளிற்கு சரியாக பதிவிடப்பட்டன. இருப்பினும், நிதிக் கூற்றுக்களில் கைடத் தயாரிக்கையில் இந்த பொதுப் பெரேட்டுக் குறியீடுகள் தவறுதலாக இருப்பு மீதிக்கு பதவியப்பட்டது. இந்த வழுவை 2021 இல் நாம் திருத்துவோம்.

**(x) பாதுகாப்பு வைப்பு மீது கிடைத்திருந்த ரூபா 8.7 மில்லியன் வட்டியானது முதலீடுகளின் மீது பெறப்பட வேண்டிய வட்டியின் கீழ் பிழையாக பதியப்பட்டிருந்தது.**

தேவையான சீராக்கல்கள் 2021 இல் மேற்கொள்ளப்படும்.

**(xi) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வ.ஃப. லங்கா புரோட் பேன்ட நெட்வேர்க் (தனியார்) கம்பனியின் சாதாரண பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 5 மில்லியன் தொகையான முதலீட்டுடன் தொடர்புடைய பங்குச் சான்றிதழை அல்லது வேறு ஏதேனும் போதியளவு பொருத்தமான கணக்காய்வுச் சான்றை பெற்றுக்கொள்ள முடிந்திருக்கவில்லை.**

பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் இந்தக் கம்பனியால் முதலீடுகளிற்கான பங்குச் சான்றிதழ்கள் வழங்கப்படாமையால் அதனை அறவிடுவதற்கான சட்ட ஆலோசனையினை சட்டமா அதிபரிடமிருந்து லெகோ கோரியுள்ளது.

**(ஆ) லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட் (எல்சீசீ)**

**(i) பொருளாதார சேவை கட்டணம் (இஎஸ்சி) தொடர்பான ரூபா 159.54 மில்லியன் மதிப்பீடு மற்றும் ரூபா 75.46 மில்லியன் அபராதங்கள் குறித்த எந்த தகவலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.**

நுளுஊ இன் தீர்ப்பனவுக் காலத்தை நீடிக்கக் கோரி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டதுடன் இது தொடர்பாக ஒரு இணக்கப்பாடு ஏற்படும் வரை நுளுஊ இன் தீர்ப்பனவு தொடர்பில் கம்பனிக்கு எதிராக எந்தவொரு அறவீட்டு நடவடிக்கையையும் அல்லது எந்தவொரு வரியையும் விதிக்க வேண்டாம் எனவும் கோரப்பட்டுள்ளது.

**(ii) இ.மி.ச. இடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 12.07 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2.5 மில்லியன் வரவு மீதியினைக் கொண்ட தொங்கல் கணக்கில் வைத்திருக்கப்பட்டுள்ளதுடன் 2020.01.01 இல் உள்ளவாறான ஆரம்ப மீதி ரூபா 4.67**

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

**மில்லியன் ஆகும். மீளாய்வாண்டில், எந்த காரணமும் இல்லாமல் கம்பனி ரூபா 1.6 மில்லியனை மேற்படி தொங்கல் கணக்கில் வரவிலும் ரூபா 7.7 மில்லியன் தொகையை செலவிலும் பதிந்திருந்தது.**

உள்ளகக் கண்காய்வு அறிக்கைளின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்த வழுக்களைத் திருத்துவதற்காக மேற்படி பதிவகள் மேற்கொள்ளப்பட்டன.

**(iii) நிலக்கரியை இறக்குமதி செய்யும் போது, சுங்கத்தின் நோக்கத்திற்கான பெறுமதியை மதிப்பிடுகையில், ஒரு கற்பனையான சீராக்கமாக உண்மையில் ஏற்பட்டிருக்காத 10 சதவீத வரி எல்லை சேர்க்கப்பட்டுள்ளது.**

இ.மி.ச. இற்கு வெற் விலைப்பட்டியல்களை வழங்குகையில் சுங்கத் தீர்வையினை கிரயத்துடன் சேர்ப்பதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் எல்சீசீ இற்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரின் பங்குபற்றலுடன் 2018 ஜூன் 28 அன்று அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து இந்த விலை நிர்ணய முறை பின்பற்றப்பட்டது. இ.மி.ச. இற்கான விலைப்பட்டியலிலுள்ள வெற் வரிக்கான எல்சிசி இன் பெறுமதி அடிப்படையானது சுங்க நோக்கங்களுக்கான பெறுமதியை விட குறைவாக இருக்கக்கூடாது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தரால் கூறப்பட்டமை பதிவுசெய்து வைக்கப்பட்டுள்ளது. ஆகையால், 10% தொகை உள்நாட்டு இறைவரி உத்தியோகத்தரின் உத்தரவின் பேரிலேயே சேர்க்கப்படுகின்றது. அன்றுமுதல், இ.மி.ச. இந்த உத்தரவை சவால் செய்து, 2018-09-07 திகதிய அதனது கடிதத்தின் மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிவித்திருந்த போதிலும், அதற்கான பதில் இன்னும் கிடைக்கவில்லை. அதுவரையிலும் நாங்கள் விலைப்பட்டியலில் 10% சுங்க தீர்வையைச் சேர்த்துள்ளோம். ஆனால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தீர்ப்புக்காக காத்திருக்கப்பட்டுள்ளமையால் மேலதிக வெளியீட்டு வெற் தொகை அனுப்பப்படவில்லை. எனவே வருமானம் அதிகரித்துக் கூறப்பட்டமைக்கு இதுவே காரணமாகும்.

**(iv) 2020.12.31 இல் உள்ளவாறு இ.மி.ச. இடமிருந்து பெறப்பட வேண்டிய இறுதி பெ.சே.வரியும் ஏனையவைகளும் மற்றும் வியாபாரக் கடன்பட்டோர் என்பன முறையே ரூபா 197.45 மில்லியன் மற்றும் ரூபா 12.07 மில்லியன் ஆகும். எனினும், அது இ.மி.ச. ஆல் உறுதிப்படுத்தப்படவில்லை.**

**இ.மி.ச. இடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 197,452,711 இறுதி பெ.சே.வரியும் ஏனையவைகளும்:**

இலங்கை சுங்கம் நடத்திய விசாரணையின் படி, 2016.09.19 முதல் 2018.04.09 வரையிலான காலகட்டத்தில் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியின் சரியான கொடுக்கல் வாங்கல் பெறுமதிகளை லங்கா கோல் கம்பனி வெளிப்படுத்தியிருக்கவில்லை. எல்சிசி மற்றும் இ.மி.ச. இன் உத்தியோகத்தர்கள் சுங்க உத்தியோகத்தர்களின் வழிகாட்டுதல்களின் படி செலுத்தவேண்டிய ப.சே.வ. இனை கணிப்பிட்டிருந்ததுடன் 123 மற்றும் 154 கப்பலேற்றல்களிற்காக ரூபா 195,780,909 இனை செலுத்தவேண்டுமென்பதனை கண்டறிந்தனர். அதற்கும் மேலாக, குறித்த கப்பலேற்றல்கள் தொடர்பில் ரூபா 1,671,802 நாணயமாற்று நட்டத்தை செலுத்துமாறு எல்சிசி கேட்கப்பட்டிருந்தது. தற்போது மேற்படி செலுத்த வேண்டியெ ப.சே.வ. எதிர்கால தீர்ப்பனவுக்காக தொடர்ந்து பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றது.

**வியாபாரக் கடன்பட்டோரின் பொழிப்பு (இ.மி.ச.) - நீராவி நிலக்கரி ரூபா 12,073,788 கீழே தரப்பட்டுள்ளது.**

- இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டிய ரூபா 2,563,287: 2017 ல் இ.மி.ச. உடன் கணக்கைத் தீர்த்த பிறகு மீதமுள்ள தொகையாகும். ஆதாரம்/தோற்றம் குறித்து மேலும் ஆராயப்படுகிறது.
- வியாபாரக் கடன்பட்டோரின் (இ.மி.ச.) நீராவி நிலக்கரி ரூபா 7,750,000: இ.மி.ச. சார்பாக மெர்கேட்டர் கம்பனிக்கு செலுத்தப்பட்ட தொகை. ஆதாரம்/தோற்றம் குறித்து மேலும் ஆராயப்படுகிறது.
- இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டிய ஏனையவை ரூபா 1,760,500: 2017 ல் இ.மி.ச. உடன் கணக்கைத் தீர்த்த பிறகு மீதமுள்ள தொகையாகும். ஆதாரம்/தோற்றம் குறித்து மேலும் ஆராயப்படுகிறது.

**(v) 2020.12.31 இல் உள்ளவாறு நீண்டகாலமாக நிலுவையில் உள்ள ரூபா 10,624,394 பெறவேண்டிய முகாமைத்துவக் கட்டணத்தின் ஐயப்பாட்டிற்காக கம்பனி எந்தவொரு ஏற்பாட்டையும் செய்திருக்கவில்லை.**

எல்சிசி பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் இந்த விடயம் நிவர்த்தி செய்யப்படும்.

**(vi) 2016 செப்தெம்பர் 19 முதல் 2018 ஏப்ரல் 09 வரையிலான கால கட்டத்தில் நிலக்கரி இறக்குமதியின் சரியான கொடுக்கல் வாங்கல் பெறுமதியை அறிவிக்காதது குறித்து ரூபா 205,000,000 தொகையை கம்பனி இலங்கை சுங்கத்திற்கு தண்டமாக செலுத்தியிருந்தது.**

இலங்கை சுங்கம் நடத்திய விசாரணையின் படி, 2016.09.19 முதல் 2018.04.09 வரையிலான காலகட்டத்தில் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியின் சரியான கொடுக்கல் வாங்கல் பெறுமதிகளை லங்கா கோல் கம்பனி வெளிப்படுத்தியிருக்கவில்லை. அக்காலத்தில் அனைத்து சுங்க விடயங்களையும் சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷ்ன் (சி.எஸ்.சி) கையாண்டிருந்ததுடன் அதற்காக ஒரு கப்பலேற்றலுக்கு ரூபா 1,000,000 கட்டணம் வசூலித்திருந்தது. மேற்படி தவறான வெளிப்படுத்தலுக்காக இலங்கைச் சுங்கம் எல்சிசி இற்கு ரூபா 205,000,000 அபராதம் விதித்ததுடன் இலங்கைச் சுங்கத்தின் விசாரணை அதிகாரிகள் எல்சிசி அதிகாரிகளுக்கு இந்த கட்டணத்திற்குப் பின்னர் இறுதி வெற் கட்டணம் எதனையும் செலுத்தத் தேவையில்லை என்று தெரிவித்திருந்தனர்.

எல்சிசி ஏற்கனவே சம்பந்தப்பட்ட ஏற்றுமதிகளுக்காக ரூபா 37,594,744 தொகையான வெற் இனை செலுத்தியுள்ளதுடன் நிலக்கரி இறக்குமதிகளை விடுவிப்பதற்கு சுங்கம் அனுமதிக்காமையால் இ.மி.ச. வழங்கிய நிதியைப் பயன்படுத்தி ரூபா 205 மில்லியன் தொகையினை இலங்கை சுங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலைக்கு அது தள்ளப்பட்டிருந்தது.

**(vii) தௌரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் கம்பனி லிமிடட் (TISCL) இடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 539.19 மில்லியன் தொகையினைஇலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் (CECL) ஊடாக அறவிடுவதற்கு கம்பனி தவறியிருந்தது.**

தூரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் ஒரு உயர் மட்டக் குழுவால் கையாளப்பட்டது. இக்கடனை ஐயக்கடன் என்று குழு கருத்து தெரிவிக்காததுடன் நிலக்கரியை வழங்குவதன் மூலம் நிலுவைத் தொகையை தீர்ப்பதற்கு கொள்வனவாளர் கூட ஒப்புக் கொண்டுள்ளார். எங்கள் வசம் உள்ள தகவல்களின்படி, அமைச்சரவையால் தீர்மானிப்பதற்காக தீர்வுத்திட்ட முன்மொழிவொன்று

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சிலோன் ீப்பிங் கார்ப்பரே'ன் இடமிருந்து (தூரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் கம்பனி லிமிடெட்) பெற வேண்டிய நிலுவைத் தொகையின் தற்போதைய நிலை அமைச்சரவைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் தூரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் கம்பனியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக திறைசேரி (தலைவர்), சிலோன் ீப்பிங் கார்ப்பரே'ன், லக்விஜய மின் உற்பத்தி நிலையம் மற்றும் லங்கா கோல் கம்பனி ஆகியவற்றின் நான்கு உறுப்பினர்களை அமைச்சரவை நியமித்திருந்தது. மேலும், குழுவின் பரிந்துரைகளை துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சு மூலம் மீண்டும் அமைச்சரவையில் சமர்ப்பிக்க அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளதுடன் அது இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை.

**(viii) இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டிய ரூபா 578.67 மில்லியன் தொகையான ஈ.எஸ்.சி மற்றும் ரூபா 18.07 மில்லியன் சில்லறைக் கடன்பட்டோர், நோபல் ரிசோர்சஸ் இன்டர்நே'னல் பிரைவேட் லிமிடெட் இடமிருந்து பெறத்தக்க ரூபா 1.1 மில்லியன் மற்றும் வியாபாரக் கடன் கொடுத்தோர் - நோபல் ரிசோர்சஸ் இன்டர்நே'னல் பிரைவேட் லிமிடெட் ரூபா 85.89 மில்லியன் தொகை மற்றும் லிபர்டி கொமோடிரீஸ் இடமிருந்து பெறப்பட வேண்டிய 50 சதவீத எஸ்ஜிஎஸ் கட்டணமான ரூபா 8.04 மில்லியன் என்பவற்றை மெய்மையாய்வு செய்வதற்குத் தேவையான மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் தொடர்புடைய சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.**

**i. இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டிய நுளுஊ: ரூபா 578.67 மில்லியன்**

நுளுஊ இன் தீர்ப்பனவுக் காலத்தை நீடிக்கக் கோரி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது.

**ii. சில்லறைக் கடன்பட்டோர் ரூபா 18.07 மில்லியன்**

அறவிட முடியாத டேவு மற்றும் ீயுடு இன் தொகை ரூபா 17.83 மில்லியன் ஆகுமென ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்தது. ஆதாரம்.்.தோற்றம் குறித்து மேலும் ஆராயப்படுகிறது.

**iii. நோபல் வளங்களிலிருந்து பெறத்தக்க ரூபா 1.1 மில்லியன்**

நோபல் வளங்களுக்காக ரூபா 85.89 மில்லியன் செலவு மீதி காணப்படுவதுடன் அதற்கு எதிராக இந்த கடன்பட்டோர் மீதியை நாங்கள் எதிரீடு செய்வோம்

**iv. வியாபார கடன்கொடுத்தோர் நோபல் வளம் ரூபா 85.88 மில்லியன்**

நாணயக் கடிதத்தின் செல்லுபடியாகும் காலம் காலாவதியானதன் காரணமாக நோபல் ரெசோர்சஸ் இன்டெல் இன்டர்டிரான் லிமிடெட் இனால் குறைவாகப் பற்றிய மீதியை பிரதானமாக இத்தொகை கொண்டுள்ளது.

**v. லிபர்ட்டி கமாடிடிஸ் லிமிடெட்டில் இருந்து பெறப்பட வேண்டிய 50மூ ளுபுளு கட்டணங்கள்: ரூபா 8.04 மில்லியன்**

2015.்.16 பருவத்தில் 17 கப்பல்களுக்கான வெளியேற்ற துறைமுகத்தில் விதிக்கப்பட்ட வரைவு கணக்கெடுப்பு கட்டணத்தை இது உள்ளடக்குகின்றது. கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தக் கட்டணத்தைச் செலுத்துமாறு லிபர்ட்டி கமாடிடிஸ் லிமிடெட்டிற்கு ஒரு மின்னஞ்சல் 2019 இல் அனுப்பப்பட்டது. இந்த விவகாரத்தில் நடுவர் செயல்முறை இடம்பெற்று வருகின்றது.

(ix) எதிர்வரும் நிதியாண்டிற்காக இ.மி.ச. ஆல் செலுத்தப்பட்ட ரூபா 285,375,105 கப்பலேற்றல் மற்றும் பெ.சே.வ. கட்டணத்தை வெவ்வேறாக வெளிப்படுத்தாது அத்தொகை, “அனல் நிலக்கரி கப்பலேற்றலுக்கான வியாபாரக் கடன்பட்டோர் (இ.மி.ச.)” கணக்கிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது.

எல்சிசியின் தற்போதைய கணக்கு வைத்தல் முறைகளின்படி ஒவ்வொரு நிலக்கரி பருவத்திற்குமாக கணக்கீடு மேற்கொள்ளப்படுகின்றது. 2020-21 பருவத்திற்கான தேறிய பெறுமதியே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இ.மி.ச. இடமிருந்து பெற வேண்டிய மீதியாகக் காட்டப்பட்டுள்ளது.

கணக்காய்வில் காட்டப்பட்டுள்ளபடி, ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய தேறிய மீதி வெளிப்படுத்தப்பட்ட போதிலும், இ.மி.ச. இடமிருந்து பெறப்பட வேண்டிய மொத்த தொகை மற்றும் பெறப்பட்ட முன்பணங்கள் தனித்தனியாக வெளிப்படுத்தப்படவில்லை. அடுத்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் பெறப்பட்ட முற்பணங்களை தனித்தனியாக வெளிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**(x) நிதிக் கூற்றுக்களில் எந்தப் பொறுப்பும் இல்லாமல் கம்பனி 2019 ஆம் ஆண்டில் சிலோன் ீப்பிங் கார்ப்பரே'ன் லிமிடெட் (ஊளுஊடு) ஊடாக மெர்கேட்டர் சிங்கப்பூர் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு ரூபா 4,000,000 தொகையை செலுத்தியிருந்தது.**

2019 ஆம் ஆண்டில் இலங்கை கப்பல் கூட்டுத்தாபன லிமிடெட் ஊடாக மெர்கேட்டர் சிங்கப்பூர் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு இந்த பணம் செலுத்தப்பட்டதுடன் மெர்கேட்டர் பொறுப்பின் ஆதாரம்.்.தோற்றம் குறித்து ஆராயப்பட்டு, அதற்கமை அதனுடன் தொடர்புடைய பதிவுகளை ஊளுஊ க்கு அனுப்பி வைக்கப்படும்.

**(xi) கம்பனி கப்பலேற்றல் இல. 123 இற்கான சுங்க பெ.சே.வ. ஆக ரூபா 136,236,370 தொகையை செலுத்தியிருந்தது. எனினும், சுங்கத்தின் படி, உண்மையான பெ.சே.வ. தொகை ரூபா 106,969,404 மில்லியன் ஆகும். எனவே, மேலதிகமாகச் செலுத்திய தொகை ரூபா 29,266,965 ஆகும்.**

மேலதிகமாகச் செலுத்திய ரூபாடி 29,266,965தொகைக்கான பின்வரும் ஆவணங்கள் இலங்கை சுங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன.

- 2016.11.09 ஆந் திகதி 1183769 ஆம் இலக்க ஆஎ.ளுவயச ுரவயள தொடர்பான இறுதி சுங்க வெளிப்படுத்துகை (சுங்க பிரகடனம்)
- இறுதி ஏயுவு கணிப்பீடு
- 2021 பெப்ரவரி 10 ஆந் தேதியிட்ட சமீபத்திய சுங்க மீளளித்தல் கடிதத்தின் நகல்.

**1.2.3 இலங்கை மின்சார சபையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்ஏஎஸ்ஃஎஸ்எல்எவ்ஆர்எஸ்) மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்குதல்**

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

## (அ) நிதிசார் அறிக்கையிடலுக்கான எண்ணக்கருவாக்க சட்டகம்

**(i&ii) சட்டகத்தின் 4.1 (ஆ) மற்றும் 4.3 ஆம் பந்திகளுக்கு முரணாக, சபைக்கு ஏற்பட்ட கிரயத்திற்கும் குறிப்பிட்ட வருமான உழைப்புக்கும் இடையே நேரடி தொடர்பு இல்லாத மற்றும் தனிப்பட்ட நிறுவனத்தின் நிர்வாகச் செலவுகளான ரூபா 43.97 மில்லியன் தொகை இ.மி.ச. ஆல் பொறுப்பேற்கப்பட்டிருந்தமை மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரமும் சொத்தின் உரிமையும் இ.மி.ச. இற்கு காணப்படுகின்ற ரூபா 8 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் வேறொரு நிறுவனத்தால் பயன்படுத்தப்படுகின்றமை.**

சேமலாப மற்றும் ஓய்வூதிய நிதியத்தை நிறுவும் அதிகாரத்தை இலங்கை மின்சார சபை சட்டத்தின் பிரிவு 12 (த), சபைக்கு வழங்கியுள்ளது. எனவே, இ.மி.ச. இன் ஊழியர்களுக்கான சேமலாப நிதியத்தை நிறுவுதல் என்பது இ.மி.ச. இன் தீர்மானமாகும்.

2003 திசெம்பர் 31 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சேமலாப நிதியத்தின் 5 ஆம் இலக்க விதியின் படி, சபையால் நியமிக்கப்பட்ட குழுவால் நிதியம் முகாமை செய்யப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றமையால் நிதியத்தை முகாமைத்துவம் செய்து நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு சபைக்கு காணப்படுகின்றது. ஆகையால், நிதியத்தை முகாமைத்துவம் செய்து நிர்வகிப்பதற்கான செலவுகள் இ.மி.ச. ஆல் பொறுப்பேற்கப்படுகின்றது.

மேலும், மேற்படி விதிகளின் 20 (e) ஆம் இலக்க உட்பிரிவின் படி, வீட்டுக் கடன்களை பரிசோதிப்பதுடன் தொடர்புடைய செலவுகளைத் தவிர்த்து, நிதியத்தின் அனைத்து நிர்வாகச் செலவுகளும், இ.மி.ச. ஆல் பொறுப்பேற்கப்படுவதுடன் இந்தக் கொள்கை நிதியத்தின் ஆரம்பத்தில் இருந்தே (1969 நவம்பர் 01 முதல்) நடைமுறையில் இருக்கின்றது. எனவே சேமலாப நிதியம் சார்பாக இ.மி.ச. ஆல் செய்யப்பட்ட செலவுகள் நிதியத்தின் நிதி கூற்றுக்களில் பதிவு செய்யப்படவில்லை.

இந்த விடயம் நிதியத்தின் முகாமைத்துவக் குழு கூட்டத்தில் 2021 பெப்ரவரி 11 அன்று முன்வைக்கப்பட்டது, அதற்கமைய தற்போதைய நடைமுறையினை தொடர்வதற்கு குழு தீர்மானித்ததுடன், அதற்காக சபையின் ஒப்புதலை பெறவும் முடிவு செய்யப்பட்டது. ஆதற்கமைய, ஒரு சபை விஞ்ஞாபனம் இ.மி.ச. இன் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் இந்த விடயத்தை விரிவாகக் கருத்தில் கொண்டு, நிதியத்தின் முகாமைத்துவ மற்றும் நிர்வாகச் செலவுகளைச் செய்வதற்கான தற்போதைய கொள்கையைத் தொடர்வதற்கு சபை ஒப்புதல் அளித்துள்ளது.

**iii. சொத்தின் உரிமையுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இன்மை காரணமாக தலைமை அலுவலகக் கட்டிடக் காணியின் உரிமைத்துவத்தை மெய்மையாய்வு செய்ய முடியாதுள்ளது.**

இ.மி.ச. இன் தலைமை அலுவலக கட்டிடம் அமைந்துள்ள நிலத்தின் உரிமைக்கான உரிய ஆவணங்கள் கிடைக்கவில்லை. எனவே, இ.மி.ச. இன் தலைமை அலுவலக கட்டிடத்தின் உரிமையை உருவாக்கவதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு இ.மி.ச. காணிகள் ஆணையாளரைக் கோரியுள்ளது.

## (ஆ) எல்கேஏஎஸ் 2 - இருப்புக்கள் மற்றும் எல்கேஏஎஸ் 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

**இ.மி.ச. ஆனது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக ஏற்பட்ட மேந்தலைக் கிரயங்களை பெறுமதியிடுவதற்காக நியமக் கிரய முறையை பிரயோகிக்கின்றது.**

வருடாந்தம் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் மூலதன வேலைகளுக்கு மேந்தலைக் கிரயத்தை உறிஞ்சுதல் இ.மி.ச. விநியோகப் பிரிவுகளில் மட்டுமே நடைமுறையில் உள்ளது. நிர்மாண வேலைகளுடன் நேரடியாக தொடர்புடைய ஒவ்வொரு பிரிவினதும் பாதிடப்பட்ட கிரயத்தை பயன்படுத்தி வருடாந்த மேந்தலை உறிஞ்சுதல் விகிதம் கணிப்பிடப்படுகின்றது. பாதிடப்பட்ட கிரயத்தை விநியோகப் பிரிவுகளின் உண்மையான கிரயத்தோடு ஒப்பிடும் போது, உண்மையான கிரயங்கள் பாதிடப்பட்ட கிரயங்களை 10மூ ஆல் விஞ்சியிருந்தமை கண்டறியப்பட்டது. எனவே, பயன்படுத்தப்படும் மேல்நிலை உறிஞ்சுதல் விகிதமும் நியாயமானது.

## (இ) LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

**பரிமாற்றல் பிரிவிலுள்ள ரூபா 172.2 பில்லியன் சொத்துக்களில் ரூபா 171.2 பில்லியன் தொகையான நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டில் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.**

அனைத்து அசையும் நிலையான சொத்துக்கள் தொடர்பான பௌதீக மெய்மையாய்வு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன் கணக்காய்வின் தேவைக்கு வழங்குவதற்காக பதிவுகள் செய்யப்பட்டன. முக்கியமாக தற்போதுள்ள பரிமாற்று வழிகளுடன் சம்பந்தப்பட்டு தற்போது நாட்டிற்கு தொடர்ச்சியாக மின் எரிசக்தியை வழங்குவதற்காக மின்சார பரிமாற்ற வலைப்பின்னலின் ஒரு பகுதியாக உள்ள பொறிகள் மற்றும் இயந்திரங்களே அசைவுறாத சொத்துக்களாக காணப்படுகின்றன.

## (d) கணக்கீட்டுக் கொள்கைகள்

**இ.மி.ச. இனால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாகத் தேய்விடப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டிருக்காமை.**

முழுமையாக தேய்விடப்பட்ட சொத்துக்களில் 53மூ க்கும் அதிகமானவை மின்வலு பிறப்பாக்க பொறிகள் மற்றும் தொடர்புடைய சொத்துக்களைக் கொண்டுள்ளன. முழுமையாக தேய்விடப்பட்ட மின் நிலையங்களின் பயனுள்ள ஆயுட்காலத்தை ஆய்வு செய்வதற்காக ஒரு குழு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மின் நிலையத்தின் சிக்கலான தன்மை மற்றும் தனித்துவத் தன்மை காரணமாக, மதிப்பீட்டிற்கு கணிசமான காலம் தேவைப்படுகின்றது.

மோட்டார் வாகனங்களுக்கான திருத்தப்பட்ட பயனுள்ள ஆயுட் காலத்தை நடைமுறைப்படுத்துதல் 2021 ஆம் ஆண்டில் சபையின் ஒப்புதலுடன் செய்யப்படும்.

எஞ்சிய சொத்துக்களின் பிரதான கூறுகள் பரிமாற்ற மற்றும் விநியோக வழிகளாக காணப்படுவதுடன், இது முழுமையாக தேய்விடப்பட்ட சொத்துக்களில் 38மூ ஆகும். கணக்காய்வு அவதானிப்பை தீர்ப்பதற்கான ஒரு பொறிமுறையினை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

### 1.2.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ரூபா 189.54 மில்லியன் வரவு மீதி (இருப்பு பற்றாக்குறை) மற்றும் ரூபா 114.64 மில்லியன் செலவு மீதி (இருப்பு மிகை) என்பன தீர்வு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக இருப்பு சீராக்கல் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.**

இருப்புச் சீராக்கத்தை அகற்றுவதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- விடயங்களைத் தீர்ப்பதற்காக குழுக்களை நியமித்தல்
- பொறுப்புவாய்ந்த ஊழியர்களுக்கு எதிராக முறையான விசாரணைகளை நடத்துதல்
- சட்ட ஆலோசனைகளை பெறுதல், மற்றும்
- சபை விஞ்ஞாபனங்களை சமர்ப்பித்தல்.

அதன்படி, பற்றாக்குறை இருப்பு மீதியில் 46ூ இற்கு மேற்பட்டவையும் மேலதிக இருப்பு மீதியில் 30ூ இற்கு மேற்பட்டவையும் மேற்படி செயன்முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**(ஆ) அமைச்சரவையின் 2010 ஒக்தோபர் 13 ஆந் திகதிய 10ஃ2434ஃ423ஃ034 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் லக்விஜய மின்வலு ஆலையின் நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 159.18 மில்லியன் கடன் தொகை திறைசேரியினால் லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட் (எல்சிசி) இற்கு மாற்றப்பட வேண்டுமென்பதுடன் எல்சிசி இற்கான கடன் சேவைக்காக அதற்குச் சமமான தொகையினை இ.மி.ச. செலுத்துதல் வேண்டும். இருப்பினும், இ.மி.ச. பொதுத் திறைசேரியுடன் எவ்வித உப கடன் உடன்படிக்கையிலும் கைச்சாத்திட்டிருக்காத போதிலும், இக்கடன்கள் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கடன்களாக பதிவுசெய்யப்பட்டிருந்தது.**

வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் -2014 இனை அமுல்படுத்துவதுடன் சம்பந்தப்பட்ட ʻநு.ʹ.நுே.ʹ.ஊநுடீ.ʹ.நுநுரவைல.ʹ.2014 ஆம் இலக்க 2014-09-30 தேதியிட்ட கடிதத்தின் படி, திறைசேரி செயலாளரால் கடனை உரிமைத்துவத்துக்கு மாற்றுதல் கையொப்பமிடப்பட்டது. புத்தளம் நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்துக்காக பெறப்பட்ட அனைத்து கடன்களும் இ.மி.ச. ஆல் பெறப்பட்ட நேரடிக் கடன்களாக கருதப்பட வேண்டுமென இ.மி.ச. அறிவுறுத்தப்பட்டதுடன் இந்த கடன்களுக்கான கடன்சேவையினை வழங்குவதற்கு நிலவுகின்ற திரவத்தன்மை பிரச்சினை காரணமாக இ.மி.ச. இற்கு கடன் சேவைச் செலவைச் சமாளிக்கும் நிலை ஏற்படும் வரை திறைசேரியினால் இந்நடவடிக்கை தொடரப்படும்.

மேலும், இக்கடனுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் ஆகிய இரண்டும் இ.மி.ச. இன் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளமையால் 2018-01-11 அன்று பொது முயற்சிகள் திணைக்களத்தில் நடைபெற்ற கூட்டத்தில், மேற்படி கடன்களைச் இ.மி.ச. இற்கு வழங்க வேண்டுமென சுட்டிக் காட்டப்பட்டது.

கடன் ஒப்பந்தமானது ஏற்கனவே இலங்கை அரசாங்கத்திற்கும் அந்தந்த கடன்களை வழங்கும் நிறுவனத்திற்கும் இடையே கையெழுத்திடப்பட்டுள்ளதால், கடனை இ.மி.ச. இற்கு மாற்றுவதற்கு திறைசேரி தேவையான ஏற்பாடுகளைச் செய்யும் வரை இக்கடன் திறைசேரியின் பொறுப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அனுப்பிய 2019-10-17 தேதியிட்ட ʻநீ.ʹ.ஐ.ʹ.ஊநுடீ.ʹ.2.ʹ.ஐஐ (ை) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் திறைசேரியினால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களைக் கருத்தில் கொண்டு, இமி.ச. ரூபா 16,942,798,790.95 வட்டியுடன் சேர்த்து ரூபா 3,556,442,931.30 மூலதனத் தொகையினை 2019 ஆம் ஆண்டிற்கான இ.மி.ச. இன் புத்தகங்களில் சீராக்கியுள்ளது. மேலும், பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அனுப்பிய ʻநுனு.ʹ.1.ʹ. ஊநுடீ.ʹ.02.ʹ.11 (ை) ஆம் இலக்க 15.01.2021 தேதியிட்ட கடிதத்தின் படி, ரூபா 20,536,545,932.04 தொகையினை பொது முயற்சிகள் திணைக்களத்தின் பதிவுகளுக்கு ஏற்ப இ.மி.ச. அதன் புத்தகங்களில் இலங்கை அரசாங்கத்தின் உரிமைத்துவதற்கு மாற்றியுள்ளது. அதன்படி, திறைசேரியின் வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப இ.மி.ச. இன் புத்தகங்கள் சீராக்கப்பட்டுள்ளன.

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் பிரிவு 42 இலுள்ள உப பிரிவு 6 இன் அடிப்படையில், இலங்கை அரசே நாணயமாற்று வீத இடரை பொறுப்பேற்பதனால், திறைசேரியின் ஊடாக பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களுக்கான மூலதனம் மற்றும் வட்டி ஆகியவற்றுக்கான அந்நிய செலாவணி ஏற்ற இறக்கங்களால் எழும் இலாபங்கள் அல்லது இழப்புகளை சபை கணக்கிடுவதில்லை. சபையால் கடன்கள் பெறப்படும் போது ஒப்புக்கொள்ளப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் நிலுவைகள் மதிப்பிடப்படுகின்றன.

எவ்வாறாயினும், இந்த செலவை ஈடுகட்டுவதற்காக, இ.மி.ச. இன் சார்பாக அரசாங்கத்தால் பெறப்பட்ட கடன்களின் இழப்புகளை ஈடுசெய்யும் வட்டி விகிதத்தில் இ.மி.ச. உடன் ஒரு உப கடன் ஒப்பந்தத்தில் அரசாங்கம் கையெழுத்திடுகின்றது.

இக்கடன்களை இ.மி.ச. ஆல் பெறப்பட்ட நேரடிக் கடன்களாக கருதுவதற்கு திறைசேரி தீர்மானித்துள்ளமையால், அத்தகைய உப கடன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படவில்லை. இ.மி.ச. இன் திரவத்தன்மை கட்டுப்பாடுகள் காரணமாக திறைசேரியால் கடன் சேவை செலவுகள் செய்யப்படுவதால், கடன் வழங்கும் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட உண்மையான பணத்தொகை கடன் உரிமைத்துவமாக இ.மி.ச. இற்கு மாற்றப்பட்டது.

இ.மி.ச. இந்த கடன்களை ஆரம்பத்தில் சட்டத்திற்கு இணையாக பெறப்பட்ட விகிதத்தில் பதிவு செய்துள்ளமையாலும் அதன்பின்னர் கடன்கள் மீள் மதிப்பீடு செய்யப்படாமையாலும், மூலதன திருப்பிச் செலுத்துதல் தொடர்பான நாணயமாற்று இழப்பானது திறைசேரியினால் செய்யப்பட்ட கடனுக்கான உரிமைத்துவ மாற்றத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அதன்படி, 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையான நாணயமாற்று விகித விலகலுடன் தொடர்புடைய ரூபா 20,862,022.88 நாணயமமாற்று இழப்பானது 2020 ஆம் நிதியாண்டில் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டு இறுதி வரையான நாணயமாற்று விகித விலகலுடன் தொடர்புடைய ரூபா 6,154,069,044.78 நாணயமாற்று இழப்புத் தொகை 2019 ஆம் ஆண்டுக்கு சீராக்கப்பட்டது.

மேலும், 2019 ஆம் ஆண்டில் கடன் திருப்பிச் செலுத்துதலாக கணக்கிடப்பட்டுள்ள ரூபா 5,735,412,848.45 தொகை 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கடன் உரிமைத்துவ மாற்றத்தில் சேர்க்கப்பட்டு 2019 ஆம் ஆண்டிற்கான மொத்தம் ரூபா 11,889,481,893.00 நாணயமாற்று இழப்பாக 2020 ஆம் ஆண்டில் சீராக்கப்பட்டது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

**(இ) 2014 திசெம்பர் 31 இற்கு பின்னர் திறைசேரியின் நிதிக் கூற்றுக்களில் உப கடன்களாக கருதப்பட்டிருக்காத போதிலும், ரூபா 25.23 பில்லியன் கடன் தொகையினை 2014 இற்கு பின்னர் செயற்திட்டங்களிற்கான உப கடன்களாக பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைத்த வெளிநாட்டு கடன்கள் என இ.மி.ச. பதிவுசெய்திருந்தது. 2015 மார்ச் 18 ஆந் திகதிய 15/0228/613/012 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த கடன்களை திருப்பிச் செலுத்துதல் இ.மி.ச. இற்கு ஒப்படைக்கப்பட்டது. இந்தக் கடன்களின் காணப்படு தன்மை ஐயத்துக்குரியதாக உள்ளதுடன் திருப்பிச் செலுத்தும் நிலைமைகள் மீதான நிதிக் கூற்றுக்கான தாக்கத்தை அளவிட முடியவில்லை.**

வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களின் கடன் சேவை வழங்குதல், திருப்பிச் செலுத்துதல் மற்றும் கணக்கீடு தொடர்பில் நிதி அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்ட 2015-03-18 தேதியிட்ட அமைச்சரவை ஞாபனக்குறிப்பு மற்றும் இது குறித்த 2015-03-09 தேதியிட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டு முதல் சேவை மேற்கொண்டு கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு இ.மி.ச. எதிர்பார்க்கின்றது.

இலங்கை அரசாங்கத்திற்கும் கடன் வழங்கும் நிறுவனத்திற்கும் இடையே கடன் ஒப்பந்தங்கள் ஏற்கனவே கையெழுத்திடப்பட்டிருந்தாலும், இ.மி.ச. சார்பாக அக்கடன்கள் பெறப்பட்டதால், ஆரம்பத்தில் இந்த கொடுப்பனவுகள் திறைசேரிக்குரிய ஒரு பொறுப்பாக பதிவு செய்யப்பட்டன.

அதைத் தொடர்ந்து, பொது முயற்சிகள் திணைக்களத்தில் 2018-01-11 அன்று நடைபெற்ற கூட்டத்தில், 2014.12.31 இற்குப் பின்னர் பொது திறைசேரியின் ஊடாக இ.மி.ச. இற்கு வழங்கப்பட்ட கடன்களை அமைச்சரவை ஒப்புதலுடன் இலங்கை அரசாங்கத்தின் உரிமைத்துவத்திற்கு மாற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டது.

எனவே, இந்த நிலுவைத் தொகையை உரிமைத்துவத்திற்கு மாற்றுவதற்கான திறைசேரியின் வழிகாட்டல் கிடைக்கும் வரை இ.மி.ச. அதை திறைசேரிக்குரிய ஒரு பொறுப்பாக பதிவு செய்துள்ளது.

**(ஈ) பொதுத் திறைசேரியுடன் எவ்வித உப கடன் உடன்படிக்கைளிலும் கைச்சாத்திட்டிருக்காத போதிலும், ரூபா 54.71 பில்லியன் பெறுமதியான ஆறு வெளிநாட்டுக் கடன்கள் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கடன்களாக சபையின் நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்டுள்ளது.**

திறைசேரியுடன் உப கடன் உடன்படிக்கைகள் முடிவாக்கப்பட்டிருக்காத போதிலும், திறைசேரியின் ஊடாக இ.மி.ச. சார்பாக அக்கடன்கள் பெறப்பட்டுள்ளன.

இ.மி.ச. சார்பாக பெறப்பட்டதால், இந்த கொடுப்பனவுகள் திறைசேரிக்குரிய ஒரு பொறுப்பாக பதிவு செய்யப்பட்டன. மேலும், இலங்கை அரசாங்கத்திற்கும் கடன் வழங்கும் நிறுவனத்திற்கும் இடையே கடன் ஒப்பந்தங்கள் ஏற்கனவே கையெழுத்திடப்பட்டுள்ளன.

**(உ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசாங்க நிறுவனங்களின் மின் பிறப்பாக்கிகள், மின்தூக்கிகள் மற்றும் வளிப் பதனாக்கிகளின் வழங்கல், பராமரிப்பு மற்றும் திருத்தத்திற்காக இ.மி.ச. ஆல் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அவற்றின் விலைச்சிட்டுப் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கிரயத்தில் பெறுமதியிடப்பட்டு அதற்கிணங்க அவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.**

இ.மி.ச. ஆல் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றும் அரச மருத்துவமனைகளில் இருந்து பெறப்பட வேண்டியவைகளை அறவிடுவதற்கான சாத்தியக்கூறுகள் சந்தேகத்திற்குரியதாக இருப்பதால், 2013 க்கு முன்னர், அந்த வருவாய்கள் காசு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டதுடன், வாடிக்கையாளரிடமிருந்து பணம் சேகரிக்கப்படும் வரை வேலைகளின் உண்மையான கிரயம் கணக்கு புத்தகங்களில் பெறத்தக்கதாக காட்டப்பட்டது. 2020-12-31 நிலவரப்படி, அரசு நிறுவனங்களுக்காக மேற்கொள்ளப்படும் வேலைகளின் உண்மையான கிரயத்திற்கும் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு ரூபா 43,421,695.18 ஆனதுடன் அது ஐயவினாவல் கூறப்பட்டுள்ளபடி ரூபா 66,987,761 அல்ல.

எனினும், 2020-10-06 ஆந் திகதி இடம்பெற்ற 20.14.279 ஆம் இலக்க கூட்டக் குறிப்பின் கீழ் வழங்கப்பட்ட சபை வழிகாட்டுதலின் படி, இ.மி.ச. இன் பொது முகாமையாளர், அவரது 2020-12-21 தேதியிட்ட ஊநுடீ.்.குஆ.்.யுகுஆ (ஊழசி).்.னுகுஆ (ரூஜ).்.கடன்பட்டோர் கடிதத்தின் மூலம், இ.மி.ச. எதிர்கொண்டுள்ள திரவத்தன்மை சிக்கல்களைச் சமாளிப்பதற்காக அரசு நிறுவனங்களிடமிருந்து நீண்ட காலமாக நிலுவையாகவுள்ள தொகையை திரும்பப் பெறுவதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினது உதவியை நாடியுள்ளார். இதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து இதுவரை சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

மேலும், தொடர்ச்சியான முயற்சிகளுக்குப் பிறகும் சொத்துகள் முகாமைத்துவப் பிரிவால் அரசு நிறுவனங்களில் இருந்து நிலுவையாகவுள்ள தொகையை அறவிடுவதற்கு முடியாத நிலை காணப்படுவதால் அவற்றை பதிவழிப்பதற்காக ஒரு சபை விஞ்ஞாபனத்தை வரைவதற்கு 2020.12.21 அன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் 2020.்.03 இன் 03.03 ஆம் இலக்க கூட்டக் குறிப்பின் கீழ் கணக்காய்வுக் குழு பணிப்புரை வழங்கியதுடன் 2021.04.07 ஆந் திகதி இடம்பெற்ற சபை கூட்டத்தில் சபை கூட்டக்குறிப்பு இல. 21.06.128யு இன் கீழ் அது சபையால் உறுதி செய்யப்பட்டது. அதன்படி, பிரதிப் பொது முகாமையாளர் (டபிள்யூ ரூ ஏஎஸ்) இது தொடர்பாக ஒரு சபை விஞ்ஞாபனத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இந்த பெறவேண்டிய மீதிகளின் அறவிடல் சாத்தியம் தொடர்பில் ஐயப்பாடு நிலவுகின்றமையால், இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (ளுடுகுசுளு) 9 - நிதிக் கருவிகள் என்பதன் கீழுள்ள பிரிவு 5.5.4 இற்கு இணங்க இ.மி.ச. இந்த நிலுவைகள் மீது முழுமையான நட்டக்கடன் ஏற்பாட்டை செய்துள்ளது.

மேலும், மீதிகளின் அறவிடல் சாத்தியம் தொடர்பில் ஐயப்பாடு நிலவுகின்றமையால் ஐயவினாவில் குறிப்பிட்டுள்ளபடி ளுடுகுசுளு 15 - ஒப்பந்த வருவாய் இன் பிரிவு (9) (உ) ஆனது பெறத்தக்க நிலுவைத் தொகையை (அதாவது, விலைப்பட்டியல் பெறுமதி) மீளவைப்பதற்கு பரிந்துரைக்கவில்லை. மேற்குறித்த வேலைகளின் விலைப்பட்டியல் பெறுமதிகளை அங்கீகரிப்பதற்காக கிரயத்தில் கூறப்பட்ட பெறவேண்டியவை கணக்குகளில் மீளவைக்கப்பட்டாலும் கூட, ளுடுகுசுளு 9 - நிதி கருவிகளின் பிரிவு 5.5.4 இல் உள்ள விதிகளின் படி 100மூ நட்டக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்,.

அதன்படி, (பெறவேண்டியவை மற்றும் நிறுத்திவைத்த உழைப்புக்களை அதிகரித்து) விலைப்பட்டியல் பெறுமதிகளை மீளவைத்தாலும் கூட இத்தகைய நிலுவைத் தொகை அறவிடப்படாமையால், நட்டக்கடன் ஏற்பாட்டை (பெறவேண்டியவை மற்றும் நிறுத்திவைத்த உழைப்புக்களை குறைப்பதற்கு) அங்கீகரிக்க வழிவகுக்கும்.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

இது இ.மி.ச. இன் நிதி செயலாற்றல் மற்றும் நிதி நிலைமையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தாது என்பதனால் மேற்கூறிய அனைத்தையும் கருத்தில் கொண்டு, விலைப்பட்டியல் பெறுமதிகளை மீளமைப்பது மேலே குறிப்பிட்ட கணக்கீட்டு நியமங்களுடன் தொடர்புடைய விதிகளுகளுடன் இணங்காது காணப்படும். எனவே, கணக்காய்வு ஐயவினாவில் கூறப்பட்டுள்ளபடி நிதிக் கூற்றுக்களில் எந்தவொரு குறைத்துக்கூறலும் காணப்படவில்லை.

கணக்காய்விற்கு கோரப்பட்ட பெரும்பாலான தகவல்கள் ஏற்கனவே அந்தந்த பிரிவுகளின் தலைவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், தேவையான மேலதிக தகவல்களை அவர்களிடமிருந்து திரட்டிக் கொள்ளலாம்.

**(ஊ) 2016 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரிக்கு தீர்வையாகச் செலுத்திய ரூபா 5 பில்லியனில் ரூபா 500 மில்லியன் மீளாய்ண்டில் முகாமைத்துவக் கட்டணம் செலுத்துதல் என வகைப்படுத்தி வருமானக் கூற்றுக்கு காலத்தேய்மானம் செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1.5 பில்லியன் தொகை நிறுத்திவைத்த உழைப்புக்களிற்கு தாக்கீடு செய்யப்பட்டிருந்தது.**

2019.10.16 ஆந் தேதியிட்ட PDE/I/CEB/2/11/(iii) ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் கடிதத்தின் அடிப்படையில், 2019 ஆம் ஆண்டில் இந்த கொடுப்பனவு திறைசேரிக்கு செலுத்தப்பட்ட "முகாமைத்துவக் கட்டணம்" என்று கருதப்பட்டு 2017 ஆம் ஆண்டிலிருந்து 10 ஆண்டு காலப்பகுதியில் காலத்தேய்மானம் செய்யப்பட்டது.

**(எ) விநியோக பிரிவிலுள்ள சொத்துகளுக்கு மாற்றப்படாமல் ரூபா 6.18 பில்லியன் மதிப்புள்ள 7,546 பூரணப்படுத்திய வேலைகள் நடைபெற்றுவரும் வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன.**

பூரணப்படுத்திய வேலைகளை சரியான நேரத்தில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கு மூலதனமாக்குவதற்காக தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நீண்ட காலமாக நிலுவையில் உள்ள மூலதன வேலைகளை தொடர்ந்து கண்காணிக்கவும் ஒப்படைக்கவும் மாகாண அளவிலான குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அதன்படி, 2021 மே 31 இல் உள்ளவாறு கடந்த 4 ஆண்டுகளில் னுனு1 ஆனது 21மூ இனை மூலதனமாக்கியதுடன், னுனு3 ஆனது 28மூ இனை மூலதனமாக்கியது.

**(ஏ) 2012 இல் நிறைவடைந்த மேல் கொத்மலை நீர் மின்வலு செயற்திட்டம் தொடர்பான ரூபா 979.88 மில்லியன் மொத்தக் கிரயம் மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக இத்திகதி வரை முடிவுறா வேலைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.**

ஆரம்ப சொத்து பரிமாற்றத்திற்குப் பின்னர் 2020 திசெம்பர் வரை ரூபா 979.88 மில்லியன் செலவுகள் முடிவுறா வேலைகள் கணக்கில் திரண்டுள்ளது. இந்தத் தொகை பிரதானமாக பணியாளர் செலவுகள், நடுவர் தீர்ப்புக்கான சட்டக் கட்டணம் மற்றும் நிலம் கையகப்படுத்தும் செலவு போன்றவற்றைக் கொண்டுள்ளது. மீதமுள்ள தொகையை மாற்றுவதற்காக செயற்திட்ட அலுவலகத்தில் நிலுவையில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் இது 2021 ஆம் ஆண்டிற்குள் பூரணப்படுத்தப்படும்.

**(ஐ) 2014 இல் நிறைவடைந்த புத்தளம் நிலக்கரி மின்வலுச் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 179.19 மில்லியன் மொத்தக் கிரயம் கொண்ட வாகனங்கள் மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக இதுவரை முடிவுறா வேலைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.**

ஆரம்ப சொத்து பரிமாற்றத்தற்குப் பின்னர் திரண்டிருந்த ரூபா 528,013,647.76 தொகையான செலவு 2020 ஆம் ஆண்டில் அந்தந்த பிரிவுகளுக்கு மாற்றப்பட்டது. இருப்பினும், வாகனங்களின் கொள்வனவுக்காக ஏற்பட்டிருந்த 179,194,890 ஆனது வாகனங்களின் உரிமை இ.மி.ச. இற்கு மாற்றப்படாமை காரணமாக (10 வாகனங்கள்) கணக்ககளில் வைக்கப்பட்டுள்ளதுடன் இந்த வாகனங்களின் உரிமை இ.மி.ச. இற்கு மாற்றப்பட்ட பின்னர் இத்தொகை அந்தந்த பிரிவுகளுக்கு மாற்றப்படும்.

**(ஒ) பதிவழிக்கப்பட்ட மீதிகளுக்கு எதிராக இறுதியாக்கப்பட்ட மொத்த வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 18.76 மில்லியன் வட்டி வருமானம், பெ.சே.வ. மற்றும் மிகைக்கட்டணம் என்பன அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.**

எதிர்காலத்தில் தேவையான திருத்தங்கள் செய்யப்படும்.

**(ஓ) ரூபா 30.56 மில்லியன் தொகையான அறவிட முடியாத தெரு விளக்கு பராமரிப்பு செலவுகளிற்கான ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.**

மாகாண சபைகளால் செய்யப்படும் தெருவிளக்கு பராமரிப்பு செலவுகள் இ.மி.ச. இனால் மீளளிக்கப்படுவதுடன் அவை மின்வலு அமைச்சிடமிருந்து பெறவேண்டியதாக பதிவு செய்யப்படுகின்றது. மேற்குறிப்பட்ட மீதியானது 2013 ஆம் ஆண்டு முதல் தென் மாகாணத்தால் வழங்கப்பட்ட மீளளித்தல்கள் தொடர்பான திரண்ட மீதி ஆகும். இருப்பினும், மேற்குறித்த நிலுவைத் தொகைக்கு அமைச்சிலிருந்து இதுவரை நிதி கிடைக்கவில்லை. எனவே, மேற்படி செலவுகளை எதிர்காலத்தில் மீளளிப்பதில்லை என்ற தீர்மானத்தை தென் மாகாணம் எடுத்துள்ளது.

**(ஃ) ரூபா 29.97 மில்லியன் செலுத்த வேண்டிய மீதி, தவறுதலாக கொழும்பு நகர அலுவலகத்திலுள்ள சேகரிப்பு கட்டுப்பாட்டு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.**

2021 இன் நிதிக்கூற்றுக்களில் மீதி திருத்தப்படும்.

**(க) 2021 சனவரி 01 முதல் 2021 சனவரி 15 வரையிலான காலத்திற்குரிய வருவாயை மீளாய்வாண்டின் வருவாயாக அங்கீகரித்தமையால் சில்லறைக் கடன்பட்டோர் மீதி ரூபா 585.69 மில்லியன் தொகையால் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது.**

பட்டியல் பொழிப்புக்கான காலப்பகுதிக்கும் காலண்டர் மாதத்திற்கும் இடையிலான வேறுபாடு காரணமாக மேற்குறித்த மீதி உருவாகியுள்ளது. இருப்பினும், பட்டியல் பொழிப்பின் காலப்பகுதியை காலண்டர் மாதத்திற்கு இணக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனவே, அத்தகைய மீதி 2021 ஆம் ஆண்டிலிருந்து உருவாக மாட்டாது.

**(கா) உரிமை கோரக்கூடிய காலம் முடிவடைந்துள்ள ரூபா 1.57 பில்லியன் பொருளாதார சேவை கட்டணம் (நுளுஊ) வருமான கூற்றுக்கு தாக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.**

பெறவேண்டிய ரூபா 1.57 பில்லியன் ஈஎஸ்சி ஆனது 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பதவிழிக்கப்பட்ட வேண்டிய ஏற்கனவே காலாவதியான (மூன்று வருட காலத்திற்கு மேல்) தொகையைக் குறிக்கின்றது. இதனை பதிவழிப்பதற்குத் தேவையான சபை பத்திரங்கள், அங்கீகாரத்திற்காக 2019 ஆம் ஆண்டில் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. எவ்வாறாயினும், இந்த ஈஎஸ்சி நிலுவைகளை பதிவழிப்புச் செய்யாமல், மின்வலு அமைச்சு மற்றும் பொது திறைசேரிக்கு அறிவிப்பதன் மூலம் இந்த

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு அல்லது வேறு ஏதேனும் செலுத்த வேண்டியவற்றுக்கு எதிராக எதிரீடு செய்வதற்கான மாற்றுவழிகளை நிச்சயிக்குமாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பரிந்துரை செய்துள்ளது.

இது 2018 இன் தேசிய பாதீட்டு பிரேரணைகளின் ஒரு பகுதியாக பொது திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வரி நிவாரணத்தின் ஒரு பகுதியாக 2020 ஆம் ஆண்டில் மின்வலு அமைச்சின் ஊடாக பொது திறைசேரிக்கு மீண்டும் அறிவிக்கப்பட்டது.

**(கி) அசாதாரண செலவு மீதித் தொகையை எதிரீடு செய்தமையால், விநியோகப் பிரிவிலுள்ள முடிவுறா வேலை ரூபா 52.06 மில்லியன் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.**

ரூபா 26,014,986 தொகைக்கான அசாதாரண செலவு மீதிகளிற்கான காரணங்கள் அடையாளம் காணப்பட்டு 2021 ஆம் ஆண்டில் சரிசெய்யப்படும் மற்றும் லைட்டிங் ஸ்ரீலங்கா இரத்னபுரி செயற்திட்டம் தொடர்பான வேலைகளை மீளாய்வு செய்து ரூபா 26,045,997 தொகை தனிப்பட்ட வேலை அடிப்படையில் தீர்க்கப்படும்.

**(கீ) சம்பந்தப்பட்ட செலவுகளுக்கு மாற்றப்படாமல், ரூபா 912.69 மில்லியன் தொகை ஒரு வருடத்திற்கும் மேலாக வழிச்சரக்குக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. எனவே அதே அளவு தொகையால் நட்டம் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அசாதாரண செலவு மீதியான ரூபா 245.53 மில்லியன் தொகை அகற்றப்படாது வழிச்சரக்குக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.**

மீதியை எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(கு) 12 வாகனங்கள் நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தமையால் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு என்பன குறைத்துக் கூறப்பட்டிருந்தன.**

வாகனங்களை கண்டறிந்து உரிய முறையில் நிலையான சொத்துக்களில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(கூ) களனிதிஸ்ஸ ஒருங்கிணைந்த சுழற்சி மின்வலு நிலையத்துடன் தொடர்புடைய பூரணப்படுத்தப்படாத சொத்துகளின் செலவுகளை மூலதனமாக்கியமையால், மின்வலு நிலையத்தின் பெறுமதி ரூபா 175.10 மில்லியனால் மிகைத்துக் கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த பூரணப்படுத்தப்படாத சொத்துடன் தொடர்புடைய ரூபா 323.28 மில்லியன் மூலதனச் செலவு தொகை மற்றும் ரூபா 27.04 மில்லியன் தேய்மானத் தொகை என்பன மீளாய்வாண்டில் வருமான கூற்றுக்கு தாக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

2021 ஆம் ஆண்டில் திருத்தப்படும்.

**(கெ) 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் பூரணப்படுத்திய சொத்துக்களுடன் தொடர்புடைய ரூபா 54.14 மில்லியன் தேய்மானத் தொகை மீளாய்வாண்டில் பிறப்பாக்கப் பிரிவில் செலவுகளாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது.**

குறித்துக் கொள்ளப்பட்டதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான வழுக்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(கே) 2015 ஆம் ஆண்டு முதல் முடிக்கப்படாதுள்ள ரூபா 167.25 மில்லியன் மதிப்புள்ள இரண்டு செயற்திட்டங்கள் அகற்றப்படாது முடிவுறா வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன.**

தொடர்புடைய உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடப்பட்டதுடன் இரண்டு செயற்திட்டங்களினதும் முடிவுறா வேலைகளை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**(கொ) அனல் மின் கொள்வனவு அட்டுறுக்கள் தொடர்பில் மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 0.99 பில்லியன் தொகையால் மிகைத்துக் கூறப்பட்டிருந்தது.**

அட்டுறுச் செலவுக் கணக்கில் மேலதிகம் / குறைவைத் தவிர்ப்பதற்காக, சான்றளிக்கப்பட்ட விலைப்பட்டியல்களை சரியான நேரத்தில் பெறுவதற்கும் மாதாந்தக் கணக்குகளில் கணக்கு வைப்பதற்கும் 2021 ஜனவரி முதல் ஏற்கனவே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**(கோ மற்றும் ச) 77.4 புறா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்வனவு விடுபட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 1.1 பில்லியன் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் ரூபா 212 மில்லியன் தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட 12.2 புறா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி 2020 ஆம் ஆண்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்வனவு கணக்கிற்கு பதியப்பட்டிருந்தது.**

பெறப்பட்ட விலைப்பட்டியல் மற்றும் விடயத்துக்குப் பொறுப்பான பொறியாளரால் தயாரிக்கப்பட்ட ஷமாதாந்த என்சிஆர்இ மின்பிறப்பாக்க அறிக்கை' ஆகியவற்றைப் பயன்படுத்தி மாதாந்த என்சிஆர்இ அட்டுறுக்கள் மேற்கொள்ளப்படுகின்றது. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆலைகளில் இருந்து பொதுவாக விலைப்பட்டியல் தாமதத்துடன் பெறப்படுவதுடன் மற்றும் சில நேரங்களில் தற்போதைய ஆலைகள் கூட பல்வேறு காரணங்களால் கணிசமான தாமதத்துடன் தங்கள் விலைப்பட்டியலை சமர்ப்பிக்கின்றன. எனவே, தகவல் பெறப்பட்ட காலத்தில் கிடைத்துள்ள விலைப்பட்டியல்கள் மாமதத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த கொள்வனவுகள் 2021 சனவரி மாதத்திற்கான "என்சிஆர்இ மின்பிறப்பாக்க அறிக்கையில்" சேர்க்கப்பட்டுள்ளமையால் இந்த தாமதமான விலைப்பட்டியல்களில் சில 2021 சனவரி மாதத்தில் கணக்குகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

**(சா) 15 வருட ஒப்பந்த காலம் முடிவடைந்திருந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியாளர்களிடமிருந்து 2020 திசெம்பர் 31 வரை கொள்வனவு செய்யப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்காக செலுத்த வேண்டிய ரூபா 808 மில்லியன் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.**

அசல் காலஎல்லை காலாவதியான மின்வலு கொள்வனவு உடன்படிக்கைகளின் புதுப்பித்தலானது பல்வேறு காரணங்களால் உடன்படிக்கை காலாவதியான உடனேயே மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும், கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கைகளைப் பொருட்படுத்தாமல் இந்த மின்வலு நிலையங்கள் தொடர்ந்து இயக்கப்படுகின்றன. எனவே, தொடர்புடைய உடன்படிக்கைகளின் கால நீடிப்பில் கையொப்பமிடுவதற்கு உட்பட்டு அட்டுறு விலைப்பட்டியல்கள் அவை கிடைக்கும் போது பெறப்பட்டன. எனவே, 2021 சனவரி மாதத்திற்கான கணக்குகளில் 2020 இற்கான இட்டுறுக்களின் கீழ் மொத்தம் ரூபா 900 மில்லியன் அட்டுறுக்கள் காணப்படுகின்றன.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

**(சி) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான தாமதக் கொடுப்பனவு வட்டி ரூபா 2,481 மில்லியன் ஆனதுடன் மீளாய்வாண்டிற்கான சான்றுறுதிப்படுத்திய தாமதக் கொடுப்பனவு வட்டிக் கணிப்பீடுகளின் படி அத்தொகை ரூபா 2,885 மில்லியன் ஆகும்.**

2020 ஆம் ஆண்டிற்கான சான்றளிக்கப்பட்ட தாமதமான வட்டியின் பெறுமதி ரூபா 2,885 மில்லியன் ஆனதுடன் (வேலைத் தாளைப் பார்க்கவும்) 2019 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 383 மில்லியன் மேலதிக அட்டுறுத் தொகை காணப்படவில்லை மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான ரூபா 21 மில்லியன் குறைவான அட்டுறுத் தொகை 2020 ஆம் ஆண்டு கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், செலவுக் கணக்கில் மேலதிக ∴ குறைவான அட்டுறுக்கள் உருவாவதைத் தவிர்ப்பதற்காக, விலைப்பட்டியலிலுள்ள சான்றளிக்கப்பட்ட பெறுமதிகளைப் பயன்படுத்தி தாமதமான வட்டியை கணக்கிடுவதற்கான ஏற்பாடுகள் 2021 சனவரி முதல் எடுக்கப்பட்டுள்ளன.

**(சீ) கைதவிர்க்கப்பட்ட ரூபா 14 மில்லியன் தொகையான நிலையான சொத்துக்கள் பரிமாற்றப் பிரிவின் நிலையான சொத்துக்களில் தற்போதும் காண்பிக்கப்பட்டுள்ளது.**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை சரியான தகவலுடன் நாளதுவரையாக்கும் பொருட்டு பரிமாற்றப் பிரிவின் அனைத்து கிளைகளையும் அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**(சு) இரண்டு தரப்பினர்களினாலும் கைச்சாத்திட்ட உடன்படிக்கை இல்லாமை காரணமாக உறவுமுறைத் தரப்பினரிடமிருந்து கிடைத்த ரூபா 2 பில்லியன் கடன் தொகையின் காணப்படும் தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை.**

இ.மி.ச. இன் பாதகமான நிதி நிலைமை மற்றும் 2020.02.25 ஆந் திகதிய சபை தீர்மானம் இல. 20.03.060 இன் படி தேசத்திற்கு தடையில்லாமல் மின்சாரம் வழங்குவதன் அவசியத்தை கருத்தில் கொண்டு இ.மி.ச. இன் தொழிற்படு மூலதன தேவையை முகாமைத்துவம் செய்வதற்காக லெகோ இடமிருந்து இந்த கடன் வசதி பெறப்பட்டது. கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக இரு தரப்பினரும் வரைவு கடன் ஒப்பந்தத்தை மீளாய்வு செய்து வருகின்றனர்.

**(சூ) நிலக்கரி கப்பலேற்றல் கட்டணத்திற்கான ரூபா 63.56 மில்லியன் ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.**

குறிப்பிட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் லெகோ உடன் கலந்துரையாடப்பட்டு வரப்படுகின்றமையால், 2020.12.31 வரை மேற்கொள்ளப்பட்டரூபா 63.56 மில்லியன் தொகை இ.மி.ச. இன் கணக்குகளில் பதிவு செய்யப்படவில்லை. இருப்பினும், நிதிக் கூற்றுக்களில் வழங்கப்பட்டுள்ள கணக்கிணக்கம், 2020 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் மூடப்பட்ட பின்னர், 22.03.2021 அன்று ரூபா 22,520,185.72 மட்டுமே தீர்க்கப்பட்டமையை போதியளவில் வெளிப்படுத்துகின்றது.

**(சொ) இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்கள் 2013 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக மீளமைக்கப்பட்டு வரப்படுகின்றது.**

இ.மி.ச. இலுள்ள செயல்பாட்டின் சிக்கலான தன்மை மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் அளவு காரணமாக நிதிக் கூற்றுக்கள் மீளமைக்கப்பட்டு வரப்படுகின்றன. இருப்பினும், நிதிக் கூற்றுக்கள் மீளமைப்பதைத் தவிர்ப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**(சோ) ரூபா 557.94 மில்லியன் வரவு மீதியொன்றும் ரூபா 556.81 மில்லியன் செலவு மீதியொன்றும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரிவுகளிற்கு இடையிலான நடைமுறைக் கணக்கு மீதியாக 2002 இலிருந்து அகற்றப்படாது வைத்திருக்கப்பட்டுள்ளது.**

விநியோகப் பிரிவுகளின் பரவலாக்கம் நடைபெற்ற 2002 ஆம் ஆண்டு முதல் மேற்படி மீதி முன் கொண்டுவரப்படுகின்றது. ஆதாரப்படுத்தும் ஆவணங்களைக் கண்டறிந்து அதை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ட) கடன் செயன்முறைப்படுத்தல் கட்டணமான ரூபா 1.25 மில்லியன் தொகையொன்று வருமனக் கூற்றிற்கு சாட்டுவதற்குப் பதிலாக கடன் மீதிக்கு சாட்டப்பட்டிருந்தது.**

2021 இன் ஏப்ரல் மாதத்திற்கான கணக்குகளில் இது திருத்தப்படும்.

### 1.2.3.3 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

**(அ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இ.மி.ச. இன் நிதிக்கூற்றுக்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டியதாக காட்டப்பட்ட மீதிக்கும் அத்திகதியில் உள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டியதாக காட்டப்பட்ட நேரொத்த மீதிக்கும் இடையில் ரூபா 753.61 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.**

மேற்குறிப்பிட்ட மீதி இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்களில் பெறோலியக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டியதாக காட்டப்படாததுடன், இது குறித்து பெறோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், பெறோலியக் கூட்டுத்தாபனம் தனது நிதிக் கூற்றுக்களில் இ.மி.ச. இடமிருந்து பெறப்படும் வட்டி என இதனைக் காட்டியிருந்த போதிலும் அதனை இ.மி.ச. ஒப்புக்கொள்ளவில்லை. இப்பிரச்சினையை தீர்ப்பதற்காக பெறோலியக் கூட்டுத்தாபனம், இ.மி.ச. திறைசேரி மற்றும் மின்வலு அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்வதற்கு மின்வலு அமைச்சில் நடந்த கணக்காய்வுக் குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

**(ஆ) விலைப்பட்டியலிடல் முறைமையிலும் அதே போல் நிதிக்கூற்றுக்களிலும் சில மீதிகள் தவறவிடப்பட்டதன் காரணமாக விநியோகப் பிரிவு 01, 02, 03 மற்றும் 04 இன் விலைப்பட்டியலிடல் முறைமையில் காட்டப்பட்ட 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளிற்கும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த தொகைக்கும் இடையில் ரூபா 41.18 மில்லியன் கூட்டுமொத்தமான கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. மேலும், ரூபா 423.76 மில்லியன் தொகை 2012 ஆம் ஆண்டு முதல் இனங்காணப்படாது வைத்திருக்கப்பட்டுள்ளது.**

கடன்பட்டோர் கணக்கிணக்கங்கள் அனைத்து விநியோகப் பிரிவுகளாலும் தயாரிக்கப்பட்டு, பிரிவுகளின் பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படுகின்றன.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

**(இ) 2020 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு சேகரிப்பு கட்டுப்பாட்டு பேரேட்டுக் கணக்கிலுள்ள ரூபா 2,343 மில்லியன் மற்றும் ரூபா 149 மில்லியன் வரவு மற்றும் செலவு மீதிகளிற்கான கணக்கிணக்கம், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.**

சாதாரண விநியோக பட்டியலிடல் சுழற்சி இறுதித் திகதியானது நிதிக் கணக்குகளின் இறுதித் திகதியிலிருந்து வேறுபட்டுள்ளதால் இந்த வேறுபாடுகள் எழுகின்றன. எனவே, சாதாரண விநியோக பட்டியலிடல் சுழற்சி இறுதித் திகதியினை 2021 இன் நிதி ஆண்டு இறுதித் திகதியை ஒத்ததாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(ஈ) ரூபா 117.58 மில்லியன் தொங்கல் மீதியின் தன்மையினை இனங்காண்பதற்காக அந்த மீதியுடன் தொடர்புடைய வயது பகுப்பாய்வு மற்றும் விபரமான பட்டோலை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.**

வியாபாரக் கடன்பட்டோர் தொடர்பான தகவல்கள் கணனி முறைமை மூலம் உருவாக்கப்படுகின்றன. இருப்பினும், தற்போதைய முறைமை தொங்கல் மீதிகளிற்கான காலப் பகுப்பாய்வு வசதியை வழங்குவதில்லை. எனவே, விநியோக பிரிவு 2 மற்றும் 4 ஆகியவை வயது பகுப்பாய்வை கைமுறையாகத் தயாரிப்பதுடன் இது ஒரு சிக்கலான செயல்முறையாகும். எனவே, எதிர்காலத்தில் தொங்கல் மீதிக்கான காலப் பகுப்பாய்வை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(உ) சபையால் வாடிக்கையாளருக்கான தவறான கட்டண முறைப் பிரயோகம் காரணமாக ரூபா 38.76 மில்லியன் தொகை 2019 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்படுகின்றது.**

தற்போது செயன்முறையிலுள்ள இவ்விடயத்தை தீர்ப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

**(ஊ) நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள செலுத்தவேண்டிய அனல்மின் - சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களுடன் தொடர்புடைய மீதிக்கும் தீர்க்கப்படாத சான்றுறுதிப்படுத்திய பட்டியல்களின் மீதிகளிற்கும் இடையே ரூபா 5.9 பில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.**

டு5806- ஷசெலுத்த வேண்டிய அனல்மின்- சுயாதீன மின் உற்பத்தியாளர்களின் கணக்கு 2020 இல் டு-5920ஷ அட்டுறு 'கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதியாகும். சுயாதீன மின் உற்பத்தியாளர்களின் அனல் மின் நிலையங்களில் இருந்து ஒவ்வொரு மாதமும் பெறப்பட்ட விலைப்பட்டியல் பெறுமதிகளைப் பயன்படுத்தி பதிவு செய்யப்பட்ட அட்டுறு மீதியை இந்த மீதி காட்டுகின்றது. பணம் செலுத்துவதற்கான சான்றளிப்பின் போது இந்த மீதிகள் சீராக்கப்படுகின்றன. இந்த பதிவு செய்யப்பட்ட மேலதிக ∴ பற்றாக்குறை அட்டுறு மீதியானது கொடுப்பனவின் போது மீளமைக்கப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டின் இறுதியில் பேரேட்டு மீதிக்கும் சான்றளிக்கப்பட்ட நிலுவையிலுள்ள மொத்த விலைப்பட்டியல் தொகைக்கும் இடையே ரூபா 5.6 பில்லியன் (பணித்தாளை பார்க்கவும்) வேறுபாடு உள்ளது.

இருப்பினும், 2021 சனவரி முதல், விலைப்பட்டியலுக்கு விரைவாக சான்றிதழ் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, முன்னெடுத்துச் செல்கின்ற இரு மீதிகளுக்கும் இடையே எந்த வித்தியாசமும் இருக்காது.

**1.3 ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

தகவல் பந்தி

**1.4 ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

தகவல் பந்தி

**2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

**2.1 சபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்காத விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த தொழிற்பாடுகள்.**

தகவல் பந்தி

**எம்.எம்.சி. பர்ணாந்து**
தலைவர்
இலங்கை மின்சார சபை

**பொறியியலாளர், எம்.ஆர். ரணதுங்க**
பொது முகாமையாளர்
இலங்கை மின்சார சபை

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. } பிஓ/சீ/சீஈபி/எ/ப்ஏ/1/20/12 | මබේ අංකය / உமது இல. / Your No. } | දිනය / திகதி / Date } 2021 ஆகஸ்ட் 05 |

**தலைவர்**
**இலங்கை மின்சார சபை**

**இலங்கை மின்சார சபையின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மின்சார சபையின் (இ.மி.ச.) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்எஎஸ்/எஸ்எல்எவ்ஆர்எஸ்) மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்குதல்

**(அ) நிதிசார் அறிக்கையிடலுக்கான எண்ணக்கருவாக்க சட்டகம்**

i. சட்டகத்தின் 4.1 (ஆ) பந்திக்கு முரணாக, சபைக்கு ஏற்பட்ட கிரயத்திற்கும் குறிப்பிட்ட வருமான உழைப்புக்கும் இடையே நேரடி தொடர்பு இல்லாத மற்றும் தனிப்பட்ட நிறுவனத்தின் நிர்வாகச் செலவுகளான ரூபா 43.97 மில்லியன் தொகையான செலவுகள் சபையின் வருமானக் கூற்றில் அதற்குரிய செலவினமாக இனங்காணப்பட்டிருந்தது.

ii. சட்டகத்தின் 4.3 ஆம் பந்திக்கு முரணாக, சபைக்கு பொருளாதார நலன்களை உட்பாச்சல் செய்யாத மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரமும் சொத்தின் உரிமையும் சபைக்குக் காணப்படுகின்ற ரூபா 8 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் வேறொரு நிறுவனத்தால் பயன்படுத்தப்படுகின்றன.

iii. சொத்தின் உரிமையுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இன்மை காரணமாக தலைமை அலுவலகக் கட்டிடக் காணியின் உரிமைத்துவத்தை மெய்மையாய்வு செய்ய முடியாதுள்ளது.

**(ஆ) எல்கேஎஸ் 2 - இருப்புக்கள் மற்றும் எல்கேஎஸ் 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

சீஈபீயானது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக ஏற்பட்ட மேந்தலைக் கிரயங்களை பெறுமதியிடுவதற்காக மேற்படி நியமங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உண்மைக் கிரயங்களை பிரயோகிப்பதற்குப் பதிலாக நியமக் கிரய முறையை பிரயோகிக்கின்றது. இதன் விளைவாக, அவற்றின் மீது ஏற்பட்ட ரூபா 2.61 பில்லியன் கூட்டுத்தொகையான சாதக மேந்தலை விகித முரண்கள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருந்தன.

இதன் விளைவாக, இ.மி.ச. இன் செயற்பாட்டு விளைவுகள், சொத்துக்கள் மற்றும் உரிமை மூலதனம் என்பன அந்த மூலதன வேலைகள் தொடர்பில் உயர் நிதிசார் ஈடுபடுத்தல் காரணமாக குறிப்பிடத்தக்களவு பாதிக்கப்பட்டிருந்தன. எனினும் அம்மூலதன வேலைகள் தொடர்பில் தேவையான தகவல்கள் காணப்படாததன் காரணமாக அது தொடர்பான நிதிக்கூற்றுக்களிற்கான தாக்கத்தை கணக்காய்வின் போது மதிப்பிட முடியாதிருந்தது.

**(இ) LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

பரிமாற்றல் பிரிவிலுள்ள ரூபா 172.2 பில்லியன் சொத்துக்களில் ரூபா 171.2 பில்லியன் தொகையான நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டில் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

**(ஈ) எல்கேஏஎஸ் 37 - ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்**

சபை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மற்றும் அதன் மீதான மேன்முறையீட்டின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டியுள்ள ரூபா 50 மில்லியன் தொகையினை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

இ.மி.ச. இனால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாகத் தேய்விடப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் கணக்கீட்டுக் கொள்கை 2.4.6(உ) மற்றும் 3(இ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளாய்வு செய்யப்பட்டு பின்னோக்கி சீராக்கப்பட்டிருக்கவில்லை. எடுத்துக்காட்டாக ரூபா 187.58 பில்லியன் தொகையான முழுமையாகத் தேய்விடப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அவற்றின் உண்மையான ஆயுட்காலம் மதிப்பிடப்படாது தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ)** ரூபா 189.54 மில்லியன் வரவு மீதி (இருப்பு பற்றாக்குறை) மற்றும் ரூபா 114.64 மில்லியன் செலவு மீதி (இருப்பு மிகை) என்பன தீர்வு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக இருப்பு சீராக்கல் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

**(ஆ)** அமைச்சரவையின் 2010 ஒக்தோபர் 13 ஆந் திகதிய 10.ᐧ.2434.ᐧ.423.ᐧ.034 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் லக்விஜயா மின்வலு ஆலையின் நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 159.18 மில்லியன் கடன் தொகை திறைசேரியினால் லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட் (எல்சிசி) இற்கு மாற்றப்பட வேண்டுமென்பதுடன் எல்சிசி இற்கான கடன் சேவைக்காக அதற்குச் சமமான தொகையினை இ.மி.ச. செலுத்துதல் வேண்டும். திறைசேரியின் செயலாளரால் வழங்கப்பட்ட "நு.ᐧ.நுட்.ᐧ.ஊநுடீ.ᐧ.நுநரவைல.ᐧ.2014 ஆம் இலக்க 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதிய கடிதத்தின் படி, இக்கடன்கள் இ.மி.ச. இன் நேரடிக் கடன்களாகக் கருதப்படுதல் வேண்டும். இருப்பினும், இ.மி.ச. பொதுத் திறைசேரியுடன் எவ்வித உப கடன் உடன்படிக்கையிலும் கைச்சாத்திட்டிருக்காத போதிலும், இக்கடன்கள் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கடன்களாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. ஆகையால், இக்கடன்களின் காணப்படும் தன்மை ஐயத்திற்குரியதாக உள்ளதுடன் இக்கடன்களின் மீளச் செலுத்துகை தொடர்பில் நிதிக் கூற்றுக்களிற்கான தாக்கத்தை அளவிட முடியவில்லை.

மேலும், ரூபா 3.56 பில்லியன் வட்டிக் கொடுப்பனவு உள்ளிட்ட ரூபா 20.5 பில்லியன் ஆனதோர் தொகை மற்றும் திறைசேரியால் செய்யப்பட்ட ரூபா 3.15 பில்லியன் வட்டிக் கொடுப்பனவு உள்ளிட்ட ரூபா 20.54 பில்லியன் தொகை என்பன முறையே 2019 மற்றும் 2020 இல் இ.மி.ச. இன் உரிமைத்துவத்திற்கு மாற்றப்பட்டது. எவ்வாறாயினும், இந்த செலவினம் இ.மி.ச. ஆல் செய்யப்படாத போதிலும், உரிமைத்துவத்திற்கு வட்டி என மாற்றப்பட்டிருந்த இந்த வட்டிச் செலவினத்தை இ.மி.ச. அதன் வருமானக் கூற்றிற்கு சாட்டியிருந்தது. ஆகையால், 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்கான நட்டம் முறையே ரூபா 3.56 பில்லியன் மற்றும் ரூபா 3.15 பில்லியன் ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

மேலும், 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின 42 (6) ஆம் பிரிவில் அரசாங்கத்தின் அங்கீகாரம் மற்றும் உத்தரவாதத்துடன் சபைக்கு வழங்கப்பட்ட கடன்களை இலங்கை ரூபாவுக்கு மீள்மதிப்பீடு செய்வதுடன் தொடர்புடைய எந்த இழப்பும் அல்லது இலாபமும் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு திரட்டிய நிதியத்துக்கு சாட்டப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், சபை 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அதன் வருமான கூற்றில் முறையே ரூபா 11.89 பில்லியன் மற்றும் ரூபா 20.86 மில்லியன் தொகையினை நாணயமாற்று இழப்பாக சாட்டியிருந்தது. ஆகையால், 2019 மற்றும் 2020 ஆண்டுகளிற்கான நட்டங்கள் முறையே ரூபா 11.89 பில்லியன் மற்றும் ரூபா 20.86 மில்லியன் தொகைகளால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2014 திசெம்பர் 31 இற்கு பின்னர் திறைசேரியின் நிதிக் கூற்றுக்களில் உப கடன்களாக கருதப்பட்டிருக்காத போதிலும், ரூபா 25.23 பில்லியன் கடன் தொகையினை 2014 இற்கு பின்னர் செயற்திட்டங்களிற்கான உப கடன்களாக பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைத்த வெளிநாட்டு கடன்கள் என இ.மி.ச. பதிவுசெய்திருந்தது. மேலும், 2015 மார்ச் 18 ஆந் திகதிய 15.ᐧ.0228.ᐧ.613.ᐧ.012 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த கடன்களை திருப்பிச் செலுத்துதல் இ.மி.ச. இற்கு ஒப்படைக்கப்பட்டது. இருப்பினும், இந்த கடன்களுக்கான மூலதன திருப்பிச் செலுத்துதல் மற்றும் வட்டி செலுத்துதல் தொடர்பில் எவ்வித கொடுப்பனவையும் இ.மி.ச. செலுத்தவில்லை அல்லது அதற்கான ஏற்பாடுகளை செய்யவில்லை. எனவே, இந்தக் கடன்களின் காணப்படு தன்மை ஐயத்துக்குரியதாக உள்ளதுடன் திருப்பிச் செலுத்தும் நிலைமைகள் (மூலதனம் மற்றும் வட்டி செலுத்துதல்) மீதான நிதிக் கூற்றுக்கான தாக்கத்தை அளவிட முடியவில்லை.

(ஈ) பொதுத் திறைசேரியுடன் எவ்வித உப கடன் உடன்படிக்கைளிலும் கைச்சாத்திட்டிருக்காத போதிலும், ரூபா 54.71 பில்லியன் பெறுமதியான ஆறு வெளிநாட்டுக் கடன்கள் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கடன்களாக சபையின் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனவே, இந்தக் கடன்களின் காணப்படு தன்மை ஐயத்துக்குரியதாக உள்ளதுடன் இக் கடன்களின் திருப்பிச் செலுத்துதல் தொடர்பில் நிதிக் கூற்றுக்கான தாக்கத்தை அளவிட முடியவில்லை.

(உ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசாங்க நிறுவனங்களின் மின் பிறப்பாக்கிகள், மின்தூக்கிகள் மற்றும் வளிப் பதனாக்கிகளின் வழங்கல், பராமரிப்பு மற்றும் திருத்தத்திற்காக இ.மி.ச. ஆல் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அவற்றின் விலைச்சிட்டுப் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கிரயத்தில் பெறுமதியிடப்பட்டு அதற்கிணங்க அவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறவேண்டியவைகள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் என்பன 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 66.99 மில்லியனால் ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த நிலுவையிலுள்ள மீதிகளிற்கான தீர்ப்பனவு விபரங்கள் மற்றும் பட்டியல்களை இ.மி.ச. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.

(ஊ) 2016 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரிக்கு தீர்வையாகச் செலுத்திய ரூபா 5 பில்லியனில் ரூபா 500 மில்லியன் மீளாய்ண்டில் முகாமைத்துவக் கட்டணம் செலுத்துதல் என வகைப்படுத்தி வருமானக் கூற்றுக்கு காலத்தேய்மானம் செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1.5 பில்லியன் தொகை நிறுத்திவைத்த உழைப்புக்களிற்கு தாக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீதமுள்ள ரூபா 3.0 பில்லியன் தொகையினை உரிமைத்துவத்திற்கு மாற்றுவதற்குப் பதிலாக நிதிக் கூற்றுக்களில் ஏனைய கடன்பட்டோராகக் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும், பொது பொதுத் திறைசேரியிடமிருந்து இ.மி.ச. ஆல் எந்தவொரு முகாமைத்துவச் சேவைகளும் பெறப்பட்டிருக்கவில்லை. எனவே இந்த ஆண்டிற்கான நட்டம் ரூபா 500 மில்லியனால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

(எ) விநியோக பிரிவிலுள்ள சொத்துகளுக்கு மாற்றப்படாமல் ரூபா 6.18 பில்லியன் மதிப்புள்ள 7,546 பூரணப்படுத்திய வேலைகள் நடைபெற்றுவரும் வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. அந்த சொத்துக்கள் தொடர்பான தேய்மானம் வருமான கூற்றிற்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2012 இல் நிறைவடைந்த மேல் கொத்மலை நீர் மின்வலு செயற்திட்டம் தொடர்பான ரூபா 979.88 மில்லியன் மொத்தக் கிரயம் மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக இத்திகதி வரை முடிவுறா வேலைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆகவே மீளாய்வாண்டுக்கான தேய்மானம் மற்றும் நிறுத்திவைத்த உழைப்புகள் என்பன முறையே ரூபா 27.99 மில்லியன் மற்றும் ரூபா 195.98 மில்லியன் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன.

(ஐ) 2014 இல் நிறைவடைந்த புத்தளம் நிலக்கரி மின்வலுச் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 179.19 மில்லியன் மொத்தக் கிரயம் கொண்ட வாகனங்கள் மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக இதுவரை முடிவுறா வேலைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆகவே நிறுத்திவைத்த உழைப்புகள் ரூபா 179.19 மில்லியன் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது

(ஒ) பதிவழிக்கப்பட்ட மீதிகளுக்கு எதிராக இறுதியாக்கப்பட்ட மொத்த வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 18.76 மில்லியன் வட்டி வருமானம், பெ.சே.வ. மற்றும் மிகைக்கட்டணம் என்பன கடன்பட்டோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. எனவே கடன்பட்டோர் மீதிகள் ஒத்த தொகையால் குறைத்து கூறப்பட்டுள்ளது.

(ஓ) ரூபா 30.56 மில்லியன் தொகையான அறவிட முடியாத தெரு விளக்கு பராமரிப்பு செலவுகளிற்கான ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஃ) ரூபா 29.97 மில்லியன் செலுத்த வேண்டிய மீதி, தவறுதலாக கொழும்பு நகர அலுவலகத்திலுள்ள சேகரிப்பு கட்டுப்பாட்டு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. எனவே கடன்பட்டோர் மீதி ஒத்த தொகையால் குறைத்து கூறப்பட்டுள்ளது.

(க) 2021 சனவரி 01 முதல் 2021 சனவரி 15 வரையிலான காலத்திற்குரிய வருவாயை மீளாய்வாண்டின் வருவாயாக அங்கீகரித்தமையால் சில்லறைக் கடன்பட்டோர் மீதி ரூபா 585.69 மில்லியன் தொகையால் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது. எனவே ஆண்டிற்கான வருவாயும் அதே தொகையால் மிகைப்படுத்தப்பட்டிருந்தது.

(கா) உரிமை கோரக்கூடிய காலம் முடிவடைந்துள்ள ரூபா 1.57 பில்லியன் பொருளாதார சேவை கட்டணம் (நுளுஊ) வருமான கூற்றுக்கு தாக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, அதே அளவு தொகையால் நட்டம் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.

(கி) அசாதாரண செலவு மீதித் தொகையை எதிரீடு செய்தமையால், விநியோகப் பிரிவிலுள்ள முடிவுறா வேலை ரூபா 52.06 மில்லியன் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(கீ) சம்பந்தப்பட்ட செலவுகளுக்கு மாற்றப்படாமல், ரூபா 912.69 மில்லியன் தொகை ஒரு வருடத்திற்கும் மேலாக வழிச்சரக்குக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. எனவே அதே அளவு தொகையால் நட்டம் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அசாதாரண செலவு மீதியான ரூபா 245.53 மில்லியன் தொகை அகற்றப்படாது வழிச்சரக்குக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

(கு) 12 வாகனங்கள் நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தமையால் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு என்பன குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

(கூ) களனிதிஸ்ஸ ஒருங்கிணைந்த சுழற்சி மின்வலு நிலையத்துடன் தொடர்புடைய பூரணப்படுத்தப்படாத சொத்துகளின் செலவுகளை மூலதனமாக்கியமையால், மின்வலு நிலையத்தின் பெறுமதி ரூபா 175.10 மில்லியனால் மிகைத்துக் கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த பூரணப்படுத்தப்படாத சொத்துடன் தொடர்புடைய ரூபா 323.28 மில்லியன் மூலதனச் செலவு தொகை மற்றும் ரூபா 27.04 மில்லியன் தேய்மானத் தொகை என்பன மீளாய்வாண்டில் வருமான கூற்றுக்கு தாக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே ஆண்டிற்கான நட்டம் ரூபா 350.32 மில்லியன் தொகையால் அதிகரித்தும் முடிவுறா வேலைகள் கணக்கு மீதி ரூபா 498.38 மில்லியன் தொகையால் குறைத்தும் கூறப்பட்டிருந்தன.

(கெ) 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் பூரணப்படுத்திய சொத்துக்களுடன் தொடர்புடைய ரூபா 54.14 மில்லியன் தேய்மானத் தொகை மீளாய்வாண்டில் பிறப்பாக்கப் பிரிவில் செலவுகளாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனவே மீளாய்வாண்டின் நட்டம் அதே தொகையால் மிகைப்படுத்தப்பட்டிருந்தது.

(கே) 2015 ஆம் ஆண்டு முதல் முடிக்கப்படாதுள்ள ரூபா 167.25 மில்லியன் மதிப்புள்ள இரண்டு செயற்திட்டங்கள் அகற்றப்படாது முடிவுறா வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. .

(கொ) அனல் மின் கொள்வனவு அட்டுறுக்கள் தொடர்பில் மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 0.99 பில்லியன் தொகையால் மிகைத்துக் கூறப்பட்டிருந்தது.

(கோ) 77.2 புறா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்வனவு விடுபட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 1.1 பில்லியன் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ச) 2019 ஆம் ஆண்டில் ரூபா 212 மில்லியன் தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட 12.2 புறா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி 2020 ஆம் ஆண்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்வனவு கணக்கிற்கு பதியப்பட்டிருந்தது. ஆகையால், ஆண்டிற்கான நட்டம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(சா) 15 வருட ஒப்பந்த காலம் முடிவடைந்திருந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியாளர்களிடமிருந்து 2020 திசெம்பர் 31 வரை கொள்வனவு செய்யப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்காக செலுத்த வேண்டிய ரூபா 808 மில்லியன் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆதலால், ஆண்டிற்கான நட்டம் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(சி) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான தாமதக் கொடுப்பனவு வட்டி ரூபா 2,481 மில்லியன் ஆனதுடன் மீளாய்வாண்டிற்கான சான்றுறுதிப்படுத்திய தாமதக் கொடுப்பனவு வட்டிக் கணிப்பீடுகளின் படி அத்தொகை ரூபா 2,885 மில்லியன் ஆகும். ஆகையால், ஆண்டிற்கான நட்டம் ரூபா 404 மில்லியன் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(சீ) கைதவிர்க்கப்பட்ட ரூபா 14 மில்லியன் தொகையான நிலையான சொத்துக்கள் பரிமாற்றப் பிரிவின் நிலையான சொத்துக்களில் தற்போதும் காண்பிக்கப்பட்டுள்ளது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

(சு) இரண்டு தரப்பினர்களினாலும் கைச்சாத்திட்ட உடன்படிக்கை இல்லாமை காரணமாக 2020 மார்ச் மாதத்தில் உறவுமுறைத் தரப்பினரிடமிருந்து கிடைத்த ரூபா 2 பில்லியன் கடன் தொகையின் காணப்படும் தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை. ஆகையால், கடன் மீளளித்தல் தொடர்பில் நிதி நிலைமைக் கூற்றுக்கான தாக்கத்தை அளவிட முடியவில்லை.

(சூ) நிலக்கரி கப்பலேற்றல் கட்டணத்திற்கான ரூபா 63.56 மில்லியன் ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால், ஆண்டிற்கான நட்டம் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(செ) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரித்து உண்மையாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. இருப்பினும், சபையால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் காரணமாக இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்கள் 2013 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக மீளமைக்கப்பட்டு வரப்படுகின்றது.

(சே) ரூபா 557.94 மில்லியன் வரவு மீதியொன்றும் ரூபா 556.81 மில்லியன் செலவு மீதியொன்றும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரிவுகளிற்கு இடையிலான நடைமுறைக் கணக்கு மீதியாக 2002 இலிருந்து அகற்றப்படாது வைத்திருக்கப்பட்டுள்ளது.

(ட) கடன் செயன்முறைப்படுத்தல் கட்டணமான ரூபா 1.25 மில்லியன் தொகையொன்று வருமனக் கூற்றிற்கு சாட்டுவதற்குப் பதிலாக கடன் மீதிக்கு சாட்டப்பட்டிருந்தது. ஆகையால், மீளாய்வாண்டிற்கான நட்டமும் கடன் மீதியும் ஒத்த தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

### 1.2.4 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

(அ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இ.ம.ச. இன் நிதிக்கூற்றுக்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டியதாக காட்டப்பட்ட மீதிக்கும் அத்திகதியில் உள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டியதாக காட்டப்பட்ட நேரொத்த மீதிக்கும் இடையில் ரூபா 753.61 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த விடயம் 2013 முதல் தொடர்ச்சியாக கடந்தகால கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கூட இச்சிக்கல் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விலைப்பட்டியலிடல் முறைமையிலும் அதே போல் நிதிக்கூற்றுக்களிலும் சில மீதிகள் தவறவிடப்பட்டதன் காரணமாக விநியோகப் பிரிவு 01, 02, 03 மற்றும் 04 இன் விலைப்பட்டியலிடல் முறைமையில் காட்டப்பட்ட 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளிற்கும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த தொகைக்கும் இடையில் ரூபா 41.18 மில்லியன் கூட்டுமொத்தமான கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. மேலும், ரூபா 423.76 மில்லியன் தொகை 2012 ஆம் ஆண்டு முதல் இனங்காணப்படாது வைத்திருக்கப்பட்டுள்ளது.

(இ) 2020 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு சேகரிப்பு கட்டுப்பாட்டு பேரேட்டுக் கணக்கிலுள்ள ரூபா 2,343 மில்லியன் மற்றும் ரூபா 149 மில்லியன் வரவு மற்றும் செலவு மீதிகளிற்கான கணக்கிணக்கம், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே சேகரிப்புக் கட்டுப்பாட்டு கணக்கிலுள்ள மீதிகளின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை.

(ஈ) ரூபா 117.58 மில்லியன் தொங்கல் மீதியின் தன்மையினை இனங்காண்பதற்காக அந்த மீதியுடன் தொடர்புடைய வயது பகுப்பாய்வு மற்றும் விபரமான பட்டோலை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையால் வாடிக்கையாளருக்கான தவறான கட்டண முறைப் பிரயோகம் காரணமாக ரூபா 38.76 மில்லியன் தொகை 2019 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்படுகின்றது.

(ஊ) நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள செலுத்தவேண்டிய அனல்மின் - சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களுடன் தொடர்புடைய மீதிக்கும் தீர்க்கப்படாத சான்றுறுதிப்படுத்திய பட்டியல்களின் மீதிகளிற்கும் இடையே ரூபா 5.9 பில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 சபையின் 2020 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்படும் ஏனைய தகவல்கள்

இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கின்ற சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள போதிலும், இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என பொருள்படும். இவ்வாறான ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புடையதாகும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை மீது எவ்வகையிலும் சான்றுப்படுத்தலோ அல்லது அபிப்பிராயமோ வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது ஏனைய வகையில் பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருத்தமற்றுள்ளதா என்பதனை கவனித்துப் பார்ப்பதாகும்.

சபையின் 2020 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை நான் வாசிக்கையில் அதில் பொருண்மையான பிழையாகக் காட்டுதல் உள்ளது என முடிவுக்கு வந்தால் சரிசெய்வதற்காக நிருவகிக்கின்ற தரப்பினர்கக்கு இவ்விடயங்களைத் நான் தெரியப்படுத்துதல் வேண்டும். இன்னும் சரிசெய்யப்படாத பொருண்மையான பிழையாகக் காட்டுதல்கள் இருக்குமாயிருந்தால் அவை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

### 1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து, சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சபையின் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக சபையின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் சபை தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

### 2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை சபை பேணி வந்திருந்தது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 இந்த அறிக்கையின் 1.2.1 (அ)இ (ஈ)இ (iii)இ (ஆ)இ (இ)இ 1.2.2இ 1.2.3 (அ)இ (ஆ)இ (இ)இ (ஈ)இ (உ)இ (ஊ)இ (எ)இ (ஏ)இ (ஐ)இ (கா)இ (சீ)இ (சு)இ 1.2.4 (அ)இ (ஆ)இ (இ)இ (ஈ) ஆம் பந்திகளிலுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும், வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க சபையின் அங்கத்தவர்கள் எவருக்கும் சபையுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றமையை குறிப்பிடுதல்.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது சபையின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமையை குறிப்பிடல்.

| விதிகள் ஃ வழிகாட்டல்களுக்கான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 7(1) மற்றும் 43(1) ஆம் பிரிவு | ஒழுங்குபடுத்தல் தரப்பிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளாது ரூபா 18.91 பில்லியன் பெறுமதியான 732.192 புறா எரிசக்தி, மின் பிறப்பாக்கத்திற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத சுயாதீன மின்வலு உற்பத்தியாளர் களிடமிருந்து (ஜீஸ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 7(1), 43(2) மற்றும் 43(7) ஆம் பிரிவுகள் | மின்வலு கொள்வனவு உடன்படிக்கைக்கு (ீபுள) அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது, மேலதிக மாக 100 ஆறு மின்வலு இயலளவு 2019 ஆம் ஆண்டில் ஆறு மாதங்களிற்காக பிறப்பாக்க அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்காத மின்வலு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2020 பெப்ரவரி முதல் 6 மாதங்களிற்கு காலநீடிப்புச் செய்யப்பட்டு ரூபா 3.26 பில்லியன் பெறுமதியான 78.669 புறா எரிசக்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 46 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஐஐ ஆம் பகுதியின் 11(அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | 1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் உள்ளவாறான மொத்தம் நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியில் 0.1 சதவீதப் பங்களிப்பு காப்புறுதி பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டும் என குறிப்பி-டப்பட்டிருந்த போதிலும் அந் நிதியத்தில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,996 மில்லியன் தொகையை மாத்திரம் இ.மி.ச. முதலீடு செய்திருந்தது. மீளாய்வாண்டில் ரூபா 1.2 பில்லியன் தொகை முதலீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ீநுனு 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக, அவ்வப்போது வரிசை அமைச்சுக்கும் சேமலாப நிதியத்துக்கும் விடுவிக்கப்பட்டிருந்த 56 ஊழியர்களிற்காக ரூபா 79.13 மில்லியன் தொகையினை ஆண்டிற்கான சம்பளமாகவும் ஏனைய கொடுப்பனவுகளாகவும் சபை செலுத்தியிருந்தது. |
| (உ) பொது முயற்சிகள் திணைக்களத்தினால் 1994 யூன் 14 ஆந் திகதி வழங்கப்பட்ட 95 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் அமைச்சின் கணக்காய்வுக் குழுவில் 2020 செப்தெம்பர் 25 அன்று எடுக்கப்பட்ட தீர்மானம் | ஏற்பாடுகள் மற்றும் தீர்மானங்களிற்கு முரணாக ரூபா 1.2 பில்லியன் தொகை 2020 ஆம் ஆண்டில் விடுமுறை காசாக்கல் என்ற வகையில் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப சட்டத்தின் 47 ஆம் பிரிவு | ஏற்பாட்டுக்கு முரணாக, உழைப்புக்களை கணிப்பிடுகையில் எக்சோடஸ் கொடுப்பனவு, முதுமானிப் பட்டக் கொடுப்பனவு மற்றும் உயர்தொழில் கொடுப்பனவு ∴ பகுதி உயர் தொழில் கொடுப்பனவு ஆகியவற்றிலிருந்து ஆகக்கூடிய கொடுப்பனவை இ.மி.ச. கருத்தில் கொண்டிருந்தது. |
| (எ) வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடட் உடன் 2007 சனவரி 10 ஆந் திகதி கைச்சாத்திட்ட மின்வலு கொள்வனவு உடன்படிக்கையின் 6.1.3 ஆம் பிரிவு | 220kv வலுவில் இ.மி.ச. இனால் கம்பனிக்கு வழங்கப்பட்ட மின்சக்தி, 220மஎ வலுவில் மின்சக்தியினை வழங்குவதற்கு எந்த விதிமுறைகளும் நிபந்தனைகளும் இல்லை என்றால், அத்தகைய விநியோகத்தின் போது இ.மி.ச. இன் வழங்கல் நேரத்தில் இ.மி.ச. இன் தொழில்துறை நுகர்வோருக்காக இ.மி.ச. இடமிருந்து கம்பனி அறவிடுகின்ற மின்சக்தி கிரயத்தில் காணப்படுதல் வேண்டும். இந்த விதிமுறைக்கு மாறாக, கம்பனிக்கு இ.மி.ச. இனால் வழங்கிய மின் சக்தி கட்டண வீதத்தை கணிப்பிடுகையில் இயலளவுக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்களை கருத்தில் கொள்ளாமல் எரிசக்தி கட்டணத்தை மட்டுமே இ.மி.ச. கருத்தில் கொண்டிருந்தது. |
| (ஏ) 2018 ஒக்தோபர் 03 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானம் | அரசாங்க நிறுவனங்களிற்கு சொந்தமான தயார் நிலையிலுள்ள மின்பிறப்பாக்கிகளை பயன்படுத்துவதன் மீதான அமைச்சரவை தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு இ.மி.ச. தவறியிருந்தது. |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

**2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வருவனவற்றைத் தவிர்த்து, சபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்காத விதத்தில் செயற்பட்டிருந்தது என்றும்,**

(அ) 2007 நவம்பர் 14 இல் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் 2009 மே 26 இன் 39 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகள் என்பவற்றிற்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீது இ.மி.ச. இன் பதவியணியினரிற்கு காலத்திற்குக் காலம் பல்வேறு பதவியணியினர் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. 2020 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,544.4 மில்லியன் மற்றும் ரூபா 1,712 மில்லியன் கூட்டுமொத்தமான அத்தகைய படிகள் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வு தெரிவுச் செவ்வைகளின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) உழைக்கும் போதே செலுத்தும் (பிஏவைஈ) வரி ∴ உயர்தர தனிப்பட்ட வருமான வரிப் பொறுப்பை ஊழியர்களுக்கு மாற்றுவதற்காக 2015 மே 20 இல் கூட்டு உடன்படிக்கையை கருத்தில் கொள்ளும் போதும் 2007 திசெம்பர் 13 இல் சம்பள மீளாய்வின் போதும் அமைச்சரவை தீர்மானங்களை எடுத்திருந்தது. எனினும் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானங்களுக்கும் 3∴2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கும் முரணாக 2010 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியின் போது உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரியை ∴ உயர்தர தனிப்பட்ட வருமான வரியை கழிக்காமல் இ.மி.ச. அதன் சொந்த நிதியிலிருந்து அத்தொகையை செலுத்தியிருந்தது. ரூபா 5.48 மில்லியன் வரி மீதான வரிக் கட்டணம் உள்ளடங்கலாக மீளாய்வாண்டின் போது அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை ரூபா 57.04 மில்லியன் ஆகும்.

(இ) 1998 மார்ச் 08 ஆம் திகதிய 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் முதல் 14 சதவீதம் வரையான வட்டி வீதத்தில் வாகனக் கடன்களை வழங்குவதற்குப் பதிலாக இ.மி.ச. 4.2 சதவீத வட்டி வீதத்தில் அத்தகைய கடன்களை வழங்கியிருந்தது. மேலும்இ இ.மி.ச. பல திரவ பிரச்சனைகளை எதிர்கொள்ளுகின்ற போதிலும் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி பதவியணியினர் கடன்கள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய இலங்கை மின்சார சட்டத்தின் 24 (1) (இ) பிரிவிலுள்ள தேவைப்பாடுகளை கருத்தில் கொள்ளாமல் நீண்டகால மின்பிறப்பாக்க விரிவாக்கத் திட்டத்தின் பிரகாரம் மின்வலு ஆலைகள் நிறுவப்படுகின்றமை மற்றும் குறுங்கால அடிப்படையில் அனல் மின்வலு கொள்வனவு செய்யப்படுகின்றமை காரணமாக மின்சக்திக்கான நியாயமான முன்னறிவிப்பு தேவையை பூர்த்தி செய்வதற்கு மின் உற்பத்தி நிலையங்களில் போதுமான இயலளவு காணப்படுவதை உறுதி செய்வதற்கு இ.மி.ச. (பரிமாற்ற அனுமதிப்பத்திர தாரர்) தவறியிருந்தது.

(உ) 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இ.மி.ச. நுகர்வோர் வைப்புக்களிற்கான வட்டியை செலுத்தியிருக்காததுடன் 2020 ஆம் ஆண்டிற்காக இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் அறிக்கையிடப்பட்ட விலைவீதத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் அவற்றின் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா 1,613 மில்லியனாக இருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்படாத திரண்ட வட்டி ரூபா 6,731.90 மில்லியனாக இருந்தது.

**2.2.4 பின்வருவனவற்றைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பேரவையின வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக காலஎல்லைக்குள் சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என.**

(அ) 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய மின்சார சட்டத்தின் படி, 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னர் மரபுசாராத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (என்சிஆர்இ) செயற்திட்டங்கள் அவற்றின் கொள்வனவுகளிற்கு நியம கட்டணத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். இருப்பினும், 390 மெகாவாட் இயலளவுடைய என்சிஆர்இ செயற்திட்டங்களுக்காக 7 கொள்வனவுகள் மாத்திரமே 2020 திசெம்பர் 31 வரை தொடங்கப்பட்டிருந்ததுடன், 24 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மின் நிலையங்கள் மட்டுமே 2020 திசெம்பர் 31 வரை தொடங்கப்பட்டிருந்தன.

(ஆ) ஒவ்வொன்றும் 1 மெகாவாட் இயலளவுடைய 60 சூரிய மின் உற்பத்தி ஆலைகளை கொள்வனவு செய்யும் பிரேரணைகளுக்கான கோரிக்கை (ஆர்எ∴ப்பி) 2017 பெப்ரவரி 20 அன்று வரவழைக்கப்பட்டது. 38 ஆலைகளுக்காக 65 கேள்விமனுக்கள் மாத்திரமே பெறப்பட்டிருந்ததுடன் 36 வெற்றிகரமான கேள்விமனு தாரர்களில் 35 ஆலைகளுக்கு கிலோவாட் ஒன்றுக்கு ரூபா 12.73 முதல் ரூபா 18.37 வரையிலான விலை வீச்சில் ஆர்வ வெளிப்படுத்தல் கடிதம் வழங்கப்பட்டது. ஆலைகளின் நீடிக்கப்பட்ட ஆரம்பித்தல் காலம் 2020 திசெம்பர் 31 அல்லது அதற்கு முன்னதாக காணப்பட்ட போதிலும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 20 ஆலைகள் மட்டுமே ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

(இ) 2018-2037 வரையான நீண்ட கால மின்பிறப்பாக்கத் திட்டத்தின் படி, சீதாவ கங்கை நீர் மின்வலு செயற்திட்டம் 2022 க்குள் தொடங்கப்படுதல் வேண்டும். செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு (பிஎம்யு) 2016 செப்டம்பர் இல் நிறுவப்பட்டதுடன் சாத்தியக்கூறு ஆய்வு, விரிவான வடிவமைப்பு மற்றும் கேள்விமனு ஆவணங்களின் வரைபினைத் தயாரித்தல் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த செயற்திட்டத்திற்காக 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 289 மில்லியன் கிரயம் ஏற்பட்டிருந்தது. இருப்பினும், 2020 திசெம்பர் 20 அன்று நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கு சபை தீர்மானித்தது. மேலும், மேற்குறித்த செயற்திட்டத்தை ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (பிரைவேட்) லிமிடெட் மூலம் அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் 2021 பெப்ரவரி 23 அன்று நடைபெற்ற சபை கூட்டத்தில் இந்த ஒப்பந்தத்தை எஸ்எல்இக்கு “ஒற்றை மூல கொள்வனவு” என்ற அடிப்படையில் வழங்குவதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. எனவே இந்த செயற்திட்டத்திற்கான முதலீட்டை முதலீட்டாளர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாவிட்டால், இந்த செயற்திட்டத்திற்கு ஏற்பட்டுள்ள ரூபா 289 மில்லியன் செலவானது இ.மி.ச. இற்கான செலவாகவே காணப்படும்.

(ஈ) சூரியசக்தி மின் நிலையங்களுக்கான ரூபா 23.10 சமவிகித வீதம், நியமக் கட்டணமாக 2014 மார்ச் 07 அன்று அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய மின்சார சட்டத்தின் பிரகாரம், 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னர் மரபுசாராத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (என்சிஆர்இ) செயற்திட்டங்கள் அவற்றின் கொள்வனவுகளிற்கு நியம கட்டணத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். இருப்பினும், ஒவ்வொன்றும் 10 மெகாவாட் இயலளவுடைய ஐந்து சூரிய மின் உற்பத்தி நிலையங்கள், கொள்வனவு நடைமுறைகள் மூலம் தீர்மானிக்கப்பட்ட கட்டணங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நியமக் கட்டணத்தின் கீழ் தொடங்கப்பட்டிருந்தன. (மின்வலு கொள்வனவு உடன்படிக்கைகள் 2014 இல் கையெழுத்திடப்பட்டன). புதிய சூரிய மின் உற்பத்தி நிலையங்களுக்கு (1ஆறு ஒ 60) 2017 இல் நடத்தப்பட்ட கொள்வனவு சபை மூலம் நிர்ணயிக்கப்பட்ட விகிதங்கள் ரூபா 12.73 முதல் ரூபா 18.37 வரையான வீச்சில் காணப்பட்டன.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

(உ) கொள்வனவு நடைமுறைகள் மூலம் தீர்மானிக்கப்பட்ட வலை வீதங்களுக்குப் பதிலாக 2014 மார்ச் 07 அன்று அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட நியமக் கட்டணமானது, 2013 ஆகஸ்ட் 06 க்குப் பிறகு தொடங்கப்பட்ட மொத்தம் 135.62 மெகாவாட் இயலளவுடைய உயிர் எரிவாயு ஆலை, தென்ட்ரோ மின்வலு நிலையங்கள், சிற்றளவு நீர்மின் ஆலைகள் மற்றும் காற்றாலை மின் உற்பத்தி (மின்வலு கொள்வனவு உடன்படிக்கைகள் 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னர் கையெழுத்திடப்பட்ட) செயற்திட்டங்களிற்கு பிரயோகிக்கப்பட்டன.

(ஊ) 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னரான மரபுசாராத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயற்திட்டங்களிற்கு கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டிய போதிலும், ஒரு கிலோவாட் இற்கு ரூபா 36.20 வீதத்தில் கழிவை எரிசக்தியாக மாற்றுகின்ற தொழில்நுட்பத்தின் அடிப்படையில் ஐந்து மாநகராட்சி திடக்கழிவு ஆலைகள் (20 வருடங்களுக்கு சமவிகித கட்டண) செயற்திட்டங்களிற்கு அமைச்சரவை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. ஒரு திடக் கழிவு ஆலைக்கான மின் கொள்வனவு ஒப்பந்தம் 2020 திசெம்பர் இல் கையெழுத்திடப்பட்டதுடன் அமைச்சரவை தீர்மானத்தின் படி திறைசேரியிலிருந்து ரூபா 36.20 தொகையில் ரூபா 13.10 திருப்பிச் செலுத்தப்பட வேண்டுமாயினும் கிலோவாட் ஒன்றுக்கு ரூபா 36.20 மொத்த கட்டணமும் இ.மி.ச. இனால் பொறுப்பேற்கப்படுகின்றது.

## 2.3 ஏனைய அவதானிப்புகள்

(அ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 42இ358 மில்லியன் வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் சாதாரண மற்றும் மொத்த வழங்கல்கள் இரண்டுடனும் தொடர்புடைய ரூபா 5இ122 மில்லியன் மீதி ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் அதில் ரூபா 2இ671 மில்லியன் தொகை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தது.

(ஆ) ரூபா 3.21 பில்லியன் கூட்டுத்தொகையான சில்லறைக் கடன்பட்டோர் மீதிகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு ஆண்டிற்கும் மேலாக அறவிடப்படாதுள்ளது.

(இ) சொத்து முகாமைத்துவப் பிரிவின் பாரந்தூக்கி, காற்றுச் சீராக்கி மற்றும் மின்வலு பிறப்பாக்கிகளை வழங்கியமைக்காக அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 115 மில்லியன் தொகையொன்று ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாது வைக்கப்பட்டுள்ளது.

(ஈ) நிலக்கரி பற்றாக்குறை தொடர்பில் ஐந்து வருடங்களுக்கு மேலாக லங்கா கோல் கம்பனியிடமிருந்து அறவிடப்படாதுள்ள ரூபா 714.96 மில்லியன் மீதி தொடர்ந்தும் அறவிடப்பாது வைக்கப்பட்டுள்ளது.

(உ) பின்வரும் ரூபா 4.3 பில்லியன் கூட்டுத்தொகையான கடன்கொடுநர் மீதிகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்தன.

| கடன்கொடுத்தோர் பெயர் | தொகை ரூபா |
|---|---|
| சுங்கம் | 1,065,828 |
| சீன இயந்திர பொறியியல் கூட்டுத்தாபனம் | 3,034,971,432 |
| செலுத்தவேண்டிய பிடித்துவைத்த பங்கிலாப வரி | 1,270,766,413 |

(ஊ) நொதர்ன் பவர் கம்பனி (பிரைவட்) லிமிடட் இற்குச் செலுத்த வேண்டிய ரூபா 2.9 பில்லியன் தொகை இரண்டு ஆண்டுகளிற்கும் மேலாக பரிமாற்றப் பிரிவின் வியாபார கடன்கொடுத்தோராக வைக்கப்பட்டுள்ளது.

(எ) 2020 ஒக்தோபர் 16 இல் உள்ளவாறு ரூபா 1.04 பில்லியன் பெறுமதியுடைய 51,439.64 மெற்றிக் தொன் நிலக்கரி இருப்பு பற்றாக்குறையாக இருக்கின்றமை இனங்காணப்பட்டுள்ள போதிலும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வுக் குழுவினால் பௌதீக இருப்புக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், 1.04 பில்லியன் பெறுமதியுடைய 51,439.64 மெற்றிக் தொன் நிலக்கரி இருப்பு 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பற்றாக்குறையாக வருமானக் கூற்றிற்கு சீராக்கப்பட்டுள்ளது. ஆகையால், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 9.99 பில்லியன் நிலக்கரி இருப்பு மீதியின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை.

மேலும், ரூபா 3.2 பில்லியன் தொகை தொடர்ந்தும் நிலக்கரி இருப்பு பற்றாக்குறையாக காணப்படுவதுடன் 2019 திசெம்பர் 31 வரை மேலதிக நிலக்கரி இருப்பாக காணப்பட்ட ரூபா 1.3 பில்லியன் தொகை 2020 ஒக்தோபர் 06 ஆந் திகதிய சபை தீர்மானத்தின் படி நிறுத்திவைத்த உழைப்புக்கு சாட்டப்பட்டிருந்தது.

(ஏ) இ.மி.ச. பல வருடங்களாக மின்சாரத்தை லெகோ (டுநுஊழு) இற்கு விற்பனை செய்வதுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்கின்ற போதிலும் இவ் இரண்டு நிறுவனங்களிற்கிடையே சுமூகமான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக இவ் இரண்டு தரப்பினர்களுடன் கைச்சாத்திடப்பட்ட விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக்கைகள் காணப்படவில்லை.

(ஐ) இ.மி.ச. இன் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்ட நிதிகள் காலரீதியாக பயன்படுத்தப்படாததன் காரணமாக வழங்கப்பட்ட கடன்களிலிருந்து 2020 ஆம் ஆண்டில் கடனளிக்கும் முகவரால் கடப்பாட்டுக் கட்டணங்களாக ரூபா 92.69 தொகை கழிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், கணிப்பீடுகள் இன்மை காரணமாக கடப்பாட்டுக் கட்டணங்களின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை.

(ஒ) நீண்ட கால மின்பிறப்பாக்க விரிவாக்கத் திட்டம் 2018 - 2037 இன் படி, 500 ஆறு, 657ஆறு மற்றும் 430ஆறு புதிய மின்பிறப்பாக்கத்தை முறையே 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், திட்டமிடப்பட்ட புதிய 1587 ஆறு மேலதிக இயலளவில் 275.8 ஆறு இயலளவுடைய மின்வலு ஆலைகள் மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆகையால், புதிய பின்பிறப்பாக்க ஆலைகளை அமுல்படுத்தலின் செயல் முன்னேற்றம் மிகக் குறைவாக காணப்பட்டதுடன் குறைந்த கிரயத்தில் மின்சாரத்தை வழங்குகின்ற குறிக்கோள் அடையப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, ரூபா 22.2 பில்லியன் பெறுமதியான 811புறு எரிசக்தி, அவசரக் கொள்வனவாக மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) உதுறுவசந்தய செயற்திட்டத்தின் கீழ் 2014 இல் இனங்காணப்பட்ட ரூபா 39.55 மில்லியன் இருப்பு பற்றாக்குறை தொடர்பாக 3 ஆண்டுகள் தாமதிக்கப்பட்டு 2017 ஏப்ரல் மாதத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் விசேட புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

எனினும் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் ரூபா ரூபா 2.5 மில்லியன் பற்றாக்குறைக்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இது தொடர்பில் 2015 இல் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் 6 ஆண்டுகளிற்குப் பின்னரே பொருட்கள் கிடைத்ததாக குறிப்பிட்டு மற்றொரு உத்தியோகத்தருக்கு எதிராக திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கொன்றுடன் (வழக்கு இல. பீ∴1164∴15) தொடர்புடைய ரூபா 39.55 மில்லியன் தொகைக்கு எதிராக ரூபா 31.25 மில்லியன் தொகை 2020 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த இருப்பு பற்றாக்குறை தாமதத்திற்கு பொறுப்புடைய ஆட்களிற்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) 2006 நவம்பர் 20 தொடக்கம் 2012 பெப்ரவரி 20 வரையான காலப்பகுதியின் போது சொத்து முகாமைத்துவப் பிரிவில் (மின்வலுப் பொறி) ஏற்பட்டிருந்த ரூபா 3.67 மில்லியன் இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான நபர் தொடர்பாக முறையான புலனாய்வு முடிவடைந்திருந்த போதிலும் அந்த நபருக்கு எதிராக 2018 ஆகஸ்ட் 16 வரை சபையால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அதே ஊழியர் இ.மி.ச. இன் இன்னொரு அலுவலகத்தில் மோசடியொன்றில் ஈடுபட்டிருந்ததுடன் முன்னைய மோசடியைக் கருத்திற் கொள்ளாது மோசடிப் பெறுமதியாக ரூபா 99,155 மாத்திரம் அறவிடப்பட்ட பின்னர் அவரது வேலை முடிவுறுத்தப்பட்டிருந்தது.

(∴) புலனாய்விற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவால் பரிந்துரைக்கப்பட்டவாறு நட்டம் அறவிடப்படாமல் ரூபா 3.79 மில்லியன் இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவர் 2011 ஒக்டோபர் 15 இல் ஓய்வு பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார். மேலும் மேற்படி பொருண்மையான தொகையினை சீராக்குவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமல் கணக்குப் புத்தகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தரை ஓய்வு பெறுவதற்கு அனுமதித்திருந்த உத்தியோகத்தருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையினையும் எடுக்காது இந்தத் தொகையினை பதிவழிக்கும் செயற்பாட்டில் சபை ஈடுபட்டுள்ளது.

(க) மின்பிறப்பாக்கப் பிரிவிலுள்ள மூலதன முடிவுறா வேலைகளில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 260.48 மில்லியன் மீதி நகர்த்தப்படாமல் கணக்குகளில் வைக்கப்பட்டுள்ளது.

(கா) செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள 76 செயல்பாடுகளில் 16 செயல்பாடுகள் மாத்திரமே மின்பிறப்பாக்கப் பிரிவினால் மீளாய்வாண்டில் அடையப்பட்டிருந்தது.

(கி) ரூபா 63.55 பில்லியன் மதிப்புள்ள அணைகளின் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு சபை தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(கீ) ரூபா 26.75 பில்லியன் மொத்த நுகர்வுப்பொருள் கையிருப்பில் 10 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற ரூபா 2.67 பில்லியன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்றில் மெதுவாக நகரும், நகராத மற்றும் சேதமடைந்த இருப்புக்களாக காட்டப்பட்டுள்ளது. இந்தளவு அதிகமாக நகராத மற்றும் மெதுவாக நகரும் இருப்புக்களை பராமரிப்பதனால் அது சேதங்கள், இருப்பு வைத்திருப்பதற்கான கிரயம் மற்றும் மோசடி போன்றன அதிகரிப்பதற்கு வழிவகுக்கும்.

(கு) ஏசிஇ பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் உடன் கைச்சாத்திடப்பட்ட மின்வலு கொள்வனவு உடன்படிக்கை (பிபிஏ) உடன் தொடர்பான ஆகக்குறைந்த உத்தரவாத எரிசக்தி தொகை (எம்ஜிஇஏ) ஆண்டுக்கு 697,674,432 கிலோவாட் ஆக காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் ரூபா 24.42 கட்டண வீதத்தில் வழங்கப்பட்ட எரிசக்தி 475,831,835 கிலோவாட் ஆகும். அதன்படி, மீளாய்வாண்டில் வழங்கப்படாத 221,842,597 கிலோவாட் எரிசக்திக்காக இயலளவுக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், குறுங்கால அடிப்படையில் தென் மாகாணத்திற்கு மின்சாரம் வழங்குவதற்காக மாத்தறையில் 20 மெகாவாட், ஹம்பாந்தோட்டையில் 24 மெகாவாட் மற்றும் காலியில் 24 மெகாவாட் எரிசக்தி கொள்வனவு உடன்படிக்கைகள் கையெழுத்திடப்பட்டன. அதன்படி, இந்த ஆலைகளிலிருந்து ரூபா 4.07 பில்லியன் பெறுமதியுடைய 130,526,364 கிலோவாட் மொத்த மின்சாரம் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த ஆலைகளின் ஒரு அலகின் விலை முறையே ரூபா 28.30, ரூபா 36.84 மற்றும் ரூபா 39.52 ஆகக் காணப்பட்ட போதிலும், சராசரி விற்பனை விலை ரூபா 16.72 ஆகும். எனவே, இந்த ஆலைகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட எரிசக்தியை எம்பிலிப்பிட்டிய ஆலையிலிருந்து பெறக்கூடியதாக காணப்படுகின்றமையால் எரிசக்தி கொள்வனவுக்கான அதிகப்படியான கிரயத்தை குறைத்திருக்க முடியும். மேலும், அதிக கிரயத்தில் அவசர மின் நிலையங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக உச்சத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இ.மி.ச. இற்கு சொந்தமான ஆலைகள் இயக்கப்பட வேண்டும்.

(கூ) 2020 ஆம் ஆண்டிற்கான தவிர்க்கப்பட்ட கிரய முறையின் மீது சிற்றளவு நீர்மின் ஆலைகளுக்கான விலை வீதம் குளிர் காலத்தில் ரூபா 19.51 ஆவதுடன் வறண்ட காலத்திற்கு ரூபா 21.25 ஆகும். தவிர்க்கப்பட்ட செலவு முறை அனல் ஆலை அனுப்புதலை அடிப்படையாகக் கொண்டதுடன் இது எரிபொருள் கிரயத்தை பொறுத்து மாறுபடும். எனவே, இந்த முறையின் மீது நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதம் சிற்றளவு நீர்மின் ஆலையின் உண்மையான கிரயத்துடன் எந்த தொடர்பையும் கொண்டிருக்கவில்லை. நீர் மின்சாரத்தின் அலகொன்றுக்கான சராசரி கிரயம் ரூபா 10 இற்கும் குறைவாக காணப்படுதல் வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டதுடன், இ.மி.ச. இன் நீர் மின்சாரத்தின் அலகொன்றுக்கான சராசரி கிரயம் ரூபா 2.49 ஆகும். மேலும், இது அலகொன்றுக்கான சராசரி விற்பனை விலையை விட ரூபா 16.72 அதிகமானதாகும்.

**ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள

**இலங்கை மின்சார சபையின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தகவல் பந்தி

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்ஏஎஸ்ஃஎஸ்எல்எவ்ஆர்எஸ்) மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்குதல்

**(அ) நிதிசார் அறிக்கையிடலுக்கான எண்ணக்கருவாக்க சட்டகம்**

i & ii சட்டகத்தின் 4.1 (ஆ) மற்றும் 4.3 ஆம் பந்திகளுக்கு முரணாக, சபைக்கு ஏற்பட்ட கிரயத்திற்கும் குறிப்பிட்ட வருமான உழைப்புக்கும் இடையே நேரடி தொடர்பு இல்லாத மற்றும் தனிப்பட்ட நிறுவனத்தின் நிர்வாகச் செலவுகளான ரூபா 43.97 மில்லியன் தொகை இ.மி.ச. ஆல் பொறுப்பேற்கப்பட்டிருந்தமை மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரமும் சொத்தின் உரிமையும் இ.மி.ச. இற்கு காணப்படுகின்ற ரூபா 8 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் வேறொரு நிறுவனத்தால் பயன்படுத்தப்படுகின்றமை.

சேமலாப மற்றும் ஓய்வூதிய நிதியத்தை நிறுவும் அதிகாரத்தை இலங்கை மின்சார சபை சட்டத்தின் பிரிவு 12 (த), சபைக்கு வழங்கியுள்ளது. எனவே, இ.மி.ச. இன் ஊழியர்களுக்கான சேமலாப நிதியத்தை நிறுவுதல் என்பது இ.மி.ச. இன் தீர்மானமாகும்.

2003 திசெம்பர் 31 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சேமலாப நிதியத்தின் 5 ஆம் இலக்க விதியின் படி, சபையால் நியமிக்கப்பட்ட குழுவால் நிதியம் முகாமை செய்யப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றமையால் நிதியத்தை முகாமைத்துவம் செய்து நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு சபைக்கு காணப்படுகின்றது. ஆகையால், நிதியத்தை முகாமைத்துவம் செய்து நிர்வகிப்பதற்கான செலவுகள் இ.மி.ச. ஆல் பொறுப்பேற்கப்படுகின்றது.

மேலும், மேற்படி விதிகளின் 20 (ெ) ஆம் இலக்க உட்பிரிவின் படி, வீட்டுக் கடன்களை பரிசோதிப்பதுடன் தொடர்புடைய செலவுகளைத் தவிர்த்து, நிதியத்தின் அனைத்து நிர்வாகச் செலவுகளும், இ.மி.ச. ஆல் பொறுப்பேற்கப்படுவதுடன் இந்தக் கொள்கை நிதியத்தின் ஆரம்பத்தில் இருந்தே (1969 நவம்பர் 01 முதல்) நடைமுறையில் இருக்கின்றது. எனவே சேமலாப நிதியம் சார்பாக இ.மி.ச. ஆல் செய்யப்பட்ட செலவுகள் நிதியத்தின் நிதி கூற்றுக்களில் பதிவு செய்யப்படவில்லை.

இந்த விடயம் நிதியத்தின் முகாமைத்துவக் குழு கூட்டத்தில் 2021 பெப்ரவரி 11 அன்று முன்வைக்கப்பட்டது, அதற்கமைய தற்போதைய நடைமுறையினை தொடர்வதற்கு குழு தீர்மானித்ததுடன், அதற்காக சபையின் ஒப்புதலை பெறவும் முடிவு செய்யப்பட்டது. ஆதற்கமைய, ஒரு சபை விஞ்ஞாபனம் இ.மி.ச. இன் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் இந்த விடயத்தை விரிவாகக் கருத்தில் கொண்டு, நிதியத்தின் முகாமைத்துவ மற்றும் நிர்வாகச் செலவுகளைச் செய்வதற்கான தற்போதைய கொள்கையைத் தொடர்வதற்கு சபை ஒப்புதல் அளித்துள்ளது.

iii. சொத்தின் உரிமையுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இன்மை காரணமாக தலைமை அலுவலகக் கட்டிடக் காணியின் உரிமைத்துவத்தை மெய்மையாய்வு செய்ய முடியாதுள்ளது.

இ.மி.ச. இன் தலைமை அலுவலக கட்டிடம் அமைந்துள்ள நிலத்தின் உரிமைக்கான உரிய ஆவணங்கள் கிடைக்கவில்லை. எனவே, இ.மி.ச. இன் தலைமை அலுவலக கட்டிடத்தின் உரிமையை உருவாக்கவதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு இ.மி.ச. காணிகள் ஆணையாளரைக் கோரியுள்ளது.

**(ஆ) எல்கேஏஎஸ் 2 - இருப்புக்கள் மற்றும் எல்கேஏஎஸ் 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

**இ.மி.ச. ஆனது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக ஏற்பட்ட மேந்தலைக் கிரயங்களை பெறுமதியிடுவதற்காக நியமக் கிரய முறையை பிரயோகிக்கின்றது.**

வருடாந்தம் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் மூலதன வேலைகளுக்கு மேந்தலைக் கிரயத்தை உறிஞ்சுதல் இ.மி.ச. விநியோகப் பிரிவுகளில் மட்டுமே நடைமுறையில் உள்ளது. நிர்மாண வேலைகளுடன் நேரடியாக தொடர்புடைய ஒவ்வொரு பிரிவினதும் பாதிடப்பட்ட கிரயத்தை பயன்படுத்தி வருடாந்த மேந்தலை உறிஞ்சுதல் விகிதம் கணிப்பிடப்படுகின்றது. பாதிடப்பட்ட கிரயத்தை விநியோகப் பிரிவுகளின் உண்மையான கிரயத்தோடு ஒப்பிடும் போது, உண்மையான கிரயங்கள் பாதிடப்பட்ட கிரயங்களை 10மூ ஆல் விஞ்சியிருந்தமை கண்டறியப்பட்டது. எனவே, பயன்படுத்தப்படும் மேல்நிலை உறிஞ்சுதல் விகிதமும் நியாயமானது.

**(இ) LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

**பரிமாற்றல் பிரிவிலுள்ள ரூபா 172.2 பில்லியன் சொத்துக்களில் ரூபா 171.2 பில்லியன் தொகையான நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டில் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.**

அனைத்து அசையும் நிலையான சொத்துக்கள் தொடர்பான பௌதீக மெய்மையாய்வு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன் கணக்காய்வின் தேவைக்கு வழங்குவதற்காக பதிவுகள் செய்யப்பட்டன. முக்கியமாக தற்போதுள்ள பரிமாற்று வழிகளுடன் சம்பந்தப்பட்டு தற்போது நாட்டிற்கு தொடர்ச்சியாக மின் எரிசக்தியை வழங்குவதற்காக மின்சார பரிமாற்ற வலைப்பின்னலின் ஒரு பகுதியாக உள்ள பொறிகள் மற்றும் இயந்திரங்களே அசைவுறாத சொத்துக்களாக காணப்படுகின்றன.

**(ஈ) எல்கேஏஎஸ் 37 - ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்**

**சபை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மற்றும் அதன் மீதான மேன்முறையீட்டின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டியுள்ள ரூபா 50 மில்லியன் தொகையினை வெளிப்படுத்தியிருக்கவில்லை.**

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

மின்சாரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டமை பற்றி செய்தித்தாள்களில் செய்தி வெளியானதால் தனது நற்பெயருக்கு பங்கமேற்பட்டதாகக் குறிப்பிட்டு திருமதி ஜானகி நெத்திகுமாரி இ.மி.ச. இற்கு எதிராக கடுவல மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு இல. 259/M இன் கீழ் ரூபா 50 மில்லியன் இழப்பீடு கோரி ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார். சாட்யங்களை கருத்திற் கொண்டதன் பின்னர், கடுவெல மாவட்ட நீதிமன்ற நீதிபதியால் 2019.08.22 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டதுடன் ரூபா 50 மில்லியன் தொகையை வாதிக்கு வழங்குமாறு இ.மி.ச. இற்கு உத்தரவிடப்பட்டது. இந்த உத்தரவை தள்ளுபடி செய்வதற்காக தீர்ப்புக்கு எதிராக இ.மி.ச. மேன்முறையீடு செய்துள்ளது. எதிர்காலத்தில் இந்த வழக்கை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

**இ.மி.ச. இனால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாகத் தேய்விடப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டிருக்காமை.**

முழுமையாக தேய்விடப்பட்ட சொத்துக்களில் 53% க்கும் அதிகமானவை மின்வலு பிறப்பாக்க பொறிகள் மற்றும் தொடர்புடைய சொத்துக்களைக் கொண்டுள்ளன. முழுமையாக தேய்விடப்பட்ட மின் நிலையங்களின் பயனுள்ள ஆயுட்காலத்தை ஆய்வு செய்வதற்காக ஒரு குழு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மின் நிலையத்தின் சிக்கலான தன்மை மற்றும் தனித்துவத் தன்மை காரணமாக, மதிப்பீட்டிற்கு கணிசமான காலம் தேவைப்படுகின்றது.

மோட்டார் வாகனங்களுக்கான திருத்தப்பட்ட பயனுள்ள ஆயுட் காலத்தை நடைமுறைப்படுத்துதல் 2021 ஆம் ஆண்டில் சபையின் ஒப்புதலுடன் செய்யப்படும்.

எஞ்சிய சொத்துக்களின் பிரதான கூறுகள் பரிமாற்ற மற்றும் விநியோக வழிகளாக காணப்படுவதுடன், இது முழுமையாக தேய்விடப்பட்ட சொத்துக்களில் 38% ஆகும். கணக்காய்வு அவதானிப்பை தீர்ப்பதற்கான ஒரு பொறிமுறையினை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ரூபா 189.54 மில்லியன் வரவு மீதி (இருப்பு பற்றாக்குறை) மற்றும் ரூபா 114.64 மில்லியன் செலவு மீதி (இருப்பு மிகை) என்பன தீர்வு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக இருப்பு சீராக்கல் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.**

இருப்புச் சீராக்கத்தை அகற்றுவதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- விடயங்களைத் தீர்ப்பதற்காக குழுக்களை நியமித்தல்
- பொறுப்புவாய்ந்த ஊழியர்களுக்கு எதிராக முறையான விசாரணைகளை நடத்துதல்
- சட்ட ஆலோசனைகளை பெறுதல், மற்றும்
- சபை விஞ்ஞாபனங்களை சமர்ப்பித்தல்.

அதன்படி, பற்றாக்குறை இருப்பு மீதியில் 46% இற்கு மேற்பட்டவையும் மேலதிக இருப்பு மீதியில் 30% இற்கு மேற்பட்டவையும் மேற்படி செயன்முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**(ஆ) அமைச்சரவையின் 2010 ஒக்தோபர் 13 ஆந் திகதிய 10/2434/423/034 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் லக்விஜய மின்வலு ஆலையின் நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 159.18 மில்லியன் கடன் தொகை திறைசேரியினால் லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட் (எல்சிசி) இற்கு மாற்றப்பட வேண்டுமென்பதுடன் எல்சிசி இற்கான கடன் சேவைக்காக அதற்குச் சமமான தொகையினை இ.மி.ச. செலுத்துதல் வேண்டும். இருப்பினும், இ.மி.ச. பொதுத் திறைசேரியுடன் எவ்வித உப கடன் உடன்படிக்கையிலும் கைச்சாத்திட்டிருக்காத போதிலும், இக்கடன்கள் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கடன்களாக பதிவுசெய்யப்பட்டிருந்தது.**

வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் -2014 இனை அமுல்படுத்துவதுடன் சம்பந்தப்பட்ட PE/EN/CEB/Equity/2014 ஆம் இலக்க 2014-09-30 தேதியிட்ட கடிதத்தின் படி, திறைசேரி செயலாளரால் கடனை உரிமைத்துவத்துக்கு மாற்றுதல் கையொப்பமிடப்பட்டது. புத்தளம் நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்துக்காக பெறப்பட்ட அனைத்து கடன்களும் இ.மி.ச. ஆல் பெறப்பட்ட நேரடிக் கடன்களாக கருதப்பட வேண்டுமென இ.மி.ச. அறிவுறுத்தப்பட்டதுடன் இந்த கடன்களுக்கான கடன்சேவையினை வழங்குவதற்கு நிலவுகின்ற திரவத்தன்மை பிரச்சினை காரணமாக இ.மி.ச. இற்கு கடன் சேவைச் செலவைச் சமாளிக்கும் நிலை ஏற்படும் வரை திறைசேரியினால் இந்நடவடிக்கை தொடரப்படும்.

மேலும், இக்கடனுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் ஆகிய இரண்டும் இ.மி.ச. இன் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளமையால் 2018-01-11 அன்று பொது முயற்சிகள் திணைக்களத்தில் நடைபெற்ற கூட்டத்தில், மேற்படி கடன்களைச் இ.மி.ச. இற்கு வழங்க வேண்டுமென சுட்டிக் காட்டப்பட்டது.

கடன் ஒப்பந்தமானது ஏற்கனவே இலங்கை அரசாங்கத்திற்கும் அந்தந்த கடன்களை வழங்கும் நிறுவனத்திற்கும் இடையே கையெழுத்திடப்பட்டுள்ளதால், கடனை இ.மி.ச. இற்கு மாற்றுவதற்கு திறைசேரி தேவையான ஏற்பாடுகளைச் செய்யும் வரை இக்கடன் திறைசேரியின் பொறுப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அனுப்பிய 2019-10-17 தேதியிட்ட PEP/I/CEB/2/II (i) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் திறைசேரியினால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களைக் கருத்தில் கொண்டு, இமி.ச. ரூபா 16,942,798,790.95 வட்டியுடன் சேர்த்து ரூபா 3,556,442,931.30 மூலதனத் தொகையினை 2019 ஆம் ஆண்டிற்கான இ.மி.ச. இன் புத்தகங்களில் சீராக்கியுள்ளது. மேலும், பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அனுப்பிய PED/1/CEB/02/11 (i) ஆம் இலக்க 15.01.2021 தேதியிட்ட கடிதத்தின் படி, ரூபா 20,536,545,932.04 தொகையினை பொது முயற்சிகள் திணைக்களத்தின் பதிவுகளுக்கு ஏற்ப இ.மி.ச. அதன் புத்தகங்களில் இலங்கை அரசாங்கத்தின் உரிமைத்துவதற்கு மாற்றியுள்ளது. அதன்படி, திறைசேரியின் வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப இ.மி.ச. இன் புத்தகங்கள் சீராக்கப்பட்டுள்ளன.

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் பிரிவு 42 இலுள்ள உப பிரிவு 6 இன் அடிப்படையில், இலங்கை அரசே நாணயமாற்று வீத இடரை பொறுப்பேற்பதனால், திறைசேரியின் ஊடாக பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

கடன்களுக்கான மூலதனம் மற்றும் வட்டி ஆகியவற்றுக்கான அந்நிய செலாவணி ஏற்ற இறக்கங்களால் எழும் இலாபங்கள் அல்லது இழப்புகளை சபை கணக்கிடுவதில்லை. சபையால் கடன்கள் பெறப்படும் போது ஒப்புக்கொள்ளப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் நிலுவைகள் மதிப்பிடப்படுகின்றன.

எவ்வாறாயினும், இந்த செலவை ஈடுகட்டுவதற்காக, இ.மி.ச. இன் சார்பாக அரசாங்கத்தால் பெறப்பட்ட கடன்களின் இழப்புகளை ஈடுசெய்யும் வட்டி விகிதத்தில் இ.மி.ச. உடன் ஒரு உப கடன் ஒப்பந்தத்தில் அரசாங்கம் கையெழுத்திடுகின்றது.

இக்கடன்களை இ.மி.ச. ஆல் பெறப்பட்ட நேரடிக் கடன்களாக கருதுவதற்கு திறைசேரி தீர்மானித்துள்ளமையால், அத்தகைய உப கடன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படவில்லை. இ.மி.ச. இன் திரவத்தன்மை கட்டுப்பாடுகள் காரணமாக திறைசேரியால் கடன் சேவை செலவுகள் செய்யப்படுவதால், கடன் வழங்கும் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட உண்மையான பணத்தொகை கடன் உரிமைத்துவமாக இ.மி.ச. இற்கு மாற்றப்பட்டது.

இ.மி.ச. இந்த கடன்களை ஆரம்பத்தில் சட்டத்திற்கு இணையாக பெறப்பட்ட விகிதத்தில் பதிவு செய்துள்ளமையாலும் அதன்பின்னர் கடன்கள் மீள் மதிப்பீடு செய்யப்படாமையாலும், மூலதன திருப்பிச் செலுத்துதல் தொடர்பான நாணயமாற்று இழப்பானது திறைசேரியினால் செய்யப்பட்ட கடனுக்கான உரிமைத்துவ மாற்றத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அதன்படி, 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையான நாணயமாற்று விகித விலகலுடன் தொடர்புடைய ரூபா 20,862,022.88 நாணயமமாற்று இழப்பானது 2020 ஆம் நிதியாண்டில் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டு இறுதி வரையான நாணயமாற்று விகித விலகலுடன் தொடர்புடைய ரூபா 6,154,069,044.78 நாணயமாற்று இழப்புத் தொகை 2019 ஆம் ஆண்டுக்கு சீராக்கப்பட்டது.

மேலும், 2019 ஆம் ஆண்டில் கடன் திருப்பிச் செலுத்துதலாக கணக்கிடப்பட்டுள்ள ரூபா 5,735,412,848.45 தொகை 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கடன் உரிமைத்துவ மாற்றத்தில் சேர்க்கப்பட்டு 2019 ஆம் ஆண்டிற்கான மொத்தம் ரூபா 11,889,481,893.00 நாணயமாற்று இழப்பாக 2020 ஆம் ஆண்டில் சீராக்கப்பட்டது.

**(இ) 2014 டிசெம்பர் 31 இற்கு பின்னர் திறைசேரியின் நிதிக் கூற்றுக்களில் உப கடன்களாக கருதப்பட்டிருக்காத போதிலும், ரூபா 25.23 பில்லியன் கடன் தொகையினை 2014 இற்கு பின்னர் செயற்திட்டங்களிற்கான உப கடன்களாக பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைத்த வெளிநாட்டு கடன்கள் என இ.மி.ச. பதிவுசெய்திருந்தது. 2015 மார்ச் 18 ஆந் திகதிய 15/0228/613/012 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த கடன்களை திருப்பிச் செலுத்துதல் இ.மி.ச. இற்கு ஒப்படைக்கப்பட்டது. இந்தக் கடன்களின் காணப்படு தன்மை ஐயத்துக்குரியதாக உள்ளதுடன் திருப்பிச் செலுத்தும் நிலைமைகள் மீதான நிதிக் கூற்றுக்கான தாக்கத்தை அளவிட முடியவில்லை.**

வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களின் கடன் சேவை வழங்குதல், திருப்பிச் செலுத்துதல் மற்றும் கணக்கீடு தொடர்பில் நிதி அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்ட 2015-03-18 தேதியிட்ட அமைச்சரவை ஞாபகக்குறிப்பு மற்றும் இது குறித்த 2015-03-09 தேதியிட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டு முதல் சேவை மேற்கொண்டு கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு இ.மி.ச. எதிர்பார்க்கின்றது.

இலங்கை அரசாங்கத்திற்கும் கடன் வழங்கும் நிறுவனத்திற்கும் இடையே கடன் ஒப்பந்தங்கள் ஏற்கனவே கையெழுத்திடப்பட்டிருந்தாலும், இ.மி.ச. சார்பாக அக்கடன்கள் பெறப்பட்டதால், ஆரம்பத்தில் இந்த கொடுப்பனவுகள் திறைசேரிக்குரிய ஒரு பொறுப்பாக பதிவு செய்யப்பட்டன.

அதைத் தொடர்ந்து, பொது முயற்சிகள் திணைக்களத்தில் 2018-01-11 அன்று நடைபெற்ற கூட்டத்தில், 2014.12.31 இற்குப் பின்னர் பொது திறைசேரியின் ஊடாக இ.மி.ச. இற்கு வழங்கப்பட்ட கடன்களை அமைச்சரவை ஒப்புதலுடன் இலங்கை அரசாங்கத்தின் உரிமைத்துவத்திற்கு மாற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டது.

எனவே, இந்த நிலுவைத் தொகையை உரிமைத்துவத்திற்கு மாற்றுவதற்கான திறைசேரியின் வழிகாட்டல் கிடைக்கும் வரை இ.மி.ச. அதை திறைசேரிக்குரிய ஒரு பொறுப்பாக பதிவு செய்துள்ளது.

**(ஈ) பொதுத் திறைசேரியுடன் எவ்வித உப கடன் உடன்படிக்கைளிலும் கைச்சாத்திட்டிருக்காத போதிலும், ரூபா 54.71 பில்லியன் பெறுமதியான ஆறு வெளிநாட்டுக் கடன்கள் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கடன்களாக சபையின் நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்டுள்ளது.**

திறைசேரியுடன் உப கடன் உடன்படிக்கைகள் முடிவாக்கப்பட்டிருக்காத போதிலும், திறைசேரியின் ஊடாக இ.மி.ச. சார்பாக அக்கடன்கள் பெறப்பட்டுள்ளன.

இ.மி.ச. சார்பாக பெறப்பட்டதால், இந்த கொடுப்பனவுகள் திறைசேரிக்குரிய ஒரு பொறுப்பாக பதிவு செய்யப்பட்டன. மேலும், இலங்கை அரசாங்கத்திற்கும் கடன் வழங்கும் நிறுவனத்திற்கும் இடையே கடன் ஒப்பந்தங்கள் ஏற்கனவே கையெழுத்திடப்பட்டுள்ளன.

**(உ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசாங்க நிறுவனங்களின் மின் பிறப்பாக்கிகள், மின்தூக்கிகள் மற்றும் வளிப் பதனாக்கிகளின் வழங்கல், பராமரிப்பு மற்றும் திருத்தத்திற்காக இ.மி.ச. ஆல் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அவற்றின் விலைச்சிட்டுப் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கிரயத்தில் பெறுமதியிடப்பட்டு அதற்கிணங்க அவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.**

இ.மி.ச. ஆல் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றும் அரச மருத்துவமனைகளில் இருந்து பெறப்பட வேண்டியவைகளை அறவிடுவதற்கான சாத்தியக்கூறுகள் சந்தேகத்திற்குரியதாக இருப்பதால், 2013 க்கு முன்னர், அந்த வருவாய்கள் காசு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டதுடன், வாடிக்கையாளரிடமிருந்து பணம் சேகரிக்கப்படும் வரை வேலைகளின் உண்மையான கிரயம் கணக்கு புத்தகங்களில் பெறத்தக்கதாக காட்டப்பட்டது. 2020-12-31 நிலவரப்படி, அரசு நிறுவனங்களுக்காக மேற்கொள்ளப்படும் வேலைகளின் உண்மையான கிரயத்திற்கும் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு ரூபா 43,421,695.18 ஆனதுடன் அது ஐயவினாவல் கூறப்பட்டுள்ளபடி ரூபா 66,987,761 அல்ல.

எனினும், 2020-10-06 ஆந் திகதி இடம்பெற்ற 20.14.279 ஆம் இலக்க கூட்டக் குறிப்பின் கீழ் வழங்கப்பட்ட சபை வழிகாட்டுதலின் படி, இ.மி.ச. இன் பொது முகாமையாளர், அவரது 2020-12-21 தேதியிட்ட CEB/FM/AFM (Corp)/DFM (P&I)/கடன்பட்டோர் கடிதத்தின் மூலம், இ.மி.ச. எதிர்கொண்டுள்ள திரவத்தன்மை சிக்கல்களைச் சமாளிப்பதற்காக அரசு நிறுவனங்களிடமிருந்து நீண்ட காலமாக நிலுவையாகவுள்ள தொகையை திரும்பப் பெறுவதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினது உதவியை நாடியுள்ளார். இதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து இதுவரை சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

மேலும், தொடர்ச்சியான முயற்சிகளுக்குப் பிறகும் சொத்துகள் முகாமைத்துவப் பிரிவால் அரசு நிறுவனங்களில் இருந்து நிலுவையாகவுள்ள தொகையை அறவிடுவதற்கு முடியாத நிலை காணப்படுவதால் அவற்றை பதிவழிப்பதற்காக ஒரு சபை விஞ்ஞாபனத்தை வரைவதற்கு 2020.12.21 அன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் 2020.'.03 இன் 03.03 ஆம் இலக்க கூட்டக் குறிப்பின் கீழ் கணக்காய்வுக் குழு பணிப்புரை வழங்கியதுடன் 2021.04.07 ஆந் திகதி இடம்பெற்ற சபை கூட்டத்தில் சபை கூட்டக்குறிப்பு இல. 21.06.128A இன் கீழ் அது சபையால் உறுதி செய்யப்பட்டது. அதன்படி, பிரதிப் பொது முகாமையாளர் (டபிள்யூ ரூ ஏஎஸ்) இது தொடர்பாக ஒரு சபை விஞ்ஞாபனத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இந்த பெறவேண்டிய மீதிகளின் அறவிடல் சாத்தியம் தொடர்பில் ஐயப்பாடு நிலவுகின்றமையால், இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (SLFRS) 9 - நிதிக் கருவிகள் என்பதன் கீழுள்ள பிரிவு 5.5.4 இற்கு இணங்க இ.மி.ச. இந்த நிலுவைகள் மீது முழுமையான நட்டக்கடன் ஏற்பாட்டை செய்துள்ளது.

மேலும், மீதிகளின் அறவிடல் சாத்தியம் தொடர்பில் ஐயப்பாடு நிலவுகின்றமையால் ஐயவினாவில் குறிப்பிட்டுள்ளபடி SLFRS 15 - ஒப்பந்த வருவாய் இன் பிரிவு (9) (உ) ஆனது பெறத்தக்க நிலுவைத் தொகையை (அதாவது, விலைப்பட்டியல் பெறுமதி) மீளவைப்பதற்கு பரிந்துரைக்கவில்லை. மேற்குறித்த வேலைகளின் விலைப்பட்டியல் பெறுமதிகளை அங்கீகரிப்பதற்காக கிரயத்தில் கூறப்பட்ட பெறவேண்டியவை கணக்குகளில் மீளவைக்கப்பட்டாலும் கூட, SLFRS 9 - நிதி கருவிகளின் பிரிவு 5.5.4 இல் உள்ள விதிகளின் படி 100% நட்டக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்,.

அதன்படி, (பெறவேண்டியவை மற்றும் நிறுத்திவைத்த உழைப்புக்களை அதிகரித்து) விலைப்பட்டியல் பெறுமதிகளை மீளவைத்தாலும் கூட இத்தகைய நிலுவைத் தொகை அறவிடப்படாமையால், நட்டக்கடன் ஏற்பாட்டை (பெறவேண்டியவை மற்றும் நிறுத்திவைத்த உழைப்புக்களை குறைப்பதற்கு) அங்கீகரிக்க வழிவகுக்கும்.

இது இ.மி.ச. இன் நிதி செயலாற்றல் மற்றும் நிதி நிலைமையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தாது என்பதனால் மேற்கூறிய அனைத்தையும் கருத்தில் கொண்டு, விலைப்பட்டியல் பெறுமதிகளை மீளமைப்பது மேலே குறிப்பிட்ட கணக்கீட்டு நியமங்களுடன் தொடர்புடைய விதிகளுகளுடன் இணங்காது காணப்படும். எனவே, கணக்காய்வு ஐயவினாவில் கூறப்பட்டுள்ளபடி நிதிக் கூற்றுக்களில் எந்தவொரு குறைத்துக்கூறலும் காணப்படவில்லை.

கணக்காய்விற்கு கோரப்பட்ட பெரும்பாலான தகவல்கள் ஏற்கனவே அந்தந்த பிரிவுகளின் தலைவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், தேவையான மேலதிக தகவல்களை அவர்களிடமிருந்து திரட்டிக் கொள்ளலாம்.

**(ஊ) 2016 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரிக்கு தீர்வையாகச் செலுத்திய ரூபா 5 பில்லியனில் ரூபா 500 மில்லியன் மீளாய்ண்டில் முகாமைத்துவக் கட்டணம் செலுத்துதல் என வகைப்படுத்தி வருமானக் கூற்றுக்கு காலத்தேய்மானம் செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1.5 பில்லியன் தொகை நிறுத்திவைத்த உழைப்புக்களிற்கு தாக்கீடு செய்யப்பட்டிருந்தது.**

2019.10.16 ஆந் தேதியிட்ட PDE/I/CEB/2/11/(iii) ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் கடிதத்தின் அடிப்படையில், 2019 ஆம் ஆண்டில் இந்த கொடுப்பனவு திறைசேரிக்கு செலுத்தப்பட்ட "முகாமைத்துவக் கட்டணம்" என்று கருதப்பட்டு 2017 ஆம் ஆண்டிலிருந்து 10 ஆண்டு காலப்பகுதியில் காலத்தேய்மானம் செய்யப்பட்டது.

**(எ) விநியோக பிரிவிலுள்ள சொத்துகளுக்கு மாற்றப்படாமல் ரூபா 6.18 பில்லியன் மதிப்புள்ள 7,546 பூரணப்படுத்திய வேலைகள் நடைபெற்றுவரும் வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன.**

பூரணப்படுத்திய வேலைகளை சரியான நேரத்தில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கு மூலதனமாக்குவதற்காக தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நீண்ட காலமாக நிலுவையில் உள்ள மூலதன வேலைகளை தொடர்ந்து கண்காணிக்கவும் ஒப்படைக்கவும் மாகாண அளவிலான குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அதன்படி, 2021 மே 31 இல் உள்ளவாறு கடந்த 4 ஆண்டுகளில் னுனு1 ஆனது 21% இனை மூலதனமாக்கியதுடன், DD3 ஆனது 28% இனை மூலதனமாக்கியது.

**(ஏ) 2012 இல் நிறைவடைந்த மேல் கொத்மலை நீர் மின்வலு செயற்திட்டம் தொடர்பான ரூபா 979.88 மில்லியன் மொத்தக் கிரயம் மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக இத்திகதி வரை முடிவுறா வேலைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.**

ஆரம்ப சொத்து பரிமாற்றத்திற்குப் பின்னர் 2020 திசெம்பர் வரை ரூபா 979.88 மில்லியன் செலவுகள் முடிவுறா வேலைகள் கணக்கில் திரண்டுள்ளது. இந்தத் தொகை பிரதானமாக பணியாளர் செலவுகள், நடுவர் தீர்ப்புக்கான சட்டக் கட்டணம் மற்றும் நிலம் கையகப்படுத்தும் செலவு போன்றவற்றைக் கொண்டுள்ளது. மீதமுள்ள தொகையை மாற்றுவதற்காக செயற்திட்ட அலுவலகத்தில் நிலுவையில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் இது 2021 ஆம் ஆண்டிற்குள் பூரணப்படுத்தப்படும்.

**(ஐ) 2014 இல் நிறைவடைந்த புத்தளம் நிலக்கரி மின்வலுச் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 179.19 மில்லியன் மொத்தக் கிரயம் கொண்ட வாகனங்கள் மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக இதுவரை முடிவுறா வேலைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.**

ஆரம்ப சொத்து பரிமாற்றத்தற்குப் பின்னர் திரண்டிருந்த ரூபா 528,013,647.76 தொகையான செலவு 2020 ஆம் ஆண்டில் அந்தந்த பிரிவுகளுக்கு மாற்றப்பட்டது. இருப்பினும், வாகனங்களின் கொள்வனவுக்காக ஏற்பட்டிருந்த 179,194,890 ஆனது வாகனங்களின் உரிமை இ.மி.ச. இற்கு மாற்றப்படாமை காரணமாக (10 வாகனங்கள்) கணக்ககளில் வைக்கப்பட்டுள்ளதுடன் இந்த வாகனங்களின் உரிமை இ.மி.ச. இற்கு மாற்றப்பட்ட பின்னர் இத்தொகை அந்தந்த பிரிவுகளுக்கு மாற்றப்படும்.

**(ஒ) பதிவழிக்கப்பட்ட மீதிகளுக்கு எதிராக இறுதியாக்கப்பட்ட மொத்த வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 18.76 மில்லியன் வட்டி வருமானம், பெ.சே.வ. மற்றும் மிகைக்கட்டணம் என்பன அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.**

எதிர்காலத்தில் தேவையான திருத்தங்கள் செய்யப்படும்.

**(ஓ) ரூபா 30.56 மில்லியன் தொகையான அறவிட முடியாத தெரு விளக்கு பராமரிப்பு செலவுகளிற்கான ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.**

மாகாண சபைகளால் செய்யப்படும் தெருவிளக்கு பராமரிப்பு செலவுகள் இ.மி.ச. இனால் மீளளிக்கப்படுவதுடன் அவை மின்வலு அமைச்சிடமிருந்து பெறவேண்டியதாக பதிவு செய்யப்படுகின்றது. மேற்குறிப்பட்ட மீதியானது 2013 ஆம் ஆண்டு முதல் தென்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

மாகாணத்தால் வழங்கப்பட்ட மீளளித்தல்கள் தொடர்பான திரண்ட மீதி ஆகும். இருப்பினும், மேற்குறித்த நிலுவைத் தொகைக்கு அமைச்சிலிருந்து இதுவரை நிதி கிடைக்கவில்லை. எனவே, மேற்படி செலவுகளை எதிர்காலத்தில் மீளளிப்பதில்லை என்ற தீர்மானத்தை தென் மாகாணம் எடுத்துள்ளது.

**(ஃ) ரூபா 29.97 மில்லியன் செலுத்த வேண்டிய மீதி, தவறுதலாக கொழும்பு நகர அலுவலகத்திலுள்ள சேகரிப்பு கட்டுப்பாட்டு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.**

2021 இன் நிதிக்கூற்றுக்களில் மீதி திருத்தப்படும்.

**(க) 2021 சனவரி 01 முதல் 2021 சனவரி 15 வரையிலான காலத்திற்குரிய வருவாயை மீளாய்வாண்டின் வருவாயாக அங்கீகரித்தமையால் சில்லறைக் கடன்பட்டோர் மீதி ரூபா 585.69 மில்லியன் தொகையால் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது.**

பட்டியல் பொழிப்புக்கான காலப்பகுதிக்கும் காலண்டர் மாதத்திற்கும் இடையிலான வேறுபாடு காரணமாக மேற்குறித்த மீதி உருவாகியுள்ளது. இருப்பினும், பட்டியல் பொழிப்பின் காலப்பகுதியை காலண்டர் மாதத்திற்கு இணக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனவே, அத்தகைய மீதி 2021 ஆம் ஆண்டிலிருந்து உருவாக மாட்டாது.

**(கா) உரிமை கோரக்கூடிய காலம் முடிவடைந்துள்ள ரூபா 1.57 பில்லியன் பொருளாதார சேவை கட்டணம் (ஈஎஸ்சி) வருமான கூற்றுக்கு தாக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.**

பெறவேண்டிய ரூபா 1.57 பில்லியன் ஈஎஸ்சி ஆனது 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பதவிழிக்கப்பட்ட வேண்டிய ஏற்கனவே காலாவதியான (மூன்று வருட காலத்திற்கு மேல்) தொகையைக் குறிக்கின்றது. இதனை பதிவழிப்பதற்குத் தேவையான சபை பத்திரங்கள், அங்கீகாரத்திற்காக 2019 ஆம் ஆண்டில் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. எவ்வாறாயினும், இந்த ஈஎஸ்சி நிலுவைகளை பதிவழிப்புச் செய்யாமல், மின்வலு அமைச்சு மற்றும் பொது திறைசேரிக்கு அறிவிப்பதன் மூலம் இந்த நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு அல்லது வேறு ஏதேனும் செலுத்த வேண்டியவற்றுக்கு எதிராக எதிரீடு செய்வதற்கான மாற்றுவழிகளை நிச்சயிக்குமாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பரிந்துரை செய்துள்ளது.

இது 2018 இன் தேசிய பாதீட்டு பிரேரணைகளின் ஒரு பகுதியாக பொது திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வரி நிவாரணத்தின் ஒரு பகுதியாக 2020 ஆம் ஆண்டில் மின்வலு அமைச்சின் ஊடாக பொது திறைசேரிக்கு மீண்டும் அறிவிக்கப்பட்டது.

**(கி) அசாதாரண செலவு மீதித் தொகையை எதிரீடு செய்தமையால், விநியோகப் பிரிவிலுள்ள முடிவுறா வேலை ரூபா 52.06 மில்லியன் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.**

ரூபா 26,014,986 தொகைக்கான அசாதாரண செலவு மீதிகளிற்கான காரணங்கள் அடையாளம் காணப்பட்டு 2021 ஆம் ஆண்டில் சரிசெய்யப்படும் மற்றும் லைட்டிங் ஸ்ரீலங்கா இரத்னபுரி செயற்திட்டம் தொடர்பான வேலைகளை மீளாய்வு செய்து ரூபா 26,045,997 தொகை தனிப்பட்ட வேலை அடிப்படையில் தீர்க்கப்படும்.

**(கீ) சம்பந்தப்பட்ட செலவுகளுக்கு மாற்றப்படாமல், ரூபா 912.69 மில்லியன் தொகை ஒரு வருடத்திற்கும் மேலாக வழிச்சரக்குக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. எனவே அதே அளவு தொகையால் நட்டம் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அசாதாரண செலவு மீதியான ரூபா 245.53 மில்லியன் தொகை அகற்றப்படாது வழிச்சரக்குக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.**

மீதியை எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(கு) 12 வாகனங்கள் நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தமையால் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு என்பன குறைத்துக் கூறப்பட்டிருந்தன.**

வாகனங்களை கண்டறிந்து உரிய முறையில் நிலையான சொத்துக்களில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(கூ) களனிதிஸ்ஸ ஒருங்கிணைந்த சுழற்சி மின்வலு நிலையத்துடன் தொடர்புடைய பூரணப்படுத்தப்படாத சொத்துகளின் செலவுகளை மூலதனமாக்கியமையால், மின்வலு நிலையத்தின் பெறுமதி ரூபா 175.10 மில்லியனால் மிகைத்துக் கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த பூரணப்படுத்தப்படாத சொத்துடன் தொடர்புடைய ரூபா 323.28 மில்லியன் மூலதனச் செலவு தொகை மற்றும் ரூபா 27.04 மில்லியன் தேய்மானத் தொகை என்பன மீளாய்வாண்டில் வருமான கூற்றுக்கு தாக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

2021 ஆம் ஆண்டில் திருத்தப்படும்.

**(கெ) 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் பூரணப்படுத்திய சொத்துக்களுடன் தொடர்புடைய ரூபா 54.14 மில்லியன் தேய்மானத் தொகை மீளாய்வாண்டில் பிறப்பாக்கப் பிரிவில் செலவுகளாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது.**

குறித்துக் கொள்ளப்பட்டதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான வழுக்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(கே) 2015 ஆம் ஆண்டு முதல் முடிக்கப்படாதுள்ள ரூபா 167.25 மில்லியன் மதிப்புள்ள இரண்டு செயற்திட்டங்கள் அகற்றப்படாது முடிவுறா வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன.**

தொடர்புடைய உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடப்பட்டதுடன் இரண்டு செயற்திட்டங்களினதும் முடிவுறா வேலைகளை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**(கொ) அனல் மின் கொள்வனவு அட்டுறுக்கள் தொடர்பில் மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 0.99 பில்லியன் தொகையால் மிகைத்துக் கூறப்பட்டிருந்தது.**

அட்டுறுச் செலவுக் கணக்கில் மேலதிகம் ∴ குறைவைத் தவிர்ப்பதற்காக, சான்றளிக்கப்பட்ட விலைப்பட்டியல்களை சரியான நேரத்தில் பெறுவதற்கும் மாதாந்தக் கணக்குகளில் கணக்கு வைப்பதற்கும் 2021 ஜனவரி முதல் ஏற்கனவே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**(கோ மற்றும் ச) 77.4 புறா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்வனவு விடுபட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 1.1 பில்லியன் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் ரூபா 212 மில்லியன் தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட 12.2 புறா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி 2020 ஆம் ஆண்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்வனவு கணக்கிற்கு பதியப்பட்டிருந்தது.**

பெறப்பட்ட விலைப்பட்டியல் மற்றும் விடயத்துக்குப் பொறுப்பான பொறியாளரால் தயாரிக்கப்பட்ட ஷமாதாந்த என்சிஆர்இ மின்பிறப்பாக்க அறிக்கை' ஆகியவற்றைப் பயன்படுத்தி மாதாந்த என்சிஆர்இ அட்டுறுக்கள் மேற்கொள்ளப்படுகின்றது. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

ஆலைகளில் இருந்து பொதுவாக விலைப்பட்டியல் தாமதத்துடன் பெறப்படுவதுடன் மற்றும் சில நேரங்களில் தற்போதைய ஆலைகள் கூட பல்வேறு காரணங்களால் கணிசமான தாமதத்துடன் தங்கள் விலைப்பட்டியலை சமர்ப்பிக்கின்றன. எனவே, தகவல் பெறப்பட்ட காலத்தில் கிடைத்துள்ள விலைப்பட்டியல்கள் மாமதத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த கொள்வனவுகள் 2021 சனவரி மாதத்திற்கான "என்சிஆர்இ மின்பிறப்பாக்க அறிக்கையில்" சேர்க்கப்பட்டுள்ளமையால் இந்த தாமதமான விலைப்பட்டியல்களில் சில 2021 சனவரி மாதத்தில் கணக்குகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

**(சா)** **15 வருட ஒப்பந்த காலம் முடிவடைந்திருந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியாளர்களிடமிருந்து 2020 திசெம்பர் 31 வரை கொள்வனவு செய்யப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்காக செலுத்த வேண்டிய ரூபா 808 மில்லியன் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.**

**அசல் காலஎல்லை காலாவதியான மின்வலு கொள்வனவு உடன்படிக்கைகளின் புதுப்பித்தலானது பல்வேறு காரணங்களால் உடன்படிக்கை காலாவதியான உடனேயே மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும், கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கைகளைப் பொருட்படுத்தாமல் இந்த மின்வலு நிலையங்கள் தொடர்ந்து இயக்கப்படுகின்றன. எனவே, தொடர்புடைய உடன்படிக்கைகளின் கால நீடிப்பில் கையொப்பமிடுவதற்கு உட்பட்டு அட்டுறு விலைப்பட்டியல்கள் அவை கிடைக்கும் போது பெறப்பட்டன. எனவே, 2021 சனவரி மாதத்திற்கான கணக்குகளில் 2020 இற்கான இட்டுறுக்களின் கீழ் மொத்தம் ரூபா 900 மில்லியன் அட்டுறுக்கள் காணப்படுகின்றன.**

**(சி)** **நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான தாமதக் கொடுப்பனவு வட்டி ரூபா 2,481 மில்லியன் ஆனதுடன் மீளாய்வாண்டிற்கான சான்றுறுதிப்படுத்திய தாமதக் கொடுப்பனவு வட்டிக் கணிப்பீடுகளின் படி அத்தொகை ரூபா 2,885 மில்லியன் ஆகும்.**

2020 ஆம் ஆண்டிற்கான சான்றளிக்கப்பட்ட தாமதமான வட்டியின் பெறுமதி ரூபா 2,885 மில்லியன் ஆனதுடன் (வேலைத் தாளைப் பார்க்கவும்) 2019 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 383 மில்லியன் மேலதிக அட்டுறுத் தொகை காணப்படவில்லை மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான ரூபா 21 மில்லியன் குறைவான அட்டுறுத் தொகை 2020 ஆம் ஆண்டு கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், செலவுக் கணக்கில் மேலதிக ∴ குறைவான அட்டுறுக்கள் உருவாவதைத் தவிர்ப்பதற்காக, விலைப்பட்டியலிலுள்ள சான்றளிக்கப்பட்ட பெறுமதிகளைப் பயன்படுத்தி தாமதமான வட்டியை கணக்கிடுவதற்கான ஏற்பாடுகள் 2021 சனவரி முதல் எடுக்கப்பட்டுள்ளன.

**(சீ)** **கைதவிர்க்கப்பட்ட ரூபா 14 மில்லியன் தொகையான நிலையான சொத்துக்கள் பரிமாற்றப் பிரிவின் நிலையான சொத்துக்களில் தற்போதும் காண்பிக்கப்பட்டுள்ளது.**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை சரியான தகவலுடன் நாளதுவரையாக்கும் பொருட்டு பரிமாற்றப் பிரிவின் அனைத்து கிளைகளையும் அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**(சு)** **இரண்டு தரப்பினர்களினாலும் கைச்சாத்திட்ட உடன்படிக்கை இல்லாமை காரணமாக உறவுமுறைத் தரப்பினரிடமிருந்து கிடைத்த ரூபா 2 பில்லியன் கடன் தொகையின் காணப்படும் தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை.**

இ.மி.ச. இன் பாதகமான நிதி நிலைமை மற்றும் 2020.02.25 ஆந் திகதிய சபை தீர்மானம் இல. 20.03.060 இன் படி தேசத்திற்கு தடையில்லாமல் மின்சாரம் வழங்குவதன் அவசியத்தை கருத்தில் கொண்டு இ.மி.ச. இன் தொழிற்படு மூலதன தேவையை முகாமைத்துவம் செய்வதற்காக லெகோ இடமிருந்து இந்த கடன் வசதி பெறப்பட்டது. கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக இரு தரப்பினரும் வரைவு கடன் ஒப்பந்தத்தை மீளாய்வு செய்து வருகின்றனர்.

**(சூ)** **நிலக்கரி கப்பலேற்றல் கட்டணத்திற்கான ரூபா 63.56 மில்லியன் ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.**

குறிப்பிட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் லெகோ உடன் கலந்துரையாடப்பட்டு வரப்படுகின்றமையால், 2020.12.31 வரை மேற்கொள்ளப்பட்டரூபா 63.56 மில்லியன் தொகை இ.மி.ச. இன் கணக்குகளில் பதிவு செய்யப்படவில்லை. இருப்பினும், நிதிக் கூற்றுக்களில் வழங்கப்பட்டுள்ள கணக்கிணக்கம், 2020 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் மூடப்பட்ட பின்னர், 22.03.2021 அன்று ரூபா 22,520,185.72 மட்டுமே தீர்க்கப்பட்டமையை போதியளவில் வெளிப்படுத்துகின்றது.

**(சொ)** **இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்கள் 2013 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக மீளமைக்கப்பட்டு வரப்படுகின்றது.**

இ.மி.ச. இலுள்ள செயல்பாட்டின் சிக்கலான தன்மை மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் அளவு காரணமாக நிதிக் கூற்றுக்கள் மீளமைக்கப்பட்டு வரப்படுகின்றன. இருப்பினும், நிதிக் கூற்றுக்கள் மீளமைப்பதைத் தவிர்ப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**(சோ)** **ரூபா 557.94 மில்லியன் வரவு மீதியொன்றும் ரூபா 556.81 மில்லியன் செலவு மீதியொன்றும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரிவுகளிற்கு இடையிலான நடைமுறைக் கணக்கு மீதியாக 2002 இலிருந்து அகற்றப்படாது வைத்திருக்கப்பட்டுள்ளது.**

விநியோகப் பிரிவுகளின் பரவலாக்கம் நடைபெற்ற 2002 ஆம் ஆண்டு முதல் மேற்படி மீதி முன் கொண்டுவரப்படுகின்றது. ஆதாரப்படுத்தும் ஆவணங்களைக் கண்டறிந்து அதை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ட)** **கடன் செயன்முறைப்படுத்தல் கட்டணமான ரூபா 1.25 மில்லியன் தொகையொன்று வருமனக் கூற்றிற்கு சாட்டுவதற்குப் பதிலாக கடன் மீதிக்கு சாட்டப்பட்டிருந்தது.**

2021 இன் ஏப்ரல் மாதத்திற்கான கணக்குகளில் இது திருத்தப்படும்.

### 1.2.4 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

**(அ)** **2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இ.மி.ச. இன் நிதிக்கூற்றுக்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டியதாக காட்டப்பட்ட மீதிக்கும் அத்திகதியில் உள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டியதாக காட்டப்பட்ட நேரொத்த மீதிக்கும் இடையில் ரூபா 753.61 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.**

மேற்குறிப்பிட்ட மீதி இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்களில் பெறோலியக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டியதாக

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

காட்டப்படாததுடன், இது குறித்து பெறோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், பெறோலியக் கூட்டுத்தாபனம் தனது நிதிக் கூற்றுக்களில் இ.மி.ச. இடமிருந்து பெறப்படும் வட்டி என இதனைக் காட்டியிருந்த போதிலும் அதனை இ.மி.ச. ஒப்புக்கொள்ளவில்லை. இப்பிரச்சினையை தீர்ப்பதற்காக பெறோலியக் கூட்டுத்தாபனம், இ.மி.ச. திறைசேரி மற்றும் மின்வலு அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்வதற்கு மின்வலு அமைச்சில் நடந்த கணக்காய்வுக் குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

**(ஆ)விலைப்பட்டியலிடல் முறைமையிலும் அதே போல் நிதிக்கூற்றுக்களிலும் சில மீதிகள் தவறவிடப்பட்டதன் காரணமாக விநியோகப் பிரிவு 01, 02, 03 மற்றும் 04 இன் விலைப்பட்டியலிடல் முறைமையில் காட்டப்பட்ட 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளிற்கும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த தொகைக்கும் இடையில் ரூபா 41.18 மில்லியன் கூட்டுமொத்தமான கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. மேலும், ரூபா 423.76 மில்லியன் தொகை 2012 ஆம் ஆண்டு முதல் இனங்காணப்படாது வைத்திருக்கப்பட்டுள்ளது.**

கடன்பட்டோர் கணக்கிணக்கங்கள் அனைத்து விநியோகப் பிரிவுகளாலும் தயாரிக்கப்பட்டு, பிரிவுகளின் பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படுகின்றன.

**(இ) 2020 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு சேகரிப்பு கட்டுப்பாட்டு பேரேட்டுக் கணக்கிலுள்ள ரூபா 2,343 மில்லியன் மற்றும் ரூபா 149 மில்லியன் வரவு மற்றும் செலவு மீதிகளிற்கான கணக்கிணக்கம், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.**

சாதாரண விநியோக பட்டியலிடல் சுழற்சி இறுதித் திகதியானது நிதிக் கணக்குகளின் இறுதித் திகதியிலிருந்து வேறுபட்டுள்ளதால் இந்த வேறுபாடுகள் எழுகின்றன. எனவே, சாதாரண விநியோக பட்டியலிடல் சுழற்சி இறுதித் திகதியினை 2021 இன் நிதி ஆண்டு இறுதித் திகதியை ஒத்ததாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(ஈ) ரூபா 117.58 மில்லியன் தொங்கல் மீதியின் தன்மையினை இனங்காண்பதற்காக அந்த மீதியுடன் தொடர்புடைய வயது பகுப்பாய்வு மற்றும் விபரமான பட்டோலை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.**

வியாபாரக் கடன்பட்டோர் தொடர்பான தகவல்கள் கணனி முறைமை மூலம் உருவாக்கப்படுகின்றன. இருப்பினும், தற்போதைய முறைமை தொங்கல் மீதிகளிற்கான காலப் பகுப்பாய்வு வசதியை வழங்குவதில்லை. எனவே, விநியோக பிரிவு 2 மற்றும் 4 ஆகியவை வயது பகுப்பாய்வை கைமுறையாகத் தயாரிப்பதுடன் இது ஒரு சிக்கலான செயல்முறையாகும். எனவே, எதிர்காலத்தில் தொங்கல் மீதிக்கான காலப் பகுப்பாய்வை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(உ)சபையால் வாடிக்கையாளருக்கான தவறான கட்டண முறைப் பிரயோகம் காரணமாக ரூபா 38.76 மில்லியன் தொகை 2019 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்படுகின்றது.**

தற்போது செயன்முறையிலுள்ள இவ்விடயத்தை தீர்ப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

**(ஊ) நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள செலுத்தவேண்டிய அனல்மின் - சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களுடன் தொடர்புடைய மீதிக்கும் தீர்க்கப்படாத சான்றுறுதிப்படுத்திய பட்டியல்களின் மீதிகளிற்கும் இடையே ரூபா 5.9 பில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.**

L5806- ஷசெலுத்த வேண்டிய அனல்மின்- சுயாதீன மின் உற்பத்தியாளர்களின் கணக்கு 2020 இல் L-5920- அட்டுறு 'கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதியாகும். சுயாதீன மின் உற்பத்தியாளர்களின் அனல் மின் நிலையங்களில் இருந்து ஒவ்வொரு மாதமும் பெறப்பட்ட விலைப்பட்டியல் பெறுமதிகளைப் பயன்படுத்தி பதிவு செய்யப்பட்ட அட்டுறு மீதியை இந்த மீதி காட்டுகின்றது. பணம் செலுத்துவதற்கான சான்றளிப்பின் போது இந்த மீதிகள் சீராக்கப்படுகின்றன. இந்த பதிவு செய்யப்பட்ட மேலதிக/ பற்றாக்குறை அட்டுறு மீதியானது கொடுப்பனவின் போது மீளமைக்கப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டின் இறுதியில் பேரேட்டு மீதிக்கும் சான்றளிக்கப்பட்ட நிலுவையிலுள்ள மொத்த விலைப்பட்டியல் தொகைக்கும் இடையே ரூபா 5.6 பில்லியன் (பணித்தாளை பார்க்கவும்) வேறுபாடு உள்ளது.

இருப்பினும், 2021 சனவரி முதல், விலைப்பட்டியலுக்கு விரைவாக சான்றிதழ் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, முன்னெடுத்துச் செல்கின்ற இரு மீதிகளுக்கும் இடையே எந்த வித்தியாசமும் இருக்காது.

**1.3 சபையின் 2020 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்படும் ஏனைய தகவல்கள்**

தகவல் பந்தி

**1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

தகவல் பந்தி

**1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

தகவல் பந்தி

**2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

**2.2.2 எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது சபையின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியொழுகாதமை.**

**(அ) 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 7(1) மற்றும் 43(1) ஆம் பிரிவு**

**ஒழுங்குபடுத்தல் தரப்பிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளாது ரூபா 18.91 பில்லியன் பெறுமதியான 732.19 புறா எரிசக்தி, மின் பிறப்பாக்கத்திற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத சுயாதீன மின்வலு உற்பத்தியாளர் களிடமிருந்து (ஜீஎ) கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.**

நாட்பட்ட ஜீ மின் நிலையங்களில் இருந்து மின்சக்தியை கொள்வனவு செய்வதற்காக எந்தவொரு பரிமாற்றல் அனுமதிப்பத்திரத்தையும் பெறுவதற்கு, 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் (மின்சாரச் சட்டம்) பிரிவு 7 (1) அல்லது 43 (1)

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

இல் தடைகளும் இல்லை. இந்த மூன்று நாட்பட்ட ஜீ மின் நிலையங்களின் காலாவதியான மின்வலு கொள்வனவு ஒப்பந்தங்களை (பிபிஏ) நீடிக்க இ.மி.ச. பியூசிஎஸ்எல் இன் ஒப்புதலை கோரியதுடன் கால நீடிப்புச் செய்யப்பட்ட பிபிஏக்களை அதன் ஒப்புதலுக்காக சமர்ப்பித்தது.

மின்சாரச் சட்டத்தின் பிரிவு 24 (1) (உ) இன் கீழுள்ள இ.மி.ச. இன் (பரிமாற்றல் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்) கடமைக்கு இணங்க எதிர்வுகூறப்பட்ட மின்சாரத் தேவையினை பூர்த்திசெய்வதற்கு போதியளவு மின்சார இயலளவு காணப்படுவதனை உறுதிசெய்வதற்காக இ.மி.ச. இந்த மின் நிலையங்களின் பிபிஏ களை காலநீடிப்புச் செய்தல் வேண்டும். மின்வெட்டை தவிர்ப்பதற்காக அமைச்சரவையின் ஒப்புதலுடன் இ.மி.ச. அவ்வாறு செய்தது.

## (ஆ) 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 7(1), 43(2) மற்றும் 43(7) ஆம் பிரிவுகள்

**மின்வலு கொள்வனவு உடன்படிக்கைக்கு (பியுஏ) அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது, ரூபா 3.26 பில்லியன் பெறுமதியுடைய 78.669 புறு மின்வலு மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.**

அமைச்சரவை மற்றும் PUCSL ஆகிய இரண்டும் 2019 ஆம் ஆண்டில் 100 மெகாவாட் மேலதிக மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு இ.மி.ச. க்கு ஆரம்ப ஒப்புதலை வழங்கியிருந்தன. தேசிய கொள்வனவு முகவர் நிலையத்தின் அரசாங்க கொள்வனவு நடைமுறைகளை இ.மி.ச. பின்பற்றி கொள்வனவு மேற்கொள்ளப்பட்டதுடன், கொள்வனவுச் செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர், கொள்வனவு நடைமுறைக்கு அமைவான அனைத்து அங்கீகாரங்களும் பெறப்பட்டு, பிரிவு 43 இன் கீழ் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு கையெழுத்திடப்பட வேண்டிய பிபிஏ வரைவு உடன்படிக்கைகள் ஒப்புதலுக்காக ீருஊளுடு இற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

மின்சாரச் சட்டத்தின் பிரிவு 24 (1) (உ) இன் கீழுள்ள இ.மி.ச. இன் (பரிமாற்றல் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்) கடமைக்கு இணங்க எதிர்வுகூறப்பட்ட மின்சாரத் தேவையினை பூர்த்திசெய்வதற்கு போதியளவு மின்சார இயலளவு காணப்படுவதனை உறுதிசெய்வதற்காக இ.மி.ச. அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் இக்கொள்வனவை மேற்கொண்டது.

இதேபோல், 2020 ஆம் ஆண்டுக்கு, அமைச்சரவை மற்றும் PUCSL ஆகிய இரண்டும் மேலதிகமாக ஆறு மாதங்களுக்கு மேற்படி கொள்வனவின் கீழான பிபிஏ களை நீடிப்பதற்கு கொள்கையளவில் ஒப்புதலை வழங்கியிருந்தன. அமைச்சரவை ஒப்புதலை பெறுவதற்கான உரிய செயல்முறையைப் பின்பற்றிய பின்னர், வரைவு உடன்படிக்கைகள் ஒப்புதலுக்காக PUCSL இற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

## (இ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 46 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஐஐ ஆம் பகுதியின் 11(அ) மற்றும் (ஆ) பிரிவுகள்

**போதியளவு நிதிகள் காப்பீட்டு எஸ்க்ரோ நிதியத்தில் முதலீடு செய்யப்படாமை**

இ.மி.ச. பல ஆண்டுகளாக மோசமான திரவத்தன்மை சூழ்நிலையை சந்தித்துள்ளமையால் காப்பீட்டு முதலீட்டு எஸ்க்ரோ கணக்கில் முதலீடு செய்யாததால் இந்த வேறுபாடு முக்கியமாக எழுந்துள்ளது. இருப்பினும், இ.மி.ச. இன் நிதி நிலைமை மற்றும் திரவ நிலைமை மேம்படுத்தப்பட்டவுடன் காப்பீட்டு நிதிய முதலீட்டு கணக்கில் மொத்த நிலையான சொத்துகளில் 1மூ க்கு சமமான முதலீட்டை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

## (ஈ) பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட PED 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவு

**வரிசை அமைச்சுக்கும் சேமலாப நிதியத்துக்கும் விடுவிக்கப்பட்டிருந்த 56 ஊழியர்களிற்கான சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளாகவும் சபை செலுத்தியிருந்தது.**

**வரிசை அமைச்சுக்கு ஊழியர்களை விடுவித்தல்**

ஊழியர்களை விடுவிக்குமாறு வரிசை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளை இ.மி.ச. இற்கு நிராகரிக்க முடியாதுள்ளமையால், ஏற்பட்டுள்ள செலவினத்தை இ.மி.ச. இனால் கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

**சேமலாப நிதியத்துக்கு ஊழியர்களை விடுவித்தல்**

வர்த்தமானியில் 2003 திசெம்பர் 31 அன்று வெளியிடப்பட்ட சேமலாப நிதிய விதிகளின் பிரிவு 20 (ை) ன் படி, வீட்டு கடன்களை மீளாய்வு செய்வது தொடர்பான செலவுகளைத் தவிர்த்து, நிதியத்தின் ஏனைய அனைத்து நிர்வாக செலவுகளும் இ.மி.ச. ஆல் பொறுப்பேற்கப்படுகிறது. நிதியின் ஆரம்பிக்கப்பட்டது முதல் (1969 நவம்பர் 01 முதல்) இக்கொள்கை பின்பற்றப்படுகின்றது. எனவே சேமலாப நிதியம் சார்பாக இ.மி.ச. ஆல் செய்யப்பட்ட செலவுகள் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்படவில்லை.

மேலும், இந்த விடயத்தை இ.மி.ச. இன் சேமலாப நிதிய முகாமைத்துவக் குழுவில் (வர்த்தமானியின் மூலம் நிறுவப்பட்ட ஆளுகைக் குழு) முன்வைக்கப்பட்டதுடன், நிர்வாகச் செலவுகளைச் செய்யும் தற்போதைய நடைமுறையைத் தொடர்வதற்கு 2021 பெப்ரவரி 11 அன்று நடைபெற்ற கூட்டத்தில் குழு முடிவு செய்தது. ஊழியர் சேமலாப நிதியத்தின் முகாமைத்துவ மற்றும் நிர்வாகச் செலவுகள் சபையால் பொறுப்பேற்கப்படுகின்ற தற்போதைய கொள்கையை தொடர்வதற்கு குழு ஒப்புதல் அளித்தது.

## (உ) பொது முயற்சிகள் திணைக்களத்தினால் 1994 யூன் 14 ஆந் திகதி வழங்கப்பட்ட 95 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் அமைச்சின் கணக்காய்வுக் குழுவில் 2020 செப்தெம்பர் 25 அன்று எடுக்கப்பட்ட தீர்மானம்

**விடுமுறை காசாக்கல் கொடுப்பனவு**

சபையின் அங்கீகாரத்துடன், 1984 முதல் பயன்படுத்தப்படாத சுகயீன விடுமறைகளின் நிமித்தம் அதன் ஊழியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவாக இதனை இ.மி.ச. செலுத்தியிருந்தது. சபை வேறு விதத்தில் தீர்மானமெடுக்கும் வரை இந்தக் கொடுப்பனவுத் திட்டத்தை தொடர்ந்து மேற்கொள்வதற்கு 2006 ஆம் ஆண்டில் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

## (ஊ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப சட்டத்தின் 47 ஆம் பிரிவு

**உழைப்புக்களை கணிப்பிடுகையில் ஆகக்கூடிய கொடுப்பனவு கருத்தில் கொள்ளப்பட்டிருந்தமை.**

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின்படி, சபையின் அதிகாரங்கள் 12 ஆம் பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

பிரிவு 12 (எம்): சபையின் விவகாரங்களின் நிர்வாகம் தொடர்பாக விதிகளை உருவாக்குதல்

பிரிவு 12 (என்): சபையின் கருத்தில் அதன் வியாபாரத்தை முறையாக நடத்துவதற்கு வசதியளிப்பதற்குத் தேவையான ஏனைய எல்லாவற்றையும் செய்வதற்கு

அதன்படி, குறிப்பிடப்பட்டுள்ள கண்டுபிடிப்புகள் சபையினால் அதன் ஊழியர்களுக்கு நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக பணியாற்றுவதற்கான மன உறுதியை உயர்த்துவதற்காக வழங்கப்படும் நன்மைகளுடன் தொடர்புடையவை. மேலும், சபையின் விவகாரங்களின் நிர்வாகத்தைப் பொறுத்தவரை விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரத்தை இந்தச் சட்டம் வழங்குகிறது. அதற்கமைய, ஊழியர்களுக்கான சேமலாப நிதியை கணிப்பிடுகையில் ஆகக்கூடிய கொடுப்பனவு கருத்திற் கொள்ளப்பட்டது.

**(எ) வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடட் உடன் 2007 சனவரி 10 ஆந் திகதி கைச்சாத்திட்ட மின்வலு கொள்வனவு உடன்படிக்கையின் 6.1.3 ஆம் பிரிவு**

**இ.மி.ச. இனால் வழங்கப்பட்ட மின் சக்தி கட்டண வீதத்தை கணிப்பிடுகையில் எரிசக்தி கட்டணத்தை மட்டுமே இ.மி.ச. கருத்தில் கொண்டிருந்தமை.**

இறக்குமதி செய்யப்படுகின்ற எரிசக்தி தொடர்பில் பிபிஏ களில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் இ.மி.ச. இன் கட்டணத்தைப் பயன்படுத்துதல் ஆகியவை இணைக்கப்பட்ட மின்னழுத்தம் 33kV க்கு மேல் காணப்படுகின்ற பெரும்பாலான சுயாதீன அனல்மின் நிலையங்களில் தெளிவற்றதாக உள்ளது. எனவே, ஒரு விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டுமென்பதுடன் இந்தப் பிரச்சினையை முறைப்படுத்த ஒரு நிபுணர் குழுவின் பரிந்துரை அவசியமாகும்.

**(ஏ) 2018 ஒக்தோபர் 03 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானம்**

**அரசாங்க நிறுவனங்களிற்கு சொந்தமான தயார் நிலையிலுள்ள மின்பிறப்பாக்கிகளை பயன்படுத்துதல்.**

பல்வேறு காரணங்களால் மேற்படி தீர்மானம் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை.

### 2.2.3 சபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்காத விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த தொழிற்பாடுகள்.

**(அ) 2007 நவம்பர் 14 இல் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் 2009 மே 26 இன் 39 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகள் என்பவற்றிற்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீது இ.மி.ச. இன் பதவியணியினரிற்கு காலத்திற்குக் காலம் பல்வேறு பதவியணியினர் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.**

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின்படி, சபையின் அதிகாரங்கள் 12 ஆம் பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.

பிரிவு 12 (எம்): சபையின் விவகாரங்களின் நிர்வாகம் தொடர்பாக விதிகளை உருவாக்குதல்

பிரிவு 12 (என்): சபையின் கருத்தில் அதன் வியாபாரத்தை முறையாக நடத்துவதற்கு வசதியளிப்பதற்குத் தேவையான ஏனைய எல்லாவற்றையும் செய்வதற்கு

அதன்படி, குறிப்பிடப்பட்டுள்ள கண்டுபிடிப்புகள் சபையினால் அதன் ஊழியர்களுக்கு நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக பணியாற்றுவதற்கான மன உறுதியை உயர்த்துவதற்காக வழங்கப்படும் நன்மைகளுடன் தொடர்புடையவை. மேலும், சபையின் விவகாரங்களின் நிர்வாகத்தைப் பொறுத்தவரை விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரத்தை இந்தச் சட்டம் வழங்குகிறது.

**(ஆ) 2010 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியின் போது உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரியை கழிக்காமல் இ.மி.ச. அதன் சொந்த நிதியிலிருந்து ரூபா 4,976,201,706 தொகையை செலுத்தியிருந்தது.**

2020 நவம்பர் மாதம் முதல், இ.மி.ச. இன் ஊழியர்களால் உயர்தர தனிப்பட்ட வருமான வரி (ஏபிஐஜரீ) செலுத்தப்படுகின்றது.

**(இ) 1998 மார்ச் 08 ஆம் திகதிய 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் முதல் 14 சதவீதம் வரையான வட்டி வீதத்தில் வாகனக் கடன்களை வழங்குவதற்குப் பதிலாக இ.மி.ச. 4.2 சதவீத வட்டி வீதத்தில் அத்தகைய கடன்களை வழங்கியிருந்தது.**

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின்படி, சபையின் அதிகாரங்கள் 12 ஆம் பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.

பிரிவு 12 (எம்): சபையின் விவகாரங்களின் நிர்வாகம் தொடர்பாக விதிகளை உருவாக்குதல்

பிரிவு 12 (என்): சபையின் கருத்தில் அதன் வியாபாரத்தை முறையாக நடத்துவதற்கு வசதியளிப்பதற்குத் தேவையான ஏனைய எல்லாவற்றையும் செய்வதற்கு

அதன்படி, குறிப்பிடப்பட்டுள்ள கண்டுபிடிப்புகள் சபையினால் அதன் ஊழியர்களுக்கு நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக பணியாற்றுவதற்கான மன உறுதியை உயர்த்துவதற்காக வழங்கப்படும் நன்மைகளுடன் தொடர்புடையவை. மேலும், சபையின் விவகாரங்களின் நிர்வாகத்தைப் பொறுத்தவரை விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரத்தை இந்தச் சட்டம் வழங்குகிறது.

**(ஈ) மின்சக்திக்கான நியாயமான முன்னறிவிப்பு தேவையை பூர்த்தி செய்வதற்காக மின் உற்பத்தி நிலையங்களில் போதுமான இயலளவு காணப்படுவதை உறுதி செய்வதற்கு இ.மி.ச. (பரிமாற்ற அனுமதிப்பத்திரதாரர்) தவறியிருந்தது.**

இ.மி.ச. இன் நீண்ட கால மின்பிறப்பாக்க விரிவாக்க செயற்திட்டங்கள் (LTGEP) 20 ஆண்டுகளுக்கான குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால மின் இயலளவு தேவைகளைக் கொண்டுள்ளது. எனவே, அடிப்படை ரீதியாக அல்லது தற்செயல் பகுப்பாய்வின் கீழ் சில வருடங்களிற்கான உடனடி குறுகிய கால இயலளவு தேவைப்பாடுகள் கூட LTGEP களில் குறிப்பிடப்படுகின்றது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

நீண்ட கால, குறைந்த விலை மின்வலு நிலையங்கள் சரியான நேரத்தில் எதிர்பார்த்தபடி உருவாக்கப்படாத போது, (இதற்குப் பல காரணங்கள் உள்ளன, அவற்றில் பெரும்பாலானவை இ.மி.ச. இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை), மின்சார பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்காகவும் மின்சாரச் சட்டத்தின் பிரிவு 24 (1) (உ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள (பரிமாற்ற அனுமதிப்பத்திரதாரர்) கடமைக்கு இணங்க, முன்னறிவிப்புச் செய்யப்பட்ட மின்சார தேவையை பூர்த்தி செய்வதற்குப் போதுமான மின் இயலளவு இருப்பதை உறுதி செய்வதற்காகவும் குறுகிய கால குறைநிரப்பு இயலளவை கொள்வனவு செய்ய வேண்டிய கட்டாயம் இ.மி.ச. இற்கு ஏற்படுகின்றது.

எனவே, குறிப்பிடப்பட்டுள்ள இந்த கொள்வனவு, பிரிவு 24 (1) (இ) உடன் இணங்குவதனால் இது சட்டத்தை மீறிய செயல் அல்ல.

**(உ) 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இ.மி.ச. நுகர்வோர் வைப்புக்களிற்கான வட்டியை செலுத்தியிருக்காமை.**

2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 3(1)(ஈ), 4(1)(இ) மற்றும் 30 ஆம் பிரிவுகளின் பிரகாரம், மின்சார கட்டணங்கள் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு (ருஊஊளுடு) ஆல் ஒழுங்குசெய்யப்படுதல் வேண்டும். இருப்பினும், தற்போதைய மின்சார கட்டணமானது 2013 இல் வழங்கப்பட்டதுடன் 2014 இல் சீராக்கப்பட்டதாகும். இது இ.மி.ச. இன் வணிகத்தை மேற்கொள்வதற்காக போதியளவு காசினை உருவாக்குவதில்லை. சட்டத்திலுள்ள தொடர்புடைய விதிகள் வருமாறு

3(1) இலங்கையிலுள்ள மின்சாரத் தொழிலிற்கான சிக்கன, தொழில்நுட்ப மற்றும் பாதுகாப்பு பிரமாணங்கள் என்ற வகையில் செயற்படுதல் ஆணைக்குவின் தொழிற்பாடாகுமென்பதுடன்,

(ஈ) -பாவனையாளர்களிற்கு சாத்தியமான உச்ச சிக்கன மற்றும் வினைத்திறனான சேவை வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக, அனுமதிப்பத்திர தாரர்கள் மற்றும் ஏனைய மின்சார பொறுப்பாளர்களால் விதிக்கப்படுகின்ற தீர்வைகள் மற்றும் ஏனைய கட்டணங்களை ஒழுங்கமைத்தல்.

30(1) இப்பிரிவினை பின்வருவனவற்றிற்கு பிரயோகித்தல் வேண்டும்.

(அ) மின்சார பரிமாற்றம் மற்றும் மொத்த விற்பனைக்காக பரிமாற்றல் அனுமதிப்பத்திர தாரர்களால் விதிக்கப்பட்ட தீர்வைகள் அல்லது கட்டணங்கள் (இதனகத்துப் பின்னர் “பரிமாற்றல் மற்றும் மொத்த விற்பனைத் தீர்வைகள் என அழைக்கப்படும்) மற்றும்

(ஆ) மின்சார விநியோகம் மற்றும் வழங்களிற்காக விநியோக அனுமதிப்பத்திர தாரர்களால் விதிக்கப்பட்ட தீர்வைகள் அல்லது கட்டணங்கள் (இதனகத்துப் பின்னர் “விநியோக மற்றும் வழங்கல் தீர்வைகள்” என அழைக்கப்படும்) மற்றும்

(2) சூழ்நிலைக்கேற்ப பரிமாற்றல் மற்றும் மொத்த விற்பனைத் தீர்வைகளும் விநியோக மற்றும் வழங்கல் தீர்வைகளும் தொடர்புடைய அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளிற்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

(அ) அது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கிரயத்தை வெளிக்காட்டும் முறைக்கு அமைவாக குறித்த அனுமதிப்பத்திர தாரர்களால் ஏற்படுத்தப்பட்டதாக:

(ஆ) வினைத்திறனான அடிப்படையொன்றின் மீது அதற்குரிய அனுமதிப்பத்திரத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்கையில் உறப்பட்ட நியாயமான அனைத்துக் கிரயங்களையும் அறவிடுவதற்கு தொடர்புடைய அனுமதிப்பத்திர தாரரை அனுமதிப்பதாக:

(இ) பிரிவு 5 இன் கீழ் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை வழிகாட்டலிற்கு அமைவாக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாக காணப்படுகின்ற: மற்றும்

(ஈ) பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக சபையால் தேவைப்படுத்தப்பட்டவாறு உரிய முறையில் வெளியிடப்பட்டும், இருத்தல் வேண்டும்.

2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு விநியோக அனுமதிப்பத்திர தாரரும் (னுடு) அவற்றினது பாவனையாளர்களின் பாதுகாப்பு வைப்புக்களிற்காக வட்டியினை செலுத்துதல் வேண்டும். அதிகாரச்சட்டத்தில் இக்கூற்று பின்வருமாறு காணப்படுகின்றது.

பிரிவு 28(3) - “இந்தப் பிரிவிற்கு அமைவாக பிணைப்பணம் என்ற வகையில் விநியோக அனுமதிப்பத்திர தாரருக்கு வழங்கப்பட்டு அனுமதிப்பத்திர தாரரின் கைவசம் வைத்திருக்கப்படும் எந்தவொரு பணத் தொகையுமாகும். ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் அனுமதிப்பத்திர தாரரால் அவ்வப்போது திர்மானிக்கப்படுகின்ற அவ்வாறான வீதமொன்றில் அந்த பிணைப்பணம் மீது அனுமதிப்பத்திர தாரரின் கைவசம் வைத்திருக்கப்படுகின்ற அவ்வாறான காலப்பகுதிக்கு வட்டியினை செலுத்துதல் வேண்டும்”.

தற்போது இ.மி.ச. அதனது வணிகத்தை நடாத்திச் செல்வதற்கு போதியளவு பணத்தை சேகரிக்காமையின் விளைவாக அதனது பாவனையாளர்களின் பிணைவைப்புக்களை தொழிற்படு மூலதனத் தேவையின் ஒரு பகுதியாக பயன்படுத்துவதுடன எஞ்சிய தொழிற்படு மூலதனத் தேவையினை மேலதிகப்பற்றுக்கள், குறுங்காலக் கடன்கள் என்ற வகையில் வங்கி வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்கின்றது.

இ.மி.ச. இனால் அதனது தொழிற்படு மூலதனத்தின் ஒரு பகுதியாக அதனது பாவனையாளர்களின் பிணை வைப்புக்களை பயன்படுத்துவதன் மூலம், வங்கி மேலதிகப்பற்றுக்குச் செலுத்த வேண்டிய வட்டியினைச் சேமித்து அதனது பாவனையாளர்களிற்குப் பகிரப்படுகின்றமையால் கட்டணத்தை குறைக்கக்கூடியதாக உள்ளது. இந்த பிரிவின் பிரகாரம் பிணை வைப்புக்கள் மீது னுடு வட்டியினை செலுத்தியிருப்பின் அது னுடு இற்கான நிதிச் சுமையாக சேர்ந்து தொழிலிற்கு மேலதிகக் கிரயத்தை தோற்றுவித்திருக்கும்.

ஆகையால், 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவை முழுமையாக நீக்குவதற்கு நாம் அமைச்சிற்கு பரிந்துரைத்துள்ளோம். மேலும், பிசிஎஸ்இஎல்ஆர் ஆணைக்குழு (சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை எளிமைப்படுத்தல் ஜனாதிபதி ஆணைக்குழு) இன் செயலாளருக்கான பிரதியுடன் மின்வலு அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட இ.மி.ச. இன் டிஜிஎம் (சிஎஸ் மற்றும் ஆர்ஏ).'.ஜிஇஎன்.'.1 ஆம் இலக்க 2021-05-28 ஆந் திகதிய கடிதத்தின் மூலம், 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவை முழுமையாக நீக்குமாறு இ.மி.ச. கோரியுள்ளது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

**2.2.4. சபையின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக காலஎல்லைக்குள் சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்காமை.**

**(அ) 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய மின்சார சட்டத்தின் படி, 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னர் மரபுசாராத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (என்சிஆர்இ) செயற்திட்டங்கள் அவற்றின் கொள்வனவுகளிற்கு நியம கட்டணத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். இருப்பினும், 390 மெகாவாட் இயலளவுடைய என்சிஆர்இ செயற்திட்டங்களுக்காக 7 கொள்வனவுகள் மாத்திரமே 2020 திசெம்பர் 31 வரை தொடங்கப்பட்டிருந்ததுடன், 24 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மின் நிலையங்கள் மட்டுமே 2020 திசெம்பர் 31 வரை தொடங்கப்பட்டிருந்தன.**

என்சிஆர்இ செயற்திட்டங்களில் இருந்து மொத்தம் 390 மெகாவாட் மொத்த இயலளவுடைய எரிசக்தியை கொள்வனவு செய்வதற்கு ஏழு விலைமனுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2013-08-06 க்குப் பிறகு மின்சக்தி கொள்வனவுக்காக கேள்விப்பத்திர நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும் எனக் குறிப்பிடுவது சரியானதல்ல. உண்மையில், 2009-04-08 (மின்சாரச் சட்டம் இயற்றப்பட்ட தேதி) முதல் மின்சக்தியினை கொள்வனவு செய்வதற்காக கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், இந்த அணுகுமுறையின் நம்பகத்தன்மை குறித்து தொழில்துறையின் பங்குதாரர்களிடையே தெளிவற்ற தன்மை நிலவுகின்றது. ஆகையால், போட்டி கேள்விமனு கோரல் மூலம் எரிசக்தி கொள்வனவு தொடர்பில் சட்டமா அதிபர் தனது கருத்தை (மூன்றாவது முறையாக) வழங்கும் வரை நியமக் கட்டண முறையின் கீழ் என்சிஆர்இ அடிப்படையிலான மின்சக்தி கொள்வனவு நியமக் கட்டண முறையைப் பயன்படுத்தி 2017 ஜுலை வரை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

எனினும், 6 கேள்விமனுக்களின் நிலைமை பின்வருமாறு காணப்பட்டது.

- வவுணதீவில் 10 மெகாவாட் சூரிய மின்வலு ஆலை: 2017 செப்டம்பர் இல் கேள்விமனு திறக்கப்பட்டதுடன் 2018 மே இல் LOI வழங்கப்பட்டது. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக SLSEA ஆல் அடையாளம் காணப்பட்ட நிலத்தைப் பாதுகாக்கவும் உரிய நிறுவனங்களிடமிருந்து தேவையான அனுமதிகளை பெறவும் அபிவிருத்தியாளருக்கு முடியாது போயிருந்தமை காரணமாக 2020.12.31 வரையிலும் கூட PPA கையெழுத்திட முடியாதிருந்தது.
- 10 மெகாவாட் பொலன்னறுவை சூரியமின் உற்பத்தி நிலையம்: 2017 பெப்ரவரி இல் கேள்விமனு திறக்கப்பட்டதுடன் 2018 செப்தெம்பர் இல் LOI கையெழுத்திடப்பட்டது. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக SLSEA ஆல் அடையாளம் காணப்பட்ட நிலத்தைப் பாதுகாக்கவும் உரிய நிறுவனங்களிடமிருந்து தேவையான அனுமதிகளை பெறவும் அபிவிருத்தியாளருக்கு முடியாது போயிருந்தமை காரணமாக 2020.12.31 வரையிலும் கூட ீயு இல் கையெழுத்திட முடிந்திருக்கவில்லை.
- 1MW * 90 சூரியமின் ஆலை கேள்விமனு. 2018 ஏப்ரல் இல் கேள்விமனுக்கள் திறக்கப்பட்டதுடன் அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்ற பின்னர் 84 நிறுவனங்களுக்கு 2018 அக்டோபர் முதல் 2019 ஆகஸ்ட் வரை கேள்விகள் கையளிக்கப்பட்டன. கேள்விப்பத்திர பிணைவைப்பு காலாவதியானதாலும் அதனை கேள்விதாரர்கள் நீடிக்காமையாலும் 6 கேள்விதாரர்களுக்கு கேள்விகளை வழங்க முடியவில்லை. 14 கேள்விப் பத்திரங்கள் பிற்போடப்பட்டமையால் (84 கேள்விப்பத்திரங்களில்) 70 டுழுஜ மாத்திரமே வழங்கப்பட்டன. 35 பிபிஏ கள் 2020.12.31 இல் கையெழுத்திடப்பட்டதுடன், மீதமுள்ள அபிவிருத்தியாளர்கள் 2020.12.31 வரை தேவையான அனுமதிகளை சமர்ப்பித்திருக்கவில்லை.
- விவசாயம்.்.பன்னையுடன் கூடிய 10 மெகாவாட் சூரியமின் ஆலை. கேள்விமனுக்கள் 2019 மே இல் திறக்கப்பட்டதுடன் கேள்விகளை கையளித்தல் 2020 யூன் இல் செய்யப்பட்டது. டுழுஜ இல் கையொப்பமிடுவதற்குத் தேவையான ஆவணங்களை அபிவிருத்தியாளர்களால் 2020.12.31 இற்குள் பெற முடியவில்லை.
- 1-10 மெகாவாட் வீச்சுடைய 60 மெகாவாட் காற்றாலைகள். ஐந்து கிரிட் உபமின் நிலையங்களுக்கான கேள்விமனுக்கள் 2020 மார்ச் மாதம் திறக்கப்பட்டது. போலவத்த மற்றும் கப்பல்துறை கிரிட் உப மின்நிலையங்களுக்கு (ஜிஎஸ்எஸ்) கேள்விமனுக்கள் வழங்கப்படாமையால் 25 மெகாவாட் கையளிக்கப்படவில்லை. திருகோணமலையில் உள்ள GSS இற்கு 10 மெகாவாட் வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் 2020.12.31 அன்று வழங்கப்பட்டது. மன்னார் ஜிஎஸ்எஸ் -க்கு வழங்கப்படும் 15 மெகாவாட் இனை வழங்குவதற்காக 2020.12.31 வரை அமைச்சரவையின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கப்பட்டது. மாதம்பே ஜிஎஸ்எஸ்- இற்கு வழங்கப்படும் 10 மெகாவாட் இற்காக 2020 நவம்பர் இல் மீண்டும் கேள்வி மனுக்கள் கோரப்பட்டு 2020.12.31 இல் கேள்விகோரல் காலம் முடிவடையும் நிலுவையில் இருந்தது.
- 150 மெகாவாட் சூரியமின் ஆலை கேள்விமனு (1-10 மெகாவாட் வீச்சு). 2020 யூலை இல் கேள்விகள் மூடப்பட்டன. TEC மதிப்பீடுகள் நிறைவடைந்து 2020 ஒக்தோபரில் SCAPC க்கு சமர்ப்பிக்கப்பட்டது. 2020.12.31 வரை அமைச்சரவையால் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

2020 மார்ச் முதல், கோவிட் 19 தொற்றுநோய் முதல் அலை நாட்டில் ஏற்பட்டதுடன் இரண்டாவது அலை 2020 ஒக்டோபர் இல் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இது பெரும்பாலான செயல்பாடுகளை பாதித்திருந்ததுடன் ஏறத்தாழ அனைத்து வேலைகளிலும் தாமதத்தை ஏற்படுத்தியது.

**(ஆ) ஒவ்வொன்றும் 1 மெகாவாட் இயலளவுடைய 60 சூரிய மின் உற்பத்தி ஆலைகளை கொள்வனவு செய்யும் பிரேரணைகளுக்கான கோரிக்கை (ஆர்எஃப்பி) 2017 பெப்ரவரி 20 அன்று வரவழைக்கப்பட்டது. 38 ஆலைகளுக்காக 65 கேள்விமனுக்கள் மாத்திரமே பெறப்பட்டிருந்ததுடன் 36 வெற்றிகரமான கேள்விமனு தாரர்களில் 35 ஆலைகளுக்கு ஆர்வ வெளிப்படுத்தல் கடிதம் வழங்கப்பட்டது.**

2009-04-08 அன்று மின்சாரச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட பின்னர் போட்டிமிக்க கேள்விமனு முறை மூலம் சூரியசக்தி பிவி மின்வலு நிலையங்களை கொள்வனவு செய்வதற்காக இ.மி.ச. வெளியிட்ட முதல் கேள்விமனுக் கோரல் இதுவாகும். அதற்கும் மேல், தொழில்துறையில் புதிதாக இணைந்துள்ள சிறிய அளவிலான செயற்திட்ட ஆதரவாளர்களின் பரந்த பங்கேற்பை சாத்தியமாக்கியமாக்கும் வகையில் ஒரு ஆலையின் அதிகபட்ச கொள்ளளவை 1 மெகாவாட்டாக மட்டுப்படுத்தும் கொள்கைத் தீர்மானத்தை அரசாங்கம் எடுத்தது. எனவே, இந்த முயற்சி இ.மி.ச. மற்றும் செயற்திட்ட ஆதரவாளர்கள் ஆகிய இருவருக்கும் ஒரு கற்றல் செயல்முறையாகும்.

அத்துடன், 2018-02-08 அன்று LOI ஐ வழங்கிய பின்னர், பின்வரும் மோசமான நிலைமைகள் நாட்டில் ஏற்பட்டதுடன், இது செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றத்தை கடுமையாக பாதித்தது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

1. 2018 நவம்பர் முதல் 2019 ஜனவரி வரை பணிப்பாளர் சபை காணப்படவில்லை.
2. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் 2019 இறுதி வரை நாட்டை முடக்கியது.
3. 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து உலகளவில் கோவிட் -19 தொற்றுநோயின் அலைகள் அவ்வப்போது ஏற்பட்டதுடன் 2020 மார்ச் முதல் 2021 யூன் வரை உள்ளூர் பூட்டுதல் நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டது.

எனவே, சூழ்நிலைகளை கவனமாக மதிப்பீடு செய்து, 2021-06-30 வரையான வணிக நடவடிக்கைகளின் இலக்குகளை அடைவதற்காக சபை ஏற்கனவே கால நீடிப்புகளை வழங்கியுள்ளது. 2021-06-30 வரை, 27 செயற்திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளதுடன், மேலே குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளுக்கு மத்தியில் இது ஒரு சிறந்த சாதனையாகும்.

**(இ) சீதாவ கங்கை நீர் மின்வலு செயற்திட்டத்தின் முகாமைத்துவ பிரிவால் மேற்கொள்ளப்பட்டுள்ள ரூபா 289 மில்லியன் செலவானது இ.மி.ச. இற்கான செலவாகவே காணப்படும்.**

நிதியைப் பாதுகாக்க வேண்டிய எந்த அதிகாரமும் இ.மி.ச. இற்கு காணப்படாமையால் இலங்கை அரசாங்கத்தினால் இ.மி.ச. இற்கு வழங்கப்படுகின்ற நிதியைப் பயன்படுத்தும் ஒரே எண்ணத்துடன் சீதாவக கங்கை நீர் மின் செயற்திட்டத்தை (எஸ்ஜிஹெச்பி) இ.மி.ச. இற்குச் சொந்தமான மின்பிறப்பாக்க வசதியாக 2016 ஆம் ஆண்டு செயற்திட்ட முகாமைத்துவ அலகை இ.மி.ச. அமைத்தது. அதன்படி, செயற்திட்ட முகாமைத்துவ அலகானது சாத்தியக்கூறு ஆய்வுகள், விரிவான வடிவமைப்பு, நிதியாளரைத் தேடுவது மற்றும் வரைவு கேள்விமனு ஆவணங்களைத் தயாரித்தல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளது. இதற்காக ரூபா ரூபா 289 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன் (தொழில்நுட்ப மற்றும் நிதிசார்) சாத்தியக்கூற்று ஆய்வானது ஒரு செயற்திட்டத்தின் மிக முக்கியமான விடயமாகும். எவ்வாறாயினும், 2020-07-09 அன்று, இ.மி.ச. அதன் PE/DEV/02/171/2016 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பின்வரும் இரண்டு நிதியிடல் விருப்பங்களைக் கருத்தில் கொள்ளுமாறு மின்வலு அமைச்சுக்கு அறிவித்திருந்தது.

- நிதி திரட்டுவதற்காக பசுமை பிணைப்பத்திரம் வழங்குதல்
- நிர்மாணித்து இயக்கிய பின்னர் கைமாற்றும் (BOOT) அடிப்படையில் அமைந்த கேள்விகோரலை முன்னெடுத்தல்.

இதன் விளைவாக, இ.மி.ச. இற்கு அபிவிருத்தி மாதிரியை மறுபரிசீலனை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதுடன் இ.மி.ச. இற்கு சொந்தமான ஆலை என்ற நிலைப்பாட்டிலிருந்து டீழுழு ஆலை என்ற கருப்பொருளுக்கு அமைவானதாக அபிவிருத்தி மாதிரியை மாற்றியமைத்து போட்டி கேள்விகோரலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

அவர்களின் இடர் மட்டத்தைக் குறைக்கும் நோக்குடன் சாத்தியக்கூற்று ஆய்வு, நுஜயு, அனைத்து பரிசோதனை அறிக்கைகள், வடிவமைப்புகள் போன்ற அனைத்து ஆய்வுகளையும் சாத்தியமான கேள்விதாரர்களுடன் (அல்லது அபிவிருத்தியாளர்கள்) பகிர்ந்து கொள்ள முன்மொழியப்பட்டதுடன் அதன் மூலம் குறைந்த கேள்விப்பத்திர விலை∴ அபிவிருத்தி கிரயம் ஏற்படும். இவ்வாறு, ஆய்வுகளுக்கு ஏற்படும் கிரயத்தின் ஒரு பகுதியானது குறைந்த கட்டணங்கள் மூலம் (இறுதி செயற்திட்ட அபிவிருத்தியாளரால்) இ.மி.ச. இற்கு மீளளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**(ஈ) சூரியசக்தி மின் நிலையங்களுக்கான ரூபா 23.10 சமவிகித வீதம், நியமக் கட்டணமாக 2014 மார்ச் 07 அன்று அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய மின்சார சட்டத்தின் பிரகாரம், 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னர் மரபுசாராத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (என்சிஆர்இ) செயற்திட்டங்கள் அவற்றின் கொள்வனவுகளிற்கு நியம கட்டணத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். இருப்பினும், ஒவ்வொன்றும் 10 மெகாவாட் இயலளவுடைய ஐந்து சூரிய மின் உற்பத்தி நிலையங்கள், கொள்வனவு நடைமுறைகள் மூலம் தீர்மானிக்கப்பட்ட கட்டணங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நியமக் கட்டணத்தின் கீழ் தொடங்கப்பட்டிருந்தன.**

2009-04-08 முதல் மின்சக்தியினை கொள்வனவு செய்வதற்காக கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டது. இந்த அணுகுமுறையின் நம்பகத்தன்மை குறித்து தொழில்துறையின் பங்குதாரர்களிடையே தெளிவற்ற தன்மை நிலவுகின்றமையால், நியமக் கட்டண முறையின் கீழ் என்சிஆர்இ அடிப்படையிலான மின்சக்தி கொள்வனவு 2017 வரை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

**(உ) கொள்வனவு நடைமுறைகள் மூலம் தீர்மானிக்கப்பட்ட வலை வீதங்களுக்குப் பதிலாக 2014 மார்ச் 07 அன்று அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட நியமக் கட்டணமானது, 2013 ஆகஸ்ட் 06 க்குப் பிறகு தொடங்கப்பட்ட மொத்தம் 135.62 மெகாவாட் இயலளவுடைய உயிர் எரிவாயு ஆலை, தென்ட்ரோ மின்வலு நிலையங்கள், சிற்றளவு நீர்மின் ஆலைகள் மற்றும் காற்றாலை மின் உற்பத்தி (மின்வலு கொள்வனவு உடன்படிக்கைகள் 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னர் கையெழுத்திடப்பட்ட) செயற்திட்டங்களிற்கு பிரயோகிக்கப்பட்டன.**

2013-08-06 க்குப் பிறகு மின்சக்தி கொள்வனவுக்காக கேள்விப்பத்திர நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும் எனக் குறிப்பிடுவது சரியானதல்ல. உண்மையில், 2009-04-08 (மின்சாரச் சட்டம் இயற்றப்பட்ட தேதி) முதல் மின்சக்தியினை கொள்வனவு செய்வதற்காக கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், இந்த அணுகுமுறையின் நம்பகத்தன்மை குறித்து தொழில்துறையின் பங்குதாரர்களிடையே தெளிவற்ற தன்மை நிலவுகின்றமையால், போட்டி கேள்விமனு கோரல் மூலம் எரிசக்தி கொள்வனவு தொடர்பில் சட்டமா அதிபர் தனது கருத்தை (மூன்றாவது முறையாக) வழங்கும் வரை நியமக் கட்டண முறையின் கீழ் என்சிஆர்இ அடிப்படையிலான மின்சக்தி கொள்வனவு நியமக் கட்டண முறையைப் பயன்படுத்தி 2017 ஜூலை வரை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

**(ஊ) 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னரான மரபுசாராத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயற்திட்டங்களிற்கு கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டிய போதிலும், ஒரு கிலோவாட் இற்கு ரூபா 36.20 வீதத்தில் கழிவை எரிசக்தியாக மாற்றுகின்ற தொழில்நுட்பத்தின் அடிப்படையில் ஐந்து மாநகராட்சி திடக்கழிவு ஆலைச் (20 வருடங்களுக்கு சமவிகித கட்டண) செயற்திட்டங்களிற்கு 2017 இல் அமைச்சரவை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. ஒரு திடக் கழிவு ஆலைக்கான மின் கொள்வனவு ஒப்பந்தம் 2020 திசெம்பர் இல் கையெழுத்திடப்பட்டதுடன் அமைச்சரவை தீர்மானத்தின் படி திறைசேரியிலிருந்து ரூபா 36.20 தொகையில் ரூபா 13.10 திருப்பிச் செலுத்தப்பட வேண்டுமாயினும் கிலோவாட் ஒன்றுக்கு ரூபா 36.20 மொத்த கட்டணமும் இ.மி.ச. இனால் பொறுப்பேற்கப்படுகின்றது.**

2013-08-06 க்குப் பிறகு மின்சக்தி கொள்வனவுக்காக கேள்விப்பத்திர நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும் எனக் குறிப்பிடுவது சரியானதல்ல. உண்மையில், 2009-04-08 (மின்சாரச் சட்டம் இயற்றப்பட்ட தேதி) முதல் மின்சக்தியினை கொள்வனவு செய்வதற்காக கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், இந்த அணுகுமுறையின் நம்பகத்தன்மை

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

குறித்து தொழில்துறையின் பங்குதாரர்களிடையே தெளிவற்ற தன்மை நிலவுகின்றமையால், போட்டி கேள்விமனு கோரல் மூலம் எரிசக்தி கொள்வனவு தொடர்பில் சட்டமா அதிபர் தனது கருத்தை (மூன்றாவது முறையாக) வழங்கும் வரை நியமக் கட்டண முறையின் கீழ் என்சிஆர்இ அடிப்படையிலான மின்சக்தி கொள்வனவு நியமக் கட்டண முறையைப் பயன்படுத்தி 2017 ஜூலை வரை தொடர்ந்துமேற்கொள்ளப்பட்டது.

மேலும், தும்போவில கரடியான கழிவு (மாநகர சபை) மின்வலு செயற்திட்டத்திற்காக கொழும்பு கழிவு எரிசக்தி (மாநகர நபை) மின்வலு செயற்திட்டத்திற்கான பிபிஏ-க்களில் கையெழுத்திடுவதற்கு முறையே 2017-10-10 மற்றும் 2019-02-12 தேதியிட்ட அமைச்சரவை தீர்மானங்களுக்கு இ.மி.ச இணங்கியிருந்தது.

வெஸ்டர்ன் பவர் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்டுக்கு செலுத்தப்பட்ட கட்டணத்தின் எஞ்சிய பகுதியினை மீள்நிரப்புவதற்காக பொது திறைசேரிக்கு பட்டியிலிடப்பட்டுள்ளது.

இருப்பினும், 2020 திசெம்பரில் இல் மாநகரசபை திடக்கழிவு ஆலைக்கான பிபிஏவில் இ.மி.ச. கையெழுத்திடவில்லை.

## 2.3 ஏனைய அவதானிப்புகள்

**(அ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 42இ358 மில்லியன் வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் சாதாரண மற்றும் மொத்த வழங்கல்கள் இரண்டுடனும் தொடர்புடைய ரூபா 5இ122 மில்லியன் மீதி ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் அதில் ரூபா 2இ671 மில்லியன் தொகை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தது.**

வியாபாரக் கடன்பட்டோர் மீதியின் பகுப்பாய்வின் போது, வியாபாரக் கடன்பட்டோரின் நிலுவைத் தொகையில் 88மூ ஒரு வருடத்திற்கும் குறைவானதாக காணப்பட்டதுடன் 12% மாத்திரமே ஒரு வருடத்திற்கு மேல் நிலுவையில் உள்ளது. ஓராண்டுக்கும் மேல் நிலுவையில் உள்ளவற்றில் 52% மீதி ஐந்து வருடங்களுக்கு மேற்பட்டவை ஆகும், அது மொத்த வியாபாரக் கடன்பட்டோரில் 6% ஆகும். வியாபாரக் கடன்பட்டோரை அறவிடுவதற்கு அனைத்து விநியோகப் பிரிவுகளும் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொள்வதை இது குறிக்கிறது.

எவ்வாறாயினும், ஒரு வருடத்திற்கும் மேலான வியாபாரக் கடன்பட்டோரை மேலும் பகுப்பாய்வு செய்த போது, மீதமுள்ள 55% க்கும் அதிகமானவை இறுதியாக்கப்பட்ட வியாபாரக் கடன்பட்டோரை உள்ளடக்கியிருந்ததுடன் நீண்டகால நிலுவைத் தொகையை சேகரிக்க தொடர்ச்சியான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**(ஆ) ரூபா 3.21 பில்லியன் கூட்டுத்தொகையான சில்லறைக் கடன்பட்டோர் மீதிகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு ஆண்டிற்கும் மேலாக அறவிடப்படாதுள்ளது.**

மேற்குறிப்பிட்ட சில்லறைக் கடன்பட்டோர் மீதிகள் பிரதானமாக பின்வரும் மீதிகளை உள்ளடக்குகின்றன.

| மீதியின் தன்மை | தொகை | காரணங்கள் மற்றும் எடுக்கப்பட்டுள்ள மேலதிக நடவடிக்கைகள் |
|---|---|---|
| ஏஈஎஸ் களனிதிஸ்ஸ | ரூபா. 1,368,961,445 | இ.மி.ச., சிபிசீ, திறைசேரி மற்றும் மின்வலு அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் இணைந்து மின்வலு அமைச்சினால் இந்த நீண்டகாலமாக தீர்க்கப்படாதுள்ள நிலுவைப் பிரச்சினையை தீர்த்துவைப்பதற்காக கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்படவுள்ளது. |
| நிலைபேறான எரிசக்தி அதிகாரசபை | ரூபா. 897,025,999 | மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குழுவால் வழங்கப்பட்ட அறிக்கையின் படி, இந்த மீதியை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஆகையால், அதற்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| ஆகற்றிய டிரான்ஸ்போர்மர் | ரூபா. 497,144,445 | காரணங்களை விசாரிப்பதற்காகவும் அதற்கமைய மீதியை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) சொத்து முகாமைத்துவப் பிரிவின் பாரந்தூக்கி, காற்றுச் சீராக்கி மற்றும் மின்வலு பிறப்பாக்கிகளை வழங்கியமைக்காக அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 115 மில்லியன் தொகையொன்று ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாது வைக்கப்பட்டுள்ளது.**

அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகைகளை அறவிடுவதற்காக முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் தொகுதி, ஐயவினா 1.2.3(உ) இற்கு வழங்கப்பட்டுள்ள பதிலளிப்பின் மூலம் விரிவாக விளக்கப்பட்டுள்ளதுடன், அந்த பதிலளித்தலானது இந்த ஐயவினாவிற்கும் பொருந்தும்.

இருப்பினும், முன்னைய ஆண்டுகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட சிக்கலைத் தீர்ப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் மேலதிக பொ.மு. (ஏஎம்) அவர்கள் விசேடமாக அரசாங்க நிறுவனங்களின் வேலைகளிற்கான கிரயத்தை அறவிடுதல் தொடர்பில் சிறந்த உள்ளகக் கட்டுப்பாடை அமுல்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்கியிருந்தார். அதற்கமைய, கிரய அறவிடும் வேலைகளை பொறுப்பேற்றல் மற்றும் சேவைநாடுனரிடமிருந்து பணத்தினை அறவிடுதல் என்பன காலரீதியாக கணக்காணிக்கப்படும்.

**(ஈ) நிலக்கரி பற்றாக்குறை தொடர்பில் ஐந்து வருடங்களுக்கு மேலாக லங்கா கோல் கம்பனியிடமிருந்து அறவிடப்படாதுள்ள ரூபா 714.96 மில்லியன் மீதி தொடர்ந்தும் அறவிடப்பாது வைக்கப்பட்டுள்ளது.**

இந்த மீதியானது தூரியன் ஐயன் என்ட் ஸ்ரீல் கம்பனியின் ரூபா 478,179,795.00 மற்றும் லிபர்டி கொமோடிரீஸ் லிமிடட் இன் ரூபா 236,785,639.43 தொகைகளை உள்ளடக்குகின்றது. தூரியன் ஐயன் என்ட் ஸ்ரீல் கம்பனியின் நிலுவை தொடர்பில் ஒரு அமைச்சரவைக் குழு நியமிக்கப்பட்டு இறுதி அறிக்கை துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

லிபர்டி கொமோடிரீஸ் லிமிடட் விடயத்தில் லங்கா கோல் கம்பனி ஒரு நடுவர்தீர்ப்பு செயல்முறையைத் தொடங்கியுள்ளது. லங்கா கோல் கம்பனியினால் லிபர்டி கொமோடிரீஸ் லிமிடட் நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பின்னர் இந்த மீதி நீக்கப்படும்.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

**(உ) வூந கழடடழறறைப உசநனவைழ டியடயெஉநள யபபசநபயவநைப சுள.4.3 டிடைடழைெ ாயன சநஅயைெநென ரளெநவவடநன கழச டழபெ ிநசழைன யள யவ 31 னுநஉநஅடிநச 2020.**

| கடன்கொடுத்தோர் பெயர் | தொகை ரூபா | பதில் |
|---|---|---|
| சுங்கம் | 1,065,828 | 2017/18 பருவ காலத்திற்கான ரூபா 1,065,828.00 பணமதிப்பிழப்பு கட்டணம் 2020 திசெம்பர் 31 வரை லக்விஜய பணமதிப்பிழப்பு கட்டணக் குழுவால் அங்கீகரிக்கப்படவில்லை. லக்விஜய பணமதிப்பிழப்பு கட்டணக் குழுவின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் இத்தொகை செலுத்தப்படும். |
| சீன இயந்திர பொறியியல் கூட்டுத்தாபனம் | 3,034,971,432 | அமைச்சரவை ஒப்புதலின் அடிப்படையில் 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்பாட்டு மற்றும் பராமரிப்பு கட்டணம் தவணைக் கட்டண அடிப்படையில் ஊஆஆனுஊ இற்குச் செலுத்தப்பட்டுள்ளது. நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 4,195,528,596.54 தொகை 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்காக செலுத்த வேண்டிய செயல்பாட்டு மற்றும் பராமரிப்புக் கட்டணத்தை உள்ளடக்குகின்றது. இ.மி.ச. இன் தற்போதைய பாதகமான நிதி நிலைமை காரணமாக மாதத்திற்கு 1 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மாத்திரமே செலுத்தப்படுகின்றது. |
| செலுத்தவேண்டிய பிடித்துவைத்த பங்கிலாப வரி | 1,270,766,413 | 2013∴2014 வரி ஆண்டுக்கான ரூபா 1,270,766,413 பிடித்துவைத்த பங்கிலாப வரியானது 2009∴2010 மற்றும் 2010∴2011 க்கு கோரப்பட்ட பிடித்துவைத்த பங்கிலாப வரிக்கு எதிராக செலுத்தப்பட வேண்டிய பங்கிலாப வரியை பிரதிநிதித்துவம் செய்கின்றது. கணக்குகளில் இந்த பொறுப்பைத் பதிவழி-ப்பதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் திரும்பப் பெறும் கோரிக்கைகள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. |

**(ஊ) நொதர்ன் பவர் கம்பனி (பிரைவட்) லிமிடட் இற்குச் செலுத்த வேண்டிய ரூபா 2.9 பில்லியன் தொகை இரண்டு ஆண்டுகளிற்கும் மேலாக பரிமாற்றப் பிரிவின் வியாபார கடன்கொடுத்தோராக வைக்கப்பட்டுள்ளது.**

மல்லாகம் நீதவான் நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவு காரணமாக வடக்கு மின் நிலையம் 2015-01-27 முதல் மூடப்பட்டது. எவ்வாறாயினும், இது ஒரு வலுவூட்டப்பட்ட சூழ்நிலை என்று அறிவித்து இயலளவுக் கட்டணங்களுக்காக கம்பனி மாதாந்த விலைப்பட்டியல்களை வழங்கியுள்ளது. நீதிமன்ற தீர்ப்பு நிலுவையில் இருந்ததால், இந்த விலைப்பட்டியல் பெறுமதிகளை இ.மி.ச. கணக்கிட்டுள்ளது. மின்வலு நிலையம் சுற்றுச்சூழல் சட்டத்தை மீறி இயங்குகிறது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமையால், இந்த விலைப்பட்டியல்களைத் தீர்ப்பதற்கு இ.மி.ச. இற்கு எந்தப் பொறுப்பும் இல்லை. இந்த தொகைகளை பதிவழிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் உரிய நேரத்தில் எடுக்கப்படும்.

**(எ) 2020 ஒக்தோபர் 16 இல் உள்ளவாறு ரூபா 1.04 பில்லியன் பெறுமதியுடைய 51,439.64 மெற்றிக் தொன் நிலக்கரி இருப்பு பற்றாக்குறையாக இருக்கின்றமை இனங்காணப்பட்டுள்ள போதிலும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வுக் குழுவினால் பௌதீக இருப்புக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 9.99 பில்லியன் நிலக்கரி இருப்பு மீதியின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை.**

இ.மி.ச. இன் பொது முகாமையாளரின் 2020∴புஆ∴42∴குஆ ஆம் இலக்க 2020 செப்தெம்பர் 03 ஆந் திகதிய சுற்றறிக்கையின் படி ஒரு பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டதுளூ

கூறப்பட்டவைளூ

"லக்விஜயா மின்வலு நிலையத்திலுள்ள நிலக்கரி கையிருப்பு மற்றும் மின்பிறப்பாக்க மற்றும் பரிமாற்ற பிரிவுகளிலுள்ள உதிரி பாகங்களின் மெய்மையாய்வு அந்தந்த பிரிவுகள் மற்றும் கிளைத் தலைவர்களின் தீர்மானத்தின் படி மிகவும் பொருத்தமான மற்றும் வசதியான நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்."

கூறப்படாதவை.

சபை அங்கீகாரம் மற்றும் தேவையான குழு அறிக்கைகளின்படி மேற்கூறிய இருப்புச் சீராக்கம் கணக்கு புத்தகங்களிலிருந்து நீக்கப்பட்டது. மீதமுள்ளவை 2020 ஆம் ஆண்டில் அகற்றப்படும்.

**(ஏ) இ.மி.ச. பல வருடங்களாக மின்சாரத்தை லெகோ (LECO) இற்கு விற்பனை செய்வதுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்கின்ற போதிலும் இவ் இரண்டு நிறுவனங்களிற்கிடையே சுமூகமான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக இவ் இரண்டு தரப்பினர்களுடன் கைச்சாத்திடப்பட்ட விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக்கைகள் காணப்படவில்லை.**

**லெகோ உடனான உடன்படிக்கை**

இந்த விடயத்தின் செயல் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது

- இ.மி.ச. மற்றும் லெகோ ஆகிய இரண்டு நிறுவனங்களினதும் உயர் அதிகாரிகளின் பங்கேற்புடன் ஒரு வரைவு உடன்படிக்கையை குழுவொன்று தயாரித்துள்ளதுடன் அது குறித்து சட்டமா அதிபரின் (AG) கருத்தை கோரப்பட்டுள்ளது.
- யுபு யின் கருத்துப்படி இந்த குழு தேவையான திருத்தங்களை செய்துள்ளதுடன் "(இறுதி மின் விற்பனை உடன்படிக்கை" "AGM (டிரான்ஸ்மி'ன்) க்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

- இ.மி.ச. இன் பொது முகாமையாளர், குழுவால் வழங்கப்பட்ட அறிக்கையில் லெகோ இன் 03 அதிகாரிகளால் செய்யப்பட்ட சில ஒப்புதல்கள் குறித்து 26 மார்ச் 2015 மார்ச் 26 ஆந் திகதியிட்ட கடிதத்தினால் லெகோவின் பொது முகாமையாளருக்கு அறிவித்துள்ளார். இ.மி.ச. பொது முகாமையாளரின் அக் கடிதத்தில், இந்த வி'யத்தை லெகோ இன் சபைக் கூட்டத்தில் கலந்துரையாடுமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது

குழுவால் வழங்கப்பட்ட அறிக்கையில் லெகோவின் 03 அதிகாரிகளால் செய்யப்பட்ட ஒப்புதல்கள் குறித்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைப் பார்க்கவும்

இந்த விடயம் தொடர்பில் தயவுசெய்து சனவரி 28 ஆம் தேதியுடன் இணைக்கப்பட்ட கடிதத்தையும் 2020 சனவரி 30 ஆம் தேதியிட்ட இ.மி.ச. ஜிஎம் இன் குறிப்புக்களையும் பார்க்கவும். அதன்படி, இ.மி.ச. ஜிஎம் அவர்களின் பரிந்துரைகள் கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இ.மி.ச. இன் விநியோக ஒருங்கிணைப்பு குழு (டிசிசி), சபை பத்திரத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னர், 33மஎ ஊசி புள்ளிகள் மற்றும் 33மஎ.:.11மஎ முதன்மை துணை மின்நிலையங்களை லெகோ மின் விநியோகத்திற்காக சமர்ப்பிதற்கான வழிமுறைகளை தயாரிப்பதற்காக ஒரு குழுவை நியமித்துள்ளது. இந்த குழு தற்போது இந்த விவகாரத்தை பரிசீலித்து வருகிறது.

லெகோவின் பொறியியல் பிரிவின் முன்னாள் தலைவரான திரு. குணசேகர அவர்களின் "2015 மார்ச் மாத அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு இந்த பணியின் போட்டி நிலை நிலை காரணமாக, நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட "விநியோக உரிமதாரர்களுக்கு (னுடுள) சொந்தமான லெகோ வழங்கல் நிலையப் பிரச்சினையை லெகோவின் திரு. பிஎஸ்என் டி சில்வா மற்றும் லெகோவின் முன்னாள் சிஎ.:.ப்ஓ திரு. டுபிள்யூ.டி.ஏ.எஸ். பெரேரா ஆகியோர் தீர்த்துவைப்பர். அத்துடன், விற்பனை உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கும் வழிவகை செய்வார்கள்.

இந்த விடயம் தொடர்பில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு லெகோ பியூஎஸ்சிஎல் இனைக் கோரியுள்ளது

**சிபிசி உடனான உடன்படிக்கை**

சிபிசி உடனான எரிபொருள் விநியோக உடன்படிக்கை இன்னும் பேச்சுவார்த்தையில் உள்ளது. இரு தரப்பினரும் ஒப்புக்கொள்ள வேண்டிய சில விடயங்கள் உள்ளன. எனவே உடன்படிக்கை இன்னும் இறுதியாக்கப்படவில்லை

**(ஐ) இ.மி.ச. இன் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்ட நிதிகள் காலரீதியாக பயன்படுத்தப்படாததன் காரணமாக வழங்கப்பட்ட கடன்களிலிருந்து 2020 ஆம் ஆண்டில் கடனளிக்கும் முகவரால் கடப்பாட்டுக் கட்டணங்களாக ரூபா 92.69 தொகை கழிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், கணிப்பீடுகள் இன்மை காரணமாக கடப்பாட்டுக் கட்டணங்களின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை.**

அனைத்து செயற்திட்டங்களுக்கும் அர்ப்பணிப்பு கட்டணம் பொதுவானதாக உள்ளதுடன் செயற்திட்டம் உரியவாறு பட்டியலிடப்பட்டிருப்பினும், கடன் உடன்படிக்கைகளிலுள்ள கடுமையான நிபந்தனைகள் காரணமாக அதைத் தவிர்க்க முடியாதுள்ளது.

இருப்பினும், மேற்கண்ட நிலுவையில் 3 செயற்திட்டங்களுடன் தொடர்புடைய ரூபா 38,881,225.27 தொகை இ.மி.ச. ஆல் பொறுப்பேற்கப்படவில்லை. மேலும், 2020 ஆம் ஆண்டிற்காக தூய எரிசக்தி வலைப்பின்னல் வினைத்திறன் மேம்பாட்டு செயற்திட்டத்திற்கு எந்த அர்ப்பணிப்பு கட்டணமும் காணப்படவில்லை.

**(ஒ) நீண்ட கால மின்பிறப்பாக்க விரிவாக்கத் திட்டம் 2018 - 2037 இன் படி, 500 ஆறு, 657ஆறு மற்றும் 430ஆறு புதிய மின்பிறப்பாக்கத்தை முறையே 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.**

இ.மி.ச. நீண்ட கால தலைமுறை விரிவாக்கத் திட்டங்களைத் தயாரித்தாலும், டுவுபுநீ களில் இனங்காணப்பட்ட இத்தகைய நிலையங்களின் அபிவிருத்தியை மேற்கொள்ள இ.மி.ச. இற்கு எவ்வித அதிகாரம் இல்லை. இ.மி.ச. ஏனைய முகவர் நிலையங்களை பெரிதும் சார்ந்துள்ளதுடன் "ருஊளுடு இனால் வெளியிடப்பட்ட 2016 இன் 02 ஆம் இலக்க "மின்சாரம் (கொள்வனவு) விதிகள் மற்றும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டுதல்களால் நிர்வகிக்கப்படுகிறது. இந்த செயல்முறைகளில் சில ஒன்றை ஒன்று விஞ்சுவதாக உள்ளன.

உதாரணமாக, ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட 2016 இன் 02 ஆம் இலக்க பிரிவு 2 (ஓ) மின்சாரம் (கொள்வனவு) விதியின் படி, மின்பிறப்பாக்க இயலளவை கொள்வனவு செய்வதற்கு முன்னர், மின்சக்தி சட்டத்தின் பிரிவு 43 (2) இன் கீழ் தேவைப்படும் ஆவணங்களுடன் இணைத்து பிரேணைக்கான வரைபுக் கோரிக்கைக்கு முன்கூட்டிய அனுமதியை இ.மி.ச. பெற்றுக் கொள்ள வேண்டும். இருப்பினும், அதே பிரேரணை வரைபுக் கோரிக்கை ஆவணத்தை தேசிய கொள்வனவு வழிகாட்டுதல்களின் படி நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழுவிற்கும் (பெரும்பாலும் ளுஊயுீஊ) சமர்ப்பித்தல் வேண்டும். "ருஊளுடு அங்கீகரித்த வரைபுப் பிரேரணை ளுஊயுீஊ இனால் மாற்றப்படும் அல்லது ளுஊயுீஊ ஆல் அங்கீகரிக்கப்பட்ட ஆவணம் "ருஊளுடு ஆல் மாற்றப்படும். மீண்டும், இந்த ஆவணம் மறுஆய்வு செயல்முறைக்குச் சென்று ஒப்புதலுக்காக இந்த நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**கொள்கைகள் மற்றும் பண்புகளை மாற்றுதல்**

மேலும், தொடர்ந்து கொள்கைகளை மாற்றுதல், நடப்பு மின் கொள்வனவின் முக்கிய பண்புகளை இடைநடுவில் மாற்றுதல் (தொழில்நுட்பம், இடம், உரிமையாளர் மாதிரி டீழுழு இலிருந்து டீழுவு க்கு மாற்றுதல் போன்றவை) மற்றும் ஒரு முதிர்ச்சிக் கட்டத்தில் ஒரு மின் திட்டத்தை முழுமையாக இரத்துச் செய்தல், கொள்வனவு மாதங்கள் மற்றும் ஆண்டுகளில் கணிசமான பின்னடைவை ஏற்படுத்தும்.

**நிதி பற்றாக்குறை**

நிதியைப் பாதுகாப்பதில் தாமதங்களும் உள்ளன (அறிக்கையில் வேறு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சீதவக கங்க நீர்மின் விடயத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி).

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் பிரிவு 38 இன் கீழ், சபையின் சேவைகளின் அபிவிருத்தி கிரயத்தின் நியாயமான விகிதத்தை (மேலும்) பூர்த்தி செய்ய சபையின் வருவாய் போதுமானதாக இருப்பதை உறுதி செய்யும் அதிகாரம் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இ.மி.ச. இன் அதிகாரத்தின் கீழ் (இ.மி.ச. சட்டத்தின் பகுதி ஏ இன் கீழ்) காணப்பட்ட "கருவி", அதாவது கட்டணங்கள் மற்றும் கட்டணங்களை நிர்ணயிக்கும் அதிகாரமானது, 2009 இலிருந்து நீக்கப்பட்டு இலங்கை மின்சார சட்டத்தால் "ருஊளுடு க்கு வழங்கப்பட்டது. அதுமுதல், இ.மி.ச. அதன் சொந்த நிதியிலிலிருந்து எந்த ஒரு அபிவிருத்திப் பணிகளையும் செய்ய முடியவில்லை.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

மேலும், பிற அரசாங்க சுற்றறிக்கைகள் மற்றும் சட்டங்கள் காரணமாக, கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து நிதிகளின் அனைத்து கோரிக்கைகளும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஊடாகவே அனுப்பப்பட வேண்டும். அரசாங்க நிதியியல் துறையில் காணப்படுகின்ற தடைகளால் ஏற்பட்டுள்ள நிதி பற்றாக்குறை காரணமாக, பரிமாற்றம் மற்றும் மிக்பிறப்பாக்க செயற்திட்டங்கள் தாமதமாகலாம்.

**(ஓ) உதுறுவசந்தய செயற்திட்டத்தின் கீழ் 2014 இல் இனங்காணப்பட்ட ரூபா 39.55 மில்லியன் இருப்பு பற்றாக்குறை தொடர்பாக 3 ஆண்டுகள் தாமதிக்கப்பட்டு 2017 ஏப்ரல் மாதத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் விசேட புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.**

**இருப்புப் பற்றாக்குறை ரூபா 2,510,056**

டிஜிஎம் (வட மாகாணம்) அவரது 2017.05.04 ஆந் திகதிய ே.்னுபுஆ.்ர்சுழ.்.விசாரணை ஆம் இலக்க கடிதத்தின் மூலம் குழுவொன்றை நியமித்திருந்ததுடன் அக்குழுவின் அறிக்கை 2019.10.03 ஆந் திகதி டிஜிஎம் (வட மாகாணம்) இற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கமைய, களஞ்சியக் காப்பாளரான திரு. ஜே.எம்.அசங்க ஜெயகொடி (பி.எ.்.ப். இலக்கம் 37432) இடமிருந்து இருப்புப் பற்றாக்குறையான ரூபா 2,510,056.88 (சபைக் கட்டணம் உள்ளடங்கலாக) இனை அறவிடுமாறு டிஜிஎம் (வட மாகாணம்) அவரது 2019.10.09 ஆந் திகதிய ே.்னுபுஆ.்ர்சுழ.்.விசாரணை ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவுறுத்தியிருந்தார். களஞ்சியக் காப்பாளர் 2019 அக்டோபரில் டிஜிஎம் (என்சிபி) க்கு இடமாற்றப்பட்டிருந்ததுடன் அவரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய மீதி (ரூபா 2.5 மில்லியன்) ஏனைய பெறத்தக்கவைகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஏஜிஎம் (டிடி 1) தனது 2019-11-28 ஆந் திகதிய னுபுஆ.்(ஊரூஊ).்னுனு1.்ர்சுழ.்யுனுஆே.்10 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இந்த தொகையை ஊழியரிடமிருந்து வசூலிக்க அறிவுறுத்தியிருந்தார். ஆயினும், திரு ஜெயகொடி அவரது 2020-01-06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் முறையான விசாரணையை நடத்துமாறு கோரியிருந்ததுடன் அதன்படி குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், முறையான விசாரணை முடிவுக்கு அமைய 180 தவணைகளில் இதனை அறிவிடுமாறு ஏஜிஎம் (டிடி1) தனது 2010.09.03 ஆந் திகதிய யுபுஆ(னுனு1).்னுபுஆ.்(ஊரூஊ).்னு1.்162 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இந்த தொகையை ஊழியரிடமிருந்து வசூலிக்க அறிவுறுத்தியிருந்தார்.

**இருப்புப் பற்றாக்குறை ரூபா 31,257,161**

பொருட்களை வழங்காது மோசடி செய்தமைக்காக ரூபா 22,584,800.00 தொகையான 25 சதவீத சபைக் கட்டணம் உட்பட ரூபா 28,331,000.00 தொகையினை ரிச்சர்ட்சன் ப்ராஜெக்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் இடமிருந்து அறவிடுவதற்காக அக்கம்பனிக்கு இ.மி.ச. இன் சட்ட உத்தியோகத்தர் கோரிக்கையொன்றை அனுப்பியுள்ளார். அத்துடன், இருப்புப் பொருட்களின் இழப்புச் சீராக்கத்திற்கான எந்தவொரு மாற்றத்தையும் இனங்காண்பதற்காக மேலதிக இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, சில சீராக்கங்களை செய்தபின்னர் இழப்பின் அளவு ரூபா 8.3 மில்லியனாக குறைக்கப்பட்டுள்ளது. தற்போது, உள்ளக விசாரணை பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன்படி களஞ்சியக் காப்பாளரான திரு உ.பி. உதாரா குணரத்ன (பிஎ.்ப் இல. 37475) மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், திருகோணமலை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் டீ.்1164.்15 ஆம் இலக்க நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளது.

**(ஔ) 2006 நவம்பர் 20 தொடக்கம் 2012 பெப்ரவரி 20 வரையான காலப்பகுதியின் போது சொத்து முகாமைத்துவப் பிரிவில் (மின்வலுப் பொறி) ஏற்பட்டிருந்த ரூபா 3.67 மில்லியன் இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான நபர் தொடர்பாக முறையான புலனாய்வு முடிவடைந்திருந்த போதிலும் அந்த நபருக்கு எதிராக 2018 ஆகஸ்ட் 16 வரை சபையால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.**

வழக்குத் தொடர்தல்கள் குறித்து சட்டமா அதிபரின் கருத்தை இ.மி.ச. கோரியுள்ளதுடன் நாட்டில் நிலவும் கோவிட் -19 நிலைமை காரணமாக சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டது.

**(ஃ) புலனாய்விற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவால் பரிந்துரைக்கப்பட்டவாறு நட்டம் அறவிடப்படாமல் ரூபா 3.79 மில்லியன் இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவர் 2011 ஒக்டோபர் 15 இல் ஓய்வு பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்.**

கணக்காய்வு அறிக்கையின் படி, இருப்பு பற்றாக்குறை ரூபா 3,789,893.00 ஆகும். இருப்பினும், இருப்பு வேறுபாட்டை ஆராய்வதற்காக 2010 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட குழு, இருப்பு பற்றாக்குறை தொகையை ரூபா 1,953,484.15 எனக் குறிப்பிட்டுள்ளது. திரு சமரசிங்க அவர்கள் 60 வயதை எட்டிய பின்னர் 2011-10-15 அன்று ஓய்வு பெற்றார். இருப்பு பற்றாக்குறை விவகாரத்தில் தீர்மானம் எடுக்கும் வரை ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை செலுத்துவதை நிறுத்துவதற்கு அவரது ஓய்வின் போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இருப்பு பற்றாக்குறையை அறவிடாமை குறித்து விசாரிப்பதற்காக 03 டிஜிஎம்எம் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. குழு அறிக்கை சமீபத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் குழுவின் பரிந்துரைக்கு ஒப்புதலைப் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

**(க) மின்பிறப்பாக்கப் பிரிவிலுள்ள மூலதன முடிவுறா வேலைகளில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 260.48 மில்லியன் மீதி நகர்த்தப்படாமல் கணக்குகளில் வைக்கப்பட்டுள்ளது.**

மேலே உள்ள மீதி 2020 திசெம்பர் 31 வரை இன்னும் முடிவுறாத வேலைகளிலுள்ள மீதிகளைக் குறிக்கின்றது. இந்த வேலைகள் முடிவடைந்த பின்னர் அந்த நிலுவைகள் 2021 நிதி ஆண்டில் மூலதனமாக்கப்படும்.

**(கா) செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள 76 செயல்பாடுகளில் 16 செயல்பாடுகள் மாத்திரமே மின்பிறப்பாக்கப் பிரிவினால் மீளாய்வாண்டில் அடையப்பட்டிருந்தது.**

செயல்பாட்டுத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள நிதிசார் செயன்முன்னேற்றமானது செயல்பாடுகள் நடைபெற்று வருகின்ற 16 செயற்பாடுகளின் செயன்முன்னேற்றத்தை மாத்திரமே காட்டுகின்றன.

**(கி) ரூபா 63.55 பில்லியன் மதிப்புள்ள அணைகளின் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு சபை தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.**

அறிக்கையில் காட்டப்பட்டுள்ள பெறுமதி விக்டோரியா, கொத்மலே, உக்குவெல, போவதென்ன, ரந்தெனிகல, ரந்தெம்பே மற்றும் நிலம்பே மின் நிலையங்களைக் குறிக்கிறது. சபை ஏற்கனவே நிலம்பே அணையை ரூபா 596,216,467.81 இற்கு பொறுப்பேற்றதுடன் அது தொடர்புடைய மின் நிலையத்தால் இயக்கப்பட்டு, பராமரித்து நிர்வகிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட மின் உற்பத்தி நிலையங்கள் தொடர்பான ஏனைய அனைத்து அணைகளும் இலங்கை மகாவலி அதிகாரசபையால் இயக்கப்பட்டு,

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

பராமரித்து, நிர்வகிக்கப்படுகின்றது. இருப்பினும், நீர்த்தேக்கங்களில் மின்சாரத்தை பிறப்பித்தல் வரையான நீர்வழிப்பாதையை மட்டுமே சபை கையகப்படுத்தியுள்ளதுடன் அவற்றை முழுமையாக இயக்குதல், பராமரித்தல், நிர்வகித்தல் என்பன சம்பந்தப்பட்ட மின் நிலையங்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

**(கீ) ரூபா 26.75 பில்லியன் மொத்த நுகர்வுப்பொருள் கையிருப்பில் 10 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற ரூபா 2.67 பில்லியன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்றில் மெதுவாக நகரும், நகராத மற்றும் சேதமடைந்த இருப்புக்களாக காட்டப்பட்டுள்ளது.**

கணக்கெடுப்பு குழுக்களின் பரிந்துரை மற்றும் சபை ஒப்புதல்களைப் பெறுவதன் மூலம் மெதுவாக நகரும், நகராத மற்றும் காலாவதியான இருப்புக்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, விநியோக பிரிவு 2 ஏற்கனவே ரூபா 38,947,687.46 பெறுமதியான மெதுவாக நகரும் இருப்புக்களை அகற்றுவதற்காக சபை ஒப்புதலைப் பெற்றுள்ளது.

**(கு) ஏசிஇ பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் உடன் கைச்சாத்திடப்பட்ட மின்வலு கொள்வனவு உடன்படிக்கை (பிபிஏ) உடன் தொடர்பான ஆகக்குறைந்த உத்தரவாத எரிசக்தி தொகை (எம்ஜிஇ) ஆண்டுக்கு 697,674,432 கிலோவாட் ஆக காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் ரூபா 24.42 கட்டண வீதத்தில் வழங்கப்பட்ட எரிசக்தி 475,831,835 கிலோவாட் ஆகும். அதன்படி, மீளாய்வாண்டில் வழங்கப்படாத 221,842,597 கிலோவாட் எரிசக்திக்காக இயலளவுக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.**

2.5 (z) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அறிக்கை உருப்படியின் கீழ், இ.மி.ச. யுஊநு மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் காலி உப-மின் உற்பத்தி நிலையங்களை பயன்படுத்தாதுள்ளதாகவும் எம்பிலிபிடிய மின் ஆலையை குறைவாகப் பயன்படுத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அறிக்கையின் படி, யுஊநு எம்பிலிப்பிட்டிய ஆலையிலிருந்து அதன் ஆபுநுயு ஐ விட குறைந்த அளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதால், யுஊநு எம்பிலிப்பிட்டிய உற்பத்தியை மேற்கூறிய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பெற்று எளிதாகப் பயன்படுத்த முடியும்.

கவனிக்கப்பட வேண்டியவை,

1. மின்சாரத்திற்கான கேள்வியும் தேறிய மின்பிறப்பாக்கமும் எந்த நேரத்திலும் சமமாக இருக்க வேண்டும்.

2. நாட்டின் மின்சாரத்திற்கான கேள்வி நிலையானது அல்ல என்பதுடன் அது காலத்திற்கு ஏற்ப மாறுபடக்கூடியது.

3. நீர்த்தேக்கங்கள்.·. ஓடுகின்ற ஆற்று ஆலைகளிற்கான நீர் உட்பாய்ச்சல், நீர் முகாமைத்துவ செயலகத்தின் (றுஆளு) அறிவுறுத்தல்கள் மற்றும் இயந்திர பராமரிப்பு உள்ளிட்ட எதிர்கால கேள்விக்கு ஏற்ப நீர்மின் ஆலைகளின் மின்சார உற்பத்தி தீர்மானிக்கப்படுகின்றது.

4. ஆலையின் தகுதி வரிசை அடிப்படையில் பாதுகாப்பு கட்டுப்பாட்டு பொருளாதார அனுப்புதலின் படி அனல்மின் ஆலைகள் மின்சாரத்தை அனுப்புகின்றன.

மின்சக்தி நிலையங்கள் அதன் எரிசக்தி கிரயத்தின் அடிப்படையில் நிகழ்நேரத் தேவைக்கு ஏற்ப மின்சாரத்தை அனுப்புகின்றமையை கவனத்தில் கொள்ள வேண்டுமாகையால், ஆலைகளின் கிடைப்பனவின் அடிப்படையில் இயலளவுக் கட்டணம் செலுத்துவதற்காக மாத்திரமே எம்ஜிஇ கருத்திற் கொள்ளப்படுவதால் எம்ஜிஇ உடன் மின்பிறப்பாக்க அனுப்புதலை ஒப்பிடுவது யதார்த்தமானது அல்ல. அதனால் எம்ஜிஇ இற்கும் நிகழ்நேர எரிசக்தி அனுப்புதலுக்கும் இடையே எந்த தொடர்பும் இல்லை. அத்துடன் மேற்படி மின் உற்பத்தி நிலையங்களான யுஊநு மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் காலி உப மின்நிலையங்கள் யுஊநு எம்பிலிப்பிட்டிய மின் ஆலைக்கு மேலதிகமாக உண்மையான நேரத்திற்குரிய கேள்வியை பூர்த்தி செய்வதற்காகவே மின்சாரத்தை அனுப்புகின்றது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, இ.மி.ச. எப்பொழுதும் குறைந்த கியரத்துடன் கூடிய யுஊநு எம்பிலிப்பிட்டிய ஆலைகளை அதிக மாறும் கிரயத்துடன் கூடிய யுஊநு மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் காலி உப மின் நிலையங்களிற்கு பதிலீடாக பயன்படுத்துகின்றது. இறுதியாக, நாட்டின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய தகுதி உத்தரவின் அடிப்படையில் அனைத்து அனல்மின் ஆலைகளும் மின்சாரத்தை அனுப்புகின்றன.

**(கூ) 2020 ஆம் ஆண்டிற்கான தவிர்க்கப்பட்ட கிரய முறையின் மீது சிற்றளவு நீர்மின் ஆலைகளுக்கான விலை வீதம் குளிர் காலத்தில் ரூபா 19.51 ஆவதுடன் வறண்ட காலத்திற்கு ரூபா 21.25 ஆகும். தவிர்க்கப்பட்ட செலவு முறை அனல் ஆலை அனுப்புதலை அடிப்படையாகக் கொண்டதுடன் இது எரிபொருள் கிரயத்தை பொறுத்து மாறுபடும். எனவே, இந்த முறையின் மீது நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதம் சிற்றளவு நீர்மின் ஆலையின் உண்மையான கிரயத்துடன் எந்த தொடர்பையும் கொண்டிருக்கவில்லை. நீர் மின்சாரத்தின் அலகொன்றுக்கான சராசரி கிரயம் ரூபா 10 இற்கும் குறைவாக காணப்படுதல் வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டதுடன், இ.மி.ச. இன் நீர் மின்சாரத்தின் அலகொன்றுக்கான சராசரி கிரயம் ரூபா 2.49 ஆகும். மேலும், இது அலகொன்றுக்கான சராசரி விற்பனை விலையை விட ரூபா 16.72 அதிகமானதாகும்.**

NCRE மின்வலு உற்பத்தி நிலைய அபிவிருத்தி துறையில் முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக ஆரம்பத்தில் தவிர்க்கப்பட்ட கிரய அடிப்படையிலான கட்டண முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து, இந்த முறையிலுள்ள குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டு, "கட்டண பிரதிபலிப்பு, தொழில்நுட்பம் குறிப்பிட்ட மூன்று அடுக்கு கட்டணம்" என அடையாளம் காணப்பட்ட புதிய கட்டண முறைமை 2008 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், இந்த முறைமை ஒரு போட்டி கேள்விமனு செயல்முறைக்கு மாற்றப்பட்டதுடன் அற்கமைய சந்தை சக்திகளால் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது.

**பொறியியலாளர், விஜித ஹேரத்**
தலைவர்
இலங்கை மின்சார சபை

**பொறியியலாளர், (திருமதி) என்.டபிள்யூ.கே. ஹேரத்**
பொது முகாமையாளர்
இலங்கை மின்சார சபை

# சுருக்கக் குறியீடுகள்

| | |
|---|---|
| ABB | ஆசிய பிறவுண் போவறி |
| ADB | ஆசிய அபிவிருத்தி வங்கி |
| AFD | அபிவிருத்திக்கான பிரெஞ்சு முகவராண்மை |
| AFM | மேலதிக நிதி முகாமையாளர் |
| AGM | மேலதிகப் பொது முகாமையாளர் |
| AIIG | ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி |
| AMHM | சொத்து முகாமைத்துவ அனல் இயந்திரவியல் |
| AMI | மேம்பட்ட மானியிடல் உட்கட்டமைப்பு |
| B&OS | வணிகம் மற்றும் செயற்பாட்டு உபாயம் |
| BBC | பிரவுண், போவேறி அன்ட் கொம்பாக்னி |
| BHPP | விரிநில நீர் மின்வலுச் செயற்றிட்டம் |
| BOI | முதலீட்டு சபை |
| BOO | சொந்தமாகக் கட்டப்பட்டு, இயக்கப்படுதல் |
| BOP | ஆலைச் சமநிலை |
| BST | தொகையளவு வழங்கல் விதிப்பனவு |
| BSTA | தொகையளவு வழங்கல் பரிமாற்றக் கணக்கு |
| CB | சுற்று முறிப்பான் |
| C&C | வர்த்தகம் மற்றும் நிறுவனம் |
| CCPP-GT | இணைந்த சுற்று மின்வலு ஆலை - எரிவாயு விசையாழி |
| CCPP-ST | இணைந்த சுற்று மின்வலு ஆலை - நீராவி விசையாழி |
| CCTV | மூடிய மின்சுற்று தொலைக்காட்சி (மறைகாணி) |
| CDM | நிருமாணம் (வடிவமைப்பு மற்றும் முகாமை) |
| CEA | மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| CEB | இலங்கை மின்சார சபை |
| CE&NEIP | தூய சக்தி மற்றும் வலையமைப்பு வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம் |
| CFL | திடமான புளொறொளிர்வு விளக்கு |
| CIPM | ஆளணி முகாமைத்துவ பட்டய நிறுவகம் |
| CMMS | கணினிமயப்படுத்தப்பட்ட பராமரிப்பு முகாமைத்துவ முறைமை |
| CNEEC | சீனத் தேசிய மின் உபகரணக் கூட்டுத்தாபனம் |
| CPC | இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் |
| CPCDP | கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்திச் செயற்றிட்டம் |
| CPD | தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி |
| CS&RA | நிறுவன உபாயம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அலுவல்கள் |
| CS | நிறுவன உபாயம் |
| CSR | நிறுவன சமூகப் பொறுப்புடமை |
| CSC | நுகர்வோர் சேவை நிலையம் |
| CT | மின்னோட்ட மின்மாற்றி |
| CW&B | குடியியல் வேலைகள் மற்றும் கட்டடங்கள் |
| CW&G | குடியியல் வேலைகள் மற்றும் பழுதுபார்ப்புகூடம் |
| DAS | பகிரப்பட்ட அன்டெனா முறைமை |
| DAQ | தரவு கையகப்படுத்தல் முறைமை |
| DBT | வடிவமைத்து கட்டப்பட்டு மாற்றுதல் |
| DC | நேர் மின்னோட்டம் |
| DCC | விநியோக ஒருங்கிணைப்புக் குழு |
| DD1 | விநியோகப் பிரிவு 1 |
| DD2 | விநியோகப் பிரிவு 2 |
| DD3 | விநியோகப் பிரிவு 3 |
| DD4 | விநியோகப் பிரிவு 4 |
| DFM | பிரதி நிதி முகாமையாளர் |
| DGA | கரைந்த வாயுப் பகுப்பாய்வு |
| DGM | பிரதிப் பொது முகாமையாளர் |
| DL | விநியோக உரிமதாரர் |
| GOSL | இலங்கை அரசாங்கம் |
| DSE&CSM | அணைக்கட்டுப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் குடியியல் கட்டமைப்புப் பராமரிப்பு |
| DSM | கேள்விப் பக்க முகாமைத்துவம் |
| ECSC | மின்சார நுகர்வோர் சேவை நிலையம் |
| EENS | வழங்கல் செய்யப்படாத மதிப்பிடப்பட்ட சக்தி |
| EIA | சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு |
| EP | கிழக்கு மாகாணம் |
| EPC | பொறியியல், பெறுகை மற்றும் நிருமாணம் |
| ERD | வெளிவாரி வளத் திணைக்களம் |
| ERP | நிறுவன வளத் திட்டமிடல் |
| FS&PD | தொழிற்பாட்டு உபாயம் மற்றும் செயன்முறை அபிவிருத்தி |
| FSUR | மிதப்புக் களஞ்சியம் மற்றும் மீள்வாயுவாக்கல் அலகு |
| GCT&DLRP | பாரிய கொழும்பு மின் பரிமாற்றம் மற்றும் விநியோக இழப்பைக் குறைக்கும் செயற்றிட்டம் |
| GIS | வாயு மின்காப்பிடப்பட்ட சொடுக்கி பல்லிணை |
| GL | பிறப்பாக்கல் உரிமதாரர் |
| GM | பொது முகாமையாளர் |
| GOSL | இலங்கை அரசாங்கம் |
| GPD&EEIIPP | பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டச் செயற்றிட்டம் |
| GPRS | பொதுச் சிறுபொதி அலைச் சேவை |
| GPS | பூகோள நிலைப்படுத்தல் முறைமை |
| GSS | மின்தொகுப்பு உபமின் நிலையம் |
| GT | எரிவாயு விசையாழி |
| HDD | கிடைமட்டத் திசையில் தோண்டுதல் |
| HQ | தலைமையகம் |
| HR | மனித வளம் |
| HRT | தலைப்பகுதிச் சுரங்கம் |
| HT | உயர் இழுவிசை |
| HV | உயர் மின்னழுத்தம் |
| HVTLP | ஹபரணை - வெயாங்கொடை மின் பரிமாற்ற மார்க்கச் செயற்றிட்டம் |
| ICBC | சீனாவின் கைத்தொழில் மற்றும் வர்த்தக வங்கி |
| IEC | சர்வதேச மின் தொழில்நுட்ப ஆணைக்குழு |
| IP | இணைய நெறிமுறை |
| IPP | சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்கள் |
| IT | தகவல் தொழில்நுட்பவியல் |
| IVR | ஊடாடு குரல் பதிவு |
| JICA | யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை |
| KNGTP | களனிதிஸ்ஸ புதிய எரிவாயு விசையாழிச் செயற்றிட்டம் |
| KPI | பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகள் |
| KPS | களனிதிஸ்ஸ மின்வலு நிலையம் |
| LC | லக்'பான தொகுதி |
| LCEG | குறைந்த கிரய சக்திப் பிறப்பாக்கம் |
| LCLTGEP | ஆகக்குறைந்த கிரய நீண்ட கால பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டம் |
| LECO | வரையறுக்கப்பட்ட லங்கா (தனி.) மின்சாரக் கம்பனி |
| LED | ஒளி உமிழ் இருமுனையம் |
| LHI | லங்கா நீரியல் நிறுவகம் |
| LKR | இலங்கை ரூபா |
| LKAS | இலங்கை கணக்கீட்டு நியமம் |
| LNG | திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு |
| LOI | நோக்கக் கடிதம் |

# சுருக்கக் குறியீடுகள் (தொடர்ச்சி)

| | |
|---|---|
| LRP | சுமை ஆய்வு நிகழ்ச்சித் திட்டம் |
| LT | குறைந்த இழுவிசை |
| LTGEP | நீண்ட கால பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டம் |
| LTL | லங்கா டிரான்ஸ்போமர்ஸ் லிமிட்டெட் |
| LTTDP | நீண்ட கால மின் பரிமாற்ற அபிவிருத்தித் திட்டம் |
| LV | தாழ் மின்னழுத்தம் |
| LVPP | லக்விஜய மின்வலு ஆலை |
| MC | மகாவலித் தொகுதி |
| MCM | மில்லியன் பரு மீற்றர் |
| MDMS | மானித் தரவு முகாமைத்துவ முறைமை |
| MEPS | குறைந்தபட்ச சக்திச் செயலாற்றுகை நியமம் |
| MHPP | மொரகொல்ல நீர் மின்வலுச் செயற்றிட்டம் |
| MITFIN | மில்லேனியம் தகவல் தொழில்நுட்ப மற்றும் நிதித் தகவல் வலையமைப்பு |
| MIV | பிரதான உள்வாயில் வால்வு |
| MLKR | மில்லியன் இலங்கை ரூபாய் |
| MLTS | நடுத்தர மட்டத் தொழில்நுட்ப பணித்தொகுதியினர் |
| MMT | மில்லியன் மெற்றிக் தொன் |
| MOI | நீர்பாசன அமைச்சு |
| MOIWM | நீர்பாசன மற்றும் நீர் முகாமைத்துவஅமைச்சு |
| MQTT | செய்தி வரிசை தொலைத்தொடர்புப் போக்குவரத்து |
| MUSD | மில்லியன் அமெரிக்க டொலர் |
| MV | இடைநிலை மின்னழுத்தம் |
| MVA | மெகா வோல்ட் அம்பியர் |
| MVMMS | இடைநிலை மின்னழுத்தப் பராமரிப்பு முகாமைத்துவ முறைமை |
| MWPP | மன்னார் காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் |
| NAMA | தேசிய பொருத்தமான தணிப்பு நடவடிக்கை |
| NCP | வட மத்திய மாகாணம் |
| NCRE | மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி |
| NEA | தேசிய சுற்றுச்சூழல் சட்டம் |
| NGO | அரசு சாரா நிறுவனங்கள் |
| NGR | நொதுமல் தரை மின்தடையி |
| NRE | மீள்புதுப்பிக்க முடியாத சக்தி |
| NSCC | தேசிய முறைமை கட்டுப்பாட்டு நிலையம் |
| NTDND&EIP | தேசிய மின் பரிமாற்றம், விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம் |
| NVQ | தேசிய தொழில்த் தகைமை |
| NVTI | தேசிய தொழிற்பயிற்சி நிறுவகம் |
| NWP | வட மேல் மாகாணம் |
| OEM | மூல உபகரணத் தயாரிப்பு |
| OH&S | தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு |
| OLRT | நிகழ் நேர இற்றைப்படுத்தல் |
| P&D | திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி |
| PABX | தனியார் தானியங்கிக் கிளைப் பரிமாற்றம் |
| PAP | செயற்றிட்டத்தால் பாதிப்புக்குள்ளாகும் நபர் |
| PD | பாதுகாப்பு அபிவிருத்தி |
| PHM | செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்பு |
| PIV | கொடுப்பனவு உறுதிச்சீட்டு |
| PLC | மின் கம்பி மூலமான |
| PMU | செயற்றிட்ட முகாமைத்துவ அலகு |
| POS | விற்பனை மையம் |
| PPA | மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கை |
| PRV | அழுத்த விடுவிப்பு வால்வு |
| PS | மின்வலு நிலையம் |
| PSS | முதன்மை உபமின் நிலையம் |
| PSHPP | உந்தப்பட்ட சேமிப்பு நீர் மின்வலு ஆலை |
| PSRSP | மின்வலு முறைமையின் நம்பகத்த ன்மையை வலுப்படுத்தும் செயற்றிட்டம் |
| PUCSL | இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு |
| PV | ஒளி மின்னழுத்தம் |
| QMS | வரிசை முகாமைத்துவ முறைமை |
| R&D | ஆய்வு மற்றும் அபிவிருத்தி |
| RCC | உருளையால் நெருக்கப்பட்ட கொங்கிறீற்று (கற்காரைக் கெட்டிப்பு) |
| RCL | ஒளியூட்டலுக்கான பிராந்திய நிலையம் |
| REATDP | மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டம் |
| RFP | முன்மொழிவுகளுக்கான கோரிக்கை |
| ROI | முதலீடு மீதான வருமானம் |
| ROW | சரியான வழி |
| RTU | தொலைவியக்க முனைய அலகு |
| SAIDI | முறைமைச் சராசரி குறுக்கீட்டுக் காலச் சுட்டெண் |
| SAIFI | முறைமைச் சராசரி குறுக்கீட்டு அதிர்வெண் சுட்டெண் |
| SAS | உபமின் நிலைய தன்னியக்க முறைமைகள் |
| SC | சமனல தொகுதி |
| SCADA | மேற்பார்வைக் கட்டுப்பாடும் தரவு கையகப்படுத்தலும் |
| SCC | முறைமைக் கட்டுப்பாட்டு நிலையம் |
| SCU | உபாயத் தொடர்பாடல் அலகு |
| SDH | ஒத்திசைவான டிஜிடல் வரிசைமுறை |
| SESRIP | துணை மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்பாட்டுச் செயற்றிட்டம் |
| SFRA | ஸ்வீப் அதிர்வெண் துலங்கல் பகுப்பாய்வு |
| SIU | விசேட புலனாய்வு அலகு |
| SLBC | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் |
| SLE | ஸ்ரீ லங்கா எனேஜீஸ் (பிரை.) லிமிட். |
| SLRC | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் |
| SLS | இலங்கை நியமங்கள் நிறுவனம் |
| SLT | ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் |
| SME | சிறிய மற்றும் நடுத்தர அளவு நிறுவனங்கள் |
| SP | தென் மாகாணம் |
| SPPA | நியமப்படுத்தப்பட்ட மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகள் |
| SSL | திட நிலை ஒளியூட்டல் |
| TCPP | திருகோணமலை நிலக்கரி மின்வலுச் செயற்றிட்டம் |
| TIG | டங்ஸ்டன் மந்த வாயு |
| TL | மின் பரிமாற்ற உரிமதாரர் |
| TLCP | மின்பரிமாற்ற மார்க்க நிருமாணச் செயற்றிட்டம் |
| TLM | மின்பரிமாற்ற மார்க்கப் பராமரிப்பு |
| TM | திறைசேரி முகாமைத்துவம் |
| TOU | பயன்பாட்டு நேரம் |
| TPCL | திருகோணமலை மின்வலுக் கம்பனி லிமிட்டெட் |
| UG | நிலத்தடி |
| UK | ஐக்கிய இராச்சியம் |
| UNT | சீரான தேசிய விதிப்பனவு |
| UOM | மொரட்டுவை பல்கலைக்கழகம் |
| UOMDP | உமா ஓயா பல நோக்கு அபிவிருத்திச் செயற்றிட்டம் |
| USD | அமெரிக்க டொலர் |
| VIPS | மிக முக்கிய பகுதிச் சேவை |
| VPN | மெய்நிகர் தனியார் வலையமைப்பு |
| WPN | மேல் மாகாணம் வடக்கு |
| WPS | மேல் மாகாணம் தெற்கு |

Designed & Printing by Sharp Graphic House (Pvt) Ltd